
**ஊழியம் மற்றும் தலைமைத்துவ பயிற்சி பாட திட்டங்கள்**

நிலை : **செல்குழு தலைவர்**

**பாட புத்தகம் எண்: 6**



**<u>நிலைகள்:</u>**

**5. ஊழியர்**

**4. தலைவர் / மேய்ப்பர்**

**3. செல் குழு தலைவர்**

**2. சீஷர்கள்**

**1. ஆரம்ப நிலையில் உள்ளவர்**

***வேத பாட திட்டங்கள் கிறிஸ்துவுக்குள் ஒவ்வொரு விசுவாசியும் ஆவிக்குரிய முதிர்ச்சியில் வளர்ந்த ஊழியராகவும் மற்றும் செயல்பாட்டு திறமையில் உயரவும், செயல்பாட்டு திறமையுள்ள ஊழியத்தை பெறவும் !!!***

***தன்னில் தானே படித்துக்கொள்ளவும், அதே வேளையில் மற்றவர்களுக்கு போதிப்பதற்கும் எளிதானது !!!***

# ஊழியம் மற்றும் தலைமைத்துவ பயிற்சி பாட திட்டங்கள்

**<u>நோக்கம்:</u>**

## → ஒன்றான மெய்தேவனாகிய அவரை அறிந்துக் கொள்ளுதல்

(வளருதல் / முதிர்ச்சியடைதல்)

- யோசுவா1:8, ''இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடத்துகொள்ளுவாய்."
- 2 பேதுரு 3:18, "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்."
- 2 தீமோ. 2:15, "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு."
- கொலோ. 1: 27, 28, "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்."

## → பிறர் அவரை அறிந்துக் கொள்ள செய்தல்

(பெருகுதல் / இனப்பெருக்கமடைதல்)

- 2 தீமோ. 2:2, "அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி."
- 2 தீமோ. 3:16,17, "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது் தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது."
- எபே.2:10,"ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம் அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்."
- 2 பேதுரு. 1:8, "இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது."

**<u>கொள்கை</u>: ''சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது!'' (ரோமர்.11:36)**

(அறிவிலே அதிகரித்தல்; குணாதிசயத்தில் முதிர்ச்சியடைதல்; ஆவிக்குரிய வரங்களை உபயோகித்தல்)

| அட்டவணை பாட புத்தக எண்: 6 | பக்க எண் |
|---|---|
| ◆ நான் எப்படி பிரசங்கம் ஆயத்தம் செய்வது: ஒரு சுருக்கமான படிப்பு | 4 |
| ◆ தேவனுடைய வார்த்தையைப் பற்றிய ஊழியத்தைச் சார்ந்த முக்கியத்துவம் | 9 |
| ◆ அந்த செய்தியைப் பிரசங்கிக்கும் பிரசங்கியார் | 22 |
| ◆ வேதாகமப் படிப்பை எப்படி நடத்திச் செல்வது | 30 |
| ◆ வேதாகம படிப்பிற்கான 25 அடிப்படையான குறிக்கோள்கள் | 39 |
| ◆ நீ தானாகவே எப்படி வேதாகமத்தைப் படிப்பது? | 47 |
| ◆ தேவனைத் துதித்து ஆராதிக்க வேதாகமத்து வழிகள் | 60 |
| ◆ ஆராதனை நடத்தும் தலைவர்களுக்கான வழிகாட்டும் முறைகள் | 70 |
| ◆ செயலூக்கமான ஆராதனையை எப்படி நடத்துவது | 76 |
| ◆ ஒரு ஆராதனைத் தலைவருக்கான பணிகள் | 91 |
| ◆ திருச்சபை துதித்தலுக்கும், ஆராதனைக்குரிய இடமாக ஏன் இருக்க வேண்டும்?. (கர்த்தரை எப்படி துதித்து ஆராதனை செய்வது) | 94 |
| ◆ வேதாகமத்து துதியும் ஆராதனையும் (11 அதிகாரங்கள்) | 111 |
| (1) புதிய ஆசாரியத்துவம் | |
| (2) துதித்தலாகிய ஆவி | |
| (3) நாம் ஏன் கர்த்தரை துதிக்க வேண்டும்? | |
| (4) துதி எவ்வாறு தேவனுடைய ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறது? | |
| (5) துதித்தலுக்கு (எதிராக) வரும் தடைகள் | |
| (6) கர்த்தரைத் துதிப்பதற்கான வேதாகமத்து வழிகள் | |
| (7) ஸ்தோத்திர பலியைக் காணிக்கையாகச் செலுத்துவது | |
| (8) துதியும் ஆராதனையும் | |
| (9) துதி ஆராதனையில் இசை (அ) சங்கீதம் | |
| (10) ஒரு ஆராதனை வழிபாட்டை நடத்திக் கொண்டு செல்வது | |
| (11) துதியின் தீர்க்கதரிசன முக்கியத்துவம் | |
| ◆ பழைய ஏற்பாட்டு புத்தகங்களின் குறுக்கிய சுருக்கம் | 159 |
| ◆ புதிய ஏற்பாட்டு புத்தகங்களின் குறுக்கிய சுருக்கம் | 162 |
| ◆ வேதாமத்து வரலாற்றுக் காலப்பிரிவுகள் | 165 |
| ◆ பழைய ஏற்பாட்டுக்கும், புதிய ஏற்பாட்டுக்கும் இடையே உள்ள வேற்றுமைகள் | 169 |
| ◆ வேதாகமத்தின் புத்தகங்களை பகுத்து பிரித்து ஆய்வு | 170 |

# நான் எப்படி பிரசங்கம் ஆயத்தம் செய்வது: ஒரு சுருக்கமான படிப்பு

நெகேமியா 8:8(விரிவாக்கப் பதிப்பு) அவர்கள் தேவனுடைய நியாயப் பிரமாணப் புத்தகத்திலிருந்து தெளிவாகவும் விசுவாசத்துடன் அதை விளக்க விவரமாகவும், அதன் கருத்தை விளக்கிக் கொடுத்தும், ஆகவே ஜனங்கள் அந்த வாசிப்பை புரிந்து கொள்ளும் படியாகவும் முன் கூறியவாறு படித்தார்கள்.''

இந்த வசனப் பகுதியிலிருந்து ஒருவர் இந்த பிரசங்கத்தில் மூன்று முக்கியமான அடிப்படை அம்சங்களைப் பார்த்து அறிந்து கொள்ளலாம்.

| | |
|---|---|
| TEXT | T - அதற்கென்று வேதாகம பகுதி இருக்க வேண்டும். (அவர்கள் பிரமாணத்தை வாசித்தார்கள்) |
| EXPLANATION | E - அந்த பகுதிக்கு ஒரு விளக்கம் இருக்க வேண்டும். (விரிவாக்கம்) |
| APPLIVATION | A - அந்த வசனப் பகுதிக்குக்கு நடைமுறையான பொறுத்துதல் இருக்க வேண்டும். (புரிந்து கொள்ளுதல்) |

## ஒரு பிரசங்கத்தில் ஏழு பகுதிகள் உண்டு:

### 1. வசனப்பகுதி

இரு வேதாகமத்திலிருந்து எடுக்கப்படும் வசனபகுதியாக, அதனோடு இணைந்து பிரசங்கமானது நடத்தப்படும். ஒவ்வொரு பிரசங்கத்திற்கும் வழக்கமாக ஒரு பிரத்தியேகமான முக்கியமான வசனம் இருக்க வேண்டும். ஆனால் நீங்கள் உங்களுடைய செய்தியை அல்லது பாடத்தை ஆதாரப்படுத்த மேலும் அதிகமான வேதபகுதிகளை மேற்கோளாக எழுத்துக் கூறலாம்.
மேற்கோள் எடுத்துக்காட்டு :
மத் 21:12-16. இது தான் முக்கிய வசனப்பகுதி. அது பின்வருபவைகளைப் பற்றிச்சொல்லும்.

| | |
|---|---|
| வசனம் 12 : | பரிசுத்தம் |
| வசனம் 13 : | ஜெபம் |
| வசனம் 14 : | வல்லமை |
| வசனம் 15 - 16 : | பூரணமாக்கப்பட்ட துதித்தல் |

ஒரு பிரசங்கம் முடிவடையும் பொழுது கவனித்து கேட்கிற யாருமே அதைத் தானே மீண்டும் ஞாபகத்திற்குக் கொண்டு வந்து அதன் முக்கியமான உட்பொருட்களை (கருத்துக்களை அடையானம் கண்டு கொள்ள வேண்டும். ஆரம்பகால பிரசங்கிமார்கள் செய்யும் ஒரு பொதுவான தவறாவது, அநேக வித்தியாசமான வேதாகமத்து பகுதிகளை பயன்படுத்துவதாகும். அதன் விளைவு என்ன?

- அதனால் கவனித்துக் கேட்பவர்கள் முக்கியமான அழுத்தம் தரப்படும் விஷயம் எங்குள்ளது என்று கண்டுபிடித்துக் கொள்ளக்கூடாத நிலமை.
-நீங்கள் அதிகமான பல பகுதிகளையே அல்லது ஒத்து வாக்கியங்களையோ பயன்படுத்துவதால் கவனித்துக் கேட்பவர்களைக் குழப்பம் அடைய செய்யக்கூடிய நிலமை.
- அந்த பிரசங்க முடிவில் அவர்களால் நீ பிசங்கித்து சொன்ன எதையுமே ஞாபகப்படுத்திக் கொள்ள முடியாததாகும் நிலைமை!

### 2. பாடம் : பிரசங்கத்தின் பொருள்

(உம்)1கொரி 13அதி: ‘அன்பு’ இந்த ஆய்வுப் பொருள் பிரசங்கமே எதையெல்லாம் பற்றியது என்று அடையாளம் காட்டுகிறது.
இந்த பிரசங்கத்திற்கு ஒரு தெளிவான தலைப்புப் பொருள் இருக்கவேண்டும. (உம்) தேவனுடைய ஆலயம் (மத்21ம் அதி)

## 3. தலைப்பு

பிரசங்கிப்பவர் தாம் செய்யும் பிரசங்கம் அல்லது செய்திக்குக் கொடுக்கும் பெயர் ஆகும். அந்த தலைப்பானது ஆர்வமூட்டுகிறதாகவும், செவிகளுக்குக் கேட்கக்கூடியதாகவும் கூடுமானவரை இருக்க வேண்டும். தலைப்பின் எடுத்துக்காட்டு ‘உலகத்தில் மகத்தானதோர் காரியம்’ வசனபகுதி :1கொரி 13ம் அதி, அதன் பொருள் ‘அன்பு’ பிரசங்கங்களுக்குத் தவறான தலைப்பைக் கொடுப்பதற்கோ அல்லது கவர்ச்சித் தோற்றமான வாக்குறுதிகளைச் செய்வதிலோ மிகக் கவனமாக இருக்கவும்.

## 4. முன் மொழியுரை (வாக்கிய நோக்கம்)

இதுதான் ‘பிரசங்கத்தின் விளக்கச்சான்றுகளின் கோட்பாடு’. இந்த முன் மொழியுரையானது வர்ணனையோ அல்லது நீட்டப்பட்ட தலைப்போ அல்ல. ஆனால் பிரசங்கம் முழுவதையுமே ஒரே வாக்கியத்தில் வைத்து அமைக்கப்பட்டதாகும். பிரசங்கத்தின் சாராம்சத்தை ஒரே வாக்கியத்தில் அமைக்க உன்னால் முடியாவிட்டால் உன்னுடைய பிரசங்கத்தில் மிகவும் தவறானதொன்று ஏதோ இருக்கிறது. நீ அந்த பிரசங்கத்திற்கு போதுமான யோசனையைச் செலுத்த வில்லை என்பதைக் காட்டுகிறது. உண்மையாகவே அதை நீ நெருக்கமாகக் கீழே கொண்டு வந்து கேந்திரத்திற்குள் அதைக் கொண்டு வரவேண்டும்.

உண்மையாகவே அதில் நான் கடந்து வர விரும்புகிற ஒரு காரியமாவது என்ன? (உம்) மத் 21ம் அதி. பரிசுத்தம், ஜெபமும் வல்லமையால் நிரப்பி அடைக்கப்பட்டதோர் ஜீவியத்தை முன்னுக்குக் கொண்டு வருகிறது.

## 5. தலைப்புச் சுருக்கம் (அமைப்பும் பொருள் தொகுப்பும்)

இது ஒரு கூடைக்கு ஒப்புமையாகச் சொல்லக் கூடும். அந்த பிரசங்கத்தின் முக்கியமான இழுத்துத் தள்ளும் பலமாகும். ஆகவே இது ஒரு முக்கியமான பகுதியாகும். இது தான் அடிச்சுவட்டை தூரத்தில் காணுதலாகும்.

பிரசங்கியார் பிரங்கிக்கும் பொழுது, அவரை, சபையாருக்கு முட்டைகளை விநியோகிப்பதாகக் கற்பனை செய்து பார். ஆகையால், அதன் அமைப்பு கூடையாகி, மக்கள் அந்த முட்டைகளை தங்கள் வீடுகளுக்கு எடுத்துச் செல்வதற்கு உதவுகிறது. அது அவர்களில் விசாலமாகி அந்த செய்தியை ஞாபகத்தில் வைக்கவும் சொல்லப்பட்ட வார்த்தைகளையும் கூட ஞாபகத்தில் வைத்துக் கொள்ள உதவுகிறது.

**உதாரணம் மத் 6:9-13**

| | | |
|---|---|---|
| வாக்குத்தத்தம் | - | ’பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே உமது நாமம் பரிசுத்தப்படுவதாக’ |
| முன்னுரிமை | - | ’உமது ராஜ்ஜியம் வருவதாக, உமது சித்தம் செய்யப்படுவதாக’. |
| உணவு | - | ’அன்றன்றுள்ள அப்பத்தை இன்று எங்களுக்குத் தாரும்’ |
| கோட்பாடு | - | ’எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல, எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும’ |
| பாதுகாப்பு | - | ’எங்களை சோதனைக்குட்படப் பண்ணாமல் தீமையிலிருந்து இரட்சித்துக் கொள்ளும்.’ |
| துதி | - | ’இராஜ்ஜியமும், வல்லமையும், மகிமையும் என்றென்றும் உம்முடையவைகளே.’ |

ஆகையால் அதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளக் கூடியதாகச் செய்யவும். உம்முடைய பொருள் ’அமைப்புக்கு ஓர் சுருக்கம் தேவை’ உம்முடைய பிரசங்கத்தில் அடங்கியுள்ள குறிக்கோள்களைக் கொண்டதோர் அட்டவணை.

ஒரு நல்ல பிரசங்கத்திற்கு இருக்கவேண்டிய மூன்று முக்கியமான இன்றியமையாதவை :

1. ஞாபகத்தில் வைக்கக்கூடிய திட்ட அமைப்பு.
2. விஸ்தாரமான எடுத்துக் காட்டுகள்.
3. தேவன் அசைவாடி தொடுதல்.

ஞாபகத்தில் வைக்க. பிரசங்கி 12:9-11.

## 6. முகவுரை

மனோ தத்துவ ரீதியான மனுஷீக அறியும் ஆற்றல் காட்டும் வளைவு ரேகையானது, கவனித்துக் கேட்பவர்கள் பேச்சின் ஆரம்பத்திலும், முடிவிலும் மிகவும் ஆர்வமாகக் கவனிப்பார்கள் என்று சொல்லுகிறது. ஆகவே தான் அவர்கள், பிரசங்கிப்பவர் சொல்லுகிற முதல் காரியத்தையும், கடைசி காரியத்தையும் ஞாபகத்தில் வைக்கக்கூடிய போக்கை உடையவர்கள். ஆகவே தான் ஒரு நல்ல முகவுரையானது, முக்கிமானதாகிறது. அதைக் கவனித்துக் கேட்பவர்களின் கவனத்தைக் கவர்ந்து பிடித்துக்கொள்வார்கள்.

## 7. முடிவுரை

அந்த செய்தியின் கடைசி பகுதியாவது, அவர்களுக்கு சொல்லப்பட வேண்டியதை சாராம்சமாகவும், உந்தித் தள்ளக் கூடியதாகவும், அதை நடைமுறைப் படுத்துவதும், அதில் அடங்கி இருக்க வேண்டும். அது ஒரு 30 நிமிட பிரசங்கமாக இருந்தால் அதை உடைத்து பாகுபடுத்துதலானது பின்வருமாறு :-

- முன்னுரை - 3 நிமிடம்
- பொருளடக்கம - 22 நிமிடம்
- முடிவுரை - 5 நிமிடம்

## ஒரு நல்ல பிரசங்கத்தை ஆயத்தப்படுத்த ஒருபிரசங்கியார் எடுத்துக் கொள்ள வேண்டிய பிற முயற்சிகள் எவை?

1. ஜீவியத்தைக் கவனமாகப் பார்த்து அறியவும். (இதற்கு சிறந்த எடுத்துக்காட்டுகள் அவருடைய சொந்தமான அனுபவங்களே). ஒரு பிரசங்கிப்பவர் அவருடைய அனுதின ஜீவியத்தில் சாட்சிகளையும், சம்பவங்களையும் கவனித்துக் பார்த்து தன்னைக் கவனித்துக் கேட்பவர்களுக்காக, நல்ல கற்பனைக் காட்சிகளை உண்டாக்கிக் கொள்ள உதவும்படி செய்ய வேண்டும்.

2. தேவனுடைய வசனத்தைத் தியானிப்பதற்காக நேரத்தை செலவிடுக. (யோசுவா அதி. 1)

3. பிரசங்க ஆயத்தத்தைக் குறித்து ஒழுங்கையும், கருத்தூன்றுதலையும் கடைபிடிப்பாயாக. உமக்கு பிரசங்க ஆயத்தத்திற்கு அமைதியான நேரம் தேவை, வெறும் உரையாடல் அல்ல. தனிப்பட்ட ஏகாந்தமானது தியானத்துக்கு அவசியமான ஏதுப் பொருளாகும் அடிக்கடி ஜெபங்கூட தேவைப்படும். 1பேதுரு 4:7 'தெளிந்த புத்தியுளளவர்களாய் இருந்து ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்'.

# பிரசங்கத்தை கொடுக்கும் நடைமுறை

## கூட்டத்தை ஆரம்பித்தல்

- ஒரு எதிர்மறையான சொற்கூற்றுடன் ஒரு கூட்டத்தை ஒருபோதும் ஆரம்பிக்காதே.
- எதிர்பார்ப்புள்ளதோர் சூழ்நிலைமையை எப்பொழுதும் உண்டாக்கிக் கொள்.
- இப்பொழுதே என்ற நேர்முகத்து விசுவாசக் கூற்றுடன் அதை நடத்த ஆரம்பிக்கவும்.

## ஞானத்தைப் பிரசங்கித்தல்

உன்னுடைய பேச்சில்:

1. **இயல்பான தன்மையுடன் பேசுக.**
   நீ எப்பொழுதும் சாதாரணமாக பேசுகிற பிரகாரம் பேசவும், சிறிது உரத்தச் சத்தத்தோடு.
2. **தெளிவாகப் பேசவும்.**
   மக்களுக்குப் புரியாத காரியங்களைப் பேச வேண்டாம். உன்னுடைய வார்த்தைகளைத் தெளிவான உச்சரிப்புடன் பேசுக.
3. **நம்பிக்கையுடனும் அதிகாரத்துடனும் பேசுக.**
   நம்பிக்கையும், அதிகாரத்துவமும் அறிந்திருத்தல் என்ற ஸ்தானத்திலிருந்து வருகிறது.
   தானி 11: 32. 'தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கொண்டு அதற்கேற்றபடி செய்வார்கள'

- நீ உன்னுடைய சிந்தனையிலும் இருதயத்திலும் பாதுகாப்புடன் இருக்கும்பொழுது, நீ நம்பிக்கையுடன் இருப்பாய்.
  - அந்த கூட்டத்திலிருந்து தேவன் எதை விரும்புகிறார்.
  - அது எவ்வாறு நடத்தப்பட வேண்டும்
  - உன் மூலமாக ஜனங்களுக்கு என்ன செய்தியைக் கொடுக்க வேண்டும்.
- நம்பிக்கை என்பது அந்த வார்த்தையை உள்ளனதாக ஆக்கிக் கொண்டாய் என்று நீ அறிந்து கொள்ளும் பொழுது வருகிறது.
- அதிகாரமும், அபிஷேகமும் உன்னுடைய ஜெப அரங்கத்தில் நீ தேவனோடு ஜெபத்தில் தரித்திருந்து நேரத்தைச் செலவிடும் பொழுது வருகிறது.

**ஸ்தாய் : உன்னுடைய சப்தத்தில் கீழ் ஸ்தாயை உபயோகிக்கவும்.**

- உன்னுடைய சப்தத்தை உயர்த்தினால் விழிப்புணர்வுடன் உன் ஸ்தாயைக் குறைத்துக் கொள்ளவும்.
- எல்லா நேரத்திலும் ஒரே விதமான, சுவையற்ற ஸ்தாயில் பேசுவது மிகவும் ஆபத்தானதாகும். அதனால் ஏற்ற தாழ்வுடன் குரலை மாற்றிப் பேசுக.

**உரத்த குரலில்:** மிகவும் அவசியமாக இருந்தாலன்றி சிறிது உரத்த குரலில் பேசுக.

**வேகம்** : உன்னுடைய செல்குழு பெரிதாக இருக்குமானால் எவ்வளவு அவசியமோ அந்த அளவுக்கு மெதுவாகப் பேசவும்.

**இலக்கணம்** : அரைகுறையான ஆங்கிலம் கற்றறிந்த அங்கத்தினர்களை விரட்டி விடுகிறது. ஆகவே சரியான ஆங்கிலத்தைப் பேசக் கற்றுக்கொள்.

**பழக்க வழக்கம்** : சில வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லாதப்படிக்கு கவனமாயிரு.

**உடல் தோற்றம் :**

நீ பேசும் பொழுதோ அல்லது பாடலை நடத்திச் செல்லும்பொழுதோ, இரண்டு விதமான மனப்பான்மைகளை நீ ஒளிரச் செய்ய வேண்டும்.

# விழிப்புணர்வு.
# உற்சாக ஆர்வம்

1. **சரீர அங்கத்தோற்றம்** : நீ எப்படி உட்காருகிறாய், நிற்கிறாய் அல்லது நடக்கிறாய் என்பதைக் கவனிக்க.
ஒரு பக்கமாகவோ, சாயவோ அல்லது அசையவோ கூடாது. ஆனால் சற்று முன் சாய்ந்து நிற்க முயற்சிக்கவும்.

2. **சமிக்கை பாவனைகள்** : உன்னுடைய சைகை பாவனையானது, நீ சொல்லப் போகிற குறிப்புக்கு அனுசரனையாக இருக்கவும்.
உன்னுடைய மூக்கையோ, காதுகளையோ, கண்ணாடியைக் கழற்றுவதோ ஆகிய பழக்கங்களை உண்டாக்கிக் கொள்ளாதே.

3. **கண்கள்** : அறையிலுள்ள ஒவ்வொருவரையும் நேராகப் பார்க்கவும். ஆராய்ந்து பார்க்கப் பழகு.

4. **தோற்றம்** : இது முக்கியமானது. முதல் அபிப்பிராயமே கடைசியானதும் கூட.
எப்பொழும் சாதாரணமாகவும், நேர்த்தியாகவும் ஆடை அணிந்து செல் குழு கூட்டத்திற்குப் போகவும்.
- ஆடை சுத்தமானதாகவும், நேர்த்தியாகவும், ஸ்திரி போட்டதாகவும் இருக்க வேண்டும்.
- தளதளர்த்த ஆடைகள், தளதளர்த்த மனப்பான்மையை தூண்டுகிறது.

உன்னுடைய சரீர தோற்றக் கூறுபாடுகளுக்கு அனாவசியமான கவனச் சிதறலை உண்டாக்குமாறு ஆடை அணிவதை செய்யக் கூடாது.
திறவுகோல் - சிறிது பழமையான கலாச்சாரமான உடையை செல்குழுவில் இருக்கும் சராசரி மனிதர்களை விட சிறப்பாக அணியவும்.

# தேவனுடைய வார்த்தையைப் பற்றிய ஊழியத்தைச் சார்ந்த முக்கியத்துவம்

## முகவுரை

<u>பிரசங்கமும், பிரசங்கிப்பவரும்</u>

'பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று.' (1கொரி 1:21) பிரசங்கித்தல் என்பது, தேவனுடைய எண்ணமாகும். மேலும் பிரசங்கிக்குமாறு அழைக்கப்பட்டவர்கள், (பறை சாற்றுகிறவர்களை) பிரகடனப்படுத்துகிறவர்களை அதிகாரப் பூர்வமாக அறிவிப்பவர்களைப் பயிற்றுவித்தும் அவர்களுடைய பிரசங்கிக்கும் கலை அல்லது திறன்பாட்டை விருத்தி செய்யப்படவும் அவசியமாகிறது. ஆகையால் பிரசங்கம் செய்வதென்பது சாவதானமாக ஒரு மக்கள் கூட்டத்தின் முன்பாக நின்று கொண்டு செயலூக்கத்துடன் பேசுவதை விட மிகவும் அதிகமானது.

**முக்கியமாக**, பிரசங்கம் செய்வது தேவனுடைய தனிப்பட்ட தூதை மக்கள் இருதயத்திற்கு தகவல் பரிமாற்றம் செய்வதாக இருக்க வேண்டும். 1கொரி 1:18 அந்த விதமான பிரசங்கமானது, தேவனுடைய வல்லமையை அநேகருடைய இரட்சிப்புக்காகவும் பக்தி விருத்திக்காகவும் விடுவிப்பதாகும். பிரசங்கித்தல் என்பது, தெய்வீக சத்தியத்தை மனித ஆள் தன்மையின் மூலமாகத் தகவல் பரிமாற்றம் செய்யும் கலையாகும். இது இரட்சிப்பின் நற்செய்தியை மனிதனுக்கு மனிதன் பிரகடனஞ் செய்வதாகும். இதற்கு இரண்டு அடிப்படையான கோட்பாடுகள் இருக்கின்றன.

1). மனிதன் (ஆள்தன்மை)
2). செய்தி (சத்தியம்)

ஆகையால் ஒரு பிரசங்கம் செய்பவர் ஒரு தகவல் தொடர்பாளர் ஆவார். அவர் சத்தியத்தைத் தேவனிடமிருந்து பெற்றுக் கொண்டு அதை செயலூக்கமாக மனிதர்களுக்கு தகவல் பரிமாற்றம் செய்கிறார்.

தேவன் வெளிப்பாட்டைத் தருகிறார். மனிதன் அதை அறிமுகப்படுத்துவதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்து உதவுகிறன். ஒரு பிரசங்கியாராக பணி செய்ய வேண்டுமானால் அவருக்கென்று பிரசங்கிப்பதற்கென்று அவருக்கு குறிப்பிட்டதோர் அழைப்பு இருக்க வேண்டும். (கலா 1:15-17) மேலும் அது திருச்சபை தலைவர்களால் அவர்கள் தலைமேல் கைவைத்து உறுதி செய்யப்பட வேண்டும். (1தீமோத் 4:11; 2தீமோ 1:6) அவன் ஒரு நல்ல மனிதனாகவும், பரிசுத்த ஆவியினாலும், விசுவாசத்திலும் நிறைந்தவராய் இருக்க வேண்டும். இந்த மாதிரியான ஜீவியமும், பிரசங்கித்தலும் அநேக ஜனங்கள் கர்த்தரை ஏற்றுக்கொள்ளும் பலாபலனைத் தருவதாகும். (அப் 11:24)

அந்த செய்தியாவது, பிரசங்கிப்பவரது ஒரு பகுதியாகும். அது அவருடைய மெய்யான ஜீவியத்தையும் அநுபவத்தையும் விளக்கமாக வெளியே சொல்வதாக இருக்கும். அந்த சத்தியத்தைப் பற்றிய அனுபவமானது, அந்த பிரசங்கிப்பவரில் தானே உண்மையானதாக அவர் அதை திட நம்பிக்கையுடனும், நம்பச்செய்யும் உறுதிப்பாட்டுடனும் அவருடைய செய்தியின் உள்ளும் அதன் வழியாகவும் இருக்கும். வல்லமையினால் அதைப் பிரகடனப்படுத்த முடியும். ஆகையினால் தேவனுடைய வார்த்தையானது உன்னுடைய இருதயத்திலும் ஆவியிலும் வேர் விடட்டும். (அது உனக்குள்ளாக ஒன்றுபட்டு பரிணாமிக்கட்டும்) அது உன்னுடைய தனிப்பட்ட ஜீவியத்திலும் அனுபவத்திலும் மெய்யாகவே உன்னில் ஒன்றாகட்டும். எனென்றால் தேவனுடைய வார்த்தையானது உன்னில் வாசம் பண்ணுவதால், நீயாகவே தேவனிடம் இருந்து பெறபப்படும் செய்தி ஆகிவிடுவாய். நீ பிரசங்கிப்பதை மட்டும் செய்வதில்லை. ஆனால் என்னுடைய சரியான ஜீவியமும், வாழ்க்கை நடைமுறையுமே உன்னை அறிந்துக்கொண்டும் கவனித்து செவி கொடுப்பவர்களுக்கு, ஜீவனையும், ஆசீர்வாதத்தையும், பலத்தையும் தந்து கிரியை செய்வதாகும்.

## பிரசங்கிப்பதற்கான ஆயத்தம்

பிரசங்கித்தலாவது எழுதப்பட்ட வார்த்தையிலிருந்து பிறந்து பேசப்பட்ட வார்த்தையால் மனித உருவில் அவதரித்த வார்த்தையின் வெளிப்பாடாகும்!. ஒரு வல்லமையானதும் அபிஷேகம் பெற்றதுமான பிரசங்கம் செய்வதில் வளர்வது என்பதற்கு தேவனுடன் ஒரு அந்நியோந்நியமான ஐக்கியத்தை உண்டாக்கிக் கொள்வதும் பரிசுத்த ஆவியின் பேரில் முற்றிலும் சார்ந்திருக்க வேண்டும் என்பது கட்டளையாகும். பிரசங்கிப்பவர் நாடோறும் கர்த்தருக்குக் காத்திருந்து அமைதியாகவும் பொறுமையுடனும் தேவனுடைய பிரசன்னத்தில் தரித்திருந்து நம்முடைய ஆவியில் பேசும்படியாக எதிர்பார்ப்புடன் இருப்பதற்காக கர்த்தருடன் நேரத்தைச் செலவிடுவது அவயசியமாகிறது. தேவனுடைய இருதயத்திலும் சிந்தனையிலும் பிரயோஜனமான செய்திகள் ஆரம்பிக்கின்றன. அவரே சகல சத்தியத்திற்கும் பிறப்பிடமும் சகல அறிவிற்கும் ஊற்றுமானவர். செயலூக்கமான பிரசங்கம் பண்ணுவதற்கு தேவனுடைய யோசனைகளைப் பெற்றுக் கொள்வதே முன் நிபந்தனையாகும்.

பரிசுத்த ஆவியினால் ஜீவித்து அதன் கட்டுப்பாட்டுக்குள் இருப்பது நீ தேவனுடைய வார்த்தையை நிலையாக வாசித்தும் படித்தும் உன்னை (ஆவியின் பிரகாரமாக) போஷித்துக் கொள்வதற்கு அத்தியாவசியமாகும். (2தீமோத் 2:15) நீ வேதாகமத்தை வாசித்து படிக்கும்பொழுது தேவனுடைய வார்த்தையை முழுவதுமாக பொருள் அர்த்தம் விளங்கிக் கொள்வதற்காக தேவனுடைய வார்த்தையிலிருந்து அகவறிவு ஒளியையும், அகத்தூண்டுதலையும் தரும்படி கேட்டுப் பெற்றுக் கொள்ளவும். (எபேசி 1:17; சங் 119:18,130) இதற்கு மேலாக ஒரு நோட்டுப் புத்தகத்தைப் பயன்படுத்துவது மிகவும் உதவியாக, யோசனைகளையும், கருத்துக்களையும், பாடங்களையும் ஆய்வுக் கருத்துக்களான கர்த்தருடன் நீங்கள் தனித்திருக்கும் வேளைகளில் அல்லது அனுதின சம்பவங்களில் பெற்றுக் கொள்பவைகளை எழுதி வைத்துக் கொள்ளவும் உதவும். மேலும் நல்ல புத்தகங்களைப் படிப்பதாலும் உங்களுக்குள் புதிய எண்ணங்களைக் தூண்டி எழுப்பவும், புதிய மெய்ப்பொருள் அறிவு பெறவும், உங்கள் மனநோக்கு பார்வையை விசாலப்படுத்தவும் உதவக்கூடும்.

## பிரசங்கித்தலின் நோக்கம்

ஒவ்வொரு செய்தி அல்லது பிரசங்கத்திற்கு ஒரு தெளிவான குறிக்கோள்.`.இலக்கு.`.நோக்கம்.`. உன் எண்ணம் இருக்க வேண்டும். அந்த பிரசங்கிப்பவருக்கு அவருடைய செய்தி மூலமாக தேவன் என்ன நிறைவேற்ற விரும்புகிறார் என்பதை அறிந்திருக்க வேண்டும். ஆகையால் சற்றே முன்னதாகவே தான் முன் வைக்கப் போகிற சத்தியத்தைக் குறித்து அதை அவர் போதிப்பதற்கோ தகவல் தெரிவிக்கவோ, உள்ளத் தூண்டுதல் உண்டாக்கவோ அல்லது தமது சபையினரை ஊக்குவிக்கவோ என்ன செய்யப் போகிறார் என்பதைக் குறித்து தனக்கு தானே வினா எழுப்பி விடை காண வேண்டும்.

a). உற்சாகப்படுத்தி ஊக்குவிக்க (அதாவது அவர்களுடைய உணர்ச்சிகளை செயல்களாக ஆக்குவதற்கு) (உம்) கர்த்தருக்காகவும், அவருடைய நோக்கங்களுக்காகவும் மிகுந்த பக்தி ஈடுபாடு கொள்ளும்படியோர் அழைப்பைக் கொடுக்க.

b). போதிக்கப்படும்படி : அதாவது கற்பித்தலானது, மெதுவாகவும், தெளிவாகவும், ஒழுங்கு முறைப்படி செய்யப்படவும்.

c). தகவல் பரிமாற்றம் செய்ய : தேவன் தந்த அறிவை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும்

d). தூண்டி எழுப்ப : தீர்மானித்துக் கொள்ளும்படி நயந்து கொண்டு தீர்மானம் செய்யவும். இவைகள் பிரசங்கிப்பதில் பல்வேறு அம்சங்களாக அதன் பிரகாரமாகவே ஆயத்தம் செய்வதும், அதை முன் வைத்து செய்தி கொடுப்பதும் தேவையாகிறது.

**ஒரு பிரசங்க தலைப்பை , ஆய்வு கருத்தை, அல்லது பாட பகுதியை தேர்ந்தெடுப்பதற்கான கொள்கைகள் :**

ஒரு செய்தியின் நோக்கத்தைத் தீர்மானஞ் செய்து கொண்ட பின்னர், பின்வரும் கொள்கைகளை கருத்தில் கொள்வது அவசியமாகிறது.

1. இந்த நேரத்திலும் இடத்திலும் இந்த செய்தி மக்களுடைய ஆவிக்குரிய தேவைகளுக்கு பொருத்தமானதா? அவர்களால் அதைப் பெற்றுக் கொள்ள முடியுமா?

2. இந்த சத்தியத்தின் ஒரு அம்ச பகுதியை மாத்திரம் நான் அதிகமாக வற்புறுத்துகிறேனா? அல்லது நான் முழு சத்தியத்தின் வட்டத்தையே பிரசங்கிக்கிறேனா? அதனால் எல்லா தத்துவ கோட்பாடுகளும் சமநிலையுடன் முழுவதுமாக செய்தியில் இடம் பெறுகிறதாக இருக்க வேண்டும். (அப் 20:27).

3. அந்தத் தலைப்பை என்னால் முன்வைக்க முடிகிறதா? எனக்கு அதைப் பற்றிய அனுபவம் அப்பியாசமும் நான் பெற்றிருக்கிறேனா? அதனால் நீ சரியாக புரிந்து தெளிவடையாத ஒன்றைப் பிரசங்கிப்பதற்கு முயற்சித்து முற்படாதே. உன்னுடைய ஆய்வுக் கருத்தை நீ முற்றிலுமாக நன்கு கருத்தறிந்து பிரசங்கிக்கவும்.

<u>அதற்கான நுண்பொருள் சேகரித்தல், ஒன்றுபட்டு உருவாக்க, ஒழுங்கு படுத்த, பிரசங்கப் பொருள் தலைப்பைத் தகவல் தொடர்பக்க.</u>

கர்த்தரிடமிருந்து தலைப்பை / கருத்தை / எண்ணத்தை / ஆய்வு பொருளைப் பெற்றுக்கொண்ட உடனே அதன் நோக்கமானது தீர்மானிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு ஒருவருடைய உள்மனது சாட்சியாலோ, ஆத்ம பாரத்தாலோ பெற்றுக் கொள்பவர்களின் தராதர மட்டத்தை அறிந்தும், பின்வரும் அடிமுறைகளைக் கொண்டு செய்தியையோ, பிரசங்கத்தையோ ஆயத்தம் செய்யும்படி எடுத்துக்கொள்வது அவசியமாகிறது.

1). உன்னுடைய ஆய்வு நுண்பொருளை / மகாக்கருத்தை / வேதாகமத்து முறைப்படியாக உன்னுடைய கருத்தான ஆழ்ந்த சிந்தனைகளை அந்தத் தலைப்புப் பொருள்களைப் பற்றியதை/ கருத்துக்களை சத்தியத்தின் அம்சங்களையும் குறித்து எழுதிக் கொள்ளவும். முக்கியமான மூல வார்த்தைகளையும், மூல யோசனைகளையும் மூல வேதப்பகுதிகளையும் (உம், லூக்கா 18:1-8) ஜெபத்தைப் பற்றியதான வேதாகமப் பகுதியை எடுத்துக் கொள்வோம். அதன் மூல வாக்கியம் வசனம் 1. இதற்காக பல வித்தியாசமான வேதாகமத்து மொழி பெயர்ப்புகளையும், வியாக்கியான உரைகளையும், கிரேக்க அகராதியையும் பயன்படுத்தலாம்.

2). இந்த சேகரித்தல் ஒன்றுபட்டு உருவாக்குதல் ஒழுங்கு முறைப்படுத்தல் ஆகியவற்றை முடித்த பிறகு தொடங்கக் கூடும். இப்பொழுது தான் உன்னுடைய யோசனைகளை ஒரு ஒழுங்கு முறையாக நன்கு அமைத்துக் கொண்டு வைத்துக் கொள்வது முக்கியமாகும். நீ எங்கே போகிறாய் என்பதை அறிந்து கொள்வது அவசியமாக உன்னுடைய பிரசங்கத் தலைப்பானது, ஆர்வத்தை தூண்டுவதாகவும், விளங்கிக் கொள்வதாகவும், ஒரு இயல்பான நடை முறையிலும் விருத்தி செய்யப்பட வேண்டும் உன்னுடைய செய்தியில் யோசனைகளைப் படிப்படியாக முன்னேற்றம் செய்யும் படியாக கட்டி எழுப்பிக் கொள்வது உனக்கு செவிகொடுத்து கவனித்து கேட்பவர்கள் உன்னுடைய தர்க்க ரீதியான யோசனை கோட்டில் விஷயங்களை புரிந்து கொள்ளச் செய்வதில் உதவியாக இருக்கும். மற்றவர்கள் அதைப் புரிந்து கொண்டு ஞாபகத்தில் வைத்துக் கொள்வதற்கு ஏதுவாக எவ்வளவு எளிதாக இருக்க வேண்டுமோ, அந்த அளவுக்கு எளிதாக இருக்கும்படி செய்து கொள்ள வேண்டும்.

3). ஒழுங்கு முறைப்படுத்துவதை செய்த பிறகு தலைப்புப் பொருளை சபைக்கு முன்வைப்பது எப்படி? என்பது கவனம் பெற வேண்டும். செவிகொடுத்துக் கவனித்துக் கேட்பவர்களின் சிந்தனையைக் கவர்ந்திழுக்கும் படியாக சத்தியத்தைத் தெளிவாக ஓர் வழியில் தகவல் தொடர்புப்படுத்திக் கொள்ளவும். அதற்கு மேலுங்கூட உன்னுடைய பிரசங்கத்தை கவனித்துக் கேட்பவர்களை சரியான செயல்பாட்டுக்கு நேராக ஊக்கப்படுத்துக.

## செய்தி அல்லது பிரசங்கம் - ஆயத்தம்

உன்னுடைய பிரசங்கத்தின் அமைப்பானது, முக்கியமாக உன்னுடைய பாடத் தலைப்பு விஷயமானது வேதாகமத்து சந்தர்ப்ப வகையில் முக்கியமாக மேற்கொண்டு அமைக்கப்பட்டும், அந்த நோக்கத்தைப் பற்றிய கூற்றையும் பிரகடனம் செய்வதாகும்.

<u>ஆனாலும் அதிகமான பிரசங்க அமைப்புத் திட்டங்கள் பின்வரும் இந்த மூன்று பகுதிகளையும் போன்று பெற்றிருக்கலாம்.</u>

1. முகவுரை
2. செய்தியின் முக்கியமான பொருள் அடக்கம் (அதை விவரித்துக் கூறுதலும் அதற்கான விவாதங்களும்)
3. முடிவுரையும் அதை நடைமுறைப் படுத்துவதும்

**1. <u>முன்னுரை அல்லது முகவுரை :</u>**

ஒரு பிரசங்கத்திற்கான முகவுரையானது ஒரு கறிக்கு சாம்பார் வர்க்கங்களை சேர்த்து சமைப்பதாகும். அது பிரசங்கத்தின் இறைச்சி பகுதியை ருசிகரப்படுத்துகிறது. அப்படியென்றால் உன்னைக் கவனித்துக் கேட்பவர்களின் ஆர்வத்தை உன்னுடைய பிரசங்கப் பொருளுக்கு தூண்டி எழுப்பி அவர்களுடைய கவனத்தைப் பெற்றுக் கொள்வதாகும். பின்வரும் விஷயத் தகவலுகளுக்காக அவர்களை ஆயத்தப்படுத்துவதாகும்.

**ஒரு நல்ல முகவுரையின் நல்லியல்புகள் :**

- அதிக உரத்த சத்தமாகவும் பரபரப்பாகவும், உணர்ச்சி பூர்வமாகவும் இல்லாமல், சிறிது சிறிதாக அனலூட்டி உன்தலைப்பைக் கொண்டு வந்து, பின் ஒரு உச்ச நிலைக்கு கொண்டு வரும்படி கிரியை செய்யவும்.
- அது ஆர்வத்தை உண்டாக்க வேண்டும்
- மிகவும் நீண்டதாக அல்லாமலும் இருக்க வேண்டும்.
- நன்றாக ஆயத்தம் செய்யப்பட்டு, இருப்பதால் முதன் முறையாகப் பெற்றுக் கொள்ளும் எண்ணப் பதிவானது நிரந்தரமாக நிற்கக் கூடியது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.
- அது உன்னுடைய ஆய்வுக் கொள்கைக்கு (தலைப்புக்கு) சம்பந்தமுள்ளதாய் பின்னர் வரும் பொழுது அது இயற்கையாக அதோடு அதற்குள் பிரவாகித்து ஓடவேண்டும்.

அந்த முகவுரைக்கானவை, நிகழ்காலத்து காரியங்கள், சம்பவங்கள், சந்தர்ப்பங்கள், எடுத்துக்காட்டுகள், உவமைகள், நிகழ்ச்சிகள் புவியல் சம்பந்தப்பட்டவை அல்லது வேதாகமத்து பாரம்பரிய பழக்க வழக்கங்கள் ஆகியவற்றிலிருந்து தெரிந்தெடுத்துக் கொள்ளலாம்.

**2. <u>பிரசங்கத்தின் பொருளடக்கம் அல்லது உடல் பகுதியை மேம்படுத்திக் கூறல் :</u>**

இங்கே நீ உன்னுடைய பொருள் தலைப்பை முன் வைக்கிறாய். தெளிவாக கூறுவதற்கு உன்னுடைய செய்தியை பகுதிகளாக / சிறு கூறுகளாக / குறிப்புகளாக பகுத்துக் கொள்ளவும். அந்த பிரிவுகள் இயற்கையாகவும், ஒழுங்கில் தர்க்க ரீதியாகவும், ஒரு குறிப்பிலிருந்து மற்றொரு குறிப்புக்கு படிப்படியான மாறுதல் அல்லது முன்னேற்றமுடையதாக இருக்க வேண்டும். மேலும் பொதுவாக அந்த பிரிவுகள் பின்வரும் வினாக்களுக்கு பதில் கொடுக்க வேண்டும்.

**என்ன?** அந்த செய்தியின் முதல் பகுதி அந்தத் தலைப்பை முன் வைத்தும் சொற்பொருள் விளக்கமும் பெறுதல் வேண்டும். அது தெளிவாக முன் வைக்கப்பட்டு தெளிவைக் கொண்டு வந்தும் அதன் காரணமாக அறிவுப்பூர்வமான திறமைக்கு அதாவது நுண்ணறிவுக்கு ஏற்க சொல்லப்பட்டு உணர்ச்சிக்கோ அல்லது விருப்ப சித்தத்திற்கோ சொல்லப்பட வேண்டுவதல்ல.

**ஏன்?** இந்த குறிப்பு அதன் அவசியத்தை அதன் காரண காரியத்தை அந்தத் தலைப்புக்கான ஆதாரத்தை விளக்கம் செய்ய வேண்டும். அது பின் வருவது போன்ற வினாக்கள் எழுப்பலாம். அது ஏன் உண்மையானது? அதை ஏன் நான் நம்பவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ வேண்டும்? அது எப்படி சாத்தியமாக்கப்படலாம்? அது நியாயமானதா?

**எப்படி?** இந்தப் பகுதியானது அந்த செய்தியின் ஆய்வு துண்பொருளை கொண்டு வரப்படக் கூடியதும், அதைப் பெற்றுக் கொள்ளவோ அல்லது நிறைவேற்றவோ வேண்டிய நிபந்தனைக் கொண்டு முன் வைக்கக் கூடிய போக்கின் மாதிரியையும் முறையையும் முன் வைக்கும் வழக்கமாக இந்த பகுதியை நிதானித்து பேசுவதில் மூன்று யோசனைகள் இருக்கின்றன.
1. தேவனுடைய பங்கு, 2. மனிதனின் பங்கு, 3. அதன் வழி முறைக்கான கேள்வி.

**அதற்கு பிறகு என்ன?** இது அந்த தலைப்பைப் பொருத்திப் பேசுவதற்கு நடத்திச் செல்லும், அதுவும் முக்கியமானதாகும். உன்னுடைய பிரசங்கத்தின் பாணியில் சார்ந்து மிகவும் செயலூக்கமான திருப்பிப் பார்த்தல் என்பதை அந்த பகுதிகளையோ அல்லது வழி நடத்தும் எண்ணங்களைப் பற்றியே செய்து பார்க்கலாம். மற்ற நேரங்களில் ஒரு முடிவாக வேதாகமத்து பகுதியையே வாசிக்கப்பட்டு அல்லது கவனித்துக் கேட்கும் சபையினருக்கு ஒரு வேண்டுகோளை அவர்களுடைய விருப்ப சித்தத்திற்கும் உணர்ச்சிகளைத் தொடும்படியாக விடுத்து அவர்களை செயல்பாட்டில் இடைப்பட நோக்கப்படுத்தவும், அவர்கள் கற்ற சத்தியத்தை நடைமுறையில் கடைபிடிக்கவும் வேண்டும் படியாக விடுவிக்க வேண்டும்.

<u>எடுத்துக் காட்டுகளின் உபயோகம்</u>

உன்னுடைய செய்தியை, சிறுகதைகளாலும், சம்பவங்களாலும் எடுத்துக்காட்டி விளக்கிச் சொல்வது பெரிய அனுகூலமாகும். இயேசுவின் ஜீவியத்தில் அவரது உரையாடல்களில் இது மிகுந்து காணக் கிடக்கின்றது.

**சிறு நிகழ்ச்சிகள் (சிறுகதைகள்) :**

**படங்கள் :** (உம்) 'உதாரணமாக இருங்கள்' என்று சொல்வதற்கு பதிலாக ' நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள்' என்று இயேசு கூறினார்.

**உருவகங்கள் :** ஒன்று மற்றொன்றை போன்றது. (உம்) தேவனுடைய இராஜ்ஜியம் கடுகு விதைக்கு ஒப்பானது.

**உதாரணங்கள் :** (உம்) உங்கள் பரமபிதா பறவைகளையும் பிழைப்பூட்டுகிறார். ஆதலால் கவலைபடாதிருங்கள்.

**உவமானம் :** ஒப்பிடுவதற்கான அச்சடையாளங்கள் இல்லாமை. (உம்) விரியன் பாம்பு குட்டிகளே, அந்த நரி ஏரோதைக் குறித்துச் சொன்னது.

**கருத்தூன்றிய சிறு வாசகம் :** சிறியதான, ஆனால் குறிப்பிடும் சொற்கூற்றுகள் பன்றிகளுக்கு முன் முத்துக்களைப் போடாதிருங்கள்.

**கற்பனை நயம் :** கற்பனைக் கதைகளில் தீங்குகள் பண்பாடுகள் ஆகியவை தனிமைப்படுத்தப்பட்டன. மற்ற வார்த்தைகளில் அர்த்தமுள்ள சிறுகதைகள்.

**நீதிகதைகள் :** நீதியான சத்தியமானது, காரண காரியத்தையும், மொழியையும், மரங்கள் பறவைகள், பிராணிகள் இவற்றிற்கு மேல் ஏற்றி பகிர்ந்தளிக்கப்படுகிறது.

**உவமைகள் :** அனுதின ஜிவியத்திலிருந்து சிறுகதைகள் உயர்ந்த ஆவிக்குரிய உண்மைகளை உள்ளுணர்த்தவும், விளக்கிக் காட்டவும்.

**வாழ்க்கை நிகழ்ச்சிகள் :** உம்.) யோனா மூன்று நாட்கள் மீன் வயிற்றில் இருந்தது.
இயேசுவின் ஊழியத்திலிருந்து பிரசங்கம் செய்வதில் எடுத்துக் காட்டுகளின் பெருமதிப்பைப் பார்க்கிறோம். இந்த எடுத்துக் காட்டுகளின் உபயோகத்தால் சபையினருக்கு தாங்கள் கேட்டறிந்த பிரசங்கத்தில் உள்ள சத்தியத்தை தங்கள் வீடுகளுக்கு எடுத்துச் செல்வதற்கு பேருதவியாக இருக்கும்.

எடுத்துக்காட்டுகளின் நோக்கமாவது :

- அந்த பாடத்தலைப்புக்கு அதிகமான பொருள் விளக்கம் கொடுக்க.
- சத்தியத்தை தெளிந்துணர்ந்து, ஞாபகத்தில் வைத்துக் கொள்ள
- உயிரற்ற திரும்பத் திரும்ப வார்த்தைகள் சொல்வதைத் தவிர்க்க
- தெரிந்து தீமானிக்கச் செய்வதை முன்னேற்றுவிக்க.
- சத்தியத்தை நடைமுறையில் கையாளுவதற்கு உதவியாக, மூலகாரணங்களானவைகளைப் பயன்படுத்தக் கூடும். ஒரு பொருள், செய்திதாள், சரித்திரம், வாழ்க்கைச் சரித்திரம், வேதாகமம், அனுதின ஜீவியம்.

**ஞாபகத்தில் வைத்துக் கொள்ள** : ஒரு பிரசங்கத்தை ஆயத்தம் செய்வது ஒரு வீடு கட்டப்படுவதற்கு ஒப்பாகும். எங்கிருந்தென்றால் :

- முகவுரையானது வீட்டுக்கு நடத்திச் செல்லும் வழிப்பாதை போன்றது, அது உன்னை முன் வாசலில் இருந்து, நீ வீட்டுக்குச் செல்லும் வாசல் கதவு வழியாக நடத்திச் செல்கிறது.
- ஒவ்வொரு முக்கியமான பெரிய பிரிவும், வீட்டிலுள்ள அறைக்கு சமானமானது.
- சிறிய உட்பிரிவுகள் அனைத்தும், வீட்டிலுள்ள தளவாடச் சாமான்களைப் போன்றது.
- எடுத்துக்காட்டுகள் எளிய உதாரணங்களாக ஆழமான சத்தியங்களைப் புரிந்து கொள்ள உதவுகிறது. இவைகள் ஒவ்வொரு அறையிலும் அமைந்த ஜன்னல்களைப் போல அறைகளிலுள்ள தளவாடப் பொருள்கள் மீது வெளிச்சம் வீசும்படியாக உதவுகிறது.

## ஒரு பிரசங்கத்தை ஆயத்தம் செய்யும்படிக்கான வழிகள் :

<u>1. எழுதப்பட்ட செய்தி</u>

இந்த முறையில் அந்த செய்தி முழுவதுமே மேலும் ஒவ்வொரு சம்பந்தப்பட்ட எண்ணங்களும் முழுவதுமாக எழுதப்படுகின்றன. அந்த செய்தியின் ஒவ்வொரு அம்சமும் சரியான கவனம் பெற்று அதை முன்னதாகவே ஆயத்தம் செய்வதால் முழுவதுமாக கவனம் அடங்கி பெறுகிறது. மேலும் அமைப்புத் திட்டத்திற்கும், அதை பேசும் பாணிக்கும் போதுமான கவனமும் ஆயத்தமும் கொடுக்கக் கூடும்.

<u>2. எலும்புக் கூடுபோன்ற குறிப்புகளைக் கொண்டு ஆயத்தம்</u>

முழு செய்தியையும் எழுதிக் கொள்வதற்கு பதிலாக முக்கியமான குறிப்புகளும், துணை பிரிவுகளும், மூலவாசகங்களும், எண்ணங்களும் மேலோட்டமாக வரிவடிவில் இடம் பெறுகின்றன. இந்த மேலோட்டமான அமைப்பும் அந்த குறிப்பு முறை பாடச் சுருக்கமும் கூட அந்த செய்திக்கு எலும்புக் கூடு போன்று பயன்படுகிறது. அது செய்திக்கு வடிவத்தையும், அமைப்பையும் அந்த பிரசங்கி சொல்ல விரும்புவதற்குத் தந்து அமைத்து உதவுகிறது. அவர் பேசும்பொழுது அதன் அமைப்பை விரிவாக்கி, அந்த செய்தியின் எலும்புகளுக்கு மேல் சதையை வைக்கிறார். இந்த முறையில் அவரது எண்ணக் கருத்துக்களைத் தூண்டிய அந்த சுருக்கமான குறிப்புகள் மேலும் விரிவாக்கம் பெறக் கூடியதாகி அதிகமான ஊக்கத் தூண்டுதல் அவர் செய்தியை சாதாரணமாக பேசிக் கொடுத்துக் கொண்டிருக்கும் பொழுதே அந்த தூண்டுதல் பொங்கி ஓடக்கூடும்.

<u>3. முன்னேற்பாடற்ற பிரசங்கம்</u>

இது ஒரு இயல்பான பாணியில் பிரசங்கம் செய்வதாகும். வழக்கமாக எழுதப்பட்ட குறிப்பு ஆயத்தங்கள் இல்லாமலே பிரசங்கிப்பதாகும். மெய்யாகவே பேசும் தலைப்புக்கு ஒரு அபரிமிதமான யோசனையும் முன்னதாகவே அதற்குக் கொடுக்கப்பட்டு அதன் காரணமாக அவருடைய சிந்தனையும், இருதயமும் அந்த செய்தியின் முக்கியமான அம்சங்களால் நிரப்பப் படுகிறது. அது வழக்கமாக ஓர் அகத்தூண்டுதலான பிரசங்கத்தைக் கொண்டு வருகிறது. அந்த விதமான பிரசங்கமானது, சுவிசேஷக் கூட்டங்களுக்காக செயலூக்கமாக பயன்படுத்தப் படுகிறது. எனென்றால், அந்த செய்தியானது, இருதயத்திலிருந்து பெருகி ஓடி உணர்ச்சி பூர்வமானதோர் ஈடுபாட்டை உடன் சுமந்து செல்கிறது. அனுபவம் வாய்ந்த பிரசங்கிமார்கள் இந்த விதமான நடைமுறை பாணியை உபயோகப் படுத்தி விடக்கூடும். அதற்கு மிக ஆழம் குறைந்ததாயினும் அதை செவிகொடுத்துக் கேட்பவர்களின் சிந்தனையை அதிக கூடுதலாக கவரப்படக் கூடும்.

### ஒரு வசனப் பகுதியைப் பயன்படுத்துவதும் அதன் நோக்கமும்

இந்த தலைப்புக்கான text என்ற ஆங்கில பதமானது, textus என்ற கிரேக்கப் பதத்திலிருந்து எடுக்கப்பட்டு (நெசவு) நெய்வதற்கு என்ற அர்த்தம் கொடுக்கிறது. மற்ற வார்த்தைகளில் சொல்வதென்றால், ஒருவருடைய கட்டுமானத்திற்கு குறிக்கோள்களை ஒன்றாகச் சேர்த்து வைப்பது என்றாகும்.

தொன்று தொட்டு வரும் யூத பழக்க வழக்கமாவது ஒரு வேதாகமத்துப் பகுதியை வாசித்து அதற்கான விளக்க வியாக்கியானமும் கொடுத்து அந்த சத்தியத்தில் நடைமுறைப் படுத்தவதும் போதிக்கப்பட்டது. பரிசுத்த ஆவியினால் ஊக்கப்படுத்தப்பட்டு, அப்போஸ்தலர்கள் வேதாகமத்து

வசனப் பகுதிகளிலிருந்து பிரங்கித்தனர். அதன் காரணமாக வசனப் பகுதியைப் பயன்படுத்துதல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட வேதாகமத்து பகுதியானது செய்திக்கு அடிப்படையாக தெரிந்தெடுக்கப்பட்டது. (மேலும் அந்த பகுதியானது அந்த வசனத்தின் சந்தர்ப்ப நிலைமைக்குள் விளக்கிக் கூறப்பட்டு ஆக வேண்டும்.)

**ஒரு வேத பகுதியை தெரிந்தெடுத்துக் கொள்வதன் நோக்கமாவது :**

- அந்த பகுதி பிரசங்கம் செய்பவருக்கு, அவர் பிரசங்கம் செய்யும்பொழுது அவருக்கு தைரியத்தையும் அதிகாரத்தையும் தருகிறது. (தேவன்) கர்த்தர் தமது வார்த்தையில் இவ்வாறு திருவுளம் பற்றுகிறார்' என்று கூறலாம். நீ குறிப்பாக தேவனுடைய வார்ததையைப் பிரசங்கிக்கும் பொழுது, அங்கு அதன் மேல் பரிசுத்த ஆவியின் விசேஷித்த அபிஷேகம் இருக்கும். தேவன் தம்முடைய வார்த்தையை அபிஷேகித்தும் உறுதிப்படுத்தவும் செய்கிறார். (மாற்கு 16:20).
- அது செய்தியை வேதாகமத்து முறைப்படியாகச் செய்து அந்த செய்தியானது, வசனப்பகுதியின் மேல் மையப்படுத்துகிறது. உம்முடைய ஆய்வுப் பொருளை மற்ற சம்பந்தப்பட்ட வேதாகமப் பகுதிகளைக் கொண்டு அவற்றிலிருந்து பாடச் சுருக்கமாக ஆதாரப்படுத்துவது நல்லது என்று கருதப்பட்டாலுங்கூட அதை வசனத்தை மையப்படுத்திப் பேசுவது நன்று. எனென்றால் 'நாம் அனைவரும் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணுமாறு கட்டளையிடப் பெற்றிருக்கிறோம் (2தீமோத் 4:2).
- ஒரு குறிப்பிடப்பட்ட வசனப் பகுதியானது, உம்முடைய செய்தித் தலைப்பிலிருந்து அலைந்து திரிவதை தடைச் செய்கிறது. மேலும் அது கவனிப்பவர்களின் மனதை ஒரு நிலைப்படுத்துவதுடன் கவனத்தையும் விரிவாக்குிறது.
- அந்த செய்தியானது சபையாரின் ஆர்வத்தைத் தூண்டுதல் செய்து செய்தியை அவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும் உதவிசெய்கிறது.

## பிரசங்கத்தின் சில வகைகள் :

**1. சுவிசேஷ செய்தி** : இதன் நோக்கமாவது சுவிசேஷத்தை பிரசங்கிப்பதாகும். இழந்து போனவர்களுக்கு நற்செய்தியை அறிவிப்பதாகும். இரட்சிப்பின் செய்தியானது தெளிவாக முன் வைக்கப்பட்டு கவனிப்பவர்களுக்கு ஒன்றைத் தெரிந்து கொண்டு பிரதியுத்தரம் தரவும் அவர்களுக்கு உதவுகிறது.

**2. நல்லொழுக்க செய்தி** : இது ஒழுக்க நெறி சம்பந்தப்பட்ட விவாதங்களில் சம்பந்தப்பட்டு தேவனுடைய வார்த்தையின் படி எது சரி என்றும் எது தவறு என்றும் நிதானிக்க உதவுகிறது. (உம்) பின்வரும் தலைப்புகள் போன்றவைகளை. கருச்சிதைவு, போதைப் பழக்கம்.

**3. தலைப்புக்குரியது (அ) ஆய்வு பொருள் செய்தி :**
இங்கே இதன் நோக்கமாவது ஒரு குறிப்பிட்ட தலைப்பையே (அ) ஆய்வு பொருளையே விளக்கம் செய்வதாகும். பிரசங்கிப்பவர் அந்தத் தலைப்பைக் குறித்து முற்றிலும் சரியாக படித்துணர்ந்து மேலும் அதை சரியான முறையில் ஒழுங்குபடுத்திக் கொண்டு தமது சபையினரோடு அந்தத் தலைப்பைக் குறித்து அவர்கள் என்ன தெரிந்திருக்க வேண்டுமோ அதை அவர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

**4. பாடப்புத்தகச் செய்தி**
இந்தவிதமான அணுகுமுறையில் வேதாகமத்தில் ஒரு சுருக்மான பகுதி தெரிந்தெடுக்கப்படுகிறது. பிரசங்கிப்பவர் இதை துப்பறிந்து, ஆராய்ந்து, படித்து, பகுத்து படித்து அந்த வேத பகுதியில் அடங்கியுள்ள சத்தியத்தைக் கண்டு பிடித்துக் கொண்டு அதை சபையினருக்கு ஒழுங்கான முறையில் முன் வைத்தும் ஒரு முன்னேற்றமான பிரகாரமாகத் தந்து விடுகிறார். (உம். யோவன்: 3:16; ரோமர் 5:1).

**5. விரிவான பொருள் விளக்கம் தருகிற செய்தி :**
இந்த விதமான பாணியில் ஒரு குறிப்பிட்ட வேதாகம வசன பகுதியில் அடங்கியுள்ள சத்தியத்தையும், அதன் பொருள் விளக்கத்தையும் விரிவாகத் தருவதற்கு அவசியமாகிறது. அந்தப் பிரகாரம் அது அதீதமாக விரிவான முறையில் அந்த பகுதியை விவரமாக எடுத்துக் கூறி அதில் மறைந்து பொதிந்துள்ள சத்தியத்தையும் அதன் ஆழத்தையும் கொண்டு வந்து வெளிப்படுத்த முயற்சிக்கிறது. அது வேதாகமத்தை ஒழுங்காகப் படித்தரிந்து அதில் ஒரு புத்தகத்தைத் தெரிந்தெடுத்துக் கொண்ட பிறகு ஒவ்வொரு பிரசங்கத்திலும் ஒரு பகுதியை அல்லது ஒரு அதிகாரத்தை கையாண்டு கொண்டு, அதை அதிகாரம் அதிகாரமாக படித்து முடிக்கும் முறையானது பின்பற்றப் படுகிறது.

**6. வாழ்க்கை வரலாற்றுச் செய்தி :**
இந்த முறையில் வேதாகம ஒரு கதாபாத்திரத்தை செய்தியில் முன் வைத்து பிரசங்கிக்கிறார். அவர்கள் ஜீவியத்தைப் பற்றி படித்தறிந்து, அதிலிருந்து நீதியான பாடங்களைக் கற்றுக் கொள்ளுவதாகும். (உ.ம்) ஆபிரகாம், மோசே.

**7. கதையை எடுத்துரைக்கிற செய்தி (அ) வரலாற்றுச் செய்தி :**
இதில் வேதாகம ஒரு சம்பவத்தை, அதனால் கற்றுக் கொள்ளப்படுகிற பாடங்களோடு இன்றைய நாட்களுக்காக நமக்கு முன் வைக்கும் செய்தியாகும்.

**8. குறிப்பிடப்பட்ட (அ) மாதிரி எடுத்துக் காட்டான செய்தி :**
இந்த வகையான பிரசங்கத்தை செய்வது முதிர்ச்சி அடைந்து வேதாகமம் முழுவதிலும் முற்றிலும் சரியானதும் ஆழமானதுமானதோர் அறிவைப் பெற்றுள்ளவர்களுக்காக மட்டும் பிரத்தியேகமாக ஒதுக்கிடு வைக்கப்படவேண்டும். இது வேதாகமத்து மேற்பரப்பின் கீழ் மறைந்து கிடக்கும் பல தரப்பட்ட வகையான சத்தியங்கள் தகவல் முறையில் அறிவிக்கும் படியாக மூடி மறைக்கப்பட்டவற்றை மூடியைக் கிழித்து வெளிக்கு கொண்டுவரும் கலையாகும். ஒரு வகை என்பது, ஒரு நபராகவோ, பொருளாகவோ, சம்பவமாகவோ யாரோ ஒருவரையோ அல்லது ஏதோ ஒன்றையோ பற்றி வரக்கூடியதுமான ஒன்றை தீர்க்கத்தரிசன அடையாளமாக முன்னுரைப்பதாகும். (எபி 8:5; எபி 10:1) அது வருங்காலத்தைப் பற்றிய ஏதோ ஒன்றை முன்னுரை நிழலாக்குகிறது. (உ.ம்) பஸ்கா ஆட்டுக்குட்டி யாத்திராகமாத்தில் சொல்லப்படுகிறதானது கிறிஸ்துவைப் பற்றிய ஒரு வகையான தேவ ஆட்டுக்குட்டியாகும்.

**9. (தியானத்திற்கான செய்தி) தெய்வீக ஈடுபாட்டிற்கான செய்தி :**
இதன் நோக்கமாவது கிறிஸ்துவுடன் நெருக்கமான அந்நியோந்நிய ஐக்கியத்தை ஊக்குவிப்பதாகும்.

**10. உண்மையான நடைமுறை செய்தி :**
இந்த விதமான பிரசங்கம் சமுகத்தில் தற்காலத்திய நிலைமையை, மாநகரத்தில் அல்லது நாட்டில் (உதாரணமாக) நேரிடக்கூடிய இயற்கையான நாசங்கள், எய்ட்ஸ் போன்ற நோய் முதலியவைப் பற்றியது. இவைகள் நேரிடுவதாலும் கர்த்தரை மாத்திரம் நம்பும் படியாக குறித்துக் காட்டுவதாகும்.

**11. ஒப்புடைமையுடைய செய்தி :**
ஒரு ஒப்புடைமையில் அடங்கியிருக்கும் சத்தியத்தை வெளிக் கொண்டு வரும்படி முயற்சித்து அதன் இடத்தே ஒரு இயற்கைப் பொருளானது, ஒரு ஆவிக்குரிய சத்தியத்தைப் போதிக்குமாறு பயன்படுத்துவதாகும். (யோவான் 12:24. கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து செத்து பலன் கொடுப்பது தானாகவே சுயம் செத்துப்போகுதல்).

**12. தீர்க்க தரிசன செய்தி :**
இதற்கு தேவனிடம் ஒரு அகத்தூண்டுதலான வார்த்தைக்காக காத்திருப்பது அவசியமாகிறது. இது இன்றைய நாட்களுக்கும் பொருத்தமானதாக "அந்த மணிக்குரிய நேரத்துக்கான" செய்தியாகும்.

## பொருள் தலைப்பு பற்றி தூது :
இந்த செய்தியில் அணுகு முறை கேந்திரமானது பாடத் தலைப்புக்கு உரியதாகும். இந்த பாணியின் ஒரு அனுகூலமாவது, அது ஒற்றுமையை உறுதிப்படுத்துகிறது. இதன் காரணமாக அந்த முடிவான சத்தியமாவது பேச்சாளரின் வார்த்தைகளால் உருவாக்கப்படுகிறது என்பதை மனதில் வைத்துக்கொள்வது அவசியமாக இருப்பினும், அது அவ்வாறே உருவாக்கப்படுகிறது. ஆகையால்

அந்த பொருள் தலைப்பை முற்றிலும் சரியாகப் படித்தறிந்து, சில அம்சங்களை நீக்கி விட்டு விடாமலும் அவ்வாறு அறிந்து கொள்வது அவசியமாகிறது. இதை ஆயத்தப்படுத்துவதற்கு ஒரு ஒத்துவாக்கிய வேதாகமத்தை பயன்படுத்துவது உபயோகமாகும். உம்முடைய பிரசங்கத் தலைப்பு மிகவும் விரிந்ததாக இருக்குமானால், இந்த அணுகு முறையை சில குறிப்பிட்ட அம்சங்களுடன் நிறுத்திக் கொள்வது நல்லது.

பிரசங்கிப்பவரே சத்தியத்தை உருவாக்குவதால், அந்தத் தலைப்பை விளக்கவுரை செய்யும்பொழுது, வேதாகமத்து ஒத்து வாக்கியங்களை தருவது முக்கியமானதாகும்.
நீங்கள் உங்களுடைய பிரசங்கத் தலைப்பை முற்றிலும் சரியாக தீர்க்கமாக படித்து முடித்த பின்னரே செய்தியை ஆயத்தம் செய்ய ஆரம்பிக்கலாம். முன்னர் விளக்கிக் கூறப்பட்டது போல முதல் முதலாக உங்கள் அமைப்புத் திட்டத்தை மேலோட்டமாக வரையறுத்துக் கொண்டு அந்தத் தலைப்பை பற்றி தயாரித்துக் கொள்வது முக்கியமாகும். அதைச் செய்த பிறகு ஒரு பொருத்தமான முகவுரையைத் தயாரித்துக் கொண்டு, கண்டுபிடிக்கப்பட்ட சத்தியத்தின் முடிவுரையுடனும் அதை நம்முடைய தனிப்பட்ட ஜீவியத்திற்கு பொருத்தமானதாக ஆக்கப்படவேண்டும்.

<u>உதாரணம் :</u>
வஞ்சிக்கப்(படாமல்)படுவதற்கு, எச்சரிக்கையாயிரு.
பாடப்பகுதி. 1தீமோத் 4:1-2; மத் 24:3-5

1. முகவுரை : காலங்களின் அடையாளங்கள். பலதரப்பட்ட எச்சரிக்கைகள் (1கொரி 15:33; கலா6:7)
2. விரிவாக்கமுறை : இதன் அர்த்தமாவது என்ன?. உபயோகிக்கப்பட்ட கிரேக்க வார்த்தையைப் பார்க்கவும். எடுத்துக்காட்டு பின் வஞ்சிக்கப்படுதல் எப்படி வருகிறது? அந்த வஞ்சிக்கப்படுதலுக்கான காரணிகள். சாத்தான் (2கொரி 11:14) உ.ம். ஆதி 3ம் அதி. பரதீசு. பாவம் (எபி 3:13) (உ.ம்) எண்ணா 25ம் அதி. பிலேயாம். சுயம் எரேமியா 17:9. மற்ற பகுதிகள் (ரோமர் 16:18) (உம்) அப் 5ம் அதி. அனனியா சப்பீராள்.
3. முடிவுரை : ஜாக்கிரதையாக இரு. கர்த்தரைச் சார்ந்திரு.
4. பொருத்தம் : தாழ்மையாயிரு. (யாக் 4:7) வார்த்தையைப் படிக்கவும் (2தீமோ 3:12-17).

## <u>வாழ்க்கை வரலாற்று செய்தி</u>

இந்த விதமான பிரசங்கத்தில் வேதாகமத்து கதாபாத்திரங்களின் ஜீவியமும் முன் மாதிரியும் தெரிந்து எடுத்துக் கொள்ளப்பட்டும், விவரமாக அதைப் பற்றிப் படித்து, அந்த நபருடைய ஜீவியத்திலிருந்து எவ்வளவு கற்றுக் கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு கற்றுக் கொள்வதற்காகவே அவ்வாறு படித்து அறியப்படுகிறது. தேவனுடைய மகா புருஷர்கள் அவர்கள் இருக்கிற பிரகாரமே முன் வைக்கப்படுகிறார்கள். அவர்களுடைய ஜீவியத்தின் மெய்மையும் கூடவே அவர்களுடைய பலத்தோடும், பலவீனங்களோடும் எடுத்துக் காட்டப்படுகிறது. அதிலிருந்து அவர்கள் எவ்வளவு போராட்டங்கள், ஜெயத்தையும் தோல்வியையும் அடைந்தார்களோ அதை நாம் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

இரண்டாவதாக, நம்முடைய வேதனையான அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்வதற்குப் பதிலாக அவர்களுடைய உதாரணங்களிலிருந்து நமது நன்மைக்காக நாம் கற்றுக் கொள்ளவும் முடியும்.

ஒரு நபருடைய ஜீவியத்தைப் பற்றிப் படிக்கும்பொழுது, அவருடைய (பிறப்பில்) ஜனனத்தில் இருந்து ஆரம்பிக்வும். அவருடைய பெயருக்கான அர்த்தத்தையும் கண்டு பிடித்தும் (அது சில சமயங்களில் குறிப்பிடக் கூடியதாகவே இருக்கும்). அவர் வளர்க்கப்பட்ட சந்தர்ப்பங்களையும் படித்தும் அவருடைய ஜீவியத்தில் தேவனுடைய நோக்கத்தைக் குறித்தும் விசேஷித்த கவனம் தரப்படவேண்டும்.

உதாரணம் - 1
*அந்த நான்கு குறுக்குச் சாலைகள் (அ) ஆபிரகாமுடைய ஒப்புடைப்புச் செய்தல்.
வசனப் பகுதி : சங் 25:9-10 (அ) ஆதி 11:11
1. முன்னுரை : - ஆபிரகாம் என்பவன் யார்?

- அவன் ஜீவித்த காலத்தில் இருந்த சூழ்நிலைமையைப் பற்றிய சில தகவல்கள் கலாச்சாரமும் சமுதாயமும்.

2. அவனுடைய குறுக்குசாலைகள் (அ) ஒப்படைப்பு

பொருள் விளக்கம் :

# நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு போ. (ஆதி 12:1)

# லோத்தை விட்டுப் பிரிந்து போகுதல் ஆதி 3:9.

# ஆகாரையும் அவன் மகனையும் புறம்பே தள்ளுதல் (ஆதி 21:10)

# ஈசாக்கை பலியாகக் கொடுத்தல் ஆதி 22 அதி.

3. முடிவுரை : தேவனால் ஒப்புக் கொள்ளப்பட்டான். தேவனுக்கு சிநேகிதன் என்று அழைக்கப்பட்டான். (எபி 11:8-20; ரோமர் 4ம் அதி; கலா 3:6-29; யாக் 2:23)

உதாரணம் 2:

* தானியேலுடைய நண்பர்கள் விடுத்த சவால் (தலைப்பு)

வேதபகுதி சங் 125:1-2 அல்லது தானியேல் 1:3-7.

1. முன்னுரை : சாத்ராக், மேஷாக், ஆபேத்நெகோ என்பவர்கள் யார்?

2. பொருள் விளக்கம் : a). தீர்மானம் (தானியேல் 1:8-16)

b). உறுதியான தீர்மானம் (தானி 3:16-18)

c). சோதனை செய்தல் (தானி 3:19-23)

d). வெற்றி (தானி.3:28-30)

3. முடிவுரை : 1சாமு 2:30b. (கர்த்தரை கனம் பண்ணுகிறவர்கள் அவரால் கனப்படுத்தப்படுவார்கள்).

## பாடப் புத்தக செய்தி

இதன் செய்தியானது, முக்கியமாக ஒரு குறிப்பிட்ட எண்ணத்துடன் அதாவது ஒரே வசனத்தில் சுருக்கமான வசனப் பகுதிகளில் தன்னை தங்க வைத்திருக்கிறது. அந்த வசனப் பகுதியை அணுகும்பொழுது பின் வருவது முக்கயமானதாகும். முதலாவதாக, அந்த வசனத்தைப் மிகக்கவனமாகப் பகுத்துப்பிரித்து அதை இரண்டு பெரும் பகுதிகளாக பிரித்துக் கொள்ள வேண்டும். அதன் பிறகு அந்த வார்த்தைகள் மூல கிரேக்க, எபிரேய மொழிகளில் என்ன கருத்தைக் கொடுத்தது என்பதைக் கண்டு பிடிக்க முயற்சிக்கவும். இங்கே ஒரு கிரேக்க / எபிரேய அகராதி அதிகப் பயனுள்ளதாக இருக்கும். மூன்றாவதாக, பொருள் (விளக்க) முன்னேற்றத்தைக் கண்டு பிடித்துக் கொள்ளவும், அல்லது அதன் ஆசிரியர் எதைச்சொல்ல முயற்சிக்கிறார் என்பதை அறிந்து கொள்ளவும். மற்ற வார்த்தைகளில் சொல்லுவதென்றால் அந்த வசனப்பகுதியின் சந்தர்ப்ப சூழ்நிலைமையை அல்லது அமைப்பை முழுமையாகப் பார்த்து அறியவும்.

அந்த வசனத்தின் வேதாகமத்து சந்தர்ப்பத்தை அதற்கு முன்னும், பின்னும் வரும் வசனங்களைப் பார்த்து படிக்கவும். அதன் கலாச்சார சந்தர்ப்ப சூழ்நிலைமைகளை கருத்தில் கொண்டு வேறு விதமாக சொல்லுவதென்றால், அதில் எழுதப்பட்ட பொருளுக்கு கலாச்சாரத்தாக்கம் உண்டா என்பதையும் கருத்தில் கொள்ளவும். மேலும் வரலாற்று / புவியியல் சந்தர்ப்ப சம்பவ நிலைமைகளையும் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். அந்த வசனம் எழுதப்பட்ட காலத்தில் அதின்மேல் உள்ள பாதிப்பாவது, அந்த வசனங்கள் முதலாவதாக யாருக்காக எழுதப்பட்டவை, அதில் என்ன சொல்லப்பட்டது என்பதற்கு அதன் இடமும் ஸ்தல இருப்பிடமும் எந்த அளவில் தாக்கம் செய்தன என்பதை ஆராயவும்.

**மனதில் வைக்க :** வேதாகமத்து சம்பவ நிலையை அந்த வசனங்களுக்கானவற்றை ஒருபோதும் மறந்து விடக்கூடாது. எனென்றால் அவைகள் தேவனுடைய அகத் தூண்டுதலால் அருளப்பட்டவையாகும். (2தீமோத் 3:16) இதன் அர்த்தமாவது, ஒவ்வொரு பகுதியும் நம்பதக்க முறையில் முழுமையான வேதப்பகுதியுடன் ஒத்துப்போகும்படி வியாக்கியானம் செய்யப்பட வேண்டும். ஆகவே அந்த சம்பவ நிலையில் இருந்து எந்த வேதாகமத்து பகுதியுமே புறக்கணிக்கப் படக்கூடாது. ஆனால் வேதாகமத்து பகுதி முழுமையாலும் கொடுக்கப்படுகிற வெளிப்பாட்டின் போதனையாலே வியாக்கியானம் செய்யப்படவேண்டும். வேதாகமப் பகுதியானது, வேதாகமத்தாலே பொருள் விளக்கம் செய்யப்பட வேண்டும். ஒரு பகுதியின் பொருள் விளக்கமானது, வேதாகமம் முழுவதுமாக பொதுவாகப் போதிப்பதோடு எப்பொழுதுமே ஒத்துப் போக வேண்டும்.

**உதாரணம் :**

(வரம்புகளால்) தடைகட்டப் படாதோர் வரம்.

வசனப் பகுதி : ரோமர் 12:1.

A). முன்னுரை : அர்ப்பணித்தல் என்ற சொல்லுக்கு பொருள் யாது? பணிச்செய்து விட்டு பின் விளக்கிச் சொல், ஒதுக்கி வைத்து பயன் படுத்துக, அர்ப்பணம் செய்தல் தேவனுக்காக பிரித்து வைத்தல்.

B). பொருள் விளக்கம் :

1. யார் அர்ப்பணிக்கப்படக் கூடும்? 'அப்படியிருக்க சகோதரரே, நான் உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன' 'இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட அனைவரையும'
2. அர்பணித்தலுக்கு அடிப்படையாவது என்ன? 'தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு வேண்டிக்கொள்கிறேன்' 'கட்டாயமாகவுமல்ல, அன்பினாலும் இரக்கத்தினாலும்'
3. அர்ப்பணிக்கும் செயல்பாடு : 'உங்கள் சரீரங்களை தன் சொந்த விருப்பத்தின் படியே, வெகுமதியைக் கொடுப்பது போலவே நமது சொந்தமான 'சரீரங்களை.ஜீவியத்தை.நமக்குள்ள எல்லாவற்றையுமே பலியாக எல்லாவற்றையும் பலிபீடத்தில் வைத்து செலுத்தும்படியாக, ஆபிரகாம், ஈசாக்கை பலியிடும்படி தந்தது போல.
4. அர்ப்பணித்தலுக்கான விவாதம். 'இதுவே நீங்கள் செய்யத் தக்க புத்தியுள்ள ஆராதனை' நாம் பெற்றுக் கொண்ட நமது இரட்சிப்பு வழியிலே (ஒளியிலே) நாம் தேவனுக்கு முற்றிலுமாக ஊழியஞ் செய்வதே நமக்கு நியாயமான செயலாகும்.
5. நான் எதை அர்ப்பணிக்க வேண்டும். எப்படி? 'உங்களது சரீரங்களை'
நமது சரீரங்களை அர்ப்பணியுங்கள். அவைகள் உங்களுடையதல்ல. கர்த்தருக்கே உரியவைகள்' (1கொரி 6:19-20).

- சரீரப்பிரகாரமான பலம் : அவருடைய நோக்கத்திற்காக பயன்படுத்துங்கள்.
- கால்கள் : யாரோ ஒரு நபருக்கு நற்செய்தியை எடுத்துக் கொண்டு செல்ல
- கரங்கள் : அன்பின் கிரியைகளுக்காக, விழுந்து போனவர்களை கைதூக்கி விடுவதற்காக
- கண்கள் : தேவையுள்ளவர்களையும் அழிந்து போகிறவர்களையும் பார்த்தறிய
- காதுகள் : இழந்து போனவர்களின் அழுகுரலைக் கேட்கவும் அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கவும்.
- இருதயம் : கர்த்தருக்கே முற்றிலுமாக தத்தம் செய்ய.

ஊ). முடிவுரை : அர்பணித்தல் என்பது ஒரு நடை முறையாகும். அது ஒரு அனுதின நடைமுறையாக நேரத்திற்கு நேரம் நமது எஜமானருக்கு நம்மை ஒப்புக் கொடுக்க. ஆகையால் இப்பொழுதே உனக்குள்ள எல்லாவற்றையும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அர்ப்பணியுங்கள்.

## பொருள் விளக்கத் தூது

இந்த விதமான அணுகுமுறையில் ஒரு தெரிந்தெடுக்கப்பட்ட வேதாகமத்து வசன பகுதியை வியாக்கியானம் செய்து விவரமாக விளக்கம் சொல்லப்படும். மேலும் வசனம் வசனமாக விளக்கங் கூறப்படும்.

**அதன் அனுகூலங்களாக குறிப்பிடப்படக் கூடியவை :**

- பிரசங்கிப்பவரும், கூடிவரும் சபையினருமாகிய இருவருமே வேதாகமத்தின்படியே இருப்பார்கள்.
- இது வேதாகமத்தின்படி பிரசங்கித்தல் வரிசையில் நிற்கிறது. ஏனென்றால் இந்த பிரசங்க முறை இயேசுவாலும் (லூக்கா 4 அதி). ஸ்தேவான் (அப் 7,8ம் அதி) பவுல் (அப் 28 அதி) பேதுரு (அப் 2-3அதி) என்பவர்களாலும் பின்னர் கையாளப்பட்டது.
- பரிசுத்த ஆவியினால் அதிகமான மறு வலுவூட்டுதலைப் பெற்றுக் கொள்கிறது. எனென்றால் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையோடு எப்பொழுதுமே ஒத்துப் போகிறார். (1யோவான் 5:7). அதிகமான வேதாகமத்து பொருளடக்கமானது, பிரசங்கிக்கப்படும்பொழுது அந்த பிரகடனத்தின் மீது அந்த அளவுக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகமும் இறங்கும்.

ஏற்படக் கூடிய குறைபாடுகள் :

a). கூடிவரும் சபையினருக்கு சுவையற்றதாக ஆகக்கூடும்.

b). நடைமுறை பொருத்தத்தில் அதிகமான குறைவு இருக்கலாம். இந்த அணுகுமுறையானது வெறும் வசனம் வசனமான வசனபடிப்பு மட்டத்திற்கு பொங்கி கீழே வந்து, அவர்களிடம் சில விமர்சனங்களை செய்து விட்டு அதைவிட அந்த வசனபகுதியின் சத்தியத்தை பிரகடனஞ் செய்வதாகும்.

உதாரணம் :

இயேசுக்கிறிஸ்துவின் மரணத்திலிருந்து ஜீவன், (தலைப்பு)
வசனப்பகுதி : ரோமர் 5:6-11.

A). முன்னுரை : பவுலுடைய பெரிய போதனை முறையில் ரோமர் 3ம் அதிகாரம் முதல் ரோமர் 8ம் அதிகாரம் முடிய அடங்கும் பகுதிகளில் அது பெறும் இடத்தை விளக்கிக் கூறவும்.

B). மேலோட்டமான திட்ட அமைப்பை வளரச்செய்வது,

I. ஒருவர் (யாராவது ஒருவர்) மரிப்பது.
a). இது சாதாரணமான விஷயம் - ஏன் ஒவ்வொருவருமே மரிப்பார்கள்.
b). இது மிகவும் வியக்கத்தக்கது. நாம் நினைவு படுத்திக் கொள்ளும்பொழுது,
- மரித்தவருடைய நல்லொழுக்கத்தைக் குறித்து.
- அவருடைய மரணத்தைச் சார்ந்த உரிமை கோருதல்கள்.

II. யாருக்காக இயேசு மரித்தாரோ அந்த மக்கள்
-பாவிகள், தேவனற்றவர்கள், பலவீனர், சத்துருக்கள்,
விளக்கம் - அவர்களுக்காக மரித்தார்.

III. கிறிஸ்து மரித்ததின் நோக்கம் :
a). எதிர்மறையாக / தூண்டுவதற்காக அல்ல. தேவன் மனிதனை நேசிக்கும் படியாக,
b). நேர்மறையாக மனிதன் மாறுதல் பெறுவதற்காக,
a). நீதியாகுதலுக்காக, b). ஒப்புரவாகுதலுக்காக, c). ஆக்கினையிலிருந்து மீட்கப்பட d). அவருடைய ஜீவனால் இரட்சிக்கப்பட.

C). முடிவுரை : அந்த சிலுவையின் மகா முக்கியத்துவத்தை நீ உனக்காகக் கண்டுணர்ந்து கொண்டாயா? அந்த சிலுவை ஒளியில் நீ எவ்வாறு உன் ஜீவியத்தை நடத்தப்போகிறாய்?

## <u>குறிப்பிடப்பட்ட (அ) மாதிரி எடுத்துக் காட்டான செய்தி</u>

இதன் மூலமலாக ஆழமான பொருள் விளக்கங்கள் இந்த வகையிலே பின்னால் மறைந்து நிற்கிறவைகளை இந்த வசனப் பகுதியின் மூலமாக வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. சங் 119:18.

உதாரணம் :
நீ எவ்வாறு ஆராதனை செய்கிறாய்? (தலைப்பு)
வசனப்பகுதி : மத் 1:18/ 2:12

A). முன்னுரை
- இந்த (ஞானவான்கள்) சாஸ்திரிகள் யார்,
- அவர்கள் யாரை ஆராதனை செய்தார்கள்? (வசனம் 11 a)
- எதைக் கொண்டு அவர்கள் தொழுதார்கள்? (வசனம் 11 b) அவர்களுக்கு இருந்த பொக்கிஷங்களில் இருந்த மிகச்சிறந்தவற்றைக் கொண்டு தொழுதார்கள்.

B). பொருள் விளக்கம் : அந்த மனிதர்கள் தொழுது கொள்வதற்காக என்ன கொண்டு வந்தார்கள்?

a). பொன் : இது இராஜ குடும்பத்தையும்∴ இராஜாங்கத்தையும் பற்றி பேசுகிறது.
பொருந்தும் முறை : இயேசு இராஜாவுக்கு உனக்குள்ள சிறந்ததை ஒப்புக் கொடுத்திருக்கிறாயா?

b). தூபவர்க்கம் : இது ஆசாரியத்துவத்தையும், ஜெபத்தையும் பற்றி பேசுகிறது.
பொருந்தும் முறை : நீ அந்த மகாபிரதான ஆசாரியரை, துதி, ஆராதனை, ஜெபத்துடன் வழிபாடு செய்கிறாயா?

c). வெள்ளைப் போளம் : மரணத்தை அடக்கம் பண்ணப்படுதல், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை பாடாக அனுபவிப்பதைப் பற்றிப் பேசுகிறது.

பொருந்தும் முறை : தன்னைத்தானே வெறுத்து தியாக பலியாக ஒப்புக் கொடுத்து உன் ஜீவனையே தத்தம் செய்து தேவ ஆட்டுக்குட்டிக்கு ஆராதனை செய்கிறாயா?

C) முடிவுரை : அந்த சாஸ்திரிகள் தங்களுக்குள்ள மிகச்சிறந்த பொக்கிஷங்களை சமர்ப்பித்து கிறிஸ்துவை தொழுது கொண்டு வந்தார்கள். நீயும் இது முதல் அவ்வாறே செய்வாயா?

**பொருத்த நடைமுறைக்கு ஓர் குறிப்பு**

பிரசங்கித்தல் என்பது மிகவும் முக்கியமாக ஒரு தனிப்பட்ட எதிர்முனைச் சந்திப்பாக அதில் பிரசங்கிப்பவரது விருப்ப சித்தமாவது சத்தியத்தின் மூலமாக கவனித்து கேட்பவரது விருப்ப சித்தத்தின் மேல் ஒரு உரிமை கோருகிறது. மேடைக்கு அழைப்பு விடுவிக்கவில்லை என்றால், அது பிரசங்கமல்ல. இதன் பொருத்த நடைமுறையாவது, அவரது ஜீவியத்தின் பகுதிகளின்மேல் எல்லாம் ஒருவருடைய கவனத்தை ஈர்த்துக் கொள்கிறது.

- நோய் எங்கு உள்ளதோ அந்த இடத்தின் மேல் விரலை வைப்பது அவசியமாகிறது.
- அந்த சத்தியத்தை குறிப்பிட்ட கோட்பாடுகள் / பழக்கவழக்கங்கள் / நோக்க மனப்பான்மை/ தப்பெண்ணங்கள் / தேவைகள் ஆகியவற்றை மையப்படுத்தாவிட்டால் செயலூக்கமாக இருக்காது.
- வரலாற்று முறை பிரசங்கங்கள் தெளிவான படிப்பினைகளை மையப்படுத்துவதாக இருக்க வேண்டும்.
- மிக மகத்தான விளைவானது தன்மேல் பொருத்தம் நடைமுறையாக்குவதாகும். 'அதுவே நான் தான்'
- நடைமுறை பொருத்தமாவது, பாடப்படிப்பினைகளாக முன் வைக்கப்படுவது தான்.

நாம் பொருத்தம் - நடைமுறை என்று அழைப்பதன் முக்கியமான குறிப்பாவது நயந்து கேட்டல் என்பதாகும். மக்களிடையே சத்தியத்தை மட்டும் பற்றி நம்பும்படி செய்வதோ அல்லது அது எவ்வாறு தங்களுக்கும் நடைமுறையில் பொருத்தமாகும் என்பதைப் பார்க்கச் செய்வதோ போதுமானதாகாது. ஆனால் அதற்கென்று அவசியமானது நயந்து கேட்டு கொள்வதாகும். அதுவே பிரதியுத்தரத்தைக் கொண்டு வரும்.

**மதிப்பீடு செய்தல்**

செய்தியின் பொருள் விளக்கப்பட்டியல் உங்கள் (தயாராக்குவதை) ஆயத்தம் செய்வதை மதிப்பீடு செய்வதற்காக பின்வரும் வினாக்களை எழுப்பவும்.

- அந்த செய்தி திடமாக வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்டதா? தேவனுடைய முழுமையான ஆலோனையை?
- அது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆள் தன்மையையும கிரியையும் மகிமைப்படுத்துகிறதா?
- அது மக்களுடைய தேவைகளைச் சந்திக்குமா?
- அந்த ஆய்வுப் பொருள் காலங்களுக்கு அப்பாற்பட்ட சத்தியமாக பேசுவதற்குத் தகுதியுடையதா?
- எல்லா வேதத்து ஒத்து வாக்கியங்கள் வரலாற்று உண்மைகளும் மிகவும் சரியானவைகளா?
- அந்த செய்தியானது நன்றாக ஒழுங்காக அமைக்கப்பட்டு மேலும் மக்கள் சுலபமாகப் புரிந்து கொள்வர்களா? அதில் நோக்கத்தைப் பற்றிய சுருக்கமான நேர்கூற்று இருக்கிறதா? அதற்கென்று தெளிவான நடைமுறை வளர்திட்டம் இருக்கிறதா? அதற்கென்று நடைமுறையான பொருத்தமொன்று அந்த செய்தியை தனிப்பட்டதாக ஆக்குமா?
- இந்த செய்தியானது எனது தனிப்பட்ட முறையில் எனக்கு மெய்யானதாக இருக்கிறதா அப்படி என்றால், நான் அதை மற்றவர்களுக்கும் உண்மையாகச் செய்யலாம்?
- கர்த்தர் திருச்சபையில் என்ன செய்கிறார் என்பதற்கும் பரிசுத்த ஆவியானவர் என்ன சொல்லுகிறார் என்பதற்கு இந்த செய்தி பொருத்தமாக அமைந்திருக்கிறதா?
- இந்த செய்தியின் தராதரமானது இதைக் கவனித்துக் கேட்பவர்களது வளர்ச்சி மட்டத்திற்கு சரியானதாக இருக்கிறதா?

# அந்த செய்தியைப் பிரசங்கிக்கும் பிரசங்கியார்

## A). நல்லொழுக்கம்

தெய்வீக சத்தியத்தை மனுஷீக ஆள்தன்மை, சரியான ஒழுக்கம் இவற்றின் மூலமாக பிரசங்கமானது தகவலாக அறிக்க வேண்டியதற்குள் ஈடுபடுவதால் அதற்கென்ற முக்கியமானது இவை உள்ளடங்கியவையாகும்.

- பிரசங்கம் செய்வதற்காக குறிப்பிடப்பட்டதோர் அழைப்பு (கலா 1:15-17)
- தனிப்பட்ட உயர்ந்ததோர் உத்தமம், முதிர்ச்சி, தெய்வீக ஒழுக்கம். (2கொரி 2:14-17, 2கொரி 4:1-2.

பாவமான வழிகளைத் துறந்து விடு
# செயல்பாடுகளில் தெள்ள தெளிவாகவும், திறந்தவனாகவும் கணக்கொப்புவிக்கிறவனாகவும், உண்மையாகவும், நேர்மையாகவும் இரு.
# சுத்தமாகவும் பரிசுத்தமாகவும் இருப்பாயாக. நீ உன் ஜாதியின்படியே பிறப்பித்து பலுகி பெருகுவாய் (ஆதி 1:12,21).
உன்னுடைய ஊழியத்தின் மூலமாக நீ உன்னுடைய மனப்பான்மை, ஒழுக்கம் ஆகியவைகளின் பிரதிபலிப்புகளை ஜனங்களிடையே கொண்டு வரலாம். கறைப்பட்ட ஜீவியத்திலிருந்தும் ஆவியில் கசப்பும், குற்றங்காணுவதிலும், எதிர்மறையான மனப்பான்மையிலும் நம்பிக்கை இழப்பிலும் விலகி விடுதலையுடன் இருப்பாயாக.

- பாவமான வழிகளைத் துறந்து விடு

  # செயல்பாடுகளில் தெள்ள தெளிவாகவும், திறந்தவனாகவும் கணக்கொப்புவிக்கிறவனாகவும், உண்மையாகவும், நேர்மையாகவும் இரு.

  # சுத்தமாகவும் பரிசுத்தமாகவும் இருப்பாயாக. நீ உன் ஜாதியின்படியே பிறப்பித்து பலுகி பெருகுவாய் (ஆதி 1:12,21). உன்னுடைய ஊழியத்தின் மூலமாக நீ உன்னுடைய மனப்பான்மை, ஒழுக்கம் ஆகியவைகளின் பிரதிபலிப்புகளை ஜனங்களிடையே கொண்டு வரலாம். கறைப்பட்ட ஜீவியத்திலிருந்தும் ஆவியில் கசப்பும், குற்றங்காணுவதிலும், எதிர்மறையான மனப்பான்மையிலும் நம்பிக்கை இழப்பிலும் விலகி விடுதலையுடன் இருப்பாயாக.

- நீ நீயாகவே இருப்பாயாக. மற்றவர்களைப் பார்த்து அவர்கள் போல, போலியாக பாவனை செய்யாதே. தேவன் உன்னை விசேஷித்த விதமாக உண்டாக்கியிருக்கிறார். நீ அச்செடுத்த நகலாக அல்ல. (இதை சாமு 17: 38-39 உடன் ஒப்பிடுக அங்கே தாவீது சவுலுடைய போர் ஆயுதங்களை அணிய முயன்றான். ஆனால் அது அவனுக்குச் சரியாக பொருந்தாத படியினால், அது அவனுக்கு ஆசீர்வாதமாக இல்லாமல் தடையாகவே இருந்தது.)

- வசனத்தைத் திரித்து பேசாதே. முழுவதுமான சத்தியத்தை தைரியத்துடன் பிரகடனப்படுத்து. அதைத் தெளிவாகவும் முழு மனதுடனும் பேசுவாயாக. (அப் 20:27) வசனத்தை (அ) வார்த்தையைப் படித்து உன்னை செயலூக்கமுள்ள தேவ வசனத்தின் ஊழியராக ஆகும்படி உன்னை அர்பணித்துக் கொள்க. மேலும் அவருடைய தெய்வீகமான சத்தியங்களை எவ்வித விட்டுக் கொடுப்பதுமின்றி பிரபலப்படுத்துவாயாக.

- இது லாபத்திற்கோ மகிமையைப் பெறுவதற்கேதுவான வழி அல்ல. ஒரு பிரசங்கியாக உனக்கென்று ஒரு பிரபலமான பொதுவான உருவகத்தை உண்டாக்கிக் கொள்ளத் தேவை இல்ல. ஆனால் மெய்மையாகவும், நேர்மையாகவும், உண்மையாகவும் இருப்பாயாக. மாய்மாலத்திலும், வஞ்சனையிலும் இருந்து விலகி இரு.

ஆகையினால் பின் வருபவற்றில் எச்சரிக்கையாக இருக்கவும்.

- பணத்தைக் கேட்டுப் பெற்றுக் கொள்வதிலும்
- எதிர்பாலருடன் பழகுவதிலும்
- ஆவிக்குரிய அதிகாரத்துக்கு உரிமை கொண்டாடுவதிலும்
- மக்களைத் திறமையாக கையாளுவதிலும்

**B). பிரசங்கித்தலுக்கு தேவையானவை**

- நீ நீயாக இயல்பாக இருப்பாயாக. நீ உன்னுடைய அசல் இயல்பிலேயே நிலைத்திருப்பாயாக.
- மேலும் உனக்கே உரித்தான சிறப்பான இயல்பாக இரு, வளைந்து கொடுத்தும், எளிமையாகவும் இருப்பாயாக. நீ மக்களைக் கவர்ந்திழுக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் அவர்களுக்கு ஊழியத்தையே செய்ய வேண்டும்.
- ஒரு ஜெபிக்கும் மனிதனாக (ஜெப வீரனாக) இரு. லூக்கா 5:16-17)ல் இருந்து ஜெபத்துக்கும், உன்னுடைய பிரசங்கத்தை வலமையுள்ளதாக்கக் கூடிய தேவனுடைய வல்லமைக்கும் இடையே உள்ள உறவுத் தொடர்பை ஒருவர் பார்க்கக்கூடும்.
- பரிசுத்த ஆவியின் அபிஷேகம் (1தெச 1:5). கர்த்தராகிய இயேசுவை உயர்த்திப் போற்றி புத்துணர்ச்சியைக் கொண்டு வரும்.

**C). சப்தம், பேச்சு, சமிக்கைகளுக்கான குறிக்கோள்கள்**

- உன்னுடைய சப்த குரலில் சொல் வன்மையை வெளியிடுவதாகவும், குரலில், ஏற்றத்தாழ்வற்ற பேச்சை தவிர்த்து விடவும்.
- உன்னுடைய சப்தத்தின் வேகத்தைக் கட்டுபடுத்திக் கொள்க. மாறுதல்களுடன் பேசவும். முயற்சித்துக் கொண்டு வெகுவேகமாகப் பேசுவதைத் தவிர்க்வும். இடைஇடையே சற்று நிறுத்தி பேசுவதற்கு அஞ்ச வேணடாம். கவனிப்பவர்கள் அதை பிடித்துக்கொண்டு செய்தியை ஆகர்ஷித்துக் கொள்வார்கள்.
- உன்னுடைய குரல் தெளிவிலும், பொருள் விளக்கத்திலும் கவனம் கொண்டும், உன்னுடைய வார்த்தைகளை உச்சரிப்புடனும், தெளிவாகவும் பேசுக.
- சப்த குரலின் ஏற்ற தாழ்வு, மிகவும் சத்தமிடாமலும், மெல்லிய குரலில் பேசாமலும், சம்பாஷனை குரல் மட்ட ஏற்ற தாழ்வுடன் அல்லது சிறிது உரத்த சத்தமாகப் பேசவும்.
- சமிக்கைகள், சரீரபாஷை, உன்னுடைய உடலை இயல்பாக அசைத்தும் பேசுக. ஆனால் அனாவசியமான சரீர சமிக்கைகளைத் தவிர்க்கவும். கண்ணால் பார்க்கும் தொடர்பை நிலையாக்கிக் கொண்டும், ஒவ்வொருவரும் தன்னுடன் தான் பேசுகிறர் என்று உணரச் செய்ய வேண்டும். உம்முடைய முகபாவனைகள் உம்முடைய ஆய்வுப் பொருளுக்கும், தலைப்புக்கும் ஏற்றவாறு பொறுத்தமாக அமையவேண்டும்.

**'முடிவாக பிரசங்கம் செய்யும் வரமானது அனுபவத்தாலும், முயற்சியாலுமே விருத்தி செய்யப்பட வேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும்.'**

# பிரசங்கத்தை மதிப்பீடு செய்யும் பாரம்

பிரசங்கம் செய்பவரது பெயர்:
ஆய்வுபொருள்:
வசனப்பகுதி:
தத்துவகோட்பாடு:
தலைப்பு:

## A. அமைப்பு :

வசனப்பகுதிக்குத் தொடர்புடைய ஆய்வுபொருள்:
தெளிவு:
செயலூக்கம் :
கருத்துத் தெரிவித்தல் :

முகவுரை : கவனம் எதையும் பெற்றாயா?
அது வசனப் பகுதிக்கு நடத்தியதா?

செய்தியின் வகை : அதற்கான முக்கியமான குறிக்கோள் தெளிவாக கடந்து வந்ததா?
கருத்துரைத்தல்:

மேலோட்டமான சுருக்கம் : இந்த தாளின் மறுபக்கத்தில் பிரசங்கிப்பது மேலோட்டமான சுருக்கம் எழுதப்படவேண்டும். தெளிவாக இருந்ததா?

முன்னேற்ற போக்கு : தெளிவாகவும் இயல்பாகவும் அமைப்பு ஞாபகத்தில் எளிதாக வைக்கக் கூடியதா? அந்த தூது உச்ச திருப்பத்துக்கு நடத்திச் சென்றதா? அந்த செய்தியின் அழுத்தமான போக்கு செயலூக்கத்துடன் சொல்லப்பட்டதா? அது எப்படி விளக்கப்பட்டது?
கருத்துரைகள் :

உதாரணங்கள்: தலைப்பின் செய்திக்கு உதாரணங்கள் சொல்லப்பட்டவை பொருத்தமானவைகளா?

முடிவுரை :

பொதுவான மீள் பார்வை:

முடிவான கருத்துரைகள்:

## B. வேதாகமத்து வியாக்கியானம் :

அந்த வசனப்பகுதி மிகச்சரியாக அது எப்படி விளக்கப்பட்டது?
வியாக்கியானம் செய்யப்பட்டதா?
கருத்துரைகள் :

தத்துவ கோட்பாடு : அது தெளிவாக முன் வைக்கப்பட்டதா?
முழுவதுமாக ஒரு பக்கம் சாய்வாகவா?

குறிக்கோள்கள் : புதியகுறிக்கோள்களா?
அல்லது மிகைப்படுத்தப்பட்டதாகவா?
கவனம் பெற்றவை :

உதாரணங்கள் : இவைகள் வேதாகமத்துப்படியா உண்மையான ஜீவிய சம்பவங்களா, சரித்திரம், இலக்கியம், விஞ்ஞானம் (கருத்துரை)

பொருத்த சம்பந்தம் : அந்த விஷய பொருத்தம் உள்ளதா? அல்லது மறைபொருளா? அல்லது காணமற்போனவைகளா?.
அந்த செய்தி மனச்சாட்சிக்கு, விருப்பத்திற்கு, நுண்ணறிவு, உணர்ச்சிகள் எதற்கு தொடுவதாக இருந்தது. இது சரியான சமநிலையில் இருந்ததா?
கருத்துரைகள் :

## C. கொடுக்கப்பட்ட இயல்பு :

பின்வருபனவகளைக் கருத்துரைக்க :

குரல்:

பாவனைகள்:

அங்க அமைப்பு தோற்றம்:

இலக்கணம்:

சொல்வன்மை:

பேச்சு:

தோற்றம்:

கண் தாக்கம்:

சமிக்கைகள்:

சபையினரின் பிரதி :

a) பதிலுரைத்தனரா?,

b) குழப்பம் அடைந்தாரா,

c) செய்தி தேவையாக இருந்ததா?,

d) சலிப்பு உள்ளதாக தோன்றியதா?

கருத்துரை:

- பிரசங்கிப்பவர் சொல்ல முயன்றதை சில வாக்கியங்களில் எழுதுக.
- உன்னுடைய பதில் கிரியையாது (உண்மையுடன் இரு) அந்த செய்தியானது சபையினரிடையே தெளிவாக வந்தது என்று உணருகிறாயா?
- அந்த செய்தி உன்னுடைய ஐயப்பாடுகளைத் தீர்த்ததா? உனக்கு விஷயத்தை, வெளிப்பாட்டை, பக்தி விருத்தியைத் தந்ததா? விளக்குக.
- இதற்கான உன்னுடைய ஆலோசனைகள் பிரசங்கிப்பவருக்கு கொடுப்பது என்ன?

# பிரசங்கிப்பவர் தெய்வீக வல்லமைக்கு ஒரு வழியாக (கால்வாயாக) கட்டாயமாக இருக்க வேண்டும்

பரிசுத்த ஜீவியம் என்பதைச் சார்ந்த பொதுவான எல்லாவற்றையும் படித்து அறிக. உன்னுடைய முழுவதுமான பயன்படும் தன்மையும் இதையே சார்ந்திருக்கிறது. எனென்றால் உன்னுடைய பிரசங்கங்கள் ஒன்று அல்லது இரண்டு மணிக் கூறுகளுக்கே நீடிக்கக் கூடும். ஆனல் உன்னுடைய ஜீவியமே வாரம் முழுவதிலும் பிரசங்கிக்கிறது. சாத்தான் மாத்திரம் ஒரு பேராசை மிகுந்த ஊழியரை முகஸ்துதியை, இன்ப களியாட்டங்களை நல்ல உணவை ஆசைப்பட்டு விரும்புகிறவராகச் செய்ய கூடுமானால், அவர் ஊழியத்தையே நாசமாக்குறார். உன்னை ஜெபத்துக்கு கொடுத்து விடு. உன்னுடைய வசனபகுதிகளை, உன்னுடைய யோசனைகளை, உன்னுடைய வார்த்தைகளை தேவனிடமிருந்து பெற்றுக்கொள். மார்டின் லூதர் தன்னுடைய சிறந்த மூன்று மணிக் கூறுகளை ஜெபத்திலே செலவழித்தார்.

நாம் அடிக்கடி ஒரே நீண்ட நேரமாக நம்மை மட்டுமிஞ்சி முயற்சிப்பதாக அலலாவிட்டாலும், புதிய திட்டங்களையும், புதிய நிறுவனங்களையும் வகுத்துக் கொண்டு திருச்சபையை முன்னேற்றுவிக்கவும் சுவிசேஷத்திற்காக விரிவாக்கத்தையும் திறன் பாட்டையும் கட்டாயமாக பெற்றுக்கொள்கிறோம். இந்த நாட்களின் இந்த செல்லும் விதமானது மனிதனை தன் பார்வையிலிருந்து இழந்து விடவும் அல்லது மனிதனை அந்தத் திட்டத்திலோ அல்லது நிறுவனத்திலோ மூழ்கடித்து விடக்கூடிய போக்கிடமாகிறது. தேவனுடைய திட்டமாவது, மனிதனை அதிகமானதை செயல்படுவதற்காக உண்டாக்கவும் மற்றெதையும் விட அவனிலே அதிகமானவற்றைச் செய்யவும் ஆகிறது. மனிதர்கள் தேவனுடைய செய்முறை வழியாக இருக்கிறாகள். திருச்சபையானது நல்ல செய்முறைகளையே பார்த்துக் கொண்டிருக்கிறது. தேவனே மிகச்சிறந்த மனிதர்களுக்காக பார்த்துக் கொண்டிருக்கிறார்.

'தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான். அவன் பெயர் யோவான்'. இந்த மகாதிட்டமானது, தேவனால் கொடுக்கப்பட்டு முன்னறிவித்து கிறிஸ்துவுக்காக வழியை ஆயத்தம் பண்ணும் படியாக அந்த மனிதனாகிய யோவானுக்குள் கட்டப்பட்டது. 'நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்' இந்த உலகத்தின் இரட்சிப்பானது அந்த தொடரிலிருந்த மகன் வழியாக வெளியில் வருகிறது. பவுல் அப்போஸ்தலன் உலகத்தில் சுவிசேஷத்தை வேரூன்றச் செய்த மனிதர்களுடைய தனிப்பட்ட ஒழுக்கத்திற்காக வேண்டுகோள் விடுத்த பொழுது அவர்களுடைய வெற்றியின் இரகசியத்தை தீர்வு செய்கிறார். சுவிசேஷத்தின் மகிமையும் திறன்பாடும் அதை பிரகடனப்படுத்தும் மனிதர்கள் மேல் சுமத்தப்பட்டிருக்கிறது.

தேவன் அதை வெளியே பிரபலமாக சொல்லும் பொழுது, 'தம்மைப் பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்கு தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது' என்கிறார். மேலும் அவர் கூறுவதாவது, மனிதர்களுடைய அவசியமும் அந்த மனிதர்கள் மேல் அவர் சார்ந்திருப்பதும் ஒரு வழியாகவும், அதன் மூலமாகவும் உலகத்தின் மீது அவருடைய வல்லமையை செலுத்துவது என்கிறார். இந்த முக்கியமானதும், அவசரமானதுமான சத்தியமாவது, இந்த இயந்திரமயமான காலமானது சுலபமாக மறக்கக் கூடிய ஒன்றாகும். அது மறந்துவிடப் படுதலானது சூரியனை அதன் வட்டத்திலிருந்து அடித்து விடப்படுவதைப் போலவே, தேவனுடைய ஊழியத்தையும் அழித்து விடுவதாகும். அந்தகாரமும், குழப்பமும், மரணமும் பின் தொடரும்.

இன்று திருச்சபைக்கு தேவையாய் இருப்பது, அதிகமான இயந்திரங்களும் அல்ல, அல்லது சிறப்பாக, புதிய நிறுவனங்களுமல்ல, அல்லது அதற்கு அதிகமாகவே, மேலும் புதிய செயல் செயல்முறைகளும், ஆனால் பரிசுத்த ஆவியானவரால் உபயோகிக்கக் கூடிய மனிதர்களே! / அதிலும் ஜெபம் செய்யும் மனிதர்களை ஆம் ஜெபத்தில் வல்லமையுள்ள மனிதர்களையே தேவையாகப் பார்க்கிறது. பரிசுத்த ஆவியானது, இந்த செய்முறைகளின் வழியாக பொங்கி ஓடுவதில்லை. இது மனிதர்கள் வழியாக ஓடுகிறது. அவர் இயந்திரங்களின் மேல் இறங்குவதில்லை. ஆனால் மனிதர்களின் மேல் இறங்குகிறார். அவர் மனிதர்களை அபிஷேகிக்கிறார். ஜெபிக்கும் மனிதர்களை அபிஷேகிக்கிறார். சுவிசேஷமானது, பிரசங்கிப்பவரிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. அவர் அந்த செய்தியை தேவனிடமிருந்து, மனிதர்களிடம்

வருவதற்கு அதை சரியா செய்யவோ அல்லது பிழையுண்டாக்கவோ செய்கிறார். பிரசங்கிப்பவரே தங்கத்தினால் ஆன குழாயாக அதன் மூலமாகவே தெய்வீக எண்ணை ஓடி வருகிறது. அந்த குழாய் தங்க வண்ணமாக இருப்பது மட்டுமல்ல, திறந்ததாகவும், பிழையற்றதாகவும் இருக்க வேண்டும். அதனால் அந்த எண்ணெய் முழுவதுமாக நிரம்பியும், தங்கு தடையின்றி வீணாக்கப்படாமல் ஓடுவதாக இருக்க வேண்டும்.

அந்த மனிதனையே பிரசங்கியாக உண்டாக்குகிறார். தேவனே மனிதனை எடுத்து ஆட்கொள்ள வேண்டும். அந்த செய்தி அறிவிப்பாளர் கூடுமானால் செய்தியை விட அதிக சிறப்பானவராக இருக்க வேண்டும். பிரசங்கிப்பவர் செய்தியைத் தருகிறார். தாயின் மடியிலிருந்து சுரக்கும் உயிர்கொடுக்கும் பால், தாயின் ஜீவன் அல்லாதது போலவே பிரசங்கிப்பவர் சொல்லுவதெல்லாம் வர்ணம் பூசப்பட்டு பிரசங்கிப்பவர் என்னவாக இருக்கிறாரோ, அதனால் நிரப்பப்படுகிறது. மண்பாண்டங்களில் பொக்கிஷங்கள் இருக்கின்றன. அந்த பாத்திரத்தின் ருசியானது, கருவுறச்செய்து வர்ணமே நிறம் மாறலாம்! அந்த மனிதனே, அந்த முழுமையான மனிதனே அந்த செய்திக்கு பின்னால் இருக்கிறான்.

<u>பிரசங்கிப்பது என்பது, ஒரு மணி நேரத்து செயல்பாடு அல்ல. அது ஜீவனையே வெளியில் பொங்கி ஓடச்செய்வதாகும்.</u> ஒரு பிரசங்கத்தைச் செய்வதற்கு இருபது ஆண்டுகள் எடுத்துக் கொள்ளும். எனென்றால் ஒரு மனிதனை ஆளாக்குவதற்கு இருபது ஆண்டுகள் எடுத்துக் கொள்கின்றது. ஒரு உண்மையான பிரசங்கமானது, ஜீவியத்தின் சிறந்ததோர் காரியமாகும். அந்த பிரசங்கிக்கும் மனிதன் வளர்வதோடு பிரசங்கமும் கூடவே வளர்கிறது. அந்த பிரசங்கம் வன்மையுள்ளதாய் இருக்கிறது. எனென்றால், மனிதனும் வன்மையாகவே இருக்கிறான். மனிதன் பரிசுத்தமாக இருப்பதால், பிரசங்கமும் பரிசுத்தமானதாக இருக்கிறது. அந்த பிரசங்கம் முழுவதுமே தெய்வீக போலிப் பேச்சால் நிரம்பி இருக்கிறது. எனென்றால் மனிதனும் தெய்வீகமான போலிப் பேச்சினால் நிறைந்திருக்கிறான்.

பவுல் அதை எனது சுவிசேஷம் என்று கூறினான். அவன் அந்த பிரசங்கத்தை தன்னுடைய சொந்தமான விசித்திர போக்குகளால் இழிவாக்கினான் என்பதல்ல, அல்லது தன்னுடைய தன்னலமான ஒதுக்குதலால் திசை திருப்பினான் என்பதினால் அல்ல, அந்த சுவிசேஷமானது பவுல் என்ற மனிதனுடைய இருதயத்திலும் ஜீவனான இரத்தத்திலும் வைக்கப்பட்டு அவருடைய பவுலுக்கே உரித்தான பண்புகளால் அந்த தனிப்பட்ட ஆளுடைமை நிறுவனப் பொறுப்பாக அவை அமல்படுத்தப்பட்டு, அவனுடைய அக்கினி பிழம்பான ஆத்துமாவின் அக்கினியின் சக்தியினால் எரியூட்டப்பட்டும் அதிகாரம் பெற வேண்டும்.

அந்த பிரசங்கமானது, தனது ஜீவனைக் கொடுக்கும் வல்லமையில் அந்த மனிதனுக்கு மேலாக உயர்வடைய முடியாது. செத்த மனிதர்கள் உயிரற்ற செத்த செய்திகளையே கொடுப்பார்கள். செத்துப்போன செய்திகள் கொலை செய்யும். ஒவ்வொரு காரியமும் பிரசங்கிப்பவரது, ஆவிக்குரிய ஒழுக்கத்தையே சார்ந்துள்ளது. அந்த யூதருடைய பிரமாணத் திட்டத்தின் படி பிரதான ஆசாரியன் கல்லில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட ஒரு தங்க ஏபோத்தை அணிந்திருப்பான். அதில் 'கர்த்தருக்கு பரிசுத்தம்' என்று கல்லில் எழுத்து பொறிக்கப்பட்டிருக்கும்.

ஆகவே, கிறிஸ்துவின் ஊழியத்திலுள்ள ஒவ்வொரு பிரசங்கியும் அவ்வாறே உருவாக்கப்பட்டு, அந்த பரிசுத்தமான சட்டவாக்கியத்தினால் ஆளப்பட்டிருக்க வேண்டும். கிறிஸ்தவ ஊழியமானது, பரிசுத்த ஒழுக்கத்திலும், பரிசுத்தமான நோக்கத்திலுமே யூத பிரதான ஆசாரியத்துவத்தை விட கீழே விழுந்து விடுவதென்பது கண்ணீர்விடக் கூடிய அவமானமாகும்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு தன்னைத் தானே பிரபல்யமாக்கக் கூடிய வல்லமை கிடையாது. அதைப் பொறுப்பேற்ற மனிதன் இயங்குவது போலவே, அதுவும் இயங்கும். அந்த பிரசங்கிப்பவர் சுவிசேஷத்தை ஆள் மாறாட்டமாக்கக் கூடாது. அது தெய்வீகமானது. அதனுடைய தனிச்சிறப்புப் பெற்ற அம்சங்கள் மனிதனில் ஒன்றுபட வேண்டும். அந்த கட்டுண்ட வல்லமையானது பிரசங்கிப்பவரில் தானே கட்டாயமாக ஒளிரச் செய்யும் விசித்திரப் போக்குள்ள ஒரு சகல அதிகாரம் செய்வதாய், தன்னைத்தானே மறந்து மறைந்திருக்கும் சக்தியாகும். தன்னைத்தான் வெறுத்து வெறுக்கும் சக்தியானது, அவனுக்குள்ள இருதயமாகவும், இரத்தமும் எலும்புகளுமாகவும் இருக்க வேண்டும்.

மனிதருக்குள் ஒரு மனிதனாக மனத்தாழ்மையை அணிந்து கொண்டு அதில் நிலைத்திருந்து, சர்ப்பத்தைப் போல ஞானமும், புறாவைப்போல கபடற்றும் ஒரு இராஜாவின் ஆவியையுடைய கட்டுண்ட அடிமைபோலும், இராஜ சுதந்திரமுள்ள கம்பீரமான உயர்ந்த ஸ்தானத்தில் உள்ள அரசனைப் போலவும், ஒரு குழந்தையின் எளிமையும், இனிமையும் உடையவனாய் போக்கு வரத்து செய்யவேண்டும்.

மனிதர்களுடைய இரட்சிப்புக்காக தன் ஊழியத்தில் ஒரு பிரசங்கிப்பவர் சகலவிதமான கைவிட்டு கடந்த நிலையில் பூரணமாக சுயத்தை ஊற்றிவிடும் விசுவாசத்துடனும் தன்னையே எரித்து விடும் வைராக்கியத்தோடும் (ஊழியத்தில்) ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். முழு இருதயத்தோடும் வீரத்துடனும், இரக்கத்துடனும் அச்சம் தவிர்த்திருக்கும் இரத்த சாட்சிகளாக மக்களை கைமேல் எடுத்துக் கொண்டு அவருக்காக உருவாக்க வேண்டும். அவர்கள் காரியக்காரர்களாகவும், இடம் தேடுபவர்களாகவும், மனிதர்களை திருப்திபடுத்துகிறவர்களாகவோ அல்லது மனிதர்களுக்கு பயப்படுகிறவர்களாகவோ இருந்தாலும், மேலும் தேவன் அவருடைய வார்த்தையின் மேலும், அவர்கள் விசுவாசமானது, பலவீனமான பிடியை உடையதாய் இருந்தாலும் மேலும் அவர்களுடைய மறுதலிப்பு சுயத்தாலோ அல்லது உலகத்தாலோ நொறுக்கி உடைக்கப்பட்டு இருந்தாலும், அவர்கள் திருச்சபையிலோ அல்லது தேவனுடைய வார்த்தையின் பேரிலோ ஒரு பிடிப்பை எடுத்துக்கொள்ள முடியாது.

பிரசங்கிப்பவரது, கூர்மையான வலிமைமிக்க பிரசங்கமானது, அவருக்கே கட்டாயமாக இருக்க வேண்டும். அவருடைய மிகவும் கடினமானதும், மென்மையானதும், கடின உழைப்புக்குரியதும் முற்றிலும் சரியானதுமாக ஊழியமானது, தன்னோடு தானே இருக்கவேண்டும். பன்னிருவரை பயிற்றுவிப்பது, கிறிஸ்துவுக்கு மிகக் கடினமானதும், சகித்துக் கொள்ள வேண்டிய கிரியையாக இருந்தது. பிரசங்கிப்பவர்கள், பிரசங்கம் உண்டாக்குபவர்கள் அல்ல. ஆனால், அவர்கள் மனிதர்களையும், பரிசுத்தவான்களையும், உண்டாக்குகிறவர்களாக அவர் மாத்திரமே, இந்த விதமான வணிகத்தொழிலுக்கு நன்கு பயிற்சிபெற்றவராக தன்னையே மனிதனாகவும், பரிசுத்தவானாகவும் ஆக்கிக் கொண்டவர் ஆவார். இதற்காக மகா பெரிய தாலந்துகளோ, மகாபடிப்போ, அல்லது மகா பிரசங்கிகளையோ தேவனுக்கு தேவையல்ல. ஆனால் பரிசுத்தத்தில் விசுவாசத்தில், அன்பில், நம்பகத்தன்மையில், தேவனுக்காக மகத்தானவர்களே தேவைப்படுகிறார்கள். எப்போதுமே பரிசுத்தமான செய்திகளை பிரசங்க பீடத்திலிருந்து அறிவிப்பவர்களையே அதிலிருந்து பரிசுத்த ஜீவியம் செய்பவர்களையே தேவையாக கேட்கிறார். இவர்களே தேவனுக்காக ஒரு சந்ததியை உருவாக்கி வனையமுடியும்.

இந்த விதமான ஒழுங்கு முறையிலே ஆதிக் கிறிஸ்தவர்கள் உருகாக்கப்பட்டார்கள். அவர்கள் திடமான வடிவ உருவமாக பரமசாயலின் படியான பிரசங்கிகளாக, வீரத்துடன் கம்பீரமான, போர்வீரர்களாக, பரிசுத்தவான்களாக உருவமைக்கப்பட்டவர்களே. அவர்களோடு பிரசங்கிப்பது என்பது, சுயத்தையே மறுதலித்து சுயமாக குருசில் அறையப்பட்டு, கருத்தூன்றிய உழைப்பாளிகளாக இரத்த சாட்சிக்கான பணியாகும். அவர்கள் அந்த முறையில் தங்களை ஒரு வழயில் சம்பந்தப்படுத்திக் கொண்டு அவர்களுடைய சந்ததியிக்கு மேல் ஒரு அழுத்தத்தை ஏற்படுத்தி, அதன் கர்ப்பத்தில் தேவனுக்காக இனி மேல் பிறந்திராத ஒரு சந்ததியை உருவாக்கலாயிற்று. பிரசங்கிக்கும் மனிதன் ஜெபிக்கும் மனிதனாக இருக்க வேண்டும். ஜெபமே பிரசங்கிப்பவரது வல்லமையான ஆயுதமாகும். அதுவே தன்னில் தானே ஒரு சர்வ வல்லமையுள்ள சக்தியாக யாவருக்கும் ஜீவனையும் பலத்தையும் கொடுக்கிறது.

மெய்யான பிரசங்கமாவது, ஜெபத்துக்குரிய இரகசியமான இடத்தில் உண்டாக்கப்படுகிறது. அவருடைய, ஜீவனும், நிபுணத்துவமான திடநம்பிக்கையும் அந்த இரகசியமாக தேவனுடன் கொண்டிருக்கும் ஐக்கியத்திலே பிறக்கிறது. அவரது ஆவியில் பாரமுள்ள கண்ணீரோடு கொள்ளும் வேதனையும், அவருடைய கனமானதும் இனிமையானதுமான செய்திகள் தேவனோடு தனித்திருக்கும் காலத்திலே பெறப்படுபவையாகும் ஜெபமே மனிதனை (மனிதனாக) உண்டாக்குகிறது. ஜெபமே போதகரையும் உண்டாக்குகிறது.

இன்றைய நாட்களில் பிரசங்க பீடத்தில் இருந்து பிரசங்கிப்பவர் - ஜெபத்தில் பலவீனமுள்ளவராக இருப்பார். கல்வி கற்றுக் கொள்ளுதலின் பெருமையானது, ஜெபத்தின் தாழ்மைக்கு சார்ந்திருப்பதற்கு விரோதமானது. பிரசங்க பீடத்தின் ஜெபமானது அடிக்கடி அலுவலகத் தன்மையை மாத்திரம் உடையது. அதாவது, ஆராதனை ஜெபமானது, நவீன காலத்து பிரசங்க பீடத்தின் வல்லமை மிக்க சக்தியாக இருப்பதுபோல, பவுலுடைய ஜீவியமாகவும், அல்லது பவுலுடைய ஊழியமாகவும் என்றும் இரண்டிலுமே இருந்தது. பிரசங்கம் செய்யும் ஒவ்வொருவரும் தங்களுடைய ஜீவியத்திலும் ஊழியத்திலும் மிகுந்த வல்லமையான காரணியாக செய்து கொள்ளாதவர்கள் பலவீனமுள்ளவர்களாக தேவனுடைய கிரியையிலும் ஒரு காரணியாகவும், இந்த உலகத்தில் தேவனுடைய காரியத்தை முன்னேற்றுவிப்பதில் வல்லமையற்றவர்களாகவும் இருக்கிறார்கள்.

# வேதாகமப் படிப்பை எப்படி நடத்திச் செல்வது

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயேசுவை முதன் முதலாகப் பின்பற்றிச் செல்பவர்கள் விசுவாசிகளுடைய வீடுகளிலும், மேலும் கூடிவரும் பெரிய கூட்டங்களிலும், ஐக்கியத்தையும், போதனையையும் மேற்கொண்டிருந்தார்கள். ஆயினும் நாமும் எவ்வாறு படித்துக் கொண்டே செயலூக்கத்துடன் திட்டமிட்டு ஒரு வேதாகமப் படிப்பை நடத்திச் செல்வது?

**1. ஜெபத்துடன் இலக்கைக் கருத்தில் கொள்க**

நாம் எதை இலக்காக அடைய நோக்கமாயிருக்கிறோம்?
இதற்கென்று சில குறிப்பிட்ட இலக்குகள் இந்த படிப்புகளை கட்டுப்படுத்துகின்றன. அவையாவன :-

- ஒவ்வொரு விசுவாசியிலும் அவரது தனிப்பட்ட வளர்ச்சியை முன்னேற்றுவிக்க.
- அர்த்தமுள்ள உறவுத்தொடர்புகளைக் கட்டி எழுப்ப.
- நடைமுறையான கரிசனையை முன்னேற்றுவிக்க.
- சுவிசேஷத்தை பிரபலபடுத்த.

மேலும் மற்றும் சில குறிப்பிட்ட இலக்குகளை நாம் வைத்துக் கொள்ளலாம். பின்வருபன போன்றவை

- இந்த இலக்குகளைத் தீர்மானிப்பதென்றால் : அந்த கூட்டத்திற்கு வரக்கூடியவர்கள் யார் என்று ஆலோசிக்க . அவர்கள் தம்பதிகளா அல்லது தனியர்களா? இல்லத்தரசிகளா அல்லது வணிகர்களா? கிறிஸ்தவர்களா அல்லது கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களா?
- மேலும் அதிகமாக நாம் அந்த மக்களுடைய தேவைகளை அறிந்து கொள்வது அவசியமாகிறது. ஒரு சிலருக்கு கஷ்ட காலம் இருந்தால் உதாரணமாக அந்த சோதனைகளை குறிப்பாக புரிந்து கொள்ளும் நோக்கம் கொள்ளலாம்.

குறிப்பிட்ட மக்கள் குழுக்கள் தேவையான சம்பந்தமுள்ள தலைப்புகளைப் படிக்கலாம். உதாரணமாக வணிக மக்கள் வேதாகமம், வணிக ஒழுக்கத்தைப் பற்றி என்ன சொல்லுகிறது என்பதை ஆலோசிக்க விரும்பலாம். ஒரு திருமணமான மக்கள் குழு, குழந்தைகளை வளர்ப்பது பற்றி வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பதைப் பார்க்க விரும்பலாம்.

இந்த விதமான காரணிகள் அனைத்தையும் இந்தத் திட்டங்களை உண்டாக்கும் பொழுது ஆலோசிக்கப்பட வேண்டும். நாம் ஜெபத்ததுடன் மக்களின் தேவைகளைப் பற்றி கருத்தில் கொண்டு ஆலோசிக்கும்பொழுது, அது நமக்கு தெளிவான நோக்கங்களை உண்டாக்கிக் கொள்ள உதவி செய்யும்.

அந்த இலக்கை சாதித்து அடைவதெப்படி?
நீண்ட பேச்சை மேற்கொள்ளாதே, ஆனால் மக்கள் தாங்களே கண்டு பிடித்துக் கொள்ளும்படி உதவ வேண்டும். போதனை செய்யவும் பயிற்றுவிக்கவும் நேரம் உண்டு. ஆனால் கண்டு பிடித்து கொள்ளவும், உரையாடி விவாதிக்கவும் நேரம் உண்டு. வேதாகமத்து படிப்புத் தலைவர்களாக நாம் பேச்சாளர்களாக இருக்க விரும்பக்கூடாது. அந்த குழுக்களிடமிருந்து சரியான கேள்விகள் கேட்பதாலும், அவர்களுடைய யோசனைகளை வழிகாட்டி நடத்துவதாலும் அந்த குழுக்களிடமிருந்து சத்தியத்தை தலைவர்களாகிய நாம் கொண்டு வரமுடியும்.

**2. பாடத்து பொருட்கள்**

**a). ஆயத்தம் பண்ணப்பட்ட பொருட்கள்**

சாதாரணமாகவே, ஒரு பாடத்தை ஆயத்தம் செய்யும்பொழுது, இதற்கு அதிகமாகவுங்கூட அந்த தலைப்புக்கு பொருத்தமாய் இருக்கும்படியாக காணப்பட்டால் அதை உபயோகிக்கக் கூடும்.

**b). வினாக்களின் மாதிரிகள்**

இயேசு தான் விடை அளித்ததை விட அதிகமான வினாக்களையே வினாவினார். அவர் எப்பொழுதுமே தமது சீஷரைப் பார்த்து அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று கேட்டார். அவர்களைப் பார்த்து, பரிசேயர்களை அவர்கள் அபிப்பிராயம் என்னவென்று கேட்டார். அவர் அடிக்கடி மக்களை சிந்திக்கும்படியாக தூண்டிவிட்டுக் கொண்டிருந்தார்.

ஒரு நல்ல தலைவர்கள், மக்களை தாங்களாகவே காரியங்களைக் கண்டுபிடித்துக் கொள்ளும் படியாக உதவுவார்கள். ஆகையால் நாம் சரியான கேள்விகளையே கேட்கும்படியாகக் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் அவர்களை பேசும்படி செய்வதற்காக பந்தை உருண்டு போக விட வேண்டும். சரியான கேள்விகளைக் கேட்பது என்பது, ஒரு குன்றின் உச்சியிலிருந்து ஒரு பனிஉருண்டை உருண்டு வருவது போலாகும். அது உருண்டு வரும்போதே வேகத்தை எடுத்துக் கொள்ளும்.

நல்லகேள்விகள் என்பது மேலும் :

- அந்தத் தலைவர் குழுவினரின் விளங்கிக் கொள்ளும் அறிவு மட்டத்தை மதிப்பீடு செய்யும் படியாக உதவி செய்திறது.
- அந்த குழுவினர் சிந்தித்துக் கொள்ள காரணமாகிறது.
- அந்த அங்கத்தினர்கள் விஷயங்களைத் தாங்களே கண்டுபிடித்துக் கொள்ளும்படியாக அனுமதிக்கிறது.

**# கண்டு பிடித்துக் கொள்ள வினாக்கள் :**

அந்த கண்டு பிடித்துக் கொள்ளக் கூடிய வினாக்களை கேட்பதால் தலைவர் அந்த கலந்து உரையாடலை தொடங்கி வைத்து வழி நடத்திச் செல்கிறார்.

- இங்கே இந்த வேதாகமத்து பகுதியில் என்ன கற்பிக்கப்படுகிறது?
- நீங்கள் எதைப் படித்துக் கொண்டீர்கள்?
- உங்கள் கவனத்தைப் பெற்று இழுத்தது யாது?
- எந்த வசனம் குறிப்பாக முக்கியமானது? ஏன்?

கண்டுபிடித்துக் கொள்ளும் வினாக்களுக்கு சரி அல்லது தவறு என்ற பதில்களே இருக்கமுடியாது. அந்த கேள்விகளே கலந்துரையாடலுக்கான கதவாகும். சுற்றி இருக்கும் மக்களைப் பார்த்து அவர்களுடைய பதிலுக்கும் அபிப்பிராயத்திற்கும் கேள்விகளைக் கேட்க வேண்டும். மற்றவர்கள் ஆமோதிக்கலாம், ஆமோதிக்காமலும் இருக்கலாம். அதற்கு ஏதோ ஒன்றைக் கூட்ட வேண்டும். வேறு விதமான பார்வைக் குறிப்பைக் கொடுக்க வேண்டும் முதலியன. அந்தத் தலைவர் இந்த கேள்விகளைப் பயன்படுத்திக் கலந்துரையாடல் வழிகாட்டிச் சென்று சரியான இலக்கை நோக்கிப் போக வேண்டும்.

**# கேள்விகளைப் புரிந்து கொள்ளுதல் :**

இவைகள் தலைப்பைத் திறந்து வைக்கவோ ஆழப்படுத்தவோ சத்தியங்களை புரிந்து கொள்ளும் படியாக உதவலாம். இந்த வினாக்கள் கேட்கப்பட்டால் மக்கள் வேதத்திலுள்ள சத்தியங்களைப் பார்த்தும், புரிந்து கொண்டும் விடுவார்கள். சமயா சமயங்களில் யாராவது ஒரு கேள்வியைக் கேட்கலாம். இது மிகவும் நல்லதாகவும், உற்சாகப்படுத்தப்பட வேண்டியதுமாகும். நாம் மேலும் விடையை நாமே கொடுப்பதற்கு முன்னர், அந்த குழுவினரையே கேட்க வேண்டும் இது பயனுடையதாகும்.

**# கேள்விகளை பொருத்தமாக செயல்படுத்துதல் :**

இந்த கேள்விகள் மக்களை அந்த கண்டு பிடிக்கப்பட்ட சத்தியங்கள் எவ்வாறு ஜீவியத்தில் பொருந்தக் கூடியது என்பதை ஆலோசிக்க காரணமாகிறது. இவைகளை உபயோகப்படுத்தி அவர்களுடைய அச்சங்கள், கஷ்டங்கள், பலவீனங்களை வெளியில் கொண்டு வரச் செய்யக் கூடும். பிறகு நாம் தேவனுடைய வார்த்தையானது, இந்த சந்தர்ப்பங்களில் உதவுகிறது என்பதைப் பார்க்கலாம்.

இந்த கேள்விகளில் அதிகமாகக் குறிப்பிடப்பட்டதாகக் கூடாது. அவர்களுக்கு சத்தியத்தை நடைமுறைப் படுத்த போதுமான இடம் தரவேண்டும். இந்த மட்டத்தில் வேதாகமத்தைப் பற்றி மட்டுமல்ல, ஆனால் பின்வருவது போன்ற காரியங்களை இதைப்பற்றி நீங்கள் எப்படி உணருகிறீர்கள்? என்று கேட்கலாம். மக்கள் தங்கள் யோசனைகளை உணர்ச்சிகளைப் பற்றி வருணித்து சொல்லும்போது, தங்கள் சிந்தனையில் அதை நிச்சயப்படுத்திக் கொள்கிறார்கள். கேள்விகளுக்கு வாய்மொழியாகப் பெறப்படும் பிரதியுத்திரங்கள் அபிப்பிராயங்களையும் நம்பிக்கைகளையும் உண்டாக்கிக் கொள்வதற்கு முக்கியமானவைகளாகும்.

ஆகவே செய்யாதே :

\# கேள்விகள் கேட்பதோடு மட்டும் நீ உன்னை மட்டுப்படுத்திக் கொள். பிரதியுத்திரங்களிலும் பங்கெடுத்துக் கொள்ளவும்.

\# இரண்டு கேள்விகளை ஒன்றாக இணைத்துக் கொள்க. அவர்களுக்கு ஒரு நேரத்தில் ஒரே ஒரு கேள்வியை மட்டும் கேட்கவும்.

\# ஆம் அல்லது இல்லை என்று பதிலிருக்கக் கூடிய கேள்விகளையே கேட்கவும்.

**குறிப்பு** : கேள்விகளைக் கேட்கும்பொழுது, ஒவ்வொருவரையும் உள்ளே சேர்த்தே கேட்க வேண்டும். சில கேள்விகளை மட்டுமே ஒவ்வொருவருக்கும் சரியாகப் போடப்படலாம். நீங்கள் அதில் ஒருவர் பங்கெடுக்கவில்லை என்று கவனிப்பீர்கள் என்றால், அவரை நோக்கி அல்லது அவளை நோக்கி வினாவைச் சொல்லவும். "நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்றும் வினாவலாம்.

## 3. பாடம் ஆயத்தம் செய்தல்

### a). பாடத்தின் மூலமாக வேலை அல்லது கிரியை

ஆயத்தம் பண்ணப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தினால், அதற்கு முன்னதாகவே அந்த பாடத்தைப் பற்றி முழுவதுமாக படித்துத் தெரிந்த கொள்ளவேண்டும். நாம் தனிப்பட்ட முறையில் வசனப்பகுதியை வாசித்து கேள்விகளுக்கு விடை காண வேண்டும். வேதாகமத்து ஒத்து வாக்கியங்களை திருப்பிப் பார்த்து, அந்த பாடத்தை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். இதை ஒரு நேர்முகமான மனப்பான்மையுடன் செய்ய வேண்டும். நம்முடைய மனப்பான்மைகள் சரியாக இல்லாவிட்டால் நமது பாட ஆயத்த நேரமானது, கடினமாகவும் கனியற்று, பயனற்றதாகிவிடும்.

- உன்னுடைய இருதயத்தை ஆயத்தப்படுத்திக் கொள்
- தேவனுடைய வார்த்தைக்காக பசியாகிய ஆவலுடன் இரு.
- தேவனிடம் இருந்து செவிகொடுத்துக் கேட்பதையே எதிர்பார்ப்பாயாக.
- உன்னைத் தனிப்பட்ட விதத்தில் தேவனுக்கு சரணடைந்துக்கொள்.
- அந்த பாடத்தை ஒன்றுசேர்த்து ஜெபத்துடன் வைக்கும் படியாக நிச்சயமாக இரு.

### b). அந்த இலக்குகளை மீள்பார்வை செய்க

உன்னுடைய இலக்கு என்னவென்று திரும்பவும் ஆலோசனை செய்.

- அந்த பாடம் எதைப் பற்றியதாகும்?
- அதனுடைய முக்கியமான குறிப்புகள் எவை?
- அவர்கள் என்ன படித்துக் கொள்ள வேண்டும்.
- இதை எப்படி சராம்சப் படுத்துவேன்.

### c). கேள்விகளை எழுதி ஆயத்தம் செய் :

- எந்த வகையான கேள்விகள் அவசியம் என்று ஆலோசனை செய்து கொள்.
- அதை எளிதாகவும், சுலபமாக விளங்கிக் கொள்ளக் கூடியதாகவும் செய்க.
- அந்த விடைகள் தெளிவாகக் காண்பிக்கப்பட்டும் சம்பந்த தேவை உடையதாகவும் இருக்க வேண்டும்.
- அதன் முக்கியமான குறிப்புகளில் உன் கவனத்தை மையப்படுத்திக் கொள்க.

நீ அந்த கேள்விகளை ஏன் கேட்கிறாய் என்று நீயே உன்னை கேட்டுக்கொள்

- அந்த கேள்வி பங்கெடுத்துக் கொள்ளுதலை தூண்டி ஊக்கப்படுத்துமா?
- அது ஒன்றிற்கு மேற்பட்டவர்களுக்கு பதில் தரும்படி சந்தர்ப்பத்தைக் கொடுக்குமா?
- அது அவர்களுடைய தனிப்பட்ட ஆயத்ததிலிருந்து கவர்ந்திழுத்துப் பெற்றுக் கொள்ளுமா?

அவர்களுடைய பிரதியுத்திரங்களுக்கும் விவாதங்களுக்கும் கேட்கும்படி நிச்சயமாக இரு. அதனால் ஒரு தெளிவான சாராம்சம் உண்டாக்கப்படக் கூடும்.

**d). ஜெபித்து வரவேற்பாயாக**

ஒரு பாடத்தை ஆயத்தம் செய்யும்பொழுது, அங்கு யார் இருப்பார்கள் என்பதைக் கருத்தில் கொள்க. அவர்களுக்காக முன்னதாகவே தினம் ஜெபித்துக் கொள்வது நல்லதாகும். மேலும் அவர்களை முன்னதாகவே சந்தித்து கூட்டத்தைப் பற்றி ஞாபகப்படுத்துவதும் நல்லது.

- அந்த வரவேற்பு அழைப்பை தனிப்பட்ட முறையில் செய்ய வேண்டும்.
- மக்களாக அவர்களைப் பற்றி கரிசனையாக இருக்க வேண்டும்.
- நீங்கள் சொல்லப்போவதாக நம்புவதை அவர்களுக்கு விளக்கிக் கூறவும். இது அவர்களை மனப்பான்மையான நோக்கத்தைக் கொள்ளச் செய்யும்.

**4. பாடம்**

**a). கால அட்டவனைத் திட்டத்தின் படி கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் :**

இந்த படிப்பு நேரத்திற்கு அதிகமாக போகுமானால், அவர்களுடைய கவனத்தை இழக்க நேரிடும். அது அவர்களுடைய வருங்கால வருகைப்பதிவை ஆபாயகரமானதாக ஆக்கக்கூடும்.

**b). உற்சாக ஊக்கமுள்ளவனாக இரு.**

நட்புறவுடன் மக்களுக்கு நல்ல வரவேற்பைத் தரவேண்டும். விசேஷமாக அந்நியர்களுக்குத் தரப்பட வேண்டும். உற்சாக ஊக்கம் தொற்றிக் கொள்ளக் கூடியது. உற்சாக ஊக்கத்தை தொடர்பு தகவலாக்குக. அந்த தலைவரானவர் இந்தப் படிப்பைக் குறித்து அகக்கிளர்ச்சியுடன் இருப்பாரானால், மற்றவர்களும் அதைப் பிடித்துக் கொள்ளலாம். அந்த படிப்பானது கவர்ச்சிகரமாகவும், பயனள்ளதாகவும். இருக்கும்.

**c). அதிகமாக பேச்சை வளர்க்காதே**

மற்றவர்களைப் பேசும் படியாகச் செய்யக் கற்றுக்கொள். சில கேள்விகளைக் கேட்டபிறகு மக்கள் விடையைக் கண்டுபிடிக்க யோசிக்கும் பொழுது அப்பொழுது சில நிமிட நேரங்கள் மௌனம் அனுசரிக்கப்படவேண்டும். இந்த மௌன நேரங்கள் மக்களுக்கு யோசிக்கும்படியாக நேரத்தைத் தருகின்றன. அவர்களுடைய விடைகளுக்காகக் காத்திருக்கும்பொழுது, அந்த அமைதி நேரத்தில் அந்த கேள்விகளை நீயே பகுத்தறியப்பார்.

அநேக தலைவர்கள் மக்களுக்கு யோசிக்கும் படியாக நேரம் கொடுப்பதில்லை என்ற தவறைச் செய்கிறார்கள். அப்படி ஒவ்வொரு கேள்வியையும், விடையையும் கருத்துரை செய்வதோ அல்லது மக்களை கருத்துரைக்கச் செய்வதோ அவசியமில்லை.

**d). தொடர்ந்து பேசிக் கொண்டே இருப்பவருடன் கண்டிப்பாக இரு**

சில மக்கள் அந்தப் படிப்பின் மீது தங்கள் ஆதிக்கத்தைக் காட்டுவார்கள். இதை நேரிடும்படி விடக்கூடாது. மேலும் குறிப்பாக “வேறு யாராவது கருத்துத் தெரிவிக்க வேண்டுமா?” என்று கேட்க வேண்டும். மற்றவர்களுக்குங் கூட தங்களுக்கு முடிந்ததை பங்கு கொண்டு தெரிவிக்கட்டும். அந்த நபர் தொடர்ந்து பேச முயற்சிப்பாரானால், அவரைப் பார்த்து மற்றவர்களுங்கூட தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்ல அனுமதிக்க வேண்டும் என்று சாதாரணமாகவே கூறுங்கள். இந்த பிரச்சனையானது, நெடுநாட்களானதாக இருக்குமானால் அந்த அங்கத்தினரைத் தனியாக அழைத்து அந்த சந்தர்ப்பம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுங்கள்.

**e). ஆடியோ விஷ்வல் உபகரணங்களை உபயோகிக்குமாறு ஆலோசனை செய்தல்**

ஒரு பிளானல் கிராப் போர்டாவது (பலகையாவது) அல்லது விளம்பர போர்டாவது செயலூக்கமான கண்காட்சி உபகரணமாக இருக்கக் கூடும். வேதாகமக் கதைகளை விளக்கிக் கூறுவதற்கு தேசபடங்கள் உபயோகமாக இருக்கும். இதற்காக ஒலி இசை வீடியோ நாடாக்களைக் கூட உபயோகிக்கலாம். இந்த உபகரணங்களை ஒவ்வொரு தடவையும் உபயோகிக்க வேண்டும் என்பதல்ல. சமயா சமயங்களில் பயன்படுத்தினால் அதற்கு பல்திற சுவை தரக்கூடும். பின்னர் இந்த படக்காட்சிகளைக் குறித்தும் வேதாகமத்தைக் குறித்தும் வினாக்கள் கொடுக்கப்படலாம்.

**f). மதிப்பீடு செய்தல்**

அந்த படிப்பு எப்படி கொண்டு போகப்பட்டதென்று குழுவிலுள்ள யாராவது மூத்த அங்கத்தினரை அபிப்பிராயம் சொல்லுமாறு கேட்கலாம். இது உங்களை முன்னை விட மிகவும் நன்றாகச் செய்வதற்கு உதவலாம். ஒரு தனிப்பட்ட மதிப்பீடுங்கூட செய்யப்படலாம். குழு முழுவதுமாக ஈடுபாடு கொள்ளுதல், ஆர்வத்தின் அளவு மட்டம் எந்த அளவுக்கு படிப்பின் இலக்குகள் சாதிக்கப்பட்டுள்ளன என்பது போன்ற காரியங்களுக்காக கவனித்துப் பார்க்கவும்.

## 5. அந்த குழுவின் அங்கத்தினர்கள்

### a). எதிர்மறையான அங்கத்தினர்கள்

- **பார்வையாளர்**

  இந்த நபர் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருப்பதில் திருப்தி அடையலாம். அவர் புன்சிரிப்பு கொண்டும் தலையை அசைத்தும் முகபாவனை காட்டியும் தூங்கவும் செய்யலாம்.

- **பேச்சை நிறுத்தாத பேச்சாளர்**

  அவர் முன் யோசனை இன்றியே அடிக்கடி பேசுவார், அடிக்கடி மற்றவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதைக் கவனித்து கேட்கவும் மாட்டார். அவர் தான் சொல்வதில் மாத்திரம் ஆர்வம் கொண்டு இருப்பார். யாராவது ஒருவர் பேசும் பொழுது அவர் கவனித்துக் கேட்கவும் மாட்டார். ஆனால் தான் அடுத்து என்ன சொல்ல வேண்டும் என்பதையே யோசித்துக் கொண்டு இருப்பார்.

- **சகலத்தையும் நன்கு அறிந்தவர்**

  அவர் எப்பொழுதுமே நான் ஆமோதிக்கமாட்டேன் என்பார். அவர் எப்பொழுதுமே மற்ற ஒவ்வொருவரும் ஏன் தவறாக இருக்கிறார்கள் என்பதை எப்பொழுதும் அறிந்தவராகத் தோன்றுவார்.

- **பரியாசக்காரர்**

  இவர் தன்னுடைய ஊழியமானது, நகைச்சுவை துணுக்களைச் செய்வது என்று உணருவார்.

- **வழியில்லா சந்துப் பூனை**

  இவருக்கு ஒவ்வொரு தத்துவமும் ஒரு வழி சந்துகளின் வழியாகப் போகும் பழக்கத்தைக் கொண்டிருப்பதால், தனக்குக் கிடைக்கிற ஒவ்வொரு அரிய சந்தர்ப்பத்தையும் தனது சமிபித்திய மனப்பிரமையை அல்லது எண்ணக்கோளாறான சபலத்தை வெளிப்படுத்தும் படியாகக் கூடும் என்று எடுத்துக் கொள்வார்.

- **கவனத்தை தன் பால் ஈர்க்க முயலும் மௌனி**

  தன்னோடு யாராவது ஒருவர் உடன்படா விட்டால் பேச மறுத்து விடுவார்.

இந்த விதமான எதிர்மறையான அங்கத்தினர்களை வன்மையாகவும், சரியாகவும் நடத்தப்பட வேண்டும். ஒரு மிகச்சரியான சந்தர்ப்பத்தில் தனிமையாகப் பேசும் சம்பாஷனையின்போது சொல்லக்கூடிய விவேகமான சொல்லானது, வழக்கமான கூடுகையின் போது கொடுக்கப்படுகிற கண்டனத்தை விடச் சிறந்ததாகும்.

### b). நேர் மறையான அங்கத்தினர்கள்

- **அதைத் தொடங்குபவர்**

  இவருக்கு நல்ல குறிக்கோள்களும் நல்லாலோசனைகளையும் பெற்று இருப்பார் எனலாம்.

- **புத்திமதி உபதேசிப்பவர்**

  மக்களுடைய விடைகளை ஏற்றுக் கொண்டு அவர்கள் பேசுவதற்கு உற்சாக ஊக்கம் அளிக்கிறார்.

- **பகுத்துப் பார்ப்பவர்**

  அந்த காரியங்களை மிகவும் எச்சரிக்கையுடன் முழுவதுமாக சரியாக யோசனை செய்து, அந்த விடைகளைச் சொல்வதற்கு முன்னால் பகுத்து பரிசீலிக்கிறார்.

- **ஆராய்ச்சி செய்பவர்**
  புதிய குறிக்கோள்களையும், யோசனைகளையும் ஆராய்ந்தறிந்து வேதாகமத்திலிருந்து புதிய கோணங்களைத் தேடி கண்டு பிடிக்கிறார்.

- **சீர் பொருந்தச் செய்கிறவர்**
  பார்வைக்கு எதிரும் புதிருமான யோசனைகளை ஒன்றுசேர்த்து ஒருங்கிணைத்துக் கொண்டு, எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிபந்தனைகளைக் கண்டு பிடிக்கிறார்.

இந்த நேர்மறையான அங்கத்தினர்கள் அனைவரும் தங்களுடைய சொந்த வழிகளில் இந்தப் படிப்புக்கு ஏதோ ஒன்றைக் கூடுதலாகச் செய்கிறார்கள். அவர்கள் குழுக் கூடுகையின் போதும் அதற்கு பின்னரும் ஆகிய இரண்டிலும் ஊக்குவித்து உற்சாகப்படுத்தப்பட வேண்டும்.

இந்த வேதாகமப் படிப்புக் அழைக்கப்பட்டவர்கள் அனைவரையும் தங்களுடன் கூடவே பின்வருபனவற்றை உடன் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படவேண்டும்.

- ஒரு வேதாகமம்
- ஒரு தகுதியான நோட்டுப் புத்தகமும், பேனாவும்.

# தூண்டிச் செயலாற்றும் வேதாகமப் படிப்பு

**வேதாகமத்துப் பகுதியான ஒரு அலகு படிப்பைக் குறித்த யோசனைகள் :**

1. அந்த அலகுப் பகுதியை இரண்டு அல்லது மூன்று தடவைகளாக கவனத்துடன் வாசிக்கவும்.
2. அந்த படிப்பலகு என்ன சொல்லுகிறது, முக்கியமான குறிக்கோள் ஆய்வுக் கருத்துப் பொருள், கற்பனை முதலியன.
3. அந்த பகுதியைப் படிக்கவும்.

தூண்டிச் செயலாற்றும்படியாக பின்வரும் கேள்விகளை கேட்டுக் கொள்ளவும்.

a). இந்த படிப்புப் பொருளின் இயல்பு யாது? அது கதையாக சொல்லப்படுகிறதா? செய்யுள் வடிவத்தில் உள்ளதா? முகப்புரையானதா, தீர்க்கதரிசனமா, எச்சரிக்கையா, புத்திமதி சொல்லுதலா, உரையாடலா, கண்டனம் செய்கிறதா, உவமையா, வியாக்கியானம் செய்தலா, வம்சாவளி அட்டவணையா, தத்துவ முன்வைத்தலா, ஜெபமா, அற்புதமா, ஆறுதலான வார்த்தைகளா? மேலே கூறப்பட்ட பலவற்றின் கலவையா?

b). இந்த வசனபகுதியில் முக்கியமான சம்பவங்கள் உள்ளனவா?

c). முக்கியமான கதா பாத்திரங்கள் யார்?

d). இதற்கான முக்கியமான ஆய்வுப் பொருள் அல்லது கருத்தாய்வு பொருள்கள் இருக்கின்றதா?

e). இதில் முக்கியமான கருத்தாய்வு பொருளும், சம்பவங்களும் எவ்வாறு உறவு தொடர்பாகின்றன?

f). இதன் முக்கியமான கதாபாத்திரங்கள் யார் அவர்களுடைய ஆள் தன்மையாது?

g). இதற்கான காரணா காரியங்கள் எதுவும் உண்டா?

h). இதில் பயன்படுத்தப்பட்ட சொல்லுவமைகளும், மரபுச்சொற்றொடர்களும் எவை?

i). இதற்கான வரிசையான குறிக்கோள்களும் ஒத்த சம்பவங்களும் இருக்கின்றனவா?

j). இதை வேற்றுமைப்படுத்தும் எடுத்துக்காட்டுகள் உள்ளனவா?

k). இந்த வசனப்பகுதி இணைந்து விழும் இயல்பான மேலோட்டமான குறிப்புக் கோடு திட்டமுண்டா?

ட). எந்த வியக்கத்தக்க விஷயம் உன்னை இறுகப் பிடித்துக் கொண்டது?

m). திருச்சபையின் பக்திவிருத்திக்கு, மற்ற மக்கள் அல்லது உனக்கான பக்தி விருத்திக்காக உன்னை மனதில் ஆழமாக பதியச் செய்த முக்கியமானது எது?

n). இதனால் நாளுக்கு நாள் ஆன ஜீவியத்திற்கு நடைமுறைப் பொருத்தம் யாது?

o). இதைப் பற்றி என்ன முடிவு எடுத்துக் கொண்டாய்? இந்த வசனபகுதியே தன்னாகவே எவ்வாறு முடிவாகிறது?

பின்னர் உன்னுடைய கண்டு பிடிப்புகள் அனைத்தையும் வரிசையாக அட்டவனைப்படுத்தி இதை மேலோட்டமான சராம்ச வடிவத்தில் ஒன்றாக இணைத்து கட்டி முடிச்சுப் போட்டு வைத்துக் கொள்ளவும். இது பின்னர் ஒரு பிரசங்கத்திற்கோ, படிப்பிற்கோ தேவையான அடிப்படை படிப்புப் பொருளாக ஆகக்கூடும்.

# வேதாகமத்தை பயனள்ளதாகக் படித்தறிவது

**முகவுரை :-**

வேதாகமமே எந்தக் காலத்திலும் எழுதப்பட்ட புத்தகங்களிலும் மகத்தானதாகும். ஏனென்றால் அது வியக்கத்தக்க வகையில் தேவனாலே தாமாகவே அகக்கிளர்ச்சியால் தூண்டப் பட்டதாகும். இந்த வேதாகமத்தின் மூலமாகவே தேவன் மனித குலத்தினரோடு பேசுகிறார். ஜீவியத்தின் எந்த விதமான ஒவ்வொரு சந்தர்ப்ப சூழ்நிலைமைகளுக்கும் தேவன், ஞானத்தையும், போதனையையும் தருகிறார். துன்பமான நேரங்களில் அவர் ஆறுதல் தருகிறார். குழப்பமான நேரங்களில் வழிகாட்டுதல் கொடுக்கிறார். வேதாகமத்தின் மூலமாக தேவன் பாவங்களை வெளிப்படுத்தி முடியை விலக்குகிறார். ஆனால் அவர் தம்முடைய வாஞ்சையை மன்னிக்கும் படியாகத் தெரியப்படுத்துகிறார். நாம் எவ்வாறு அந்த பாவமன்னிப்பை பெறக்கூடும் என்பதையும் அறிவிக்கிறார். அதற்குள் அனுதின அகதூண்டுதலும், நமக்கு தெரியப்படுத்தி தூண்டி விடக்கூடிய திறன்பாடும் நாம் என்ன விதமான சந்தர்ப்பங்களில் இருந்தாலும்கூட அதை பொருட்படுத்தாது அதற்குள் அடங்கி உள்ளது.

நாம் வேதாகமத்தை, நமது அயராத வாசிப்பினாலும், படிப்பதினாலும் பின்னால் சொல்லப்படுகிறதான பல வகையான வாழ்க்கையின் இரகசியங்களுக்கும் நாம் விடைகளைக் கண்டு பிடித்துக் கொள்ளலாம்.

**அவையாவன :-**

- மனிதன் எங்கிருந்து தோன்றினான்?
- நமது அண்ட சராசரத்தின் மூல ஆரம்பங்களாவது எவை?
- ஜீவியத்தின் முக்கியமான நோக்கம் யாது?
- மனித குலத்திற்கென்று வருங்காலம் எதை வைத்திருக்கிறது?
- நாம், ஜீவன், மரணம், வருங்காலத்தைப் பற்றிய உண்மையை எவ்வாறு அறியலாம்?
- தேவன் எதைப் போன்றவர் என்பதை எப்படி நாம் அறியலாம்?

**வேதாகமத்தைப் பற்றி :**

* பாவத்தின் மூல ஆரம்பத்தை விளக்கிக் கூறுகிறது.
* பாவத்தின் இயல்பைப் பற்றி சொல்பொருள் விளக்கம் செய்கிறது.
* பாவத்தைப் பற்றிய தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறித்து நம்மை எச்சரிக்கிறது.
* நமது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவான இரட்சகரைப் பற்றிய நற்செய்தியை நமக்குக் கொடுக்கிறது.
* நாம் எவ்வாறு பாவமன்னிப்பையும் இரட்சிப்பையும் பெற்றுக் கொள்ளக்கூடும் என்று விளக்குகிறது.
* நாம் மேலும் பாவத்தினால் கறைபடுவதிலிருந்து நம்மை சுத்தமாக்கி வைக்கிறது.
* எப்படி ஜெபிக்க வேண்டும் என்று போதிக்கிறது.
* நமது ஆவி சிந்தனை சரீரத்திற்கு பலத்தைப் பகிர்ந்தளிக்கிறது.
* நமது ஆவிக்குரிய சத்துருக்களை எதிர்த்து போராடுவதற்கு ஆவிக்குரிய பட்டயமாக பயன்படுகிறது.
* தேவனுக்கு பிரியமான ஜீவியம் எவ்வாறு ஜீவிப்பது என்று போதிக்கிறது.
* நமது ஜீவியத்தை கனி கொடுப்பதாக ஆக்குகிறது.
* நமது தேவனும் மீட்பருமானவருடன் நம்மை நித்தியத்தை கழிக்கச் செய்வதற்கு ஆயத்தப் படுத்துகிறது.

பரிசுத்த வேதாகமம் ஆனது, உலகத்திலுள்ள நூல்கள் யாவற்றிலும் தன்னிகரற்றது. எண்ணற்ற நபர்களிடமிருந்து, நிறுவனங்களில் இருந்தும் காலம் முழுவதிலும் கடுமையான எதிர்ப்புகள், (மார்க்க சம்பந்தமாயும், மதவாதத்தினாலும், அரசியல்வாதத்தாலும் இந்த இரண்டிலிருந்தும் வேதாகமம் ஆனது தப்பிப் பிழைத்ததுமன்றி, உலகத்தின் சிறந்த விலைபோகும் புத்தகமாக தன்னுடைய ஸ்தானத்தை நிலை நாட்டிக் கொண்டிருக்கிறது. அதனுடைய வியக்கத்தகும் தன்மையானது, பல காரணிகளின் வழியாக வருகிறது.

1. **அது உண்மையிலே ஒரு தனிப் புத்தமாக அல்ல. அது புத்தகங்களால் ஆன நூல் நிலையமாகும்**

இந்த வேதாகமத்தில் 66 புத்தகங்கள் பழைய ஏற்பாடு என்று நாம் அழைக்கும் பகுதியில் இருக்கின்றன. மற்றும் 27 புத்தகங்கள் அடங்கிய பகுதி புதிய ஏற்பாடு என்ற பெயரிட்டு பகுதியாக அறியப்படுகிறது. அநேக மனித எழுத்தாளர்கள் அதில் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்பது விஷயமாக இருந்தாலுங்கூட, பரிசுத்த ஆவியானவரே அதன் ஆக்கியோனும், ஆசிரியரும், வியாக்கியானம் செய்பவரும் ஆவார். அநேக வருட காலக்கட்டத்தில் எழுதப்பட்ட போதிலும் பலவிதமான கலாச்சாரத்தை சேர்ந்திருந்த போதிலும் அதில் பேசப்படுகிற ஒரே ஒரு கருத்தாய்வு பொருளானது வியக்கத்தக்தாகவும், ஒரே சீரானதுமாகவும் இருக்கிறது. இதன் மிகுந்த வலிமையான அதிகாரம் பெற்ற ஆய்வுப் பொருளான தெய்வீக மீட்பு என்பது ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை ஊடுருவி ஓடுகிறது. மற்ற ஆய்வுப் பொருள்களும் ஒரே சீராக சாராம்சப்படுத்தியும், ஆதாரப்படுத்தியும் வலிமையான முதன்மையான ஆய்வு பொருளோடு ஒருங்கிணைத்து விடுகிறது.

2. **அது ஒரு ஜீவிக்கும் உயிருள்ள நூலாகும்**

இந்த வேதாகமம் மற்றெந்த புத்தகங்களையும்போல, பார்வையில் இருந்தாலும் அச்சடித்து, பிரசுரித்து வழக்கமான முறையில் இருந்தாலும், மற்ற எந்த புத்தகங்களுக்கும் இல்லாத வித்தியாசமான உயிருள்ள ஜீவித்திருக்கும் தன்மையை, எந்த புத்தகத்துக்கும் இல்லாத தனித்தன்மையை உடையது இந்த புத்தகம். இயேசு சொன்னதாவது, அவருடைய வார்த்தைகளானவை "அவர் சொல்லுகிற வசனங்கள், ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது" (யோவான் 6:63). அதாவது, அவைகள் காதுகள் கேட்பதற்கு தெளிவான ஒலிகளால் சாதாரணமானவைகளாக அல்லாமல், நமது செவி வழியாக பதிவு செய்கிற நடைமுறைத் திட்டமாக, ஆனாலும் நமது ஆவிக்குரிய தகவல்களை நமது ஆவிக்குரிய ஆள் தன்மையில் பதிவுசெய்யக் கூடியதாயும் இருக்கிறது. ஆகவே நாம் சாதாரணமாக வேதாகமத்தைப் படிப்பது மட்டும் போதாது அதை ஆவிக்குரிய பிரகாரமாக ஆகர்ஷித்துக் கொள்ளவும் வேண்டும். தாவீது சொன்னதாவது, "உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள் என் வாய்க்கு அவைகள் தேனிலும், மதுரமாயிருக்கும்". (சங் 119:103).

தேவனுடைய வார்த்தையை உணவு, அப்பம், இறைச்சி, பால் என்ற உணவு வகைகளாகக் குறிப்பிடும் ஒத்து வாக்கிய பகுதிகள் எண்ணற்றவை பல உண்டு. அவை அனைத்தும் நாம் இயல்பாக உண்ண, பருக, தேவனுடைய வார்த்தையால் போஷிக்கப்படுவது என்பதை சுட்டிக்காட்டுவதாகும். நமது ஆவியே இவ்வாறு போஷிக்கப்படுவதாகும். நாம் தேவனுடைய வார்த்தையைச் சாதாரணமாக வாசிக்கவோ, படிக்க மட்டும் செய்வதுடன் திருப்தி அடைந்து விடுவதோ, போதும் என்றோ ஒருபோதும் இருக்கக்கூடாது. நாம் அதை சாப்பிட்டு ஜீரணித்து போஷிக்கப்பட்டு, அந்த நடைமுயைில் ஆவியில் பலப்படுத்தப்படவும் வேண்டும். தேவனுடைய வார்த்தையானது, முக்கியமாக நமது நுண்ணறிவுக்கு போதிக்கவோ நமது சிந்தனைக்கு கற்றுக் கொடுக்கப்படுவதற்காகவோ எழுதப்படவில்லை. நமது ஆவிக்குரிய உள்ளான மனிதனை போஷித்து பலப்படுத்துவதற்காகும்.

3. **அது வியக்கத்தக்க தேவனுடைய புத்தகம்**

அந்த வேதாகமம் ஆனது, வியக்கத்தக்க குறிப்பிடத்தக்க தேவனுடைய வார்த்தையாகும். ஒவ்வொரு பக்கத்திற்.கு மேற்பரப்புக்கு கீழே தேவனுடைய இயல்பும் ஒழுக்கமும் மறைந்து கிடக்கின்றது. அதன் ஒவ்வொரு பகுதியிலும் தேவனுடைய நித்தியமான சித்தமும் நோக்கமும் வெளிப்படுத்தி சொல்லப்படுகிறது. ஆகையால், நாம் வேதபுத்தகமானது, தேவனையும், அவரையும் பற்றியும் மட்டுமே அறிவிக்கிறதை கண்டுணர்ந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். அவருடைய வார்த்தைக்கு பின்னாக இருக்கும் இருதயத்தையும், அவருடைய சிந்தனையையும் நாம் வியாக்கியானம் செய்ய கற்றுக் கொள்ள முயற்ச்சிக்க வேண்டும். இந்த நடைமுறையான போக்கில்தான் நாம் தேவனையும் அறிந்து அவருடைய வழிகளையும் புரிந்து கொள்ள உண்மையாகவே கற்றுக் கொள்ளலாம்.

வேதாகமமே நமது ஆவிக்கு மெய்யான உணவு என்று சொன்னபிறகு, அதன் மூலமாக நமது ஆவிக்கு அவரது உண்மையைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டும், அதை கரிசனையாகப் படிக்கவும், கவனமாக படித்துக் கொள்ளவும், நமக்கு அவசியமாக அதனால் போஷிக்கப்படவும் வேண்டும் என்பதை ஒப்புக் கொள்ளவும் வேண்டும். நமது ஆவியில் நாம் அதை வாசித்து படித்து தியானிக்கவும் நமக்கு அவசியமாகிறது. நாம் அதை நம்முடைய இயற்கையான சிந்தனைக்கு அப்பால் எடுத்துக் கொண்டுபோய் நமது ஆவிக்குரிய புரிந்து கொள்ளுதலில் ஆழமாக வைக்கும் படி கேட்கவும் தேவையாகிறது.

ஆனால், நாம் இந்த வேதாகமத்தை சரியாகவும் கவனத்துடனும், விசுவாசத்துடன் படிப்பது நமக்கு தேவை ஆகிறது. ஆகையால் தேவனுடைய வார்த்தையைப் படித்து நடைமுறைப்படுத்த சில குறிப்பிட்ட குறிக்கோள்கள் அவசியமாகிறது. ஒரு மனிதனுக்கு மீனைக் கொடுத்தால், அவனுக்கு ஒரு நேரத்து உணவு கொடுத்ததாகும். அவனுக்கு எப்படி மீனைப் பிடிப்பது என்பதைக் கற்றுக் கொடுத்தால், அவன் காலவறையின்றி தன்னை போஷித்துக் கொள்வான் என்று யாரோ ஒருவர் சொன்னதாகும்.

# வேதாகம படிப்பிற்காக 25 அடிப்படையான குறிக்கோள்கள்

வேதாகமத்தை எப்படிப் படிப்பது என்று அறிந்து கொள்வது, முடிவுறாத ஆவிக்குரிய உணவை பூர்த்தியாகக் கொடுக்கப்படுவதை மனமகிழ்ச்சியாக பெற்றுக் கொள்ள உதவக் கூடுமாகையால் நான் உங்களுடன் வேதாகமத்தைக் கற்றுக் கொள்ள உதவியாக இருக்கும் குறிக்கோள்களையும் கோட்பாடுகளையும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இந்த கோட்பாடுகளில் பலவற்றை நாளுக்கு நாள் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதற்கு பயன்படக் கூடுமாகையால் உங்களுக்கு தொடர்ச்சியான பலதிறப்பட்ட ஆகாரத்தை உங்கள் ஆவிக்குரிய மனிதனை பலப்படுத்தவும், விசுவாசத்துடனும் உண்மையாக இருக்கச் செய்யவும் கொடுக்கும் படியாக விரும்புகிறேன்.

1. **உனக்கு நன்றாக புரிந்து கொள்ளும் படியான பதிப்பைப் பெற்றுக்கொள்ளவும்**
இன்றைய நாட்களில் வேதாகமத்து பலவகையான பதிப்புகள் கிடைக்கப் பெறுகின்றன. அவைகளில் சில பதிப்புகள் புரிந்து கொள்வதற்கு மற்றவைகளை விட சுலபமாகவே இருக்கின்றன. இது அடிக்கடி கிடைக்கக்கூடியன. ஏனென்றால், அவைகள் அமைந்த மொழியானது, நவீனமானதாக இருக்கிறது. ஆகையினால் அதிக சுலபமாகப் புரிந்து கொள்ளக் கூடியனவாகும். உங்களில் அநேகருக்கு இதைத் தெரிந்து எடுத்துக் கொள்வது எப்பொழுதுமே சுலபமாக இருக்க முடியாது என்று உணருகிறேன். அவைகள் கிடைக்கப் பெற அரிதாக இருப்பதால் எந்தப் பதிப்பை நீங்கள் பெற்றிருக்க வேண்டும் என்பது எளிதல்ல. ஆகவே தற்காலத்தில் நடைமுறை மொழியில் எழுதப்பட்ட வேதாகமத்தையே அதாவது நீங்கள் புரிந்து கொள்ளக் கூடிய மொழியில் உள்ள வேதாகமத்தையே பெற்றுக்கொள்ள முயற்சி செய்யுங்கள். ஒரு குறிப்பிட்ட மொழியில் பழங்காலத்து பாணியான மொழியில் எழுதப்பட்ட பதிப்பானது, அதிகப் புனிதமானது என்று யோசிக்கும் தவறை செய்யாதிருங்கள்.

2. **அதை ஒழுங்காகப் படிப்பாயாக**
உன்னுடைய வேதாகமத்தைப் படிப்பது, உனது உணவை உட்கொள்ளுவதைப் போலாகும். அதை நீ ஒழுங்காகவும் ஒரே சீராகவும் கடைபிடிக்க வேண்டும். உனக்கு நல்ல ஆரோக்கியமும், பலமும் வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்காக, மேலும் அதற்காக ஒழுங்கான நேரத்தை நிகழ்ச்சி நிரலில் வைத்துக் கொள்வது நல்லதாக நீ வாசிக்க வேண்டும் என்கிற போது அவ்வாறு இருக்கும். நீ ஒழுங்காக உணவை சாப்பிடாவிட்டால், உன் சரீரம் பலவினமான வளர்ச்சி அடையும். நீ ஒழுங்காக உன்னுடைய வேதாகமத்தைப் படிக்காவிட்டால், உன்னுடைய ஆவி உன்னில் தானே பலவீனப்படும். உன்னுடைய தினசரி நிகழ்ச்சி நிரலில் இதை அட்டவணைப் படுத்தாவிட்டால், அதை நீ பார்வையில் இருந்து தப்பும்படி விட்டுவிடக் கூடும்.

3. **உன்னுடைய நாளை வேதாகமத்தை வாசிப்பதோடு தொடங்குவாயாக**
இலட்சியமாக உன்னுடைய தனிப்பட்ட வேதாகமத்து வாசிப்போடு உன் நாளைத் தொடங்குவது நல்லது. பொதுவாக சிந்தனையானது ஒரு இரவு நித்திரைக்குப் பிறகு புத்துணர்ச்சி பெற்றதாக இருக்கும். அது தன்னையே வாசிப்புக்கும், படிப்புக்கும் நடைமுறைப்படுத்திக் கொள்ளக் கூடும். மேலும் ஏதோ ஒன்றை உன்னுடைய காலை வாசிப்பில் கண்டு பிடித்துக் கொள்வதென்றால், அதைப் பற்றி நாள் முழுவதுமே நினைத்து பார்க்க முடியும். உன்னுடைய நாடோறும் செய்யும் கடமைகளைச் செய்து கொண்டு போகும்பொழுது அதை உன் சிந்தனையில் உருட்டிப் புரட்டிப் பார்த்து, மேலும் நீ வாசித்த பகுதியில் பல சத்தியங்களைக் கண்டு பிடித்துக் கொள்ளலாம். இவைகளை உன்னுடைய ஞாபகசக்தியில் நம்பிக்கை வைத்து காப்பாற்ற நினைக்காதே. மேலும் சில நல்ல சத்தியங்களை நீ கண்டு பிடித்துக் கொள்ளும் பொழுது, அவற்றை ஒரு சிறிய நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்துக் கொள். அப்படி அல்லவென்றால், நீ கண்டு பிடித்த நல்ல முத்துக்கற்களை மறந்து விட நேரிடும்.

4. **ஆரம்பத்தில் எளிய பகுதிகளுடன் தொடங்குவாயாக**
வேதாகமத்தில் மிகவும் ஆழமானதும், சிக்கலானதுமான பகுதிகள் பல இருக்கின்றன. நீ அடிப்படையான சத்தியத்தில் நல்ல அஸ்திபாரத்தைக் கட்டிக் கொண்ட பிறகே அவற்றை

விளக்கம் காண்பது விவேகமல்ல. நீ வாசிப்பதோடும், படிப்பதோடும் அந்த எளிய ஆய்வு பொருட்களில் திறம்படக் கற்றறிவதற்கும் செயல்படு. பிறகு ஆழமான தீர்க்கதரிசன பகுதிகளுக்கு விளக்கம் காண முயலலாம். இதை சுவிசேஷங்களோடு தொடங்க ஆரம்பிப்பது ஆலோசனைக்குரியதாகும். பின்னரே நிரூபங்களுக்குள் முன்னேற்றம் அடைந்தும் அப்படியே முயன்று புதிய ஏற்பாட்டைப் பற்றிய பலமான விளக்கத்தை அடைந்தும், பழைய ஏற்பாட்டு சிக்கலான ஆய்வு பொருட்களை விளங்கிக் கொள்ள முயற்சிக்கும் முன்னும் அவ்வாறு செய் வேண்டும். புதிய ஏற்பாடானது, கிறிஸ்தவ விசுவாசிக்கு பழைய ஏற்பாட்டை விட மிகவும் அதிகமாக வேணடியதாய் இருக்கிறது. புதிய ஏற்பாட்டு போதனைகளிலும், கோட்பாடுகளிலும் முதலாவதாக, உன் கவனத்தை ஒரு முனைப்படுத்தி செலுத்துவாயாக. புதிய ஏற்பாட்டில் இயேசுவின் ஜீவியமும், அவரது பரிகாரமான மரணமும், உயிர்த்தெழுதலும் மிகத் தெளிவாகச் சொல்லப்படுகின்றன. இங்கேதான் ஆதித் திருச்சபை பிறந்ததைப் பற்றி எழுதப்பட்டு, அறிக்கை செய்யப்படுகிறது.

## 5. தனிப்பட்டதும் சபையை மேய்ப்பதற்குமான

(பக்தியான தெய்வ ஈடுபாடும், தத்துவ கோட்பாடும்) நான் அர்த்தப்படுத்துகிறதாவது, வேதத்தைப் படிப்பது உன்னுடைய ஆவிக்குரிய நன்மைக்கும், பிழைத்து இருப்பதற்கும் உன் ஆத்துமாவை போஷிப்பதற்கும் ஆகும். அந்த மாதிரி என்றால் இந்த வகையான முக்கியமான படிப்பாகும். எனென்றால், இது புறக்கணிக்கப்பட்டால், பிறகு முழு ஜீவியமுமே ஆவிக்குரிய பிரகாரமாக ஆழமற்றதாகி விடும். இந்த முறையில் செயல்படும் எந்த ஊழியமும் கூட ஆழமற்றதாகவும் மிஞ்சிய தேவையற்றதாகவும் ஆகிவிடக்கூடும்.

வேதாகமத்தை தெய்வ பக்தியுடன் தனிப்பட்ட முறையில் படிப்பது இயேசுவின் பிரசன்னத்தில் அவருடைய (சத்தத்தை) குரலை கேட்கவும் அதற்குக் கீழ்படிந்திருக்கவும் கற்றக் கொள்வதாகும். இந்த விதமான படிப்பு உள்ளான மனிதனை வளமுள்ளவனாக ஆக்குகிறது. அதுவும் அடிக்கடி தேவனுடைய குரலைக் கேட்டு அவர் நமக்காக என்ன செய்யவேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார் என்பதைக் செவிக் கொடுத்துக் கேட்டுக்கொள்ளும் படியாக உதவிசெய்கிறது. இப்படியாக சத்தத்தை அதிகமாக பூரணமாக நிறைவேற்றுவதுடன் மேலும், ஒரு ஐசுவரியமுள்ளதும் மிகவும் நன்மை பயக்கக் கூடிய கிறிஸ்தவ ஜீவியம் செய்வதற்கும் உதவிசெய்கிறது.

தேவனுடைய வார்த்தையைப் படிப்பதற்கான முக்கியமான காரணமாவது, அவர் உன்னோடு தமது தனிப்பட்ட முறையில் நேருக்கு நேர் பேசுவதற்கு மேலும், நீ உன்னுடைய உள்ளான ஆவிக்குரிய மனிதனை போஷித்துக் கொள்வதற்காகவும் என்பதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும். ஊழியத்தில் உள்ள மிகவும் நுட்பமான அபாயங்களில் ஒன்றாவது உமது கூடிவரும் சபைக்கான உணவைக் கிடைக்கப் பெருவதில் மிகவும் கரிசனையாக இருப்பதால், நீவிர் உம்முடைய ஆத்துமாவுக்கு அவசியமான போஷித்துக் கொள்ளும் தேவையை புறக்கணிப்பு செய்வதாகும்! ஒரு ஊழியர் பிரசங்கங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் தம்மை பூட்டி வைத்து முடக்கிக் கொண்டு இருப்பதால் தன்னுடைய ஆத்துமாவை போஷித்துக் கொள்ள வேண்டிய தேவையைப் புறக்கணிக்கிறார். இது ஒரு மிதமிஞ்சிய ஓர் ஆபத்தான மனப்பான்மையாகும். இது தனக்கென்று தனிப்பட்ட ஆவிக்குரிய வறுமைக்கு இட்டுச் சென்று சில சமயங்களில் ஆவிக்குரிய தற்கொலைக்கு நடத்திச் செல்லக் கூடிய காரணி ஆகலாம். ஆகவே உன்னுடைய ஆவிக்குள்ளான மனிதனைப் போஷிப்பது உனக்கு எப்பொழுதும் முன்னுரிமையாக இருக்கட்டும். தேவனுடைய ஜனங்களுக்கு ஒரு தலைவராக நீ உன்னுடைய ஆவிக்குரிய வல்லமையையும், உத்தமத்தையும் நிலை நாட்டவேண்டும். எப்படி என்றாலும் "ஓர் ஆழமற்ற ஊழியமானது ஆழமற்ற ஓர் ஆத்துமாவிலிருந்து தான் வருகிறது". நீ உன்னில் தானே அனுபவிக்காத ஆவிக்குரிய அனுபவிக்காத ஆவிக்குரிய ஆழமான அனுபவங்களுக்குள் உன்னுடைய ஜனங்களை நடத்திச் செல்ல முடியாது. உன்னுடைய சொந்தமான அறிந்து கொள்ளுதலுக்கும் அனுபவத்திற்கும் அப்பால் ஜனங்களை (ஒருவருமே) யாராலுமே நடத்திச் செல்ல முடியாது.

தத்துவப் படிப்பானது, ஊழியத்திற்கு ஆயத்தம் செய்யும் நோக்கத்தோடு நம் வேதாகமத்து படிப்பாகிறது. நாம் வாசித்தும், படித்தும், யோசனைகளுக்காகவும், பாடங்களுக்காகவும்

தேவனுக்காக நாம் காத்திருந்து பார்ப்பதானது, நம்மைக் கொண்டு அதை அவர் பிரசங்கிக்கவும் போதிக்கவும் வேண்டும் என்று அவர் வாஞ்சிக்கலாம் என்பதே.

## 6. அதை எளிதாக படிப்பது மடடுமல்ல, சாப்பிட்டு அதை பட்சித்துப் போடு

வேதாகமம் என்பது, நாம் மனதால் எளிதாக ஆகர்ஷிக்கப்படக் கூடியதென்பதல்ல. அது நம்மை போஷிக்க வேண்டிய ஆவிக்குரிய திருவுணவுங்கூட. வேதாகமத்தைப் பொதுவாக வாசிப்பது அல்லது படிப்பதோடு மட்டும் திருப்தி அடைந்து விடக்கூடாது. உன்னுடைய ஆத்துமாவை போஷித்துக் கொள்வதற்காக ஏதோ கொஞ்சத்தை பெற்றுக் கொள்வதற்காக உறுதி செய்து கொள். “அன்றைக்குரிய பகுதியை மட்டும்” படிப்பது என்று இருக்காதே. உன்னுடைய வேதாகமத்துடன் கர்த்தருக்கு முன்பாக திறந்து வைத்து உன் ஆத்துமா போஷிக்கப்படும் வரைக்கும் காத்திரு. உன்னுடைய ஆத்துமாவுடன் மெய்யாகவே பேசும் ஒரு வார்த்தையை கண்டு பிடித்துக் கொள்ளும் வரைக்கும் வேதாகமத்தைப் படித்துக் கொண்டே இருக்கவும். பின் அதை உட்கொள், ஜீரணித்துக் கொள். உன்னுடைய உள்ளான மனுஷனுக்கு தான் உண்மையாகவே போஷிக்கப்பட்டதை அறிந்து கொள்ளும் வரைக்கும் அதை கொண்டே உன்னை போஷித்துக் கொள்.

## 7. அதை சப்தமாக உரக்கமாக வாசிக்கவும்

வேதத்தை உனக்குத்தானே சப்தமாக உரக்க வாசிப்பது மகத்தான ஆசீர்வாதமாகும். இந்த விதமான அப்பியாசம் பல நன்மைகளைத் தருகிறது.

A : அவ்வாறு செய்வது உன்னை விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் இருக்கச் செய்கிறது. உன்னை நன்றாக ஒருமுகப்படுத்தி வைத்துக் கொள்ளச் செய்கிறது.

B : இந்த வார்த்தையானது, உன் செவியாகிய வாசல் வழியாகவும், கண்ணாகிய வாசல் வழியாகவும் உட்புகுந்து கொள்கிறது.

C : உன்னுடைய ஆவிக்குள் உட்புகுந்து கொள்வதை, அதுமேலும் அது வலிமைப் படுத்துகிறது.

D : இந்த விதமான அப்பியாசம் நீ வாசித்ததை சிறப்பாக மனப்பாடமாகச் செய்ய உதவுகிறது.

E : தேவனுடைய வார்த்தையானது, உன் சொல்லான பாவ அறிக்கையாக ஆகிவிடுகிறது.

## 8. பரிசுத்த ஆவியானவரையே உன்னுடைய வியாக்கியானம் செய்பவராக இருக்கும்படியாக கேட்டுக் கொள்ளவும்

நீ வேதத்தைப் படிக்கும் பொழுது, பரிசுத்த ஆவியானவரே உனது நிலையான என்றுமுள்ள உடன் தோழராக இருப்பாராக. நீ என்ன வாசிக்கிறாய் என்பதைப் பற்றி அவருடன் பேசிப்பார். அவரையே கேள்வி கேள். உன்னுடைய ஆவியில் அவருடைய அமர்ந்த மெல்லிய சத்தத்தை அவர் தன்னுடைய அகத்தூண்டுதலையும், அறிவொளியையும் உன்னுடன் அவர் பகிர்ந்து கொள்ளும் பொழுது, அந்த மெல்லிய சத்தத்தைக் கவனித்துக் கேட்பாயாக. பரிசுத்த ஆவியானவர் தாமே “உனக்கு ஏற்ற தகுதியான திருவுணவைத்” தந்து போஷிப்பாராக. பரிசுத்த ஆவியானவரை உனக்காக வேதாகமத்தை வியாக்கியானம் செய்யும்படியாகக் கேட்பதோடுங்கூட, அங்கே சில குறிப்பிட்ட கோட்பாடுகளும் வியாக்கியான விதிகளும் இருக்கின்றன என்பதை நீ விழிப்புடன் நீ வேதாகமத்தைப் புரிந்து கொள்ள முயற்சிக்கும் போதும் அவ்வாறு இருக்க வேண்டும்.

இங்கே அவைகளைப் பற்றிய சில விதிகள் :

- அடுத்துவரும் வசனப்பகுதியைப் பற்றி எப்பொழுதுமே கருத்தில் கொண்டிரு. அதாவது, நீ படிக்கும் பகுதிக்கு முன்னுக்கும் அல்லது பின்னுக்கும் வசனபகுதிகளைப் பற்றி கவனமாக இரு. அந்த வசனத்தை அதன் சந்தர்ப்பத்திலும் அமைவிடத்திலிருந்து புறம்பே கொண்டு வராதே.
- அந்த வசனபகுதியில் உள்ள ஒவ்வொரு வார்த்தைக்கும் சரியான பொருள் விளக்கத்தைக் கண்டு பிடித்துக்கொள்.
- அதே ஆவியில் இடைபடும் ஒத்து வசன பகுதிகளோடு அதன் கருத்தோடு வியாக்கியானம் செய்ய முயற்சிப்பாய்.

- அந்த வசனம் கொடுக்கப்பட்ட குறிப்பிட்ட அமைவிடத்தையும், சந்தர்ப்பத்தைப் பற்றியும் கவனமாகப்பார்.

## 9. வேதாகமத்து தியானத்தை அப்பியாசிப்பாயாக

வேதாகமத்து தியானமானது, அதீதமான உள்நோக்கு பார்வையுடையதாகவும், ஊடுருவிச் செல்வதாகவும் இருக்கும். வேதாகமத்தில் எண்ணற்ற சந்தர்ப்பங்களில் குறிப்பிடப்பட்டு ஊக்குவிக்கபட்டும் இருக்கிறது.

A: யோசுவாவை தேவன் அனுபவிக்கும் படி விரும்புகிற வெற்றி வாய்ப்பை சாதனையாக அடைவதற்கு யோசுவா, இரவும், பகலும் தேவனுடைய வார்த்தையை தியானம் செய்யும் படியாக, அவனுக்கு உத்திரவிடப்பட்டது.

B: சங்கீதம் 1ல் கூறப்படும் பாக்கியவானுங்கூட இரவும் பகலும் தேவனுடைய வசனத்தை தியானிப்பதால் பிரியமாயிருக்கிறான். சங் 1:2

C: தாவீது இராஜா அடிக்கடி தேவனுடைய வேதத்ததில் தியானிக்கிறதைக் குறிப்பிடுகிறான். (சங் 77:12; 119:15, 78, 99)

D: சங் 19:14ல் தாவீது சொல்கிறான் “என் கன்மலையும், என் மீட்பருமாகிய கர்த்தாவே, என்வாயின் வார்த்தைகளும் என் இருதயத்தின் தியானமும் உமது சமூகத்தில் பிரீதியாயிருப்பதாக” என்று சொல்லுகிறான்.

E: தீமோத்தேயுவைக் குறித்து அவனுக்கு உபதேசிக்கப்பட்டதை தியானித்துக் கொண்டு அவனையும், அவனுடைய உபதேசத்தைக் குறித்து கேட்பவர்களுக்கும் தன்னை நிலைக்கொண்டிருக்கச் செய்வதால், அவனுடைய ஆவிக்குரிய முன்னேற்றமானது, எல்லாராலும் கண்டு பிடிக்கப்பட்டு அங்கிகரிக்கப்பட வேண்டும். (1தீமோ 4:15).

<u>தியானம் செய்தல் என்ற கோட்பாட்டின் படி பெறுகிற கருத்து :</u>

# அதைப்பற்றி கவனமாக சிந்திக்கவும்.
# ஒவ்வொரு கோணத்திலிருந்தும் மிகவும் கூர்மையாக பெறப்படுகிறதைக் கருத்தில் கொள்ளவும்
# ஏதோ ஒன்றை துப்பறிந்து மிகவும் நுணுக்கமாக பரிசீலனை செய்யவும்.
# ஏதோ ஒன்றைப் பற்றி நீண்ட நேரமாகவும், மிகுந்த ஜாக்கிரதையுடனும் சிந்தனை செய்து பிரதிபலிக்கவும்.

<u>தியானம் செய்தல் என்ற கோட்பாட்டின்படி பெறுகிற கருத்து :</u>

- புறம்பான எல்லா கவனச் சிதறல்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வது.
- தனிப்பட்ட அமைதியான தியானத்தில் நேரத்தை செலவிட
- தனிமையாக கவனச் சிதறல்கள் இல்லாமல் வேதத்தை வாசிக்க
- ஆவிக்குரிய சத்தியங்களை ஆழமாக நிதானிக்கும் பொழுது ஆத்துமாவில் அமைதியைக் காத்துக் கொள்.
- உனது ஆவியிலே தேவனுடைய சத்தத்தை எவ்வாறு அமைதியாக கவனித்துக் கேட்டு கற்றுக் கொள்வது.
- தேவன் உனக்கு வெளிப்படுத்துகிறவற்றை உன்னில் அப்பியாசம் செய்து கொள்.
- வசனத்தை சாதாரணமாக கேட்பவராக மட்டுமல்ல “வசனத்தின்படி செய்கிறவராகவும்” ஆக வேண்டும்.

## 10. வேதத்தைப்பற்றி வினாக்களைக் கேட்டுக்கொள்

நீ வேதத்தை வெறுமனே வாசிப்பது மட்டுமல்ல, கேள்விகள் கேட்டு அதை சுறுசுறுப்பாக ஆராய்ச்சி செய்.

ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சிந்திக்கும்பொழுது, அதைப்பற்றி வழிநடத்தும் கேள்விகளை உன்னைத் தானே கேட்டுக்கொள். பிறகு சுறுசுறுப்பாக விடாமுயற்சியுடன் விடைகாண முயற்சி செய்.

பின்வருகிற மாதிரி கேள்விகளை உன்னையே கேட்டுக்கொள் யார் பேசுகிறார்?

அவர் **என்ன** சொல்லுகிறார்?

அவர் **எப்பொழுது** சொல்லுகிறார்?

அவர் யாருக்கு இதை சொல்லுகிறார்?
**அதற்கான** பலன் **என்ன**?
இது எனக்கு **எவ்வாறு பொருந்தும்**?
இதிலிருந்து **நான் என்ன** படிக்கலாம்?

## 11.வேதபகுதிகளை மனப்பாடம் செய்க

வேதபகுதிகளை மனப்பாடஞ்செய்வது, அநேக நன்மைகளை பெற்றிருக்கிறது.

A. நீ எங்கே இருந்தாலும் வேதம் உன்னோடு கூடவே வருகிறது.
B. நீ அதை எந்த நேரத்தில் வேண்டுமென்றாலும் தியானம் செய்யலாம்.
C. அது உன்னுடைய யோசனை செய்யும் நடைமுறையில் ஒரு பகுதியாக ஆகிவிடுகிறது.

வேதப்பகுதிகளை செயலூக்கத்துடன் மனப்படம் செய்ய வேண்டுமானல், நீ செய்ய வேண்டியதாவது :

a: வேத பகுதியை சத்தமாக வாசிப்பாயாக
b: அதை எண்ணற்றவைகளாக அதைப் படிப்பாயாக.
c: அதை உனக்குத்தானே திரும்பத் திரும்பவும் சொல்லிக் கொள்ளவும்.
d: அதோடு ஒத்து வாக்கியத்தையும், அதிகாரத்தையும் வசனத்தையும் சேர்த்துக் கொள்ளவும்.

## 12.உன்னுடைய வேதாகமப் புத்தகத்தில் குறித்துக் கொண்டு விவரக்குறிப்புகள் எழுதிக் கொள்ளவும்.

உனது வேதபுத்தகம் உனக்கு விலையேறப் பெற்றது என்று நான் அறிந்திருக்கிறேன். ஆகவே நீ அதில் எழுதிக் கொள்வதிலிருந்து அந்த காரணத்திற்காகவே நீ அதிலிருந்து சுருங்கிக் கொள்ளலாம், என்னவென்றாலும் நீ உன்னுடைய வேதாகமப் புத்தகத்தின் மதிப்பை உனக்காக உனது தனிப்பட்ட வகையில் அதில் உதவி செய்யக்கூடிய முக்கியமான குறிப்புகளை எழுதிக் கொள்ளுவதால், சிறிது காலகட்டத்தில் உமது வேதாகமமே உமக்கு மேலும் மகத்தான அகத்தூண்டுதலுக்கான மூலஊற்றாக உன்னால் எச்சரிக்கையுடன் செயல்படும் உள்நோக்குகளான காரணத்தால் அப்படி ஆகக்கூடும். ஆதலால் நேர்த்தியாகவும் வாசிக்கக்கூடிய மாதிரியாகவும் எழுதிக்கொள்ள முயற்சிக்கவும்.

## 13.இதற்காக ஆவிக்குரிய நாட்குறிப்பை அல்லது பத்திரிகையை வைத்துக் கொள்க

மற்றவர்கள் பலருடனும் சேர்ந்து நானும் கண்டுபிடித்துக் கொண்டதாவது, உங்கள் ஞாபக சக்தியானது, நீங்கள் வேதாகமத்தைப் படிக்கும்பொழுது உங்களுக்கு நேரிடுவதான சகல எண்ணங்களையும் ஏற்று சமாளிக்க முடியாது என்பதாகும். மேலும், உங்களுக்குக் கிடைக்கும் அந்த அற்புதமான வெளிப்பாடுகள் உங்களை அந்த சமயத்தில் உள்ளக்கிளர்ச்சி அடையச் செய்வதானது, பின்னர் நீங்கள் எழுதப்பட்ட நகலை உங்கள் வசம் வைத்திராவிட்டால் உங்களை விட்டு நீங்கிப்போகக் கூடும். ஆகவே, நீங்கள் வேதாகமத்தை வாசிக்கும்போதெல்லாம் ஒரு நோட்டுப் புத்தகத்தை வைத்துக் கொள்வது ஒரு நல்ல யோசனையாகும். அதில் நாளையும் தேதியையும் குறித்துக் கொள்ளுங்கள். நீங்கள் மேற்கொண்டு தியானம் செய்யும்பொழுது, பின்னர் வரும் கருத்துக்களையும் சேர்த்து எழுதிக் கொள்ளுங்கள்.

## 14.அந்த வசனப் பகுதியை உங்கள் ஜீவியத்திற்கு பொருத்தமாக ஆக்கிக் கொள்க

மத் 7:24-29ல் இயேசு ஞானத்தைப் பற்றியும் மதியீனத்தைப் பற்றியும் சில நாடக பாணியான விருவிருப்பான கருத்துரைகளைக் தருகிறார். அவர் அவைகளைப் பற்றி விவரித்து அதன் வித்தியாசத்தை சொற்பொருள் விளக்கம் செய்தும் அதை அடிமட்டத்துக் கோட்டுக்குக் குறைத்து விடுகிறார். தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடுத்து அதன்படி செய்பவனே ஞானமுள்ளவன் எனப்படுவான். தேவனுடைய வார்த்தையை செவிக்கொடுத்து கேட்கும் அதன்படி செய்யாதவனே அப்படிப்பட்ட மதியீனன் எனப்படுவான்.

## 15.நீ கற்றுக்கொள்வதை பழக்கப்படுத்திக் கொள்

பல காரியங்களை அறிந்தும், அதன்படி செய்யாமல் இருப்பதைவிட ஒரே ஒரு காரியத்தை அறிந்து அதன்படி செய்வது சிறந்ததாகும். வேதாகமம் ஆனது முக்கியமாக நமது நுண்ணறிவின் பாராட்டுதலுக்கானது அல்ல. ஆனால் அது நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் அவசியமானது. இயேசு தம்முடைய சீஷர்களை பயிற்றுவித்த முறையாவது, அதை அவர்கள் படித்துக் கொண்டு அதன்படி நடப்பதாகும். தேவன் இந்த முறையில் தான் நாம் வளர்ச்சி அடைய வேண்டும் என்றும் வாஞ்சிகிகிறார். ஒரு ஞானமுள்ள மனிதனுக்கும் ஒரு மதியீனனுக்கும் இடையே உள்ள வித்தியாசமாவது, அந்த ஞானவான் தான் வாசித்துக் கற்றறிந்தவைகளை நடைமுறையில் அப்பியசிக்கிறான். ஆனால் மதியீனனோ அவன் அதை வாசித்து அந்த சத்தியத்தை அறிந்து கொண்டாலும் அதை கைக்கொள்ளுவதில்லை.

## 16.அதை அதிகாரம் அதிகாரமாக படித்து வா

தேவனுடைய வார்த்தையைப் புசிக்கக்கூடிய சிறந்த வழியாவது, அதை சரியான அளவு துண்டுகளாக கடித்துப் புசித்தலாகும். ஏதாவது ஒரு அதிகாரம் அடிக்கடி அப்படிப்பட்ட பொருத்தமான துண்டு பகுதியாகும் ஒரு தகுதியான புத்தகத்தைத் தெரிந்து எடுத்துக்கொண்டு ஒரு நேரத்தில் ஒரு அதிகாரத்தை மட்டும் வாசிக்கும் படியாக ஆரம்பித்துக் கொள்ள வேண்டும். அந்த அதிகாரத்தின் பேரில் உன் கவனத்தை ஒரு முகப்படுத்துக. அதை பலதடவைகளாகத் திரும்பத் திரும்ப வாசிக்கவும். அதை மெதுவாகவும், ஜாக்கிரதையாகவும் படிக்கவும். நுட்பமாக பரிசீலனை செய்யவும். அதன் ஒவ்வொரு வார்த்தையிலும் முக்கியத்துவத்திற்காகக் கவனித்துப் பார். உன்னுடைய வேதாகமத்தில் “குறுக்கு ஒத்து வாக்கியத்திட்டம்” இருக்குமானால் ஒவ்வொரு குறிப்படத்தக்க வார்த்தையையும் பின்பற்றிப் போவாயாக. ஒருவேளை ஒருநாளுக்குள் ஒரு அதிகாரத்தை முடித்துவிடக் கூடும். ஒரு அதிகாரம் ஒரு வாரமோ, அதற்கு மேலோ எடுத்துக் கொள்ளவும் கூடும். நிலைமை எதுவானாலும் இந்தப் படிக்கும் முறையினால் நீவிர் அதிகமானவற்றை கற்றுக் கொள்ள முடியும்.

## 17.ஒரு புத்தகம் முழுவதையுமே முற்றிலுமாக வாசிக்கவும்

வேதாகமத்து புத்தகங்களில் அநேகம் மிகக் குறிகினவைகளாக ஒரே சமயத்தில் படித்துவிடப் போதுமானவையாக இருக்கும். இது பழைய ஏற்பாட்டு எண்ணற்ற புத்தகங்களைப் பற்றிய உண்மையுமாகும். மேலும் அது புதிய ஏற்பாட்டு நிருபங்களைப் பொறுத்தவைரை ஒவ்வொன்றைப் பற்றிய நிச்சயமான உண்மையுமாகும். இந்த விதமான படிப்பு முறையில் அது முழுப்புத்தகத்தின் நோக்கத்தின் மேலே ஒரு பிடிப்பை உண்டாக்கிக் கொள்ள உதவிசெய்கிறது. இது ஒரு செய்திக் கடிதத்தை முதலில் இருந்து கடைசி முடிவுவரை வாசித்து முடிப்பதைப் போலாகும். இது வழக்கமாக ஒரு குறிப்பிட்ட புத்தகத்தை பல தடவைகளாகப் படித்து முடிக்க உதவியாக இருக்கிறது. அதுவும் நீவிர் அதிகாரம் அதிகாரமாக படிப்பதற்கு முன்னால் அவ்வாறு உதவுகிறது.

## 18.வேதாகமத்தை ஒரு வருடத்தில் முற்றிலுமாக படித்து முடிக்கும்படியாக திட்டமிடவும்

ஒரு ஜாக்கிரதையான வேதாகமத்து மாணவனுக்கு ஒரு வருட காலத்திற்குள் வேதாகமம் முழுவதையுமே முற்றிலுமாக படித்து முடித்துவிடக் கூடும். ஒவ்வொரு நாளும் எந்தெந்த அதிகாரங்களைப் படிப்பது என்பதற்று ஆலோசனை உதவக் கூடிய பல வழிகாட்டிகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. என்னவென்றாலும் நீ உனக்கென்று உன் சொந்த முறையை வகுத்துக் கொண்டு அதை முன்னதாகவே நீ திட்டமிடவேண்டியது அவசியமாகும். (பழைய ஏற்பாட்டிலிருந்து மூன்று பக்கங்களும் புதிய ஏற்பாட்டிலிருந்து ஒரு பக்கமும் படிக்கவும்) இப்படி செய்வதால் பலவேறுபட்ட வேதாகமத்து பிரிவுகளிலிருந்து தினந்தோறும் கொஞ்சம் வாசிப்பது ஆலோசனைக்குரியதாகும். (உம்) பழைய ஏற்பாட்டு சரித்திரத்திலிருந்து ஒரு பகுதியும் ஒரு சங்கீதமும் புதிய ஏற்பாட்டிலிருந்து பல அதிகாரங்களைப் படிப்பதும் உசிதமாகும்.

## 19.சங்கீதங்களையும், நீதிமொழிகளையும் வாசித்துவிடுவது

உங்களுடைய தியான ஜீவியத்திற்கும், ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் அபரிமிதமான பொருட் செல்வங்கள், சங்கீதங்களிலும், நீதிமொழிகளிலும் கிடைக்கப் பெறுவன. நீ ஒவ்வொரு நாளும் வேறு எதையுமே படிப்பதையும் பொருட்படுத்தாது. இந்த ஒவ்வொரு பகுதிகளில் இருந்தும் ஏதோ கொஞ்சத்தை நீ வாசிக்க வேண்டும் என்று ஆலோசனை கூறுவேன். சங்கீதங்களில் 150ம், நீதிமொழிகளில் 31 அதிகாரங்களும் இருப்பதால், ஒவ்வொரு நாளும் மூன்று சங்கீதங்களையும், நீதிமொழிகளில் இருந்து ஒரு அதிகாரத்தையும் படிப்பது வசதியாகும். இந்த வேதாகமத்து பகுதிகள் கிறஸ்தவ ஒழுக்க விருத்திக்கும் வாழ்க்கை நடைமுறைக்கும் பக்தி விருத்திக்கும் அதீதமாக உதவுவதாக இருக்கின்றன.

## 20.இயேசுவின் வார்த்தைகளை வாசித்தல்

ஒரு வரம்புக்கு மீறிய அகத் தூண்டுதலுக்கும், நன்மையைப் பயக்கும் பயிற்சியாக இயேசுவின் சொந்த வார்த்தைகளை சுவிசேஷத்திலும் மற்றும் இடங்களிலும் அறிக்கை செய்யும்படி படிப்பது மேற்கூறிய பயன்களை அளிக்கும். வேதாகமத்து சில பதிப்புகளிலும் அல்லது புதிய ஏற்பாட்டிலுங்கூட இயேசுவுடைய வார்த்தைகளை சிவப்பு மையினால் அச்சடிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது. இது இந்த படிக்கும் அப்பியாசத்தை மிகவும் எளிதாக ஆக்குகிறது. அதுவும் பெரிதும் சவால் உள்ளதாயும் அறிவொளி பெற்றுக் கொள்ளவும் இந்த முறை பின்பற்றக் கூடியதாயும் இருக்கின்றது.

## 21.முக்கியமான வேதாகமத்து கதாபத்திரங்களின் ஜீவியத்தைப் படித்தறிக

வேதாகமமானது டஜன் கணக்கான எல்லைக்கு மீறிய ஆர்வத்தைத் தூண்டும் கதா பாத்திரங்களைப் பற்றிய கதைகளால் நிரம்பப் பெற்றுள்ளது. ஒவ்வொன்றிற்கும் முக்கியமான படிப்பினைகளால் நிறைந்து அவற்றிலிருந்து நாம் படிப்பினைகளைப் படித்துக் கொள்ளக் கூடும். இந்த ஜீவியங்கள் சிறந்த வாழ்க்கை வரலாற்று படிப்புகளாக அமைந்திருப்பதால், இதிலிருந்து சில தேவனுக்கு பயப்படும் ஜீவியம் செய்வதற்குரிய சிறந்த கோட்பாடுகளை ஒரு கூடிவரும் சபைக்கே நம்மால் போதிக்கக் கூடும். நமக்கு வலுவான தாக்கத்தை உண்டாக்கக் கூடிய சில கதாபாத்திரங்களை எடுத்துக் கொள்வோம்.

- வேதாகமத்து மூலமாகவே அவர்களுடைய வரலாற்று கதையை பின்பற்றிச் செல்லவும்.
- அவர்களுடைய அனுபவத்திலிருந்து நீ எவ்வளவு கற்றுக் கொள்ளமுடியுமோ அந்த அளவுக்குக் கற்றுக் கொள்ளவும்.
- அவர்களுடைய ஜிவியத்தில் ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும்படிக்கு, அவர்கள் என்னத்தை செய்தார்கள்?
- தேவனுக்கு பிரியமில்லாத எதைச் செய்தார்கள்?

ஒவ்வொரு ஜிவியமும் தன்னில்தானே ஒவ்வொரு புத்தகத்தைப் போன்றது. அவர்கள் கவர்ச்சியாகவும், முற்றிலுமாக ஆகர்ஷிக்கக் கூடியதாக உனக்காகவும் யாருக்கு போதிக்க நீ பொறுப்புள்ளவனோ அவர்களையுங்கூட ஆகர்ஷிக்கக் கூடியதாகும்.

## 22.ஒரு தலைப்பை அல்லது ஆய்வு பொருளைப் படித்தறிக

இந்த தலைப்பு ஒத்து வாக்கியமானது, சில பதிப்புகளில் அடங்கப்பெற்றவை. இந்தக் காரியத்தில் பெரிய ஆசீர்வாதமாக இருக்கும். அது உனக்குத் தேவையான எல்லா ஒத்து வாக்கியங்களையும் பலதிறப்பட்ட முக்கியமான பாடங்களுக்கு கண்டுபிடித்துக் கொள்வதற்கு உனக்கு உதவி செய்யும். அந்த வகையான ஆய்வுப் பொருட்களை பின்பற்றி வருவது, கல்விக்கற்க ஏதுவாயிருக்கும். நீ தேவனுடைய சிந்தனையைப் பற்றி நீ எவ்வளவு படித்து கொள்ளலாமோ, வேதாகமம் அந்த முக்கியமான தலைப்புகளைப் பற்றி போதிப்பதிலிருந்து படித்துக்கொள்ளலாம்.

## 23.வேதாகமத்திலுள்ள அற்புதங்களைப் பற்றிப் படித்துக் கொள்க

ஆதிமுதல் அந்தம் வரைக்கும் ஆதியாகமத்திலிருந்த வெளிப்படுத்தின விசேஷம் வரைக்கும் அற்புதங்கள் நிறைந்து இருக்கின்றன. அது என்றும் நடக்கிற அற்புதங்களின் ஒரு புத்தகம்.

ஒரு அற்புதம் என்பது, தேவன் ஏதோ ஒன்றைச் செய்கிறார். அது எல்லா இயற்கை நியதிகளையும் கடந்து அப்பால் நிற்கிறது. அது ஒரு அமானுஷியமான கிரியை ஆகும். இவ்வாறு குறிக்கப்பட்ட அற்புதங்களை கவனமாகப் படிப்பால், நீ தேவனைப் பற்றி அதிகமாக படித்துக் கொள்ளமுடியும். மேலும், நீ உன்னிலே மகத்தாக ஊக்குவிக்கப்பட்டு உன்னுடைய ஜிவியத்திலும், ஊழியத்திலும் அமானுஷ்யமானது நடக்கும் என்று நம்புவதற்கு ஏதுவாகிறது. நீ அற்புதங்கள் நடப்பதற்கான காரணமான குறிக்கோள்களை நீ கண்டு கொள்வதுடன் இந்த சத்தியங்களால் உன் ஜீவியமும் வளமைபெறும்.

## 24.ஒரு வார்த்தை படிப்பைச் செய்வது

வேதாகமத்திலுள்ள ஒரு வார்த்தையுங்கூட தங்கச்சுரங்கம் போன்றதாகும். இந்த மாதிரியான ஒரேஒரு வார்த்தையிலிருந்து அநேக சத்தியங்களை ஜாக்கிரதையான திடநம்பிக்கையுடன் செய்யப்படும் படிப்பிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். வெளிப்படையாக படிப்பின் நடைமுறையானது எளிதானதாக ஆக்கப்பட்டு, மேலும், ஒரு நல்ல ஒத்துவாக்கிய பதிப்பு (அ) அகராதி கிடைக்கப் பெறுமானால், அதுவே மிகவும் மனதிருப்பதியை உண்டாக்குவதாகும். வேதாகமத்து அகராதியுங்கூட மூலபாஷையிலுள்ள அந்த மூலபதத்திற்கான விளக்கத்தைத் தரமுடியும். இந்த விதமான நவீன உதவிகளுமின்றி, நீவிர் உமது விடாமுயற்சியாக படிப்பதினால், அந்த ஒரு வார்த்தைப் படிப்பிலிருந்து மிகுதியானவற்றைப் படித்துக் கொள்ளலாம்.

## 25.பலவிதமான மாதிரிகளையும், நிழலையும் படித்தல்

வேதாகமத்தின் பெரும்பகுதி ஒப்புமை அல்லது உவமைகளாக எழுதப்பட்டவை. அவைகளுக்கு தங்களுக்குள் பொதிந்து மறைந்து கிடக்கும் ஆவிக்குரிய பொருள் விளக்கங்களும் முக்கியத்துவமும் உண்டு. அடிக்கடி நாம் தீர்க்கதரிசன முக்கியத்துவத்தை தோற்றக் காட்சிக்கு களங்கமற்று தோன்றுகிற வேதாகமத்து பகுதியின் மேற்பரப்புக்குக் கீழாக நாம் அதைக் காணமுடியும். பழைய ஏற்பாட்டு கதாபாத்திரங்கள் கிறிஸ்துவின் மாதிரியாக பின்வருகின்றவர்களைப் போல உள்ளவர்கள் இருந்தார்கள்.

- மோசே
- யோசேப்பு
- தாவீது

இவைகளில் ஒருவருடைய ஜிவியத்தைப் படிக்கவும், அவகைளுக்கிடையே உள்ள சமன்பாட்டைக் கண்டுபிடித்துக் கொள்ளவும். இந்த படிப்பின் நடைமுறை பாணி வரம்புக்கு மீறி கவர்ச்சியானதாக, ஆனால் அதை ஓரளவு எச்சரிக்கையுடன் அணுகப்படவேண்டும். மனிதனுடைய கற்பனை அதற்கு இடையில் குறுக்கிடுவதற்கு அனுமதித்தல் கூடாது. வேதாகமத்து பகுதி உண்மையாகவே பிற வேதாகமத்துப் பகுதியுடன் ஒப்பிடப்பட வேண்டும். அதைப் படிக்கும் மாணவன் மிகுந்த ஜாக்கிரதையுள்ளவனாக வேதப்பகுதியை பிடுங்கி விடக்கூடாது. அதாவது, அந்தப்பகுதியிலிருந்து தனித்து எடுத்து திரித்துப் புரட்டி, அதன் ஆத்தத்தை அவ்வாறு செய்து அதற்குள் புதைந்திராத ஒன்றை அவர்கள் சொல்லும்படியாகப் பண்ணக்கூடாது.

மேற்கூறப்பட்டவை வேதாகமத்து வாசிப்பை பழக்கமாக நிலை நாட்டிக் கொள்வதற்கான கோட்பாடுகளாக அந்த வாசிப்பானது, ஆத்துமாவை வளப்படுத்தவும் ஒருவரை தேவனுடைய வார்த்தையை திறன் வாய்ந்த விளக்கம் கூறுபவராக செய்வதாகும்.

# நீ தானாகவே எப்படி வேதாகமத்தைப் படிப்பது?

A. வேதாகமத்து படிப்புக்கு ஓர் முகவுரை

## I. <u>வேதாகமத்து படிப்பின் அவசியம்</u>

நம்மில் அநேகருக்கு வேதாகமத்தை நன்றாக அறிந்து கொள்ளுவதற்கும், விளங்கிக் கொள்வதற்கும் வாஞ்சை உண்டு. ஆனால் அது எப்படி என்று தெரியாது, இந்த படிப்பானது, உருவ முன் மாதிரியாகத் திட்டமிடப்பட்டு வழிகாட்டி முறைகளைக் கொடுப்பதற்காகவும், அவற்றால் செயலூக்கமும் பயனள்ளதுமான வேதாகமத்துப் படிப்பிலே ஈடுபடுத்திக் கொள்ளும்படி நமக்கு உதவவும், அதற்குத் தேவையான திறன்பாடுகளை விருத்தி செய்து கொள்வதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தேவன், நம்மை வேதாகமத்தை நன்றாகப் புரிந்து கொள்ளும்படியாக விரும்புகிறார். எனென்றால், அது (வேதாகமமானது) <u>மனிதனுக்கு அவர் தந்த வார்த்தையாகும்.</u>

தேவன் மௌனமாக இருப்பதில்லை. தேவன் தாமே பேசியும் இருக்கிறார். கிறிஸ்தவ உரிமைக் கோட்பாட்டின் மையத்திலே (எபி 1:1-3).

தகவல் தொடர்பு நடைமுறை அவர் எவ்வாறு பேசினார்?
ஜீவ வார்த்தை - இயேசு கிறிஸ்து.
எழுதப்பட்ட வார்த்தை - வேதாகமம் (நாம் இந்தப் படிப்பில் இதையே கருத்தில் கொண்டிருக்கிறோம்)
பேசப்பட்ட வார்த்தை - பிரசங்கிக்கப்பட்டது.

<u>1கொரி 2:7-13.</u> நாம் புரிந்து கொள்ள வேண்டிய கோட்பாடுகள்
<u>வசனம் 10 : வெளிப்பாடு.</u> சாதாரணமான மனுஷ ஞானத்தினால் கண் பார்த்தும், காது கேட்டும் மனிதனால் விளங்கக்கூடாத ஞானத்தை – தேவன் வெளிப்படுத்தி இருக்கிறார்.
<u>வசனம் 12 : தேவஞானம்</u> - அந்த பரிசுத்த ஆவியே நிதானிக்கும் அறிவைக் கொடுக்கிறது.
<u>வசனம் 13 : அகத்தூண்டுதல்</u> - தேவனால் அறிக்கப்பட்டது.
# வார்த்தைகள் - <u>மனிதர்</u> பேசுகிற வார்த்தைகள்
# வார்த்தைகள் - <u>பரிசுத்த ஆவியினால்</u> போதிக்கப்பட்டவை.

தேவனால் சொல்லப்பட்டவைகளை வேதாகமத்தில் நமக்காக பலவேறுபட்ட வடிவங்களில் எழுதி வைக்கப்பட்டுள்ளன. அவை: கதைகள், உவமைகள், செய்யுள், சரித்திரம், தீர்க்கத்தரிசனம் ஆகியவை. இவைகள் எல்லாவற்றிலும் தேவன் தம்மைக் குறித்த சத்தியத்தை நமக்குச் சொல்லும்படியாக வேண்டுகிறார். வேதாகமத்து படிப்பிலே தேவன் எதை சரியாக சொன்னார் என்பதை நாம் நிதானிக்கவிருக்கிறோம்.

## II. வேதாகமத்துப் படிப்பு நம்முடைய ஜீவியத்தை எப்படி (தாக்கம்) பாதிக்கிறது

<u>2தீமோத் 3:16-18</u>

**1. வேதாகமம் நாம் எப்படி ஜீவிக்க வேண்டும் என்பதை நமக்குக் காட்டுகிறது:**
அப்படியென்றால், நாம் எப்படி ஜீவிக்க வேண்டும்?
தேவனுடைய வார்த்தையின் வெளிச்சம் இல்லாவிட்டல் நாம் எப்படி ஜீவிக்க வேண்டும் என்று நமக்குத் தெரியாது.
வேதாகமத்துப் படிப்பு நம்முடைய வாழ்க்கை நடைமுறையை மாற்ற வேண்டும்.

**2. வேதாகமத்துப் படிப்பு நமக்குள் விசுவாசத்தை உண்டாக்க வேண்டும்:**
எபி 11:6 - தேவனுக்குப் பிரியமாயிருக்க விசுவாசம் முக்கியமானதாகும்.
யோவான் 6:63 - தேவனுடைய வசனங்கள் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது.
ரோமர் 10:17 - விசுவாசம் கேள்வியினாலே வரும். (தேவனுடைய வார்த்தையைக் கேட்பதால்)

3. **நமது படிப்பின் முடிவான பலாபலன்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.**
மத்தேயு 28:18-19 - மகா திட்டம்.
2தீமோ 2:2 - மற்றவர்களுடன் பகிர்ந்துக்கொள்.

## III. வேதப்படிப்புக்கான கருவிகள்

### A. வேதாகமம் : கருவியை விட பொருளே முக்கியமானது.

1. **வேதாகமமே நமது சிறப்பான பாடப்புத்தகம்.** மற்ற உதவிகள் இரண்டாவதாக இருக்க வேண்டும். வியாக்கியானவுரைகள், கைப்புத்தகங்கள் ஆனவை வேதாகமத்து இடத்தை எக்காலத்திலும் எடுத்துக் கொள்ளக்கூடாது. இதற்காக, வெளிக்குக் காட்டப்படுகிற இரண்டு மனப்பான்மைகள் உண்டு.
   a. எனக்கு வேண்டியதெல்லாம் வேதாகமம் தான்
   b. வேதாகமத்துக்கு முன்னதாக உதவிகள் முதலிடத்தை எடுத்துக் கொள்கின்றன.

2. **எந்த பதிப்பு?** மூல எபிரேய கிரேக்க பதிப்புகள் மாத்திரமே ஆவியினால் ஏவப்பட்டவை :
   K.J.V - சில பொதுவான தப்பெண்ணங்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டதல்ல.
   L.B - பொழிப்புரையாக்கப்பட்டது. நல்லது ஆனால் படிப்புக்கு ஏற்றதல்ல.
   இரண்டு வித கரிசனைகள் : 1. திட்டவட்டமானது.
   2. வாசிக்கத்தகுந்தது – விளங்கிக் கொள்ளக் கூடாது.
   N.I.V, R.S.V : ஒருவேளை எடுத்துக் கொள்ளலாம்.
   மேலும் N.A.S.B: T.V.V. (நற்செய்தி) N.F.B. பிலிப்பு – விரிவாக்க வேதபுத்தகம் முதலியன.

3. **படிப்புக்குரிய வேதாகமங்கள்**
   தாம்ஸன், டேக்ஸ் முதலியன.

### B. ஒத்து வாக்கிய புத்தகங்கள்

1. **சொல்தொகுதி விளக்கப்பட்டியல்:**
   குருடன்ஸ் ஷென்டி, அடக்கமான விளக்கப்பட்டியல், ஸ்ட்ராங் அல்லது யங்க் குழு அடக்கமான விளக்கப்பட்டியல்.

2. **வேதாகமத்து அகராதி, கலைக்களஞ்சியம் :**
   வேதாகமத்து அகராதி, வார்த்தை விளக்கம், தலைப்புகள் தொன்று தொட்டுவரும் வழக்கங்கள், வேதாகமத்து மரபுகள், வரலாற்று, புவியியல், கலாச்சார அகழ்வராய்ச்சி சார்ந்த தகவல்கள், வேதாகமத்து உள்ளுறை நூல்கள் ஒவ்வொன்றிற்குமான பின்புறக் காட்சிகள், முக்கியமான வேதாகமத்து கதாபாத்திரங்களின் வாழ்க்கை வரலாறுகள்.

3. **வேதாகமத்து வியாக்கியானங்கள் :**
   வேதாகமத்து ஒரு குறிப்பிட்ட புத்தகத்தைப் பற்றிய பகுதிக்குரிய விளக்கவுரைகள் அடங்கிய தொகுப்பு, வார்த்தைகளைப் பற்றிய பகுத்தறிதல், பின்புறக்காட்சி வியாக்கியானமும், விளக்கங்களும், புதிய வேதாகமத்து வியாக்கியானங்கள் டின்டேல், பார்க்குளாரி. (குறிப்புகள்).

4. **வேதாகமத்து கைப்புத்தகம் :**
   ஒரு குறுகிய வடிவிலான கலைக்களஞ்சிய விளக்கவுரை தொகுப்பு. பின்புற காட்சி குறிப்புகள், விளக்கவுரை, தேசபடம், மாதிரி படஅட்டைகள், அகழ்வாராய்ச்சி குறிப்புகள். உறாலி, உங்கள் வேதாகமத்து கைப்புத்தகம்.

5. **வேதாகமத்து தேசப்படம் :**
   வேதாகமத்து சம்பவங்களுக்கு புவியியல் பின்புறக் காட்சி விவரக்குறிப்புகள் தருவதில் முக்கியமானவை.

6. **வார்த்தை பற்றிய படிப்புப் புத்தகம் :**
   வைன் என்பவரது தெளிபொருள் விளக்க அகராதி – புதிய ஏற்பாட்டு வார்த்தைகள். உயஸ்ட், வின்சென்ட், இராபர்ட்சன் ஆகியோரின் படிப்புப் புத்தகங்களும்.

## IV.வேதாகமத்து படிப்பு நோக்க மனப்பான்மை

### A. தவறான மனப்பான்மைகள்

1. எதிர்மறையான மனப்பான்மைகள் :
   நான் எதையுமே புரிந்து கொள்ளமுடியாது. ஏன் வேதாகமத்தைப் படிக்க முயற்சி செய்ய வேண்டும்.
2. விமர்சன மனப்பான்மை :
   நான் வேதாகமத்திலுள்ளவை ஒவ்வொன்றையுமே நம்புவதில்லை.
   - அநேக விதமான முரண்பாடுகள்.
   - வேதாகமத்தைப் படிப்பவர்கள் அதைக் கைக்கொள்ளுவதில்லை.
3. சோம்பலான மனப்பான்மை :
   நான் முயற்சி செய்தால் புரிந்து கொள்ளக்கூடும். ஆனால் நான் முயற்சிக்க விரும்புவதில்லை.

### B. ஆரோக்கியமான மனப்பான்மை

1. நேர்முகமானவை :
   பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையைப் புரிந்து கொள்வதற்கு உதவி செய்வார். நான் விளங்கிக் கொள்வதை உபயோகிப்பதால் தேவன் எனக்கு மேலும் அதிகமானவற்றை வெளிப்படுத்துவார்.
2. பெற்றுக்கொள்ள ஆயத்தம் :
   திறந்த சிந்தனையும் இருதயமும் இருந்தால் தேவன் சொல்வதைப் பெற்றுக் கொள்ளலாம். நான் கேட்க விரும்புவதை அதற்குள் படித்து அறியவில்லைை.
3. எதிர்பார்ப்புகளுடன் :
   தேவன் தம்முடைய வார்த்தையின் மூலமாக என்னுடன் பேச விரும்புகிறார். நான் நேர்மையாக இருந்தால் அவன் என்னுடன் பேசுவதற்கு ஏதாவது கொஞ்சம் வைத்திருப்பார்.
4. ஒழுங்குமுறைப்படி :
   வேதாகமத்து படிப்பினால் நான் அதிகம் எதிர்பார்க்க முடியாது. என்னை ஒழுங்காக்கிக் கொள்ளவும், ஊழியம் செய்யவும் ஆயத்தமாக இருந்தாலன்றி நான் எதிர்பார்க்க முடியாது.

## V. பரிசுத்த ஆவியின் முக்கியமான பங்கு

1கொரி 2:12-13; பரிசுத்த ஆவியானவரே வேதத்தை ஆக்கியோனாக இருப்பதால், அவரே நமக்கு வியாக்கியானம் செய்பவராகக் கூட இருக்க வேண்டும். அவருடைய வழிகாட்டுதலும், உதவியும் இல்லாவிட்டால் நமது வேதாகமத்து படிப்பு எந்தவிதமான பிரயோஜனமும் படாது.

**பரிசுத்த ஆவியின் கிரியைகளின் ஆறு அம்சங்கள்** : (யோவான் 14:26; 16:13-15)

1. உதவி/ஆலோசனை
2. படிப்பிக்கிறது.
3. ஞாபகப்படுத்துகிறது
4. வழிக்காட்டுகிறது
5. வருங்காலத்தைக் காட்டுகிறது
6. வெளிப்படுத்துகிறது.'.தெரிவிக்கிறது.

1கொரி 2:12

1. தேவனிடமிருந்து வந்தது யார்?
2. யார் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள்?
3. அவர் ஏன் நம்மிடம் வந்தார்?

ஆகவே, தேவனுடைய வார்த்தையை விளங்கிக் கொள்ள வேண்டுமென்றால், பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும். மேலும் அந்த பரிசுத்த ஆவி தேவனுடைய பிள்ளைகளுக்கு மாத்திரமே அருளப்பட்டிருக்கிறது.

## B.வேதாகமத்தைப் புரிந்துக் கொள்ளுதல்

### 1. வேதாகமத்து படிப்புக்கான வழிமுறைகளும் அணுகும் முறைகளும்

#### A. வேதாகமத்தைப் படிக்கும் வெவ்வேறான முறைகள்

1. தியானிக்கும் முறை :

வேதாகமத்திலிருந்து ஒரு சிறிய பகுதியைத் தெரிந்தெடுத்துக் கொண்டு அதன் மீது ஜெபத்துடன் நிறைந்த தியாகம் செய்வதால் பரிசுத்த ஆவியானவர் அந்த சத்தியத்தை உன் ஜீவியத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு வழியைக் காண்பிக்கும் வரைக்கும் அவ்வாறு நிலைத்திருக்க வேண்டும்.

2. புத்தகப்படிப்பு :

வேதத்தில் ஒரு புத்தகத்தை முழுவதுமாக பலதடவைகள் படித்து அந்த புத்தகம் முழுவதைப் பற்றியும் ஒரு ஆழ்ந்த அளவீடு செய்ய வேண்டும். அதைப் பலதரம் படித்து பொதுவான அதன் உள்ளடங்கிய விஷயங்கள் பற்றி மேலோட்டமான பார்வை எடுத்துக் கொள்க. வேதாகமத்து ஒத்து வாக்கிய புத்தகங்களை பயன்படுத்தி, அதன் பின்புறக் காட்சியைப் படித்து அறியவும். பிறகு ஒவ்வொரு அதிகாரத்தையும், வசனத்தையும் அதற்கான முழு புத்தகத்தின் விசேஷமான ஆய்வுபொருள் செய்தியுடன் ஒப்பிட்டு ஆழமான உள்பார்வை செய்து கொள்ளவும்.

3. தலைப்புப்பொருள் / ஆய்வுபொருள் :

ஒரு குறிப்பிட்ட தலைப்பு அல்லது ஆய்வு பொருளுக்கு சம்பந்தமுடைய எல்லா வசனப் பகுதிகள் / அதிகாரங்கள் / வசனங்கள் ஆகியவற்றைக் கண்டு பிடித்துக் கொள்ளவும். பின்னர் அவைகளை ஒரு வகையான புறவழிக் கோட்டுக் குறிப்புகளாக ஒருங்கிணைத்துக் கொள்ளலாம்.

4. வாழ்க்கை வரலாறு சார்ந்த :

ஒரு வேதாகமத்து கதாபாத்திரத்தைத் தெரிந்து கொண்டு அந்த நபரைக் குறித்த எல்லா வசனபகுதிகளையும் பரிசீலனை செய்து அவருடைய ஒழுக்கம் ஆகிய இரண்டையும் பற்றிப் படித்து அதிலிருந்து படிப்பினைகளை வருவித்துக் கொண்டு அவைகளை ஒருவருடைய ஜீவியத்தில் நடைமுறைப் படுத்திக் கொள்ளலாம்.

#### B. வேதாகமத்து படிப்புக்கான அடிப்படையான அணுகுமுறைகள்

வேதாகமத்து படிப்புக்கான முக்கியமான முறைகளைப் பார்த்த பின்னர் நாம் இப்பொழுது திரும்பி அதற்காகக் கூடிய இரண்டு அணுகு முறைகளை வேதத்து படிப்பில் கருத்தாராய்வோம். 1. ஊகித்து உணரும் முறை, 2. பொதுக் கொள்கை வடிவமைத்தல்.

1. ஊகித்து உணரும் முறை :

இந்த நடைமுறையில் பொது விதி காணுதலில் ஆரம்பித்து உங்கள் சொற்கூற்றை ஆதாரப்படுத்த வேதாகமத்தை பயன்படுத்துக.

i. அது உதவக் கூடியது ஏனென்றால், அது சகல விஷயத் தகவல்களையும், உள் பார்வைகளையும் வேதாகமம் முழுவதிலிலும் இருந்து ஒரே ஒரு வசனப் பகுதியை மட்டும் அல்ல, யாவற்றையும் ஒருங்கிணைக்கிறது. தேவனுடைய வார்த்தைக்கு சமநிலையை கொடுப்போமானால், இது பாதுகாக்கப்படுவதாகும்.

ii. இதற்கு ஒரு அகன்ற ஆழமாக வேதகமத்தைப் புரிந்து கொள்ளுதல் தேவையாகிறது.

iii. இது தலைப்புப் பற்றி அல்லது தத்துவ கோட்பாட்டு படிப்புகளுக்கு நிலைமைக்குத் தக்கவாறு (ஏன் வாழ்க்கை வரலாற்றுக்குங் கூட) மாற்றி அமைத்துக் கொள்ளக் கூடியதாகும். விசேஷமாக வேதாகமத்து தத்துவ கோட்பாடுகளை ஆரம்பகால விசுவாசிகளுக்கு போதிக்க ஏற்றதாகும். ஏனென்றால், அந்த ஆரம்பகால விசுவாசிகளுக்ககு வேதாகமத்தைப் பற்றி கொஞ்சமோ அல்லது எந்த விதமாக அறிவும் பெற்றிருக்க முடியாது. ஆகவே தான் அவர்களுக்கு கிறிஸ்தவ மார்க்கத்தின் அடிப்படைகளைப் பற்றி சொல்லப்பட்டு இருக்க வேண்டும்.

2. பொதுக் கொகை வடிவமைத்தல் :

இந்த நடைமுறையில் வேதாகமத்தை அதன் பகுதிகளையும், முதலாவதாக, நீ நீயாகவே படித்துணர்ந்து ஒரு பொதுக் கருத்தை உண்டாக்குவதற்கு முன்னர் அவ்வாறு செய்து கொள்வது ஏற்றதாகும்.

i. இந்த பொதுக்கொள்கை உருவமைத்தலான வேதாகமத்து படிப்பில் நாம் ஒரு குறிப்பிட்ட விஷயத்திலிருந்து ஒரு பொதுவான முடிவான கருத்துக்கு நகர்ந்து போகிறோம்.

ii. நாம் அதற்குள் முன்னால் தீர்மானிக்கப்பட்ட குறிக்கோள்களோ அல்லது முடிவுகளோ இல்லாமல், திறந்த மனதுடனே போகிறோம்.

iii. அது ஒரு அகன்ற ஆழமான புரிந்து கொள்ளுதலை பெற்றுக் கொள்ள உதவிசெய்கிறது. இதை சதாரணமான விசுவாசிகள் செய்து கொள்ளலாம். இது பரிசுத்த ஆவியானவரிடமிருந்து நேரடியாக கற்றுக் கொள்வதற்காக சுதந்திரத்தைத் தருகிறது.

iv. இது குறிக்கோள்களை உடையதாய் வேதாகமத்தை மையமாகக் கொண்டுள்ளது. இங்கே நீ வேதத்தை வசனப்பகுதியைக் கொண்டு வியாக்கியானம் செய்யுமாறு கட்டாயமாக ஆக்கப்படுகிறாய்.

## II. ஒழுங்குமுறைப் படுத்தப்பட்ட வேதாகமத்து படிப்புக்கு அடிப்படையான படிகள்

உன்னுடைய வேதாகமப் படிப்பிலே நீ ஒரு ஒழுங்குமுறை படுத்தப்பட்ட மாதிரியை உருவமைத்துக் கொள்ள வேண்டுமானால், அதற்காக ஒரு திட்டவட்டமான வழிமுறை இருக்கிறது. அதற்காக பின்வரும் அடிகளை எடுத்துக் கொள்வது சிறந்ததாகும். இது மாடிக்குச் செல்லும் படிக்கட்டுகளை அர்த்தப்படுவதல்ல. ஆனல், ஒரு நடைமுறையாக வேதாகமத்து சத்தியங்களை வெளிப்படுத்துவதற்கு பயன்படுவதாகும். சில நேரங்களில் இந்த படிகளில் சில ஒன்றுக்கு நேர் ஒன்றாக மேலமைந்து கொள்ளும். ஆனால், அந்த ஒழுங்குமுறையானது, இன்றும் சரியானதுதான்!

<u>படி 1 : கவனித்துப்பார்.</u>

சரி நுட்பமாகவே அதன் ஆக்கியோன் என்ன எழுதியிருக்கிறார் என்பதைப் பார். இதுவே, வேதாகமத்தில் தன்னைப் பற்றித் தானே பேசுவதற்கான முதலாவதானதும், முக்கியமானதுமான படியாகும். இது நேர்மையும் நுண்ணறிவின் உத்தமம் ஆகும். உன்னுடைய கவனித்துப் பார்த்தல் எவ்வளவு சரியாகவும் எச்சரிக்கையுடன் செயல்படுகிறதோ, அதற்கு அதிகமாக சரியாகவும் அர்த்தமுள்ளதாகவும் உன்னுடைய வியாக்கியானமும் நடைமுறை பொறுத்தமும் அமையும்.

<u>படி 2: வியாக்கியானம் செய்.</u>

அந்த ஆக்கியோன் எழுதின பிரகாரம் கருத்துக் குறிக்கோளுடன், அந்த ஆக்கியோன் உபயோகிக்கும் வார்த்தைகளால் எதை உண்மையாகவே அர்த்தமாகக் கருதுகிறார் என்பதை தீர்மானித்துக் கொள்ள முயற்சி செய்து கொள்க. அவர் எதைப் பார்க்கிறார், உணர்கிறார், யோசிக்கிறார், அனுபவிக்கிறார் என்பதைப் பார்க்கவும். உன்னை அவருடைய சந்தர்ப்ப ஸ்தானத்தில் வைத்துப் பார். மக்கள், காலம், சம்பவங்கள், இடம் குறிக்கோள்கள் இவற்றிற்கான உறவுத் தொடர்புகளை கட்டுப்பாடு செய்து கொள்ளவும்.

<u>படி 3: சாராம்ச சுருக்கம் .</u>

சுருக்கமாக அந்த வசன பகுதியில் சொல்லப்படுகிற முக்கியமான எண்ணங்களின் சுருக்கம். முதலாவதாக தனித்தனியான விஷயங்களை சாராம்சப்படுத்தி, பின் அதை முக்கியமான வசனப்பகுதியின் செய்தியோடு தொடர்பு படுத்துக. அமைப்பின் உறவு தொடர்புகளை வசனங்களுக்கு, பாராக்களுக்கு, அதிகாரங்களுக்கு மேலும், அந்த புத்தகத்திற்கும் இடையே உள்ள உறவுத் தொடர்புகளைக் கட்டுப்படுத்துக. அந்த பகுதிகளை முழுமையுடன் உறவுபடுத்திக் காண்க.

படி 4: மதிப்பீடு செய்க.

அந்த ஆக்கியோன் எழுதியதை நியாயமாக மதிப்பீட செய்க. அந்த ஆக்கியோன் என்ன எழுதியிருக்கிறார் என்பது பற்றியும், அவர் என்ன சொல்ல விருப்ப நோக்கப்படுகிறார் என்பதைப் பற்றி உனக்கு தெளிவான கருத்து ஏற்படும் வரைக்கும் நீ நேர்மையாக அதன் மெய்மையைப் பற்றித் தீர்ப்புச் செய்யக்கூடுமா? அந்த செய்தி இன்றைய நாட்களுக்கு எப்படி சரியானதாக இருக்கிறது? அதற்கான சத்தியங்கள் தற்காலத்து சூழ்நிலைமைகளில் நடைமுறைப் படுத்தக் கூடுமா? அந்த வசனப்பகுதி யாருக்காக பேசுகிறது?

படி 5: சம்பந்தப்படுத்துக. தனிப்பட்ட

சொந்த வழியில் வெளிப்படுத்தப்பட்ட செய்தியை, நீ அதற்கென்று போதுமான கவனித்தறிதலைச் செய்து கொண்டதற்கு முன்னரே அந்த செய்தியை பொருந்தப் பார்ப்பதற்கான அபாயத்தையும், சோதனையையும் கட்டுபடுத்திக் கொள்ள வேண்டும்.

அதை நடைமுறைப் படுத்துவது வளரும் ஒரு நடைமுறையாகும். அது படிகள் 1-4க்குள்ளாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நடைமுறைப்படுத்தலானது, அந்த வசனப்பகுதியில் மேல், ஒன்றுக்கு மேல் ஒன்றாக சுமத்தப்படக் கூடாது. அது இயற்கையான சுபாவப்படி வசனப் பகுதியிலிருந்து எழுந்து கிளம்பி வருவதாகும். ஆகவே, நடைமுறைப் பொருத்தமானது, கவனித்தறிந்த பிறகும் மதிப்பீடு செய்யப்பட்ட பிறகும், நேரிட வேண்டியதாகும்.

படி 6: ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக்கு :

குறிப்பாக உள்ள வேதாகமத்து சத்தியங்களுடன் வேதாகமத்து பகுதிகளை ஒன்றுக் கொன்று தொடர்புடைய தாக்கவும். ஒன்றுக்கொன்று தொடர்புடைய தாக்குதலாவது, வேதாகமத்து சத்தியங்களை சங்கமமாகச் சேர்வதாகும். பிற ஒரே போன்ற பகுதிகளோடு ஒப்பிடுதலாகும். அதாவது, உன்னுடைய கருத்துரைகளை பிறகுறிப்புரைப் புத்தகங்களோடு மதிப்புரை செய்வதாகும். அது பொதுகொள்கை வடிவமைத்தல் படிப்பிலிருந்து ஊகித்து உணரும் வேதாகமத்து படிப்புக்கு பெயர்ந்து செல்வதாகும். ஆகிலும் இது பொதுகொள்கை வடிவமைத்தல் விதியைப் பின்பற்றுகிறது.

## III. வியாக்கியானம் பண்ணுதலுக்கான குறிக்கோள்கள்

1. **உனக்கு போதனை செய்யும் ஆசிரியரைக் கவனித்து கேட்பாயாக:**
   பரிசுத்த ஆவியானவரை (யோவான் 14:26) கர்த்தர் நமக்கு போதிக்கும் மனித ஆசிரியர்களைக் கொடுத்திருக்கிறார். (எபேசியர் 4:11). ஆனால் தேவன் தாமே நமக்கு போதகராக இருக்க விரும்புகிறார். மனித போதகர்கள் பரிசுத்த ஆவியானவர்களுக்கு பதிலான போதகர்கள் அல்ல.

2. **எழுத்துப் பிரகாரம் வியாக்கியானம் செய்க :**
   சாதாரணமாக நேரடியான நேர்முக எழுத்துக்களின் கருத்துக்களையே ஏற்றுக் கொள்ள வேண்டும். விதிவிலக்குகளாவது :- உவமைகள், உருவகங்கள் முதலியன (உம்) இயேசு சொன்னார், "நானே மெய்யான திராட்சச்செடி" "வெளிப்படுத்துதலின் மிருகம்".

3. **அந்த சந்தர்ப்ப பகுதியை கவனிக்கவும் :**
   இதுவே வேதாகமத்து வியாக்கியானத்துக்கான முக்கியமானதோர் விதியாகும்.
   i. அதனுடைய உடனடியான அமைப்பை
   ii. அந்த புத்தகத்தின் அல்லது அதிகாரத்தின் பெரிய சந்தர்ப்பத்தை
   iii. வேதாகமத்து செய்தியின் விளக்க வெளிச்சத்தில் தேவன் ஒரே புத்தகத்தை எழுதினார். 66 புத்தகங்களை அல்ல.

4. **வரலாற்று கலாச்சார அமைப்பில் உறவாக :**
   21ம் நூற்றாண்டு கலாச்சாரத்தின் முறைப்படியே, நாம் வாசிக்கும் ஒவ்வொன்றையும் வியாக்கியானம் செய்யும் போக்கு காணப்படுகிறது. முதலாவதாக, நாம் வேதாகமத்தை மூலகாரணமானதும், வரலாற்று சார்புடையதும், கலாச்சார அமைப்பில் அதை தொடர்பாக்கிக் கொண்டு பின்னர் இன்றைய நாட்களுக்கு ஏற்ப படிப்பினைகளைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

5. **இலக்கிய வடிவமைப்பை ஆலோசனை செய்க**

பல விதமான இலக்கிய வடிவமைப்புகளுக்கிடையே அவற்றை வேறுபடுத்த வேண்டியது அவசியமாகும். அவை வரலாறு, தீர்க்கதரிசனம், கதையாக கூறுதல், செய்யுள் சொற்பொழிவு, ஆலோசனை, கட்டளை, போதனை, எடுத்துக்காட்டு, உவமை, பழமொழிகள், அடையாளங்கள் ஆகியவை. இவைகள் அனைத்தும் வெவ்வேறு வழியில் வியாக்கியானம் செய்யப்பட வேண்டும்.

6. **வேதத்தை வேதத்தோடு ஒப்பிட்டுப்பார்**

ஒரு ஒத்து வாக்கிய பகுதியை அடிப்படையாகக் கொண்டு விசேஷமாக தத்துவ போதனைகளைக் குறித்து எந்த விதமான முடிவையும் எப்பொழுதுமே எடுத்துவிட கூடாது. அதனால் ஒரு வேதபகுதியை மற்றொரு வேதாகமப் பகுதியோடு ஒப்பிட்டு பார்க்கவும். ஆனால் ஒரு வேதப்பகுதியை மற்றொரு வேதப் பகுதியோடு ஒப்பிடட்டும். ஒரு வேதாகமப் பகுதியானது, மற்றொரு வேதாகமப் பகுதியை வியாக்கியானம் செய்யட்டும். புதிய ஏற்பாட்டில் ஒத்து வாக்கிய மேற்கோளாகக் கூறப்படும் பழைய ஏற்பாட்டு வேதாகமப் பகுதியை சரியானதா என்று பார்க்க வேண்டும். ஒரு வேதாகமப் பகுதி மற்றொரு வேதாகமப் பகுதியை விளக்க ஒளி செய்யட்டும். மேலும் மிகுந்த நேரடியானதும் தெளிவான சொற்கூற்றுகள் அதிகமான மறை பொருள் பகுதிகளை விளக்கிக் கூறட்டும்.

7. **தேவன் மனிதருடைய வாய்மொழிச் சொற்களாலே பேசுகிறார் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள் :**

தேவன் தாமே தமது செய்தி தகவல் தொடர்பை மனிதனுடைய மட்டத்திற்குக் கீழே கொண்டு வந்திருக்கிறார் என்பதை நாம் மனதில் வைத்திருந்தால் வியாக்கியானம் செய்வதில் அநேக பிரச்சனைகளை நாம் தவிர்த்து விடலாம். வேதாகமம் ஆனது மனித பண்புகளை இறைவனுக்கு சொல்வதாகும். அதாவது, தேவனுடைய செயல்பாடுகளை மனிதனுக்கு ஏற்றிக் கூறுவதாகும். (உம்) யாத் 32:14 “தேவன் (மனஸ்தாபப்பட்டார்) பரிதாபப்பட்டார்” யாத் 3:8 “தேவன் கீழே இறங்கி வந்தார்”. 2நாளா 16:9 “கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது”

8. **மூலபாஷைகளை உபயோகிக்கவும் :**

மூலபாஷைகளில் மூலபகுதிகளை படித்தும், அதன் அர்த்தங்களையும், இலக்கணத்தையும் நாம் அறிந்து கொள்ளும் பொழுது, வியாக்கியானம் செய்வதில் உள்ள அநேக கஷ்டங்கள் தீர்க்கப்பட்டுவிடும். Exegesis – என்பது ஒன்றிலிருந்து வெளியே கிளம்பி எழுந்து அதாவது, அதன் அர்த்தத்தை வெளியில் சொல்லவும் என்று பொருள் படும். மேலும் கிரேக்க எபிரேய மொழிகளில் தேர்ச்சி பெறாத நமக்குங்கூட ஆங்கிலத்தில் உதவக்கூடிய பல கருவிகள் கிடைக்கப் பெற இருக்கின்றன.

a. கிரேக்கம் : வைன்ஸ் புதிய ஏற்பாட்டு வார்த்தைகளுக்கு ஆன விளக்க அகராதி
   i. K.J.V. ஜேம்ஸ் அரசர் பதிப்பை உபயோகிக்கிறது.
   ii. சில சமயங்களில் ஒரு பாரா அடையாளக்குறிப்பை உள்ள சொருகுகிறார். ( ) இதற்கு அர்த்தமாவது புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தையின் மற்றொரு உபயோக சம்பவத்தை மேற்கோள் காட்டுகிறார்” இதற்கு ஒத்துவாக்கியத்தைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை.

b. எபிரேயம் : “ஸ்ராங்” என்ற ஆசிரியரது முற்று பெற்ற ஒத்து வாக்கிய நூல்.

## IV. வியாக்கியானத்தில் உவமேயப் மொழிப் பிரயோகம்.

உவமேய மொழிப் பிரயோகத்தில் ஒரு பொருளை மற்றொரு இதற்கு தனிப்பட்ட விசேஷமான திறமையை வியாக்கியானம் செய்வதற்கு பெற்றிருக்க வேண்டும்!

**இதற்கு நான்கு இரகங்கள் உண்டு :**

i. உவமைகள். iii. வகைகளும், அடையாளங்களும்
ii. தீர்க்கதரிசனம். iv. செய்யுள் (அ) கவிதை

## A. உவமைகள் :

1. சொல்பொருள் விளக்கம்
   - இயற்கையில் இருந்தோ அல்லது பொதுவான ஜீவிய சந்தர்ப்ப சூழ்நிலைமைகளில் இருந்தோ எடுக்கப்பட்ட சிறிய கதை.
   - இது ஒரு நல்லொழுக்க படிப்பினையையும், ஒரு மார்க்க சம்பந்தமான பாடமும்.
   - இயேசு உவமைகளை அதிகமாக உபயோகித்தார். இவைகள் சுவிசேஷங்களில் அதிகமாகக் காணப்படுகிறன.

2. நோக்கம் : இரண்டு வழியானது.
   a. அதை பெற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு போதிக்கும் படியாக.
   b. இதற்காக பிரதிக்கிரியை செய்யாதவர்களிடமிருந்து சத்தியததை மூடி மறைக்கவும் மத் 13:10

3. ஞாபகத்தில் வைக்க வேண்டிய விஷயங்கள்
   a. அவைகள் இந்த உலகத்து நடைமுறையின் மூலமாகவே எப்பொழுதும் எடுத்துக் காட்டுகின்றன.
   b. இதில் எப்பொழுதுமே ஆவிக்குரிய சத்தியம் அடங்கியுள்ளது.
   c. ஒப்புமை : பூமிக்குரியதானதும், ஆவிக்குரியதுமான சில காரியங்களுக்கும் இடையே உள்ள ஒப்புமைத் தன்மை.
   d. எடுத்துக்காட்டும், பாடமும் இரண்டுமே மிகச் சரியாக வியாக்கியானம் செய்யப்பட வேண்டும். வழக்கமாக ஒவ்வொரு உவமையிலும் உள்ள ஒரே ஒரு மத்திய கருத்தைக் குறித்து.

4. உவமைகளை விளங்கிக் கொள்ளுதல்
   i. சுவிசேஷங்களில் காணப்படும் உவமைகள் கிறிஸ்துவையும் அவரது இராஜ்ஜியத்தையும் தேடுங்கள்
   ii. உவமைகளை அவை சம்பவிக்கும், இடம், காலம் ஆகியவற்றின் தொடர்பிலே அவைகள் எங்கிருந்து வருகின்றன என்பதை நிதானிக்க வேண்டும். வேதாகமத்தைப் பற்றிய படிப்பு புத்தகங்கள்.
   iii. அந்த உவமையில் "இயேசுவை தேடிப்பார்" என்ற சொந்த விளக்கத்தை (உம்) விதைக்கிறவனுடைய உவமை (லூக்கா 8:4-9).
   iv. அந்த உவமையில் நீ காண்பதாக இருக்கும் போதனையை வேதாகமத்து முழுவதுமான சமயத்து சமயத்துவத்தோடு ஒப்பிடவும். இந்த உவமைகளில் நீ தத்துவ கொள்கைகளை கண்டு கொள்ளக்கூடும். ஆனால் நீ அதை உறுதிப்படுத்த மற்ற வேதபகுதிகளோடு ஒப்பிடப்பட வேண்டும்.

## B. தீர்க்க தரிசனம்

1. சொல்பொருள் விளக்கம்
   - தெய்வீக சித்தம், வல்லமை ஆகியவற்றின் ஏவப்பட்ட பிரகடனம்.
   - வகைகள் : a. முன்னறிவித்தல், b. அடுத்து வருங்காலம் முன் உரைத்தல்

2. பிரச்சனைகள்

   தீர்க்கத்தரிசன பகுதிகளை எழுத்து பிரகாரம் வியக்கியானம் செய்ய முடியுமா? இல்லவே இல்லை. ஏனென்றால், தீர்க்கதரிசன முன்னறிவித்தலாவது, வருங்கால சம்பவங்களை உவமான மொழியில் கூறுவதாகும். ஆதலால் அதற்கு அதிகமான படிப்பு தேவைப்படுகிறது. அது உவமான மொழியாக இருந்தபொழுது, அதற்கு அதிகமான படிப்பு அவசியமாகிறது. அது வேதத்திலே நிறைவேற்றப் பட்டிருக்குமானால், அதனால் பிரச்சனை கிடையாது (அப் 2:25-33, சங் 16:8-11).

   நிறை வேறப்படாத தீர்க்கதரிசனம் கடினமானது, எனென்றால்,
   i. அது அடிக்கடி தரிசனங்கள் மூலமாக பெறப்படுவதால்,
   ii. அதீதமான விஷயக்கூறுகள் இருக்கின்றன – அதன் காரணமாக அதிகமான விசேஷித்த படிப்பு தேவையாகிறது.

iii. அதன் காலம் என்ற மூலக்காரணி வழக்கமாக தெளிவாக இருப்பதில்லை.
(உம்) லூக்கா 4:16-21, ஏசாயா 61:1-2
ஏசாயா 61:2ல் உள்ள 2000 ஆண்டுகள் இடைவெளியை லூக்கா 4ம் அதிகாரத்தில் நியாயத்தீர்ப்பு என்று விட்டு விடுகிறார்.
1பேதுரு 1:11ல் கூறுகிறபடியாக, எல்லா தீர்க்கதரிசனமும் இயேசுவின் ஆவியானது, நமக்கு கொடுக்கும் சாடைக் குறிப்புகளாகவோ மேலும் துப்பறியும் குறிப்புகளாக பார்த்து அறியப்பட்டு ஒரு வகையான நடைமுறையில் போய் கொண்டிருக்கும் நிகழ்ச்சி நிரலில் நாம் போய் கொண்டிருப்பதை அறியும் படியாக உதவி செய்து அந்த நிகழ்ச்சிகளானது இன்றும், வருங்காலத்தில் இந்த ஜீவியத்திற்கு அப்பாலும் கடந்து செல்லும்போது போய் கொண்டிருக்கும் என்பதை உணர்த்துவதாகும். சில சமயங்களில் வியாக்கியானம் செய்வதற்குக் கடினமாக இருந்தாலும் தீர்க்கதரிசனமாவது ஊக்குவித்தலுக்கும், விசுவாசத்திற்கும் ஓர் ஊற்றாக விசுவாசிக்கு அமைந்து விடுகிறது.

## C. வகைகளும், அடையாளங்களும் :

1. சொல்பொருள் விளக்கம்

a. வகைகள் : பழைய ஏற்பாட்டில் இருக்கும் ஒரு நபரோ அல்லது ஒரு பொருளோ, பழைய ஏற்பாட்டில் இருந்து, புதிய ஏற்பாட்டில் காணப்படும் மற்றொரு பொருளையோ முன்னிழலோட்டமாக அறிவிப்பதாகும்.

b. ஏதோ ஒன்று மற்றும் ஏதோ ஒன்றை ஏதோ ஓர் வழியில் படமாகக் காட்டுவதாகும். ஒரு வகையானது, சில சமயங்களில் அடையாளங்கள் என்று அழைக்கப்படும். வகைகள் என்பது "தேவனுடைய மறுத்துக் கூறக் கூடாத பாடங்களாகும்". ஒரு பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனம் புதிய ஏற்பாட்டிற்காக என்பது வருமாறு,
(உதாரணம்) மிருக ஜீவன்களை பலி செலுத்துதல் (பழைய ஏற்பாட்டு) கிறிஸ்துவின் பூரணமான ஜீவாதார பலிக்கு உதாரணமாகக் கூறப்படுகிறது.

2. அந்த வகைக்குரியதான அம்சங்கள்

i. அது முன் நிழலோட்டமாகக் காட்டும் காரியத்திற்கு மெய்யான ஒற்றுமை உடையதாய் இருக்க வேண்டும்.

ii. இந்த வகைகள் வேதத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சுட்டிக் காட்டப் படவேண்டும்.

நேரடியாக : எபி 3:7, 4:11 – தேவனுடைய ஜனங்களுக்கான இளைப்பாறுதல்.
மறைமுகமாக : எபி. அதி 8,9 (அதிகாரங்கள்) ஆசரிப்புக் கூடாரத்தின் ஒவ்வொரு மறைபொருளும் விளக்கப்படவில்லை.

iii. அந்த வகைகளை அவைகள் முன்னோட்ட நிழலாக அறிவிக்கும் ஒவ்வொரு விவரத்திற்கும் பொறுத்தம் என்பதை கட்டாயமாக ஆக்க முடியாது.
(உம்) பழைய ஏற்பாட்டு கிறிஸ்துவை போன்ற வகைகள். (மோசே, யோசுவா) அவர்கள் ஒவ்வொரு வழியிலும் இயேசுவைப் போலவே இருக்கவில்லை.

3. வகைகளின் உபயோகங்கள்

| | | |
|---|---|---|
| ஜனங்கள் | - | மோசே, தாவீது, மெல்கிசதேக். |
| இடங்கள் | - | வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம். |
| சம்பவங்கள் | - | பஸ்கா பண்டிகை. |
| கடமைகள் | - | மகா பிரதான ஆசாரியனாக. |
| மறுத்துக் கூறப்படாத படங்கள் | - | ஆசரிப்புக் கூடாரம். |

4. அடையாளங்கள் : சரியாக "அதற்கு பதிலாக நிற்கிறது" "மேலோட்டமான நிழலாட்டத்துக்கல்ல" யூதா கோத்திரத்து சிங்கம் (வெளி 5:5) சாத்தான் (1பேதுரு 5:8), தேவ ஆட்டுக்குட்டி (யோவான் 1:29).

**D.** **செய்யுள் அல்லது காவியம் :**

1. எங்கே காணப்படுகிறது

வேதாகமத்தில் ஆதியாகமத்தில் இருந்து வெளிப்படுத்துதல் வரைக்கும் முழுவதிலும் சிதறிக் கிடக்கின்றது. (உம்) யாத் 15: மோசே, மிரியாம் என்பவர்களின் பாட்டு.

லூக்கா 1. மரியாளின் துதியின் பாட்டு, சகரியாவின் தீர்க்கத்தரிசனம், சங்கீதம் முதலியன.

2. எபிரேய செய்யுட்களின் அம்சங்கள்

a. அவைகள் ஒலி இணக்கம் உடையனவல்ல. அது எண்ணக் கோலங்களைச் சுற்றிலுமே கட்டப்படுகிறது.

b. சமன்பாடுகள் : ஒவ்வொரு இரண்டு வரிகளுக்கும் அல்லது செய்யுட் பத்திகளுக்கு இடையே உள்ள உறவுத்தொடர்பு

i. (ஒரே பொருள் உடையதன்மை) செய்யுளின் இரண்டாவது அடியானது, முதல் அடியில் கூறப்படும் சத்தியத்தை உவமானமாகவோ வார்த்தைகளாகக் கூறுவதாகும் (உதாரணம் - சங் 24:1)

ii. நேர்மாறு எதிர்ப்பு (அ) எதிரிடை : இரண்டாவது அடியானது, முதல் அடியிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதாகும். (உம்) சங் 1:6

iii. கூட்டிணைப்பு சார்ந்த : (கட்டப்படும்) இரண்டாவது அடி முதல் அடிக்குக் கூடுதலாக கருத்து சேர்க்கும். (உம்) சங் 19:71. எபிரேய கவிதையில் உணர்ச்சிகள், எண்ணங்கள், மனக்கிளர்ச்சிகள் ஆகியவை மேலோங்கி நிற்கும் வழக்கமாக அவைகள் முதல் இடத்தில் “நான்” என்று தனிப்பட்ட அனுபவத்தை பொருந்தியிருக்கிறது.

## V. வேதாகமத்து படிப்பின் இலக்கு

நமது வேதாகமத்து படிப்பின் இலக்கைக் குறித்த தெளிவான குறிக்கோள் இருக்க வேண்டும். (2தீமோத் 3:16). இது எவ்வாறு நேரிடுகிறது?

1. வேதாகமத்து படிப்பானது மக்களுடைய பொதுநடை வழக்கான மொழியிலே அமைந்துள்ளது. அது கல்வி சார்ந்த விவிலிய ஏட்டு விளக்கவுரை அல்ல. கிரேக்க எபிரேய வார்த்தைகள் முதலியன. இதற்கான ஆராய்சிசிக்கான புற சூழ்நிலை அவசியமானது. ஆனால், வேதாகமத்து படிப்பின் இலக்கு இதுவல்ல. கூட்டம் கூடுகையில் இது “நல்ல சொற்பொழிவல்ல” நேர்தியான நன்கு ஒலிக்கிற வார்த்தைகளால் ஆதாவது அர்த்தம் ஒன்றும் கொடுப்பதாகவும் அல்ல. ஆனால், அது செவிகொடுத்துக் கேட்பவர்களின் தலைக்கு மேல் ஓங்கி நிற்பனவாகும்.

2. ஒரு தொகுதியான அமைப்பு எண்ணிக்கையான வசனங்களின் பொருள் விளக்க அர்த்தத்தைக் கொடுக்க வேண்டும்.

a. அதன் நீளம் அளவிடப்பட வேண்டும். நாம் வழக்கமாக ஆதியாகமம் தொடங்கி வெளிப்படுத்துதல் வரையிலும் ஒரே கூட்டத்தில் பேசிவிட முயலுகிறோம்.

b. அந்த ஆசிரியரின் மூலக் கருத்தின் அர்த்தமாவது, திரும்பப் பெறப்பட வேண்டும். வேதாகமத்து படிப்பின் இருதயமானது, அர்த்தத்தின் திரண்ட பொருளாக எப்பொழுதுமே இருக்க வேண்டும். அந்த வசனப்பகுதி என்ன பொருள் விளக்கம் பெறுகிறது? அர்த்தத்தைப் பற்றிய கேள்விகளின் ஓட்டப் பிரவாகமாக இருக்க வேண்டும். நல்லதோர் வேதாகமப் போதனை, வசனப்பகுதியின் அர்த்தத்திற்காகவும், அமைவிடத்திற்காகவும் உணர்ச்சி பூர்வமானதேர் எழுச்சி.

3. வேதாகமத்துப் படிப்பானது எப்பொழுதுமே அவசியமாக வேண்டுமான வசனப்பகுதியின் பொருத்தத்தை கேட்டு செவி கொடுப்பவர்களின் ஜீவியத்திற்காகவும், அவர்களுடைய கால நேரத்திற்காகவும் உள்ளடக்கமாக இருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| வேதத்தின் சத்தியம் : | போஷிக்க | : நிதரிசனமான எளிதில் உணரக் கூடியதும். |
| | வேதம் | : சூழ்நிலைமைக்கு. |
| | படிப்பு | : செவிகொடுத்துக் கேட்கும் கூட்டம். |

வேதாகமப் பகுதியின் விளக்க அர்த்தமாவது, மிகவும் அர்த்த கருத்து நோக்குடன் கிறிஸ்தவர்களின் ஜிவியத்திற்கு பொருத்தமாக நடத்தப்பட்டால் வேதாகமப் படிப்பானது அர்த்தமுள்ள கிரியையாகக் கருதப்படும்.

a. தத்துவக் கோட்பாடுகளின் முக்கியத்துவம்.
v. ஜீயத்துக்கான சீர்திருத்த செயல்பாடுகள்
c. ஆறுதலும் - ஊக்கப்படுத்தப்படுதலும்.
d. தியானத்திற்கான உறுதுணைகள் - ஆராதனை.

## எவ்வாறு நடத்திச் செல்ல / ஒருங்கிணைக்க /அறிவுரை கூற /இசைக் குழுவை நடத்த (நற்கருணை ஊழியம்)/''M.C'' ஒரு கொண்டாட்ட ஆராதனை

- அந்தக் சுட்டத்திற்கு வந்த மக்களை வரவேற்று கூட்டத்தை ஆரம்பிக்கவும். இந்த மாதிரியான காரியங்கள் சொல்லப்படக் கூடும். "கர்த்தருக்கு ஸ்தோத்திரம் ஒவ்வொருவருக்கும் காலை வந்தனம். நீங்கள் அனைவரும் இன்று இங்கே கூடியிருப்பது சந்தோஷம். நாம் அனைவரும் கர்த்தரைத் துதித்து ஆராதித்துக் கொள்ள நல்ல நேரத்தைப் பெற்றிருக்கிறோம் என்பதை உறுதியாய் நம்புகிறேன். நாம் இந்த நேரத்தை காத்தருக்கு அர்ப்பணிப்போம்" என்று கூறி உங்கள் ஜெபத்தை "அன்புள்ள பாரமபிதாவே அல்லது பிதாவாகிய தேவனே" என்று ஜெபத்தை ஆரம்பிக்கவும்.

- (ஆராதனை நேரத்திற்கு முன்னதாகவே மேற்பார்வை செய்து முழு காகிதங்கள் ஆயத்தமாக இருக்கின்றனவா முழு திரை சரியாக மக்கள் அதில் ஒளிபரப்பும் பாட்டுகளைத் தெளிவாகப் பார்க்கும் படியாக! நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கவும்.)

- பின்னர் ஆராதனைக்குரிய தலைவர் பொறுப்பை எடுத்துக் கொண்டு மக்களை துதி ஆராதனை நேரத்தில் நடத்திச் செல்ல வேண்டும். பின்பு இது ஒரு ஆசீர்வாத ஜெபத்தோடும் ஆராதனையோடும் முடிக்க வேண்டும். வார்த்தைகளுக்காகவும், தீர்க்கதரிசனத்திற்காகவும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தவும் அவசியமானால் அதை உறுதி செய்து அல்லது அதைத் திருத்தவும் வேண்டும். அவர்கள் மேல் எந்த விதமான குறிப்புரையும் செய்ய வேண்டாம்.

- பலவேறு திறன்பாடுகளை ஏற்படுத்திக் கொள்க. துதி ஆராதனை நேரத்திற்குப் பின்னர் பின்வரும் பட்டியலில் உள்ள அலகுகள் ஆரதனைக்குள் அணைத்து செயல்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு விவரத்திற்கும் பரிசுத்த ஆவிக்குள்ளான அகக் கிளர்ச்சிக்கு நேரம் ஒதுக்கப்பட வேண்டும். மேலும் சிற்சில சமயங்களில் நடைமுறையான தீர்மானங்களை ஆராதனையைக் கூடிய மட்டும் குறிப்பிட்ட நேர அளவுக்குள் முடித்துவிடக் கூடியவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும்.

- துதி ஆராதனைக்குப் பிறகு மக்களுடன் சிறிது தளர்த்தியான உணர்வுடன் பேச ஆரம்பிக்கவும் சபையார் பரிசுத்த ஆவியின் பரசன்னத்தில் இன்னும் களிகூர்ந்து கொண்டு இருக்கிறபடியால் அதுவும் மிகவும் சப்தமில்லாமல் பேசவும். சில சமயங்களில் பின்வரும் முறைப்படி சில வாக்கியங்களைச் சொல்லமுடியும். "நாம் ஆராததிக்கும் படியாக உண்டாக்கப்பட்டிருக்கிறோம், ஆராதனையே நமது நித்தியமான அழைப்பாகும். தேவன் நம்மை இங்கே ஆயத்தம் செய்கிறபடியால் அவரைத் துதிப்போமாக" என்று.

- சாட்சி கூறுவதற்காக சாட்சி சொல்வோர் இருந்தால், நீங்கள் பின்வருவது போல், ஏதோ ஒன்றைச் சொல்லி மேற்கொண்டு பேசலாம். நாம் தொடர்ந்து தேவனை மகிமைப்படுத்துவோம், சாட்சிகளைக் கவனித்துக் கேட்போம், …என்பவரது சாட்சியையும் கேட்போம் என்று கூறி (அதற்காக சாட்சி சொல்லும் நபரை முன்னுக்கு வரும்படி அழைக்கவும்) அல்லது சில சமயங்களில் யாராவது, ஒருவர் தேவனை சாட்சின் வழியாக மகிமைப் படுத்துவாரானால், அவருக்கு அழைப்பு விடுக்கவும். சுருக்கமாகவும், குறிப்பாகவும் சாட்சிப் பகரட்டும்.

- இப்பொழுது நீங்கள் அறிவிப்புகளோடு முன்னேறிப் போகலாம். (இது இளைய திருச்சபைத் தலைவர்களையுங்சுட அந்த அறிவிப்புகளைக் கேட்டு அறிந்து கொள்வதற்கும் உதவி செய்கிறது). அறிவிப்புகளையோ அல்லது அறிவிப்பாளைரையே ஒலிபெருக்கியில் அறிமுகப்படுத்தவும், அல்லது இவற்றை ஒரு வழியில் ஒருங்கிணைத்து அறிக்கைகள் வாசிக்கப்படும் படியாக செய்ய வேண்டும்.

- அறிவிப்புகளை வாசித்து முடித்த பிறகு (முடிந்தால் மனப்பாடமாக) அந்த புதிய வேதாகமத்து வசனத்தை அதாவது அடுத்த ஞாயிற்றுக் கிழமைக்கு மனப்பாடம் செய்ய வேண்டிய வசனத்தை வாசிக்கவும். இதற்காக சுமார் 5லிருந்து பத்து நபர்களை அழைப்புக் கொடுத்து அதிலும் குறிப்பாக இளைய வயதினரையே கைமேல் இருக்கும் நேரத்தைக் கொண்டு சார்ந்து, அவர்களை முன்வரும்படியாக அழைத்து அந்த நாளுக்குப் படிக்க வேண்டிய வசனப்பகுதியை ஒப்புவிக்கும்

படி சொல்லவும். இது தேவனுடைய வார்த்தையை செய்தியாய் பிரசங்கித்த பிறகு கைப்பற்றப்படலாம்.

- இதற்கு பிறகு வரும் வழிபாட்டு ஆராதனை தொடர்ச்சியில் தசமபாகங்களையும், காணிக்கைகளையும் சேகரிக்கலாம். (இதனால் வழிபாட்டு ஆராதனைக்கு முன்னரே போதுமான காலி தசமபாகக் கவர் கூடுகள் காணிக்கை சேகரிக்கும் பைகளோடு வைக்கப்பட்டுள்ளனவா என்று பார்க்கவும்).

  பிறகு நமது ஆராதனையில் ஒரு பகுதியான நாம் கர்த்தருக்குச் செலுத்துகிறவைகளினால் அவரை ஆசீர்வதித்து மகிமையாக கனப்படுத்துவதற்கு ஆக எல்லோரும் எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்ள வேண்டும். இரண்டு நபர்களை பெயர் சொல்லி முன் வரும்படியாக அழைத்து இரு சகோதர்களையாவது அல்லது இரு சகோதரிகளையாவது அழைத்து ஜனங்கள் ஆராதனைப் பாடலைப் பாடும்பொழுது காணிக்கையை சேகரிக்கும்படியாக அன்பாகக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

- வழிப்பாட்டு ஆராதனைக்கு வந்திருந்து வார்த்தையை பகிர்ந்து கொள்ளும் அல்லது பிரசங்கிக்கும் பேச்சாளரை வரவேற்று அழைப்புக் கொடுக்கவும்.

  இதைத் தொடர்ந்து ஒரு அறிவிப்பைக் கொடுத்து சிறுவர்களை அவர்களுக்குரிய ஆராதனைக்கு செல்லுமாறு பணிக்கவும். (அல்லது சமயா சமயங்களில் சிறுவர்களையுங்கூட அமர்ந்திருந்து செய்தியைக் கேட்கும்படியாக வேண்டிக் கொள்ளலாம்). இது பிள்ளைகள் விட்டு வெளியே செல்லும் பொழுது பேச்சாளர் முன்னுக்கு வரும்படியாக அவகாசம் அளிக்கிறது.

- வார்த்தையைப் பிரசங்கித்த பின்னர் அந்தநாள் முழுவதும் அந்த வார்த்தையால் போஷிக்கப்படும் படியாக சவால் விடுவிக்கவும். கடைசியாக, ஜெபத்துடன் வழிபாட்டு ஆராதனையை முடிக்கவும் அல்லது யாராவது முன்வந்து முடிக்கும் ஜெபத்தை ஏறெடுக்கும்படி அழைப்புக் கொடுக்கவும்.

- மாதத்தின் இறுதி ஞாயிற்றுக் கிழமை கர்த்தருடைய இராப்போஜனத்தை நினைவு கூறும்படியாக நேரம் எடுத்துக் கொள்ளவும். (அப்பமும், திராட்சை ரசமும் ஏற்கனவே ஆராதனைக்கு முன்னதாகவே ஆயத்தமாக வைத்திருக்கப்பட வேண்டும் என்பதைக் கவனித்துப் பார்த்துக் கொள்ளவும்). கர்த்தருடைய மேஜைக்குச் சுற்றிலும் இருக்கும் படியாக தலைவர்களை அழைத்து கொள்ளவும். (ஒருவேளை சில சமயங்களில் சில வேதாகமத்துப் பகுதியான வசனங்களை உதாரணமாக 1கொரி 11:23-26; வெளி 1:5-6; எபி 9:4) முதலியவற்றிலிருந்து வாசிக்க விரும்பலாம். ஜெபிக்வும் அல்லது யாரோ ஒரு தலைவரை ஜெபிக்ககும்படியாகக் கேட்டுக் கொள்ளவும். ஜெபம் பண்ணும் பொழுது அப்பத்தைப் பிட்டு இரசத்தை கோப்பைகளில் வார்க்கவும். தலைவர்கள் நற்கருணை பந்தியை பரிமாறிவிடட்டும். மேலும் ஒவ்வொருவருக்கும் சரியாக பரிமாறப்பட்டதா என்று பார்க்கவும்.

# தேவனைத் துதித்து ஆராதிக்க வேதாகமத்து வழிகள்

## A. துதியும் ஆராதனையும். இதற்கு ஒரு வித்தியாசம் உண்டு

### 1. நன்றி செலுத்துதல்

துதி என்பது, முக்கியமாக வியந்து பாராட்டுதலும், ஒப்புதலுமாகும். அதன் முழுமையான கருத்தில் அது நன்றியறிதலான வெளிப்படுத்துதலையும் நன்றி செலுத்துவதையும், நாம் பெற்றுக் கொண்ட ஈவுகளுக்காக இவ்விரண்டைச் செய்வதையும் சேர்த்து உள்ளடக்கும். ஆகவே, துதியும், நன்றி செலுத்துவதும் அடிக்கடி ஒன்றாக சேர்த்து இணைக்கப்படுகின்றன.

என்னவென்றாலும், துதித்தலின் தூய்மையான வடிவங்கள் நன்றியையும், நன்றியறிதலையும் உள்ளுக்குள் சேர்த்துக் கொள்வதில்லை. அவைகள் இன்றியமையாத வியந்து பாராட்டுவதும், போற்றுவதுமான வெளிப்படுத்தப் படுகிறவைகளாய் ஒருவருடைய துதியின் நோக்கமாய் ஈவுகளைப் பெற்றாலும் பெறாவிட்டாலும் அது ஒரு பொருட்டாகாமல் இருப்பதாகும். சிலர் இந்த உன்னத வடிவமான துதியை ஆராதனை என்று அழைக்க வேண்டும் என்று உணருகிறார்கள்.

### 2. போற்றுதல்

இது தேவனை ஆராதிப்பது என்பது. ஆகையால், அவருடைய ஆளுமைத் தன்மையை நன்னடத்தையை விசேஷித்த பண்பம்சங்களை பூரணமாகுதலை உயர்த்தி போற்றுதலாகும். அது தேவனை, அவர்கள் யாராக இருப்பதாலும், அவர் என்னவாக இருப்பதாலும், அதை விட அவர் நமக்கு செய்த எந்த காரியத்திலிருந்து நன்மையைப் ற்றிருப்பதற்காக உயர்த்திப் போற்றுதலாகும். “கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள். பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள். சங் 29:2”

ஆராதனை என்பது முதலாவதாக, நமது உள்ளான விழிப்புணர்வின் தகுதியாகும். இதற்கு பின்னர் அந்த உள்ளான அகமகிழ்ந்து பாராட்டுதலின் புறவெளிப்பாடான உணர்வின் தோற்றமாகும். அது புறவெளிப்பாட்டுத் தோற்றமில்லாமல், அது ஆராதனையாக முடியாது.

அது இருதயத்திலும், சிந்தனையிலும் உள்ளிருக்கும் வரைக்கும், அது வியந்து பாரட்டுதலாகும். அது வெளிக்குக் காட்டுதலை கண்டுபிடித்துக் கொண்டு வாய்மொழியாகவும், நிதரிசனமாகவும் இருக்கும்பொழுது, அது ஆராதனையாகிறது.

## B. துதி ஆராதனையின் வாய்மொழி வெளிக்காட்டும் சொற்கூற்று

நமது தேவனைத் துதித்து நமது துதியை வெளிக்காட்டுவதற்காக பல வேதாகமத்து வழிகள் இருக்கின்றன. நாம் இப்போது அவைகளில் சிலவற்றைப் பார்க்கப் போகிறோம்.

நமது பட்டியல் முற்றுப் பெற்றதாகாது. நீங்கள் மற்றும் வேறு வழிகளைக் கண்டு பிடித்துக் கொள்ள முடியும். அவைகள் வேதாகமத்துக்கு சமமானவையே. தேவன் ஒவ்வொரு கிறிஸ்தவனையும், அவர்களுடைய ஆவியில் சுதந்திரமாக அவரைத் துதிக்க வேதாகமத்தில் காணப்படும் எந்த ஒரு வழியிலும் மற்றும் எல்லா வழிகளிலும் துதிக்கும் படியாக இருக்க வேண்டும் என்று தேவன் வாஞ்சிக்கிறார் என்று நான் நம்புகிறேன்.

உங்கள் இருதயத்தில் துதியைப் பற்றி விழிப்புணர்வுள்ளவர்களாக இருந்தும் அதற்கு போதுமான வெளிப்படுத்துதல் கொடுக்கப்படாவிட்டால் இந்த வேறுபட்ட வெளிக்காட்டும் வழிகளைப் படித்துக் கொள்ளும்படியாக ஆலோசனை கூறுவேன். வேதாகமத்தில் கொடுக்கப்பட்ட ஒத்து வாக்கியங்களை பார்த்து, அதன் சந்தர்ப்ப வகையையும் முக்கியத்துவத்தையும் ஜெபத்துடன் கருத்தில் கொண்டு பிறகு நீங்கள் கருத்தில் கொள்கிற எந்த வெளிக்காட்டு கூற்றையும் அப்பியாசம் செய்யவும். உதாரணமாக நீங்கள் சப்தமாக துதிக்கும் வசனப் பகுதிகளைப் படித்துக் கொண்டிருந்தால் வசனம் சொல்லுவதைப்போல் கர்த்தரை நோக்கி உரத்த சத்தமாக துதியுங்கள்.

இவ்வாறு செய்வதால் உங்களுக்குள் மகத்தான விடுதலையை உணருவீர்கள். உங்களுக்குள் இருக்கும் ஏதோ ஒன்று விடுதலை பெற்று ஒரு புதிய பரிமான அளவு மகிழ்ச்சியானது, உங்களுக்குள் விடுவிக்கப்படும். இது நேரிடுவது எனென்றால், நீங்கள் தேவனுக்குக் கீழ்படிந்து இருப்பதன் காரணத்தினால் தான். மேலும் நீங்கள் தம்முடைய வார்த்தையில் அவர் உங்களுக்காக முன்குறித்த வழிகளில் நீங்கள் அவரைத் துதிக்கும் படியாக ஆரம்பித்துக் கொண்டிருப்பதால்தான், நீங்கள் இந்த மாதிரியான துதிக்கும் வழிகளை மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதாய் இருந்தால் நீங்கள் போதித்துக் கற்றுக் கொடுத்தபடியே ஒவ்வொன்றையும் செய்யும்படி சொல்லுங்கள். இந்த துதிக்கும் முறைகளைப் பற்றிப் பேசுவததோடு திருப்தி அடைந்து விடாமல், நீங்கள் போதிப்பதில் மக்கள் சரியாக பங்கெடுத்துக் செய்யும்படியாகக் கூறுங்கள்.

## 1. தேவனை தகுதியான குரலோடு துதித்தல் (ஆர்ப்பரித்தல்)

கர்த்தாவே நான் துதியின் சத்தத்தைத் தொனிக்கப்பண்ணி உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பதற்காக வருகிறேன். (சங் 26:6) ஜனங்களோடே கூட நடந்து கூட்டத்தின் களிப்பும் துதியுமான சத்தத்தோடே தேவாலயத்திற்கு போய் வருவேன்" (சங் 42:4). தாவீது எப்பொழுதுமே தேவனைத் துதிக்கும் துதிகளைப் பற்றியே பேசுவான். அவன் பின்வரும் காரியங்களை போன்றவற்றைச் சொல்லுவான். "கர்த்தர் என் பெலனும் கேடகமுமாயிருக்கிறார். என் இருதயம் அவரை நம்பியிருக்கிறது. நான் சகாயம் பெற்றேன். ஆகையால் என் இருதயம் களிகூறுகிறது. என்பாட்டினால் அவரைத் துதிப்பேன்" சங் 28:7.

நாமுங்கூட கர்த்தரைப் பற்றியும், அவருடைய அதிசயமான கிரியைகளைக் குறித்தும் பேசும் பழக்கத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளையும் தேவனை நோக்கி நீ பேசிக் கொண்டிருக்கும் துதியைச் சொல்லி ஆரம்பிப்பாயாக. "அவர் எவ்வளவு மகத்துவம் உள்ளவர் என்றும் அவர் எவ்வளவு அதிசயமானவர் என்றும், அவனில் நீ எப்படி அன்பு கூறுகிறாய் என்றும் எப்படி வாழ்த்தி போற்றி பாரட்டுகிறாய் என்பதையும் கூறுவாயாக புதிய நாளுக்காக அவருக்கு நன்றி சொல்லும், உன் துதியை ஆரம்பித்து அவரைத் துதித்து நாள் முழுவதும் உன்னோடு அவருடைய பிரசன்னம் இருப்பதற்காக துதியை ஏறேடுப்பாயாக.

உன்னுடைய குரலாலும், உதடுகளாலும், உன் வாயினாலும் அவரைத் துதித்து அவற்றை தேவனைத் துதிக்கும் கருவிகளாக ஆக்குவாயாக. நீ எவ்வளவு விரைவில் அவரைத் துதிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டாய் என்பதை அறிய நீ வியப்படைவாய். "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன். அவர் துதி எப்போதும் என் வாயில் இருக்கும் (சங் 34:1) மேலும் சங் 40:16; 66:8ஐயும் பார்க்கவும்)

## 2. கர்த்தரை நோக்கி சப்தமிட்டு துதிப்பது

முந்தின பகுதியில் நாம் பேசிய வாய்மொழி துதியானது உரையாடலான நாம் பேசிய வாய்மொழி துதியானது, உரையாடலான பரிமாணத்தையே தனக்கு அவசியமாக ஆக்கிக் கொள்கிறது. நாம் தேவனுடன் உரையாடல் முறையாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். அப்படி பேசும்பொழுது அவரைப் பற்றிய நமது அபிப்பிரமாயத்தையும், அவரைப் பற்றி நமது பாராட்டுதலையும் வெளிப்படுத்துகிறோம். என்னவென்றாலும், ஆங்கே ஏற்படும் சில சமயங்களில் நமது சத்தத்தை குரலை உயர்த்தி தேவனை நோக்கி மெய்யாகவே ஆர்ப்பரிப்பது, அது தகுதியும் வேதாகமத்துப் படியும் என்றாகிறது. "தேவனுக்கு முன்பாக கெம்பீர சத்தமாய் ஆர்ப்பரியுங்கள்." சங் 47:1.

பல பழமை விரும்பிகள் சப்தமிட்டு துதிப்பதற்கும் வேறு எந்த விதமான ஆர்ப்பரிப்புகளுக்கும் வெறுப்பைக் காட்டுகிறார்கள். இதை அவர்கள் கௌரவக் குறைவாகக் கருதுகிறார்கள். ஆனந்தம் நிறைந்த சத்தத்திற்கும் துதியின் ஆர்ப்பரிப்புக்கும் ஒரு நேரமும் இடமும் இருக்கிறது. அப்படி நேரம் வரும்பொழுது அவ்வாறு செய்வதற்காக நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை'. "உம்மை நம்புகிறவர்கள் யாவரும் சந்தோஷித்து எந்நாளும் கெம்பீரிப்பார்களாக. உம்மில் களிகூறுவார்களாக" சங் 5:11. (மேலும் வேலி 9:23-24; 1சாமு 4:5; சங் 32:2; 132:9,16; செப் 3:14) ஐப் பார்க்கவும். "சீயோனில் வாசமாய் இருக்கிறவளே, நீ சத்தமிட்டு கெம்பீரி. இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவில் இருக்கிறார்" ஏசாயா 12:6.

## 3. பாட்டு பாடுதல் :

:…… ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதி முன் வாருங்கள்" சங் 100:2) பாட்டுப் பாடுவது, தேவனுடைய அதிசயத்திற்கு எளிதானதும் மிகவும் இயற்கையானதுமான பிரதி கிரியையாகும். இது தன்னிலே தானே இயங்குகிற மகிழ்ச்சி நிறைந்த உணர்வுகளின் வெளிப்படுத்தலாகும். இது தன்னிலே தானகவே இயங்கி வெளிப்படுகிற ஆனந்தமான உணர்வுகளாகும். இது தேவனுடைய ஜனங்களின் மத்தில் எப்பொழுதுமே முறைப்படி வெளிப்படுகிற துதியாகும்.

எகிப்திலிருந்து பிரயாணத்தைத் தொடங்கிய பிறகு, தேவன் அவர்களை சிவந்த சமுத்திரத்தின் வழியாக பத்திரமாகக் கொண்டுவந்த பிறகு மிரியாம் இஸ்ரவேல் ஜனங்களை தேவனைத் துதித்துப் பாடும்படி நடத்திச் சென்றார். அவர்கள் அற்புதமாகவும், ஆச்சரியமாகவும் சத்துருக்களின் கையில் இருந்து மீட்கப்பட்டார்கள். "மரியாம் அவர்களுக்கு பிரதிவசனமாக கர்த்தரைப் பாடுங்கள். அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார். குதிரையையும், குதிரை வீரனையும் கடலிலே தள்ளினார்" என்று பாடினாாள் (யாத் 15:21).

**வேதாகமத்தில் பாட்டுகள் பாடினதற்கான வேதாகமப் பகுதிகள் நிரம்பவும் காணக்கிடக்கின்றன. இங்கே சில பகுதிகளாவன :-**

"நான் கர்த்தரைப் பாடி, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணுவேன்" (நியாயாதிபதிகள் 5:3) "இதனிமித்தம் கர்த்தாவே, ஜாதிகளுக்குள் உம்மைத் துதித்து உமது நாமத்திற்கு சங்கீதம் பாடுவேன்" (2சாமு 22:50). கர்த்தரைத் துதித்து அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபமாக்குங்கள். அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே பிரசித்தப்படுத்துங்கள். அவரைப்பாடி, அவரைக் கீர்த்தனம் பண்ணி அவருடைய அதிசயங்களையெல்லாம் தியானித்து பேசுங்கள்" (1நாளா 15:8,9). இப்படியே தினமும் என் பொருத்தனைகளை நான் செலுத்தும்படியாக உமது நாமத்தை என்றைக்கும் கீர்த்தனம் பண்ணுவேன். (சங் 61:8) மேலும் 2நாளா 29:3; சங் 7:17; 9:2; 21:13; 47:6 ஆகிய பகுதிகளையும் பார்க்கவும். இதற்கு மேலும் மற்றும் பல வசனப்பகுதிகள் தேவனுக்குத் துதியைப் பாடுவதாக இருக்கின்றன. ஆனால் இந்த சில பகுதிகள் மட்டுமே பாடுவதன் முக்கியத்துவத்தைக் குறித்து கொஞ்சம் கருத்துத் தெரிவிக்கப் போதுமானதாகும்.
பாடல்களைப் பாடுவது மகிழ்ச்சிக்கும், மனநிறைவுக்கும் அடையாளமாகும். அது நேரடியான உணர்ச்சிகளின் ஆரோக்கியமான வெளிப்படுத்துதலாக நமது முழு ஆளுமை தன்மைக்கும் பலம் தருவதாகும். அது மகிழ்ச்சியின் அடையாளமாக ஒருவருடைய ஜீவியத்தின் முழுமையிலும் மன நிறைவைச் சுட்டிக் காட்டுகிறது. தேவன் நம்மை அவர் துதியைப் பாடுவதைக் கேட்பதற்கு மகிழ்ந்து களிகூருகிறார்.

### பாடல்களின் பலதரப்பட்டவை :

எபேசியர் 5:19லும் கொலோ 3:16லும் நாம் சங்கீதங்களாலும், ஞானப்பாட்டுகளினாலும், ஆவிக்குரிய கீர்த்தனைகளாலும் கர்த்தரைத் துதித்துப் பாடும்படி புத்திமதியாக நமக்குச் சொல்லப்படுகிறது. சங்கீதங்கள் ஆனவை பாடி ஆராதிப்பதற்கான மிதகுதியான அளவு பொருட்செல்வங்களை அளிக்கிறது. பழைய பாரம்பரியமான ஞானப்பாட்டுகளில் இருந்து நவீன காலத்து பல்லவி வரைக்கும் அதிலிருந்து நேரடியாக எடுக்கப்பட்டவையாகும். மேலும் ஞானப்பாட்டுகள் திருச்சபைக்கு எழுச்சியூட்டுவதற்காக மகத்தான ஆய்வு மொழிகளைத் தந்து திருச்சபையை துதி நிறைந்த புனிதப் பாடல்களையும் கொடுத்திருக்கிறது.

ஆவிக்குரிய பாடல்கள் இதற்கு முன்னால் கூறப்பட்ட ரகங்கள் இரண்டிலிருந்தும் ஏதோ வித்தியாசமானது. அவைகள் பரிசுத்த ஆவியானவரால் நேராக வழங்கப்பட்டவைகளாக அந்த ஆவியானவரால் கொடுக்கப்படும் வார்த்தைகளாலும், இராகங்களைக் கொண்டும் இயல்பாகப் பாடப்படுவதாகும். இந்த பாடல்கள் பாடும் மனிதன் பேசும் பாஷையில் பாடப்படலாம். அப்படியென்றால், அவகைள் "விளங்கிக் கொள்ளக் கூடியதாகும்" 1கொரி 14:15) மற்ற நேரங்களில் கீத்தனைகள் "மற்ற பாஷைகளில் பாடலாம். அப்படியென்றால், அப்படி வரும் மனிதனுடைய சிந்தனையானது கனியற்றதாகும். (1கொரி 14:14) மனித சிந்தனைக்கு என்ன பாடப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள இயற்கைளான புரிந்து கொள்ளுதல் கிடையாது. ஆனாலும் அதே நேரத்தில் உள்ளான அறிவின் மூலமாக ஆவியானது துதித்து தேவனை மகிமைப்படுத்த அடிக்கடி தூதர் பாஷையினால் அவ்வாறு செய்கிறது.

இந்த இரண்டு காரியங்களிலும் பாடல்கள் இயல்பாகவும் திட்டமின்றியும் முற்றிலுமாக அமைகிறது. பாடல்கள் விசுவாசத்தினால் இயக்கப்படுகின்றன. பாடுகிறவர், தேவனுடைய ஆவியை கவனித்து கேட்டு தன்னுடைய சொந்த ஆவியில் உண்மையாகவே இராகத்தையும், வார்த்தைகளையும் பரிசுத்த ஆவி தருகிறதான அவைகளைப் பின்பற்றிச் செல்கிறது.

## C. துதித்தல் ஆராதித்தல் இவற்றில் சரீரப்பிரகாரமான உணர்வு தோற்றங்கள் (முகபாவங்கள்)

வாய்மொழியானதும் செவிகளுக்குத் தெளிவாக புலனாகக் கூடியதுமான துதித்தலுடன் கூட வேதாகமம் தேவனை ஆராதிக்கும் படியாக பயன்படக்கூடிய சரீர தோற்ற பாவ வழிகளைக் குறிப்பிடுகிறது.

### 1. நின்று கொண்டு

நேராக நிற்பது என்பது மரியதைக்குரிய அடையாளமாகும். ஒரு முன்கியமான பிரமுகர் அறைக்குள் பிரவேசிக்கும் பொழுது அங்கே கூடியிருக்கிறவர்கள் தங்கள் கால்ளின் மேல் எழும்பி நின்று அவருக்கு கனத்தையும், மரியாதையையும் தெரிவிப்பார்கள்.

அடிக்கடி பரிசுத்த ஆவியானவரும் நம்மை கர்த்தருக்கு முன்பாக ஆராதனைக்கும் கனத்திற்கும் அடையானமாக எழுந்து நிற்கும் படியாக தூண்டி விடுவார். “பூமியெல்லாம் கர்த்தருக்குப் பயப்படுவதாக. உலகத்திலுள்ள குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சி இருப்தாக. அவர் சொல்ல ஆகும் கட்டளையிட நிற்கும்” (சங் 33:89). “இதோ இராக்காலங்களிலே கர்த்தருடைய ஆலயத்தில் நிற்கும் கர்த்தரின் ஊழியக்காரரே, நீங்கள் எல்லாரும் கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள்.” “அல்லேலூயா, கர்த்தருடைய நாமத்தைத் துதியுங்கள். கர்த்தின் ஊழியக்காரரே துதியுங்கள். தர்த்தருடைய வீட்டிலும் நமது தேவனுடைய ஆலயப் பிரகாரங்களிலும் நிற்கிறவர்களே, கர்த்தரைத் துதியுங்கள்”. (சங் 134:1; 135:1-2).

### 2. கைகளை உயர்த்துதல், உயர்த்தப்பட்ட கைகள் சரணாகதி அடைவதற்கு பொதுவான அடையாளமாகும்

கர்த்தருக்கு முன்பாக நமது கைகளை உயரமாக உயர்த்துவதால், நாம் அவருக்கு முற்றிலுமாக (சரணாகதி) ஒப்படைப்புச் செய்ததாக ஒப்புக் கொள்கிறது. நாம் மறுபடியும் எந்த நிபந்தனையுமின்றி அவருடையவர்கள் என்று அவருக்குச் சொல்லுகிறோம். அவருக்கு விரோதமாக போராட்டம் செய்ய நமக்கு எந்த விதமான விருப்பமும் இல்லை. அவருக்கு விரோதமாக போரிடுவதற்கு நம்மிடம் எந்த விதமான ஆயுதமும் கிடையாது. முழுவதுமாக அல்லது முற்றிலுமாக தேவனிடம் சரண் அடையாதவர்களுக்கு அதைச் செய்வதற்கு மிகப் பெரிய பிரச்சனைகள் உண்டு. அது மிகவும் எளிதாகச் செய்யக் கூடியதாகத் தோன்றினாலும், அது அவ்வாறு இருக்க முடியாது. அவர்கள் ஆராதிக்கும் வழிபாட்டு முறையை வன்மையாக எதிர்க்கிறார்கள். எப்படியென்றாலும், ஒருதரம் அவர்கள் இதைச் செய்து விட்டால் மகாவிடுதலையை வரப்பெற்று அடிக்கடி மற்ற பல வழிகளில் துதியை வெளிப்படுத்தக் கூடியவர்களாக ஆகிறார்கள். “உங்கள் கைகளை பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுத்து கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள்” (134:2) அது தேவனுக்காக ஆழமான ஏக்கமானதோர் வாஞ்சையைக் காட்டுகிற அடையாளமாக இருக்கிறது. “நான் உம்மை நோக்கி சத்தமிட்டு உம்முடைய பரிசுத்த சந்நிதிக்கு நேராகக் கையெடுக்கையில் என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டருளும். (சங் 28:2).

தேவன் மேல் ஆவிக்குரிய தாகமாய் இருப்பதற்கும், இது அடையாளமாக இருக்கிறது. “என் கைகளை உமக்கு நேராக விரிக்கிறேன். வறண்ட நிலத்தைப் போல் என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது” (சங் 143:6).

### 3. கை தட்டித் துதித்தல்

யாராவது ஒருவர் ஏதோ ஒரு காரியத்தைச் செய்து நமது மெச்சிப் போற்றுதலையும், ஒப்புதலையும் ஜெயித்துக் கொள்வார்களானால், நாம் அவர்களுக்கு அவர்கள் அவ்வாறு செய்ததாக அறிந்து கொள்வதை தெரிவித்துக் கொள்ள நாம் அடிக்கடி நமது கைகளை ஒன்றாகச் சேர்த்து இணைத்துத் தட்டி பாரட்டுகிறோம். தேவன் மிகவும் ஆச்சரியப்படத் தக்கவராகவும், நமது

போற்றுதலையும், ஒப்புதலையும் பெறக்கூடிய பல மகிமையான காரியங்களைச் செய்திருப்பதால் நாம் அவருக்கு கைத்தட்டுதல் மூலமாக அவரைப் பாரட்ட விரும்புவது மிவும் விநோதமானதா? தேவனை நோக்கி நமது கைகளைத் தட்டும்படியாக நாம் கட்டளை பெற்றிருக்கிறோம். "சகல ஜனங்களே கைகொட்டி தேவனுக்கு முன்பாக கெம்பீர சத்தமாய் ஆர்ப்பரியுங்கள்" (சங் 47:1). இது மகிழ்ச்சிக்கும் களிகூறுதலுக்கும் ஒப்புக் கொள்ளுதலுக்கும் அடையாளமாகும்.

### 4. தலைகுனிந்து பணிந்து (அ) முழங்கால் படியிட்டு

சில சமயங்களில் ஜனங்கள் தேவ பிரசன்னத்தையும், மகிமையையும் உணர்ந்து, அதில் முழ்கி விடுவதால் அவர்கள் இயல்பாகவே முழந்தாழ்படியிட்டு, தேவனுக்கு முன்பாக பணிந்து குனிந்து விடுவார்கள். அது பயபக்திக்கும், மரியாதைக்கும், சமிக்கையாகும். "நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக் கடவோம் வாருங்கள்" (சங் 95:6) "இயேசுவின் நாமத்தில் முழங்கால் யாவும் முடங்கும்" (பலிப் 2:10).

### 5. சாஷ்டாங்கமாய் தாழவிழுந்து பணிதல்

இங்கே இது மற்றொரு போற்றித் துதிக்கும் ஆராதனை முறையாகும். யாரோ ஒருவருக்கு முன்பாக தாழவிழுந்து சாஷ்டாங்கமாய் பணிவது மற்றொரு ஆழமான பக்திக்கு அடையாளமாகும். அதரகப்பட்டதாவது, நம்மை நாமே தாழ்த்தி நாம் போற்றும் ஒருவர் உயர்த்தப்பட்டு நாம் இருப்பதற்கு மேலாக உயர்த்தப் படுவதாகும். ஒருவர் முகங்குப்புற விழுந்து வணங்குவதும், தாழக்குனிந்து வணங்குவதும், ஆராதித்தலும் ஆவியவை அனைத்தும் எபிரேய பழைய ஏற்பாட்டு "Shachah" என்பதையும், புதிய ஏற்பாட்டு கிரேக்க "Proskuneo" என்ற அதே மூலபதத்தைப் பகிர்ந்து கொள்ளுகின்றன. ………"அப்பொழுது யோசுவா தரையிலே முகங்குப்புற விழுந்து பணிந்து கொண்டு" யோசுவா 5: 13-14.

அப்பொழுது யோசபாத் தரைமட்டும் முகம் குனிந்தான். சகல யூதா கோத்திரத்தாரும், எருசலேமின் குடிகளும் கர்த்தரைப் பணிந்து கொள்ள கர்த்தருக்கு முன்பாக தாழ விழுந்தார்கள். (2நாளா 20:18) சகல இராஜாக்களும் அவரைப் பணிந்து கொள்வார்கள். சகல ஜாதிகளும் அவரை சேவிப்பார்கள் (சங் 72:11).

### 6. நடனமாடி

ஏனென்றால் நடனமாடுதல் மிகவும் அதீதமாகவும் வெளிப்படையாகவும், ஒருவேளை ஏதோ போன்ற உணர்ச்சி பூர்வவடிவமான துதித்தலாகும். அது மிகுந்த அளவில் விமர்சனத்தையும், எதிர்ப்பையும் சந்தித்து உள்ளது. அதிலும் பழமைவாதிகளிடமிருந்தே எதிர்ப்பை சந்தித்திருக்கிறது. இந்த விதமான சர்ச்சையின் காரணத்தால் இந்த பாடத் தலைப்புக்கான கருத்தொருமித்தலுக்கும் அதிகமான இடத்தையும் விளக்கத்தையும் கொடுத்துள்ளேன்.

நடனமாடுதல் உடம்பு முழுவதுமே மகிழ்ச்சியையும், துதியையும் ஆராதனையையுமே கர்த்தருக்கு முன்பாக பயன்படுத்தி சமர்ப்பிப்பதற்காக உள்ளடங்கும். இதற்கான எபிரேய, கிரேக்க வார்த்தைகள் நடனமாடுதல் என்பதை வேதாகமத்தில் பலதரப்பட்ட அர்த்த பொருளில் உள்ளடக்கமாக குதித்தல், தாவி ஓடுதல், காலை உயர்த்திக் குதித்தல் என்பதாக மொழி பெயர்த்திருக்கிறது.

இவைகள் ஏதோ இயல்பானதொன்றை நடனமாடுதலின் முறைப்படி திட்டமிடப்படாத அவ்வாறு நடனமாடுதலின் தன்மையாகும் என்பதைச் சுட்டிக்காட்டும். இந்த நடனமாடுதலானது, முறைப்படுத்தப்பட்டு இயக்கப்படும் (பாட்டுகளுடன் அணைக்கப்பட்டு) அசைவுகளைக் கொண்டதாக அதைவிட எளிதாதும், இயல்பானதுமான கர்த்தருக்கு முன்பாக மகிழ்ச்சியின் பிரதி வசனமாகும் அப் 3:8ல் குறிப்பிடப்பட்ட அந்த மாதிரி சம்பவங்கள் ஏற்கனவே முடவனாக இருந்த மனிதன், "நடந்து குதித்து தேவனைத் துதித்தான்" என்ற இயக்கங்கள் இக்காலத்தில் வேறு ஒரு நோக்கில் பார்க்கப்படலாம். இதுவும் குறிப்பாக இஸ்ரவேல் புத்திரரால் தேவனை தொழுது கொள்ள நடனமாடியதின் ஒருங்கிணைத்த பகுதியாக நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அவருடைய நாமத்தை நடனத்தோடு துதித்து (சங் 149:3), தம்புரோடும், நடனத்தோடும் அவரைத் துதியுங்கள் (சங் 150:4).

**a. வேதாகமத்தில் நடனமாடியதான சம்பவங்கள்**

**i. இரட்சிப்பையும், மீட்பையும் கொண்டாடுவதற்காக :**

“ஆரோனின் சகோதரியாகிய மிரியாம் என்னும் தீர்க்கதரிசியானவளும் தன் கையிலே தம்புரை எடுத்துக் கொண்டாள். சகல ஸ்திரீகளும் தம்புருகளோடும், நடனத்தோடும் அவளுக்கு பின்னே புறப்பட்டுப் போனார்கள்” (யாத் 15:20)

யெப்தா மிஸ்பாவிலிருக்கிற தன் வீட்டுக்கு வருகிறபோது, இதோ அவன் குமாரத்தி தம்புரு வாசித்து, நடனஞ்செய்து, அவனுக்கு எதிர்கொண்டு வந்தாள்” அவன் ஒரு பெரிய வெற்றிக்குப் பிறகு திரும்பி வந்து கொண்டிருந்தான்.(நியா.11:34).

**ii. திரும்பக் கொண்டு வரப்படுவதால் களிகூறுதல்**

உடன்படிக்கைப் பெட்டியானது, திரும்பவும் எருசலேமுக்குக் கொண்டுவரப்பட்ட பொழுது “தாவீது தன் முழு பலத்தோடும் கர்த்தருக்கு முன்பாக நடனம் பண்ணினான்” (நியா 6:14) ஏரேமியா அந்த மகிமையான வரப்போகும் சிறையிருப்பின் திருப்புதலைப் பற்றித் தீர்க்கதரிசனம் சொன்னபொழுது, “அப்பொழுது கன்னிகைகளும், வாலிபர்களும், முதியோருங்கூட ஆனந்தக் களிப்பாய் மகிழுவார்கள். நான் அவர்கள் துக்கத்தைச் சந்தோஷமாக மாற்றி, அவர்களைத் தேற்றி அவர்கள் சஞ்சலம் நீங்க அவர்களைச் சந்தோஷப் படுத்துவேன். (எரே 31:13) புலம்பல் 5:15ன் படி அவர்கள் சிறை பிடிக்கப்பட்ட பொழுது அவர்களுடைய நடனக் களிப்புகள் துக்கமாக மாறியது. அவர்கள் மறுபடியும் சிறையிருப்பிலிருந்து, திரும்பி வந்தபொழுது அவர்கள் நடனக்களிப்பைத் திரும்பவும் பெற்றுக் கொண்டார்கள் என்று எரேமியா 31:13ல் பார்க்கிறோம்.

**iii.புதிய ஏற்பாட்டில் நடனமாடுதல்**

இன்றைய நாட்களில் ஆலயத்தில் திருச்சபையில் நடனமாடுவதை எதிர்ப்பவர்களால் விவரிக்கப் படுவதாவது, நடனமாடுவது என்பது, பழைய ஏற்பாட்டைச் சார்ந்த நடப்புகள் என்றும், அதற்கு புதிய ஏற்பாட்டு திருச்சபையில் இடம் இல்லை என்றும் விவாதிக்கப்படுகிறது. என்னவென்றாலும் புதிய ஏற்பாட்டைப் படிக்கும்பொழுது அதற்கான வெளிப்படுத்தப்படுகிற விளக்கத்தையும் கூடவே இருக்கிறது.

முடவனான மனிதன் சொஸ்தமாக்கப்பட்ட பொழுது, அவன் உற்சாகத்தால் கிளர்ச்சியடைந்து, தூண்டப்பட்டு “அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்; நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக் கொண்டு அவர்களுடனே கூட தேவாலயத்திற்குள் பிரவேசித்தான் (அப் 3:8).

லிஸ்திராவில் பவுல் அந்த முடவனான மனிதனைப் பார்த்தபொழுது, “நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில் என்று உரத்த சத்தத்தோடே சொன்னான். உடனே அவன் குதித்தெழுந்து நடந்தான்” (அப் 14:10) அவன் குதித்தெழுந்தது, ஒரு மகிழ்ச்சியான பிரதிகிரியையாக அவன் சுகம் பெற்ற அற்புதத்திற்காக கண்கூடானதாக இருந்தது.

புதிய ஏற்பாட்டில் ஆனந்தம் என்ற பதத்திற்காக புதிய ஏற்பாட்டில் அடிக்கடி உபயோகிக்கப்பட்டுள்ள கிரேக்க பதமாவது,”agalliao” எழுத்துப்பிரகாரம் அதன் அர்த்தமாவது, களிப்புடன் குதிப்பது” என்பதாகும். இது ஆழமான உள்ளார்ந்த வகையான மகிழ்ச்சி அல்ல. அதைவிட திறன்மிகுந்த உணர்ச்சிப் பூர்வமான வெளிப்பட்டு விளக்கமாக அதீதமான மகிழ்ச்சியை குறிப்பிடுவதாய் அதாவது, ஒருவரை சாதாரண மொழி வழக்கில், ஆனந்த மிகுதியால், சந்தோஷத்தால் குதிப்பது என்று சொல்லுகிறது.

புதிய ஏற்பாட்டில் இது நேரிடுகிற இடங்களாக குறிப்பிடப்படுபவைகளாவன :-

“இயேசு கூறியதாவது, “நீங்கள் சந்தோஷப்பட்டு (agalliao) களிகூறுங்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாக இருக்கும் “ என்றார். (லூக்கா 6:23).

அந்த சிறைசாலைக்காரன் தன் வீட்டார் அனைவரோடுங்கூட தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மன மகிழ்ச்சியாக (agalliao) இருந்தான் (அப் 16:34).

“கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும் பொழுது, நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்க்குப் பங்காளிகளானதால் சந்தோஷப் படுங்கள் (agalliao). (1பேதுரு 4:13).

புதியஏற்பாட்டின் சரியான இறுதி பகுதியில் நாம் ஒரு புத்திமதியான உபதேசத்தை எதிருக்கெதிராக சந்திக்கிறோம்”.

“நாம் சந்தோஷப்பட்டு களிகூர்ந்து (agalliao) அவருக்குத் துதி செலுத்தக் கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன் (வெளி 19:7).

பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் (அப் 3:21-24) அப்பொழுது, அங்கே நடனமாடுதல் இருக்க வேண்டும். எனென்றால், இதுவும் தீர்க்கதரிசிகளால் சொல்லப்பட்ட காரியங்களில் ஒன்றாகும். (எரேமியா 31:13).

**b. வேதாகமத்துப்படி நடனமாடுதலின் சில அம்சங்கள்**

அது தன்மையில் இயல்பானதாகவும், நவீன நாகரிக உலகின் நடைமுறை பாணியில் பாதிக்கப்படாத போக்கு மிகவும் உயர்வாக தோற்றுவிக்கப்பட்ட ஒழுக்க அமைவு நடைமுறையில் அப்பியாசம் செய்ப்பட்டதும், துல்லியதுமான செயல் பாங்குள்ளதுமானதும் ஆகும்.

அது தாவியும், குதித்தும், தாண்டியும், வட்டமிட்டு சுழன்று ஆடியும் வெளிப்படுத்தப்படுவதாகும். இது சில சமயங்களில் சங்கீதக் கருவிகளின் இசையுடன் கூட செயல்படுவதாகும். (1நாளா 15:29; சங் 149:3) இது சில சமயங்களில் பாடல்களும் கூடவே பாடி இசைக்கப்படும். (யாத் 15:20-21).

- **அது ஒரு கூட்டமான குழுவினாலோ அல்லது தனிநபராலோ அப்பியசிக்கப்படுவது.** தாவீது கர்த்தருக்கு முன்பாக நடனமாடினான். மீரியாமும் எல்லா ஸ்திரிகளும் நடனமாடினார்கள்.
- **அது எதிர் பாலின மக்கள் ஒருவருடன் கூடி ஆடும் நடனமல்ல.** மீரியாமும் எல்லா ஸ்திரிகளும் நடனமாடினார்கள். (யாத் 15:20), இளைஞர்களும், முதியோர்களும் சேர்ந்து நடனமாடினார்கள் (எரேமியா 31:13).
- **அந்த நடனத்திற்கென்று வயது வரம்பு இல்லை.** இளைஞர்களும், முதியோரும் ஒன்றாக ஆடினார்கள்.
- **பாடல்கள் பாடுவதும், நடனமும் ஒன்றுக்கொன்று உடன் சென்றது.** “சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று இந்த தாவீதைக் குறித்து அல்லவோ ஆடிப் பாடிச் சொன்னார்கள் என்றார்கள்” (1சாமு 29:5).
- **நடனமாடுவதெற்கென்று சரியான ஒரு நேரமுண்டு.** புலம்ப ஒரு காலமுண்டு, நடனம் பண்ண ஒரு காலமுண்டு. (பிர 3:4).
- **தேவன் தாமே நடனமாடுதலை திரும்பக் கொண்டு வரப்படும் என்று தீர்க்கத்தரிசனம் உரைத்திருக்கிறார்.** “ஆடல் பாடல் செய்கிறவர்களின் களிப்புள்ள கூட்டத்தோடே” (எரேமியா 31:4) கன்னிகைகளும், ஆனந்த களிப்பாய் மகிழுவார்கள் (எரேமியா 31:13).

**c. எச்சரிக்கை !!!**

மாம்சீகமான தன்மையோடு பாலியல் நடனமாடுதலானது, பின்மாற்றம், விக்கிரகராதனை, விபசாரம், பிரபஞ்ச லௌகீகம் என்பவைகளோடு இணைத்துக் கொள்ளப்படுகிறது. உதாரணத்திற்கு யாத் 32:19ஐ பார்க்கவும். பொற்கன்றுக்குட்டியைச் சுற்றி நடனமாடியது. சாத்தான் தனக்கென்று ஒவ்வொன்றிற்கும் ஒரு போலியான மாயையை வைத்திருப்பான். போலியானவை, மெய்யானவற்றின் உண்மையையும், அதன் ஆதிமூலத்தையும் நிரூபிக்கின்றது. சாத்தான் ஏதோ ஒன்றை மாயையாக ஆக்குகிறான் என்ற காரியத்திற்காக நாம் மெய்யானதை அப்பியாசிக்க வேண்டியதில்லை என்று அர்த்தமானது.

**7. ஒரு இசைக் கருவியை மீட்டுதல் (அ) இசைத்தல் :**

வேதாகமத்தில் இசைக்கருவிகளை அடிக்கடி பயன்படுத்தி துதிக்கவும், ஆராதனைக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய நாட்களின் ஆராதனையிலும் அவைகள் முக்கியமான பங்கை வகிக்கக்கூடும். “எக்காள தொனியோடே அவரைத் துதியுங்கள். வீணையோடும் சுரமண்டலத்தோடும் அவரைத் துதியுங்கள். யாழோடும், தீங்குழலோடும் அவரைத் துதியுங்கள். ஓசையுள்ள

கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள். பேரோசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள். "சங் 150:3-5ல் கட்டளையாகப் பெற்றிருக்கிறோம்.

**"ஆவிக்குள்ளாக" இசைத்தல்** தங்களது இசைக்கருவிகளால் துதிசெலுத்த விரும்புகிற இசைக் கலைஞர்கள் தாங்கள் செய்யும் பணியில் சிறப்பாக விளங்கும்படியாக இசைக்கவேண்டும். அவர்கள் தாங்கள் திறம்பட இசைக்க தங்கள் கருவிகளில் முழு ஈடுபாடு கொள்ளுதல் வேண்டும். (சங் 33:3) "நேர்த்தியாய் வாசிக்க வேண்டும்" இதற்காக கூர்மையான திறன்பாட்டு நுட்பம் அவசியமானது என்பதல்ல, அதுவும் மனிதனுடைய தேர்ச்சியான திறமையே காணிக்கையாக செலுத்துவதல்ல.

அது ஒரு ஆவிக்குரிய திறன்பாடு. இயல்பான தாலந்தைப் போன்றதுமல்ல. அதற்கான திறன்பாடானது, இசைக்கருவியை இசைப்பது மட்டுமல்லாது ஆவியின் மனப்பாங்கிற்கு வியாக்கியானப் படுத்துவதாகும். இதையே நாம் ஆவியில் இசைப்பது" என்று குறிப்பிடுகிறோம்.

- **தாவீது மிகவும் திறமையுடன் சுரமண்டலத்தை மீட்டி வாசித்து** சவுலிடமிருந்த பொல்லாத ஆவியை துரத்தி விட்டான். (1சாமு 16:23).
- **இசைக் கலைஞர்கள் தகுந்த சூழ்நிலைமையை உண்டாக்க முடியும்** - ஆவிக்குரிய ஈவுகளை கிரியை செய்வதற்கு ஏதுவான சூழ்நிலைமையையே.
- **4000 இசைக் கலைஞர்கள் கர்த்தரைத் துதித்தார்கள்.** தங்கள் இசைக்கருவிகளை வாசித்து சாலோமோன் கட்டிய ஆலயப் பிரதிஷ்டையின் போது, அவ்வாறு செயல்பட்டனர். (1நாளா23:5).

"அல்லாமலும் பெருவெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும் ஒரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். நாம் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப் போலிருந்தது. அவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாக புதுப்பாட்டைப் பாடினார்கள்". (வெளி 14:2-3). இது பரலோகத்தில் இசைக்கருவிகளும், இசைக்க கலைஞர்களும் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

## 8. அமைதி அல்லது மௌனம்

பாடல்கள் பாடுவது, இசைக் கருவிகளை இசைத்தல் நடனம் ஆகியவைகளால் உண்டாகும் சத்தத்திற்கு முற்றிலும் வித்தியாசமாக (மௌனத்தின்) அமைதியின் வாயிலாக துதியை வெளிப்படுத்தவதாகும். "மவுனமாயிருக்க ஒரு காலமுண்டு பேச ஒரு காலமுண்டு" பிரசங்கி 3:17.

இந்த மௌனத்தைப் பற்றி பயப்படாதிருங்கள். சில சமயங்களில் பரிசுத்த ஆவியானவர் திருச்சபையின் மேல் ஒரு பரிசுத்தமான அமைதியைக் கொண்டு வருவார். இந்த காலங்களில் இந்த மவுனமானது, ஆழமானதாகவும், சொல் வன்மையுடையதாகவும் ஆகிறது. இந்த மாதிரி காலப் பகுதிகளில் அடிக்கடி மகத்தான பயபக்தி உணர்வும், பெரும் மதிப்பும் உண்டாகின்றன. ஒருவர் அமைதியாகவும் தேவனுக்கு முன்பாக நிற்கவோ அல்லது உட்காரவோ கூடும். மேலும் அவரை ஆழ்ந்த சிந்தனையுடன் போற்றி துதிக்கவும் செய்யலாம். "நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்" (சங் 46:10).

## 9. அழுகையோடு

அழுகை என்பதும் நியாயமான பிரதிவசனமாக தேவனைத் துதித்தலாகும். இது ஒருவர் துக்கத்தினாலோ அல்லது இருதயத்தின் வேதனையால் உண்டாகும் அழுகை அல்ல. ஆனால் நன்றியுணர்வினாலும், நன்றி செலுத்துவதினாலும் ஆகும். சில சமயங்களில் நாம் தேவனுடைய மகத்துவத்தையும், அவர் நல்லவர் என்பதையும் தியானிக்கும் பொழுது இதற்கு உகந்த தகுதியான பிரதி கிரியையாவது, நன்றியறிதலை காணிக்கை கண்ணீராகச் செலுத்துவதாகும். இதைச் செய்வதற்கு நீங்கள் பயப்பட வேண்டாம். அது பலவீனத்தின் அடையாளமால்ல. கண்ணீர் பெருகி ஓடட்டும். நமது மனுஷீகமான பிரதிச் செயலாவது, அடிக்கடி கண்ணீர் விடாமல் இருப்பதுதான்.

என்னவென்றால் சில சமயங்களில் அழுகையானது, நமது ஆள்தன்மையின் மிகவும் ஆழமாக ஏக்கங்களை வெளிப்படுத்துவதின் பாணியில் வேறெந்த முறையும் செய்யவே முடியாது. இது அடிக்கடி ஆழமான விடுவித்தலையும், விடுதலையும் கொண்டு வருகிறது.

ஒருவர் அதிகமான அழுகைக்கு இடம் கொடுக்கக்கூடாது. இது உள்ளான மனுஷனுக்குள் ஏதோ ஒன்று தவறுதலாக இருக்கக் கூடும் என்பதற்கு அடையாளமாகும். அப்படிப்பட்ட காரியம் ஏற்படுமானால் உள்ளான மனிதனுக்கும் சொஸ்தமாகுதல் அவசியமாகும்.

நெகேமியா தேவனுடைய வார்த்தையைப் படித்து அதற்கு விளக்கம் சொல்ல ஆரம்பித்த பொழுது ஜனங்கள் அதைக் கேட்டப்பொழுது மனங்கசந்து அழுதார்கள். நெகேமியா அவர்களை சிறிது நேரம் அழும்படிக்கு அனுமதித்தான். ஆனால் அவன் அவர்களுடைய அழுகையைத் தடுத்துக் குறுக்கீடு செய்து, பின்னர் அவர்களுக்கு ஆலோசனை கூறினதாவது, “நீங்கள் போய் கொழுமையானதைப் புசித்து, மதுரமானதைக் குடித்து ஒன்றுமில்லாதவர்களுக்கு பங்குகளை அனுப்புங்கள். இந்த நாள் நம்முடைய ஆண்டவருக்குப் பரிசுத்தமான நாள், விசாரப்பட வேண்டாம். கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன்” என்றான்.

## 10. நகைச்சுவை

“பரிசுத்த நகைச் சுவை” என்ற ஒரு காரியம் இருக்கிறது. அதாவது, தேவனைப் பார்த்து வாஞ்சையான சிரிப்பு அவர்பால் எனக்கு வரும்பொழுது அவ்வாறு உண்டாகிறது. இது யாரோ ஒருவர் சொன்ன நகைச்சுவையான ஒன்றிற்கான பிரதியுத்தரம் ஆகாது. கர்த்தருக்குள் உச்சக்கட்டமான அதீதமான ஆனந்தமானது வெளிப்படும் பொழுது தேவனை நோக்கி அதைப் வெளிப்படுத்தும் மார்க்கமாவது சிரிப்பின் வழியாகவேதான் “இப்பொழுது அழுகிற நீங்கள் பாக்கியவான்கள். இனி நகைப்பீர்கள்” லூக்கா 6:21.

இஸ்ரவேல் புத்திரர் சிறையிருப்பில் இருந்து திரும்பி வந்தபொழுது இந்த அனுபவத்தை அனுபவித்தார்கள். “அப்பொழுது நம்முடைய வாய் நகைப்பினாலும், நம்முடைய நாவு ஆனந்த சத்தத்தினாலும் நிறைந்திருந்தது” (சங் 126:2).

“இதோ தேவன் உத்தமனை வெறுக்கிறதுமில்லை. பொல்.லாதவர்களுக்குக் கைகொடுக்கிறதுமில்லை. இனி அவர் உம்முடைய வாயை நகைப்பினாலும், உம்முடைய உதடுகளை கெம்பீரத்தினாலும் நிரப்புவார். (யோபு 8:20:21).

## 11. அணிவகுத்து முன்செல்ல

தேவன் தமது ஜனங்களை பார்த்து அடிக்கடி அணிவகுத்து முன்னே போகும்படி கூறினார். ஒருவேளை இதற்காக நன்கு அறியப்பட்டதான எடுத்துக்காட்டாவது, எரிகோவைச் சுற்றி அணி வகுத்து நடந்து வந்ததுதான், (யோசுவா 6:2-5). தேவனுடைய கட்டளைக்கு பிரதி கிரியையாக இஸ்ரவேலர் அணிவகுத்து நடந்து போனாாகள். அதனால் யெகோவா எரிகோவின் மதில்களை இடிந்து கீழே விழும்படியாகச் செய்தார்.

கர்த்தருடைய கட்டளைக்குப் பிரதிக் கிரியையாக அநேக மதிற்சுவர்கள் இன்னும் இடிந்து விழுந்து கொண்டே இருக்கின்றன. அவைகள் பெருமை, அவநம்பிக்கை, ஆவிக்குரிய அடிமைத்தனம் ஆகிய சுவர்களே (முதலியனவாகும்). யோசபாத்தும், அவனுடைய இராணுவத்தினரும் அணிவகுத்து நடந்து சென்றும் தேவனைத் துதித்துப் பாடிக்கொண்டும் சென்றார்கள். மேலும் தேவன் அவர்களுடைய சத்துருக்களை அவர்கள் எண்ணிக்கையில் குறைவாய் இருந்தாலுங்கூட அவர்கள் கையில் ஒப்புக் கொடுத்தார். (2நாளா 20:20:22).

பரிசுத்த ஆவியானவருடைய தூண்டுதலுக்குப் பிரதிகிரியையாக அநேகமான கூடிவரும் சபைகள் அணிவகுத்து சுற்றி நடந்து சென்றன. மதிற்சுவர்களான அடிமைத்தனம், பெருமை, கசப்பு போன்றவை கீழே இடிந்து விழுந்து விடும்படி செய்யப்பட்டன. இந்த மாதிரியான அணி வகுப்பை “எரிகோவின் அணிவகுப்பு நடை” என்று அழைக்கிறார்கள். மற்றவர்கள் அதை “மகிமையின் அணிவகுப்பு நடை” என்று அழைக்கிறார்கள்.

கிறிஸ்துவின் மணவாட்டி ஒன்று திரண்டு அணிவகுத்து முன்செல்லும் படைக்கு ஒப்பாக சித்திரிக்கப்பட்டுள்ளது. (உன்னதபாட்டு 6:4,16).

### 12. கெம்பீரித்தல்

கர்த்தருக்குள் கெம்பீரித்தல் என்பது, தேவனைத் துதிப்பதற்கு மற்றொரு வழியாகும். இராஜாவுக்கு முன்பாக தோன்றி நிற்பதற்கு சரியான வழிமுறையானது, கெம்பீரித்து முன் நிற்பதாகும். இது நாம் நம்முடைய ஸ்தானத்தில் ஆனந்தமாக இருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

நாம் இராஜாவின் பணிவிடைக்காரராக இருக்கும்படி நமக்குக் கொடுக்கப்பட்ட கௌரவத்திற்காக (கனத்திற்காக) நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்! தேவனுடைய ஜனங்களுக்கு அடிக்கடி சொல்லப்பட்டதாவது, “உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் சந்தோஷப்படுவீர்காளக” என்பதாகும் (உபா 12:13).

தேவன் அவர்களைச் சந்திக்க கூடியதோர் இடத்தை நிறு;விக் கொண்டிருந்தார். “உங்கள் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்து கொள்ளும் ஓர் இடம் உண்டாயிருக்கும். அங்கே நீங்கள் நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் ………. கொண்டு வந்து உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் நீங்களும், உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும், உங்கள் வேலைக்காரரும், உங்கள் வேலைக்கரிகளும், உங்கள் வாசல்களில் இருக்கிற லேவியனும் சந்தோஷப்படுவீர்களாக. (உபா 12: 11-12).

கெம்பீரித்தலாவது, நன்றி செலுத்துவதையும், துதித்தலையும் வெளிப்படுத்தக் கூடியவையாக உள்ள வழிகளாகும். நாம் ஒருவருக்கு வெகுமதியை அளிக்கும் பொழுது, அவர்களுடைய களிகூறுதலானது, அவர்களுடைய மகிழ்ச்சியையும், பாராட்டுதலையும் சுட்டிக்காட்டுவதாகும். ஆகையால், அதோடுகூட நாம் கர்த்தருக்கு முன்பாக கெம்பீரிக்கும் பொழுது, அவருக்குள் நமது மகிழ்ச்சியையும், அவருக்குள் நமது பாராட்டுதலையும் தெரியப்படுத்துகிறோம்.

## D.சாராம்சம்

இந்த துதித்தலின் தெரியப்படுத்தலின் சொற்கூற்றுகள் நமது இருதயத்திற்குள் இருந்து உண்மையாகவே கொடுக்கப்படும் துதியின் வெளிப்பாட்டுக்காக இருந்தாலன்றி, தகுதியுடையதாகாது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.

இந்தக் கருத்தக்களை சாதாரணமாக எடுத்துக் கொள்வது என்பது, ஒரு இயந்திரமயமான மனித ரோபோவைப் போலவே துதித்தல் என்பதற்கு இணையாகாது. அவைகள் நமக்குள் இருக்கும் வியப்பு நோக்கு, நன்றி செலுத்துதல், கனப்படுத்துதல் ஆகியவற்றின் சாதாரணமாக வெளிக்குத் தெரியப்படுத்துதல் என்பதன் வழிகளாகும்.

# ஆராதனை நடத்தும் தலைவர்களுக்கான வழிகாட்டும் முறைகள்

## ஆராதனையில் பரிசுத்த ஆவியானவரைப் பின்பற்றுக

தேவன் தமது ஜனங்களை அவர்கள் கூடிவரும் ஒவ்வொரு சமயங்களிலும் அவர்களைச் சந்திக்கும் படியாக வாஞ்சிக்கிறார். ஒவ்வொரு கூட்டம் கூடுகையிலும் தமது பிள்ளைக்ளுக்கு புதிதானதும் படைப்பாற்றலுக்குரிய காரியங்களைச் செய்யும் படியும், சொல்லும் படியுமாக இருக்கிறார். ஆனால், சில சமயங்களில் தேவனைச் சந்திக்கும் படியான இடத்தை எப்படி சரியாக எப்படி கண்டுபிடித்து அறிந்து கொள்வதும், ஆராதனையின் போது மகாபரிசுத்த ஸ்தலதிற்குள் எப்படி உட்பிரவேசிப்பது என்பதை சரியாக அறிந்து கொள்வதும் கடினமாகும்.

ஆராதனைக்குள் தேவனை அணுகுவதற்கான மாதிரிகள் வேதாகமத்தில் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இது ஒரு கடினமாக விதியான பிரமாணமாக நாம் கூடிவரும் ஒவ்வொரு சமயங்களிலும் அவ்வாறே சரியான படியாக பின்பற்றப்படுவதற்காக அல்ல. அல்லவென்றாலும், இது ஒரு வழிகாட்டி முறையாக உன்னையும் நீ வழிநடத்தச் செல்பவர்களும் தேவனை தங்கள் ஆவியில் உண்மையாகவே ஆராதிக்கும் படியாக ஆயத்தம் செய்யவும் நீ கூடிவரும் ஒவ்வொரு சமயத்திலும் தேவன் தாம் உங்களுக்கு வழங்குவதற்காக வைத்திருப்பதைப் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் இருதயங்களை ஆயத்தப்படுத்த உதவி செய்து உதவுவதற்காகவே அவைகள் இருக்கின்றன.

## ஆராதிப்பதற்கான ஒரு தெய்வீக எடுத்தக்காட்டு மாதிரி

சங்கீதம் 100ல், தெகய்வீக ஆராதனை வழிபாட்டு முறை அல்லது எடுத்துக்காட்டு மாதிரியானது, தேவனுடைய சந்நிதானத்திற்குள் வருவதற்காகத் தரப்பட்டுள்ளது.

“கர்த்தரை கெம்பீரமாய் பாடுங்கள்” “மகிழ்ச்சியோடே கர்த்தருக்ககு ஆராதனை செய்யுங்கள்” ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதி முன் வாருங்கள்” “அவர் வாசல்களில் துதியோடும்” “அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து” “அவரைத் துதித்து அவர் நாமத்தை ஸ்தோத்தரியுங்கள்” (சங்கீதம் 100: 1-4).

சாதாரணமாக ஆசரிப்புக் கூடார வாசலில் ஆராதனையானது கர்த்தரை கெம்பீரமாய் பாடுவதிலிருந்து ஆரம்பிக்கிறது. அதற்கு பின்னர் தானே சங்கீதக்காரன் நமக்கு சொல்கிறதாவது, ஜனங்கள் வாசல் வழியாகப் பிரவேசித்து, ஆலயப் பிரகாரங்களுக்குள் வருகிறார்கள் என்று கூறுகிறார். அந்த ஆசரிப்புக் கூடாரம் தேவனுடைய பிரசன்னம் இருக்கும் சந்நிதியைக் குறிக்கிறது. எபிரேயர் இந்த சங்கீதத்தின் அமைப்பு முறையைப் புரிந்து கொண்டார்கள். அவர்கள் மகிழ்ச்சியோடே பாடிக்கொண்டு பண்டிகை நாட்களில் எருசலேமுக்குப் போவார்கள். உண்மையிலே சங் 120-134 வரை அவர்களுடைய பிரயாணக் காலங்களுக்கு ஞானப்பாட்டு கீதப் புத்தகமாக இருந்தது. அந்த பாடல்கள் அவர்களுக்காக அவர்கள் பிரயாணத்தை மீள்பார்வை செய்தும் கர்த்தரை தேவனுக்குள் அவர்களுடைய விசுவாசத்தைக் கிளர்த்தெழுந்திருக்கச் செய்தது. இந்த சங்கீதங்கள் அவர்கள் இருதயத்தையும் சிந்தனையையும் கர்த்தரைச் சுற்றி ஒருமைப்படுத்தியது.

இந்த தொகுதி சங்கீதங்கள் மனிதனுடைய தேவைகளைச் சொல்லி ஆரம்பிக்கிறது. “என் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிடடேன்” (சங் 120:1) அது தேவனுடைய ஆலயத்தில் (பரிசுத்த ஸ்தலத்தில்) மனிதன் தேவனை ஆசீர்வதிப்பதோடு முடிவடைகிறது. “உங்கள் கைகளை பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுத்து, கர்த்தரைத் ஸ்தோத்தரியுங்கள் (சங் 134:2).

அவர்களுடைய ஆராதனை பயணமானது, என்னவென்றாலும், நமது இன்றைய நாட்களில் துதி ஆராதனைகளுக்கு கூடுதலான அர்த்தத்தைக் கற்பிக்கிறதாய் இருக்கிறது. நாமுங்கூட பிறமக்களை அவர்களுடைய தனிப்பட்ட தேவைகளில் இருந்து தேவசந்நிதியின் மகிமையின் மட்டத்திற்கு உயர்ந்து விடும்படியாக உதவிசெய்ய வேண்டும்.

## தேவ ஜனங்களை ஆராதனையில் வழிநடத்துதல்

சங்கீதங்களிலிருந்து பாடல்களைப் பாடுவதற்கான ஒரு முக்கியமான நோக்கம் உண்டென்று நாம் பார்த்தோம். அதன் கிரியையாவது, நம்மை நமது ஜீவியங்களின் அழுத்தங்களிலிருந்து நம்மை தேவனுடைய பிரசன்னத்துக்குள் உயர்த்துவதாகும்.

நமது ஆராதனைக் கூடிவருதலுக்கு நம்மை தேவனை நோக்கி வழி நடத்துவதற்காக ஆவிக்குரிய கட்டளை தேவையாகும். அந்த வழி நடத்துதல் நமக்கு இராவிட்டால் நமது பாடல்கள் பாடுவதான கிரியையானது, நோக்கமற்ற செயல்பாடாக திருப்தி செய்வதாகும். ஆனால் ஒருவேளை ஆவிக்குரிய நோக்கமற்றதாகும்.

ஏறக்குறைய யாராவது ஒருவர் "பாடல்களை நடத்தலாம்". ஆனால் மக்களை அவர்கள் பாடும்பொழுது நடத்துவது அதிகக் கடினமாகும். ஒரு வழிநடத்துபவர் ஆராதிப்பவராக இருக்க வேண்டும். அவர் மற்றவர்களைப் பாடல்களில் வழி நடத்த வேண்டுமென்றால், அவரே அவ்வாறு இருக்க வேண்டும். அவர்தான் எங்கே இருக்கிறோம் என்பதையும், எங்கே போகிறோம் என்பதையும் அவர் வந்து எப்போது சேருவார் என்பதையும் அறிந்திருக்க வேண்டும். எனென்றால், அவர் அநேக மணி நேரத்தைத் தனிப்பட்ட முறையில் தேவனை ஆராதிக்கும் காரணத்தினாலே தான்.

<u>தேவனுடைய ஜனங்களை அவர்கள் எங்கே இருக்கிறார்களோ அங்கு அவர்களை சந்திக்கும்படியாக</u>

ஜனங்களை நடத்திச் செல்வது எப்பொழுதும் மக்கள் எங்கே இருக்கிறார்களோ, அங்கே போய் அவர்களைச் சந்திப்பதுதான். ஆராதனை தலைவர்கள் மக்களுடைய தற்போதைய ஆவிக்குரிய ஸ்தானத்தை அல்லது நிலைமையை உணர்ந்தறிந்து கொள்ள வேண்டும். அவர் அப்படிச் செய்யாவிட்டால், அவர்களை அவர் முற்றிலுமாக அடைய முடியாமல் ஆகிவிடுவார்.

அநேகமான திருச்சபை ஆராதனைகளில் மக்களுடைய ஆவிக்குரிய மட்டத்தைக் கண்டுபிடித்துக் கொள்வது கடினமாகாது. அவர்கள் மிகுதியானவர்கள் சாதாரணமான அனுதின ஜீவியத்தின் நடவடிக்கைகளில் இருந்து வந்திருப்பார்கள். அவர்களுடைய சிந்தனையானது, மக்கள், இடங்கள், காரியங்கள், தனிப்பட்ட வேலைகளில் சுறுசுறுப்பாக இயங்குவதாக இருக்கும். அவர்கள் தங்களையும், தங்களைச் சுற்றியுள்ள உலகத்தையும் மையமாகக் கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்கள் அனைவரும் கூடி சேர்ந்து "எருசலேமுக்குப் போகும் தங்கள் பயணத்தை ஆரம்பிக்கும் படியாக வந்திருப்பார்கள்". இந்த ஆராதனை நடத்தும் தலைவர் அவர்களுடைய தனி நிலைமையைச் சம்பந்தப்பட்டதாக இருக்கும் பாடல் அல்லது பல்லவியைத் தெரிந்து கொண்டு விவேகத்துடன் தொடங்குவதாக இருக்கலாம். அப்படிப்பட்ட பாடல்களில் அடிக்கடி "நான்", "என்னை", "எனக்கு", "நாம்", "நம்மை", "நம்முடைய" வார்த்தைகள் பல எண்ணிக்கையில் அவைகளுக்குள் அடங்கி இருக்கும். அவைகள் மிகவும் வல்லமையாக மக்களுடைய உணர்வுகள், தேவைகள், வாஞ்சைகள் ஆகியவற்றை தேவனுக்காக தொடர்புள்ளதாக ஆக்கிவிடும். மக்கள் எங்கிருக்கிறார்களோ அங்கே இது சென்றடைந்து விடும். எங்கேயென்றால் ஆராதனை வழிபாட்டின் முதல் பகுதியிலே நேரிடக் கூடும்.

இந்த ஆராதனை நடத்தும் தலைவரின் இலக்காவது, மக்களை சாந்தமாகவும், படிப்படியாகவும், ஆராதனையின் உண்மையான பரிசுத்தமான இடத்திற்குள் கொண்டு வர வேண்டும். ஆனந்தக் களிப்புள்ள துதிப்பாடல்கள் தேவ ஜனங்களை அவர்களுடைய பிரபஞ்சத்தின் பாரமான கவலைகள் அழுத்தங்களிலிருந்து தூக்கி எடுத்து உயர்த்திவிடும். அவர்களுடைய முகங்கள் இப்பொழுது எருசலேமுக்கு நேராகத் திருப்பப்பட்டுப் பயணமானது, ஆரம்பிக்கப்பட்டு விடுகிறது.

## தேவஜனங்களை நன்றி கூறி செலுத்துவதற்கு நடத்திச் செல்லுதல்

"அவர் வாசல்களில் துதியோடும் பிரவேசித்து" (சங் 100:4), நன்றி கூறுதலான பாடல்கள் மக்களை ஆலயத்தின் வாசல்களின் வழியாய் பிரகாரங்களுக்குள் கொண்டு வந்து விடுகிறது. அவர்கள் தங்களுக்கும் தங்களுடைய பிரபஞ்ச காரியங்களுக்கும் அப்பால் பார்க்க தயாராகிக் கொண்டு பரிசுத்த பூமியில் தங்களுடைய இடத்தை பிடித்துக் கொள்கிறார்கள். அவர்கள் தங்களுடைய தேவைகளைப் பற்றியும் தேவன் மேல் அவர்களுக்கு உள்ள வாஞ்சையைப் பற்றியும் பாடுகிறார்கள். இப்பொழுது அவர்கள் தங்களுடைய எண்ணங்களை (யோசனைகளை) அதிகமாக தேவனுக்காக அவருக்காகவே நோக்கிச் செலுத்தி தேவன் அவர்களுக்கு என்ன செய்தாரோ அவற்றிற்காக நன்றி செலுத்தும்படியாக விரும்புகிறார்கள்.

நன்றி கூறுதலான செலுத்தும் பாடல்கள் மகிழ்ச்சியும் களிப்புமான பாடல்களாகும். இப்பொழுது மக்களுடைய கவனம் அதிகமாக கர்த்தர் மேலும், அவருடைய ஈவுகள் மீதும் செலுத்தப்பட்டு அவர்களையும், அவர்களுடைய தேவைகளை விட அதிகக் கவனம் பெறுகிறது. விரைவில் அவர்கள் தேவனை உயர்த்தித் துதித்தலுக்குள்ளாகப் போவதற்கு ஆயத்தமாகி விடுவார்கள். ஒரு தீர்க்கமாக உணர்ந்து கொள்ளக் கூடிய பாடல் தலைவர் அந்த அடுத்த படிக்குப் போவதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளுவார்.

## தேவ ஜனங்களை துதிக்கு நடத்திச் செல்லுதல்

நன்றி கூறி செலுத்தின நேரத்திற்குப் பிறகு தேவ ஜனங்கள் அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும், பிரவேசிப்பதற்கு ஆயத்தமாகிறார்கள் (சங் 100:4) துதித்தல் என்பது, நன்றி செலுத்துதலுக்கும், ஆராதனைக்கும் இடையேயுள்ள பாலமாகும். நாம் துதித்தலுக்கான ஆலய உட்பிரகாரங்களுக்குள் நாம் உண்மையாகவே அந்த மகாபரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கும்படியாக ஆயத்தமாகிறோம். ஆகையால் நமது துதித்தலானது, தேவனுக்கு அவருடைய அநேக ஆசீர்வாதங்களுக்காக நன்றி கூறுதலுடன் ஆரம்பித்து விடுகிறது. என்னவென்றாலும் துதித்தலானது, நாம் தேவனை அவர் அவராக இருப்பதற்காகத் துதித்து அவரை ஆசீர்வதிப்பதுடன் முடிவடைகிறது. அவர் நமக்காக என்ன செய்தார் என்பதற்காக அல்ல.

துதித்தலானது, நம்மைப் பெற்றுக் கொள்வதிலிருந்து கொடுப்பதற்கு இட்டுச் செல்கிறது. தேவனுடைய ஊழியத்திலிருந்து நமக்கும் நம்முடைய ஊழியத்தில் இருந்து அவருடைய ஊழியத்திற்குமாக எடுத்துச் செல்கிறது. துதித்தலானது, அதிகமான செயல்பாட்டுடனும் உணர்ச்சியுடனும், இயக்கத்திலிருந்து உணர்ச்சிக்கும் போகிறது. கர்த்தருக்குள் நமது மகிழ்ச்சியை உரத்த குரலிலும், கைக் கொட்டியும் புனிதமான நடனத்துடனும் வெளிப்படுத்தலாம். நாம் ஒன்றாக இணைந்து அறிக்கை செய்தும், தேவனுடைய வல்லமை, நல்லவர் என்பதையும், மகிமையையும் வெளிப்படுத்துகிறோம்.

நாம் பரிசுத்த ஸ்தலத்தை அணுகும் பொழுது என்னவென்றாலும், நமது துதியானது பக்திகலந்த அன்புக்கும் பரிசுத்தமான பயபக்திக்கும் நெருக்கமாகச் சேர்ந்து கொள்கிறது. அங்கே குறைந்த அளவு இயக்கமும் சில சமயங்களில் பரிசுத்தமான அமைதியும் சபையின் மேல் இறங்கி வருகிறது. நமது கவனமானது, தேவனுடைய அழகிற்கும் கெம்பீரத்திற்கும் மகத்தான அன்பின் பாலும், ஈர்க்கப்படுகிறது. இந்த விதமான பரிசுத்த வியப்பானது ஆராதனையிலிருந்து ஒரு அடி அப்பால் உள்ளது. நம்மிலிருந்தும் மற்றவர்களில் இருந்தும் ஒரு இயக்கமானது அப்பாற்பட்டு கர்த்தருக்குத் தமக்காகவே இருப்பதை நாம் கவனிக்கிறோம். நாம் எவ்வளவு நெருக்கமாக அவருக்கருகில் வருகிறோமோ நமது பயபக்தியானது, அந்த அளவுக்கு ஆழமானதாகவும் நோக்கமுடையதும் ஆகிறது. இப்பொழுது நாம் சிறிது நன்றாகவே ஆராதனைக்காக துதியானது, நம்மை ஆயத்தப்படுத்தும் இடத்தை விளங்கிக் கொள்ள முடிகிறது.

துதிப்பாடல்களானவை, தேவன் நல்லவர் என்பதையும், அவருடைய மகிமையையும் மையப்படுத்த வேண்டும். அவருடைய ஆச்சரியமான கிரியைகளையும், பிரகாசமான அவருடைய ஒழுக்கத்தின் அழகையும் கொண்டாடுவதற்கு, இதுவே ஒரு நேரமாகும். சிறிது நேரத்திற்கு பின்னர் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ஜனங்களை பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக நடத்திச் செல்வார். அந்த சமயத்தில் துதியை வெளியில் சொல்லுவதானது உண்மையான வழிபாட்டின் பரிசுத்த அழகாகவே சாந்தமாகிவிடும்.

இந்த ஆராதனைத் தலைவரானவர் தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் மக்களிடையே அசைவாடுதலை உணர்ச்சி பூர்வமான அறிந்து கொள்ள வேண்டும். அவர்களை மெல்ல மெல்ல வழி நடத்துவது, அவரது கடமையாகும். சில சமயங்களில் ஜனங்களை தாங்களாகவே அவர்கள் ஒரு ஆராதனை மட்டத்திலிருந்து மற்றொன்றுக்குச் செல்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளச் செய்வது நலமாயிருக்கும்.

வார்த்தைகள் விவேகத்ததுடன் தெரிந்து கொள்ளப்பட்டும் என்னவென்றாலும் நாம் அதிகமாகப் பேசக்கூடுமாதலால் அல்லது தேவனுடைய ஆவியானவர் கிருபையாய் பெருகி ஓடிவருவதற்கு உதவியாக இருப்பதைவிட ஒரு வழியில் தடைசெய்யக் கூடும். ஜனங்களுடைய கவனமானது, எப்பொழுதுமே தேவனையே நோக்கியதாக இருக்கவேண்டும். ஆராதனை நடத்தும் தலைவரை

நோக்கியல்ல. துதிக்கும் துதியின் வெளிப்பிரகாரமானது சற்று அதிகமாகவே விசாலமான இடமாகும். ஆகையால் நாம் மிகவும் அவசரப்பட்டு ஜனங்களை ஆராதனையின் இந்தப் பகுதியின் வழியாக துரிதப்படுத்தக் கூடாது. அவர்கள் தகுந்த ஆயத்தம் உள்ளவர்களாய் மகாபரிசுத்த ஸ்தலமாகிய ஆராதனைக்கு வந்திருப்பது முக்கியமானதாகும்.

## நற்கந்தம் பரப்பும் புகையைபோல

ஆம்! நாம் எவ்வளவுக்கு மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு அருகாமையில் வருகிறோமோ நமது பாடல்களும் அவ்வளவுக்கதிகமாக கர்த்தர் தாம் பேரில் மையமாக கொண்டிருக்கும். "அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடு பிரவேசித்து அவருடைய நாமத்தை ஸ்தோத்தரியுங்கள்" (சங் 100:4).

நம்மை பற்றியும் நமது தேவைகளை, தேவனுக்காக நமது வாஞ்சைகளைப் பற்றியும் பாடிக்கொண்டு நகரத்து சுவர்களுக்கு புறம்பே "நமது பயணத்தை ஆரம்பித்தோம். நாம் முடிவாக கர்த்தரைத் துதித்துக் கொண்டு 'பரிசுத்த ஸ்தலத்தின் உள்ளே" கடைசியாக இருப்போம். பழங்காலத்து திருச்சபையின் கீதங்கள் தேவனுடைய பரிசுத்தமான பண்பை கனப்படுத்தி மகிமைப்படுத்துவதற்காக எழுதப்பட்டவை. அவரது மாட்சிமையையும், மகிமையையும், வல்லமையையும் - அவருடைய கிருபை நல்லவர் என்பதையும், மகிமையையுமே பிரஸ்தாபப் படுத்துகின்றன.

அவைகள் திருத்துவத்தின் ஒன்று அல்லது அதிகமான பரிசுத்த திருத்துவத்தின் அங்கத்தினர்களை நோக்கிப்பாடப்பட்டவை. பிதா, சுதன் -பரிசுத்த ஆவியானவர் ஆகியவர்களைப் பற்றியே தான். அந்த ஆராதனைத் தலைவர் தேவனுடைய பிரசன்னத்தின் மகிமை, சௌந்தரியம் இவற்றிற்குள்ளாக மக்களைக் கொண்டு வரமுடியுமானால், அவர்களுடைய பிரதிக்கிரியையில் ஓர் உயர்வு இருக்கலாம். அவர்களுடைய ஆராதனைக்கு ஓர் ஆழமும் பயபக்தியும் அவர்களது ஆத்மீக உணர்ச்சிகளுக்கும் அப்பால் போகும். களிகூறுதலான துதியும் கைக்கொட்டுதலும் வெளிபிரகாரத்தில் நியாயமானதும் சரியானதுமாகும். என்னவென்றாலும் மகாபரிசுத்த ஸ்தலத்தில் அவர்கள் கைகளை உயர்த்துவதற்கும் மேல் நோக்கிய முகங்களுக்கும் வழி செய்து கொடுக்கிறார்கள். பயபக்தியும் போற்றுதலுமான மனப்பான்மையும், மரியாதையும் அன்புமாக நற்கந்தம் வீசும் புகைக்காடான மேகமாக அந்த பரிசுத்த ஸ்தலத்தை நிரப்பி பரிமளிக்கச் செய்கிறது.

## ஜனங்களே ஆராதனை செய்யட்டும்!

இங்கேதான் இந்த குறிப்பிட்ட மையத்தில் சில ஆராதனைத் தலைவர்கள் ஒரு ஆபத்தானத் தவறைச் செய்கிறார்கள். அவர்கள் ஜனங்களைக் குலுக்கி வெளிப்பிரகாரத்திற்குள் நன்றி கூறும் மகிழ்ச்சியான பல்லவியை அடுத்தடுத்து முடுக்கி விடும் தாளங்களோடு திரும்பவும் கொண்டு போகிறார்கள். இந்த விதமாக தீடீரென ஏற்படும் இடைவெளியும் கட்டளையும் ஆராதனையின் முழுவதுமான நோக்கத்தை அழித்து விடக்கூடும்.

அந்த மனுஷீக சிந்தனையானது, ஒரு அமைப்பிலிருந்து, மற்றொன்றிற்கு மனிதனுடைய ஆவிக்கு கூடுமானதை விட மிகவும் வேகமாகத் தாவி குதித்துப் போகமுடியும். ஜனங்களுடைய ஆவிகளை தேவனுடைய பிரசன்னத்தை உணர்ந்து களிகூறும்படி அனுமதிக்கவும். கர்த்தரை பரிசுத்த அலங்காரத்துடனே தொழுது கொள்வதற்கு கால நேரம் ஆகியவை எடுத்துக் கொள்ளுகிறது.

மக்களை துரிதப்படுத்த வேண்டாம். அதே பல்லவியை அல்லது கீதத்தை அவர்கள் பாடும்படியாக அனுமதித்து அவர்களுடைய இருதயத்திலுள்ள உண்மையான ஆராதனையின் எடுத்துக்காட்டு வெளிபடுத்தலாக ஆகும் வரைக்கும் அவர்கள் பாடவும் தேவனுடைய பிரசன்னத்துக்கு உள்ளும் வெளியுமாக வெளியே ஓடி வருவது மனிதனுடைய இருதயத்திற்குத் திருப்தி அளிக்காது அல்லது தேவனுடைய இருதயத்துக்குங்கூட அவ்வாறு இருக்க முடியாது.

ஆம் மக்கள் ஆராதனை செய்யட்டும். இந்த நேரத்தில் பேச்சு என்பதற்கே அவசியமில்லை. மெதுவான குறிப்புரைகளுங்கூட முழுவதுமாக அந்த இடத்திற்கு புறம்பானதாகும். ஆராதனைக்குரிய கட்டளைகளுக்குங்கூட இப்போது அவசியமுமில்லை, விரும்பத்தக்கதும் அல்ல. சற்று ஜனங்களை மட்டும் ஆராதனை செய்யும்படியாக விட்டுவிடவும்!.

## அந்நியோந்நியமான ஐக்கியத்தின் அழகியதோர் உணர்வு

மௌனம் என்பது சுறுசுறுப்பான பாட்டுத்தலைவனுக்கு மிரட்டுதலாக இருக்கலாம். ஆனால் ஆராதனை செய்பவருக்கு அது இனிமையானதாகும். ஆர்கன் அல்லது மற்ற இசைக்கருவியில் இசைக்கப்படும் மெல்லியதான ஸ்தாயின் இசைக்கப்படுகிற சுரத்தில் கொடுக்கப்படுவதாவது ஆராதனைக்குகந்த பின்னணியாகும். மெல்லிதாக வாய்க்குள் பாடுவது அல்லது இனிமையாக ஆவியில் நிறைந்து பாடுவதானது, ஆராதனையை செய்கிறவர்களை ஒரு தகுந்த கால நேரத்திற்கு இழுத்துச்செல்லும் தன்மையுடையது.

இதற்கு அதிகமாக ஒன்றும் அவசியமில்லை. "ஆனால் அது உண்மையாகவே பாடுவது ஆகாது". நீங்கள் சொல்லுவீர்கள் அது அப்படி அல்ல. பாடுவதின் நோக்கமாவது, தேவ ஜனங்களை ஆராதனைக்குள் நடத்தி செல்வதற்காகவே. பாட்டு பாடுவது தன்னில் தானே ஒரு முடிவாகாது. அது ஜனங்களை தேவ பிரசன்னத்திற்குள் கொாண்டு வரும் ஒரு மார்க்கமாகும்.

ஆராதனை செய்யும் ஆவியானது, தேவ மக்கள் மீது அமர்ந்து இருக்கட்டும். நீங்கள் அவசரபட வேண்டாம். ஆராதனை என்பது ஒரு சாதுவான புறாவைப் போல தீடீரென ஏற்படும் அசைவு இயக்கங்களால் எளிதாக பறக்கவிடப்படக் கூடும். தேவனுடைய பரிசுத்தமான வியப்புக்குரிய பிரசன்னத்தில் கர்த்தருக்காகக் காத்திருப்பது மியவும் நல்லதாகும். அங்கே கர்த்தருடன் ஓர் அழகிய அந்நியோந்நியமான ஐக்கியம் உண்டாயிருக்ககும். அதுவும் ஒருவருக்கொருவருடன் - அது வேறெந்த வழியிலும் வரமுடியாததாகும்.

## விசுவாசத்தில் பதிலிறுத்தல்

ஆராதனை நேரமானது முடிவடையும் படி வரும்பொழுது அதில் ஓர் இனிமையான நிறைவுணர்வும் பூரணமடைதலும் இருக்கிறது. நாம் (கர்த்தருக்கு) ஊழியம் செய்தோம், தேவனுடைய இருதயத்தை மகிழ்ச்சி அடையச் செய்தோம். ஆகவே அவர் நம்மை சந்தித்திருக்கிறார்.

இந்த மாதிரியான நேரத்தில் ஆராதனையின் திசைப்போக்கு மாறலாம். அடிக்கடி தேவன் இப்பொழுது அவருடைய ஆவியின் வரங்களால் நமக்கு கிரியை செய்கிறார். தேவனுடைய மக்கள் அவர்கள் மேல் பரிசுத்த ஆவியின் அசைவாடுதலுக்கு விசுவாசத்தில் பிரதிகிரியையாக ஓரிடத்தில் நிலைத்திருக்கின்றனர். அவர்கள் கவனித்துக் கேட்கவும், பேசவும் தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கும் அறிவு நிறைந்த வார்த்தைகளுக்கும், ஞானத்திற்கும் வியாக்கியானத்துடன் பாஷைகளுக்கும் செவிகொடுத்துக் கேட்பதற்கு ஆயத்தமாகி விடுகிறார்கள்.

ஆராதனையானது, தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதற்கும், நம்முடைய இருதயங்களை தயாராக்குகிறது. விவேகமும் உணர்ச்சி பூர்வமுமான பிரசங்கிப்பவர் ஆராதனையின் ஆவியினால் உண்டாக்கி வைக்கப்படும். அதே பாவனையிலும் மனோ நிலையிலும் இயங்கிக் கொண்டிருப்பார். ஆராதனையின் ஒவ்வொரு பகுதியும், தேவனுடைய ஆவி பிரவாகித்து ஓடும் போக்கில் தானும் போக வேண்டும்.

## உண்மையான ஆராதனைத் தலைவரின் குறிப்படையாளங்கள்

ஆம், ஜனங்கள் ஆராதனைக்குள்ளாக நடத்தப்பட வேண்டும். அவர்கள் சாதாரணமான இயல்பானதிலிருந்து ஆவிக்குரியதற்கும், பிரபஞ்சத்திற்கும் உரியதிலிருந்து பரலோகத்திற்கு உரியதற்கும் முன்னேறி அசைந்து போக வேண்டும். அவர்களுடைய தேவைகள், வாஞ்சைகளில் இருந்தும் தூக்கி உயர்த்தப்பட்டு கர்த்தர் தாம் தம்முடைய பரிசுத்தமான பிரசன்னத்திற்குள் போக வேண்டும்.

<u>மெய்யான ஒரு ஆராதனைத் தலைவருடைய குறிப்படையாளங்கள், ஆகையால் சாதாரணமாகவே இந்த மாதிரியாக இருத்தல் வேண்டும். அவர்கள் தேவனுடைய ஜனங்ககளை மெய்யாகவே ஆராதனைக்குள் நடத்த முடியும். அவனே/அவளே ஆராதனையில் அதிகமான மணி நேரத்தைச் செலவிட்டு, மேலும் தேவனுடைய பிரசன்னத்திலும் செலவிட்டுவிடுவதால் ஜனங்களை எப்படி ஆராதனையில் நடத்தி செல்வது என்பதையும் அறிவார். ஆம் இதுதான் ஊழியமாகும்!</u> இதில் அவர் வெற்றி பெறுவாரானால், ஒரு பாட்டு நடத்தும் தலைவராய் இருப்தற்கும் அதிகமாக அவர் ஆராதிப்பவர்களுக்கு உண்மையுள்ளவராக இருப்பார்!

# செயலூக்கமான ஆராதனையை எப்படி நடத்துவது

## அதிகாரம் 1 கர்த்தருடன் ஒரு வல்லமையான உறவுத் தொடர்பை நிலைநிறுத்திக் கொள்ளும் படியாக

சில காலங்களுக்கு முன்னே ஒரு மூத்தபிரமுகருடன் இந்த ஆண்டுகளில் போக்கில் அவருடைய முன்னுரிமைகள் எவ்வாறு மாறுபட்டிருக்கிறது என்று வினவிக் கொண்டிருந்தேன். இளைஞனாக அவருக்கு சில குறிப்பிட்ட காரியங்கள் முக்கியமானவை என்று கற்பிக்கப் பட்டிருந்தது. காலப் போக்கில் அந்த பண்பாடுகளை கைவிட்டு விட்டு புதிய குறிக்கோள்களை அவர் தழுவிக் கொண்டார். அவர் வள்ச்சியில் ஆண்டுகளையும், ஞானத்தையும் அடைந்த பொழுது தன்னை முற்றிலும் முரண்பாடக செயல்படுவதாகக் கணடறிந்து கொண்டார். அவர் பின்னாக விட்டு வந்த அதே காரியங்கள் மறுபடியும் முதல் முன்னுரிமை பெற்றவைகளாக ஆகியிருந்தன. ஒரு இளைஞனாக தான் கற்றுக் கொண்டவைகளின் தராதரம் எப்பொழுதுமே நீடித்து நிற்கிற பெரு மதிப்பைப் பெற்றவை என்பதை உணர்ந்து கொண்டார்.

என்னுடைய தலைமைத்துவ ஆராதனை ஆண்டுகளில் நானும் இதே மாதிரியான (போன்ற) நடைமுறையைக் கடந்து வந்திருக்கிறேன். நாம் முதலாவதாக ஆராதனை நடத்துவதை ஆழமானதும் தீவிரமானதுமான கர்த்தருக்கு நன்றியறிந்து செலுத்தும் உணர்வினால் தூண்டப்பட்டு அவ்வாறு செய்ய ஆரம்பித்தேன். அவர் என்னை இரட்சித்திருக்கிறார். சங்கீதக்காரன் சொன்ன பிரகாரமாகவே அவர் என்னை பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கி எடுத்து என் கால்களைக் கன்மலையின் மேல் நிறுத்தி என் அடிகளை உறுதிபடுத்தியுமிருக்கிறார் (சங் 40:2) என்னுடைய பாராட்டுதலை வாய்மொழியாகச் சொல்ல வாஞ்சித்தேன். என்னை இரட்சித்ததற்கும் அப்பால் அவர் என்னுடைய சிநேகிதனும் உற்ற தோழனுமாய் இருக்கிறார். இன்றைய நாளிலும் கூட அந்த சர்வவல்லமையுள்ள தேவன் சகலதிற்கும் சிருஷ்டி கர்த்தாவானவர் என்னை வாஞ்சிப்பாரா என்பதைப் புரிந்து கொள்வதில் நான் மிகவும் கஷ்டப்படுவேன். ஆனாலும் நான் அவருடைய வார்த்தையின் சத்தியத்தை ஏற்றுக் கொண்டபடியால் மேலும் என் இருதயமானது முடிவில்லாத நன்றியறிதலை தேவனுக்காக என் உள்ளத்தில் நிரப்பியிருக்கிறது.

நான் கர்த்தருடன் சேர்ந்து நடக்க ஆரம்பித்ததிலிருந்து, இதனால் எனக்கும் மற்றவர்களுக்கும் அவர் என்னை தலைமைத்துவத்திற்காக அழைத்திருக்கிறார் என்பது வெளிப்படையானது. ஆகையால் என்னுடைய நன்றியறிதலான உணர்வானது, மற்றவர்களுக்குள்ளும் இயல்பாகவே வழிந்தோடி விடுவதால், நானும் மற்றவர்களை இதே போன்ற பாராட்டுதலை வெளிப்படுத்தவும் அல்லது ஆராதனையிலும் முடிவாக நிற்பேனாக. ஆனால் இந்த வெளியில் எடுத்துச் சொல்வது என்பது மட்டும் எனக்கு மிகவும் முக்கியமானதாக மற்றவர்களை அதற்குள் நடத்துவதை விட அதிகமாகக் காணப்பட்டது. நான் தேவனை சரியான இயல்பாகவே அன்பு கூர்ந்து கனப்படுத்த விரும்பினேன்.

காலம் போகப்போக என்னவென்றாலும், ஆராதனையை நடத்தும் வழிமுறையில் மற்ற திறன்பாடுகளும் அதில் பங்கு கொண்டது என்பதை உணர்ந்து கொள்ள ஆரம்பித்தேன். என்னுடைய இசைத் திறமைகளும், புரிந்து கொள்ளுதலும் அதிகமாகவே முக்கயமானதானது. நான் இசை இசைக்கும் வகையையும் பாணியும் உபயோகப்படுத்தப்படுவதையும், அது பாடல் ஆராதனையில் அதன் தாக்கத்தையும் பார்த்தறிந்தேன். நான் ஜனங்களுடைய உறவுத் தொடர்பு எவ்வாறு ஆராதனையை பாதிக்கிறது என்பதை புரிந்து கொள்ள ஆரம்பித்தேன். மற்ற இசைக்கலைஞர்களும் அவர்களுடைய திறன்பாடுகளும் ஆராதனை எவ்வாறு கிரியை செய்கிறது என்பதை நான் புரிந்து கொள்வதற்கு அதிகமான முக்கியமான பங்கு கொள்கிறது. நான் அதிகமதிகமாக கர்த்தரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு பதிலாக எதிர் செயல்பாடுகளிலிருந்து என்னுடைய யூகங்களை எடுத்துக் கொள்ள ஆரம்பித்தேன் நான் ஒரு காலத்தில் நன்றியறிதல் உணர்வை அடிப்படையாகக் கொண்ட சாதாரணமான தேவனுடன் கொண்ட உறவுத் தொடர்பை ஏறக்குறைய முற்றிலுமாக புறக்கணித்து விட்டேன். ஆராதனை நடத்தும் செயலூக்கமான கோட்பாடுகள் கர்த்தர் தம்மைப் பார்க்கிலும் என்னுடைய மையமாக ஆகிவிட்டன. நான் இந்த நடைமுறையில் கர்த்தருடன் இருந்ததைவிட அதிகமான தொடர்பு கொண்டிருந்தேன். நான் உறவுத் தொடர்புகளை விருத்தி செய்வதற்காக

கர்த்தருடன் அதிகமான நேரத்தை செலவழிக்கவில்லை. உண்மையாகவே நான் கர்த்தருடன் பயனுள்ளதாக நான் செலவழித்த தகுதியான நேரமாவது, நான் (ஆராதனையை) நடத்தி சென்ற காலத்தில் மாத்திரமே.

மேற்கூறிய அந்த சாட்சியில் வழியே நான் போய் கொண்டிருக்கும்பொழுது முதலாவதாக அநேக ஜனங்களை முட்டாளாக்க முடிந்தது. அதாவது, பெற்றுக் கொள்ள வேண்டியதை கொஞ்சம் ஒரு பகுதியாக அந்த வல்லமையான தேவனால் எனக்கு வழங்கப்பட்ட வரங்களுக்காக நான் கர்த்தருடன் அவருக்காக இருந்ததை விட அந்த நுட்பங்களைக் குறித்து அதிகமாக வழிப்புணர்வுள்ளவனாக இருந்தேன் என்பதை யாருமே உண்மையாகவே தெரிந்திருக்கமாட்டார்கள். மேலும் காலம் போகப்போக நான் தேவனை விட்டு தூரமாய் விலகிப் போய் கொண்டிருப்பது மிகவும் கண் கூடானது. மேலும் அதிகமான கெட்டழிந்து போகக்கூடிய வாய்ப்புகளை உடையதாய் இருந்தது. நான் அடிமட்டத்தை அடைந்தேன். நான் ஆராதனையால் நிறைந்த ஒரு இருதயத்துடன் ஆராதனையை நடத்தவில்லை. நான் நுட்பங்களை மாத்திரம் உபயோகித்து நடத்திக் கொண்டு போனேன். செயலூக்கமாக ஆராதனையை நடத்திச் செல்லும் படியாக தேவன் அருளிச் செய்த கருவிகள் அவைகளுக்குள்ளாகவே ஓரே முடிவாயின. ஜனங்களுடைய எதிர் கிரியைகள் எனக்கு அதிகமான முக்கியமானதாகி தேவனைப் பிரியப்படுத்தும்படி வாஞ்சிக்கும் இருதயத்தைப் பெற்றிருப்பதை விட அவ்வாறு ஆகிவிட்டது. உண்மையிலே நான் ஆராதனை நடத்திக் கொண்டிருக்கவில்லை. மெய்யாகவே நான் ஜனங்களுடைய உணர்ச்சிகளுடன் என்னுடைய உணர்ச்சிகளையும் சேர்த்தே அவற்றோடு நான் விளையாடிக் கொண்டிருந்தேன்.

அதிர்ஷ்டவசமாக நான் மறுதரமும் கர்த்தருடைய மீட்கும் இரட்சிக்கும் வல்லமையை அனுபவித்தேன். அவருடைய முடிவில்லாத இரக்கங்கள் என்னைத் தொட்டது எனக்கு எங்கு அவசியமோ அங்கே என்னைத் தொட்டது. நான் என்ன செய்து கொண்டிருந்தேனோ அதன் பொய்யான தன்மையைக் கண்டுகொண்டேன். அவருடைய கிருபையால் நான் போய்கொண்டிருந்த பாதையானது, நான் போய் கொண்டிருக்க வேண்டிய பாதையை விட கொஞ்சம் தூரமாகவே இருப்பதை அறிந்து கொண்டேன். கர்த்தர் தம்முடைய கிருபையினால் என்னை திரும்பவும் அந்த எளிய நனறியறிதலான உறவுத் தொடர்பு நான் முன்பு கொண்டிருந்த அதே உறவுத் தொடர்புக்குள் கொண்டு வந்தார். வானத்திலிருந்து இடிமுழக்கங்களோ அல்லது பூமியை அசைக்கும் வெளிப்படுகளோ இருக்கவில்லை. ஆனால் மிகவும் நியாயமான “அந்த காலைதோறும் புதிதான அவருடைய இரக்கங்கள்” என்ற புரிந்து கொள்ளுதல் மட்டுமே. நான் மறுபடியும் உண்மையான ஆராதனையை ஒளிபரப்புச் செய்த ஒரு இருதயத்திலிருந்து மறுபடியும் ஆராதனையை நடத்திச் செல்ல முடிந்தது.

இந்த நடைமுறையில் நான் கடந்து வந்த பொழுது நான் நிரந்தரமான கோட்பாடுகளைக் கற்றுக் கொண்டேன். இவைகளில் மிகக் காணக்கூடியதாவது, செயலூக்கமான நீண்ட காலத்து ஆராதனைத் தலைவராக இருக்க வேண்டுமானால் கர்த்தருடன் நெருங்கியதோர் உறவுத் தொடர்பை கடைபிடித்துக் கொள்ளுவதாகும்.

நான் கர்த்தருடன் எப்பொழுதுமான ஒரு நெருங்கிய உறவுத் தொடர்பில் இருக்காவிட்டாலும், இந்த வெறுமையான பாத்திரத்தை தொடர்ந்து நிரப்பிக் கொண்டே இருக்கும்படியாக நான் அவரை அனுமதிக்காவிட்டாலும், அப்படியென்றால் பிறகு கொடுப்பதற்கென்று என்னிடம் ஒன்றுமில்லை. நான் சில நாகரிகமான தந்திரயுக்திகளைக் கொண்டு என்னை “சில ஆராதனை வழிபாட்டுகளுக்கிடையே இழுத்துக் கொள்ளலாம்”. ஆனால் இதற்கு அப்பால் நான் வெறுமையானவன் தான் நான் நாடோறும் இயேசுவால் புதுப்பிக்கப்பட்டும் புத்துணர்ச்சி கொடுக்கப்பட்டும் அவருடைய ஜீவ தண்ணீரால் அவ்வாறு ஆக்கப் படவும் வேண்டும். நான் தொடர்ந்து போய் கொண்டிருக்கும் கர்த்தருடன் கொண்டுள்ள நெருக்கமான இந்த உறவுத் தொடர்பை விட்டுவிட்டாலும், நான் உண்மையாகவே என்னுடைய ஜீவியத்தில் அவருடைய அழைப்பின் நிறைவை இழந்துவிட்டவன் ஆவேன்.

ஒரு செயலூக்கமான தலைவராக விருப்பம் கொண்டு முயற்சிக்கிறவர்கள் தங்களுடைய முக்கியமான நங்கூரத்தின் மையமாக ஒரு உறவுத் தொடர்பை சர்வவல்லமையுள்ள தேவனை ஆராதிப்பதை நோக்கமாகக் கொண்டு கடைபிடிக்க வேண்டும். இந்த படிப்பு முழுவதிலுமே நான் உங்களோடு மற்ற கருத்துக்களையும், கோட்பாடுகளையும் ஒரு செயலூக்கமான தலைவராகக் கொண்டு போகும்

பாதையில் உதவியான இருக்கும்படியாக கலந்துரையாடுவேன். அதனால் நீங்கள் செயலூக்கமான ஆராதனைத் தலைவராக ஆகமுடியும். என்னவென்றாலும் கர்த்தருடன் கடைபிடிக்கும் உறவுத் தொடர்பானது, அது எல்லவற்றிற்கும் அடிப்படையானது நீ ஒரு நபருடன் நேரத்தை ஒரு போதும் செலவழிக்கவில்லை என்றால், அந்த நபருக்கு உன்னை நெருக்கமான நண்பனாக இருக்கும் படியாக எதிர்பார்க்க முடியாது.

உறவுத் தொடர்புகள் நேரத்தை எடுத்துக் கொள்கிறது. மேலும் அதிகமானதை எடுத்துக் கொள்ளும் விருத்தி செய்யும் படியாக இந்த மாதிரியான வழியில் கர்த்தருடன் நேரத்தை செலவழிப்பது இன்றிமையாதது. ஒரு உலகப்பிரகாரமான நட்பை உண்டாக்கிக் கொள்ள நேரத்தை செலவழிப்பது போல செய்ய வேண்டும். ஒன்றுமே இல்லாதது - முற்றிலுமாக இல்லாதது – அதிக முக்கியமானதாகும்.

## அதிகாரம் 2 ஆராதனை செய்யும் ஜீவியத்தை ஜீவிக்கும் படியாக

நாம் துதித்து ஆராதிக்கும் வாழ்க்கை நடைமுறையை ஜீவிக்கும்படி கற்றுக் கொள்ளும் வரைக்கும் நாம் தேவன் வாஞ்சிக்கிற படியாக ஒருக்காலும் ஆராதனையில் முற்றிலுமாக புகுந்து கொள்ள முடியாது என்பதைப் பற்றி நான் திட்டவட்டமாக புரிந்திருக்கிறேன். நமது கூடிவரும் சபைக்கு இந்த கோட்பாட்டைக் கற்றுக் கொடுப்பது அவசியமாகும். ஆனால் மிகவும் முக்கியமாக நாம் ஆராதனை செய்யும் தலைவர்களாக அதன்படி ஜீவிக்க வேண்டும். தேவாலயத்தில் ஆராதனை செய்வதானது, ஒரு வாழ்க்கை முறையாக முன்னுக்கு இருக்கும் ஆறு நாட்களும் ஆராதனை நடை பெறாவிட்டால் அந்த ஆலய ஆராதனையானது அர்த்தமற்றதாக ஆகிவிடும் என்று சொல்லப்படுவதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நாம் உண்மையாகவே புரிந்து கொண்டு தேவனுடைய கிருபையில் நடப்போமானால், இந்த சொற்கூற்று சிறிது பலமுள்ளதாகும். அப்படி அல்லாவிட்டாலும் அதற்கு மதிப்பு இருக்கிறது. நாம் வெளியில் போய் கர்த்தர் நமக்காக விரும்புகிற ஜீவியத்திற்கு முரணாக ஜீவித்து பிறகு ஓய்வுநாள் காலை வந்திருந்து தேவனை முழுவதுமாக ஆராதிக்கும்படியாக எதிர்பார்க்க முடியாது. அது ஒருநாளும் வேலை செய்யாது. உண்மையாகவே ஞாயிறு காலை ஆராதனை அனுபவமானது கடந்த வாரம் முழுவதும் கர்த்தரை நோக்கி ஏறெடுக்கப்பட்ட ஆராதனையின் துணைப் பொருளாகும்.

நான் யோவான் 4:23ல் சொல்லுகிறதை அதாவது தேவன் ஆராதனை செய்கிறவர்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதை நான் ஆர்வத்துடன் குறித்துப் பார்க்கிறேன். அது அவர் ஆராதனை செய்வதை அல்ல, ஆராதிப்பவர்களையே என்று கூறுகிறது. சமயத்துக்கேற்ற ஆராதனை போதாது. கர்த்தர் மக்களை ஆராதனையை வெளிப்படுத்துகிறவர்களை ஆராதனையில் ஜீவிக்கும் - “ஆராதனை செய்பவர்கள்”

அப் 16ல் சிறையில் பவுலையும், சீலாவைப் பற்றிக் கூறப்படும் கதையில் பிரியப்படுகிறேன். வசனம் 22ல் இருந்து 24வரை அவர்களுடைய வஸ்திரங்கள் அவர்களிடமிருந்து கிழித்துப் போடப்பட்டும், அடிக்கப்பட்டும் காவலில் போடப்பட்டு அவர்களுடைய கால்கள் தொழுமரத்தில் கட்டப்பட்டிருந்தன. ஒரு சமயம் நான் இந்தக் கதையைப் படித்த பொழுது அந்த மாதிரியான சூழ்நிலைமையில் நான் என்ன செய்திருப்பேன் என்று வியப்படைந்தேன். வேதம் சொல்லுகிறதாவது, பவுலும், சீலாவும் ஜெபித்து தேவனைத் துதித்தார்கள். எனது உடனடியான பிரதிகிரியையாவது, “கர்த்தாவே நான் இந்த அத்துமீறிய சூழ்நிலைமையைப் போன்ற ஒன்றை எதிர்த்து நிற்க வேண்டுமென்றால் நான் இதைப்போல் பிரதிகிரியை செய்ய முடியுமா?” என்று குழம்பினேன். ஆனால் நிச்சயமாக இருக்கவில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்னால் கடினமான சந்தர்ப்பங்களில் தேவனைத் துதிக்கும்படியாகக் கூறும் பல எண்ணிக்கையான புத்தகங்களைப் படித்திருக்கிறேன். இதை செய்வதற்கான அவசியத்தைப் பற்றி அவைகள் விவாதிப்பதையும் திரும்பவும் நினைத்துப் பார்க்கிறேன். ஆனால் அவைகளில் ஒன்றாகிலும் அதை எப்படிச் செய்ய வேண்டும் என்று கூறியதாக நான் ஞாபகத்தில் வைக்கவில்லை. ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் கர்த்தரைத் துதிப்பது ஒரு இயற்கையான பிரதிச் செயலாக நமக்கு இருக்க முடியாது. நாம் எந்த வகையான நெருக்கடியில் நம்மை இருப்பதாகக் கண்டாலும் இந்த இரண்டு வழிகளில் ஒன்றில் நாம் பதில் கிரியை செய்வோம். நாம் ஒன்று திகில் அடைவோம் அல்லது நமக்குள்ளே கட்டப்பட்டிருக்கும் ஒன்றிலிருந்து நாம் பதில் செய்வோம். மருத்துவர்

அல்லாத மருத்துவத்துறையினர் உதாரணமாக ஒரு அபாயகரமான கார்விபத்தை எதிராகச் சந்திக்கும்படி நேரிடும்பொழுது அந்த சந்தர்ப்பத்தைச் சந்திக்க ஆயத்தமாக இருக்கிறார்கள். அவர்கள் திகில் அடைவதில்லை ஏனென்றால் அதற்காகவே அவர்கள் பயிற்றுவிக்கப் பட்டிருக்கிறார்கள் அதே மாதிரியான வழி நமக்கும் ஆகும். நாம் துதியையும், ஆராதனையையும் நம்முடைய அனுதின ஜீவியத்தில் பழக்கப்படுத்தி இருப்போமானால் இந்த மாதிரியான நெருக்கடியான சந்தர்ப்பத்தில் நாம் இருப்போமானாலும் நாமும் இவ்வாறு முறையான பதில் கிரியையாக தேவனை ஆராதித்து கொண்டிருப்போம். ஆனால் நாம் அனுதின துதியையும், ஆராதனையையும் நம்முடைய ஜீவியத்தில் கட்டி எழுப்பினால் மாத்திரமே இது நேரிடக்கூடும்.

வேதபுத்தகம், நமது துதியும் ஆராதனையும் எப்பொழுதுமே நடந்து கொண்டிருக்க வேண்டும் என்று மறுபடியும் புத்திமதி சொல்லுகிறது. கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன் (சங் 34:1) சூரியன் உதிக்கும் திசை தொடங்கி அது அஸ்தமிக்கும் திசை மட்டும் கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக" (சங் 113:3) "ஆகையால் அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்" (எபி 13:15).

தேவனை ஆராதிப்பது தான் உண்மையிலே நாம் உயிரோடு இருப்பதற்குக் காரணம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். "நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரிய கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்கு சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1பேதுரு 2:9) அவருடைய புண்ணியங்களை பிரஸ்தாபம் செய்கிறதற்கான நோக்கத்திற்காக நாம் உண்டாக்கப்பட்டும் மீட்கப்பட்டும் இருக்கிறோம். இது சாதாரணமாகப் பாடல்களை மட்டும் பாடுவதல்ல. தேவன் இசையை விரும்புவாரானால் நாம் ஒரு ஒலி நாடாவை மட்டும் அவருக்காக இசைக்கலாம். அவர் முடிவாக இசையை இசைக்காக மட்டும் ஆர்வமாயிருப்பதில்லை. அவர் நம்முடைய ஜீவியங்களையே விரும்புகிறார். கர்த்தர் தமது புண்ணியங்களை பிரகடனஞ் செய்யும் ஜீவியங்களுக்காகப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அந்த ஜீவியங்கள் முற்றிலுமாக அவருக்காக ஒப்புக் கொடுக்கப்பட்டும் அவருடைய நோக்கங்களுக்காக அவருக்கே ஆராதனை செய்யும் ஜீவியங்களுக்காகப் பார்த்திருக்கிறார்.

ஆராதனை செய்யும் ஜீவன் நாம் செய்கிற சொல்லுகிற எல்லாக் காரியங்களிலும் படர்ந்து பெருக வேண்டும். ஒரு மரியாதைக்குரிய கிறிஸ்தவத் தலைவனைப் பார்த்து ஆராதனை என்பது, அவருக்கு எதாக இருந்தது என்று ஒரு தடவை வினவப்பட்டது. அவர் எவ்விதத் தயக்கமுமின்றி அவர் சொன்னதாவது, இயேசுவானவர் கர்த்தரை எவ்வாறு போற்றுபடியாக கூறியிருக்கிறார்" என்றார். அதற்கு ராஜா பிரதியுத்திரமாக, "மிகவும் சிறியவராகிய என் சகோதரர்களான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்பார். "மிகச் சிறியவனைக் கண்டுபிடியுங்கள்" "அவர்களை நீங்கள் கர்த்தரைக் கனப்படுத்துவது போல கனப்படுத்துங்கள்" என்றார். நாம் நமது நாளை தினசரி ஒழுங்காகத் தொடங்க வேண்டும் என்றால், ஒரு நேர்மையான ஜெபத்தோடு பின்வருகிறது போல "கர்த்தாவே நான் செய்கிற, பேசுகிற எல்லாவற்றிலும் மகிமைப்படுவீராக" என்று ஜெபித்தால் அது நம்முடைய வாழ்க்கை நடைமுறை பழக்க வழக்கத்தை தாக்கம் செய்து முடிவாக நமது கூட்டு தொழுகையான ஆராதனையையும் பலன் தரக்கூடியதாக ஆக்க முடியாதா? சந்தேகமின்றி!

இந்தக் கோட்பாட்டை நாம் விளங்கிக் கொண்டு இதற்குள்ளாக கடைபிடித்து நடந்து வந்தால் நமது கூடிவரும் சபையின் கூட்டுத் தொழுகையான ஆராதனையில் தானாகவே ஒரு வித்தியாசம் ஏற்படும். பின்வரும் அகக்காட்சியை சற்று கற்பனை செய்துபார். நீயும் உன்னுடைய கூடிவரும் சபையில் ஒவ்வொருவமே திங்கள் கிழமை முதல் சனிக்கிழமை வரைக்கும் ஆராதனை செய்யும் ஜீவியத்தை நடத்துகிறோம், இதில் இடைபடும் ஒவ்வொருவரும் தங்கள் இருதயத்தின் நோக்க மனப்பான்மையை தேவனுக்கும் அவருடைய நோக்கங்களுக்காகவும் ஒப்புக் கொடுக்க வேண்டும். நாடோறும் துதியின் பாடல்கள் பாடப்படுகின்றன, காயப்பட்டதோர் உலகிற்கு அன்பின் கிரியைகள் காட்டப்படுகின்றன. கர்த்தருடன் ஆத்துமாக்கள் ஐக்கியமாகின்றன. பிறகு ஞாயிறு காலையில் ஒவ்வொருவரும் ஆராதனைக்காக ஒன்று கூடிவந்து கூட்டாகக் கர்த்தருக்கு ஆராதனை செய்கிறோம். அவ்வாறு செய்வதால் தாங்கள் அனுதின ஜீவியத்தில் எதைச் செய்து கொண்டிருந்தார்களோ அது

அவர்களது ஆராதனையில் சாதாரணமான ஒரு பொங்கி ஓடும் பிரவாகமாக ஆகிவிடுகிறது. இந்த கூட்டு ஆராதனை அனுபவமானது, நீங்கள் பழகிப்போன எந்த ஆராதனை முறையையும் விட வித்தியாசமானதாக இருக்கும் என்று நீங்கள் யோசிக்கிறீர்களா? ஆம், அது அப்படித்தான் இருக்கும் நாம் நல்லவர்களாக இருந்தபடியால் அந்த ஆராதனை தேவனால் ஏற்றுக் கொள்ளும் படியாக இருக்க வேணடும் என்பது அவசியமில்லை. ஏனென்றால், இயேசுவுடைய இரத்தமே நம்மை ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவர்களாக செய்கிறது!. ஆனால் அதன் மனப்பான்மையும் சூழ்நிலைமையும் மாறுதல் அடைந்து தேவனுடைய இருதயத்திற்கேற்றதாக ஆகும்படி நமது ஆராதனையும் மாற்றப்படுகிறது.

தேவன் நம்மைத் தொடர்ந்து கொண்டிருக்கும் ஆராதனைக்கான மனப்பான்மையை நாம் செய்வதிலும், பேசுவதிலும் ஆக எல்லாவற்றில் கைக் கொண்டிருக்க வேண்டும் என்று வாஞ்சிக்கிறார். இது தன்னுடைய முறையில் நமது கூட்டு ஆராதனை முறையை விசாலமடையச் செய்யும்.

## அதிகாரம் 3 கூடிவரும் சபைக்காக கரிசனையாக இருப்பது

நான் வேதாகமப் பள்ளியில் இருக்கும் பொழுது என்னுடைய பேராசிரியர்களில் ஒருவர் ஒரு சொற்கூற்றை எங்களுக்குள் திரும்பத் திரும்பத் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதுதான் தொடர்ந்து போய் கொண்டிருக்கிற அடிப்படையாக நான் ஊழியத்தல் அதிகமாக நான் கிரியை செய்வதாக இருக்கிறது. அந்த சொற்கூற்று இதுதான், “நீ உன் ஊழியத்தை மட்டும் செய்யாதே, மக்களுக்கு ஊழியம் செய்” என்பதாகும் தோற்றத்திற்கு எளிதான இந்த குறிக்கோளை ஊழியத்தில் “நாம் ஊழியம்” என்று குறிப்பிடுகிற ஒன்றில் இதை இழந்துவிட எங்களுக்கு சுலபமானதாகும். நாம் அடிக்கடி ஊழியத்தின் பணிகளை ஒப்புக் கொள்வதற்கு எவ்வளவுக்கு அதிகமாக தயாராக இருந்தோம் என்றால், ஜனங்களிடத்தில் கரிசனையாக இருக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதைவிட முன்னதை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருந்தோம் அந்த பணியும் அந்த பணியை ஏற்று நிறைவேற்றுவது மிகவும் முக்கியமானது. ஆனால் இயேசு மனிதர்களுக்காக மரித்து ஜீவனைக் கொடுத்தார்.

ஆராதனைத் தலைவர்களாகிய நமக்கு இந்த மக்களுக்குச் செய்யும் ஊழியமானது, சில சமயங்களில் புரிந்து கொள்ள கடினமாகத் தோன்றும். ஆனபோதிலும், நமது முதலாவதான முன்னுரிமையாவது கர்த்தரை ஆராதிப்பதேயாகும். இது மிகவும் உண்மை ஆனால், நாம் கர்த்தரை ஆராதிப்பதை மட்டும் மதிப்புக்குரியதாக பார்ப்போமானால் நாம் நமது பணியின் தலைப்பில் பாதியை அதாவது, “ஆராதனை தலைவர்” என்பதை இழந்து விட்டவர்களாவோம். மக்களை ஆராதனையில் நடத்திச் செல்வதற்கானதோர் பொறுப்பு நமக்கு உண்டு.

இந்த அதிகாரத்தின் தலைப்பு கூடிவரும் சபைக்கு கரிசனையாக இருப்பது என்பது நாம் யாருக்கு ஊழியம் செய்கிறோமோ அவர்களுடைய தேவைகள் நம்முடைய தேவைகளை விட முக்கியமானதென்று குறிப்பிடுகிறது. “ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல் மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்”(பிலிப் 2:3) உதாரணமாக கொடுக்கப்பட்டதோர் ஓய்வுநாளில் கர்த்தருக்கு முன்பாக அதீதமான உள்ளக்கிளர்ச்சியோடு கொண்டாட வேண்டும் என்று உணருவாய். என்னவென்றாலும் கூடிவரும் சபைக்குத் தேவையானது என்னவென்றால் கர்த்தருடைய பிரசன்னத்தில் அந்நியோந்நியமான ஆராதனையில் வெயில் காய்வது தான். எந்த வழியில் நீ போகப் போகிறாய்?

மற்றவர்களுடைய தேவைகளை உனது சொந்தத் தேவைகளுக்கு மேலாக வைத்துக் கொள்வது என்பது எப்பொழுதுமே சௌகரியமாக இருக்கமுடியாது. ஆராதனை நேரங்களில் எந்த மார்க்கத்தில் போகவேண்டும் என்று எனக்கு நிச்சயமில்லாத நேரங்களுக்கு பல எடுத்துக்காட்டுகள் உண்டு. அந்தக் குறிப்பில் எனக்கு இரண்டு தெரிந்தெடுத்தல்கள் உண்டு என்று தீர்மானித்தேன். ஒன்று அங்கே நான் நின்று கொண்டு நான் அனைவரையும் ஒன்றாக சேர்த்துக் கொண்டதாக நாடகமாட வேண்டும் அல்லது நான் மேடையை விட்டு போதகரையும் மற்ற தலைவர்களையும் ஆராதனையைக் கொண்டுபோகும் மார்க்கத்தைக் குறித்து கலந்தாலோசிக்க வேண்டும். நான் அனைத்தையும் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறேன் என்று பாசாங்கு செய்தால் தேவன் அவர்கள் அனுபவிக்க வேண்டும் என்று விரும்புகிற ஏதோ கொஞ்சத்தை மக்கள் இழந்து விடுவார்கள். நான் மேடையை விட்டுவிட்டு

கலந்தாலோசிக்க வந்தால், ஜனங்கள் என்னை பலவீனன் என்று ஒன்றாக கூடினவராக அல்ல என்பதையும் பார்ப்பார்கள். உண்மையாகவே அதற்கென்று தெரிந்தெடுத்தல் என்பது ஒன்றுமில்லை மக்கள் தான் எனக்கு மிகவும் முக்கியமானவர்கள் என்னுடைய உணர்வுகளையும் நற்பெயரையும் கரிசனையாக ஆக்குவதற்கு நான் அவர்களுக்காக தேவனுடைய மிகவும் நல்லதானதையே வாஞ்சித்தேன்.

"கூடிவரும் சபைக்காக கரிசனையாக இருப்பது" என்பது தேவனுடைய பிரசன்னத்திற்காக மலையின்மேல் ஏறும்படி நீ ஆரம்பிக்கும் பொழுது, அவர்களை அன்பாக உற்சாகப்படுத்தி உன்னைப் பற்றிவருமாறு செய்வதாகும் என்று அர்த்தம் தரும். அவர்களை அடிக்காதே, சாந்தமாக உன்னோடு வரும்படி வருந்தி கேட்கவும். அவர்கள் ஒவ்வொரு நாளும் போதுமான தூற்றப்படுதலை உலத்திலிருந்து பெற்றுக் கொள்கிறார்கள். உன்னிடமிருந்தே அவர்களுக்கு ஊக்கப்படுத்துதல் தேவைப்படுகிறது.

நமது தலைமைத்துவத்தை பின்பற்றுவதில் மக்கள் வேகம் குறைந்தவர்களாகக் காணப்படுவார்களானால், நமது இயற்கையான போக்கானது, ஏதோ பின்வருகிற மாதிரியாக இருக்கும். "ஓ, ஜனங்களே நீங்கள் அங்கே விழிப்பாய் இருக்கிறீர்களா?" இது ஏதோ ஓரிரு தடவைகளில் செயலூக்கமானதாக இருக்கலாம். ஆனால், நாளாவட்டத்தில், நாம் வேறு வித்தியாசமான அணுகுமுறையை எடுக்க வேண்டியதாகும். ஜனங்களுக்குத் தேவையானது என்னவென்றால், அன்பானதும், கரிசனையானதுமான ஊக்கப்படுத்தலாகும். அது உன்னுடைய நீண்ட கால வலிந்து இழுத்து முன் செல்லும் வழியில் உன்னுடைய தலைமையில் பின்பற்றி வரக் காரணமாக மற்ற எல்லாவற்றையும் விட சிறந்ததாக இருக்கும். அவர்களை கோபப்படுத்துவதற்கு பதிலாக ஊக்கப்படுத்துமாறு முயற்சிக்கவும்.

"கூடிவரும் சபையை கரிசனையாக கவனித்தல்" இதுவும் ஜனங்களிடமிருந்து வரும் யோசனைகளையும் கருத்துக் குறிப்புகளையும் பெற்றுக் கொண்டு கவனிப்பதும் அதற்கு பதிலிறுத்தலும் என்று அர்த்தமாகும். உதாரணமாக ஒரு மாத காலத்தில் 20 பேர் உன்னிடம், "நாம் அநேகமான துரிதமான பாட்டுகளை பாடுகிறோம்." என்று சொல்வார்களானால் இருக்கலாம், சரியாகவும் இருக்கலாம் மேலும் நீ அதிகமான துரிதபாடல்களை நடத்துகிறாய் என்பதன் கூடுமானதை கருத்தில் கொள்ள வேண்டும். இப்பொழுது நமக்கு தெரிகிறபடி நீ அந்த ஆராதனை அனுபவத்தை தையல்காரர் போல ஒருவருடைய அல்லது ஒரு கூட்டமான மக்களுடைய விருப்ப வேண்டுகோள்களுக்கு ஏற்றாற்போல தகுந்தபடி இசைவாக அமைக்கமுடியாது. ஆனால் செயல் நிறைவு பற்றி குறிப்புரையானது, ஊழியம் செய்பவர்களிடமிருந்து வருமானால் அதற்குச் செவிக்கொடுத்து கவனித்தல் முக்கியமானதாகும்.

மேலும் இந்தவிதமான செயல் நிறைவு பற்றி குறிப்புரைகள் வழக்கமாக எதிர்மறையாகவே இருக்கும் என்பதை குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். நான் என்னுடைய தனிப்பட்ட அனுபவத்திலிருந்து கண்டு பிடித்ததாவது ஜனங்களிடம் செயல்படுவதோ அல்லது பிரதிசெயல் புரிவதோ ஆகிய ஓரே மாதிரியாகவே அந்த அமைப்பிடத்தை பொருட்படுத்தாது இருக்கும் என்பதே. அந்த மகிழ்ச்சியடையாத திருப்தி அடைந்த பெரும்பான்மையோர் அமைதலாக இருக்கும்பொழுது சிறுபான்மையோர் தங்கள் குரலை உயர்த்துகிறார்கள். ஏறக்குறைய இருபது ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்கிறார். அதாவது ஒவ்வொரு நேர்மறையான குறிப்புரை மாற்றத்திற்காகப் பெற்றுக் கொள்கிறார். அதனால் அவர் வறியதோர் பணியைச் செய்கிறார் என்று அர்த்தமாகுமா? வழக்கமாக இல்லவே இல்லை. தாங்கள் திருப்தி அடையாத நிலையில் தான் மக்கள் பேசுவதற்காக முனைகிறார்கள். உன்னுடைய இருதயத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால் செயல்பாட்டைக் குறித்த எதிர்மறையான பின் குறிப்புரை சாதாரணமானது தான்.

இதன் இயற்கையான போக்காவது, ஒரு விமர்சனம் செய்யப்பட்ட தலைவர் அவனுடைய (அ) அவளுடைய விமர்சனம் செய்பவர்களை தாங்கள் தவறு செய்வதாகவும் அவனோ (அ) அவளோ சரியாக இருக்கிறாகள் என்று சொல்லிக் கொள்ளுவது தான். இது என்னவென்றாலும் அபாயகரமானது. உம்முடைய பணியாவது சபையை ஆராதனைக்குள்ளாக நடத்திச் செல்வது என்றால், நீ என்னசெய்கிறாய் என்பதற்கு அவர்களுடைய எதிர் கிரியையும் நீ கட்டாயமாக கேட்டே ஆக வேண்டும். அவர்களுடைய பதில் கிரியையை நீ தெரிந்து கொள்ளாவிட்டால் நீ உன்னுடைய பொறுப்பாகிய வழி நடத்துதலை நிறைவேற்றுகிறாயா அல்லது நீ செய்வது ஆராதயை மட்டுந்தானா என்பதை நிச்சயமாகவே நீ ஒருபொழுதும் தெரிந்து கொள்ள முடியாததாகும்.

இந்த எல்லாக் காரியங்களிலும் உன்னுடைய முக்கியமான பொறுப்புகளில் ஒன்று உன்னுடைய சபையின் அங்கத்தினர்களுக்காக என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். சில சமயங்களில் நீ விரும்புகிற மாதிரியாக அவர்கள் பிரதியுத்தரம் கூறமாட்டார்கள். சில சமயங்களில் நீ கேட்கக் கூடாத காரியங்களை கூட சொல்லுவார்கள் இப்படி யெனில் அவர்கள் கர்த்தருடைய ஜனங்களாக அவர்களை ஆராதனையில் நடத்திச் செல்லும்படியாக கர்த்தர் உன்னை அழைத்திருக்கிறார். அவர்களிடம் அன்பு கூறுவாயாக நீ செய்கிறதெல்லாவற்றிலும் அவர்களை உற்சாகப்படுத்துவாயாக.

## அதிகாரம் 4 உன்னுடைய ஒத்திகைகளிலிரந்து அதிகச் சிறப்பானவற்றைப் பெற்றுக் கொள்க

அநேக திருச்சபைகள் தங்கள் ஆராதனைக் குழுக்களுக்கான ஒத்திகை/ஆயத்தம் ஆகியவைகளைக் குறித்த நடைமுறைக்கான குறிக்கோள்களைப் பற்றி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அடிக்கடி அப்பியாசம் செய்யும் நேரங்கள் தினசரி அட்டவணை ஒழுங்காக உண்மையாகச் சொல்லப்போனால் அதில் பங்கெடுப்பவர்களுக்கு சலிப்பாக ஆகிவருகிறது. இந்த சூழ்நிலைமைகளை எப்படி கையாளுவது என்பது பற்றிய என்னுடைய இறுதி வார்த்தையை அவசியமாகக் கொடுக்க முடியாது என்பதல்ல. ஆனால் நான் காரிய சாத்தியமாகக் கூடிய சில குறிப்புகளைத் தரும்படியாக முயற்சி செய்வேன்.

முதலாவதாக கேட்கக் கூடிய பெரிய கேள்விகளில் ஒன்று "குழுவாக நாம் எப்படி அடிக்கடி ஒன்று கூடி வரவேண்டும்" என்பது. இந்த கேள்விக்கு சரி அல்லது தவறு என்ற விடைகள் கிடையாது. எனென்றால், அதற்கு மாறுபடுகிற காரணிகள் சம்பந்தப் பட்டிருப்பதால் உங்களுடைய தீர்மானங்கள் உங்களுடைய சூழ்நிலைமையால் நிர்ணயிக்கப்பட வேண்டும். நடைமுறைப்படி சொல்லுவதென்றால், வாரத்திற்கு ஒரு தரம் அப்பியாசம் செய்து கொள்வது அநேக காரியங்களில் நன்றாக வேலை செய்கிறது. கொடுக்கப்பட்ட ஆராதனை ஒன்றில் இசையுடன் இணைந்து வேலை செய்வது கடினமானது. எனெனில் ஒருவருக்கொருவருடைய திறமைகளையும் இசைக்கும் பாணியைப் பற்றி நன்கு பழக்கமாயிருக்காவிட்டால் அவ்வாறு வேலை செய்ய முடியாது. குழுவாக ஒருமித்து பிரவாகித்து ஓடும் திறன்பாடானது அடிக்கடி ஒருமித்து இணைந்து வேலை செய்வதால் பெரிய அளவில் செய்யக் கூடியதாகிறது. இந்த மாதிரியான ஒழுங்கான தொடர்பு கொண்டு செயல்படுவது இல்லாவிட்டால் மிகவும் சிறப்பாக சங்கீத முறைப்படி கடும் முயற்சிகொள்வது கடினமாகும்.

அப்பியாசம் செய்யும் நேரத்தின் நீளத்தை உங்களுடைய குறிப்பிட்ட சந்தர்ப்பங்களைக் கொண்டு நிர்ணயிக்கப்பட வேண்டும். இரண்டு இசைக்கலைஞர்களைக் கொண்ட குழுவுக்கு 30 நபர்களைக் கொண்ட குழுவுக்கு தேவைப்படும் நேரத்தைப் போல ஒருவேளை அவ்வளவு நேரம் தேவைப்படாது. எச்சரிக்கையாய் இருக்கவும் என்னவென்றாலும் உங்கள் குழு வளரும் பொழுது அப்பியாசம் செய்யும் நேரமும் நீடிக்கத் தேவைப்படும் என்பதை மனதில் வைத்திருக்க வேண்டும். இது ஞாபகத்தில் வைத்துக் கொள்வதற்கு முக்கியமானமாகும். தற்சமயம் நீங்கள் உங்களைத் தான் குறிப்பிட்ட அப்பியசிக்கும் நீண்ட நேரத்திற்குள் உங்களைப் பூட்டி வைத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காக உங்களுக்கு வசதிப்பட்டால் நீங்கள் அதை மாற்றிக் கொள்ளும்பொழுது ஏதோ விருப்பத்திற்கு மாறாய் நடப்பதால் கோபப்படுகிற இசைக் கலைஞர்களுடன் மோதுதலில் முடியும். ஆகையால் உங்களுடைய ஆயத்தம் செய்யும் நேரங்கள் மாற்றப்படுவதற்கு ஒருநேரம் வரலாம் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளட்டும்.

மற்றொரு பொதுவான கேள்வியாவது, நமது ஒத்திகைகளில் நாம் என்ன செய்யவேண்டும்? மேலான மட்டத்தில் இதற்கான விடை தெரிந்திருப்பது கண்கூடு. என்னவென்றாலும் சிறது தூர நோக்குடன் மேலும் பார்க்கும்பொழுது ஒருவர் ஆலோசிக்கப்படாத கருத்துக்களை வெளிப்படுத்தலாம். நான் கீழே பலவற்றை அட்டவணைப்படுத்தி இருக்கிறேன். ஆனால் இவை அனைத்தும் ஒவ்வொரு அப்பியாச நேரத்திலும் ஒரு பகுதியாக இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை என்பதையும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். அவைகளை ஒன்றொடொன்று கலந்து கொண்டு தகுதியான நேரங்களில் பயன்படுத்தி அவசியமான நிகழ்ச்சி நிரலை நிறைவேற்ற முடியும்.

1. **ஆராதனை**

அப்பியாசம் செய்யும் நேரத்தில் ஒரு பகுதியாக இது அடிக்கடி கவனிக்கப்படுவதில் தவறி விடப்படும். ஒரு குழுவாக மற்ற எந்த சமயங்களிலாவது, இணைந்து ஆராதிக்காவிட்டால், ஓய்வு நாள் காலை நேரங்களில் ஆராதனையை நடத்திச் செல்வது கடினமாகும். நமது பணியாவது ஒரு இசைப் பின்னணியை மட்டும் மற்றவர்கள் ஆராதிக்கும்படி வசதி செய்வது மட்டும் அல்ல. நாம் ஆராதனை செய்வதில் வழிநடத்திச் செல்லும் தலைவர்களாகவும் இருக்க வேண்டும். நாம் ஆயத்தம் செய்யும் நேரங்கள் இசைப்பதில் மட்டும் இருக்குமானால், நாம் தேவனை சரியாக ஆராதிப்பதில்லை என்றாலும் நமது இசைக்கலைஞர்களுக்குத் தவறான செய்தியைக் கொடுப்பவர்களாக இருப்போம். இந்த இசையின் அம்சம் மட்டுமே இருதயத்திலிருந்து வருகிறதை விட அதிக முக்கியமானது என்று சொல்லிக் கொண்டிருப்போம். ஒரே குழுவாக ஆராதனையில் நேரத்தைப் போக்குவது மிகவும் முக்கியமாகும்.

2. **ஜெபம்**

அநேகமான அப்பியாசம் செய்யும் சமயங்களில் இதுவுங்கூட கவனிக்கப்படுவதில்லை. நாம் ஒருவருக்கொருவருக்காக சபைக்காக, போதகருக்காக ஜெபத்தை ஏறெடுக்க நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட ஆராதனைக்கோ அல்லது வரிசையான ஆராதனைகளுக்காக ஜெபித்து தேவன் காட்டும் வழியை ஒருமனதுடன் தேட வேண்டும். இவை அனைத்துமே குழுவின் ஒருமைப்பாட்டைக் கட்டி எழுப்புவதற்கு முக்கியமானவைகளாகும். ஒரு தலைவராக ஞாபகத்தில் வைக்க வேண்டிய நல்ல காரியமாவது, நீங்கள் ஜெப நேரங்களில் பங்கெடுத்துக் கொள்வதில் ஒரு சமநிலையை நாட்டி வைத்துக் கொள்ளுவது தான். உங்களது ஜெப நேரத்தில் அப்படி செய்யாது உங்களை ஜெபத்தில் மற்றவர்களுக்கு ஒரு உதாரணமாக இருக்க வேண்டும். சத்தமாக ஜெபித்தும் பிறரை ஜெபிக்கும் படி அனுமதிக்காமலும் ஜெப நேரம் முழுவதிலும் ஆளுகை செய்ய வேண்டும் என்று இருக்கக் கூடாது. அவர்களுடைய "ஜெப வேண்டுகோள்களை தெரிந்திருக்குமாறு" செய்யும்படியாக அவர்களை உற்சாகப்படுத்துங்கள். (பிலி 4:6).

3. **புதிய பாடல்கள்**

கடைசியாக அப்பியாசம் என்பது என்ன? எதைப் பற்றியது என்று ஒவ்வொருவரும் நினைத்துப் பார்க்கும் நிலைக்கு வந்திருக்கிறோம். அல்லாவிட்டாலும் தயவுசெய்து அட்டவணை வரிசையில் இது மூன்றாவது இடத்தைப் பெறுகிறது என்றாலும் இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும்.

அந்த புதியபாட்டை ஒரு மியூஸிக் டெக்கின் மூலமாக பல தடவைகளாக இசைக்கச் செய்ய முயற்சிக்கவும். அதனால் அங்கத்தினர்கள் அனைவரும் தெளிவானதும் சரியானதுமான உதாரணமாக பாடல் எப்படி பாடப்படுகிறது என்று தெரிந்து கொள்ளட்டும். புதிய பாடல்களைக் கற்றுக் கொள்ள முயற்சிக்கும் பொழுது வழக்கமாக எல்லா இசைக்கலைஞர்களுக்கும் இசையைக் கேட்பது மிகச் சிறந்ததாகும். சிலர் பகிர்நது கொள்ளக் கூடும். ஆனால் பன்னிரு இசைக்கலைஞர்களை கையால் கிறுக்கப்பட்ட 3x15 அளவுள்ள இராக அட்டையைச் சுற்றிக் கூடியிருக்கச் சொல்லுவது சற்று மிகையாகும்.

புதிய பாடல்களைக் கற்றுக் கொள்ளும்பொழுது சிலக்குழுக்கள் தனிப்பட்ட பிரத்தியேகமான வாய்பாட்டுக்காரரையும் இசைக்கருவிகளை இசைக்கும் கால அட்டவணை பகுதிகளிலும் வைத்துக் கொள்ள விரும்புவார்கள். இது அவர்களை வாய்பாட்டு இசைகளையும், பலவேறுபட்ட இசைக் கருவிகளையும் ஒன்றுக்கொன்று தலையிடாமல் கற்றுக்கொள்ள உதவி செய்கிறது. இதுவும் உங்களது குறிப்பிட்ட சூழ்நிலைமையைச் சார்ந்ததுதான்.

இதைக் குறித்தான ஒரு முக்கியமான குறிப்பு : எப்பொழுதுமே ஒரு பாடலை அதைக்கூட்டாக உபயோகிக்கும் முன்னர் அதை முற்றிலும் சரியாக கற்றுக்கொள்ள முயற்சிக்கவும். இது ஒவ்வொருவருக்கும் ஏற்படும் அதிகமான குழப்பமான மனநிலையிலிருந்து காத்துக்கொள்ளும். மற்றொரு பக்கமாக கொடுக்கப்பட்ட ஒரு பாடலை மாசக் கணக்காக அப்பியாசம் செய்து கொண்டு இருப்பதும் அதை கூட்டு ஆராதனைக்காக உபயோகப் படுத்தாமல் இருப்பதும் ஆராதிக்கும் குழு அங்கத்தினர்களுக்கு ஆர்வம் குறைந்து ஏமாற்றம் அடையச் செய்வதாக இருக்கும்.

4. **பழைய பாடல்கள்**

நீங்கள் உங்களுடைய ஆராதனைக் குழுவில் புதிய அங்கத்தினர்களை சேர்த்து கொள்ளுவதென்றால், இது விசேஷமாக முக்கியமானதாகும். அநேக ஜனங்கள் புதிய மக்களுக்கு மற்ற எல்லா பழைய பாடல்களையும் தெரிந்திருப்பார்கள் என்று சதாரணமான உத்தேசத்தில் இருப்பார்கள். துர்அதிர்ஷடவசமாக இது அரிதான காரியமாக இருக்கிறது. "பாடக்கூடிய பாடல்கள்" என்ற ஒரு அட்டவணையான பாடல்களை வைத்துக் கொள்ளுவது நல்லது. சமயா சமயங்களில் குழுவில் உள்ள ஒவ்வொருவருக்கும் அந்த பாடல்கள் அனைத்திலும் நன்கு பழக்கப்பட்டிருப்பார்கள் என்பதில் நிச்சயமாயிருக்க வேண்டும். சில சமயங்களில் ஒரு பழைய பாடலை எடுத்துக் கொண்டு அதற்காக ஒரு புதிய இசை அமைப்பை செய்து கொள்ளுதல் சாலச் சிறந்ததாகும். இது பழையதான ஒன்றிற்கு புதிய ஜீவனைக் கொடுப்பதால், இது ஒரு நீண்ட கால பலன் கொடுப்பதாக இருக்கும்.

5. **முந்திய ஆராதனை வழிபாடுகளை மதிப்பீடு செய்க**

நீ சுய ஆராய்ச்சிகாரனாக மாறாத வரைக்கும் இது உனக்கு உதவி செய்யக் கூடியதாக இருக்கும். நீ இசை சார்ந்த எதை செய்தாயோ அதையும் கூடிவரும் சபையிலிருந்து வரக்கூடிய அனைத்து உள்ளடக்கிய பதில்களுமே மீண்டும் ஒத்துப் பார்ப்பதற்கு (நன்மை) பயன் தருவதாக இருக்கும். முன்நாட்களின் தொழுகை ஆராதனைகளை மீள்பார்வை செய்வது கடைசி தடவையாக கிரியை செய்தது போல கிரியை செய்யும் என்று திரும்பச் செய்வதல்ல. ஆனால் ஏன் காரியங்கள் அந்த வழியில் நடந்தது என்பதை மதீப்பீடு செய்வதால் என்ன வித்தியாசமாக பயன் தரக்கூடிய வழியில் செய்யப்படக் கூடும் என்பதே. இதற்காக அதீதமான குறைகாணும் நேரமல்ல. ஆனால் படித்துக் கொள்ளும் நோக்கத்தோடு என்ன நேரிட்டது என்பதை எளிதாக பார்வை செய்வதுடன் நேர்மையான மதிப்பீடு செய்வதால் அநேக விஷயங்களைக் கற்றுக் கொள்ளக் கூடும்.

6. **விசேஷமான இசை**

இந்த வகையான பாடல்கள் வழக்கமாக சற்று அதிகமான வேலையை துதி ஆராதனையை விட சிறிது பகுதியாக உள்ளடக்குவதாகும். ஏனென்றால் இந்த விசேஷமான இசையானது அடிக்கடி அதிக சிக்கலானதாக, ஆனாலும் சபையார் அதை பாடாமலும் இருக்கலாம். அவர்கள் கேட்டுக் கவனிக்க மட்டும் செய்வார்கள். அதிகமான சபைகள் தங்களது விசேஷித்த இசைக்கு பளபளப்புக் கொடுப்பதற்காக தாங்கள் துதி ஆராதனை இசைக்கு கொடுப்பதை விட அதிக நேரம் செலவழிக்கின்றனர்.

இந்தக் காரியங்கள் எல்லாவற்றிலும் பெரிதாக கருத்தாய்வுக்கு உரியது பல்சுவையாகும். அநேக மக்கள் ஜீவியத்தின் எந்த பகுதியிலும் முன்னுரைக்கக் கூடிய நடைபாவனைகளில் சுலபமாக விழுந்து விடுகிறார்கள். இது ஆராதனை ஒத்திகைகளில் கூட உண்மையாகும். ஆர்வத்தையும் உற்சாகத்தையும் உயர்ந்த மட்டத்தில் தொடர்ந்து போய் கொண்டிருக்கும் அடிப்படையில் நிலை நிறுத்திக் கொள்வது முக்கியமாகும். இது கொஞ்சங்குறைய ஒரு பகுதியாக பல்சுவை சேர்ப்பதினால் சாதனையாக்கப்பட்டு அதன் காரணமாக உங்களுடைய ஆராதனை ஒத்திகைகளை திரும்பத் திரும்பச் செய்யும் தவறில் விழுந்து விடாதபடி தடுக்கப்படுகிறது.

நான் யோசனையாகக் கூறும் குறிக்கோள்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கியது என்பதற்கு அவசியமில்லை. ஒருகால் அங்கே எண்ணற்ற மற்ற நடைமுறைக்கான யோசனைகள் உங்களுக்குத் தெரிந்தவைகளும் அல்லது நீங்கள் தற்சமயம் உபயோகிப்பதுமாக பல இருக்கின்றன. இவற்றோடு உங்கள் குறிக்கோள்கயையும் இணைத்து விடுங்கள் அல்லது மற்றவர்களிடமிருந்து கருத்துக்களையும் பெற்று உங்கள் ஒத்திகைகளுக்கு ஒரு சரியான சமநிலையைக் கண்டு பிடித்துக் கொள்ளுங்கள்.

## அதிகாரம் 5 திடமான தனிப்பாடல்களைத் தெரிந்தெடுத்துக் தொகுப்பு

பாடல்கள், இசையின் பாணி அவைகளைப் பற்றிய அபிப்பிராயங்கள் வழக்கமாக கடினமாக வருவதில்லை. ஒவ்வொருவருக்கும் எது நல்ல இசை, எது கெட்ட இசை என்ற எண்ணம் இருக்கிறது. அடிக்கடி நான் பின்வருமாறு சொல்லப்படுகிற கருத்துரைகளை கேட்பதுண்டு, "நாம் அநேக

துரிதகதியான பாடல்களைப் பாடுகிறோம்” என்றும் அல்லது “நாம் அதிகமான வேகம் குறைந்த பாடல்களைப் பாடுகிறோம்” என்பதுவுங்கூட சொல்லப்படுகிறது. சிலர் என்னிடம் நாம் போதுமான கீதங்களைப் பாடுவதில்லை என்று சொல்லும்போது பிறர் நாம் அதிகமான பாடல்களைப் பாடுகிறோம் என்பார்கள். பிறர் நாம் அதிகமான பாடல்களைப் பாடுகிறோம் என்பார்கள். மேலும் நாம் அதிகமான புதிய பாடல்களைப் பாடுகிறோம் என்றும் உணர்கிறவர்கள் இருக்கின்றனர். அப்படியே மற்றவர்களும் நாம் போதுமான புதிய பாடல்களைக் கற்றுக் கொள்ளத் தவறி விடுகிறோம் என்றும் உணருகிறார்கள். ஆகவே ஒவ்வொருவம் நானும் கூட ஒவ்வொருவருக்கும் தாங்கள் சொல்லக் கூடிய அபிப்பிராயத்தை உடையவர்கள் என்ற விளக்கமும் எனக்கு இருக்கிறது.

இந்த பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்காக நான் கண்டு பிடித்த திறவுகோலாவது, சமநிலையைக் கடைபிடித்து அதோடு பலதிறப்பட்ட இசையையும் பாடல்களின் வகைகளையும் தனிப்பாடல் தொகுப்பில் ஒருங்கிணைத்துக் கொள்வதாகும். ஒரே போன்ற அதே விவாதத்தின் வெளிக்கூறப்படும் இருதரப்பினரையும் நான் கேட்டுக் கொண்டு இருப்பேனாகில் அதாவது, “அதிக துரிதமானது என்றும் அதிக வேகம் குறைந்தது” என்றும் ஒருவேளை நான் எங்கு இருக்க வேண்டுமோ அங்கு இசையுடன் இணைந்தே இருக்கவேண்டும்.

இங்கே நடைமுறைக்கான கருத்துக்கள் அதாவது நீங்கள் ஒரு தனிப்பாடல் தொகுப்பை தொகுத்து இணைக்கும் பொழுது உபயோகிப்பதற்கானவைகள் ஆகும்.

முதல் காரியமாக நீங்கள் செய்ய வேண்டியதாவது, பழைய பாடல் கீர்த்தனைகளையும், சக்தி வாய்ந்த புதிய பாடல்களையும் பரிசீலனை செய்ய வேண்டியதாகும். அவைகளை அந்த கீர்த்தனைகளை இசையிலிருந்த பிரித்தெடுத்து பரிசீலனை செய்வது உகந்ததாகும். ஏனென்றால் இசைச்கலைஞர்களாகிய நாம் இராகத்தின்படி வறியதானதோர் பாடலின் பக்கமாய் சாய்ந்து போகக் கூடுமாதலால், அதன் இசையானது மிகச் சிறந்ததாக இருக்கும்பொழுது இவ்வாறு ஆகக்கூடும். இது நல்ல குறிக்கோள் ஆகாது. அதன் வார்த்தைகளை மதிப்பீடு செய்யும்பொழுது பினவருபனவாகிய சில காரியங்களைப் பார்த்தறிவது வேண்டும் :-

- அதன் வார்த்தைகள் வேதத்தோடு உடன்பாடு உடையதா? அதன் இடம் பொருள் காலத்தையும் அறிந்து கொள்க.
- அவைகள் சபையின் புரிந்து கொள்ளுதலான அனுபவத்திற்குட்பட்டதா? (அநேகமான 300 ஆண்டுகளுக்கு முற்பட்டவையான பாடல்கள் அப்படி இருக்க முடியாது)
- அவைகள் ஓசை நயமுடையவைகளாக இசைக்கு பொருந்தி வருகிறதா? (அதிக அதிகமான மக்கள் சிறிதேனும் பயிற்சி இல்லாதவர்களாக பாடல்களை எழுத முயற்சிக்கும் பொழுது உண்டாகும் பிரச்சனை ஆகும்) அதிலுங்கூட நீங்கள் இசையையும் பரிசீலனை செய்ய வேண்டும்.
- அதற்கான இசை நல்ல பண்புத் திறம் உடையதா? (சலிப்பு உண்டாக்குவதாக அல்ல)
- அதற்கான இசையானது சபையாரின் அனுபவத்திற்கும் புரிந்து கொள்ளுதலுக்கும் உட்பட்டிருக்கிறதா? (மறுபடியும் 300 ஆண்டுகள் பழைமையான பாடல்களின் இசை பொருத்தமாக இருக்காது. ஆனாலும் நவ நாகரிகமான நவீன பாடல்களும் அவ்வகைப் பட்டனவாகும்)
- அது வார்த்தைகளை உயர்ந்து விரிவாக்குகிறதா? பின்வரும் வார்த்தைகளான அழுகையோடும், துக்கத்தோடும், பற்கடிப்போடும் என்ற வார்த்தைகளை “கர்த்தருக்குள் களிகூறுதல் என் பலன்” என்று பாடும் இராகத்தோடு ஒருவேளை நன்றாக இசைந்து போகாது). ஆகவே நீங்கள் உங்கள் பாடல் தொகுப்பிலுள்ள மேலோட்டமான பல்சுவைத் திறன்களை பரிசீலனை செய்தே ஆக வேண்டும்.
- உங்கள் இசையில் வித்தியாசமான போதுமான ஸ்தாயை பயன்படுத்துகிறீர்களா? (நீங்கள் உங்கள் இசையை C ஸ்தாயில் இசைத்தால் சபையினர் இசையில் சுலபமாக சலிப்படையக் கூடும்.)
- ஓசைநயம், இசை வேகம் இவற்றைப் பற்றிய பல்திறன் யாது? (துரிதமானது, வேகம் குறைந்தது, 2/4, 2/4, 3/4, 6/8 முதலியன)

- வேறுபட்ட இசையின் பாணிகளை முயற்சிக்கிறீர்களா? (யாராவது கிராமிய இசை அல்லது கீர்த்தனைகளைப் பயன்படுத்துகிறார்களா?)
- நீங்கள் வெவ்வேறு வகையான பாடல்களை அறிமுகப்படுத்துகிறீர்களா? (வேதாகமம், சங்கீதங்களையும், கீதங்களையும் (ஞானப்பாட்டு) ஆவிக்குரிய பாடல்களைப் பற்றிப் பேசுகிறது. மேலும் ஜெபங்களும், துதிகளும், சாட்சி பாடல்களும், பழைய பாடல்களும், புதிய பாடல்களும், சிக்கலான பாடல்களும் இருக்கின்றன).
- தனிப்பட்ட பாடல்களுக்குள் பல்சுவை இருக்கிறதா? (மனிதர்கள் பாடுகிறார்கள், ஸ்திரீகள் பாடுகிறார்கள், குழந்தைகள் பாடுகிறார்கள், சபையார் பாடுகிறார்கள், இசைக்கருவிகள் பகுதி, படிப்படியான இசை ஒலி ஏற்றம் இசைவொலி இறக்கம், வித்தியாசமான ஸ்தாயிக்கு ஏற்ப ஏற்ற இறக்கமாக மாற்றிக் கொள்வது. இவைகள் எல்லாவற்றையும் தெரிந்து எடுத்துக் கொள்வதால் ஓரே பாடல் இசையில் நடைமுறைப் படுத்துவதல்ல)

எப்பொழுதுமே புதிய பாடல்கள் கிடைக்குமா என்று பார்த்திருங்கள் வேதாகமம் மறுபடியும் மறுபடியுமாக கர்த்தருக்குப் புதுப்பாட்டை பாடுங்கள்" என்று நமக்குக் கூறுகிறது. இது தேவனுடைய நன்மைக்காக அல்லாமல் நமது நன்மைக்காகவே என்பதை புரிந்திருக்கிறேன். "நான் உம்மை நேசிக்கிறேன்" என்று நாம் சொல்வதில் கர்த்தர் சலிப்படைவதில்லை. ஆனால் நாம் இராகத்துடன் அதன் வழியில் அதைப் போல் சொல்வதில் சலிப்படைகிறோம். நாம் புதிய பாடல்களைப் பாடுவதற்கென்று ஓர் அவசியம் இருக்கிறது. இந்த காலத்தில் புதிய பாடல்கள் உண்டாகும் காரணமான மூல ஊற்றிலிருந்து நமக்கு வேண்டியதை மட்டும் தெரிந்தெடுத்துக் கொள்ளும் அனுகூலம் நமக்கிருக்கிறது. அதேபோல் தன்போக்கில் வழியில் வருகிற பாடல்களை உபயோகிப்பது சரியல்ல. சரியானவைகளையே தெரிந்து எடுத்துக் கொள்ள கவனமாயிருக்கவும், ஏனென்றால் கர்த்தர் நமது சபையில் செய்யக் கூடிய தற்காலத்திய கிரியைகளுக்காகவே.

இறுதியாக, பாடல்கள் எழுதுவதிலும் அவற்றைப் பகிர்ந்து கொள்வதிலும் திறந்த மனமுடையவர்களாய் இருங்கள். ஆராதனைத் தலைவராக உங்கள் சபையில் உங்கள் மக்களுடைய மக்களின் ஆவிக்குரிய நிலைமையைப் புரிந்து கொள்ளுங்கள் இதை அறிந்து கர்த்தர் தாமே அவர்களுக்கு எது தேவையோ அதைப் பாடலாக எழுதும் படியாக கர்த்தர் உங்களைத் தூண்டி எழுப்புவார்.

இந்த காரியங்கள் எல்லாவற்றிலும் உங்கள் சபையின் அங்கத்தினர்கள் சொல்லும் அபிப்பிராயங்களைக் எச்சரிக்கையுடன் கருத்தில் கொள்ளுங்கள். எதையென்றால் நீங்கள் உபயோகப்படுத்தும் இசையைப் பற்றிய விஷயத்தில் கவனமாய் இருங்கள். விமர்சனத்தை தனிப்பட்ட முறையில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதை ஞாபகத்தில் வையுங்கள். ஏனென்றால் அது பெரும்பான்மையோரின் அபிப்பிராயத்தை சொன்னதாக கருதக்கூடாது. என்னவென்றாலும் அவர்களுடைய அபிப்பிராயத்தை செவிக் கொடுத்துக் கேட்டு அதை ஏற்றுக் கொள்ளுங்கள். ஏனென்றால் அவர்கள் தான் நீங்கள் தேவனுக்கு முன்பாக நடத்திச் செல்லும் மக்களாவார்கள்.

## அதிகாரம் 6 உங்கள் மேல் அதிகாரம் உள்ளவர்களுக்கு விசுவாச பக்தியுடன் இருங்கள்

சமீப காலத்தில் நமது போதகரும் நானும் ஒரு பெரிய ஆரதனை மகாநாட்டின் பல கூட்டங்களில் பேசுவதற்கான சந்தர்ப்பம் பெற்றிருந்தோம். நாங்கள் ஒவ்வொருவருமே ஓரிரு தடவைகளில் பேசினோம். எங்களுக்குத் தெரியாமலே நாங்கள் ஒருவர் மற்றவரை பல சமயங்களில் எங்கள் போதனைக்கு உதாரணமாக பயன்படுத்தக் கொண்டோம். நாங்கள் ஒருவரையொருவர் மரியாதையுடனும், மெச்சியும், போற்றியும் பேசிக்கொண்டோம்.

அந்த மகாநாட்டின் மூன்று நாட்களிலும் எண்ணற்ற மக்கள் எங்கள் ஒவ்வொருவருடைய கூட்டத்திற்கும் தாங்கள் ஆஜராகி இருந்ததாகச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன கருத்துரைகள் அனைத்தும் ஒன்று போலவே இருந்தன. அவர்கள் எங்களுக்குள் இருந்த உறவுத் தொடர்பையும் எங்களுக்குள் ஒருவருக்கொருவர் இருந்த பரஸ்பரமான போற்றி மெச்சுதலையும் கண்டு வியப்படைந்தார்கள். அவைகள் அவர்களுடைய வார்த்தைகளே. அவர்களுக்குள் வெளியிடப்பட்ட வாஞ்சையானது

அதே போன்றதொரு உறவுத்தொடர்பு அவர்களுடைய போதகர்களோடு இருக்க வேண்டும் என்பதே. அவர்கள் தங்களுடைய போதகர்களுடன் கொண்டிருந்த உறவுத் தொடர்பானது பூரணமானதாக இருந்ததில்லை என்பதை உணர்ந்திருந்தார்கள். ஆகவே அவர்கள் அதில் ஒரு முன்னேற்றத்தைக் காண விரும்பினார்கள்.

போதகர்களும் ஆராதனைத் தலைவர்களும் திடமான நிறைவு கொடுக்கக்கூடிய உறவுத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளக்கூடும். ஆனால் அது சுலபமானதாயிருக்க வேண்டிய அவசியமில்லை. அதை ஒரு திருமண உறவை போன்றது என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். போதகர் ஒரு கணவரைப் போன்று இறுதியான ஆவிக்குரிய அதிகாரத்தையுடையவர். இதற்காக அவர் ஆராதனைத் தலைவரை அதிகாரம் செய்கிறார் என்ற அர்த்தமில்லை. ஆனால் அவர் அதற்குப் பொறுப்பானவர். அந்த குறிப்பிட்ட சபையின் மக்களுக்கான இறுதியான பொறுப்பையுடையவர். ஆராதனைத் தலைவர், மணவாட்டியைப்போல பணிந்து கீழ்படிந்திருக்க கற்றுக் கொள்ள வேண்டும். இது ஒரு படைப்பாற்றலுள்ள தந்திரமான மனிதனுக்கு எப்பொழுதும் எளிதாக இருப்பதில்லை. ஆனால் பின்னர் தேவன் நம்முடைய உறவுத் தொடர்புகள் சுலபமானதாக இருக்கும் எப்பொழுதுமே சொன்னதில்லை. சில சமயங்களில் ஜீவியத்தில் உண்மையான காரியங்களுக்ககு மெய்யான கிரியைகள் தேவையாய் இருக்கிறது.

ஒரு குணச்சித்திரமான ஆராதனைத் தலைவர் தன்னுடைய போதகருடன் ஒரு உறவுத் தொடர்பில் கைக் கொண்டு செல்ல வேண்டியதாவது (விசுவாச பக்தி) பணிந்து கீழ்படிவதே நான் முக்கியமானதாக நம்புகிறேன். இது ஒரு நேரத்து வாய்மொழி சம்மதமான விசுவாச பக்தி அல்ல, ஓர் அனுதினமான விசுவாச பக்கதியில் நடந்து செல்வதாகும். விசுவாச பக்தியை விருத்தி செய்வது சுலபமானதாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு திருமணத்தில் உள்ள அன்பும் நேர்மையும் போல விசுவாச பக்தியும் ஒரு தீர்மானமாகும். அது தானாகவே நேரிடுவது இல்லை. அதற்காக நீ கிரியை செய்ய வேண்டும். நடைமுறை மொழியில் நீ உன்னுடைய சொந்த திட்டங்களையும் நிகழ்ச்சி நிரல்களையும் சற்று தூரத்தில் வைத்து விட்டு போதகருடைய திட்டங்களை அதற்கு பதிலாக கையாளவேண்டும். நீ விருப்ப சித்தத்துடன் போதகருடைய கருத்துரைகளையும் கட்டி எழுப்பும் விமர்சனங்களையும் தங்களுடைய உறவுத் தொடர்புக்கு சற்று பாதிப்பு எதுவுமின்றி ஏற்றுக் கொள்ள வேண்டும். வெளிப்படையான கர்த்தருக்கு விரோதமான எதுவும் உங்களுடைய தலைமைத்துவத்திற்கு குழப்பத்தை உண்டாக்கும் என்றால், அது தகுதியாகாது என்று அதற்கு விரோதமாகத் தீர்மானஞ் செய்து கொள்ள வேண்டும். என்ன நேரிட்டாலும் ஒரு பொருட்டல்ல நீ விசுவாச பக்தியுடன் நிலை நிற்பாயென்று நீ தீர்மானஞ் செய்து கொள்ளக் கூடும்.

“உங்களை நடத்துகிறர்வகள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்திரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களான படியால் அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி அவர்களுக்கு கீழ்படிந்து அடங்குங்கள். அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்க மாட்டாதே” (எபி 13:17).

நம்மில் அநேகருக்கு பழக்கமில்லாத ஒரு கோட்பாடானது, இதை விட அதிகமானதாக இருக்குமென்று நான் புரிந்து கொண்டிருக்கிறேன். நாம் மெய்யாகவே அந்த வார்த்தையில் மறைந்து கிடக்கும் உட்பொருளை விளங்கிக் கொள்ளாதவர்களாகவே இருக்கிறோம். நாம் விசுவாசப்பக்தி (அ) கீழ்படிதல் என்றதை ஏதோ ஒன்று நமது கீழ்படிதலைச் சோதிக்கும் வரை அந்த எல்லைக் குறிப்புவரை நமது முயற்சியில் பயன் எதுவும் உண்டோ என்றும் சந்தேகிக்கிறோம். என்னவென்றாலும் நாம் முற்றிலுமாக நம்மைக் குறித்து நாம் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டியது என்னவென்றால் வேதாகமத்து திருமண உறவுத் தொடர்பில் உள்ளது போலவே நமது போதகரோடு கொண்டுள்ள உறவுத் தொடர்பில் பணிந்து கீழ்படிதலானது அந்த முயற்சிக்குத் தகுந்த பலனைத் தருவதாகும்.

நீ உனக்குள்ளாகவே இந்த மனப்பான்மையைத் தொடர்ந்து நிலைத்திருக்க பார்ப்பாயானால் அதே நேரத்தில் தானே ஏதோ ஒன்று ஆர்வத்தைத் தூண்டக் சுடியதாய் நேரிடுவதைப் பார்க்கலாம். உன்னுடைய போதகர் நீ அவருக்குப் பணிந்து கீழ்படிந்திருப்பதாகக் கண்டு கொண்டதாக உணருவார் என்றால் உன்னுடைய பொறுப்புள்ள பகுதியில் உனக்கு அதிகமான சுதந்திரத்தைக் கொடுக்க ஆரம்பிப்பார். இது சற்று விநோதமாகத் தோன்றலாம். ஆனால் உண்மையும் அதுவாகும். உன்னுடைய போதகர் உன்னை அதி தீவிரமாக அவருக்குப் பணிந்து கீழ்படிந்திருப்பதாகக் காண்பாரானால்,

அவருக்குப் பயந்து விடக்கூடிய காரணம் எதுவும் கிடையாது. அதாவது நீ சொல்வதிலோ அல்லது செய்வதிலோ பயந்து விடக் காரணம் எதுவும் இல்லை. அவர் உன்னை இதற்கு முன் என்றுமில்லாததோர் முறையாக உன்னை தான் நம்பும் படியாக ஆரம்பிப்பார்.

இதை புரிந்து கொள்ள வேண்டுமானால் நீ இந்த சூழ்நிலைமையை போதகருடைய கண்ணோட்டத்தில் ஒரு சிறிது நேரம் பார்க்கும் படியாக முயற்சி செய்து ஆராதனைத் தலைவர் சபைகூடிவரும் கூட்டங்களில் இரண்டாவதாக, அதிகமான செல்வாக்கு உடையவர் ஆராதனையான தொழுகை நேரத்தில் மூன்றில் ஒன்றிலிருந்து ஒரு ஆராதனையின் பாதி பகுதி நேரம் உன்னுடைய தலைமையின் கீழ் எடுத்துக் கொள்ளப்படுகிறது. போதகருடைய மனதில் நீ வைத்துவிட வேண்டிய கோட்பாடாவது, ஆராதனைத் தலைவர்களைப் பற்றிய சில பயங்கரமான கதைகளையும் அவர்கள் எவ்வாறு அதிகமான குழப்பத்தையும், சோதனைகளையும் சபைகளுக்குள் உண்டாக்கி நாம் விளைவிக்க முயன்றார்கள் என்பதையும், அதனால் உனக்கு ஒரு எரிந்து போகிற கலவை இருக்கிறதென்றும் நினைவுறுத்துவாயாக. ஆனால் ஒரு ஆராதனைத் தலைவராக நீ உன்னுடைய பணிந்து கீழ்படிதலை வெளியில் காட்ட முடியுமானாலும் உன்னுடைய போதகருக்கு உன்னிடமிருந்து பயப்படுவதற்கு ஒன்றுமில்லை என்று விரைவில் உணர்ந்து கொள்ளுவார். எச்சரிக்கையான ஒரு வார்த்தை நிச்சயமாகவே முறையானது தான். அதிகமான சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக பணிந்து கீழ்படிதலை வெளிக்கும் காட்டுவது கிரியை செய்யாது. இது இதனால் எப்பொழுதுமே வெளிக்கு தெரிகிறதாவது, இந்த பணிந்து கீழ்படிதல் உண்மையானதா, உளமார்ந்த பணிந்து கீழ்படிதலா அல்லது நான் ஏதோ ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக இதைச் செய்கிறேன் என்ற பாகுபாட்டைச் சார்ந்ததா? பணிந்து கீழ்படிதல் அது ஏதோ ஒன்றை சாதித்துக் கொள்ளக் கூடிய ஒரு வழியா? அது நமது ஜிவியத்திற்குள்ளாக நாம் பழக்கப்படுத்திக் கொள்கிற சாதாரணமமான தேவையாகும். ஊழியத்தில் போதகரால் அதீதமானதுமான பணிந்து கீழ்படிதலின் சாதாரணமான துணைப் பொருளாகும்.

மேலும் அங்கே மற்றொரு வேளை, சில வழிகளில் மேலும் முக்கியமானதாக கிரியை செய்யும் கோட்பாடு இங்கே உண்டு அதாவது, விதைத்தலும் அறுவடையுமாகும். இது என்னுடைய சொந்தமான அனுபவத்திற்குள் முற்றிலுமாக உண்மையென்று கண்டறிந்திருக்கிறேன். நான் பணிந்து கீழ்படிதலை விதைத்தால் நான் பணிந்து கீழ்படிதலை அறுவடை செய்திருக்கிறேன். பல திருச்சபைகளை பல இடங்களில் போய் பார்த்ததில் நான் திரும்பவும் திரும்பவும் எதிர்மறையான கருத்துரைகளை பொதுவான திட்ட அமைப்பிலும் கூட, இசைக்கலைஞர்களிடமிருந்து தங்களுடைய ஆராதனைத் தலைவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். நான் இதை ஒரு துக்கம் கொடுப்பதாகக் கண்டாலும் இது எதோ ஒரு வகையில் எனக்கு அதை அறிவதால் சற்று ஆறுதல் தருவதாக எவ்வித சந்தேகமுமில்லாமல் என்னுடைய இசைக்கலைஞர்கள் இவ்வாறு செய்யமாட்டார்கள் என்பது மேற்கூறியவாறு ஆறுதல் தருவதாக இருக்கிறது. அவர்கள் 100 சதவிகிதம் என்னுடைய தலைமைத்துவத்திற்கு ஒப்படைப்பு செய்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எனக்கு ஏதோ ஒரு பகுதியிலாவது பணிந்து கீழ்படிகிறார்கள். ஏனென்றால் எனக்கு மேலாகப்பட்டவர்களுக்கு நான் பணிந்து கீழ்படிந்து இருந்ததால் நீ எதை விதைக்கிறாயோ அதையே அறுப்பாய்.

நீ ஏற்கனவே இவ்வாறு செய்திருக்காவிட்டாலும் நீ உன்னுடைய போதகருக்குப் பணிந்து கீழ்படிந்து இருப்பேன் என்று இன்றே தீர்மானம் செய்துகொள்! தேவனுடைய ஆசீர்வாதத்தின் முடிவான பலன்கள் திருச்சபையின் மேல் வருவது நமது முயற்சிக்கு தகுதியான ஏற்ற பலாபலன் ஆகும்.

## ஒரு ஆராதனைத் தலைவரின் பங்கு

1. உன்னுடைய குழு அங்கத்தினர்களுடன் **உறவுகொள்**, அவர்கள் ஜீவியத்தில் ஆர்வம் காட்டு, அவர்களுக்குப் போதகருடைய தரிசனத்தைத் தெரியப்படுத்து, அதிலே ஒட்டிக்கொண்டிரு. அதை பற்றி அப்போதைக்கப்போது திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிரு.
2. குழுவுக்குள் ஒவ்வொரு அங்கத்தினரின் பங்கையும் வரையறுத்து **விளக்கம் செய்.**
3. அங்கத்தினர்கள் பின்பற்றிச் செல்ல வழிகாட்டும் முறைகளை **ஸ்தாபனம் செய்க.**
4. எப்பொழுதுமே ஊக்கப்படுத்திக் கொண்டும், நோக்கப்படுத்திக் கொண்டும் நேர்மறையான ஓர் வெளிப்பார்வையுடன் தோற்றப் பார்வையையும் **பெற்றிரு.**
5. போதுமான பயிற்சிக்கு **ஒழுங்கு செய்க.**
6. உணர்ச்சி பூர்வமாக இருக்கக் கற்றுக் கொள், பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்படும் கட்டளைகளையும் போகும் மார்க்கத்தையும் **பின்பற்றிச் செல்வாயாக.**
7. உன்னுடைய ஜிவியத்தையே சோதனை செய்து உன்னுடைய வாழ்க்கை நடைமுறை பாணியை அந்தந்த காலத்தில் **மதிப்பீடு செய்க**. நீ நீயாக ஒரு ஆராதனை செய்பவராக அனுதினமும் இருப்பாயானல் மற்றவர்களையும் நீ வழி நடத்திச் செல்லக்கூடும்.
8. உன்னுடைய சொந்த ஆராதனைகளில் தெரிந்தெடுக்கப்பட்ட பாடல்களை நீ பாடி முன் நின்று **நடத்திச் செல்வாயாக.**
9. ஒவ்வொரு தொழுகை ஆராதனைக்கும் முன் தேவனை அவருடைய வழிகாட்டுதலுக்காக **தேடிக் காத்திரு.**
10. உன்னுடைய குழுவுக்கு முன்பாக நீ செய்த தவறுகளை ஒப்புக் கொண்டு திறந்த மனதுடனும் நேர்மையாகயும் **இருப்பாயாக.**
11. செய்த தீர்மானங்களில் ஒட்டி நிலைத்திரு. அவசியமான பொழுதெல்லாம் தேவையான தீர்மானங்களைச் **செய்து கொள்க.**
12. பின்வருவனவற்றிற்காக ஒழுங்கான **பயிற்சி செய்க.**
    - பழக்கப் பயிற்சிகளெல்லாம் பயனுள்ளதாக ஓடச் செய்து பார்க்க. (முன்னேற்றம் ஏற்பட வேண்டும்)
    - குழு அங்கத்தினர்களுக்கிடையே ஐக்கியத்திற்காக கால அவகாசம் கொடுக்கவும்.
    - குழுவினருக்கிடையே காலகாலத்தில் வேடிக்கையான காலப்போக்கிற்கு இடம் கொடு.
13. வழி நடத்திச் செல்லும்போது அதீதமான எழுச்சியோ அல்லது தன்னை அத்துமீறி கொண்டு போகும்படி **விட்டு விடக்கூடாது.**
14. ஒரு **தாழ்மை**யான வேலைக்காரனுடைய ஆவியை உன்னில் **விருத்தி செய்து கொள்க.**

### ஒரு ஆராதனைத் தலைவருக்கான இலக்குகள்

1. தேவனுடன் நெருக்கமானதோர் ஐக்கியத்தில் மக்களை வழி நடத்திச் செல்க.
2. பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தை அசைவாடுதலில் பிரத்தியட்சமாகக் காணும் படியாக.
3. மக்களை தேவனிடம் தங்களை சுதந்திரமாக வெளிப்படுத்திக் கொள்ளும் படியாகச் செய்க.
4. அவர்கள் ஒவ்வொருவருடனும் தேவனை பற்றிப் பேசும்படியாக அனுமதிக்க.
5. வார்த்தையின் ஊழியத்திற்காக ஒரு மேடையை ஆயத்தம் செய்க. (வசனத்தைப் பெற்றுக் கொள்ளும் படியான இருதயத்தை)

ஜனங்களுடன் சில வழிகளின் மூலமாக **இணைந்து கொள்ள கற்றுக் கொள்ளவும்:**

- கண்ணசைவுகளால் (முக்கியமானது)
- புன்சிரிப்பு
- ஒருவருக்கொருவர் பழகிக் கொள்ளுதல்
- ஜெபம்
- மக்களுடைய தெரிந்தெடுத்தலுக்கு செவிக்கொடுத்தல்
- மக்களுடன் கலந்து கொள்ளப்பழகுதல்.
- புத்திமதி கூறுதல்
    - i. கூறப்படும் புத்திமதியான வார்த்தைகள் a) அர்த்தமுள்ளதாக b) சம்பந்தமுடையதாக
    - ii. பிரசங்கம் செய்யாமல்
    - iii. தனிப்பட்ட பிரகாரமாக இடைபடுதல்.
- அசைவுகளான சைகைகளாக கை/கால்/நடனம்.
- முக்கியமான மாறுதல் மேல்நோக்கியமாக (முக்கியமானதாக பின்னோக்கிப் போகாதபடி)
- தனிப்பாடல்கள். எங்கே தகுதியோ அங்கு பாடவும்.

6. எடுத்துக் காட்டுகளினால் வழி நடத்திச் செல்ல (தனியாகவும் குழுவாகவும்)
7. மக்களை அதில் சேர்ந்து கொள்ளும்படியாக (வரவேற்றல்) அழைப்பு விடுத்தல்.
8. நீங்கள் கொடுக்கும் பிரதியுத்தரம் (மக்களை பாராட்டியும்) உற்சாகப்படுத்த நோக்கப்படுத்த.
9. உன்னை மற்றவர்களுடன் ஒப்பிடாதே (ஒவ்வொருவரும் தனிப்பட்ட வகையில் சிறந்தவர்கள்)

# ஒரு ஆராதனைத் தலைவருக்கான பணிகள்

1. மக்கள் ஆராதனை செய்யும் படியாக அவர்களுக்கு கூடுமான வரை சிறந்த சந்தர்ப்பம் அளித்தல்.
2. அவர்களை கேந்திரத்தில் கொண்டு வந்து திசைக்காட்டுதல்
3. ஒரு குழுவில் ஒற்றுமையை பாதுகாக்க.

## ஆராதனை நடத்துவதற்கான வழிகாட்டி முறைகள்

### A. நீயே ஒரு ஆராதனை செய்பவனாக இருப்பாயாக

- பிதாவனவர் ஆராதனை செய்கிறவர்களைத் தேடுகிறார். "உண்மையாய் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளும் காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது. தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்" (யோவான் 4:23)
- ஆராதனை செய்கிறவர்கள் தான் கொடுப்பவர்கள்
- ஆராதனை செய்கிறவர்கள் கிறிஸ்துவின் நற்கந்தத்தை பரப்புகிறவர்களாய் இருக்கிறார்கள்.
- ஆராதனை செய்வது ஒருவருடைய இருதயத்தின் அன்பு, போற்றித் துதித்தல் தேவனை அவருடைய சர்வவல்லமையையும் கர்த்தத்துவத்தையும் குறித்த மகா ஒப்புக் கொள்ளுதலான மனப்பான்மையுடன் துதித்தல் ஆகியவற்றின் இதயத்தின் வெளிப்பாடாகும்.

### B. ஜெபித்து திட்டமிட்டு அப்பியாசம் செய்து கொள்

- நீ ஒரு வேதபாட வகுப்புக்குத் திட்டமிடுவது போல ஆரதனைக்கும் திட்டமிடுவாயாக.
- ஒரு முக்கியமான கேந்திரத்திற்கும் ஒரு கருத்தாய்வு மொழிக்கும் தேவனைத் தேடுவாயாக.
- நீ எய்தும்படியாக நம்புகிற மனதின் பக்குவத்திற்கு உன் கவனத்தை அளிப்பாயாக.
- தலைப்புக்குப் பொருத்தமான பாடல்களைத் தெரிந்தெடுப்பாயாக.
- கர்த்தருடைய வார்த்தையை தியானிப்பது நீ பாடும் கீர்த்தனைகளில் பிரதிபலிக்க வேண்டும்.
- பாடல்கள் அனைத்தையும் ஒத்திகை செய்க. அதிலும் வழக்கமாக துரிதகதியான பாடல்களை ஒன்றாகச் சேர்ப்பது உபாயத்தையுடையதாகும். ஏனென்றால் அவற்றிற்கு இடையிலான சுருக்கமான இடைவெளிகள், இருப்பதால் கடினமாகும். ஒவ்வொரு பாட்டின் உள்ளே பொங்கி ஓடி பின் பிரவாகித்து வெளிவருவது எப்படி என்று உனக்கு நிச்சயமாக இல்லாவிட்டால் நீ அதை சரியாகப் பெற்றுக் கொள்ளும் வரைக்கும் அதை அப்பியாசம் செய்வாயாக. கூடுமானால் இசைகலைஞனுடன் இணைந்து வேலை செய்வாயாக.
- நீ பாட விரும்பும் ஒவ்வொரு பாடல்களையும் எத்தனை தடவைகள் பாடுவது என்பதை தீர்மானித்துக் கொள்க. இதை இசைகலைஞர்கள் கூட்டத்திற்கு முன்னதாகவே தெரிந்து கொள்ளட்டும்.
- அதே மாதிரியாக இடைவெளி நேரத்தையும், வேதாகமப் பகுதியையோ அல்லது வார்த்தைகளையே மக்களுக்காக நீ விடுவிக்க வேண்டும் என்று உணர்வதையும் திட்டமிட்டுக் கொள்க. தேவன் தாமே உன் வழியில் முன்னதாகவே மக்களுடைய தேவையைப் பற்றி சொல்லுவார் என்பதையும் குறித்து வைத்துக் கொள்ளவும்.

### C. ஆராதனை செய்யும் பொழுது

- பரிசுத்த ஆவியானவரது அபிஷேகத்திற்கும் ஏவுதலுக்கும் உணர்வுடன் இருந்தும் கவனமாகப் பார்த்திருந்தும் வழிநடத்தி முன் செல்வாயாக.
- அந்த ஆளுகை நேரத்தை உன் பொறுப்பில் வைத்திரு. நீ நிச்சயமமில்லாதவனாகவோ, அல்லது நடுநடுங்குகிறவனாக இருந்தாலும் மக்களுக்கு அதைப் பற்றிச் சொல்லாதே.
- தேவனை மையப்படுத்தி அவருடைய நம்பிக்கைக்குள் உன்னை நடத்திச் செல்லும் படியாக அனுமதிப்பாயாக.

- பரிசுத்த ஆவியின் ஏவுதலுக்கு உணர்ச்சி பூர்வமாக இருப்பாயாக. நீ ஒரு திட்டத்தை உண்டாக்கிக் கொண்ட மட்டில் பரிசுத்த ஆவியானவரை ஒருபாட்டையோ, சரணத்தையே அல்லது வாய்மொழித் துதியாகவோ அல்லது புதிய பாடலாகவோ திரும்பவும் பாடும் படியாக வழி நடத்தட்டும்.
- எப்பொழுதுமே தேவனை பிரசன்னமாயிருக்கும் படியாக எதிர்பார்த்திருப்பாயாக.
- ஆராதனை சூழ்நிலையை நிலைபெறச் செய்வதற்காக பொருத்தமான துரிதகதியை பயன்படுத்தி அதை அடைந்து கொள்வாயாக.
- உனக்கென்று இசைக்கலைஞன் இருந்தால் அந்த ஆராதனை நேரத்தை பின்னணியான சங்கீதத்தைக் கொண்டு நிலைபடுத்திக் கொள்ளலாம். அந்த மாதிரியான சமயத்தில் வேதாகமத்து ஒரு பகுதியைப் பிடித்தும் அல்லது மக்கள் தங்கள் சொந்த ஆராதனையை தேவனுக்காக உயர்த்தவும் உற்சாகப்படுத்தவும்.

## D. ஆராதனை நடத்திச் செல்வதில் செய்யக்கூடாதவை

- பாடல்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ள சுற்றி வருவதைத் தவிர்க்கவும். தலைவர் அதற்கான பாடல்களை முன்னதாகவே தெரிந்து எடுத்திருக்க வேண்டும்.
- பாடல்களுக்கிடையில் நீண்ட அறிமுகவுரைகளையும், அனாவசியமான விளக்கங்களையும் தவிர்க்கவும்.
- பாடலின் போது ஒரு வித்தியாசமான ஸ்தாயில் பாடலை உயர்த்தி அல்லது தாழ்த்தி பாட முயற்சிக்க வேண்டாம். நீ மிகுந்த நம்பிக்கையுடையவனாக அந்த இராகத்தை அந்த புதிய ஸ்தாயில் கொண்டு போக முடிந்தாலன்றி மேற்கூறியவாறு செய்வதைத் தவிர்க்கவும். என்னவென்றாலும், கடைசி சரணத்தை சில பாடல்களில் பாடும்பொழுது ஸ்தாயை உயர்த்துவது ஆராதனை சூழ்நிலைமையின் மனோ பாவத்தை உயர்த்துவதற்கு உதவும்.
- உங்களுக்கு நன்கு அறிமுகமில்லாத பாடல்களை தெரிந்தெடுத்து கொள்ளுவதைத் தவிர்க்கவும். ஆகவே நன்றாகப் பாடக்கூடிய பாடல்களை, புதிய பாடக்கூடாத பாடல்களுக்கு பதிலாக தெரிந்தெடுக்கவும். இதை அங்கத்தினர்கள் நன்றாக அறிந்திருக்கமாட்டார்கள்.
- பாடல்களை வேறுபட்ட துரிதகதிகளோடு இணைத்துக் கொள்வதைத் தவிர்க்கவும்.

## ஆராதனை முறையைத் திட்டமிடுவதும் பாடல்களை தேர்ந்தெடுப்பதுவும்

- தேவன் மேல் கவனத்தை மையமாக திருப்பும் படியாகத் திட்டமிடவும்.
- உன்னுடைய அகக் கண்களோடு தடைபடுத்தப்படாத துதியையும், ஆராதனையையும் பார்க்கும் படியாக முயற்சிக்கவும்.
- இசைக்கலைஞருடைய பாடல் அட்டவணையை ஒத்துப் பார்க்கவும்.
    i. ஸ்தாய் முறைப்படி ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கிறதா?
    ii. துரிதகதிக் கேற்றவாறு ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளதா?
    iii. அகர வரிசைபடி அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளதா?
    iv. நற்கருணை, அடக்க ஆராதனைக்காக துணை அட்டவணை செய்யப்பட்டுள்ளதா?
- பரிசுத்த ஆவியானவருடைய வழி நடத்துதலுக்கு ஞானத்தையும் உணர்ச்சி பூர்வமாக இருக்கும் உணர்வை பெற்றுக் கொள்ளும்படியாக ஜெபிக்கவும்.
- அந்த கூட்டத்தின் கருத்தாய்வு மொழியைக் கருத்தில் கொள்ளவும். இணைத்தலைவருடன் முடிந்தால் ஒன்று கூடி இணைத்துக் கொள்ளவும்.
- அந்த துரித கதியில் தீடீரென்றும் அடி முதல் உச்சி வரைக்கும் செய்யும் மாறுதல்களைத் தவிர்க்கவும்.
- பாடல்களை அதே ஸ்தாயில் அதே துரித கதியில் அதே பொருள் தலைப்புக் கொண்டவற்றைத் தெரிந்தெடுத்துக் கொள்ளவும்.
- வழக்கமாக ஒரு பிரிவான தொழுகை முறையை துதித்தலுக்கும், அதன் பிறகு மெதுவாக துரித கதியில் இருந்து கீழ் இறங்கி ஆராதனைக்கு வரவும்.

**கூடுமான அமைப்புத் திட்டம்**

**பொருள் தலைப்பு**

கிறிஸ்துவை கர்த்தரும் இராஜாவுமாக ஒப்புக் கொண்டு பிறகு நம்மை நாமே புதிதான ஜீவபலியாக செலுத்தும்படியாக.

**வேதப்பகுதி : (விருப்பப்பட்டால்)**

“அப்படியிருக்க சகோதரரே நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை” (ரோமர் 12:1).

**துதிப்பாடல்கள் 10 நிமிடங்கள்** Key : **G**

1. வாருங்கள் நாம் செலுத்துவோம்.
2. நீர் முடிசூட்டப் பட்டு இருக்கிறீர்.
3. இயேசு கிறிஸ்துவே சகலத்திற்கும் கர்த்தரானவர்.

**ஆராதனை பாடல்கள் 10 நிமிடங்கள்** Key: **A**

4. நான் ஜீவபலியாவேன்.
5. நான் வியப்பில் நிற்கிறேன்.
   - நான் வந்து பார்க்கும் படியாக ஜெபித்தல், ஒரு சமயம் தகுதியான நேரமாக தீர்க்க தரிசனங்களை விடுவிக்கும் படியாக ஊக்கப்படுத்தவும்.
6. இயேசுவே மிகவும் உன்னதமான கனத்தைப் பெறுவார்.
7. நீரே தகுந்தவர்.
   - எல்லா அங்கத்தினர்களையும் இயேசுவின் கர்த்தத்துவத்தை தங்கள் ஜீவியத்தில் மறுபடியும் உறுதிப்படுத்தும் படி உற்சாகப்படுத்துங்கள்.
   - ஊழியத்தை உற்சாகப்படுத்துங்கள். நமக்கு அடுத்து இருக்கும் நபருக்காக ஜெபிக்கும் படியாகச் சொல்வது போன்றவைகளில் உற்சாகம் கொடுக்க வேண்டும்.

# திருச்சபை துதித்தலுக்கும், ஆராதனைக்குரிய இடமாக ஏன் இருக்க வேண்டும்? (கர்த்தரை எப்படி துதித்து ஆராதனை செய்வது)

எப்பொழுதாகிலும், எங்கேயாகிலும் தேவனுடைய ஜனம் சிறையிருப்பிலிருந்து மீட்கப்பட்டதைப் பார்ப்பீர்களாகில், அங்கே ஒரு புதிய விடுதலையும் ஆராதிப்பதற்கான வாஞ்சையும் கூடவே வரும்.

சங் 126: 1-3 சொல்லுகிறது, 'சீயோனின் சிறையிருப்பை கர்த்தர் திருப்பும்போது சொப்பனம் காண்கிறவாகள் போல் இருந்தோம். அப்பொழுது நம்முடைய வாய் நகைப்பினாலும் நம்முடைய நாவு ஆனந்த சத்தத்தினாலும் நிறைந்திருந்தது. அப்பொழுது கர்த்தர் இவர்களுக்குப் பெரிய காரியங்களைச் செய்தார் என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள். கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார் இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்.'

ஒரு கூடிவரும் சபைக்கு கர்த்தருடைய பிரசன்னத்தின் புதிதான வருகையை அனுபவித்து இருக்கிறீர்களா என்று சொல்லுவதற்கு ஒரு சில நிமிடங்களே அதற்கென்று எடுத்துக் கொள்ளும். சுதந்திரமான மனிதர்கள் சுதந்திரமாகவே ஆராதனை செய்வார்கள். சிறையிருப்பில் இருக்கும் மக்களுக்கு பாடல்களைப் பாடவோ ஆராதிப்பதற்கான வாஞ்சையோ இருக்காது.

சங் 137: 1-4. "பாபிலோன் ஆறுகள் அருகே நாங்கள் உட்கார்ந்து, அங்கே சீயோனை நினைத்து அழுதோம் அதின் நடுவில் இருக்கும். அலரிச் செடிகளின் மேல் எங்கள் கின்னரங்களைத் தூக்கி வைத்தோம். எங்களை சிறைப்பிடித்தவர்கள் அங்கே எங்கள் பாடல்களையும் எங்களைப் பழாக்கினவர்கள் மங்கள கீதத்தையும் விரும்பி சீயோனின் பாட்டுகளில் சிலவற்றை எங்களுக்குப் பாடுங்கள் என்று சொன்னார்கள். கர்த்தரின் பாட்டை அந்நிய தேசத்தில் நாங்கள் பாடுவதெப்படி?

தாவீதுடைய ஆசரிப்புக் கூடாரத்தைப் புரிந்து கொள்வதற்கான திறவுகோலாவது, அங்கே துதியும் ஆராதனை என்ற பெயரில் அங்கு என்ன நடந்தது என்பதை புரிந்துகொள்ளுவதாகும். தாவீதுடைய ஆசரிப்புக் கூடாரத்தில் அவர்கள் எந்த வழியில் ஆராதனை செய்தார்கள் என்பதை விவாதிக்குமுன்னர் நாம் ஏன் கர்த்தரை துதித்து ஆராதனை செய்கிறோம் என்பதற்கான சில காரணங்களை ஸ்திரப்படுதிக் கொள்வது முக்கியமானதாகும். (குறிப்பு) இந்த நேரத்தில் நாம் துதியையும், ஆராதனையையும் ஒன்றாகச் சேர்த்து விவாதித்து இந்த இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துக் காட்டுவோம்.

மோசேயுடைய ஆசரிப்பு கூடாரம் சீனாய் மலையின் மேல் உள்ளதை சீயோன் மலையின் மேலுள்ள தாவீதின் கூடாரத்தில் நடக்கும் துதி ஆராதனையுடன் ஒப்பிடுவோம்.

| **மோசேயின் ஆசரிப்புக் கூடாரம்** | **தாவீதுடைய ஆசரிப்புக் கூடாரம்** |
|---|---|
| 1. பாடல்கள் பாடுவது இல்லை | 1. பாடகரோடு பாடுவார்கள் 1நாளா 15:16 |
| 2. இசை கிடையாது | 2. இசைக்கருவிகள் இசையுடன் 1நாளா 23:5 |
| 3. அறிக்கை கிடையாது | 3. அறிக்கை உண்டு 1நாளா 16:4, சங் 60:1 |
| 4. நன்றி கூறுதல் இல்லை | 4. நன்றிகூறுதலாகிய பலி 1நாளா 6:4; 8:4 |
| 5. துதித்தல் இல்லை | 5 துதியாகிய பலி 1நாளா 16:4,36 |
| 6. கை தட்டுதல் இல்லை | 6. கைத்தட்டி பலி சங் 47:1. |
| 7. கெம்பீரித்தல் இல்லை | 7. துதியின் கெம்பீரசத்தம் 1நாளா 15:28 |
| 8. நடனம் இல்லை | 8. கர்த்தருக்கு முன்பாக நடனம் 1நாளா 16:29 |
| 9. கையை உயத்துவதில்லை (கை அசைத்தலைத் தவிர) | 9. கைகளை உயர்த்துதல் சங் 134 |
| 10.சந்தோஷம் கட்டளையிடப்பட்டது | 10. இருதயம் நிறைந்த களிகூறுதலும் சந்தோஷமும் 1நாளா 16:10, 27 |

| | |
|---|---|
| 11.ஆராதனை தூரமானது | 11.வழி திறந்தது |
| 12.பிரதான ஆசாரியன் உடன்படிக்கைக்கு முன்னால் ஊழியம் | 12.எல்லா லேவியரும் உடன்படிக்கைபெட்டிக்கு முன்னால் ஊழியம் செய்தனர். |
| 13.சில சங்கீதங்கள் (91ம் சங்கீதம் மட்டும்) | 13.பல சங்கீதங்கள் பாடுவது 1நாளா 16:17 |
| 14.சாபங்களுக்கு ஆமென் சொன்னார்கள். உபா 27. | 14.ஆசீர்வாதங்களுக்கு ஆமென் 1நாளா 16:36, சங் 106:48 |

“நீங்கள் சீனாய் மலையினிடத்துக்கு வரவில்லை. ஆனால் நீங்கள் சீயோன் மலையிடத்துக்கு வந்திருக்கிறீர்கள்.” (எபி12:22).

துதியும் ஆராதனையும் வேதாகமத்திலுள்ள முக்கியமான பாடத்தலைப்புகளில் ஒன்றாகும். வேறு எந்த தனிப்பட்ட பாடத்தலைப்புகளை விட இதற்கு அதிகமான வேதாகமத்தின் ஒத்து வாக்கிய பகுதிகள் இருக்கின்றன. தேவனுடைய வார்த்தையானது, ஆராதனைக்கு அவ்வளவு வற்புறுத்துதல் கொடுக்குமானால் நாமும் அதையே செய்ய வேண்டும். தேவ ஜனம் ஆராதனை செய்து அவர்களது சிருஷ்டிகராகிய கர்த்தருக்கு முன்பாக தலைகுனிந்து பணிவதற்கென்று குறைந்தது பதினைந்து காரணங்கள் இருக்கின்றன. தேவனுடைய பார்வையிலிருந்து ஐந்து காரணங்களும் மனிதனுடைய பார்வைக் குறிப்பிலிருந்து பத்துக் காரணங்களும் காணப்படுகின்றன.

## <u>A. துதியும் ஆராதனையும் தேவனுக்கு செலுத்தும் முக்கியமான பலிகளாகும்</u> (எபி 13:15)

1. தேவன் தம்மைத் துதிக்கும்படியாக நமக்கு கட்டளையிடுகிறார்! 1பேதுரு 2:9, பிலிப் 2:9-11, சங் 67:3, 9:11). நமக்கு வேதாகமத்தில் மற்றொரு வார்த்தை துதியைக் குறித்து ஒரு போதும் இராவிட்டால் இதுவே தேவனைத் துதிப்பதற்குப் போதுமான காரணமாகும்.

   சங் 2223, கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே அவரைத் துதியுங்கள். யாக்கோபின் சந்ததியாரே நீங்கள் எல்லாரும் அவரைக் கனம் பண்ணுங்கள். இஸ்ரவேலின் வம்சத்தாரே நீங்கள் எல்லோரும் அவர் பேரில் பயபக்தியாய் இருங்கள்.”

   1நாளா 16:29 “கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி காணிக்கைகளைக் கொண்டு வந்து அவருடைய சந்நிதியிலே பிரவேசியுங்கள். பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள்”.

2. தேவனே துதிக்கு பாத்திரராயிருக்கிறார். அவர் மிகுந்த இரக்கங்களையும் அன்பாகிய நேசத்தையும் தமது ஜனங்களுக்குக் காட்டுகிறார். 9சங் 63:3-4). அவர் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை அளித்திருக்கிறார். அவர் தேவர்களுக்கு மேலாக வல்லமையுள்ளவர். ஆகையால் அவரை நாம் துதிப்போம்.

   சங் 18:3, துதிக்குப் பாத்திரராகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவேன். அதனால் என் சத்துருக்களுக்கு நீங்கலாகி இரட்சிக்கப் படுவேன்.

3. துதித்தல் என்பது, தேவனுடைய பிரசன்னத்திற்குள் பிரவேசிக்க தேவன் முன்குறித்த வழியாகும். துதித்தல் என்பது அவருடைய பிரசன்னத்திற்குள் போகும் நுழைவாயிலாகும். ஏசாயா 62:18, சங் 914, 22:3, 24:7, 9-10, 87:2, 118:19-21.

   ஏசாயா 60:18.”இனி கொடுமை உன் தேசத்திலும், அழிவும், நாசமும் உன் எல்லைகளிலும் கேட்கப்படமாட்டாது. உன் மதில்களை இரட்சிப்பு என்றும், உன் வாசல்களை துதியென்றும் சொல்லுவாய்”

   சங் 100:4 “அவர் வாசல்களில் துதியோடும் அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து அவரைத் துதித்து அவருடைய நாமத்தை ஸ்தோத்தரியுங்கள்”

4. துதித்தலும், ஆராதனையும் தேவனை மகிமைப்படுத்தும் வழிகளாகும். நாம் எல்லோரும் தேவனை மகிமைப்படுத்த விரும்புகிறோம். நாம் எல்லோரும் தேவனை மகிமைப்படும் படியாக வாஞ்சிக்கிறோம். தேவன் அவரைத் துதிக்கும் ஒருவனால் மகிமைப்படுத்தப்படுகிறார். சங்.50:23, "ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான். தன் வழியை செவ்வைப் படுத்துகிறவனுக்கு தேவனுடைய இரட்சிப்பை வெளிப்படுத்துவேன் என்று சொல்லுகிறார்".

5. கர்த்தரைத் துதிப்பது தேவன் நல்லவர் என்பதை மற்றவர்களுக்கு சாட்சியாக பிரஸ்தாபிக்கிறதாகும். பவுலும் சீலாவும் காவலில் இருக்கும்பொழுது அவர்கள் தேவனைத் துதித்துக் கொண்டிருந்தார்கள். (அப் 16:25). இது சிறைச்சாலைக்காரனுக்கு மகத்தானதோர் சாட்சியாக இருந்தது. சோதனையால் நெருக்கமான காலங்களில் அவன் எங்கே திரும்ப வேண்டும் என்பது சரியென்று தெரிந்திருந்தது. அவன் தேவனைத் துதித்துக் கொண்டிருக்கும் ஜனங்கள் இடத்திற்குப் போனான் (ஏசாய 61:11ஐயும் பார்க்கவும்). சங் 40:3, "நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை என் வாயிலே கொடுதத்தார். அநேகர் அதைக் கண்டு பயந்த கர்த்தரை நம்புவார்கள்".

## <u>B. நாம் தேவனைத் துதித்து ஆராதிக்க அவர் அதைப் பெற்றுக் கொள்வதற்கு அவசியமாயிருப்பதை விட இதை அதிகமாக பெற்றுக் கொள்ள அவசியமானதாகிறது. மனிதனுடைய கண்ணோட்டத்திலிருந்து துதித்தல் நன்மை பயக்கிறதாய் இருக்கிறது.</u>

1. துதித்தலும், ஆராதனை செய்வதும் நம்மைக் கேந்திரமாக ஆக்கிக் கொள்வதற்குப் பதிலாக தேவனை கேந்திரமாக ஆக்கிக் கொள்ள உதவி செய்கிறது. நாம் துதியையும், ஆராதனையையும் தேவனுக்குச் செலுத்தும்பொழுது அவருடைய கர்த்தத்துவத்தையும் அவர் நம்மீது ஆளுகை செய்யும் உரிமையையும் அங்கீகரிக்கிறோம். நாம் தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்திக் கொள்ளுகிறோம்.

2. துதியும், ஆராதனையும் நமது சிந்தனையை கர்த்தரிடம் நிலைத்திருக்க வைத்துக் கொள்ளுவதற்கு வழியாகும். (ஏசாயா 26:3) நாம் தேவன் பேரில் தங்கி நமது சிந்தனையை தேவன் பேரில் வைப்போமானால் நாம் பூரணமான சமாதானமுள்ள ஜீவியத்தைக் கண்டு கொள்ளுவோம்.

3. துதியும் ஆராதனையும் தேவன் பேரிலுள்ள நமது அன்பின் உறவுத் தொடர்பை விருத்திச் செய்த கொள்ள உதவி செய்கிறது. சாதாரண இயற்கையான இயல்பின்படி கணவன் மனைவியாக ஒருவரையொருவர் பாராட்டிக் கொள்வதால், அவர்கள் ஒருவருக்கு வெகு நெருக்கமாக கவர்ந்திழுக்கப் படுகிறார்கள். அதே மாதிரியான வழியில் நாமும் கர்த்தரைத் துதிக்கும் பொழுது அவருக்கு நெருக்கமாக இழுக்கப்படுகிறோம். நாம் அன்பின் ஜீவிகளாக இருக்கும்படியாக படைக்கப்பட்டோம். நாமும் தேவனுக்குரிய அன்பை பிரதியுபகாரமாக செலுத்த வேண்டும். நாம் தேவனைத் துதித்து ஆராதிக்கும் பொழுது இந்த அழைப்பை நிறைவேற்றுகிறோம்.

4. நாம் விதைக்கிற படியே அறுவடையும் செய்வோம். (கலா 6:8) நாம் ஒன்றைக் கொடுத்தோமானாலும் அது நமக்குத் திரும்பவும் கொடுக்கப்படும். (லூக்கா 6:38) நம்மையே கர்த்தருக்கு கொடுப்போமானால், அவரும் தமது முறையில் நம்மீது ஆசீர்வாத மழையை பொழிகிறார். (யோபு 36:26-29). இதுவே நமது தேவனைத் துதித்து ஆராதனை செய்வதற்கு இதுவே நோக்கமாக இருக்கவேண்டும் என்று நாம் விரும்புவதில்லை. ஆனால் தேவன் தாமே தமது கொள்கைகளின் படியே அதன் அடிப்படையில் கிரியை செய்கிறார். தேவன் தாமே "விதைத்தலும், அறுவடை செய்தலும்" என்ற பிரமாணத்தை ஸ்தாபித்திருக்கிறார்.

5. துதித்தலும், ஆராதனையும் விசுவாசம் செயல்பாட்டில் இயங்குவதாகும். துதித்தலும் ஆராதனையும் விசுவாசத்தின் மொழியாகும். நாம் தேவனை விசுவாசித்து அவரில் நம்பிக்கை வைக்கும் பொழுது நாம் சந்தர்ப்பத்தைப் பொருட்படுத்தாமல் அவரையே துதிப்போம். விசுவாசத்து ஜனமானது கர்த்தரைத் தேடும் படியாக தங்களை அமைத்துக் கொண்டு தங்களுடைய விருப்ப சித்தத்தின் படியே செயல்படுகிறார்கள்.

6. துதித்தலும், ஆராதனையும் தேவனுடைய பிரசன்னத்தையும் அவருடைய வல்லமையையும் விடுவிக்கிறது. வேறுவிதமாக கூறுவதென்றால், தேவன் தமது ஜனத்தின் துதிகளில் வாசம்

செய்கிறார். யோசபாத் பாடிக் கொண்டே யுத்தத்திற்கு செல்கையில் இதையே கண்டு கொண்டான். (2நாளா 20ம் அதி). பவுலும், சீலாவும் தேவனைத் துதித்துப் பாடிக் கொண்டிருக்கும் பொழுது, அந்த இடம் அசைக்கப்படுவதாகக் கண்டு பிடித்தனர். (அப் 16:25:26). தேவனுடைய ஜனங்கள் துதிக்கும்பொழுது தேவன் தமது வல்லமையில் பிரசன்னமாக இருப்பதாக வாக்குக் கொடுக்கிறார். சங் 22:3. "இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்"

2நாளா 5:13,14 "அவர்கள் ஒருமிக்க பூரிகைளை ஊதி ஏக சத்தமாய் கர்த்தரைத் துதித்து ஸ்தோத்தரித்துப் பாடினார்கள். ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகையிலும் பாடகர் பூரிகைகள், தாளங்கள் கீத வாத்தியங்களுடைய சத்தத்தைத் தொனிக்கப் பண்ணி "கர்த்தர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது என்று அவரைத் தோத்தரிக்கையிலும் கர்த்தருடைய வீடாகிய தேவாலயம் மேகத்தினால் நிறையப்பட்டது. அந்த மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியம் செய்ய நிற்கக் கூடாமற் போயிற்று. கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று.

7. துதியும் ஆராதனையும் ஒரு நன்றியறிந்த இருதயத்தோடு நேரடியான உறவுத் தொடர்புடையது. தேவனை அறிந்திருக்கிறவர்கள் அநேகர் இருக்கிறார்கள். இருந்த போதிலும் அவர்கள் தேவனை மகிமைப்படுத்துவதில்லை. இவர்கள் நன்றியறிதல் இல்லாதவர்கள். ரோமர் 1:21. நாம் தேவனைத் துதிக்கும் பொழுது நன்றி செலுத்துவதோடு அவருடைய சந்நிதானத்திற்கு முன்பாக வருகிறோம். இது தேவனுடைய ஆசிர்வாதத்தை எப்பொழுதும் பெற்றுக் கொள்வதற்கான நல்லதோர் நிபந்தனையாகும். (சங் 100:4).

8. துதியும் ஆராதனையும் நம்மை பரிசுத்தப்படுத்தகிறது. தேவன் திருச்சபையை மாசுமறுவற்றதாக இருக்க விரும்புகிறார். நாம். இந்த பரிசுத்தமாகுதலை பெறும் இடத்திற்கு வரும்படியாக சில வழிகளைத் தந்திருக்கிறார். அவருடைய வார்த்தையினால் தண்ணீரில் கழுவப்படுவதையும் கொடுத்திருக்கிறார். (எபேசியர் 5:21) நமக்கு ஜெபத்தையும் கொடுத்திருக்கிறார் (1தீமோ 4:4-5) நமது உதடுகளில் துதியையும் கொடுத்திருக்கிறார் (நீதி 27:21).

9. நாம் ஆராதனை செய்கிற ஒருவரின் சாயலில் நாம் மறுரூபமாகிறோம். நாம் விக்கிரகங்களையும் நம் சொந்தக் கைகளால் செய்யப்படுகிறவைகளை ஆராதிப்போமானால் அவைகளின் சாயலுக்கு ஒப்பானவர்கள் ஆவோம். நமது விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிப்பவருமாகிய நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மேல் நமது கண்கள் உறுதியாக பதிந்து நோக்கமாய் இருந்தால், நாம் தேவ குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக மறுரூபமாகுவோம். துதியும், ஆராதனையுமே இந்த தேவனுடைய கிரியைகள் நம்மில் செய்யப்படுவதற்குத் திறவுகோல் ஆகும்.

சங் 115:8, "அவைகளைப் பண்ணுகிறவர்களும் அவைகளை நம்புகிறவர்கள் யாவரும் அவைகளைப் போலவே இருக்கிறார்கள்" சங் 106:19-2, "அவர்கள் ஓரேபிலே ஒரு கன்றுக் குட்டியை உண்டாக்கி, வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தை நமஸ்கரித்தார்கள். தங்கள் மகிமையைப் புல்லைத் தின்கிற மாட்டின் சாயலாக மாற்றினார்கள்".

ரோமர் 1:21-23, "அவர்கள் தேவனை அறிந்தும் அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்திகாரராகி அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்"

2கொரி 3:18, "நாமெல்லாரும் திறந்த முகமாய் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு ஆவியாய் இருக்கிற கர்த்தரால் அந்த சாயலாகத் தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.

10. நாம் கர்த்தருக்கு பலியைச் செலுத்தும்போது, அவர் நம்மைச் சந்தித்தும் நம்மோடு ஐக்கியப்பட்டும், இருப்பதாக நமக்கு தேவனுடைய வாக்குத்தத்தம் உண்டாயிருக்கிறது. (யாத் 29:41-42) அநேகர் தாங்கள் ஏன் தேவனிடமிருந்து சத்தம் ஒருபோதும் செவியில் கேட்பதில்லை

என்று ஆச்சரியப்படுகிறார்கள். இது ஏனென்றால், சில சமயங்களில் அவர்கள் இந்த பலி செலுத்தும் கோட்பாட்டை கிரியை செய்யுமாறு வைத்துக் கொள்வதில்லை.

ஆராதனை என்பதற்கு விசுவாசியின் ஜிவியத்தில் வரம்புக்கு மீறிய மதிப்பு இருக்கிறது. சாத்தான் இந்த ஆராதனையின் மதிப்பை அறிந்திருந்தான். ஆகவே கிறிஸ்துவுக்கு அவர் தன்னைப் பணிந்து கொண்டால், இந்த உலகம் முழுவதையும் அவருக்கு கொடுப்பதாக வாக்களித்தான் (மத் 4:10) ஆனால், இயேசுவானவர் ஆராதனையானது தேவனுக்கு மாத்திரமே உரியதென்பதை தெரியப்படுத்தினார். நாம் தேவனை ஆராதனை செய்யும் பொழுது நம்மிடத்தில் சிறையிலிருந்து திருப்பப்படும் இயக்கமான அதிவேகமானதாக கிரியை செய்வதைப் பார்க்கலாம்.

## நாம் எப்படி கர்த்தரை ஆராதிக்க வேண்டும்?

விசுவாசிகளாக நாம் நமது சரீரங்களை தேவனுக்கு ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் என்று உபதேசமாக புத்திமதியாகச் சொல்லுகிறார் (ரோமர் 12:1) நமது சபை அங்கத்தினர்களைப் பவுல் அடிகளார் தேவனுக்கு ஒப்புக் கொடுத்து அவர்களுடைய அவயவயங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக் கொடுக்கும் படி வற்புறுத்துகிறார். (ரோமர் 6:13). தேவன் நம்மை நம்முடைய சகல அங்கத்தினர்களையும் தேவனை மகிமைப்படுத்துவதற்காக பயன்படுத்த விரும்புகிறார். அதனால் தேவன் துதித்தல் ஆராதனை என்றவைகளை வெளிப்படுத்தி நம்முடைய ஆள்தன்மை முழுவதையும் அதில் ஈடுபடுத்திக் கொள்ளும்படி செய்கிறார்.

நம்மை முழுவதுமாக தேவனை ஆராதிக்கும்படியாக ஒப்புக் கொடுக்கும் பொழுது தேவன் நம்மை ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்.

நாம் அவரை ஆராதிப்பது என்றால், ஆவியில் நம்மையே முழுவதுமாக ஒப்புக் கொடுத்துவிட வேண்டும். தேவன் அரைமனதான முயற்சிகளை விரும்புவதில்லை. அவர் நமது முழுவதுமான ஆவியை அவருக்குக் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறார் (சங் 111:1, 138:1-2).

சங் 103:1, "என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி". சங் 9:1 "கர்த்தாவே, என் முழு இருதயத்தோடும் உம்மை துதிப்பேன். உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன்". தேவன் தம்மை நோக்கி ஆராதிப்பதற்காக நமது சக்திகள் அனைத்தையும் அவருடைய ஆராதனையின் பால் செலுத்தப்பட வேண்டும் என்று மாத்திரம் ஆர்வம் உடையவரல்ல. அவர் நம்மை உண்மையோடும், அவரைத் தொழுதுக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார். நம்மை அவர் தேவனுடைய வார்த்தையின்படியே ஆராதிக்க வேண்டும் என்று வாஞ்சிக்கிறார். (யோவான் 17:17) அவருடைய வார்த்தையின் அடிப்படையில் நாம் அவரை ஆராதிக்கும்பொழுது நம்மை விடுதலை செய்யக்கூடிய சத்தியத்தைப் பற்றியும் நாம் அறிந்து கொள்ளலாம். (யோவான் 8:31-32) உண்மையான ஆவிக்குரிய ஆராதனையில் நாம் பிரவேசிக்கக் கூடாதபடி நம்மைக் கட்டி வைத்திருக்கும் சகல பாரம்பரியமான மரபுகளிலிருந்தும், அது நம்மை விடுதலையாக்கும். இயேசு சொன்னதாவது, மனிதர்களுடைய பாரம்பரியமே தேவனுடைய வார்த்தையின் நன்மைகளை ஒழித்து விடுகிறது. (மாற்கு 7:7-8), "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாக போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள். நீங்கள் தேவனுடைய கட்டளைகளைத் தள்ளிவிட்டு மனுஷருடைய பாரம்பரியத்தை கைக்கொண்டு வருகிறவர்களாய், கிண்ணங்களையும், செம்புகளையும் கழுவுகிறீர்கள் மற்றும் இப்படிப்பட்ட அநேக சடங்குகளையும் அனுசரித்து வருகிறீர்கள் என்றார்".

தேவன் நமக்குங்கூட திருச்சபையில் எவ்வாறு மிகவும் சரியாக அவரை ஆராதிக்க வேண்டும் என்று கூறுவார். தேவன் தமது ஜனங்களை அவர்களது இருதயத்தின் கட்டளைகளின் போக்கிலே தம்மை ஆராதிக்கும் ஆடம்பரத்தை ஒருக்காலும் அவர் அனுமதித்ததில்லை. ஒரு தரத்திற்கு மேல் பல சமயங்களில் இஸ்ரவேலர் தங்கள் சொந்தக் கண்களுக்குச் சரியானவை என்று தோன்றியதைச் செய்து கஷ்டத்திற்குள்ளானார்கள். நாம் தேவனுடைய வார்த்தைகளின் கட்டளைகளின்படியே அவரை ஆராதிக்க வேண்டும்.

யோவன் 4:23-24, "உண்மையாய் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளும் காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது" தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப் பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள், ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்" என்றார்.

தேவன் தாமே குறைந்தது ஆராதிக்கும் ஒன்பது வழிகளை வேதாகமத்தில் குறித்து கட்டளையிட்டிருக்கிறார். அவைகள் நம்மை முற்றிலுமாக ஈடுபடச் செய்பவையாகும். மூன்றுவழிகள் குரலைப் பற்றியதும் மூன்று வழிகள் கைகளைக் குறித்தும் மூன்று வழிகள் சரீரம் சம்பந்தப்படுவதையும் குறிக்கின்றன. அவைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் அந்தந்த பகுதிகளில் நாம் பரிசீலனை செய்து நம்முடைய திருச்சபையின் ஜீவியத்தில் எவ்வாறு தொடர்புடையன என்பதைப் பற்றி அறிவோம்.

**a. வாய்:**

நம்மை தேவன் நம்முடைய சத்தத்தினால் அவரைத் துதிக்கும் படியாக வாஞ்சிக்கிறார். (சங் 424, 66:8). இதை செய்யும்பொழுது, நம்முடைய வாயை உபயோகித்து தேவன் நல்லவர் என்பதைத் தெரியப்படுத்துகிறவர்களாய் இருப்போம். இது நாம் பேசுவதாலும் சாட்சி கூறுவதாலும் அல்லது பாட்டுகளின் மூலமாகவும் இருக்கலாம். நம்முடைய வாயின் வார்த்தைகள் நேர்மறையானதாகவும், விசுவாசத்தைத் தூண்டுவதாகவும் இருக்க வேண்டும் என்று தேவன் வாஞ்சிக்கிறார். நமது வார்த்தைகள் விசுவாச வார்த்தைகளாக இருக்கும்பொழுது அவைகள் தேவனை நோக்கித் துதிப்பதாகும். (சங் 40:3, 51:15, 63:5, 71:8,15, 89:1, 142:21, 149:6 உடன் ரோமர் 15:6ஐ பார்க்கவும்) சங் 109:30, "கர்த்தரை நான் என் வாயினால் மிகவும் துதித்து, அநேகர் நடுவில் அவரைப் புகழுவேன்".

**b. பாடல்கள் பாடுவது :**

நாம் அவருடைய சந்நிதானத்தில் பாடல்களோடு பிரவேசிக்கும்படி வேதாகமம் நமக்குப் போதிக்கிறது. (சங் 100:4) ஒரு தேசத்தினருடைய நிலைமையையோ அல்லது ஒரு தனி நபருடைய நிலைமையையோ அவர்கள் பாடும் பாட்டுகளால் உன்னால் சொல்லமுடியும் என்று சொல்லப்படுகிறது. இது மிகவும் உண்மையாகும். பாட்டு பாடுவது உள்ளான மனிதனுடைய உன்னதமான வெளிப்படுத்துவதாகும். உண்மையான ஆவிக்குரிய பாடல்களைப் பாடுவதன் இழப்பானது, நியாயத்தீர்ப்புக்கு உட்பட்ட ஜனங்களுக்கு அடையாளமாகும். (ஏசாயா 16:9,10) இஸ்ரவேல் புத்திரரை அவர்களுடைய பாபிலோனிய எஜமானர்களால் சீயோனின் பாடல்களைப் பாடும்படி கேட்டுக் கொண்டபொழுது, அந்நிய தேசத்தில் பாடுவதற்கென்று ஒரு பாட்டும், அவர்களுக்கு இருக்கவில்லை. ஆனால் அவர்கள் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து மீண்டும் திரும்பி வந்த பொழுது அவர்கள் உடனே அவர்களுடைய கின்னரங்களை அலரிச் செடிகளிலிருந்து எடுத்துக் கொண்டு தேவனை நோக்கி புதிய பாட்டொன்றை பாட ஆரம்பித்தார்கள்.

சங் 137:1-4, பாபிலோன் ஆறுகள் அருகே நாங்கள் உட்கார்ந்து அங்கே சீயோனை நினைத்து அழுதோம். அதின் நடுவில் இருக்கும் அலரிச் செடிகளின் மேல் எங்கள் கின்னரங்களைத் தூக்கி வைத்தோம் எங்களை சிறைபிடித்தவர்கள் அங்கே எங்கள் பாடல்களையும், எங்களைப் பாழாக்கினவர்கள் மங்கள கீதத்தையும் விரும்பி சீயோனின் பாட்டுகளில் சிலதை எங்களுக்குப் பாடுங்கள் என்று சொன்னார்கள். கர்த்தரின் பாட்டை அந்நிய தேசத்தில் நாங்கள் பாடுவதெப்படி?" சங் 126:1-2, சீயோனின் சிறையிருப்பைக் கர்த்தர் திருப்பும் பொழுது சொப்பனம் காண்கிறவர்கள் போல் இருந்தோம். அப்பொழுத நம்முடைய வாய் நகைப்பினாலும் நம்முடைய நாவு ஆனந்த சத்தத்தினாலும் நிறைந்திருந்தது. அப்பொழுது கர்த்தர் இவர்களுக்குப் பெரிய காரியங்களைச் செய்தார் என்று புற ஜாதிகளுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள்".

இந்த நாட்களில் தேவன் சிறையிருப்பைத் திருப்பிக் கொண்டார். ஆதலால் இந்த நாட்கள் ஆனந்த களிப்புள்ள நாட்கள் என்று சொல்லப்பட்டதில் வியப்பொன்றுமில்லை. ஒவ்வொரு பெரிய திருப்புதலும் ஐசுவரியமான புதிய பாடல்களை பிறப்பித்தது. அத்துடன் ஆனந்த சத்தமும் களிப்பும் வந்தது. இன்றும் அதே போல் காரியங்கள் நேரிடுகின்றன. தேவ ஜனங்கள் கர்த்தரை நோக்கி ஆனந்தக் களிப்புடன் சத்தமிடத் தொடங்குகிறார்கள். தேவனுக்கு புதிய பாடல்களைப் பாடுகிறார்கள். (எரேமியா 33:11).

எபேசியர் 5:18-19 துன்மார்க்கதிற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணுங்கள்"

பாடல்களைப் பாடுவது, திருச்சபையில் முக்கியமானதோர் ஊழியமாகும். சங்கீதம் என்பது திருச்சபையில் சாதாரணமான ஒரு வகைக் கொண்டாட்டம் என்று நினைக்கிறார்கள். அநேக சபைகளில் இதுவே தான் எல்லாமும் என்று சொல்ல துக்ககரமாக இருக்கிறது.

பாடல்கள் பாடுவது என்னவென்றாலும், ஆராதனையின் ஒரு நடவடிக்கையாக இருந்தாலும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒரு ஊழியமாகும். பாட்டுகளில் கொண்டாட்டத்தை விட மிக உயர்ந்ததோர் நோக்கம் இருக்கிறது. உண்மையாகவே நாம் சங்கீதங்களாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஆவிக்குரிய பாடல்களினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்ல வேண்டும். (கொலோ 3:16) பாடல்களை பாடுவதன் மூலமாக நாம் போதித்து புத்திச் சொல்லக் கூடியவர்களாக இருக்கிறறோம். எல்லா விதமான இசையும், ஏதோ கொஞ்சத்தைப் போதித்து புத்தி சொல்லுகிறது. இதன் காரணமாகத்தான் நமது பாட்டுகளும், ஞானப்பாட்டுகளும் ஆவிக்குரிய பாட்டுகளும் பொருளடக்கத்தில் வேதாகமக் கருவைக் கொண்டதாக இருக்க வேண்டியது முக்கியமானது என்று நிச்சயமாக இருக்க வேண்டும். ஏனென்றால் நாம் பாடும் பொழுது போதிக்கப்பட்டும் புத்திமதி கூறப்பட்டும் இருக்கிறோம்.

திருச்சபையால் பாடல்கள் பாடுவதில் அனுபவிக்கப் பட வேண்டிய மூன்று ஆளுகைப் பகுதிகள் இருப்பதை நம்மால் கவனித்துக் கொள்ளாமல் இருக்க முடியாது. அவைகளில் ஒன்று சங்கீதங்கள். இவை ஆதித் திருச்சபைக்கு கையளிக்கப்பட்டதாகும். ஞானப்பாட்டுகள் இவை மிகவும் உயர்வாக அபிஷேகம் பெற்ற தொகுப்புகள். ஆவிக்குரிய பாடல்கள் இவைகள் இயல்பான தன்மையாய் இருக்கக் கூடியவையாகும். வேதாகமத்தின்படி பாடல்களைப் பாடுவது பழைய ஏற்பாடு கூறும் புதுப்பாட்டு என்ற வகையைச் சேர்ந்ததாகும். (சங் 33:3). தேவன் மற்றவர்களுக்கு அளித்ததான பாடல்களை தேவனுக்கு பாடுவது மிகவும் அற்புதமானதாகும். ஆனாலும் நமது இருதயத்திற்குள் அவர் வைத்ததான பாடல்களை அவருக்காக பாடுவதில் விசேஷமான அகக் கிளர்ச்சி உண்டாகிறது. இந்த புதிய பாடல் ஆவியானவரால் கையளிக்கப்பட்டது. இது நம்முடைய இயற்கையான திறன்பாடல்ல.

நாம் பாடல்களைப் பாடுவது என்ற தலைப்பைப் பற்றி ஆலோசிக்கும் பொழுது கர்த்தருடைய வீட்டில் பாடும் பாடகர் குழுவின் இடத்தையும் பற்றி ஆலோசிக்க வேண்டும். தாவீதுடைய ஆசரிப்புக் கூடாரத்தில் பாடகர்களை நியமனம் செய்து விசேஷமான பாடல்களைப் பாடும் ஊழியத்திற்காக தனியாக வைக்கப்பட்டார்கள் (1நாளா 15:16-22) புலன்களுக்கு தெரிந்த அளவில் தாவீது முறைப்படியாக இசை, பாட்டுகள், என்ற பகுதியில் ஊழியம் செய்கிறவர்களை பணி நியமனம் செய்தான். இதற்கென்று ஒரு தனியான பிரத்தியேகமான பொறுப்பு அவர்களை சார்ந்து இருந்தது. யோசபாத் யுத்த காலங்களில் பாடகர்கள் முக்கியமானவர்களாகக் கண்டறிந்தான். அவன் கர்த்தருக்கென்று அவருடைய "பரிசுத்த அலங்காரத்தை" போற்ற வேண்டிய பாடகர்களை நியமனம் செய்து அவர்கள் இராணுவத்திற்கு முன்னாகப் போகும்பொழுது துதிக்கச் செய்தான். அந்த ஆராதனைக் குழுவானது ஆவிக்குரிய போராட்டத்திற்கு வழி நடத்திச் செல்லும் பொழுது செய்யவேண்டிய கடமையாகும்.

2நாளா 20:21-22 "பின்பு அவன் ஜனத்தோடே ஆலோசனைப்பண்ணி, பரிசுத்தமுள்ள மகத்துவத்தைத் துதிக்கவும், ஆயுதம் அணிந்தவர்களுக்கு முன்னாக நடந்து போய் "கர்த்தரைத் துதியுங்கள். அவர் கிருபை என்றுமுள்ளது" என்று கர்த்தரைப் பாடவும் பாடகரை நிறுத்தினான். அவர்கள் பாடி துதி செய்யத் தொடங்கின போது யூதாவுக்கு விரோதமாய் வந்து பதிவிருந்த அம்மோன் புத்திரரையும், மோவாபியரையும், சேயீர் மலைத்தேசத்தாரையும் ஒருவருக்கு விரோதமாய் ஒருவரைக் கர்த்தர் எழும்பப் பண்ணினதினால் அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள்"

தேவனுடைய வீட்டில் ஆவிக்குரிய பாடல்களைப் பாடி ஆராதனையில் நடத்திச் செல்லும் ஊழியத்திலுள்ளவர்கள் இன்றும் இருக்கிறார்கள். அவர்களுடைய ஊழியமாவது, சபையினரை கர்த்தருடைய சந்நிதானத்திற்குள் நடத்திச் செல்வதாகும். இந்த பாடகர்கள் துதியின் வாசல்கள்

வழியாக நடத்திச் செல்கிறார்கள். அவர்கள் அவ்வாறு செய்யும் பொழுது ஆவிக்குரிய போராட்டம் நடைபெறுகிறது. சத்துருவானவன் தனது ஜனங்களின் துதிகளில் வாசமாயிருக்கிற கர்த்தரால் முறி அடிக்கப்படுகிறான். அங்கே போர் நடக்கும் பொழுதும், ஆவிக்குரிய போராட்டம் கடினமாக இருக்கும் பொழுதும் பாடகர்கள் பாட வேண்டும். தேவன் தாமே அந்த சத்துருக்களுக்கு விரோதமாக பதிவிடை வீரர்களை அனுப்புவார். அந்த அபிஷேகமானது, நுகத்தை உடைத் தெறியும். சபையின் மத்தியில் மகத்தான மீட்பாகிய விடுதலை உண்டாகும். அவர்கள் கர்த்தரை பாடித் துதித்து ஆராதனை செய்யும் பொழுது அவ்வாறு உண்டாகும்.

சிறையிருப்பிலிருந்து மீண்டும் திரும்பி வரும் நாட்களில் பாடகர்கள் குறிப்பிடப்படும் முக்கியத்துவம் பெற்றவர்கள். ஜனங்கள் எருசலேம் மதில்களை திரும்ப எடுப்பித்துக் கட்டும் பொழுது பாடகர்கள் பாடல்களைப் பாடுவதற்காக நியமனம் பெற்றார்கள். இந்த பாடல் ஊழியமானது, அவர்களுக்கு மதிற்சுவர்களைக் கட்டுவதைப் போலவே முக்கியமானதாக இருந்தது. பாடகர்கள் பணியாட்களைப் போலவே அவர்களுடைய பங்கும் கொடுக்கப்பட்டது. (நெகேமியா 13:5) இசையில் ஊழியம் செய்யும் படியாகப் பெற்றவர்களும் அதே அபிஷேகத்தை (திராட்சை ரசமும் எண்ணெயும்) தங்கள் மேல் உடையவர்களாக இருக்க வேண்டும். அந்த சபையினர் எதிர்பார்ப்பது போல தேவனுடைய வார்த்யைிலும் மற்றும் ஆவிக்குரிய வரங்கள் ஆகிய ஊழியங்களில் இருப்பவர்களுக்கும் அபிஷேகம் இருக்கும்படி எதிர்பார்க்கப்படுகிறது.

இசை என்பது சபையில் யாரோ ஒருவருக்கு ஒரு வேலையென்று கொடுக்கப்படுவது என்றில்லை. இந்த இசை ஊழியமானது, திருச்சபையில் மிகுந்ததோர் முக்கியத்துவம் பெற்றது. இந்த இசையிலுள்ள வல்லமையான ஏறக்தாழ புரிந்து கொள்ள முடியாததாகும். இது இசையினால் நிரப்பப்பட்ட சந்ததியாகும். அந்தந்த நாட்களின் இசையானது, அந்த நாட்களின் குழப்பத்தையும் இருதயத்தின் ஏமாற்றத்தையுமே பிரதிபலிக்கிறது. திருச்சபையில் பாடும் பாட்டானது, கிறிஸ்தவ ஜீவியத்தின் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் மனநிறைவையும் பிரதிபலித்துக் காட்ட வேண்டும். ஒரு திருச்சபை ஆனந்தமான பாடல்கள் நிறைந்திருக்குமானால் நிரம்பப் பெற்றதாகும். ஒரு ஜனத்தின் பாடல்கள் அதன் இதயத் துடிப்பைப் பிரதிபலிப்பது போல அந்த திருச்சபையின் பாடல்களும் தேவனுடன் அதற்குள்ள உறவுத் தொடர்பையும் பிரதிபலிக்க வேண்டும். ஊழியத்தை அளவுக்கு மீறி வற்புறுத்த கூடாதது. மேலும் ஒவ்வொரு பாடகனுடைய பொறுப்பையும் வரம்புக்கு மீறி வற்புறுத்த முடியாது. பாடகர்கள் கர்த்தருக்கு முன்பாகப் பாடுவதற்கு தங்கள் தங்களுடைய முழு பலத்தோடும் செய்வதற்காக ஒப்படைப்புச் செய்தவர்களாக இருக்க வேண்டும். (1நாளா 13:8).

இந்த மகத்தான அளவான ஊழியமானது அரைமனதுடன் ஆன வழியில் செய்யக் கூடாததாகும். பாடும் பொழுது ஐக்கியமாகும் ஒரு குரலின் வல்லமையும், மகிமையும் சாலோமோன் கட்டிய ஆலயப் பிரதிஷ்டையின் போது செய்யப்பட்ட அர்ப்பணிப்பில் காணக்கூடும். (2நாளா 5:13) புதிய ஏற்பாட்டுத் திருச்சபைக்கும் இந்த நடைமுறையின் மாதிரியே இந்த நேரத்திலும் இருக்கவேண்டும். கர்த்தருடைய வீட்டில் பாடகர்கள் இசை ஊழியத்தில் தங்களையே தத்தம் செய்யும்பொழுது இந்த மாதிரியாகவே தேவனுடைய மகிமையும் இரங்கும் படியாக நாம் எதிர்பார்க்கலாம்.

மேலும் பார்க்க வேண்டியவை சங் 7:17; 9:2,11; 18:49; 21:13; 30:12; 47:6,7; 57:7; 61:8; 68:4,32; 75:9; 92:1; 96:1; 104:33; 108:1,3; 135:3; 138:1; 146:2; 147:1 உடன் 2:12)

**c. சத்தமாக பாடுதல் :-**

தாவீதுடைய ஆசரிப்புக் கூடாரத்தில் ஆராதனையானது, சமயாசமயங்களில் சத்தமாக இருந்தது என்ற உணர்வை பெற்றுக் கொள்ளுதல் எளிதாகும். பாடகர்கள் தங்கள் முழுபலத்தோடு பாடும்பொழுதும், இசைகலைஞர்கள் தங்கள் இசைக் கருவிகளை முழு வல்லமையோடும் இசைக்கும் பொழுது, கர்த்தரிடம் பிரியமில்லாமல் இருப்பவர்களுக்கு அது முழுவதும் தொந்தரவாக இருந்திருக்கக் கூடும். இவை எல்லாவற்றிற்கும் கூடுதலாக தாவீதுடைய கூடாரத்தில் உரத்து சத்தம் போடுவதும் இருந்தது. கால்பந்து விளையாட்டை பார்த்து ஒருவர் உரத்து கூச்சலிடுவாரானால் ஒருவரும் அதிகமாக தொந்தரவு அடையமாட்டார்கள் மெய்யாகவே அவர்கள் அதை எதிர்பார்க்கிறார்கள். ஆனால் ஆலயத்திலும் இவ்விதமான உரத்த கூச்சல் இருக்குமானால்,

சிலர் அதை வினோதமாக நினைப்பார்கள். இந்த உயர்ந்த கால் பந்து விளையாட்டின் மேலோட்டமான விளைவுகள் அல்லது அந்த மகத்தான விளையாட்டுமே ஓராண்டுக்கு மேல் போக முடியாது ஆனால் தேவனால் என்ன செய்யப்பட்டதோ அந்த விளைவானது நித்தியத்திற்கும் தொடர்ந்து வரும். இது ஒன்றைப் பற்றி உரத்து ஆர்ப்பரிப்பது தகுந்தது தான். கர்த்தருக்குள் நம்பிக்கையாய் இருப்பவர்கள் எல்லோரும் ஆனந்தத்தால் கெம்பீரிப்பார்கள் (ஆர்ப்பரிப்பார்கள்) (சங் 5:11) செம்மையான இருதயமுள்ளவர்கள் ஆனந்த முழக்கமிடுவார்கள். (சங் 32:11) அவருடைய நீதி விளங்க விரும்புகிறவர்கள் கெம்பீரித்து மகிழுவார்கள் (சங் 35:27) ஏனென்றால், தேவன் அவர்களை இரட்சிப்பினால் உடுத்துகிறார். அதனால் ஏசாயா 12:6 “சீயோனில் வாசமாயிருக்கிறவனே, நீ சத்தமிட்டு கெம்பீரி. இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவராய் இருக்கிறார்”.

இந்நாட்களில் தேவன் கர்த்தருடைய பிரசன்னத்தைத் திரும்பவும் கொண்டு வருகிறார். தாவீது உடன்படிக்கை பெட்டியைப் பற்றி பாதுகாக்க வேண்டி அதை எருசலேமுக்குக் கொண்டு வரும் பொழுது கெம்பீர சத்தம் உண்டானது. (2சாமு 6:15) அதே மாதிரியான களிகூருதலையும் நாம் இன்றும் எதிர்பார்க்கலாம்.

**d. கைதட்டுதல் :-**

நாம் களிகூருவதற்கு அடையாளமாக நாம் கைகளைத் தட்டும் படியாக தேவன் வாஞ்சிக்கிறார். (சங் 47:1). இது பாடல்களைப் பாடும் பொழுது இருக்கலாம். ஆனால் இது ஒரு தனிப்பட்ட பிரத்தியேகமான காணிக்கையாக கர்த்தருக்கு ஆர்ப்பரிப்பைத் தருவதாகும். மனிதர்கள் தங்களுடைய மன மகிழ்ச்சியுடன் கூடிய வரவேற்பை இசைக் கூத்து நாடக நட்சத்திரங்களுக்கும், கொண்டாட்டக்காரர்களுக்கும், விளையாட்டு வீரர்களுக்கும் கொடுக்க விருப்பச் சித்தம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். நமது மனமகிழ்ச்சியான வரவேற்புக்கு தேவன் எவ்வளவு அதிகமாக தகுதி பெற்றவர்? நாம் அவருக்குள் இருக்கும் நமது மனமகிழ்ச்சியை அவரது சந்நிதானத்தில் நமது கைகளைத் தட்டி காட்டிக் கொள்ளக் கூடும் (சங் 98:8; ஏசாயா 58:12ஐ பார்க்கவும்).

**e. நமது கைகளை உயர்த்துதல் :-**

ஒரு நன்றியறிதலுள்ள இருதயத்திற்கு இருக்கும் இயல்பான பிரதி கிரியையாவது, ஒருவருடைய கைகளை கர்த்தருக்கு முன்பாக உயர்த்திக் கொள்வது தான் (புலம்பல் 3:4). உயர்த்தப்பட்ட கரணமானது, தேவனுடன் ஆணையிட்டுக் கொள்வதற்கோ அல்லது உடன்படிக்கை செய்து கொள்ளுவதற்கோ அடையாளமாகும் என்பது ஆர்வத்தைக் கொடுப்பதாகும். (ஆதி 14:22) நாம் தேவனுடன் உடன்படிக்கையின் உறவுத் தொடர்பில் நிற்கும் ஜனங்களாய் இருக்கிறோம். மேலும் கர்த்தருக்கு அவருடைய அன்பு மிகுந்த நேசத்திற்காக நன்றியறிதலுள்ளவர்களாய் இருக்கிறோம். (சங் 63:3,4) ஆகையால், நாம் நம்முடைய பரிசுத்த கரங்களை கர்த்தருக்கு நேராக கோபமோ சந்தேகமுமில்லாமல் உயர்த்துவோமாக (1தீமோ 2:8).

சங் 134, “இதோ இராக்காலங்களில் கர்த்தருடைய ஆலயத்தில் நிற்கும் கர்த்தரின் ஊழியக்காரரே, நீங்களெல்லாரும் கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள். உங்கள் கைகளை பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுத்துக் கர்த்தரைத் ஸ்தோத்தரியுங்கள். வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பாராக. மேலும் சங் 2:8; 88:9; 119:48; 141:2; 143:6; எபி 12:12ஐயும் பார்க்கவும்.

**f. கருவிகளை இசைத்தல் :-**

அநேக ஜனங்கள் ஆலயத்தில் இசைக்கருவிகளை உபயோகிப்பதற்கு புதிய ஏற்பாட்டு அதிகாரம் கிடையாது என்று உணருகிறாார்கள். தேவன் தாமே அவரே தாவீதுடைய கூடாரத்தை திரும்பவும் எடுத்துக் கட்டுவேன் என்று சொல்லும்பொழுது தேவன் எதை அர்த்தப்படுத்துகிறார் என்பதை புரிந்து கொள்ளுங்கள். நமக்கு இந்த பகுதியில் பிரச்சனை ஏற்படுவதில்லை. பவுல் அப். விசுவாசிகளை சங்கீதங்களை பயன்படுத்துமாறு குறைந்தது இரண்டு இடங்களில் புத்திமதியாகச் சொல்லுகிறார். (எபேசியர் 5:18,19; கொலோ 3:16). ‘சங்கீதம்’, என்ற வார்த்தையின் சொல்பொருள் விளக்கமாவது, “உயர்ந்த எண்ணங்களையும், கருத்துக்களையும் உள்ளடக்கிய கவிதை அல்லது

துதியின் பாடலாக கின்னரம் அல்லது இசைக்கருவியுடன் இணைந்து பாடப்படுவதாகும்!!. இந்த வார்த்தையின் சொற்பொருள் விளக்கத்தில் தானே இசைக்கருவிகளைப் பயன்படுத்தும் படியாக நமக்கு புத்திமதியும் கொடுக்கப்படுகிறது.

தாவீதுடைய ஆசரிப்புக் கூடாரத்தில் ஆராதனையை உயர்த்துவதற்கு பல இசைகருவிகள் உபயோகிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து ஆலய ஆராதனையில் அங்கே பாடல்களைப் பாடுவதும் கருவிகளின் உபயோகமும் இருந்தது. உதாரணமாக தேவன் தன் வாழ்நாட்களை கூட்டியிருக்கிறார் என்றும், அவனை குணமாக்கினார் என்றும், அவன் உணர்ந்து கொண்ட பொழுது அவன் பாடல்களை எழுதி, "நம்முடைய ஜீவ நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்திலே கீத வாத்தியங்களை வாசித்துப்பாடுவோம் என்று எழுதி வைத்தான்".

சங் 150. அல்லேலூயா தேவனை அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் துதியுங்கள். அவருடைய வல்லமை விளங்கும் ஆகாய விரிவைப் பார்த்து அவரைத் துதியுங்கள் அவருடைய வல்லமையுள்ள கிரியைகளுக்காக அவரைத் துதியுங்கள். மாட்சிமை பொருந்திய அவருடைய மகத்துவத்திற்காக அவரைத் துதியுங்கள் எக்காள தொனியோடே அவரைத் துதியுங்கள் வீணையோடும், சுரமண்டலத்தோடும் அவரைத் துதியுங்கள். யாழோடும், தீங்குழலோடும் அவரைத் துதியுங்கள். ஓசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள், பேரோசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள் சுவாசமுள்ள யாவும் அவரைத் துதியுங்கள். சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக அல்லேலூயா.

இசை ஊழியம் உள்ளவர்கள் அவர்களுடைய ஊழியத்தில் நிலைத்துக் காத்திருக்க வேண்டும். ஆசரிப்புக் கூடார ஆராதனையில் கின்னரங்களோடு தீர்க்கதரிசனம் சொல்லும்படி நியமிக்கப்பட்டவர்கள் இருந்தனர் (1நாளா 25:1). பிரத்தியட்சமாக தீர்க்கதரிசன ஆவியானது, இந்த இசைக் கலைஞர்கள் மேல் இறங்கி வந்து அவர்கள் இசைக்கருவிகளை வாசித்துக் கொண்டே தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். இந்தக் கருவிகளை இசைப்பவர்கள் ஒரு தீர்க்கதரிசன தொடுதல் தாங்கள் கருவிகள் இசைக்கும் பொழுது அவர்கள் மேல் வரவேண்டும் என்று தேவனை விசுவாசிக்க வேண்டும். ஒரு பியானாவோ அல்லது ஆர்கனோ, ஆராதனை பாடலை நடத்திச் செல்லும் பொழுது அந்த சமயங்களில் மற்ற ஒவ்வொரு கருவியும் பின்வந்து இசைக்கும்பொழுது அபிஷேகத்தில் நிறைந்து அந்த இசையின் தாளம் என்ன என்று கூட அறியாமல் இருப்பார்கள். அவர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் கீழ் கர்த்தருக்கு துதியாக ஒரு இசைக் குழுவின் புனித கீதத்தை இசைத்துக் கொண்டிருந்தார்கள். இந்த வகையான ஆராதனையால் பரலோகமே நிரப்பப் பட வேண்டும்!!!

சில சமயங்களில் வாத்தியக்காரனே அந்த தீர்க்கதரிசன அபிஷேகத்திற்கான சூழ்நிலையை அல்லது மனோ பாவத்தை அமைக்கிறவன் என்பதை நாம் பார்க்க கூடும். (2இராஜா 3:15). இசைப்பகுதிகளில் பலமான அழுத்தத்தை வைத்திருக்கும் திருச்சபைகள் மிகவும் பாரமான அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்வதிலும், சபை ஊழியத்தில் ஆவியின் பிரவாகம் எப்பொழுதுமே நிறைந்து நிற்கச் செய்வதில் அவர்களுக்கு சிரமம் எதுவும் இருக்காது. இசை என்பது, ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையை உண்டாக்குகிறது. உலகம் அதை அறியும் தவறாகவும் பயன்படுத்தும். ஆனால் நாம் மக்களை தேவ பிரசன்னத்திற்குள் இழுத்துக் கொள்வதற்காகவே இசையைப் பயன்படுத்த விரும்புகிறோம்.

வேதாகமம் மிகத் தெளிவாகவே கர்த்தருடைய வீட்டில் இசைக்கருவியைக் கொண்டு கிரியை செயய் விரும்பும் தனிநபர் மீது மிகவும் கண்டிப்பான நிபந்தனையை வைக்கிறது. இசைக்கிற ஒருவன் திறமையுடன் தன் கருவியை இசைக்க வேண்டும். (சங் 33:3, எசேக்கியேல் 33:32). தேவ காரியங்களில் அறியாமை குறித்து எந்த விதமான காப்பீட்டுக் கட்டணமும் கிடையாது கர்த்தருடைய வீட்டிலே வாத்தியக் கருவியை இசைப்பதற்கான கடினமான பயிற்சி பெறுவது ஆராதனைக்கு மகத்தான முதலீடு ஆகும். தேவனுடைய வீடானது, அப்பியாசப் பயிற்சிக்கான இடமல்ல. திறமையற்ற இசைக் கலைஞர்கள் ஆராதனையை நடத்தும் பொழுது, கூட்டு வெளிப்படுத்துதலான வழிபாட்டில் ஒழுங்கீனத்தை உண்டாக்கும். என்ன வென்றாலும், திறமையுடன் அபிஷேகமும் இணையும் பொழுது, ஆராதனை ஆளுகை பிரதேசத்தில் வல்லமையான காரியங்கள்

நேரிடக்கூடும். தன்னுடைய கின்னரத்தின் மீது தாவீதுக்கு இருந்த திறமையின் காரணத்தால் பொல்லாத ஆவி சவுலை விட்டு துரத்தப்பட்டது. (1சாமு 16:17). அது அவனுடைய திறமையை மட்டும் அல்ல, ஆனாலும் அவனுடைய திறமையுடன் கூட்டல் அபிஷேகமும் ஆகும்.

**g. நின்று கொண்டிருத்தல் :-**

கர்த்தருக்கு துதி செலுத்துவதற்காக கர்த்தருக்கு முன்பாக நிற்கக் கூடிய இடம் ஒன்று இருந்தது. (சங் 134:1). சங்கீத புத்தகத்திலே ஆராதனை சம்பந்தமாக குறிப்பிடப் படாத ஒரே நிலை உட்கார்ந்திருப்பது தான். கர்த்தரைத் துதிப்பதற்காக உட்கார்ந்த நிலைமையில் சம்பந்தப் படுத்திக் கொள்வது உண்மையிலே கடினமான காரியமாகும். நாம் அவருடைய சந்நிதானத்தில் எழுந்து நிற்கும் பொழுது அவருக்குரிய மகிமையையும், கனத்தையும், பயபக்தியையும் செலுத்துகிறோம். ஒரு நீதிபதி நீதிமன்றத்திற்குள் வரும்பொழுது, ஒவ்வொருவரும் எழுந்து நிற்கிறோம். நாம் எல்லோரும் நீதிபதியின் முன் சந்நிதானத்தில் இருக்கிறோம். இதனால் அவருக்கு முன்பாக எழுந்து நிற்பது அவருக்கு அதிகமான தகுதியாக இருக்கிறது.

சங் 135:1,2 “அல்லேலூயா, கர்த்தருடைய நாமத்தைத் துதியுங்கள். கர்த்தரின் ஊழியக்காரரே துதியுங்கள். கர்த்தருடைய வீட்டிலும் நமது தேவனுடைய ஆலயப்பிரகாரங்களிலும் நிற்கிறவர்களே கர்த்தரைத் துதியுங்கள்”

**h. தலைகுனிந்து வணங்குவதும் அல்லது முடிந்தாழ்படியிடுதலும் :**

சாலோமோன் தன்னை குறிப்பிடத்தக்க வகையில் தன்னையே ஜனங்களுக்கு முன்பாக ஜீவபலியாக காட்டும் பொழுது, அவன் முழங்கால்படியிட்டு வானத்துக்கு நேராக தன் கைகளை விரித்து, தேவனை நோக்கி கதறி அழுதான். (2நாளா 6:13,14). முழங்கால் படியிடுதல் அல்லது தலைகுனிந்து பணிந்து கொள்ளுதல் நம்மை பொறுத்த அளவில் தாழ்மைக்குச் சமிக்கையாகும். நான் யாருக்கு முன்பாகக் கூடி வந்திருக்கிறோமோ, அந்த ஒருவருடைய மகத்துவத்தை நாம் முழுவதுமாக அங்கீகரிக்கும் பொழுது, நாம் முழங்கால் படியிடவேண்டியது கட்டாயம் என்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

சங் 95:6 “நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்கால் படியிடக் கடவோம் வாருங்கள்”.

**i. நடனமாடுதல் :**

நாம் தேவனுடைய (பிரசன்னத்தில்) சந்நிதானத்தில் நிற்க வேண்டும் என்பதை பலதர மக்கள் மறுப்பதில்லை. ஆனால் நிற்க வேண்டும் என்பது இரண்டு இடங்களில் மாத்திரமே சங்கீத புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது. தேவனுடைய வீட்டில் முழங்கால் படியிடுவதையும், அதன் முறைப்படியானதையும் பற்றி வினா எழுப்புவதில்லை. முழங்கால் படியிடுவது, ஒரே தடவை கூறப்பட்டிருந்தாலும் அதைபற்றி வினவுவதில்லை. ஆனால் நடனமாடுதலுக்கு வரும்பொழுது, அது மூன்று முறைகளாக சங்கீதத்தில் சொல்லப்பட்டிருந்தாலும் இதற்கு விரோதமாக சிவப்புக் கொடி ஏற்றப்படுகிறது. சில சமயங்களில் சாத்தானானவன் உண்மையாகவே நாம் வெளிக்கு சொல்லும் படியாக வாஞ்சிக்கிற ஒரு காரியத்தில் நாம் அதற்கான வாஞ்சிப்பை இழந்து விடுகிற பொழுது அதை எவ்வாறு திரித்து புரட்டி விடுகிறான் என்பதை நாம் சில சமயங்களில் பழகிப் போய் இருக்கிறோம். நடனமாடுதலைப் பற்றி யோசிக்கும் பொழுதும் நாமும் இயந்திர கதியாகவே அதைப் பற்றி பாலியல் இச்சைகளை வெளிப்படுத்தும். இந்த உலகத்தில் காணப்படுகிற நடனத்தைப் போன்றது என்று யோசிக்கிறோம். நடனமாடி கர்த்தரைத் துதிக்க வேண்டும் என்று வேதாகமம் சொல்லுவதில்லை. இது உண்மையாக இருக்குமானால் தேவனுடைய வார்த்தையை சரியாக எப்படி நாம் செய்யக்கூடும் என்பதையும் நாம் அறிந்து கொள்ளும் படியாக விரும்ப வேண்டும். சங் 149:3, “அவருடைய நாமத்தை நடனத்தோடே துதித்து தம்புரினாலும், கின்னரத்தினாலும் அவரைக் கீர்த்தனம் பண்ணக்கடவர்கள்”.

சங் 150:4 “தம்புரோடும் நடனத்தோடும் அவரைத் துதியுங்கள். யாழோடும் தீங்குழலோடும் அவரைத் துதியுங்கள்”

ஆராதனையில் விசுவாசத்தின் ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் ஆராதனை செய்கிறவரின் பங்குக்கு ஒரு தியாக பலியை உட்படுத்திக் கொள்கிறது. கைகளை உயர்த்துதலும், கைத்தட்டுதலும்,

பாடுதலும், ஆர்ப்பரித்தலும் எல்லாம் விழிப்புணர்வுள்ள செயல்பாடுகளாக அவை அனைத்தும் தேவனுடைய வார்த்தையைப் புரிந்து கொள்வதாலும், அதன் கட்டளைக்குக் கீழ்படியும் விருப்ப சித்தத்தின் அடிப்படையிலே நடத்தப்படுகின்றன. கர்த்தருக்கு முன்பாக நடனமாடுவதும் வித்தியாசமானதல்ல. உனக்கு பாட வேண்டுமென்ற அகத்தூண்டுதலும், நடனமாட வேண்டுமென்ற அகத்தூண்டுதலையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுமில்லை.

கர்த்தருக்கு முன்பாக நடனமாடுவது அல்லது ஆவிக்குரிய நடனமாவது, உயர்ந்ததோர் மட்டத்தில் நடைபெறுவது ஆகும். ஆகவே அதை அவ்வாறு கருதியும் பாராட்டவும் வேண்டும். சிலர் சொல்லுகிறதுபடி இது ஒரு சாதாரணமான உணர்ச்சி பூர்வமான தேவைகளை நிறைவு செய்கிறார். ஆனால் இந்த அம்சமான ஆராதனையின் முக்கியமான நோக்கமாவது, நமது ஆராதனையின் மூலமாக நன்கு அறியப்படும் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்படிதலாகும்.

காலா காலங்களாகவே நடனமாடுதலானது, ஒவ்வொரு சமூகத்தினருடையதும், பாரம்பரிய கலாச்சாரத்தினுடையதுமான ஆராதனை நடைமுறையின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த கடைசி சந்ததியில் அது மிகவும் கேவலமானதாகவும், அசுத்தமுள்ளதாகவும் ஆக்கப்பட்டு விடப்பட்டது. ஏனென்றால் பாவமானது, தனது உயர்ந்த மட்டத்தை அடையும் பொழுது சாத்தானானவன் உண்மையான ஆவியின் ஆராதனையின் பகுதியாக இருந்த ஒவ்வொன்றையும் இழுத்து, அதன் கீழான அடிமட்டத்திற்குள் இழுத்து செல்லுவான். இதன் காரணமாகவே தேவன் நடனமாடுதலை இறுதிகால திருச்சபைக்குத் திரும்பவும் கொண்டு வந்திருக்கிறார். ஆராதனையின் முடிவான வெளிப்படுத்துதல் ஒரு விசுவாசியின் ஜீவியத்திலே முற்றிலும் பலத்தை விடுவித்துக் கொள்ளுதலும், தேவன் நமது ஆவி, ஆத்துமா, சரீரத்தில் ஆக்ரமித்துக் கொள்ளும் வரைக்குமே அவ்வாறு நடப்பதாகும். அந்த விசுவாசிகள் எந்த தேவர்களை ஆராதித்தாலும், அங்கே அவர்களுடைய ஆராதனையின் ஏதோ ஓர் இடத்திலே நடனத்தின் வெளிப்படுத்துதலானது இருந்ததாகக் கண்டு அறியப்படும். அதாகப்பட்டது ஒவ்வொரு மனிதனுடைய இருதயத்தினுள்ளும் தன்னுடைய தேவனை ஆராதிப்பதில் தன்னையே முற்றிலும் விடுவித்துக் கொள்வதற்கான அதீதமானதோர் வாஞ்சை பிறக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. **ஜீவனுள்ள தேவனை** நோக்கி நாம் எவ்வளவுக்கதிகமாக நம்மையே நம்முடன் இருக்கும் எல்லாவற்றோடுங்கூட விடுவித்துக் கொள்ள வேண்டும்.

தேவன் களிகூருதலை திருச்சபைக்குத் திரும்பவும் கொண்டு வருகிறார். அதுவும் ஒரு களிகூருதலாக எக்காலத்திலும் இதற்கு முன்னதாக வெளிப்படுத்தப் பட்டதாக இல்லாத ஒரு களிகூருதலாகும். அவர் நம்மை கம்பீரமான அறுவடையின் ஆனந்தத்திலே கண்டு பிடித்துக் கொள்ளும் ஓர் இடத்திற்கு வரும்படியாக வாஞ்சிக்கிறார். நடனமாடுதல் தான் இந்த அறுவடையின் கம்பீரமான ஆனந்தத்திற்கு முக்கியமான வெளிப்படுத்துதல் ஆகும். என்னவென்றாலும், அங்கே தேவனுடைய சீரான திரும்பவும் கொண்டு வரும் ஒழுங்கு முறையானது, இந்தப் பகுதியில் ஓர் பாதுகாப்பு கவசமாக விளங்குகிறது.

எரேமியா 31:12,13 அவர்கள் வந்து, சீயோனின் உச்சியிலே கெம்பீரித்து, கர்த்தர் அருளும், கோதுமை, திராட்சரசம், எண்ணெய், ஆட்டுக்குட்டிகள், கன்று குட்டிகள் என்பவைகளாகிய இந்த நன்மைகளுக்காக ஓடி வருவார்கள். அவர்களுடைய ஆத்துமா நீர்பாய்ச்சலான தோட்டம் போலிருக்கும். அவர்கள் இனித் தொய்ந்து போவதில்லை. அப்பொழுது கன்னிகைகளும், வாலிபரும், முதியோருங்கூட ஆனந்தக் களிப்பாய் மகிழுவார்கள். நான் அவர்கள் துக்கத்தைச் சந்தோஷமாக மாற்றி, அவர்களைத் தேற்றி அவர்களுடைய சஞ்சலம் நீங்க அவர்களைச் சந்தோஷப்படுத்துவேன்"

எரேமியா நமக்கு நம்மை சமநிலையில் வைத்துக் கொள்ளக் கூடிய மூன்று துணைப்பொருட்களைத் தருகிறார். முதலாவதாக, தேவன் தமது (கோதுமையாகிய) வார்த்தையைத் திரும்பவும் தருவார். ஏனென்றால் ஒவ்வொன்றுமே தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் இருக்க வேண்டும். இரண்டாவதாக, தேவன் கர்த்தருக்குள் களிகூருதலைத் திரும்பவும் கொண்டு வருகிறார். (திராட்சரசம்) தேவனுடைய வார்த்தையும், கர்த்தருக்குள் களிகூருதலும். மூன்றாவது துணைப்பொருளான அபிஷேகம் (எண்ணெய்) என்பதைச் சந்திக்கும் பொழுது திருச்சபையாகிய (கன்னிகை) நடனமாடி களிகூருகிறாள். தேவனுடைய வார்த்தையில் சரியாக அஸ்திபாரம் போடப்பட்டிருந்தால், நடனத்தின் வெளிப்படுத்துதல்கள் பின்தொடரக்கூடும்.

வருகைத்தரும் காலங்களும், விடுதலை செய்யும் காலங்களும் எப்பொழுதுமே நடனத்தின் வெளிப்படுத்துதலால் குணநலம் பெறுகின்றன. இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து விடுதலையான பொழுது மிரியாம் இஸ்ரவேலின் ஸ்திரீகளை நடனமாடி நடத்திச் சென்றாள். (யாத் 15:21) தாவீது உடன்படிக்கைப் பெட்டியை கொண்டு வந்தபொழுது, அவன் தன்னுடைய ராஜரீக ஆடைகளை களைந்து விட்டு, சணல் நூலால் ஆன ஏபோத்தை அதாவது ஆசாரியன் அணியக்கூடிய ஆடையை அணிந்து கொண்டு கர்த்தருக்கு முன்பாக நடனமாடினான். (2சாமு 6:14) திருச்சபையில் நடத்துகிறது போல தேவன் தமது ஜனங்களைத் திரும்பக் கொண்டு வரும்பொழுது, அதனால் ஊற்று போல் புறப்படுகிற நடனமும் உண்டு. (எரேமிய 31:4) தேவன் ஒரு தனி நபருடைய தனிப்பட்ட சிறையிருப்பாகிய சோர்வு, துக்கம், ஆகியவற்றை திருப்பும் பொழுது இயல்பான பிரதிக்கிரியையாவது நடனமாடி குதித்து ஓடி ஆனந்தத்தால் கர்த்தருக்கு முன்பாக நடனமாடுவதாகும்.

சங் 30:11 “என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப் பண்ணினீர். என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும் படியாக நீ என் இரட்டைக் களைந்து போட்டு மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைகட்டினீர்”

புதிய ஏற்பாட்டிலும் சிறையிருப்பிலிருந்து மீண்டும் திரும்பி வந்ததற்கான அதே பிரதியுத்தரத்தை நாம் காண்கிறோம். ஏசாயாவில் முடவன் மானைப்போல் குதிப்பான் என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. அது அப்போஸ்தலர் நடவடிக்கைப் புத்தகத்தில் எழுத்தளவில் நிறைவேற்றப்பட்டது. (எசாயா 35:6; அப் 3) அந்த நாளில் ஒரு மனிதன் ஆண்டுகள் பலவாக ஒரே இடத்தில் உட்கார்ந்து தர்மம் கேட்டு பிச்சை எடுத்துக் கொண்டிருந்தவன், முடமான கால்களுடன் இருந்த அவன், அவனுடைய நாட்களில் தலைவர்கள் தேவனுடைய வீட்டிற்குள் போய்கொண்டும் வந்து கொண்டும் இருந்தவர்களை பார்த்துக் கொண்டிருந்து பழக்கப்பட்ட அவனுக்கு அவனுடைய தேவைக்கான விடையான என்றுமே கிடைக்காமலே இருந்தது. தீடீரென்று தேவனைத் துதித்துக் கொண்டே குதித்து கொண்டும் தேவனுடைய வீட்டில் பிரவேசித்தான். ஒருவேளை அங்கு இருந்த அநேக மக்கள் அதை சற்று சிறிதாக கனவீனமாக நிறைத்திருக்கக் கூடும். ஆனால் அந்த முடவனான மனிதன் அவ்வாறு செய்வதை தகுதியானதாக உணர்ந்திருக்கலாம். அநேகர் ஏன் என்று வியந்தார்கள். பரிசுத்த ஆவியானவர் வந்து பார்ப்பதில் நமது ஆராதனையைக் குறித்து நாம் வைராக்கியமுள்ளவர்களாக இருக்கிறோம். இந்த விவரமான குறிப்புரையில் இதற்குரிய விடையைக் காணலாம். ஆண்டுகள் பலவாக நம்மில் அநேகர் உட்கார்ந்து பார்த்து ஊழியர்கள் ஆலயத்திற்குள் வருவதையும் போவதையும் கவனித்திருக்கிறோம். ஆண்டுகளாக நாம் நம்முடைய சொந்தத் தேவைகள் சந்திக்கப்படாமலே தேவன் தாமே என்ன செய்கிறார் என்பதில் நாம் நுழைந்து அதன் ஒரு பகுதியாக ஆகக்கூடாத அளவுக்கு நாம் பிரசங்கங்களை கேட்டுக் கொண்டும் இருக்கிறோம். ஆண்டுகள் பலவாக நமது கூக்குரல் இருதயங்களில் இருந்து மேலே போய் கொண்டுதான் இருக்கிறது. அதாவது ஓ தேவனே எங்களுக்கு இருப்பது இவ்வளவு தானா? என்பது தான் அந்தக் கூக்குரல். பிறகு தமது பெரிதான இரக்கங்களுக்குள் தேவன் ஊழியத்தை நம்முடைய வழியில் கொண்டுவந்து அவர்கள் நாம் கேட்டதை விட அதிகமானதை தந்து நாம் எங்கே நமக்கு பலம் இல்லை என்று எண்ணினோமோ அங்கு நாம் பலத்தைப் பெற்றுக் கொண்டோம். நாம் கேட்டுக் கொண்டதை விட தேவன் நமக்கு அபரிமிதமாகச் செய்தபடியால், இதுவே நம்மை மகிழ்ச்சியில் குதிக்கவும் தேவனை கெம்பீரித்து துதிக்கவும் செய்ய காரணமாகிறது.

நாம் இந்தத் தலைப்புக்கு முடிவுரை கொடுப்பதற்கு முன்னர் ஆவிக்குரிய நடனத்திற்கு வரும்பொழுது நாம் சில எச்சரிக்கைப் பகுதிகளைக் குறிப்பிடுவது அவசியமாகிறது.

1. இந்த வெளிக்குச் சொல்லும் கூற்றானது, தலைமைத்துவத்தால் முன் வைக்கப்பட வேண்டும். மிரியாம் ஸ்திரீகளை முன் நடத்திச் சென்ற பொழுதும், தாவீது தன் ஜனங்களை முன் நடத்தி சென்ற பொழுதும் தலைமைத்துவமே மக்களை தேவனுக்கு ஆராதனை செய்வதில் நடத்திச் செல்ல வேண்டும். “ஒவ்வொரு மனிதனும் தன் சொந்த கண்களுக்குச் சரியாய் தோன்றுவதைச் செய்வதற்கு” எந்த விதமான உரிமையும் கிடையாது. களிகூருங் காலத்தில் தேவ ஜனங்களுக்கு தலைமைத்துவம் இருக்க வேண்டும். தலைமைத்துவ குறைவினால் தான் தேவனை நோக்கி

செய்யப்படும் இந்த இயக்கத்திற்கு இன்றைய காலங்களில் இருக்கும் அதிகமான பழிச் சொல்வரக் காரணமாய் இருக்கிறது. உண்மையைக் குறித்து யாதொரு தவறும் இருக்க வில்லை. உண்மையை நிர்வாகம் செய்ய தலைமைத்துவம் இல்லாமல் விவேகக் குறைவு ஆனது. அதிகப் பழிச்சொல் செய்யவும் உண்டாக்கவும் காரணமாகிறது. தேவ ஜனங்கள் ஒடுக்குகிறவனின் கொடுங்கோலில் இருந்து வெளியே கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள். இந்தக் காரணத்திற்காகவே அந்த முகாமில் கெம்பீரமான களிகூருதல் உண்டாயிருக்கிறது.

2. ஆவிக்குரிய நடனமாவது, தனிப்பட்டவர்களுடைய வெளிப்படுத்துதல் ஆன காரியமல்ல. ஆனால் அது சரீரமாகிய சபையின் கிரியையாகும். ஆவிக்குரிய நடனம் என்பது, புதியதுமல்ல. பெந்தேகோஸ்தே (உயிர் மீட்சி) எழுப்புதல் துதியின் அதிகமான வெளிப்படுத்துதலை நடனத்திலே அதன் ஆதி நாட்களில் கண்டறிந்து, இந்த உண்மையின் "புதிய" அம்சமாவது தேவனுடைய வார்த்தையைப் புரிந்து கொள்ளுதலும் மேலும் அது தனிப்பட்ட நபர்களின் வெளிப்படுத்துதல் மட்டும் அல்ல என்ற அறிவும், ஆனால் அதைவிட பரிசுத்த ஆவியானவர் சபையில் அசைவாடும் பொழுது ஆனந்தமும் களிகூருதலும் ஆகிய தேவனுடைய உயர்ந்ததோர் ஒழுங்கு முறையில் சபைமுழுவதும் ஒரே சரீரமாக ஆராதனையாகிய இந்த வெளிப்படுத்துதலில் இயங்க வேண்டும். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் - வெளிப்படுத்துதல்களாகிய சத்தியத்தோடு சபையாக ஆராதனை செய்வதுடன் தேவன் ஒவ்வொரு முழு சரீரமாகிய சபையையும் வாஞ்சிக்கிறார் என்ற விளங்கிக் கொள்ளுதலும் வருகிறது. கைதட்டி கொண்டிருக்கும் பொழுது நாம் அனைவரும் சேர்ந்தே கைத்தட்டுகிறோம், கைகளை உயர்த்தும் பொழுதும் நாம் அனைவரும் பங்கெடுத்துக் கொள்கிறோம். மேலும் நடனமாடுதல் இருக்கும் பொழுதும் முழுசபையும் இந்த வகையான ஆராதனை வெளிப்படுத்துதலில் பங்கெடுக்க வேண்டும் என்பது தேவனுடைய கட்டளையாகும்.

3. இந்த பகுதியில் மற்றவர்கள் சேரக்கூடாதபடி நாம் எந்த விதமான வெளிப்படுத்துதலையும் குறிப்பிட முடியாது. தேவன் தாமே ஒவ்வொரு தனி நபரிலும் வித்தியாசமானதோர் மாதிரியாக தம்மை வெளிப்படுத்திக் கொள்கிறார் என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும். நமது தனிப்பட்ட ஆள் தன்மையில் வித்தியாசங்களைப் பெற்றிருப்பது போலவே, அதிலுங்கூட ஒவ்வொரு அங்கத்தினரிடமிருந்து தேவனுடைய வெளிப்படுத்துதல் பற்றியும் வேறுபாடுகள் இருக்கலாம். ஆகையால் எல்லோரையும் ஒரே விதமான மாதிரியான வழியில் நடனமாட வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் தவறாகும். சிலர் ஓடியும், குதித்தும், ஆடி குணமாக்குதலைப் பெற்றுக் கொண்ட முடவனான மனிதனை போலவே ஆடலாம்.. அதன் மூல ஆரம்ப அசல் உட்கருத்தாகக் கூறுவதுபோல, மற்றவர்கள் அளவுடன் அடி எடுத்து வைத்து நடனம் ஆடலாம். எது என்னவாக இருந்தாலும் அந்த ஆராதனையில் தேவனுக்காக ஒரு விடுதலையான உணர்வு இருக்கும். மேலும் வேதாகமம் சுட்டிக் காட்டுவது போல அது தேவனுக்குப் பிரியமாக இருக்கும்.

4. தேவனோடு உள்ள சகல காரியங்களைப் போலவே நடனமாடுதல் ஒரு சாரதாரணமாக வடிவமைப்பாக ஆகக் கூடாது. நடனமாடுதல் என்பது, எல்லை மீறிய ஆராதனை வடிவமாகும். பரிசுத்தமானதாகவும், மாசற்றதாகவும் இருக்க வேண்டிய ஒன்றை ஏதோ ஒன்றை அளவுக்கு அதிகமாகச் செய்யவோ அல்லது சாதாரணமானதொன்றாக ஆக்கவோ கூடாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அது ஒரு கருத்தில் அபாயகரமான உண்மையாக ஏனென்றால் இச்சையான மாம்சீகமானது, இது போன்ற ஏதோ ஒன்றை சுலபமாக எடுத்துக் கொண்டு புதிய விசுவாசிகளுக்கும் முதன் முறையாக ஆலயத்திக்கு வருகிறவர்களுக்கும் உணர்ச்சியை பாதிப்பதற்கு காரணமாகிவிடும்.

5. தேவன் முன்குறித்து வைத்த ஒன்றை கேவலமாகக் கருதாது இருப்பது நமக்கு முக்கியமாகும். அந்த இழந்துபோன மகன் திரும்பி வந்த பொழுது நடந்த நடனமாடுதலைக் குறித்து மூத்த குமாரன் அமைதி குலைந்தான் (லூக்கா 15:25). சவுல் (மாம்சீகம்) மகளான மீகாள் தாவீதுடைய திறந்த காட்சியான ஆராதனையை அவமதித்தாள். ஆகவே மலடியானாள். இது தேவனுடைய ஜனங்களுக்கு கடுமையான எச்சரிக்கையாக இன்றைய நாட்களில் இருக்க வேண்டும். அபிஷேகத்தை அவமதிக்கிறவர்கள் பேரிலே நியாயத்தீர்ப்பு வருகிறது. ஆனால் அதைப்பெற்று தேவன் அவர்களுக்குச் செய்வதற்காக பாராட்டுகிறவர்களுக்கு ஆசீர்வாதம் வருகிறது. மீகாளுடைய ஆவியானது இன்றும் திருச்சபையில் இருக்கிறது. ஆனால் ஆசாரிய உடைகளை அணிந்தவர்கள்

இன்னும் பாடி கர்த்தருக்குள் களிகூர்ந்து உடன் படிக்கைப் பெட்டி திரும்ப வருகிறதால், அவ்வாறு ஆர்ப்பரிக்கிறார்கள். (1நாளா 15:10; 27,28).

## தேவனை எப்பொழுது துதித்து ஆராதிக்க வேண்டும்?

சங்கீதம் தேவனை நாடோறும் துதிக்க வேண்டும் என்று போதிக்கிறது. (சங் 145:2) ஒரு நாளுக்கு ஏழுதரம் துதிக்க வேண்டும் (சங் 119:164) மற்ற வேறு முறையில் கூறுவதென்றால், "நாம் எப்பொழுதும் அவரைத் துதிக்க வேண்டும்" (சங் 34:1) இது நம் ஜீவனுள்ள வரை உயிரோடு இருக்கும் வரை என்றென்றும் தொடர்ந்து துதிக்க வேண்டும் (சங் 45:17; 104:33; 146:1-3) இந்த ஒரு காரியத்தை நாம் நித்தியத்துக்கு போகுமட்டும் செய்யும் படி எதிர்பார்க்கலாம். சங் 34:1. "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன். அவர் துதி எப்பொழுதும் என் வாயிலிருக்கும்" சங் 113:1-3 "அல்லேலூயா கர்த்தருடைய ஊழியக்காரரே துதியுங்கள். கர்த்தருடைய நாமத்தைத் துதியுங்கள். இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படக் கடவது. சூரியன் உதிக்கும் திசை தொடங்கி அது அஸ்தமிக்கும் திசைமட்டும் கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக".

## கர்த்தரை எங்கே துதித்து ஆராதிக்க வேண்டும்?

நிச்சயமாகவே நமது அன்றாடக கிறிஸ்தவ ஜீவிய நடையில் எங்கெங்கே நம்மை காண்கிறோமோ அங்கெல்லாம் தேவனைத் துதிக்க வேண்டும். ஆனாலும் நாம் ஒன்றாகக் கூடிசேர்ந்து கூட்டு தொழுகைகளை தேவனுக்கு வெளிப்படுத்தும் ஆராதனையாக நாம் முக்கியமாகச் செய்ய வேண்டிய நேரங்களும் இருக்கின்றன. (சங் 22:25; 108:3; 134:2; 138:1,2) சங் 35:18, "மகா சபையிலே உம்மைத் துதிப்பேன் திரளான ஜனங்களுக்குள்ளே உம்மைப் புகழுவேன்" சங் 111:1 "அல்லேலூயா செம்மையானவர்களுடைய சங்கத்திலும், சபையிலும் கர்த்தரை முழு இருதயத்தோடும் துதிப்பேன்".

## கர்த்தரை யார் துதித்து ஆராதிக்க வேண்டும்?

வேதாகமம் கர்த்தரைத் துதிப்பதற்கு பலரக வாரியான மக்களை குறிப்பிடுகிறது. இந்த முற்றிலுமான அட்டவணை ஒவ்வொருவரையும் உள்ளே இணைத்துக் கொள்வதற்குப் போதுமானது.

a. வானமும், பூமியும் கர்த்தரைத் துதிக்கக் கடவது. சங் 69:34; 89:5 (சகல சிருஷ்டிகளும் இந்த ரகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது).
b. ஜாதிகளே எல்லோரும் கர்த்தரைத் துதியுங்கள் (சங் 117:1)
c. சிறுமையும் எளிமையுமானவன் உமது நாமத்தைத் துதிக்கும்படி செய்யும் (சங் 74:21) சந்தர்ப்பங்கள் ஒருபோதும் நமது துதியை திருடி விட அனுமதிக்கக் கூடாது. ஆலயத்தில் நிற்கும் ஊழியக்காரரே, நீங்களெல்லாரும் கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள் (சங் 134:1; 113:1; 163:21) கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் அனைவரையும் சேர்க்கும். (சங் 22:23,26) நாம் உண்மையாகவே கர்த்தருக்குப் பயப்படுவோமானால், நமது துதியினால் அவரைக் கனப்படுத்தும் படியாக வாஞ்சிப்போம். பரிசுத்தவான்களுடைய குணச் சிறப்பியல்பாவது, ஆனந்த முழக்கமிடுவது ஆகும். (சங் 132:9; 145:10)
e. உண்மையிலே, சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக அல்லேலூயா (சங் 150:6) நாம் துதிக்கும் உண்மையான காரியமே ஜீவனுக்கு அடையாளமாகும். "உயிரோடிருக்கிறவனே, உம்மைத் துதிப்பான்" (ஏசாயா 38:19) மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள். (சங் 115:17; 30:9; 88:10,11; ஏசாயா 38:18).

நாம் பார்க்கக் கூடியவாறு துதி ஒவ்வொருவருக்கும் உரியது. அது செய்யப்படுவதற்கு முழுசரீரமும் (சபையும்) துதிப்பதற்கு தேவைப்படுகிறது. இது சபையின் 5 அல்லது 10 சதவிகிதத்தினரைப் பொறுத்த செயல்பாடு அல்ல. (மாற்கு 12:30) துதியும் ஆராதனையும் ஒருசரீரம் (ஸ்தலசபை) முழுவதுமாக சேர்ந்து செய்யும் கிரியையாகும். சங் 117, (ஜாதிகளே எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள், ஜனங்களே எல்லாரும் அவரைப் போற்றுங்கள். அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது. கர்த்தரின் உண்மை என்றென்றைக்கும் உள்ளது. அல்லேலூயா"

## துதிக்கும், ஆராதனைக்கும் இடையே என்ன வித்தியாசத்தை நாம் செய்ய முடியும்?

இந்த இரண்டு வார்த்தைகளுக்கிடையே உள்ள வித்தியாசத்தை செய்ய வேண்டுமானால், இந்த வார்த்தைகளின் அடிச் சொல் வரலாற்றை பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் இவை ஒவ்வொன்றிற்கும் (அதன் ஆரம்பத்தையும், வளர்ச்சியையும் பற்றி) உபயோகப்படுத்தப் பட்டிருப்பதைப் படித்து அறிய வேண்டும். இதற்கு நாம் பின்வரும் புறவரி அமைப்பைத் தருகிறோம்.

### ஆராதனை

1). பழைய ஏற்பாட்டில் இரண்டு முக்கியமான வார்த்தைகள் உபயோகப்படுத்தப் பட்டிருக்கின்றன.

a. “abodah” - இது வழக்கமான பொதுவான வார்த்தையாக உழைப்பு வேலை ஊழியம் (அ) சேவை தேவனுக்கு சேவை என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

b. “shachah” - இந்த வார்த்தையானது, ஆராதனையின் குறிப்பிட்ட செயல்பாட்டை விவரிக்கிறது. இதன் அர்த்தமாவது, குனிந்து, தாழக்குப்புற விழுந்து ஒருவர் பணிய (சாஷ்டாங்கமாக) அல்லது தாழ்மையாக முன் செல்வது என்பதாகும்.

2). புதிய ஏற்பாட்டில் அதே விதமாக வித்தியாசமே வைத்திருக்க காண்கிறோம்.

a. “latruo” - இது பொதுவான வார்த்தையாக அடிமைத்தனம் என்று அர்த்தம் கொடுக்கும். அதாவது, கூலி பொருத்தப்பட்ட தொழிலாளி அல்லது அடிமை என்பதாக அதன் பின்னர் தேவனுக்கு சேவை என்றும் தெய்வீக ஆராதனை என்றும் பொருள்படும்.

b. “proskune” இது ஆராதனையைக் குறிக்கும் குறிப்பிட்ட செயல்பாட்டை விவரிக்கும் எபிரேய வார்த்தைக்கு இணையானது. இதன் அர்த்தமாவது, தாழக் குப்புற விழுந்து பணிவது, போற்றுவது, குனிந்து (வணங்குவது) தொழுவது அல்லது ஆராதனை செய்வது என்று பொருள்படும்.

இந்த “ஆராதனை” என்ற பதத்தின் இரண்டு விதமான அர்த்தத்தை பார்த்து அறிதல் நமக்கு கடினமாக இருக்காது. பொதுவான கருத்தில் நாம் தேவனுக்கு சேவையாக (ஊழியமாக) செய்யும் எல்லாவற்றையும் கர்த்தரின் நாமத்தினால் நாம் செய்வது எல்லாவற்றையும் நம்மை ஒப்படைப்பு செய்த காரணத்தினால், தேவனுக்கு நாம் செய்வதெல்லாவற்றையும் ஆராதனை என்றே அழைக்கப்படுகிறது. யாக்கோபு 1:27ல் யாக்கோபு குறிப்பிடும் சுத்தமான பக்தியாயிருக்கிறது. ஆனால் அதற்கு மாறாக அங்கே ஒரு குறிப்படப்படும் ஆராதனை செயல்பாடாக தேவனுக்கு முன்பாக நாம் நம்மைத் தாழ்த்திக் கொள்வதாகும். நாம் போற்றி பாராட்டவும் அவருடைய மகிமை பிரதாபத்துக்குரிய பயபக்தியிலும் சாஷ்டாங்கமாக முகங்குப்புற விழுந்து வணங்குகிறோம். கர்த்தருக்கு பயப்படும் ஒருவருடைய இருதயத்திலிருந்து ஆராதனை புறப்பட்டு வருகிறது. இயேசு இந்த இருவகை அம்சங்களான ஆராதனை முக்கியமானதென்று அறிந்திருந்தார். நமது ஜீவியம் முழுவதுமே ஆராதனையை வெளிக்குக் காட்டுவதாக இருக்க வேண்டும் என்றும் அறிந்திருந்தார். ஆனாலும், நமது கவனம் எல்லாவற்றையும் அவருக்குக் கொடுக்கக் கூடிய குறிப்பிட்ட நேரங்கள் நமக்கு இருக்க வேண்டும். கிறிஸ்து சோதிக்கப்பட்ட பொழுது “உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியருக்கிறதை சாத்தானுக்கு நினைவு படுத்தினார். “(latruo)” (லூக்கா 4:8).

### துதித்தல்

1). பழைய ஏற்பாட்டில் மூன்று மூலவார்த்தைகள் ‘துதித்தல்’ என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

a. “yadah” - இந்த வார்த்தையான அதன் மூலப்பகுதியில் எறிய அல்லது தூரமாக எறிந்துவிட என்று பொருள்படும். இது ஆரம்பத்தில் ஆராதனையில் நன்றிகூறுதலை அர்த்தமாகக் கொண்டு இருந்தது. ஏனென்றால் தேவனை நோக்கித் துதிப்பதற்கு கரங்கள் உபயோகப் படுத்தப்பட்டன. ஆகையால் இந்த வார்த்தையின் மூலமானது கைகளை விரித்து தேவனைத் துதிப்பது என்பதை உட்கருத்தாகக் கொண்டிருக்கிறது.

b. “Halal” - இந்த வார்த்தையின் சில மூல அர்த்தங்கள் ஆனந்த முழக்கமிடுதல், களிகூருதல் சத்தமாக அழுதல் அல்லது வேண்டிக் கொள்ளுதல் ஆகியவற்றை உள்ளடங்கப் பெறும். மேலும் இது பெருமைப்பட, காட்சியாக்க, கொண்டாட என்றும் பொருள் தரும். இதன் உட்கருத்தாவது நாம் கர்த்தரை பகீரங்கமாகக் கேட்கும் படியாக கர்த்தரை போற்றி பெருமை படுத்த என்று மறைபொருளாகிறது.

c. “Shaback” - இந்த வார்த்தையானது துதிக்கும் பாத்திரராக கெம்பீரித்து சப்தமாக துதிக்க என்று பொருள்படும். ஆசரிப்புக் கூடாரமானது, துதிகளால் நிறைந்து சப்தமான இடமாக இருந்தது என்பதை பார்ப்பதற்கு கடினமானதல்ல.

2). புதிய ஏற்பாட்டில் ‘துதிக்கு’ ஒரே ஒரு மூல வார்த்தை “aineo” என்பதுவே. இந்த வார்த்தை சாதாரணமாக தேவனைத் துதிப்பது என்று அர்த்தம் தருவதாகும்.

ஆகவே, நாம் துதித்தல் என்பதே ஆராதனை என்ற பொது அர்த்தமாகும் என்று சொல்ல வேண்டும். ஆனால் துதித்தல் என்பது, குறிப்பிட்ட ஆராதனையின் குறிப்பிடப்படும் செயல்பாடாக தேவனை ஆராதிப்பது அல்லது பணிபுரியும் பொழுது நாம் தேவனுக்கு நமது நன்றியைச் செலுத்துவதற்காக கைகளை உயர்த்தி யாவருக்கும் கேட்கும்படியாக நன்றி கூறுவதாகும். ஆராதனை என்பது, குறிப்பட்டதோர் அர்த்தத்தில் தாழ்மையான சாஷ்டாங்கமாக ஆவியில் தலைகுனிந்து சர்வவல்லமையுள்ள தேவனைத் தொழுவதாகும். தேவன் இரண்டையுமே வாஞ்சிக்கிறாா. அவர் துதித்தலிலும் வாழ்த்துவதிலும் அவருடைய ஜனங்களில் கொண்டாட்டத்திலும் மகிழ்ச்சி அடைகிறார். மேலும் அவருக்கு முன்பாக தலைகுனிந்து வணங்கவேண்டும் என்றும் விரும்புகிறார்.

திருச்சபையானது ஆராதனை செய்யும் சமூகமாக இருக்க வேண்டும். மேலும் துதித்தலுக்கு ஒரு இடமாகவும் இருத்தல் வேண்டும். இன்றைய காலங்களில் தேவன் திருச்சபையில் துதித்தலைத் திரும்பக் கொண்டு வருகிறார். கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக திருச்சபையை ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார். கிறிஸ்து திரும்ப வருவதற்கு முன்னால் துதித்தலானது, தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தபடி திரும்பவும் முழுவதுமாகக் கொண்டு வரப்பட வேண்டும் (அப் 3:21; எரேமியா 3:11) கடைசி காலங்களில் தேவன் துதியின் ஆடையை நமக்குத் தருவார். (ஏசாயா 61:3) இது துதித்தல் என்பது “ஏதோ ஒரு சமயத்தில்” ஏற்படக்கூடிய அனுபவமல்ல என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. ஆனால் அது கடைசி காலத்துத் திருச்சபையால் அணிந்து கொள்ள வேண்டிய ஆடை எனப்படும். இச்சந்ததியில் சாதாரணமாகக் காணப்படும் சோர்வுக்கு இந்த ஆடையானது, பூரணமான பிரதியுத்தரமாகும். துதியின் ஆடை அணிந்த ஒருவருக்கு முன்னால் நரம்புத் தளர்ச்சி அல்லது சோர்வான நிலைமையுடையவர்கள் முன் நிற்க முடியாது. அது நமது வாயில் தேவனுக்கு ஏறெடுக்கும் உன்னதமான துதியாக இருந்தது. நமது சத்துருக்கள் அனைவரையும், கடைசி சத்துருவான மரணத்தையுங்கூட ஜெயிக்க வல்லவர்களாக இருப்போம். (எபி 9:27) (சங் 149:6-9ஐ பார்க்கவும்).

சீயோனின் வாசல்கள் (திருச்சபை) பல தடவைகளில் துதியாக குறிப்பிடப்படுகின்றன. (ஏசாயா 60:18) கர்த்தருக்கு வழியை ஆயத்தம் பண்ணுவதற்காக துதியின் வாசல்களின் வழியாகப் போகும் படியாக ஊக்குவிக்கப் படுகிறோம். (ஏசாயா 62:10-12) துதிகளின் மூலமாக தேவனுடைய பிரசன்னத்தின் வாசல்களுக்குள் நாம் பிரவேசிக்கிறோம். துதித்தலின் மூலமாக ஜெயமான ஒரு ஜீவியத்திற்குள்ளும் நாம் போகிறோம். துதியின் மூலமாகவே கர்த்தருக்காக செய்யும் ஊழியத்திற்குள்ளும் செல்கிறோம். இதன் காரணமாகவே “கர்த்தர் யாக்கோபின் சகல வாசஸ்தலங்களைவிட சீயோனின் வாசல்களில் பிரியமாக இருக்கிறார்” (சங் 87:2) நமது காத்தராகிய இயேசு கிறிஸ்து தாமே யூதா கோத்திரத்து இராஜ சிங்கமாக இருக்கிறார். “யூதா” என்றால் துதி என்று பொருள்படும். துதியின் மகத்துவத்தை அறிந்த திரளான மக்களுக்கு கிறிஸ்துவே சேனைத் தலைவராக இருக்கிறார். அவர்களுக்கு துதியின் முக்கியத்துவம் தெரியும். நாம் இந்த முக்கியமான துதியின் அம்சத்தை விடா முயற்சியுடன் தொடர்ந்து பின் செல்வோம். நம்முடைய கடந்த கால பாரம்பரியங்களால் தேவனுடைய வார்த்தையை பயனற்று போகும்படி அனுமதிக்கமாட்டோம்.

# வேதாகமத்து துதியும் ஆராதனையும்

## அதிகாரம் 1. புதிய ஆசாரியத்துவம்

பழைய உடன்படிக்கையின்படி தேவன் ஆசாரியத்துவத்தை முன்குறித்து தனது ஜனங்களுக்கு பிரதிநிதியாக தமக்கு முன்பாக இருக்கும்படி செய்திருக்கிறார். அவர்களுடைய ஊழியமாவது, ஒரு சிக்கலான சமயச் சடங்காச்சாரங்களையும், சமய கிரியைகளையும் தொடர்பு கொண்டதாக ஆக்குகிறது. இந்த மதக்கிரியைகள் வரக்கூடிய ஆவிக்குரிய நிதரிசனத்திற்கு அடையாளமாகிறவையாகும். இவைகள் அந்தக் காரியங்களுக்கான நிழலேயன்றி, ஆனால் திடப்பொருள் அல்ல.

கிறிஸ்துவின் ஆசாரியத்துவ ஊழியமானது, பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவத்தில் மறைபொருளாக இருந்த ஒவ்வொரு வகையான காரியங்களையும் நிறைவேற்றுவதாயிற்று. அதன் அங்க அடையாளங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றி விட்டார். அவரே தான் அதன் எல்லாக் காரியங்களுக்கும் நிறைவேறுதலும் ஆவார்.

இந்த லேவியர் ஆரோனிய ஆசாரியத்துவம் ஆனது, இப்பொழுது ஒரு புதிய ஆசரியத்துவத்தால் முன்னதை ஒதுக்கி விட்டது. பின்னதை பதிலாக வைத்து விட்டது. புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளின்படி ஒவ்வொரு விசுவாசியும் தேவனுக்கென்று ஆசாரியனாக முன் குறிக்கப்பட்டிருக்கிறார். பழைய உடன்படிக்கையின் ஆசாரியர்கள் செய்தது போல நாம் மிருக ஜீவபலியைச் செலுத்துவதில்லை. நாம் ஒரு பரிசுத்தமான ஆசாரியத்துவத்திற்காக அழைக்கப்பட்டுள்ளோம். “இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும் படிக்கு பரிசுத்த ஆசாரியக்கூட்டமாக அழைக்கப்பட்டிருக்கிறோம்”. (1பேதுரு 2:5)

நாம் செலுத்தும்படியாக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு ஆவிக்குரிய பலியாவது உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை செலுத்தக்கடவோம். “ஆகையால் அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்கு செலுத்தக்கடவோம்.” (எபி 13:15).

செலுத்த என்ற வார்த்தைக்கு சரியான கிரேக்க பதமாவது “anaphero” என்பது இதன் அர்த்தமாவது, கொண்டுவர உயரமாகத் தூக்க அல்லது செலுத்த என்பவைகளாகுமம். இந்த வார்த்தையானது, யாத் 24:5 ‘செப்வதஜின்ட்’ பதிப்பில் பயன்படுத்தப்பட்டு எங்கே அவர்கள் செலுத்தும்படி சர்வாங்க தகனபலியாக கர்த்தருக்காக சமாதான பலியாக காளைகளை பலியிட்டார்கள் என்று கூ;றுகிறது.

“ஆசாரியன்” என்ற வார்த்கைக்கு நெருங்கிவர அருகில் என்று அர்த்தம் தரும். நியாயபிரமாணத்தின் படி தெய்வீக (சமூகத்தில்) பிரன்னம் (அ) சந்நிதானத்துக்கு மிகவும் அருகாமையின் வருகிறவர்கள் பிரவேசிக்கிறவர்கள் ஒருவரைக் குறிக்கப் பயன்படுவதாகும். (யாத் 19:22; 30:20) இது பொதுவாக ஆரோனுடைய புத்திரர்களுக்கே பொருந்துவதாகும். ஆனால் இதற்கு மிகுந்த விரிவான (விசாலமான) பொருத்தமுங்கூட உண்டு. அது மெல்கிசெதேக்கையும் குறித்தது (ஆதி 14:18) எத்திரோ (யாத் 3:1) மேலும் யாத் 19:22ல் குறிப்பிடப்பட்ட ஆசாரியர்களை அதாவது ஆரோனை ஆசாரியனாக அபிஷேகம் செய்து நியமிக்கு முன்னர் ஊழியம் செய்த ஆசாரிய ஊழியர்களையும் குறிப்பிட்டது.

எண் 16:5ல், பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவத்தில் குறித்து சொல்லப்படுகிற மூன்று காரியங்களைப் பார்க்கிறோம். கர்த்தர் தம்முடையவன் இன்னான் என்றும் தம்மண்டையிலே தாம் சேரக் கட்டளையிட்ட பரிசுத்தவான் இன்னான் என்றும் காண்பிப்பார். அப்பொழுது எவனைத் தெரிந்து கொள்வாரோ அவனைத் தம்மிடத்தில் சேரக்கட்டளையிடுவார்.

a. யெகோவாவுக்காக பிரித்தெடுக்கப்பட்டவர்கள், “கர்த்தர் தம்முடையவன் இன்னான்” என்றும்,
b. பரிசுத்தமான “பரிசுத்தவான் இன்னான்” என்றும்,
c. எவனைத் தெரிந்து (அபிஷேகித்து) கொள்வாரே – அவனைத் தம்மிடத்தில் சேரக் கட்டளையிடுவார்.

இவைகளில் முதலாவதானது, ஆசாரியனின் ஸ்தானத்தை வரையறுக்கிறது. அவன் பரிசுத்தவானாக உலகத்திலிருந்து தேவனுக்காக தனியாக பிரித்து வைக்கப்படுகிறான்.

இரண்டாவதானது, அவனுடைய நிலைமையை விவரிக்கிறது. அவன் பரிசுத்தவானாக கர்த்தருக்காக அபிஷேகம் பண்ணப்படுகிறான். கர்த்தருக்கென்று நேர்ந்து கொள்ளப்பட்டவைகளெல்லாம் (பாத்திரங்கள்) கர்த்தருக்காக பரிசுத்தமாயிருக்கும் (லேவி 27:28).

மூன்றாவதானது, ஊழியத்தையும் அதன் பணிகளையும் விவரிக்கிறது. தேவனுக்கு அருகில் போகும்படி இது ஆசாரியன் செய்ய வேண்டிய ஒவ்வொரு வேலையையும் குறிக்கிறது. ஆகவே அவர்கள் இருக்க வேண்டிய முறையாது,

a. அழைக்கப்பட்டவர்களாக தேவனுக்காகத் தனியாகப் பிரித்தெடுக்கப்பட்ட கூட்டம்.
b. பரிசுத்த ஜாதி – ஒரு வினோதமான மக்கள்
c. ஒரு இராஜ்ஜியத்தின் ஆசாரியர்களாக தேவனுக்கு ஆனவர்கள் (யாத் 19:4-6)

## புதிய ஏற்பாட்டிலுங் கூட தேவன் தமது பங்கிற்கு தம்முடைய புதிய உடன்படிக்கையின் மக்களுக்காக நியமித்திருக்கிறதான (பங்கு) கிரியைகள்

1. நாம் எல்லோரும் “Ecclesia” எனப்படும் அழைக்கப்பட்ட கூட்டமாய் இருக்கிறோம். எகிப்தாகிய பாவத்திலிருந்தும், சாத்தனுடைய இராஜ்ஜியத்திலிருந்து வெளியில் அழைக்கப்பட்டவர்கள், தேவனுடைய இராஜ்ஜியத்திற்காகவும் அவருடைய அன்பின் (பிரியமான) திருக்குமாரனுடைய ராஜ்ஜியத்திற்கும் அழைக்கப்பட்டவர்கள் (கொலோ 1:13).
2. நாம் பரிசுத்த ஜனமாயிருக்கிறோம். பரிசுத்தம் தேவனோடு ஐக்கியப்படவும் அவரோடு ஒருமைப்படவும் இன்றியமையாததாக இருக்கிறது. “பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனை தரிசிப்பதில்லையே” (எபி 12:14).
3. தேவனிடத்தில் கிட்டச் சேரவும் அவருக்கு ஆவியின் பலிகளைச் செலுத்தவும் “தேவனுக்குப் பிரியமாக ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்கு பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகக் கட்டப்பட்டு வருகிறீர்கள்” (1பேதுரு 2:5) அவருடைய நாமத்ததை துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம். (எபி 13:15).

## மேலும் சில ஆசாரியத்துவத்தின் அம்சங்களைப் பற்றி ஆலோசிக்கவும் :

1. **குமாரத்துவம்** : தேவன் ஆரோனுடைய குமாரரை ஆசாரியர்களாகத் தெரிந்து கொண்டார். (யாத் 6:18-20; 28:1). ஆரோன் தான் முதல் பிரதான ஆசாரியன் ஆவான். நாம் அனைவரும் தேவனுடைய புத்திரர்களாயும், பிரதான ஆசாரியனுடைய சந்ததியாயும் இருக்கிறோம். - இயேசுகிறிஸ்து.
2. **பிரதிஷ்டை செய்தல்** : ஆரோனுடைய குமாரர்கள் மோசேயினால் ஆசாரியத்துவத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டார்கள். நாமும் இயேசு கிறிஸ்துவினால் தேவனுக்காக இராஜாக்களும் ஆசாரியர்களுமாய் அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறோம்.
3. **பூரணமாகுதல்** : லேவி 21:17-21, அங்கவீனமுள்ள ஒருவரும் கர்த்தரின் தகனபலிகளைச் செலுத்த சேரலாகாது.
4. **சுத்தமாகுதல்** : ஆசாரியர்கள் ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கும் முன்னர் தங்கள் கைகளையும், கால்களையும் கழுவவேண்டும். (யாத் 30:17,21; 40:30-32).
5. **வஸ்திரம் அணிதல்** : ஆசரிப்புக் கூடாரத்தில் ஆசாரியர்கள் ஊழியம் செய்யாமல் இருக்கும் பொழுது வித்தியாசமான உடையை அணிந்திருந்தனர். அவர்களை எப்பொழுதும் கர்த்தரின் ஆசாரியர்கள் என்னவென்றாலும், அவர்கள் ஆலயத்தில் ஊழியம் செய்யும் பொழுது அவர்களது உத்தியோக உடையை அணிந்து கொள்ள வேண்டும். இது மூன்று பகுதியான துண்டுகளால் ஆனது. (நான்கு என்ற எண் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறிக்கும்). இப்படியே அவர்கள் இராஜ்ஜியத்தின் ஊழியக்காரர்களாகக் காணப்பட்டனர்.

a. சணல் நூல் சல்லடங்கள் (யாத் 28:42).
b. அங்கி ஒரே வஸ்திரமாக நெய்யப்பட்டது. தையல் இல்லாதது.
c. பல வருண இடைக்கச்சை பரிசுத்த ஸ்தலத்திற்கு முன் தொங்கின திரையைப் போலவே அந்த நாலு வர்ணங்களால் ஆனது.
d. சணல்நூல் குல்லா.

**6. அபிஷேகம் :**
இந்த ஆசாரியத்துவத்திற்கான அபேட்சகரை ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலுக்கு அழைத்துப் போகப்பட்டார்.
a.அவருடைய சரீரம் ஜலத்தினால் கழுவப்பட்டது.
b.அவருக்கு ஆசாரியத்துவத்திற்கான அலுவலக ஆடைகள் அணிவிக்கப்பட்டன.
c. அவர் பரிசுத்தமான அபிஷேகத் தைலத்தால் அபிஷேகிக்கப் பட்டார். (பரிசுத்த ஆவியானவருக்கான அடையாளம் யாத் 30:30).

**7. ஆசாரியத்துவ ஊழியம் (ஆசரிப்புக் கூடாரத்தில் கர்த்தருக்காக)**

**a. பிரகாரத்தில் :**
பலிபீடத்தில் அக்கினியை எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் படியாக கவனித்துக் கொள்ள (லேவி 6:9,13) பலிபீடத்தில் உள்ள சாம்பலை அப்புறப்படுத்தி சுத்திகரிக்க (லேவி 6:10-11), காலை மாலை பலிகளை தவறாமல் செலுத்த (யாத் 29:38-44). அனுதின பலி செலுத்திய பிறகு ஜனங்களை ஆசீர்வதிக்க பலிபீடத்தின் மேல் பலிகளைச் செலுத்தும்படியாக வெள்ளி, பேரிகைகளை முழக்க அல்லது யூபில் எக்காளத்தை ஊதும்படியாக.

**b. பரிசுத்த ஸ்தலத்தில் :**
பொன்னாலாகிய பலிபீடத்தின் மேல் காலை மாலை வேளைகளில் (தூப வர்க்கமிட்டு) தூபங்காட்ட. ஒவ்வொரு மாலையும் குத்து விளக்குகளை சுத்தம் செய்ய, ஒவ்வொரு ஓய்வு நாளிலும் சமூகத்தப்பங்களை சமூகதப்ப மேஜை மீது வைக்கும் படியாக.

இது ஆசாரியத்துவ பணிகளில் சுருக்கமான புறவரிக் குறிப்புகளாகும். ஆனால் அது நம்மை இராஜ்ஜியத்தின் ஆசாரியர்களாக நமது கிரியைகளை தேவனுக்கு செலுத்தும்படியாக வழிகாட்டியாக பயன்படுகிறது.

<u>நாமும் இவ்வாறு இருக்கவேண்டும்:</u>

1. **தேவனுடைய புத்திரர்களாக :** மறுபடி ஜெநிப்பிக்கப்பட்ட தேவனுடைய புத்திரர் மாத்திரமே அந்த இராஜரீகமான ஆசாரியத்துவத்தை அடைய முடியும். இந்த புதிய பிறப்பினால் மனிதனுடைய ஆவியானது, மறுபடியும் புத்துயிர் பெற்று தேவனுக்காக செயல்படுகிறது. இது நடைபெறும் வரைக்கும், நாம் முழுவதுமாக பிதா விரும்புகிற ஆவிக்குரிய ஆராதனை பலியை செலுத்த முடியாதவர்கள் ஆகிறோம். (யோவான் 4:24) ஆவிக்குரிய ஆராதனையானது, நமது மீட்கப்பட்டு புதுப்பிக்கப்பட்ட ஆவியின் மூலமாக தேவனுடைய ஆவியானது, ஆராதனை செய்வதாகும்.

2. **தேவனுக்கென்று ஆசாரியர்களாக :** தேவனுடைய மறுபடியும் பிறந்த புத்திரர்களாக நாம் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், அவருக்குச் சொந்த ஜனமாயுமிருக்கிறோம். (1பேதுரு 2:9) கிறிஸ்து நம்மை"எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை இராஜக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்" (வெளி 5:10).

3. **பூரணராக :** லேவிய 21:17-21 வசனங்களில் சொல்லப்பட்ட சரீர குறைபாடுகளும், மாசுகளும் என்று கருதப்படும் குறைகள் பழைய உடன்படிக்கையின் ஆசாரியத்திற்காக சொல்லப்பட்டவை அடையாளங்களாகும். அடையாளம் என்ற கருத்தானது, இன்றைய நாட்களில் ஆராதனை செய்பவர்களுக்கும் பொருத்தமாகும். சரீரப்பிரகாரமான குறைபாடுகள் மட்டும் ஆசாரிய ஊழியத்தை ஏற்றுக் கொள்வதற்குத் தடையாக இல்லாமல், அதாவது அந்த ஆவிக்குரிய குறைபாடுகள் அந்த சரீரப்பிரகாரமான குறைபாடுகளைப் போலவே ஒரு வகையாகும். தேவன் சுத்தமான ஜாதியான மக்களின் துதியையே வாஞ்சிக்கிறார். நமது கிறிஸ்தவ ஜீவியமும் நாம் தேவனை ஆராதிப்பதால் இன்னதென்று பிரஸ்தாபித்துக் கொள்ளும் ஜவியத்தைப் போலவே ஒரே சீராக இருக்க வேண்டும். ஒரே ஊற்றிலிருந்து மதுரமானதும், கசப்பானதுமான ஜலம் இரண்டும் ஒரே

சமயத்தில் சுரந்து ஊற முடியாது. அதே மாதிரி ஒரே வாயிலிருந்து ஆசீர்வாதமும் சாபமும் புறப்பட முடியாது. (யாக் 3:9-11) நாம் தேவனைத் துதிக்கும் வாயால் மனிதனை சபிக்கவும் முடியாது. இந்தக் காரியங்கள் இப்படி இருக்கவும் கூடாது (வசனம் 10).

4. **சுத்திகரிக்கப்பட்டு** : யாக்கோபு தன் வீட்டாரையும் தன்னோடே கூட இருந்த மற்ற அனைவரையும் நோக்கி உங்களிடத்தில் இருக்கிற அந்நிய தெய்வங்களை விலக்கிப் போட்டு, உங்களைச் சுத்தம் பண்ணிக்கொண்டு உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தான். ஆதி 35:2 அவர்கள் எழுந்து பெத்தேலுக்கு போவதற்கு முன்னதாக அங்கே ஒரு பலிபீடத்தை தன்னோடே கூட இருந்து தேவனுக்கு உண்டாக்கி “அவனுக்கு ஆபத்து நேரிட்டநாளில் அவனுடைய விண்ணப்பத்திற்கு உத்தரவு அருளிச் செய்து” அவனேடே அவன் நடத்த வழியில் அவனோடே இருந்த தேவனுக்கு ஆராதனை செய்வோம் என்றான்.

மோசே இஸ்ரவேலரை தங்களைப் பரிசுத்தப் படுத்திக் கொண்டு தங்கள் வஸ்திரங்களைத் தோய்க்குமாறு வற்புறுத்தினான். (யாத் 19:10) மூன்றாம் நாளில் கர்த்தர் ஜனங்களுக்கு பிரத்தயட்சமாய் அவர்களுக்கு வெளிப்படுத்துவதற்கு ஆயத்தமாகுமாறு அவ்வாறு செய்தான். ஆசாரியர்களும் தங்கள் கைகளையும், கால்களையுங் கூட தொட்டியின் ஜலத்தினால் கழுவிக்கொண்டு ஆசரிப்புக் கூடாரத்திற்குள் ஊழியம் செய்ய பிரவேசிக்கு முன்னதாக அவ்வாறு செய்து கொள்ள வேண்டும் என்று தேவன் வற்புறுத்தினார். (யாத் 3:18-21; 40:12-16).

நாதாபும், அபியூவும் தமக்கு ஊழியம் செய்யும் ஆசாரியர்களுக்கு தேவன் கொடுத்த நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறியதால் கர்த்தருக்கு முன்பாக மடிந்து போனார்கள். (லேவி 10:1-3) தேவன் சொன்னார், “என்னிடத்தில் சேருகிறவர்களால் நான் பரிசுத்தம் பண்ணப்பட்டு சகல ஜனங்களுக்கு முன்பாக நான் மகிமைபடுவேன்” என்றார்.

இதிலிருந்து ஒரு எச்சரிக்கையை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். கர்த்தருக்கு முன்பாக வருகிற தென்பது எளிதான காரியம் அல்ல. பழைய உடன் படிக்கையின் பிரகாரம் ஆசாரிய ஊழியத்தின் கிரியைகளை நிறைவேற்றுவது பெரிதான சலுகையான உரிமையாகும். இன்றும் இது சற்றும் குறைந்ததல்ல. உண்மையிலே தற்காலத்தில் இது சற்று அதிகமான சலுகையாகும். இன்றைய நமது உடன்படிக்கையின் நிபந்தனைகள் பழைய உடன்படிக்கையின் நிபந்தனைகளைக் காட்டிலும் மிகச் சிறந்தவைகளே. நாம் நமது ஆராதனைக்குச் செய்யும் ஆயத்தத்தில் அசமந்தமில்லாமல் இருப்பது முக்கியமானதாகும். அநேக கூடிவரும் சபைகளில் ஆசாரியத்துவ ஊழியம் நின்று போயிற்று. ஏனென்றால், நாதாபும் அபியூவையும் போலவே ஆராதிப்பவர்களுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு அவர்கள் ஜாக்கிரதையாக இருக்கவில்லை.

<u>இந்த ஐந்தும் இரத்தம், வார்த்தை, பரிசுத்த ஆவி ஆகிய இவைகளால் சுத்திகரிக்கப்படுவதால், உண்டாகும் பலன்களாகும்.</u>

**a. சுத்தமனசாட்சி** : (எபி 10:22) நாம் தேவனை அணுகு முறையானது இனிமேல் மிருகங்களுடைய இரத்தத்தை நம்மேல் தெளித்துக் கொள்வது என்பதோடு சம்பந்தப்பட்டதல்ல. கிறிஸ்துவுடைய கிருபாதார பலியானது அதைக் குறித்த எல்லாவற்றையும் நிறைவேற்றி விட்டது. இப்பொழுது நாம் கிறிஸ்துவின் இரத்தத்தால் தெளிக்கப்பட்டு இருக்கிறோம். நாம் விசுவாசத்தால் அதன் வல்லமையைப் பெற்றிருக்கிறதால், “துர்மனச்சாட்சி நீங்க தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தினால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும் இருக்கிறோம்” (எபி 10:22) விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடு இந்த ஒரே வழியின் மூலமாக நாம் தேவனிடம் அருகில் சேரமுடியும்.

**b. ஒருமுகப்படுத்தப்பட்ட இருதயம்** : சங் 86:11, “நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும் படி (பயபக்தியால்) என் இருதயத்தை ஒருமுகப்படுத்தும்” தேவனிடத்தில் சேருங்கள் அப்பொழுது அவர் உங்களிடத்தல் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள். இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள். கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள். அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்” (யாக் 4:8,10).

இங்கே நமக்கு பழைய உடன்படிக்கையின் நிபந்தனைக்குச் சமமான புதிய உடன் படிக்கையின் நிபந்தனையைப் பெற்றிருக்கிறோம். கர்த்தருக்கு ஊழியம் செய்யும் முன்னதாக கைகளை

சுத்திகரிக்க வேண்டும். இருமனமுள்ளவர்களாய் இருப்பதிலிருந்து உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள். நமது மனம் முழுவதுமாக கர்த்தர் பேரில் வைக்கப்படடிருந்தால் அன்றி நாம் ஆராதனை செய்வதற்கு ஒரு போதும் முயற்சிக்க கூடாது. நமது யோசனைகள் மற்ற காரியங்கள் மீது வாசமாய் இருக்கும்பொழுது துதி செலுத்துவது தேவனுடைய ஆள்தன்மைக்கு நல்லிலக்கணங்களுக்கும் பயங்கரமான அவமதிப்பு செய்வதாகும்.

**c. மாசில்லாத இருதயம்** : சங் 24:3-4 யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்? கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக் கொடாமலும் கபடாய் ஆணையிடாமலுமிருக்கிறவனே. மாசில்லாத ஒரு இருதயம் சரியான மனப்பான்மையைக் காட்டுகிறது. நாம் ஏன் தேவனைத் துதிக்கிறோம்? நமது மனப்பான்மைகள் சரியானவைகளா? அல்லது நமக்கு அந்தரங்கமான மறைக்கப்பட்ட மனப்பான்மைகள் இருக்கின்றனவா?

**d. தாழ்மையானதோர் இருதயமும் ஆவியும்** : சங் 51:17. தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான். தேவனே நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்" நொறுங்குண்ட ஆவி என்று தாவீது குறித்துச் சொல்வது, துக்கத்தினாலும் பாரமான இருதயத்தாலும் நொறுங்கிப்போன இருதயத்தை அல்ல. நொறுங்குண்ட ஆவி என்பது தேவனுடைய கிரியைகளால் நொறுக்கப்பட்ட இருதயத்தைக் குறிக்கிறது. ஒரு குதிரை நொறுக்கப்படுவதைப் போல – கிறிஸ்துவுடைய கர்த்தத்துவத்திற்கு அடிபணியும் படியாக ஒழுங்கைக் கற்றுக் கொண்ட ஆவியாகும். நருங்குண்டதுமான இருதயமாவது தாழ்த்தப்பட்ட மனந்திரும்பும் இருதயமாகும்.. பத்சேபாளுடன் செய்த விசபசாரமாகிய பாவத்திற்கு தேவன் கொடுத்த கடுமையான நியாயத்தீர்ப்பாகிய தண்டனைக்குப் பிறகு தாவீதுடைய இருதயம் இருந்த நிலைமையை விவரிக்கிறது. தெய்வ பக்தியும், தெய்வ பயமும் சங் 89:7. "தேவன் பரிசுத்தவான்களுடைய சபையில் பயப்படத்தக்கவர். தம்மை சூழ்ந்திருக்கிற அனைவராலும் அஞ்சப்படத்தக்கவர்"

5. **வஸ்திரங்களால் அணியப்பட்டு** : பழைய உடன்படிக்கையின் ஆசாரியர்களைப் போல நாம் பிரத்தியேகமான அங்கிகளை அணிந்து கொள்ளுமாறு அழைக்கப்படவில்லை. ஆனால் ஆவிக்குரிய பிரகாரம் உண்மையான சுத்தமான வஸ்திரங்களால் நாம் உடுத்தப்பட வேண்டும்.

**a. இரட்சிப்பினால் உடுத்தப்படுதல் :**
சங் 132:16ல் தேவன் கூறுவதாவது, "அதின் ஆசாரியர்களுக்கு இரட்சிப்பை உடுத்துவேன்." ஆசாரியர்கள் சணல் அங்கிகளால் உடுத்தப்படுவது இரண்டு காரியங்களுக்கு அடையாளமாக இருக்கிறது.

i. மாம்சமாகிய சரீரம் மறைக்கப்படுவதாகும். "அவரது சந்நிதானத்தில் எந்த மாம்சமும் மேன்மை பாராட்டக்கூடாது"

ii. தேவன் கம்பளி ஆடையை விட சணல் ஆடையை விசேஷமாக குறிப்பிட்டுக் காட்டினார். ஏனென்றால், சணல் ஒரு மனிதனுக்கு வியர்வை உண்டாக்கக் காரணமாக இருப்பதில்லை. ரோம ஆடைகள் உண்டாக்குகிற பிரகாரமாகச் செய்வதில்லை. வியர்வை என்பது சாபத்திற்கும் சுயமுயற்சிக்கும் அடையாளமாகும். (ஆதி 3:19) மேலும் சணல் ஆடைகள் நன்றாக முற்றிலுமாக சுத்தம் செய்யலாம். கம்பளி ஆடைகள் அவ்வாறு ஒரு போதும் சுத்தமாகாது.

**b. மனத்தாழ்மையை அணிந்து கொள்ள :**
1பேதுரு 5:5ல் "மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள் பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார்" என்று நமக்கு உபதேசிக்கப்படுகிறது. மாம்சீகமான பெருமையுள்ளவர்களுக்கு தேவனுடைய சந்நிதானத்தில் இடம் கிடையாது.

**c. நீதியின் வஸ்திரங்களைத் தரித்து :**
"திரளான கூட்டமாகிய ஜனங்கள் வெள்ளை அங்கிகளைத் தரித்து சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக் குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்க கண்டேன்" (வெளி 7:9)
வெளி 19:8ல் "மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களின் நீதிகளே" என்று நமக்குச் சொல்லப் படுகிறது.

**d.** **(உன்னதத்தின்) பலத்தினால் தரிப்பிக்கப்படுதல் :**
லூக்கா 29:49ல் இயேசு தமது சீஷர்களை உன்னதத்தில் இருந்து வரும் பலனினால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் காத்திருக்குமாறு கட்டளை கொடுத்தார். பழைய காலத்து ஆசாரியர்கள் தங்கள் ஊழியங்களைத் தொடங்குவதற்கு முன்னால் எண்ணெயால் அபிஷேகம் செய்யப்பட்டனர். அதுபோலவே நம் ஊழியத்தில் சரிவர கிரியை செய்ய வேண்டுமானால், பரிசுத்த ஆவியானவரின் பலத்தினால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் காத்திருக்க வேண்டும். இயேசுவுங்கூட யோர்தானில் பரிசுத்த ஆவியினால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் தமது ஊழியத்தை ஆரம்பிக்கவில்லை. (மத் 3:16).

**6. புதிய உடன் படிக்கையின் ஆசாரியர்களாய் நாம் தேவனுக்கு ஊழியஞ் செய்பவர்களாக :**

a. நமக்கு நாமே: ரோமர் 12:1. அப்படியிருக்க, சகோதரரே நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று தேவ இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை". நம்மையே முழுவதுமாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்து முழுவதுமாகவும் நித்தியமாகவும் அவருடையதாய் இருக்க " என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி. என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி" (சங் 103:1).

1தெச 5:23. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து (மேசியா) வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.

நாம் மூன்று பகுதி அம்சங்களான ஜீவிகளாக இருக்கிறோம். ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவைகளாகும். தாவீது நமக்கு என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி" என்று போதனை தருகிறார். (சங் 103:1)

1. **ஆவி** : "என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூறுகிறது." (லூக்கா 1:47)
2. **ஆத்துமா** : "என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி" (சங் 103:1)
3. **சரீரம்** : மாம்ச தேகமுள்ள யாவும் அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரிக்கக் கடவது" (சங் 145:21)

b. துதியாகிய பலி : எபி 13:15-16 :
துதியாகிய பலியானது, எப்பொழுதுமே அது எளிதானதாகவோ அல்லது சௌகரியமானதாகவோ செய்யும்படியாக இருப்பதில்லை. நாம் எப்பொழுதும் எக்காலத்திலும் கர்த்தரைத் துதிக்க வேண்டும் அல்லது துதிப்பதற்கு எளிதான பொழுது மட்டுமல்ல, நமது துதித்தலான பலியானது "உதடுகளின் கனியாகிய பலியாகும். துதி வாய்மொழியாக செவிகள் கேட்கும் படியாக சத்தமாகச் சொல்லப்படுவதாகும்.

c. துதியை வெளிப்படையாக் காட்டுதல் :
உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் படியாக தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும் இருக்கிறீர்கள்" (1பேதுரு 2:9).

d. சங்கீதங்களையும், ஞானப்பாட்டுகளையும், ஆவிக்குரிய பாடல்களைப் பாடுவதால் (எபே 5:19; கொலோ 3:16).

e. ஆவிக்குரிய வரங்கள் 1கொரி அதி 12,13,14.

f. எல்லவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்றே செய்யவும். (1கொரி 10:31).

g. நமது பொருட்கள் : உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும். உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும். (நீதி 3:9-10).
பழைய உடன்படிக்கையின் பிரகாரம் தேவன் விதித்ததாவது, ஆசாரியர்கள் தேவனுக்கு முன்பாக வெறுங்கையுடன் வராமல், அவர்கள் எப்பொழுதும் ஒரு காணிக்கையை கொண்டு வரவேண்டும். (1நாளா 16:29; யாத் 23:15; 34:20; உபா 16:17).

அவருக்கு முன்பாக வெறுங்கையுடன் நாம் எப்பொழுதுமே வரக்கூடாது. நாம் துதியோடும், ஆராதனையோடும், போற்றுதலோடும், நன்றிசெலுத்துவதோடும் நமது வெளிப்படுத்துதல்களை பாட்டுகளோடும், களிகூறுதலோடும் நமது பொருட்களோடும் கொண்டுவர வேண்டும்.

## அதிகாரம் 2. துதித்தலாகிய ஆவி

துதித்தல் என்பதை துண்டு துண்டாக வெட்டி, பகுத்துப் பார்த்தால் அதன் மையப் பகுதியில் என்ன கண்டு பிடிப்போம்? அதன் சராம்சம் ஆவது என்ன? அதன் பொருளும், இயல்பும் யாது? உண்மையாகவே துதி எதினால் ஆக்கப்பட்டது, அதில் அடங்கியுள்ள முக்கியமான துணைப் பொருள்கள் எவை?

முதலாவதாக பழைய ஏற்பாட்டில் "துதி" என்று மொழி பெயர்க்கப்பட்ட சில வார்த்தைகளைப் பார்ப்போம். அதன் அர்த்தத்திலும், முக்கியத்துவத்திலும் ஏதோ கொஞ்சத்தைக் கண்டு பிடித்துக் கொள்ளவும். அவைகள் எந்த பொருளைத் தருவதாக நோக்கமுடையது என்பதைத் தெரிந்து கொள்வோம்.

1. **Hallal.** என்பது பழைய ஏற்பாட்டில் 'துதித்தல்' என்பதற்காக அடிக்கடி பயன்படுத்தப்படும் வார்த்தையாகும். அது கொஞ்சமாக 88 தடவைகளாகக் காணக் கிடக்கிறது. அதன் ஆரம்ப அர்த்தமாவது, ஒரு தெளிவான சத்தத்தை உண்டாக்க' என்பது தான். மேற்கொண்ட அதன் அர்த்தமாவது, பெருமையாய் பேசிக்கொள்ள கொண்டாடும் படியாக பைத்தியம் போல பிதற்றிக் கொள்ள தன்னிலே கனம் பெற்றுக் கொள்ள என்றும் பொருள் தரும். ஆகையால், உண்மையான துதியானது, தெளிவானதோர் விசேஷித்த சத்தம் கொண்டிருக்க வேண்டும். அது என்ன நோக்கத்திலிருக்கிறது என்பது பற்றி குழப்பமே இருக்கக் கூடாது. அது அதுவாக இருப்பதற்காக தெளிவாக கண்டு அறியப்பட்டு கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும். அது கொண்டாட்டத்தற்கு ஒரு குறிப்பாகும். அது கர்த்தருக்கான கொண்டாட்டம் ஆகும்.

2. **Hilluwi,** (derives from Hallal) என்பதிலிருந்து தோன்றுகிறது. நன்றி செலுத்துவதற்கான அறுவடை முடியும் கொண்டாட்டமாகும். அந்த விதமான துதி களிகூறுதலில் வெளிப்படுத்தப்பட வேண்டும். எந்த விவசாய நாட்டிலும் அறுவடைக்குப் பின்வரும் காட்சியானது, இந்த வார்த்தையின் சாராம்சத்தை விளக்கிக் காட்டும். எதிர்பார்ப்புடன் காத்திருக்கும். நீண்ட காலமாக காத்திருத்தல் முடிவடைகிறது அந்த அறுவடையான பாதுகாப்பாக சேகரிக்கப்பட்டுள்ளது. கடினமான வேலை முடிவடைந்து கருவிகள் ஓய்வாகக் கீழே வைக்கப்பட்டுள்ளன. பயிர்கள் பாதுகாப்பாக சேமிக்கப்பட்டுள்ளது. அறுவடையின் வெற்றியான முடிவை கொண்டாடுவதற்கு இதுவே காலமாகும். அது ஆனந்தக் களிப்புக்கும் கொண்டாட்டத்திற்கான நேரமாகும். பாடலும், ஆடலும் அந்த நாட்களின் நடைமுறை ஆகும். களிகூர்தல் என்பது நன்றி செலுத்தவதற்கும், துதித்தலுக்குமான வெளிப்படுத்துதல் ஆகும்.

3. **Tehillah.** இதுவும் hallal என்ற பதத்திலிருந்து வரும் மற்றொரு வார்த்தையாகும். இப்பொழுது இதன் அர்த்தம் பாடுவதில் வைக்கப்படுகிறது. இப்படியாக நாம் நமது hallal பாடி நமது கொண்டாட்டமாகும். நாம் தேவனை நோக்கி ஒரு தெளிவான துதிப்பாடலைப் பாடுகிறோம். நம்முடைய பாட்டில் அவரைக் கொண்டாடுகிறோம். நமது பாட்டுகளும், கீதங்களும் ஆகியவைகளில் பல தெளிவான துதிப்பாடலைப் பாடுகிறோம். நம்முடைய பாட்டில் அவரைக் கொண்டாடுகிறோம். நமது பாட்டுகளும், கீதங்களும் ஆகியவைகளில் பல தெளிவற்றதும், மறை பொருளாகவும் இருக்கிறது. அவைகள் தெளிவாகவும் எந்த விதமான தப்பெண்ணமின்றியும் தேவனைத் துதிக்கும் பாடல்களாகும். நாம் அவரைப் பற்றி நமது வார்த்தைகளிலும், இசையிலும் புகழ்ந்து பாராட்ட வேண்டும்.

4. **Shabach.** இதற்கு அர்த்தமாவது "உரத்த சப்தத்தால் முழக்கமிடுவது. வெற்றியின் ஓர் முழக்கமாக அந்த வெற்றியில் மகிமைப்படுத்த வேண்டும்"

துதித்தல் என்பது, எப்பொழுதுமே சப்தமாக இருக்க வேண்டியதில்லை. நாம் எப்பொழுமே சப்தமிட வேண்டியதில்லை. ஒரு வெற்றிகரமாக சத்தமிடுவதே தேவனுக்குத் தகுதியான வழியில் துதியை செலுத்துவதென்றால் அப்படிப்பட்ட தருணங்களும் பல இருக்கின்றன. (சங் 47:1) "தேவனுக்கு முன்பாகக் கெம்பீர சத்தமாய் ஆர்ப்பரியுங்கள்.

இப்படிப்பட்டத் தருணங்கள் ஏற்பட்டால் நீங்கள் அரைமனதுள்ளவர்களாய் அல்ல, உங்களுடைய துதியின் ஆர்ப்பரிப்பானது எதிரொலிக்கும் ஒன்றாய் இருக்கட்டும்.

5. **Zamar.** இதன் அர்த்தமாவது, "தொட்டு அல்லது கம்பிகளை மீட்டுவது" ஆகும். இங்கே தேவனைத் துதிக்கும் வழியாக இசைக்கருவிகளை மீட்டி துதித்தல் என்பதற்குத் தெளிவான ஓர் குறிப்பிடும் பகுதி இருக்கிறது. மேலும் இதன் கருத்தாவது, "இசைக்கருவிகளுடன் இணைந்து துதியை பாடுவதாகும்". கர்த்தருக்காக சகல விதமான இசைக்கருவிகளை மீட்டி தேவனுக்குத் துதியாக ஒரு மகிமையான புனித கீதத்தைப் பாடுவது எவ்வளவு ஆச்சரியமாகும்.

6. **Yadah.** இதன் ஆரம்ப கருத்தாவது, "நன்றியறிதலானதோர் அறிக்கையைக் கொடுப்பதுவே" என்னவென்றாலும் இது கைகளை நீட்டி விரித்த கோர்த்த கைகளுடன் விரிந்து உயர்த்தி தேவனுக்கு நன்றி கூறுவதாகும்.

7. **Towdah** இந்த வார்த்தையும் லயனயா என்ற வார்த்தையின் மூலத்தில் இருந்தே பிறக்கிறது. தெளிவாக ஓர் அதே போன்ற அர்த்தத்தை ஆனாலும், குறிப்பிட்டுச் சொல்லுகிற ஒன்றைத் தருவதாகும் தேவனைப் போற்றித்துதித்து நன்றி கூறுவதற்காக கைகளை விரித்துப் போற்றித் துதிப்பதாகும்.

8. **Barak.** அதாவது முழந்தாழிட்டு போற்றித் துதிப்பதாகும். இங்கே முழு உடலின் அங்கஸ்தான அமைப்பும் துதிகளைப் பற்றிய கன பரிமாணங்களைக் கூறுகின்றன. ஒருவருக்கு முன்னாக முழங்கால்படியிடுவது, தாழ்மையை வெளிப்படுத்தவும், அவர்களுடைய உயர்ந்த மதிப்பையும், அந்தஸ்த்தையும் எடுத்துக் காட்டி உணர்த்துவதாகும்.

<u>இந்த வடிவமான துதிகளில் நாம் பார்க்கும் அதனுள் துணைப் பொருட்களைப் பற்றி ஒரு கணம் சிந்திப்போம் :</u>

a. இவைகள் ஆவிக்குரிய மனப்பான்மைகளின் சரீரப்பிரகாரமான வெளிக்குக் காட்டுதல் ஆகும். அவைகள் ஆவிக்குரிய உணர்வுகளை வெளிக்கு எடுத்துக் காட்டி அவற்றின் சரீரப்பிரகாரமான நடவடிக்கைகளாகும். ஆரம்ப காலத்தில் துதியும், ஆராதனையும் இருதயத்தின் உள்ளான பிரதியுத்தரமாக தேவனுடைய வெளிப்படுத்துதலுக்கும், அவருடைய மகத்துவத்திற்கானதாகும். அதற்கென்று உண்மையான துதித்தலாக ஆக வேண்டுமென்றால், அது வெளிக்கு எடுத்துக்காட்டப்பட வேண்டும்.

b. அதிகமான துதித்தல் தெளிவான குரல் சத்தத்தைப் பொறுத்தது. (இதற்கு Barak என்பது போற்றித் துதிப்பதற்கான முழங்கால் படியிடுவது என்பது விதிவிலக்காகும்) இந்த விதமான ஆராதனை செய்யும் முறையை அமைதியாக எடுத்துச் செய்து காட்டலாம். என்னவென்றாலும் நாம் முழந்தாழிட்டு பாடி ஆரவாரித்தும் தேவனை நோக்கித் துதிக்கலாம்.

c. இங்கே சரீரப்பிரகாரமான செயல்பாடு இருக்கிறது. துதிப்பது என்பதற்கு சரீரப்பிரகாரமான பங்கெடுத்துக் கொள்ளுதலை செயல்பாடின்றி இருக்கமுடியாது. துதித்தல் என்பது ஏதோ ஒன்றை நாம் செய்வதாகும்!.

d. அங்கே உணர்ச்சிப் பூர்வமான விடுவிப்பும் இருக்கக் கூடும். தேவனைத் துதிப்பது உணர்ச்சி பூர்வமான அப்பியாசம் அல்ல. அது ஆவிக்குரிய செயல்பாடாகும். என்னவென்றாலும், அது உணர்ச்சி பூர்வமான விடுவிப்பை அவசியமாக்குகிறது. மிகவும் அளவுக்கதிகமான கிறிஸ்தவர்கள் உணர்ச்சிப் பூர்வமான வெளிக்கு எடுத்துக் காட்டுதலுக்கு அஞ்சுகிறார்கள். அவர்கள் அதை அடக்கி வைத்துக் கொள்ள எப்பொழுதும் நினைக்கிறார்கள். ஏனென்றால், அதை பாலியல் இச்சையாகவும், மாம்சீகமாகவும் கருதுகிறார்கள். வேதாகமத்துப் படியான துதித்தல்

வெளிக்காட்டுதலுக்கு ஒரு நேரடியான கட்டுப்பாட்டுக்குள் உள்ள உணர்ச்சி பூர்வமானதோர் விடுவிப்பு அவசியமாகிறது. தேவன் நமக்கு உணர்ச்சிகளை தந்திருக்கிறார். அவைகள் அவரை மகிமைப் படுத்துவதற்காகவே இருக்கின்றன. தாவீது சொல்லுகிறான், "என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி, என் முழு உள்ளமே கர்த்தரை ஸ்தோத்திரி" (சங் 103:1) என்கிறான். இவை நமது உணர்வுகளையும் உள்ளடக்கியதாகும். மனித உணர்வுகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். நாம் அதற்காக நேரடியான ஆரோக்கியமானதோர் விடுவிப்பை அளிக்காவிட்டால் அங்கே எதிர்மறையான ஆரோக்கியமில்லாத விடுவிப்பு ஏற்படும். தேவனைத் துதிப்பதே ஆரோக்கியமானதோர் வழியில் நமது உணர்வுகளை விடுவிப்பதாகும். இதுதான் கர்த்தரால் முன்குறிப்பிட்டதோர் வகுத்த வழியாகும்.

e. பெருமதிப்பு அல்லது பயபக்தியான மனப்பான்மை ஒவ்வொரு உண்மையான துதியின் வெளிக்குக் காட்டப்படுதலானது, பக்கியுள்ளதாய் இருக்க வேண்டும். பெருமதிப்புத் தருதல் என்பது ஒருவரை சரியாக கனப்படுத்தி மரியாதை தருவதாகும். துதித்தலின் செயல்பாடுகளை அவமதிப்பான அத்து மீறல்களாக தசை அடைந்து விடும்படியாக ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது. தேவனைத் துதிப்பது என்பது நாம் மட்டும் எளிதாகக் களிகூர்ந்து கொள்ளும் வழி என்று அர்த்தம் தராது.

துதித்தல் என்பது மனிதன் முதலாவதாகக் களிகூறுதல் அல்ல. நாம் அதை வெளிக்குக் காட்டுவதில் களிகூர்ந்தாலும் அவ்வாறல்ல. அது எப்பொழுதுமே தேவனுக்குப் பயபக்தியை வெளிக்குக் காட்டுவதாக இருக்கும். நமது உணர்வுகளை துதியில் வெளிக்குக் காட்டும் பொழுது என்பது வேதாகமத்துப் படியானதும் நியாயமானதுங்கூட. நாம் அத்துமீறிப் போவதில் எச்சரிக்கையாய் மாம்சத்தில் காட்சியாக்குவதை புறக்கணிக்க வேண்டும். பயபக்தி என்பது துதித்தலுக்கு அவசியமான துணைப்பொருள் ஏதுவாகும்.

## அதிகாரம் 3. நாம் ஏன் கர்த்தரைத் துதிக்க வேண்டும்?

சங் 47:7. "கருத்துடனே அவரைப் போற்றிப் பாடுங்கள்" என்று கூறுகிறது.
<u>நாம் ஏன் தேவனுக்கு துதி செலுத்துகிறோம் என்று நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். இங்கே வேதாகமத்துப் படியான சில காரணங்கள் நாம் ஏன் அவ்வாறு செய்ய வேண்டும்.</u>

a. அவர் அவராக இருக்கும் காரணத்தினாலே : கர்த்தரைத் துதியுங்கள் (சங்149:1) மற்ற வார்த்தைகளில் கூறுவதென்றால் அவரே கர்த்தர். அவரைத் துதியுங்கள். அவரே முடிவான அதிகாரமுடையவர். உன்னதமான வல்லமையுடையவர். இராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தர். அவரே எல்லாவற்றிற்கும் முன்னானவர், சர்வத்தையும் படைத்தவர். ஆகவே அவர் எல்லாவற்றிற்கும் மேல் மகா பெரியவர். "கர்த்தர் பெரியவர் மிகவும் துதிக்கப்படத்தக்கவர்" (சங் 48:1; 96:4).

b. துதி தேவனை மகிமைப்படுத்துகிறது : "ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப் படுத்துகிறான் (சங் 50:23) நிச்சயமாக இதுவே தேவனுடைய ஜனங்கள் அவரை மகிமைப் படுத்துவதற்கான வாஞ்சையாக இருக்க வேண்டும்.

c. நாம் அவ்வாறு செய்ய வேண்டுமென்று தேவன் கட்டளையிடுகிறார். "தேவனைத் துதியுங்கள்" என்பது ஒரு ஆலோசனை அல்ல, அல்லது வேண்டுகோளும் அல்ல. ஒரு கட்டளையாகும்.

d. கர்த்தரை ஸ்தோத்திரி. அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே (சங் 103:1).

e. கர்த்தர் நல்லவர் அவரைத் துதியுங்கள் (சங் 107:1).

f. அவருடைய வல்லமையுள்ள கிரியைகளுக்காக அவரைத் துதியுங்கள் (சங் 150:2)

g. துதித்தலே இன்பமும், ஏற்றதுமாய் இருக்கிறது. (சங் 92:1; 147:1).

h. துதிக்குப் பாத்திரராகிய கர்த்தர் (2சாமு 22:4; சங் 18:3).

i. ஸ்தோத்திரத்தினால் தேவனை மகிமைப்படுத்துவேன். (சங் 69:30).

j. துதி செய்வது செம்மையானவர்களுக்குத் தகும் (சங் 33:1). பழைய ஆங்கில வார்த்தையான Coonely என்பது "முறையான சரியான பொருத்தமான, தகுதியான, இசைவான, மனநிறைவு கொடுக்கிற" என்று பொருள்படும் தூர்அதிர்ஷ்டவசமாக சில கிறிஸ்தவர்கள் தேவனைத் துதிப்பது தகுதியற்றதும், முறையானதுமானதல்ல என்று நினைக்கிறார்கள். அவர்கள் கௌரவ மற்றவர்களாக காணப்படக் கூடாது என்பதில் கரிசனையுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஏதோ ஒரு சில காரணத்திற்காக இப்படியாகச் சொல்லப்படும் கௌரவமானது, கிறிஸ்தவர்களுக்கு சரியான மனப்பான்மையல்ல என்று உணருகிறார்கள். ஆனால் வேதாகமமானது, எதிர்மறையான கருத்தையே பெரிதாகக் காட்டுகிறது. தேவன் சொல்லுகிறதாவது, துதியின் ஆடை அவர்கள் மேல் தரித்துக் கொள்ளத் தகுதியானது என்றார். தேவனுக்குள் களிகூருவதும், கர்த்தரைத் துதித்தலும் தேவனுடைய மக்களுக்கு பொருத்தமானதும் சரியானதுமாயிருக்கிறது. நாம் மனிதரால் பாராட்டப்படுதலை விட தேவனால் ஒப்புக் கொள்ளப்படுவதையே விரும்புவேன்.

k. தேவன் தமது ஜனங்களின் துதியில் வாசமாயிருக்கிறார் : (சங் 22:30 இஸ்ரவேலின் பரிசுத்தர் நமது துதிகளில் வாசம் பண்ணுகிறார். நமது இருதயங்கள் துதியினால் நிரப்பப்பட்டு இருக்குமானால், தேவனாலும் அது நிரப்பப்பட்டிருக்கும் ஏனென்றால், நமது துதிகளில் அவர் வாசம் பண்ணுகிறார். இது நமது ஸ்தல ஸ்தாபன திருச்சபையைக் குறித்தும் உண்மையாகும். அவர்களை துதியினால் நிரப்புங்கள். அவர்கள் தேவனுடைய பிரசன்னத்தால் நிரப்பப்பட்டு இருப்பார்கள். இந்த துதியின் மனப்பான்மையை நமக்குள் பயிற்றுவித்துக் கொண்டால் தேவனுடைய பிரசன்னம் நம்மைச் சுற்றிச் சூழ்ந்துகொள்ளும். அப்பொழுது நாம் அவருடைய பிரசன்னத்தைக் குறித்து நமது பிரச்சனைகளை துன்பங்களை நமக்குப் பாதகமான சூழ்நிலைமைகளை விடவும் மிகவும் விழிப்புணர்வுள்ளவர்களாக இருப்போம். தேவனைத் துதிப்பதன் பலனாக அநேகமான ஆசீர்வாதங்களை அனுபவித்துக் கொள்ளும்படியாக இருக்கிறது.

l. துதித்தல் வல்லமையை உண்டாக்குகிறது. சங் 84ல் தாவீது சொல்கிறதாவது, "உம்முடைய வீட்டில் வாசமாயிருப்பவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் எப்பொழுதும் உம்மைத் துதித்துக் கொண்டிருப்பார்கள். உம்மிலே பெலன் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவர்கள் பலத்தின் மேல் பலமடைந்து காணப்படுவார்கள்". தேவனைத் துதிக்கிற மனுஷன் கர்த்தரைத் தன் பலமாகக் கொண்டிருக்கிறான். கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே அவனுடைய பலமாகும் (நெகேமியா 8:10).

m. கர்த்தரிடத்தில் மன மகிழ்ச்சியாயிரு. அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை அருள்செய்வார். (சங் 37:4) சில ஜனங்கள் சொல்லலாம், "தேவன் மாத்திரம் என் இருதயத்தின் வாஞ்சைகளை அருள் செய்வாரானால், நான் எப்படி அதிகமாய் அதற்காகத் துதிப்பேன்" என்பதாகச் சொல்லுவார்கள். தெய்வீக ஒழுங்காவது, அதற்கு மாறானது. நாம் அவரைத் துதித்து அவரில் மகிழ்கிறோம். பிறகு நமது இருதயத்தின் வாஞ்சைகளை அவர் நமக்கு அருளுகிறார். அவருடைய முன்னுரிமைகள் ஒழுங்கானவைகள். அவர் அந்த வாஞ்சைகளை அருளுவதில் மகிழ்ச்சி அடைகிறார்.

n. ஜெயத்துக்கு முன்னானது துதித்தலாகும் : 2நாளாகமம் 20ம் அதிகாரத்தில், யோசபாத் இராஜா, தேவனுடைய ஜனங்களை அவர்களுடைய சத்துருக்களுக்கு எதிரான யுத்தத்தில் நடத்தி சென்றான். தேவன் கர்த்தருக்காக பாடகர்களை நியமிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். அவர்கள் சேனைக்கு முன்னாகக் கர்த்தரைத் துதித்துக் கொண்டு சென்றார்கள். போகும் பொழுது "கர்த்தரைத் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது" என்று சொல்லிக் கொண்டே போனார்கள். அவர்கள் பாடி துதிக்க ஆரம்பித்த பொழுது கர்த்தர் அம்மோன், மோவாப் சேயீர்மலை புத்திரருக்கு விரோதமாக பதிவிடை வீரர்களை அமர்த்தி வைத்தார். இவர்கள் யூதா புத்திரருக்கு எதிராக வந்தவர்கள். அவர்களால் முறியடிக்கப்பட்டார்கள்.

ஒரு பாடகர் குழுவால் முன் நடத்திச் செல்லப்படும். இராணுவத்தைக் கற்பனை செய்து பாருங்கள். இந்த வழியாக ஒரு இயற்கையான சிந்தனையானது, யுத்தத்திற்குச் செல்வது எவ்வளவு விநோதமாக இருக்கும். போராயுதங்கள் அனைத்தும் மாம்சீகமான இச்சையுள்ளதல்ல. அவைகள் அரணான

கோட்டைகளையும் தகர்க்கக் கூடிய பலம் உள்ளவை. (2கொரி 10:3-4) இந்த நாட்களில் நாமும் நமது சத்துருக்களை முகத்துக்கு முகம் எதிர்க்கும் பொழுது நாம் துதியின் வல்லமையைப்பற்றிய அவசியத்தை புதிதாக உணர்ந்து கொண்டு நமது வாயில் தேவனுக்கு உன்னதமான துதிகளோடு போருக்குச் செல்ல வேண்டும். அப்படியென்றால் தேவனுடைய இரட்சிப்பை நாம் எதிர்பார்க்கக் கூடும். கர்த்தரை துதிக்கும் படியாக உண்மையுடன் கற்றுக் கொள்ளும் ஜனங்களே அவருடைய பிரசன்னத்தையும் வல்லமையையும் காட்டக் கூடியவர்களாக இருக்கலாம்.

**யார் கர்த்தரை துதிக்க வேண்டும் ?**

a. எங்குமுள்ள மாம்சமான மனிதர்கள். (சங் 145:21; 148:11,13; 150:6)
b. மாம்சதேகமுள்ள யாவும் (சங் 145:21).
c. சுவாசமுள்ள யாவும் (சங். 150:6).
d. தேவ ஜனங்கள் (சங் 67:35; 78:4; 79:13)
e. செம்மையானவர்கள் (சங் 140:13)
f. பரிசுத்தவான்கள் (சங் 145:10).
g. மீட்கப்பட்டவர்கள் (சங் 107:1,2)
h. கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் (சங் 22:23)
i. விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் (1தீமோத் 4:3)
j. கர்த்தருடைய ஊழியக்காரர் (சங் 113:1; 134:1; 135:1)
k. அவருடைய சகலதூதர்கள் (சங் 148:2)
l. இயற்கையின் சகலமும் (சங் 148:3-10)

**கர்த்தரை எப்பொழுது நாம் துதிக்க வேண்டும் !**

a. காலை முதல் இரவுவரை: சூரியன் உதிக்கும் திசை தொடங்கி அது அஸ்தமிக்கும் திரை மட்டும் கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக. (சங் 113:3).

b. நாள்தோறும்: (நாள் முழுவதும் சங் 71:8) என்வாய் உமது துதியினாலும், நாள்தோறும் உமது மகத்துவத்தாலும் நிறைந்திருப்பதாக.

c. நான் உயிரோடிருக்கும் மட்டும்: (சங் 146:2) நான் உயிரோடு இருக்கும் மட்டும் கர்த்தரைத் துதிப்பேன்.

d. எக்காலத்திலும்: (சங் 34:1) கர்த்தரை நான் எக்காலத்திலும் துதிப்பேன். அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்.

e. சோர்வு நேரிடும் காலத்தில்: (சங் 42:11) என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய். தேவனை நோக்கிக் காத்திரு உன் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்.

f. எல்லாவற்றிற்காகவும் : எபேசியர் 5:20. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து".

**நாம் எங்கே கர்த்தரைத் துதிக்க வேண்டும்?**

a. சங் 22: சபையிலே நான் உம்மைத் துதிப்பேன்.

b. சங் 22:25 மகாசபையிலே நான் உம்மைத் துதிப்பேன்.

c. சங் 57:9 ஆண்டவரே ஜனங்களுக்குள்ளே உமைத் துதிப்பேன். ஜாதிகளுக்குளே உம்மை கீர்த்தனம் பண்ணுவேன்.

d. சங் 100:4 அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து
e. சங் 107:32 ஜனங்களின் சபையிலே அவரை உயர்த்தி மூப்பர்களின் சங்கத்திலே அவரைப் போற்றுவார்களாக.
f. சங் 108:3 கர்த்தாவே ஜனங்களுக்குள்ளே உம்மை துதிப்பேன், ஜாதிகளுக்குள்ளே உம்மை கீர்த்தனம் பண்ணுவேன்.
g. 109:30 கர்த்தரை நான் துதித்து, அநேகர் நடுவிலே அவரை புகழுவேன்.
h. சங் 149:1 பரிசுத்தவான்களின் சபையிலே அவருடைய துதி விளங்குவதாக.
i. சங் 150:1 தேவனை அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் துதியுங்கள்.

## அதிகாரம் 4: துதி எவ்வாறு தேவனுடைய ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறது?

இயற்கையில் ஒரு வட்டம் இருக்கிறது. அது பூமிக்கு மிகுந்த ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறது. இது தான் நிலத்தின் மேல் அடி நீர் வட்டம் எனப்படும். இந்த நடைமுறையில் தான் நீர்ஆவியாகுவதால் மேகங்கள் உண்டாக்கப்பட்டு பூமிக்கு மழையை அனுப்பி அதை கனிகொடுக்கவும் வளமுள்ளதாகவும் ஆக்குகிறது.

இது ஆவிக்குரிய கோட்பாடுகளை விளக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டு நாம் பரலோகத்துக்கு எட்டும்படியாக ஏறெடுக்கும் துதியின் அளவின் படியே தேவன் நம்மீது பொழிகிற ஆசீர்வாதமாகிய அருளின் ஏராளமானது அபரிமிதமாக இருக்கும், யோபு 36:29. மேகங்களின் பரவுதலையும், அவருடைய கூடாரத்தில் இருந்து எழும்பும் குமுறல்களையும் அறிய முடியுமோ? வசனம் 30. இதோ அதின் மேல் தம் மின்னலின் ஒளியை விரிக்கிறார். (பொழிப்புரை) தேவன் சமுத்திரத்தின் மேல் சூரியனை பிரகாசிக்கச் செய்கிறார். அதன் உஷ்னம் தண்ணீரை ஆவியாகச் செய்கிறது. (நீராவியாக) சூடான நீராவியாக அதுவானத்துக்கு நேராக எழும்பி அங்கே அந்த நீராவி மேகங்களாக உண்டாகுகிறது. அந்த நீராவி குளிர்ந்தவுடன் அவைகள் வடிக்கட்டி ஜலத்துளிகளாக வடிவம் எடுக்கிறது. இதுவே மழையாக மாறி வடிகட்டி மனிதன் மேல் நீர் துளிகளாக அபரிமிதமாக வருஷிக்கிறது. (வ.29).

**இந்த இயற்கையின் நடைமுறை ஆவிக்குரிய சத்தியத்தை விளக்கிக் கூறுகிறது :**

a. சூரியன் சமுத்திரத்தின் மேல் பிரகாசிக்கிறது போல, தேவனும் தமது ஆசீர்வாதங்களை மனித குலத்தின் மீது பிரகாசிக்கச் செய்கிறார்.
b. ஆகவே மனித இருதயம் இருக்கவேண்டிய விதமாவது, தேவனை நோக்கி அவருடைய ஆசீர்வாதங்களுக்குப் பிரதியுத்தரமாக அவரே அவர் மீது பிரகாசிக்கிறார்.
c. மனிதனுடைய துதியானது, தேவனை நோக்கி எழும்பி சூரியனால் உண்டாக்கப்பட்ட நீராவித்துளிகள் சமுத்திரத்தின் மேல் வருஷிப்பது போல
d. அந்த துதிகளே ஆசீர்வாத மேகங்களாக உண்டாகின்றன.
e. தேவன் அவைகளை மழையாக வடிகட்டி பூமியின் மேல் கனமழையாக வருஷிக்கப் பண்ணுகிறார்.
f. ஆசீர்வாத மழையானது, பூமியை கனியாகிய பலனைத் தந்து செல்வ வளமிக்கதாக ஆக்கி விதைக்கிறவனுக்கு விதையையும், சாதாரண அப்பம் புசிக்கிறவனுக்கு அப்பத்தையும் அளிக்கிறார்.
g. அந்த அளவுக்கு மிஞ்சிய மழையானது, ஆறுகளாக உருவாகி கடலுக்குள் அவைகள் ஓடி அடைகின்றன. எங்கே அவைகள் ஆரம்பித்தனவோ அதே இடத்திற்கு அவை திரும்பவும் வந்து இந்த நடைமுறையானது திரும்பவும் ஆரம்பிக்கிறது.

**இந்த நடைமுறையை விளக்கும் வேதாகமப் பகுதிகளை ஆராய்ந்து பார்க்கவும் :**

a. ஆமோஸ் 5:8; 9:6. "அவர் சமுத்திரத்தின் தண்ணீர்களை வரவழைத்து, அவைகளை பூமியின் விசாலத்தின் மேல் ஊற்றுகிறவர்."

   ஆமோஸ் ஒரு விவசாயி. மழை உண்டாகும் நடைமுறையை அவன் நன்கு அறிந்திருந்தான். இங்கே அவன் நீராவியாகும் நடைமுறையை விவரிக்கிறான். தேவன் "சமுத்திரத்தின் தண்ணீர்களை வரவழைக்கிறார்". அவர் சமுத்திரத்தை நீராவியாகச் செய்து, நீர்துளிகளாக்கி பூமியின் விசாலத்தின் மேல் மழையாக வருஷிக்கச் செய்கிறார்.

b. சங்கீதம் 147:7-8 "கர்த்தரைத் துதியுடன் பாடிக் கொண்டாடுங்கள். நம்முடைய தேவனை சுரமண்டலத்தால் கீர்த்தனம் பண்ணுங்கள். அவர் வானத்தை மேகங்களால் மூடி, பூமிக்கு மழையை ஆயத்தப்படுத்தி, மலைகளில் புல்லை முளைக்கப் பண்ணுகிறார்.

c. நீதி 11:25. "உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும். எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ, அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்".

   நாம் தேவனுக்குத் துதிகளைப் பாடும்பொழுது, அவர் ஆசீர்வாதத்து மேகங்களை நமது துதிகளிலிருந்து உருவாக்கி, அதை பூமியின் மேல் மழையாக வருஷிக்கும் படியாக அனுப்புகிறார். ஆசீர்வாதத்தின் ஒட்டு மொத்தமான அளவானது, நாம் தேவனுக்கு அனுப்புகிற துதியின் மொத்த அளவால் நிர்வகிக்கப்படுகிறது. நமது உதாரத்துவமானது, தேவனுடைய உதாரத்துவமான பிரதியுத்திரத்தை தூண்டி நினைவுப்படுத்துகிறது. வருங்காலத்து கிறிஸ்துவின் சகாப்தமான ஆட்சி பூமியின் மேல் ஆளுகை செய்யும்பொழுது, பூமியன் சகல இராஜாக்களும் எருசலேமுக்கு வருடந்தோறும் விஜயம் செய்து யேகோவாவை ஆராதிக்க வேண்டும் என்றாகிறது. இதை அவர்கள் செய்யத் தவறினால், அந்த ஜனங்கள் மீது தேவன் மழை வருஷிப்பதை தடை செய்வார். (சகரியா 14:17) ஆராதனை இல்லை. மழையும் இல்லை!!.

d. பிரசங்கி 1:7. "எல்லா நதிகளும் சமுத்திரத்திலே ஓடி விழுந்தும் சமுத்திரம் நிரம்பாது. தாங்கள் உற்பத்தியான இடத்திற்கே நதிகள் மறுபடியும் திரும்பும்"

e. பிரசங்கி 11:3. "மேகங்கள் நிறைந்திருந்தால் மழையைப் பூமியின் மேல் பொழியும்"

f. ஓசியா 6:3. "அவர் (கர்த்தர்) மழையைப் போலவும், பூமியின் மேல் பெய்யும் முன்மாரி பின்மாரியைப் போலவும் நம்மிடம் வருவார்".

g. ஏசாயா 45:8. "வானங்களே உயர இருந்து சொரியுங்கள். ஆகாய மண்டலங்கள் நீதியைப் பொழியக் கடவது. பூமி திறவுண்டு இரட்சிப்பின் கனியைத் தந்து நீதியும் கூட விளைவதாக".

h. சரியா 10:1 "பின் மாரிகாலத்து மழையைக் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்ளுங்கள். அப்பொழுது கர்த்தர் மின்னல்களை உண்டாக்கி வயல்வெளியில் அவரவருக்குப் பயிர் உண்டாக அவர்களுக்கு மழையைக் கட்டளையிடுவார்".

i. ஏசாயா 55:10 "மாரியும், உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி அவ்விடத்திற்குத் திரும்பாமல், பூமியை நனைத்து அதில் முளை கிளம்பி விளையும்படிச் செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது."

j. யாக்கோபு 5:7 " இப்படியிருக்க சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடைய வேண்டுமென்று முன்மாரியும், பின்மாரியும் வருமளவும் நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்".

இந்த வேதாகமத்து பகுதிகள் கர்த்தர் திரும்பவும் வருவதற்கு முன்னர் கடைசி காலத்தில் தேவனுடைய ஆவி ஊற்றப்படுதல் இருக்கலாம் என்று தெளிவாகக் காட்டுகின்றன. அந்தக் காலமே "பின் மாரிகாலத்து மழைக்காலம் " என்று அழைக்கப்படும். (சகரியா 10:1) (பரிசுத்த) ஆவியானது. பரலோகத்திலிருந்து ஜலபிரளயத்து மழையைப் போல சொரியும். யோவேல் இதற்கு முன் எக்காலத்திலும் இல்லாத (ஆவியின்) ஊற்றுதல் "முதல் மாதத்தில் உண்டாகும். முன்மாரி பின்மாரி மழையைப் போல (ஒன்றாக) உண்டாயிருக்கும்" என்று முன்னுரைக்கிறான். (யோவேல் 2:23).

சாதாரணமாக இஸ்ரவேல் நாடு இரண்டு மழைகாலங்களை அனுபவித்தது. ஒன்று விதைகள் விதைக்கப்படுவதற்காக வசதியைச் செய்தது. இரண்டாவதானது, வறட்சியான காய்ந்து விடாய்ததுமான பல மாதங்களுக்கு பிறகு பின்மாரி பெய்து தானியத்தை புஷ்டியாக்கி அறுவடைக்கு தயார் செய்தது. இவைகளையே முன்மாரி, பின்மாரி மழைகள் என்று பேசப்படுகிறது. ஆனால், கடைசியான காலத்தில் தேவனுடைய ஆவியின் மகிமையான ஊற்றப்படுதலானது, இந்த இரண்டு மழைகளும் ஒன்றாகச் சேர்ந்தது ஒரே காலத்தில் வந்தது போல இருந்தது. இந்த பரலோகத்து ஊழியக்காரன் இந்த அபரிமிதமான மழைக்காக பொறுமையுடன் காத்திருந்து கடைசியாக அந்த மகாப் பெரிய அறுவடையை அறுத்து சேகரிப்பதற்காகக் காத்திருக்கிறான். இந்த பெருமழை எதனால் உண்டாகிறது? தேவனுடைய புதுப்பிக்கப்பட்ட மக்களுடைய அபரிமிதமான துதிகளால் உண்டாகிறது.

இந்த கடைசி காலங்களில் தேவன் தம்மைத் துதிக்கும் மக்களை எழுப்பப் போகிறார். அவர்கள் மகத்தான வல்லமையானதோர் இராணுவமாக எழும்புவார்கள். பூமியினூடே அணி வகுத்தும் முன் செல்வார்கள். தேவனைத் துதிக்கும் உயர்ந்த துதி அவர்கள் வாயில் இருக்கும். அவர்களுடைய கரங்களில் இருபுறமும் கருக்குள்ள பட்டயம் இருக்கும். அவர்களுடைய துதி அபரிமிதமான ஆசீர்வாத மேகங்களை உணடாக்கும். தேவன் தாமே அவைகளை வடிகட்டி குளிரச் செய்து ஆசீர்வாத மழையாக எக்காலத்திலுமே பார்த்திராத படிக்கு அபரிமிதமான மாமழையாக அனுப்புவார். அவைகள் பூமியில் கடைசியான அறுவடையை முதிரச் செய்வார்கள். தேவ ஜனங்கள் ஆசரிப்புக் கூடாரப்பண்டிகையை தேவனுக்காகக் கொண்டாடுவார்கள்.

## அதிகாரம் 5. துதித்தலுக்கு (எதிராக) வரும் தடைகள்

துதித்தலானது வேதாகமத்துப் பிரகாரமானதும், சரியானதும், முறையானதுமானது என்று ஜனங்களுக்கு நயந்து சொல்லி நம்பவைத்த பொழுதுங்கூட, தேவனை துதிக்கவென்று ஆரம்பிப்பது அவர்களுக்கு சுலபமான காரியமாக எப்பொழுதுமே இருப்பதில்லை. இதற்காக இதைப் பொருத்தமட்டில் பல சாக்குப் போக்குகள் கொடுக்கப்படுகின்றன. ஜனங்கள், தாங்கள் ஏன் தேவனைத் துதிக்க முடியவில்லை என்பதை விளக்கிக் கூற முயற்சிக்கிறார்கள். சிலர் தங்களுடைய இயற்கை விருப்பம் அல்லது இயற்கையான மனநிலையின் காரணமாக தங்களை மன்னிக்கும் படியாக கோருகிறார்கள். அவர்கள் தங்களை நாணமுள்ளவர்களாகவோ அல்லது வெளியில் அதிகம் போவதில்லை என்றோ அவர்கள் தங்களை அதிகமாக வெளிக்கு காட்டிக் கொள்ளாதவர்கள் என்றோ சாக்குச் சொல்லி வேண்டுகிறார்கள்.

ஆனால் உண்மையாகவே வேதாகமம் அவர்களில் யாரையுமே எந்த விதமான சாக்குகளுக்கும் பொறுத்துக் கொள்வதில்லை. தாவீது சொல்கிறான், "சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக" "கர்த்தரை துதியுங்கள்" என்கிறான். (சங் 150:6) உனக்கு சவாசம் இருக்குமானால் நீ தேவனை கட்டாயமாகத் துதிக்க வேண்டும்"

"மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள்" (சங் 115:17)

ஆகவே, துதித்தலுக்கென்று பல திட்டவட்டமான தடைகள் இருக்கின்றன. அவைகள் எல்லாவற்றையுமே, தேவன், நம்மை சமாளித்து மேற்கொள்ளுமாறு விரும்புகிறார். அவைகளில் எந்த ஒன்றையுமே சரியான காரணமாக அவரைத் துதிக்காமலிருப்பதற்கு என்று கூறினாலும் அதை தேவன் ஏற்றுக் கொள்ள மாட்டார்.

1. **பாவம்** : பாவம் என்பது துதித்தலுக்கு எதிரான முதல் தடையாகும். இந்த அடிப்படையான காரணத்தினால் மூடப்படாதவர்கள் தேவனை துதிப்பதில்லை. மேலும் இதை ஒரு காரணமாகக் கொண்டு சில கிறிஸ்தவர்கள் தேவனைத் துதிப்பதில்லை. அறிக்கை செய்யப்படாத பாவங்கள் தேவனுடைய சந்நிதானத்தில் நமது உணர்வுகளை செய்யாது அடக்கிக் கொள்ளச் செய்கிறது. நாம் சுதந்திரமாக அல்லது சாதாரணமாகவோ தேவனுடைய பிரசன்னத்தில் நமது ஜீவியத்தில் மன்னிக்கப்படாதப் பாவங்களை குறித்த குற்றவுணர்வு இருக்குமானால், அவ்வாறு இருக்க முடியாது.

   தாவீது சொல்கிறான் “என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்கு செவிகொடார்” (சங் 66:18). ‘பாவமும், அக்கிரம சிந்தையும்’ நம்மை தேவனிடமிருந்து பிரித்து விடுகிறது. (ஏசாயா 59:2) நாம் முன்னாட்களில் அனுபவித்த எந்த விதமான ஐக்கியத்தையும் இழந்து விடுகிறோம். நமது ஜீவியத்தில் பாவத்தைப்பற்றி உணர்வு கர்த்தருக்கு முன்பாக நமது நாவுகளைக் கட்டிப் போடுகிறது. இந்தவிதமான சந்தர்ப்பங்களில் நாம் உண்மையாகவே அவருடன் சுதந்திரமாகப் பேசக்கூடியது நமது பாவத்தைப் பற்றித்தான்.

   இந்த தடைக்கு ஒரு வெளிக்கு அறிந்த பதில் ஒன்றுண்டு. தேவனிடம் உன் பாவங்களை அறிக்கையிடு. பின்னும் நேர்மையாகவே அவருடைய மன்னிப்பையும், சுத்திகரிப்பையும் ஏற்றுக்கொள். அப்பொழுது சரியான உறவுத் தொடர்பு திரும்பவும் கொண்டுவரப்படக் கூடும். துதித்தலுக்கான பிரவாகமும் விடுவிக்கப்பட்டு புரண்டோடும். (1யோவான் 1:9).

2. **கண்டனம்** : நாம் கர்த்தரால் பாவங்கள் மன்னிக்கப்பட்ட பொழுதுங்கூட அது முற்றிலுமான மன்னிப்பு என்றோ அதை ஏற்றுக் கொள்வது எப்பொழுதுமே எளிதாக இல்லாதபடி நம்மை மன்னித்துக் கொள்வது எளிதாக இருப்பதில்லை. அநேகக் கிறிஸ்தவர்கள் இன்னும் கண்டனத்துக்குள்ளே இருக்கிறார்கள். தேவன் அவர்களை விடுதலையாக மன்னித்து விட்டாலும், தங்களை அவர்கள் மன்னித்துக் கொள்ள முடிவதில்லை.

   இது தங்களைத் தகுதியற்றவர்கள் என்ற உணர்வின் விளைவாக்குகிறது. சுதந்திரமான ஆராதனையானது, நமக்குள் உறைந்து கிடக்கிறது. அவர்கள் தேவனுக்கு முன்பாக தங்கள் தலைகளை தொங்கப் போட்டுக் கொள்ளும் போக்கில் இருக்கிறார்கள். தேவனுடைய பிரசன்னம் என்ற உணர்வானது, அவர்களது தகுதியின்மையைப் பற்றி அதிகமான உணர்வுள்ளவர்களாக்கி அதை தேவனுடைய இரக்கம், கிருபை இவற்றைக் கொண்டு அவர்களுக்கு கிரியை செய்ததைப் பற்றி விழிப்புணர்வள்ளவர்களாக இருப்பதை விட முன்னதை மேற்கொள்கிறது.

   இந்த விதமான மனப்பான்மையானது, அடிக்கடி நாம் தேவனைப் பற்றிய விழிப்புணர்வை விட அதற்கு பதிலாக அதிகமான சுய விழிப்புணர்வுள்ளவர்களாக இருப்பதனால் வருகிறது. நாம் எதிர்மறையான மனப்பான்மையோடு நமது இருதயங்களை எப்பொழுதும் ஆராய்ந்து கொண்டு இருப்போமானாலும், எப்பொழுதும் தவறுகளையும், பலவீனங்களையுமே பார்த்துக் கொண்டிருந்தாலும் இயல்பாக அவைகளையே கண்டுகொள்வோம். யாருமே முற்றிலும் பூரணமானவர்கள் அல்ல. இந்த அத்துமீறிய குற்றங்கண்டு பிடிக்கும் சுயத்தைப் பற்றிய ஆய்வானது, ஆரோக்கியமானதாகாது. இது எப்பொழுதுமே நமது கவனத்தை இயேசுவை விட சுயத்தின்மேலே மையப் (கேந்திரப்) படுத்துகிறது.

   வேதாகமமானது, நம்மை நமது விசுவாசத்தைத் தொடங்குகிறவரும் முடிக்கிறவருமான இயேசுவின் மேல் வைக்கும் படியாக வேண்டுகிறது. (எபி 12:2) இது இரண்டு காரியங்களைச் சாதிக்கிறது. முதலாவதாக, இது நமது யோசனைகளையும், கவனத்தையும் நம்மை விட்டுவிட்டு இயேசுவின் மேல் வைக்கச் செய்கிறது. இரண்டாவதாக, நாம் எவ்வளவுக்கதிகமாக இயேசுவை நோக்கிப் பார்த்தும் அவரை பற்றி யோசித்தும், அவர்மேல் தியானம் செய்தும் நமது எண்ணங்களை அவர்மேல் வைக்கும்பொழுது அவ்வளவுக்கு அதிகமாய் அவரைத் துதிக்கும் படியாக வாஞ்சிக்கிறோம். இவ்வாறு இயேசுவை நோக்கிப் பார்த்தே துதித்தல் ஆரம்பிக்கிறது. நமது மெச்சுதலும், பாராட்டுதலும் அவருக்காக நாம் வைத்திருக்கும் பொழுது மேற்கூறிய இரண்டையும் செய்வதால் அது தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருக்கிறது. அவருடைய உன்னதமான தகுதியைப் பற்றிய நமதுணர்வு அதிகரிக்கலாம். மேலும் இது அவரைத் துதித்து ஆராதிக்கும் எண்ணங்களை முன்னேறச் செய்யும்.

3. **லௌகீகம் :** யாரோ ஒருவர் ஒருசமயம் லௌகீகத்தை இயேசுவுக்காக என்னுடைய பாசத்தை குளிர்ச்சியடையச் செய்யும் ஒவ்வொன்றும் என்று சொல்பொருள் விளக்கம் கூறினார். உலகலௌகீகம் என்பது ஆவிக்குரியது என்பதற்கு எதிர்மறையாகும். இந்த உலகக் காரியங்கள் மீது நமது சிந்தனைகளும், எண்ணங்களும் மையங்கொண்டிருக்கும் பொழுது ஏற்படுகின்ற நிலைமை என்பது தேவனுடைய காரியங்களும் அவரது இராஜ்ஜியம் என்பதை விட அதிமானதாகும்.

   உலகப்பிரகாரமான மனதுடைய மக்கள் தேவனைத் துதிப்பதை அத்துமீறிய குழப்பமடையச் செய்வதாகக் காண்பார்கள். அவர்களுடைய இச்சையான உணர்வுகளால் ஏற்படும் கௌரவத்தை சாயப்படுத்துவதாகும். இந்தப் பிரச்சனைக்கு நிவாரணமாவது, எவ்வளவுக்கு அதிகமாக அதிகமாக கிறிஸ்துவை மையமாகக் கொண்டிருக்கிறோமோ, அதுவே அதற்கான நிவாரணமாகும். அவரைப் பற்றிய விழிப்புணர்வும், பாராட்டுதலும் அதிகமாகும் பொழுது, உலக லௌகீகமும் அதன்படியே குறைந்து போகலாம்.

   உலக லௌகீகத்தின் ஒரு அடையாளமாவது, கௌரவத்தையும் நல்லொழுக்க பாவனையையும் அதாவது, “ஜனங்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்” என்று அதீதமான விழிப்புணர்வுள்ளவர்களாக மனிதர்களுடைய எதிர்கிரியைகள் என்னவாக இருக்குமோ என்ற கரிசனை தங்களை ஆட்கொண்டு விடுவதால் ஏற்படுகிறது. கிறிஸ்தவர்களாக நமது முதல் கரிசனையாவது கர்த்தரைப் பிரியப்படுத்துவதாக இருக்க வேண்டும். இது மாம்ச இச்சையுள்ள மனிதனுக்குப் பிரியமானதல்ல. நாம் மனிதர்களைப் பிரியபடுத்துவதில் அதிக ஈடுபாடு கொண்டு அவர்கள் ஏற்றுக்கொள்வதை வெல்வோமானால் நாம் தேவனை பிரியப்படுத்தாத ஆபத்தில் இருப்போம்.

4. **தேவனைப் பற்றிய தவறானதோர் கோட்பாடு :** இந்த விதமான தவறு துதித்தலுக்கு அடிக்கடி தடையாக இருக்கும். அநேகருக்கு தேவனைப் பற்றிய எதிர்மறையான கோட்பாடு உண்டு. அவர்கள் அவரை (தேவனை) யாரோ ஒருவர் நம்மை எப்பொழுதும் ஏதாவது ஒரு தவறில் நம்மை பிடித்துக் கொள்பவராகவும், அதற்காக நம்மைக் கண்டனம் செய்பவராக நாம் செய்யும் ஒவ்வொன்றிற்கும் எதிர்ப்புத் தெரிவிப்பவராகக் காண்பார்கள். அவரை பிரியப்படுத்துவதற்கும் அவரது ஆமோதிப்பதை அனுபவிப்பதற்கும் எந்த விதமான நம்பிக்கையுமே கிடையாது என்றும் உணருவார்கள். அவர்கள் தேவனை மக்கள் தங்களை ஆனந்தமாகக் களிகூருவதை தடுத்து நிறுத்தும் தீர்மானம் கொண்டவராகக் காண்பார்கள். இப்படிப்பட்டதோர் தேவனை ஒருவர் எப்படித் துதிக்கலாம் என்று நினைக்கக் கூடும்.

   தேவனைப் பற்றிய சரியான கோட்பாடு உண்டாகும் பொழுது இருதயங்களில் துதி அடிக்கடி எழும்புகிறது. பரிசுத்த ஆவியானவர் அவரை அவர் இருக்கிறபடியே நமக்கு அவரைக் காண்பிக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையைப் படிப்பது இந்த தவறான கோட்பாடுகளுக்கு அற்புதமான நிவாரணமாகும். அதுவும் வேதாகமத்தைப் படிக்கும் அநேகர் இந்த சத்தியத்திற்கு தங்கள் சிந்தனைகளை அடைத்து வைத்திருக்கிறார்கள். தேவனைப் பற்றியதோர் உண்மையான விழிப்புணர்வும் அவர் யார் என்றும் என்னவாக இருக்கிறார் என்பதும் நிச்சயமாகவே அவரைத் துதித்து ஆராதிப்பதற்கு நேராக வழிநடத்திச் செல்லும்.

5. **மதசம்பந்தமான பாரம்பரியங்கள் :** கிறிஸ்துவின் நாட்களில் அநேகர் மனிதர்களுடைய வீணான பாரம்பரியங்களை தேவனுடைய வார்த்தையில் பெரிய பிளவை உண்டாக்கும்படியாக அனுமதித்தார்கள். (மத் 15:6) துர்அதிர்ஷ்டவசமாக இன்றைய நாட்களிலும் அதே காரியத்தை அநேகர் செய்து வருகிறார்கள். அநேகமான கிறிஸ்தவர்கள் அங்கு சொல்லப்படும் கிறிஸ்தவ பாரம்பரியங்களில் வளர்க்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் வேதாகமத்து பாணியான துதி ஆராதனையை புருவங்களை சுளித்து உயர்த்தி அதன் மேல் கோபத்தைக் காட்டுவார்கள். அந்த மாதிரியான பாரம்பரியங்கள் துதித்தலை சாதாரணமான உணர்ச்சி பூர்வமானது என்று கண்டனம் செய்கிறார்கள். வேதாகமத்து கட்டளைகளுக்கு கீழ்படியாது, அதற்கு பதிலாக மனிதர்களுடைய மத சம்பந்தமான பாரம்பரியங்களை பின்பற்றுகிறார்கள். துர்அதிஷ்ட வசமாக அந்த பழங்காலத்து திருச்சபை பாரம்பாயங்களை பலமாகத் தழுவிக் கொண்டு விடுகின்றனர்.

அதிலும் இந்த அநேகமான பாரம்பரியங்கள் வேதாகமத்து சத்தியத்திற்கு முரண்பாடாகவே இருக்கின்றன. அந்த மாதிரி காரியங்களில் தேவனைப் பிரியப்படுத்துவதற்கே நாம் தீர்மானஞ் செய்து கொள்ள வேண்டும் (கலா 1:10).

“மதமானது அடக்கி வைக்கிறது, இரட்சிப்பு விடுவிக்கிறது” என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும். பாரம்பரியங்களில் சிறைபடுத்தப்பட்ட மனிதர்கள் அடிக்கடி தேவனைப் பற்றியுங்கூட தவறான கோட்பாடுகளைக் கொண்டிருப்பர். அவர்களுடைய பார்வையில் தேவன் அளவுக்கு மிஞ்சிய எதிர்மறையானவர் ( எதிர் மறை ஜீவி ஆவார்) அவர் முற்றிலுமாக உணர்ச்சி பூர்வ மற்றும், கண்டிப்பும், நட்புறவு அற்றவருமாக இருக்கிறார். இந்த மாதிரித் தன்மையுள்ள ஒரு தேவனை நம்புகிறவர்கள் இதைப் போலவே தாங்களும் ஆகி விடுகிறார்கள். இந்த நிலைமைக்கான நிவாரணமானது, தைரியங் கொண்டு தைரியமாகவே அந்த பாரம்பரியங்களை தேவனுடைய வார்த்தையோடு திறந்த மனதுடனும் சிந்தனையுடனும் ஒப்பிட்டு வெளியில் எடுத்துக் காட்டுவதாகும். பரிசுத்த ஆவியானவர் உன்னுடைய பாரம்பரியத்திலுள்ள தவறை வெளிப்படுத்தும் போதெல்லாம் அதை விருப்பசித்தத்துடன் புறம்பே விட்டுவிட்டு அதற்குப் பதிலாக தேவனுடைய வார்த்தையைத் தழுவிக் கொள்வதாகும்.

6. **பெருமை :**
துதித்தலை விடுவிப்பதற்கு பெருமை என்பது மேலும் ஒரு தடையாகும். இதோடு செயல்படுவதற்கு ஒரு கடினமான பிரச்சனையாக இருக்கிறது. ஏனென்றால் நமது இருதயத்தின் பெருமையை ஒப்புக் கொள்வதற்கான நமது விருப்பசித்தம் இல்லாமையே. நமது சுயம் என்ற சுயநலம், நாம் அவ்வாறு ஒப்புக் கொள்வதை அனுமதிக்காது. தேவன் தாமே அத்தன்மையான பெருமையை நொறுக்கி அந்த சிறைக் கைதியை விடுவிப்பார்.

பெருமை என்பது, நமது சுயரூபத்தைப் பொறுத்தது. அது எப்பொழுதுமே நன்றாக எண்ணப்பட வேண்டும் என்பதை விரும்பியும் எப்பொழுதுமே சரியானதாகவும் முறையானதாகவும் உள்ளது என்று கருதப்படுகிறதான ஒன்றை எந்நேரமும் செய்து கொண்டிருப்பதாகக் காணப்படவேண்டும்.

7. **மனிதனைப் பற்றிய அச்சம்** : நீதி 29:25, சொல்கிறதாவது, “மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்” என்கிறது. மனிதனைப் பற்றிய பயம், அவனுடைய யோசனைகள் அபிப்பிராயங்கள் உண்மையான கண்ணியை உண்டாக்குகிறது. அதில் அநேகர் பிடிக்கப்படுகிறார்கள். “கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்” (நீதி 9:10). நாம் உண்மையாகவே காத்தருக்கு பயபக்கதியுடன் இருந்தால் நாம் மனிதனுக்கு ஒருக்காலும் பயப்பட வேண்டியதே இல்லை.

நாம் எல்லாக் காரியங்களிலும் கர்த்தரைப் பிரியப்படுத்தவே எப்பொழுதும் தேட வேண்டும். நிச்சயமாகவே இதை செய்ய வேண்டுமானால் அவரைத் துதிக்க வேண்டும். இதை மனிதர்கள் விருப்பப்படாவிட்டால், அது அவர்களுடைய பிரச்சனை ஆகும். அவர்களுடைய அபிப்பிராயங்களை உன்னில் வாசம் பண்ணுமாறு அனுமதிக்காதே அல்லது தேவனுக்குரிய அவருடைய துதியை அவருக்குக் கொடுக்கும் உன் விருப்பத்தையும் நோக்கத்தையும் தடை செய்யும்படி விட்டுவிடாதே.

8. **சாத்தானுடைய அடக்குதல்** : கடைசியாக நாம் தடைகளில் எல்லாம் மிகவும் ஆபத்தான தடைக்கு வருகிறோம். அதாவது சாத்தானால் தூண்டிவிடப்படும் அடக்குதலால் துதியை மறைப்பதாகும். தேவன் பேரில் சாத்தான் கொண்டிருக்கும் ஆழமான வெறுப்பை நாம் புரிந்து கொள்வது சற்று கடினமாகும். ஜனங்கள் தேவனைத் துதிப்பதைக் கேட்பதற்கு அதை எவ்வளவு அதிகமாய் வெறுக்கிறேன்.

ஆழமாக வேரூன்றிப் போன சாத்தானுக்கு தேவன் மேல் உள்ள பொறாமையானது, அவனுடைய வீழ்ச்சியைக் கொண்டு வந்தது. அவன் தன்னுடைய பொறாமையில் தேவனைவிட தன்னை மிகப் பெரியவனாக எண்ணிக்கொள்கிறான். தேவனைத் துதித்து மகிமைப்படுத்துவதை அவன் கேட்கும் போதெல்லாம் அவன் காரணமற்ற பொறாமையால் நிரப்பப்பட்டு விடுகிறான். அதனால் அப்படிப்பட்ட எல்லா துதியையுமே அவன் உற்சாகத்தில் குறைத்து அதை அடக்கி மறைக்க முயற்சிக்கிறான்.

ஒரு நபர் சாத்தானுடைய அல்லது அவனுடைய குட்டிச் சாத்தான்களின் நேரடியான கட்டுப்பாட்டுக்குள் இருந்தால், அந்த நபர் இயேசுவின் நாமத்தைச் சொல்லமுடியாது என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் உற்சாகப்படுத்தப்படும் பொழுது அவர்கள் தொண்டை உறைந்து போகிறது. வார்த்தைகள் இயல்பாக வெளியே வருவதில்லை. அந்த வகையான ஜனங்களின் முன்னிலையில் இயேசுவின் நாமம் பேசப்படுமானாலும் அவர்களுக்குள் இருக்கும் பிசாசுகள் சீற்றம் அடைகின்றன. அந்த நாமம் சொல்லும்படி ஆரம்பித்தாலே சாத்தான் வன்மையாக எதிர்கிரியை செய்கிறான். அவனால் பாதிக்கப்படும் வேட்டை பொருளான நபர் வாயிலே நுரைதள்ளி, வலிப்புக்குள் விழுந்து சாபமிட்டுக் கொண்டும், தூஷண வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டும் தேவனுக்கோ அல்லது இயேசுவுக்கு சொல்லப்படும் துதிக்கு விரோதமான எதிர்கிரியையானது மிகுந்த வன்முறையாகிறது.

**கருத்துரையும், முடிவுரையும் :**
ஒரு கிறிஸ்தவன் துதியின் மேலுள்ள வெறுப்பைப் பற்றி விழிப்புணர்வுடன் இருக்கும் போதெல்லாம் ஒரு நேர்மையான இருதயத்தைப் பற்றிய ஆராய்ச்சியானது நடை பெற வேண்டும். அவன் ஜெபத்தினால் நிறைந்து தேவனிடம் அவனுக்குள்ள பிரச்சனையின் தன்மையை வெளிப்படுத்துமாறு கேட்க வேண்டும். அதை அந்த துதியின் பிரவாகத்தை கட்டுப்டுத்தி நிறுத்துவதெதுவோ அல்லது எது அதை தடுத்து நிறுத்துவது என்னவென்றும் தேவனை ஜெபத்திலே விசாரிக்க வேண்டும். இதைக் கண்டு பிடித்துக் கொண்ட பிறகு மனந்திரும்புதல் இருக்க வேண்டும். அந்த தடையில் இருந்து அப்பால் திரும்பிப்போகவும் வேண்டும். அந்த நபர் தன்னுடைய இருதயத்தை தேவனுக்கு நேராக கீழ்படிந்திருக்கவும் அவருக்குத் துதியையும் கொடுக்கவேண்டும்.

இது மேலும் துதியின் பிரவாகத்தில் கூட போக முடியாதது போல தோன்றினாலும், ஒரு முதிர்ச்சி பெற்ற ஆவியில் உணர்ச்சி பூர்வமான மனிதனிடம் சகாயத்தைத் தேடிக் கொள்ள வேண்டும். ஒருவேளை அங்கே அவருடைய ஜீவியத்தின் மேல் சாத்தனுடைய அடக்கி மறைத்தல் இருக்கலாம். அது கட்டாயமாக உடைக்கப்பட வேண்டும். இது செயலாற்றப்படும் வரைக்கும் அந்த நபர் போதுமான பிரகாரம் தேவனுக்கு சேவை புரிய முடியாது.

தேவனை நோக்கித் துதித்தலுக்கும், ஆராதித்தலுக்கும் முடியாமை எங்கோ ஓரிடத்தில் முரட்டாட்டத்தைச் சுட்டிக் காட்டுகிறது. அங்கே தெரிந்தபடியாக ஒரு அடிப்படை பிரச்சனையானது தீர்வு காண்பதற்காக அவசியமென்று இருக்கிறது. ஜெயம் வரும்வரைக்கும் தேவனைத் தேடிக்கொண்டு இருக்கவும். அப்பொழுது துதியாகிய நதிகளானது நமது உள்ளான மனிதனிலிருந்து விடுவிக்கப்பட்டு பெருகி வருகிறது.

## அதிகாரம் 6. கர்த்தரைத் துதிப்பதற்கான வேதாகமத்து வழிகள்

துதியானது, முதலாவதாக பாராட்டுதல், ஏற்று ஒப்புக் கொள்ளுதல் என்பவற்றின் வெளிப்படுத்துதல் ஆகும். அதனுடைய முழுமையான பொருளில் நாம் பெற்றுக் கொண்ட சலுகைகளுக்காக நன்றியறிதலையும், நன்றி செலுத்துதலையும், வெளிப்படுத்துவததையும் உள்ளடக்கமாக் கொண்டது. ஆகவே துதியும் நன்றி செலுத்துவதும் அடிக்கடி ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன.

என்னவென்றாலும், துதி என்பது அதன் சுத்தமான வடிவத்தில் நன்றியையும், நன்றி அறிவதையும் உள்ளே சேர்த்துக் கொள்வதில்லை. அவைகள் இன்றியமையாதவனாக ஒருவருடைய துதித்ததின் நோக்கமாக ஆசீர்வாதங்கள் பெற்றாலும், பெறாவிட்டாலும், பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்குமான வெளிப்படுத்தப் படுதலாகும்.

ஆகவே, தேவனைத் துதிப்பது முதலாவதாக, அவருடைய ஆள்தன்மை, நல்லொழுக்கம், நல்லியல்புகள், பரிபூரணம் ஆகியவற்றை மகிமைப்படுத்தி உயர்த்துவதாகும். அது தேவனைப் போற்றுவதாக, அவர் யாராக, என்னவாக இருக்கிறார் என்பதற்காகவும், அவர் நமக்குச் செய்த ஏதோ ஒன்றினால் நாம் நன்மைகள் பெற்றோம் என்பதை விட அவர் இருக்கிறவராக இருக்கிற படியால் அதற்காகப் போற்றுவதாகும். “கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத் தக்கவருமாயிருக்கிறார்” (சங் 145:3).

தேவனைத் துதித்தலானது, நமது தகுதியைப் பற்றிய உள்ளான விழிப்புணர்வாகும். இதன் பின்னான காரணமாக அந்த உள்ளான பாராட்டுதலின் வெளியரங்கமான வெளிப்படுத்துதல் ஆகும். அது வெளியே வெளிப்படுத்த பட்டாலன்றி துதியாக மாட்டாது. அது சிந்தனையிலும், இருதயத்திலும் உள்ளடங்கி இருக்குமானல் அது பாராட்டுதலாகும். அது வெளிப்படுத்தப்பட்டு சப்தமாகவும் பார்க்க முடிந்ததுமாக இருந்தால் அது துதி எனப்படும்.

## வேதாகமத்தின் படி துதியை வெளிப்படுத்திக் காட்டுதல்

நமது துதித்தலை தேவனுக்கு வெளிப்படுத்திக் காட்டுவதற்காக அநேக வேதாகமத்து வழிகள் இருக்கின்றன. நாம் இப்பொழுது சிலவற்றைப் பார்க்கப் போகிறோம். நமது அட்டவணை முற்றுப் பெற்றதாகாது. நீங்கள் வேதாகமத்துப் படி போன்ற சமமான மற்ற வழிகளையும் கண்டு பிடித்துக் கொள்ளலாம். ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவர்களது ஆவியில் பொதுமான அளவு சுதந்திரத்துடன் அவரைத் துதிப்பதற்காக வேதாகமத்தில் காணப்படும் ஏதோ ஒரு வழியில் அல்லது எல்லா வழிகளிலும் துதிக்க வேண்டும் என்று தேவன் வாஞ்சிக்கிறார் என்று நான் நம்புகிறேன்.

இந்தத் துதியின் வெளிப்படுத்திக் காட்டும் வழிகள் எல்லாம் நியாயமானதும் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதுமாக இருக்க வேண்டுமென்றால் அவர்கள் உண்மையாகவே நம் இருதயங்களில் இருக்கும் துதியை தேவனுக்காக விடுவிக்கப்பட வேண்டிய அவசியம் இருந்தால் மாத்திரமே அவைகள் அவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படத் தக்கவையாக இருக்கும் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். மற்ற சொற்களில் கூறுவதென்றால் இயக்கங்களின் படி போவதென்றால் இயந்திர ரீதியாக இந்த வெவ்வேறு காரியங்களைச் செய்வது துதித்தல் என்று அமைந்திருக்க முடியாது. இவைகள் சாதாரணமாக பாராட்டுதல், நன்றி கூறுதல் மரியாதை செய்தல் ஆகிய நமக்குள் இருக்கின்றவற்றிற்கு வெளிப்படுத்திக் காட்டும் ஒரு வழி என்று மாத்திரம் கருதப்படும்.

உங்கள் இருதயத்தில் இருக்கும் துதித்தலைப் பற்றி விழிப்புணர்வுள்ளவர்களாக அதற்கு ஒருக்காலும் போதுமான அளவு வெளிப்படுத்திக் காட்டுதல் இருக்காவிட்டாலும், நீங்கள் இந்த பல வித்தியாசமான வெளிப்படுத்திக் காட்டும் முறைகளைப் படிக்க வேண்டும் என்று ஆலோசனை கூறுவேன். கொடுக்கப்பட்ட வேதாகமத்து ஒத்துவாக்கியங்களை ஜெபத்துடன் அவைகள் காணப்படும் இடம் நேரத்தையும் முக்கியத்துவத்தையும் கவனித்து அதன் பிறகு நீங்கள் கருத்தில் கொள்ளும் எந்த வெளிப்படுத்திக் காட்டும் முறையின் படி செய்வீர்களாக.

உதாரணமாக நீங்கள் சத்தமிட்டு ஆர்ப்பரிப்பதை குறிக்கும் ஒத்து வாக்கியங்களைப் படித்துக் கொண்டிருப்பீர்களானால், பிறகு முன்னாக போய் கர்த்தரை நோக்கி சத்தமிட்டு ஆர்ப்பரியுங்கள். அதை செய்வதால் ஒரு அபரிமிதமான விடுவிப்பைக் கண்டு பிடித்துக் கொள்வீர்கள். உங்களுக்குள்ளே ஒரு புதிய பரிமாணமான மகிழ்ச்சி விடுவிக்கப்படும். ஏனென்றால் நீங்கள் தேவனுக்குக் கீழ்படிந்தவர்களாக தேவன் தமது வார்த்தையில் உங்களுக்காக முன்குறித்துள்ள புதிய வழிகளில் அவரைத் துதிக்க ஆரம்பித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

மற்றவர்களுக்கும் இந்தத் துதியின் கோட்பாடுகளை நீங்கள் கற்றுக் கொடுப்பதாயிருந்தால், ஒவ்வொருவரையும் நீங்கள் கற்றுக் கொடுக்கும் பொழுதே அப்படி செய்யும்படியாக செய்து விடுங்கள். இந்த துதிக்கும் வழிமுறைகளைப் பற்றிச் சொல்வதில் திருப்தி அடைந்து விடாமல் மக்களும் அதில் பங்கெடுத்துக் கொள்ளச் செய்து நீங்கள் கற்றுக் கொடுக்கிற பிரகாரமே சரியாகச் செய்யும்படியாக வைத்துவிடுங்கள்.

1. **சப்தமான குரலோடு தேவனைத் துதித்தல்**
   “நாம் பாடும் போது என் உதடுகளும் நீர் மீட்டுக் கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும். நாள்தோறும் என் நாவு உமது நீதியைக் கொண்டாடும்.” (சங் 71:23,24) “கர்த்தாவே நான் துதியின் சத்தத்தைத் தொனிக்கப்பண்ணி உமது அதிசயங்களையெல்லாம் விவரிப்பதற்காக” (சங் 26:7). தாவீது எப்பொழுதுமே தேவனைத் துதித்து அதைச் சொல்லிக் கொண்டே இருந்தான். இந்த மாதிரியாகவும், அது போலவே காரியங்களைச் சொல்லுவான். “கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார். என் இருதயம் அவரை நம்பியருக்கிறது. நான் சகாயம் பெற்றேன். ஆகையால் என் இருதயம் களிகூருகிறது. என்பாட்டினால் அவரைத் துதிப்பேன்” (சங் 28:7).

நாம் கர்த்தரை பற்றிச் சொல்லும் பழக்கத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். அவருடைய அதிசயமான கிரியைகளை உயர்த்தி புகழவேண்டும். ஒவ்வொரு நாளையும் தேவனுக்கு துதியைச் சொல்லிக் கொண்டு ஆரம்பிக்கவும். அவரை பார்த்து நீர் எவ்வளவு மகத்துவமும் அதிசயமானவருமாய் இருக்கிறீர். நீங்கள் அவரில் எப்படி அன்பு கூர்ந்து பாராட்டிப் போற்றுகிறீர்கள் என்றும் சொல்லவும். புதிய நாளுக்காக அவருக்கு நன்றி செலுத்தி அந்த நாள் முழுவதும் அவருடைய பிரசன்னம் உங்களோடு இருக்கும் படியாக துதிக்க ஆரம்பிக்கவும். துதியின் பாட்டைப்பாடி தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். உங்களுடைய குரலையும், உங்கள் உதடுகளையும், உங்கள் வாயையும் பயன்படுத்தவும். அவைகளை துதிக்கும் கருவிகளாகச் செய்யுங்கள். நீங்கள் எவ்வளவு சீக்கிரமாகத் துதிக்கும் பழக்கத்தை உண்டாக்கி கொண்டீர்கள் என்பதை அறியும்போது வியப்படைவீர்கள்.

“கர்த்தரை நான் எக்காலத்திலும் துதிப்பேன். அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்” சங் 34:1.

“உம்மைத் தேடுகிற அனைவரும் உமக்குள் மகிழ்ந்து, உமக்குள் சந்தோஷப்படுவார்களாக. உம்முடைய இரட்சிப்பை விரும்புகிறவர்கள் கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக என்று எப்பொழுதும் சொல்வார்களாக” (சங் 40:16).

**2. தேவனை நோக்கி ஆர்ப்பரித்தல்**

முன்னான பகுதியில் நாம் சொன்ன வாய்மொழியாகத் துதித்தல் என்பதற்கு உரையாடலால் ஆன கனபரிமாணம் மாத்திரமே தேவையாக இருக்கிறது. தேவனோடு நாம் சம்பாஷணையாகப் பேசுகிறோம். அவரைக் குறித்து நம்மிடம் இருக்கும் நமது அபிப்பிராயத்தையும், பாராட்டுதலையுங் கூட வெளிப்படுத்திக் கொள்கிறோம. என்னவென்றாலும் தகுதியானதும் வேதாகமத்துப்படி நமது சத்தத்தை உயர்த்தி உண்மையாக தேவனை நோக்கி ஆர்ப்பரிக்கக் கூடிய நேரங்கள் இருக்கவே இருக்கின்றன. தேவனுக்கு “முன்பாகக் கெம்பீர சத்தமாய் ஆர்ப்பரியுங்கள். (சங் 47:1). பழைய கொள்கைகளையுடைய அநேக மக்கள் ஆர்ப்பரித்தலுக்கு அல்லது எந்த விதமான உரத்த சத்தத்தை உண்டாக்குவதற்கு விரோதமாக இருக்கிறார்கள். அவர்கள் அதை கௌரவக் குறைவாக கருதுகிறார்கள். சிலருக்குங்கூட “சத்தம் போடுவதற்கு அவசியமில்லை தேவன் காது கேளாதவர் அல்ல” என்கிறார்கள். அதற்கு நாம் சொல்லக் கூடிய பிரதியுத்தரமாவது “தேவன் பயந்தவருங்கூட அல்ல” என்போம்.

இந்த ஆனந்த சத்தத்திற்கும், ஆர்ப்பரிப்புக்கும் நேரமும் இடமும் உண்டு. நேரம் வரும்பொழுது நாம் அதைச் செய்வதற்கு பயப்படக் கூட வேண்டியதில்லை. “உம்மை நம்புகிறவர்கள் யாவரும் சந்தோஷித்து எந்நாளும் கெம்பீரிப்பார்களாக”. (சங் 5:11).

“நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூறுங்கள் செம்மையான இருதயமுள்ளவர்களே நீங்கள் எல்லாரும் ஆனந்த முழுக்கமிடுங்கள்” (சங் 32:11).

“என் நீதி விளங்க விரும்புகிறவர்கள் கெம்பீரித்து மகிழக்கடவர்கள்” (சங் 35:27).

உம்முடைய ஆசாரியர்கள் நீதியைத் தரித்து உம்முடைய பரிசுத்தவான்கள் கெம்பீரிப்பார்களாக” அதிலுள்ள பரிசுத்தவான்கள் கெம்பீரிப்பார்களாக” (சங் 132:9,16).

“சீயோனில் வாசமாயிருக்கிறவளே, நீ சத்தமிட்டு கெம்பீரி. இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவராய் இருக்கிறார்” ஏசாயா 12:6.

“சீயோன் குமாரத்தியே, கெம்பீரித்துப்பாடு, இஸ்ரவேலரே ஆர்ப்பரியுங்கள். எருசலேம் குமாரத்தியே நீ முழு இருதயத்தோடும் மகிழ்ந்து களிகூரு” (செப் 3:14).

“அப்பொழுது கர்த்தருடைய மகிமை சகல ஜனங்களுக்கும் காணப்பட்டது. ஜனங்களெல்லாரும் அதைக் கண்டபோது ஆரவாரித்து முகங்குப்புற விழுந்தார்கள்” (லேவி 9:23,24).

“கர்த்தருடைய உடன் படிக்கைப் பெட்டி பாளயத்திலே வருகிற போது இஸ்ரவேலரெல்லாரும் பூமி அதிரத்தக்கதாக மகா ஆர்ப்பரிப்பாய் சத்தமிட்டார்கள்” (1சாமு 4:5).

3. (பாட்டுகளைப்) பாடுவது :

"ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதி முன் வாருங்கள்" (சங் 100:2). தேவனுடைய ஆச்சரியங்களைப் பற்றி பாடுவது எளிமையான காரியங்களில் ஒன்றாகவும், இயல்பானதும் சிறந்ததுமான பிரதியுத்தரமாகும். அது ஆனந்தமாக உணர்வுகளின் தன்னியல்பான வெளிப்படுத்துதல் ஆகும். இது தேவ ஜனங்களின் மத்தியில் நியாயமான வெளிபடுத்திக் காட்டுவதாக எப்பொழுதும் இருக்கிறது. எகிப்பதிலிருந்து புறப்பட்டு வந்த பிறகு தேவன் அவர்களை சிவந்த சமுத்திரத்தின் வழியாக பத்திரமாக கொண்டு வந்த பொழுது மிரியாம் இஸ்ரவேல் புத்திரரை தங்களுடைய சத்துருக்களின் கையிலிருந்து ஆச்சரியமாக பாதுகாத்துக் கொண்டு வந்த தேவனுக்குத் துதிகள் பாடிவரும் படியாக நடத்திச் சென்றாள். "மிரியாம் அவர்களுக்குப் பிரதிவசனமாக "கர்த்தரைப் பாடுங்கள். அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார். குதிரையையும், குதிரை வீரனையும் கடலிலே தள்ளினார்" என்று பாடினாள். (யாத் 15:21).

<u>வேதாகமம் முழுவதிலுமே பாடல்களைப் பாடினதற்கான அநேக ஒத்து வசன பகுதிகளைக் காண்கிறோம். இங்கே அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம்.</u>

"நான் கர்த்தரைப் பாடி இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணுவேன்" (நியா 5:3).

"அவரைப் பாடி, அவரைக் கீர்த்தனம் பண்ணி, அவருடைய அதிசயங்களையெல்லாம் தியானித்து பேசுங்கள்" (1நாளா 16:9).

"பின்பு எசேக்கியா ராஜாவும், பிரபுக்களும் லேவியரை நோக்கி நீங்கள் தாவீதும், ஞானதிருஷ்டிக்காரனாகிய ஆசாபும் பாடின வார்த்தைகளினால் கர்த்தரைத் துதியுங்கள் என்றார்கள். அப்பொழுது மகிழ்ச்சியோடே துதி செய்து தலைகுனிந்து பணிந்து கொண்டார்கள்" (2நாளா 29:30).

"நான் கர்த்தரை அவர் நீதியின் படித்துதித்து உன்னதமான கர்த்தருடைய நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவேன். (சங் 7:17).

"சீயோனில் வாசமாயிருக்கிற கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணி அவர் செய்கைகளை ஜனங்களுக்குள்ளே அறிவியுங்கள்" (சங் 9:11).

"கர்த்தர் எனக்கு நன்மை செய்தபடியால் அவரைப் பாடுவேன்" (சங் 13:6).

"கர்த்தாவே உம்முடைய பலத்திலே நீர் எழுந்தருளும். அப்பொழுது உம்முடைய வல்லமையைப் பாடிக் கீர்த்தனம் பணணுவோம்" (சங் 21:13).

"கர்த்தரைப் பாடி அவரைக் கீர்த்தனம் பண்ணுவேன்" (சங் 27:6).

"கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவரைக் கீர்த்தனம் பண்ணி, அவருடைய பரிசுத்தத்தின் நினைவு கூருதலைக் கொண்டாடுங்கள்" (சங் 30:4).

"தேவனைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள், நம்முடைய ராஜாவைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள், தேவன் பூமியனைத்திற்கும் ராஜா, கருத்துடனே அவரைப் போற்றிப் பாடுங்கள்" (சங் 47:6,7).

"என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது. தேவனே என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது. நான் பாடிக் கீர்த்தனம் பண்ணுவேன்" (சங் 57:7).

"நானோ உம்முடைய வல்லமையைப் பாடி, காலையிலே உம்முடைய கிருபையை மகிழ்ச்சியோடு புகழுவேன், எனக்கு நெருக்கமுண்டான நாளிலே நீர் எனக்குத் தஞ்சமும் உயர்ந்த அடைக்கலமுமானீர். என் பெலனே உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன். தேவன் எனக்கு உயர்ந்த அடைக்கலமும் கிருபையுள்ள என் தேவனுமாயிருக்கிறார். (சங் 59:16,17).

"இப்படியே தினமும் என் பொருத்தனைகளை நாம் செலுத்தும் படியாக உமது நாமத்தை என்றைக்கும் கீர்த்தனம் பண்ணுவேன்." (சங் 61:8).

மேலும் இன்னும் தேவனை நோக்கித் துதிகளைப் பாடும் மற்ற ஒத்து வாக்கியங்களும் இருக்கின்றன. ஆனால் இவைகள் பாடுவதன் முக்கியத்துவத்தை பற்றி கொஞ்சம் கருத்துத் தெரிவிக்கப்

போதுமானவைகள். பாடல்களைப் பாடுவது, மகிழ்ச்சிக்கும் திருப்திக்கும் ஒரு அடையாளமாகும். அது மகிழ்ச்சியின் அடையாளமாக ஒருவருடைய ஜீவியத்தின் பாரத்தைக் குறித்த திருப்தியை சுட்டிக்காட்டுவது ஆகும். அது ஆரோக்கதியமானதோர் வெளிப்படுத்திக் காட்டுவதான நேரடியான உணர்ச்சிப் பூர்வமானதாகும். இது முழு ஆள்தன்மைக்கும் பலத்தைக் கொடுத்து கிரியை செய்கிறது. தேவன் தாமே நாம் அவர் துதிகளைப் பாடுவதில் மகிழ்ச்சி அடைகிறார்.

## பலதரப்பட்ட பாட்டுகள்

எபேசியர் 5:19; கொலோ 3:16ல் சங்கீதங்களையும், ஞானப்பாட்டுகளையும், ஆவிக்குரிய பாட்டுகளையும் கர்த்தருக்ககுப் பாடும்படியாக ஆலோசனை கூறுகிறது.

சங்கீதங்களில் பாட்டுகளால் ஆராதிப்பதற்காக அபரிமிதமான விஷயங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பழைய பாரம்பரிய பாடல்களில் இருந்து நவீனமான பல்லவிகள் அவற்றிலிருந்து நேரடியாக எடுக்கப்பட்வைகளை நமக்குத் தருகிறது.

ஞானப்பாட்டுகளும் மகத்தான பொருள் கருத்துத் தலைப்புகளைக் கொடுத்து திருச்சபையை உற்சாகப்படுத்தவும் அவருக்கு துதியின் கீதங்களையும் தந்து உதவுகிறது. ஆவிக்குரிய பாட்டுகள் முன்னர் கூறப்பட்ட இந்த இரண்டு விதமான பாடல்களிலிருந்து ஏதோ ஒருவிதத்தில் வித்தியாசமானதாகும். இவைகள் பரிசுத்த ஆவியானவரால் நேரடியாக அருளிச் செய்யப்படும் பாட்டுகள் ஆவியானவரால், வார்த்தையும், இராகமும் ஆகிய இரண்டும் தரப்படும் பொழுது இயல்பாகவே தனிப்பட்ட விதத்தில் பாடப்படுவதாகும். இந்த பாட்டுகள் பாடுகிறவர்களின் சொந்த பாஷைகளில் இருக்கலாம். அப்படியென்றால், அந்த பாடும் நபரின் சிந்தனையானது “கனியற்றதாகும்” (1கொரி 14:14). என்ன பாடப்படுகிறதென்பதைப் பற்றி சிந்தனைக்கு இயற்கையான கருத்தொன்றும் கிடையாது. ஆனாலும் அதே சமயத்தில் உள்ளுணர்வாக ஆவிதான் துதித்து தேவனை மகிமைப்படுத்துகிறதென்று அறிந்து கொள்ளலாம். அதுவும் அடிக்கடி தூதர் பாஷைகளில் பேசி தேவனை மகிமைப்படுத்துகிறார்கள் என்று அறிந்து கொள்ளுவார்கள். இந்த இரண்டு காரியங்களிலும் பாட்டுகள் தன்னியல்புள்ளவைகளாக திட்டமிடப்படுவதில்லை. அந்த பாட்டுகள் விசுவாசத்தினால் இசைத்துப் பாடப்படும். அந்த பாடுகிறவர் தனது சொந்த ஆவியில் தேவனுடைய ஆவியானவருக்கு செவிகொடுத்து கவனித்துக் கேட்டு முழு நம்பிக்கையுடனும் பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்படும் இராகத்திலும், வார்த்தைகளிலுமே பாடுகிறார்.

## துதியின் மூலம் காணப்படும் மெய்ப்பாடுகள்

வாய் மொழியான, கேட்கக்கூடிய துதியின் வெளிப்படுத்தும் வகைகளாக வேதத்தில் நாம் மெய்பாடுகளை வெளிப்படுத்தி தேவனை ஆராதிப்பதற்கான பல வழிமுறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

1. <u>நின்றுகொண்டு</u> : நேராக நிமிர்ந்து நிற்பது எப்பொழுதும் மரியாதை செய்வதற்கு அடையாளமாகும். ஒரு பிரமுகர் ஒரு அறைக்குள் பிரவேசித்தால், அங்கு குழுமியிருப்பவர்கள் எழுந்து நின்று அந்த நபருக்கு மரியாதை செய்து காண்பிப்பார்கள். அப்படியே பரிசுத்த ஆவியானவரும் நம்மை அடிக்கடி தூண்டி எழுப்பி கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டு ஆராதிக்கும் செயலாகவும், பக்தியாகவும் நிற்கும் படி செய்கிறார். “பூமியெல்லாம் கர்த்தருக்குப் பயப்படுவதாக. உலகத்திலுள்ள குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக” (சங் 33:8).

2. <u>கைகளை உயர்த்துதல்</u> : கைகளை உயர்த்துதல் சரணடைவதற்கு பொதுவான அடையாளமாகும். கர்த்தருக்கு முன்பாக நமது கைகளை உயரமாக உயர்த்தும் பொழுது நாம் அவருக்கு முற்றிலுமாக சரணடைந்து இருக்கிறோம் என்பதை ஒப்புக் கொள்ளுகிறோம். நாம் மறுபடியும் எந்தவிதமான நிபந்தனையுமின்றி அவருடையவர்கள் என்றும் கூறுகிறோம். அவருக்கு விரோதமாக கலகம் செய்ய நமக்கு வாஞ்சை எதுவுமில்லை. அவருக்கு விரோதமாக போர் செய்ய நம்முடைய கரங்களில் போராயுதங்கள் ஒன்றும் இல்லை. அவருக்கு முழுவதுமாகவும், முற்றலுமாகவும் சரணடையாதவர்கள் இதை செய்வதில் அது சாதாரணமான ஒரு சுலபமான காரியமாகத் தோன்றினாலும், பிரச்சனையை உடையவர்களாய் இருப்பார்கள். என்னவென்றாலும் ஒரு தரம் அதைச் செய்து விட்டால் மகத்தான விடுவிப்பு வருகிறது. அவர்கள்

அடிக்கடி துதியை வெளியில் எடுத்துக்காட்ட அதை அடிக்கடி வேறு வழிகளிலும் அவர்களால் செய்ய முடியும். உங்கள் கைகளை பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுத்து கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்" (சங் 134:2). மேலும் இது கர்த்தர் மேல் வைத்திருக்கும் ஆழமான வாஞ்சையான ஏங்குதலுக்கும் அடையாளமாகும். "நாம் உம்மை நோக்கி சத்தமிட்டு உம்முடைய பரிசுத்த சந்நிதிக்கு நேராகக் கையெடுக்கையில் என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டளுரும்" (சங் 28:2.)

அது தேவனுக்காக நமக்கு இருக்கும் ஆவிக்குரிய தாகத்தின் அடையாளமுமாகும். "என் கைகளை உமக்கு நேராக விரிக்கிறேன். வறண்ட நிலத்தைப்போல் என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது." (சங் 143:6).

3. <u>நமது கைகளைத் தட்டுதல்</u> : யாராவது ஒருவர் ஏதோ ஒரு காரியத்தை செய்வாரானால், அது நம்முடைய வியப்புணாவையும், ஒப்புக் கொள்ளுதலையும் பெற்று விட்டால், நாம் அவர்கள் அவ்வாறு செய்ததாக நாம் அவர்களை அறிந்து கொள்ளும்படி செய்வதற்காக நாம் அடிக்கடி நமது கரங்களை ஒன்று சேர்த்து வைத்துத் தட்டுகிறோம். ஒருவேளை ஒரு இசை நிகழ்ச்சியின் போது ஒரு பியானோ வாசிப்பவர் உண்மையாகவே ஒரு அழகிய சங்கீதப்பகுதியை வாசித்து அதை நிகழ்ச்சியைக் காண வந்திருப்பவர்கள் அதை மகிழ்ந்து ரசித்தாலும், அவர்கள் தங்களுக்கே இயல்பான கரவோசையில் மகிழ்நது பாடுவார்கள். அவர்கள் தங்கள் ஒப்புதலை வெளிப்படுத்த விரும்பினாலும் அதற்கும் அதிகமாகத் தெரிவதற்காக அவர்கள் எழுந்து நின்று கரவொலி எழுப்புவார்கள். அதை நாம் நின்று இடைவிடாத கரவொலி என்கிறோம். தேவன் அதியமானவராக பல மகிமையான கிரியைகளைச் செய்து அவைகள் நமது வியப்புணர்ச்சியையும், ஒப்புக் கொள்ளுதலையும் பெறுமானால் நாமும் அவருக்கு ஆரவார கரஒலியால் பாராட்டுவது வினோதமாக இருக்கும் அல்லவா? நாம் தேவனை நோக்கி நமது கைகளைத் தட்டுமாறு கட்டளை பெற்றிருக்கிறோம். அது மகிழ்ச்சியில் களிகூருதலாக ஏற்றுக் கொள்வதாகும்".

4. <u>தலைகுனிந்து பணிதல் அல்லது முழந்தாழ்படியிடுதல்</u> : அடிக்கடி ஜனங்கள் தங்களுக்கு தேவ பிரசன்னத்தின் நிறைவான நிறைவில் மேற்கொள்ளப்பட்டு அந்த மகிமையிலும் அவர்கள் தன்னியல்பாகவே அவர்கள் முழுங்கால்களில் வீழ்ந்து தேவனுக்கு முன்பாக தலைகுனிந்து வணங்குவார்கள். அது பயபக்திக்கும், மரியாதைக்குமான சமிக்கையாகும் "நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக் கடவோம் வாருங்கள் (சங் 95:6).
ஒரு நாள் ஒவ்வொருவருடைய முழங்காலும் "அவருக்கு முன்பாக முடங்கும்" (பிலிப் 2:10).

5. <u>தேவனுக்கு முன்பாக சாஷ்டாங்கமாய் விழுந்து பணிதல்</u> : இங்கே ஒரு வரம்புக்கு மீறியதோர் வடிவமான, பணிந்து, வளைந்து, குனிந்து வணங்குதலும், ஆராதனை செய்தலும் ஒருவருக்கு முன்னால் விழுந்து படுத்து வணங்குதல் ஒரு ஆழமான பயபக்திக்கு அடையாளமாகும். அதாவது ஒருவர் தன்னைத் தாழ்த்தி நாம் சாஷ்டாங்கமாய் பணிகிற ஒருவரை உயர்த்தும் உணர்வை அதிகரிக்கச் செய்வதாகும்.

6. <u>நடனமாடுதல்</u> : ஏனென்றால் நடனமாடுதல் மிகவும் உயர்வாக பகிரங்கமாகக் காட்டுதலும் மேலும் உணர்ச்சி வடிவமான துதித்தலுமே. இது அநேகமான விமரிசனத்தையும் எதிர்ப்பையுங்கூட சந்தித்திருக்கிறது. அதுவும் பழமைவாதிகளிடமிருந்து பெற்றுள்ளது. இநத சர்ச்சையின் காரணமாக நான் இந்தத் துதியின் அம்சத்தைக் குறித்துச் சொல்ல அதிகமான இடத்தைக் (பக்கங்களைக்) கொடுத்திருக்கிறேன்.

நடனமாடுதலில் சரீரம் முழுவதுமே மகிழ்ச்சி, துதி, ஆராதனை இவற்றை கர்த்தருக்கு முன்பாக வெளிக்கு எடுத்துக் காட்டுவதற்காக, பயன்படுத்துவதில் சம்பந்தப்படுகிறது. நடனமாடுதல் என்ற வார்த்தை எபிரேய கிரேக்க மொழிகளில் மொழி பெயர்ப்புச் செய்யும் பொழுது பலதரப்பட்ட அர்த்தங்களாக, குதித்தல், துள்ளுதல், காலை உயர்த்துதல், துள்ளி குதித்தல் ஆகியவைக் கொடுக்கப்படுகின்றன. இந்த மொழி பெயர்ப்புகள் ஏதோ தன்னியல்பாக கட்டமைப்புத் தன்மை இல்லாத நடனமாடுதலைச் சுட்டிக்காட்டுகிறது. இந்த விதமான நடனமாடுதல் பொதுவாகக்

குறிப்பிடப்படும் வரையறுக்கப்பட்ட அசைவுகள் இல்லாதவைகளாக அதைவிட எளிதான இயல்பான பிரதியுத்திரங்களான கர்த்தருக்கு முன்பாக களிகூருகிறதாகும்.

இந்த மாதிரியான சம்பவங்கள் அப் 3:8ல் குறிக்கப்பட்டு முன்னாட்களில் முடவனாக இருந்த மனுஷன் "எழுந்து, நடந்து, குதித்துக் கொண்டு தேவனைத் துதித்துக் கொண்டான் என்று சொல்வது சற்று வித்தியாசமான கருத்தில் தற்சமயம் பார்க்கக் கூடும்". இதுவும் குறிப்பாக நாம் நினைத்துப் பார்க்கும் பொழுது நடனமாடுதல் என்பது, முழுமையான பாகமாக எப்பொழுதும் இஸ்ரவேல் புத்திரரின் ஆராதனையில் பங்கு கொண்டிருந்தது என்பது விளங்கும். அவருடைய நாமத்தை நடனத்தோடே துதித்து (சங் 149:3) தம்புரோடும், நடனத்தோடும் அவரைத் துதியுங்கள். (சங் 150:4).

## இரட்சிப்பையும், மீட்பையும் பற்றிக் கொண்டாடுவதற்கு வேதாகமத்திலிருந்து நடனமாடுதலான சில சம்பவங்கள்

"ஆரோனின் சகோதரியாகிய மிரியாம் என்னும் தீர்க்கதரிசியானவளும் தன் கையிலே தம்புரை எடுத்துக் கொண்டாள். சகல ஸ்திரீகளும் தம்புருகளோடும் நடனத்தோடும், அவளுக்குப் பின்னே புறப்பட்டு போனார்கள். (யாத் 15:20).

யெப்தா மிஸ்பாவிலிருக்கிற தன் வீட்டுக்கு வருகிறபோது இதோ அவன் குமாரத்தி தம்புரு வாசித்து நடனஞ் செய்து அவனுக்கு எதிர் கொண்டு வந்தாள் (நியாதி 11:34).

மீகாள் பலகணிவழியாய் பார்த்து தாவீது இராஜா ஆடிபாடி வருகிறதைக் கண்டாள். (1நாளா 15:29).

திரும்ப வருவதான மகிமையான சிறையிருப்பிலிருந்து திரும்புவதைக் குறித்து எரேமியா முன்னுரைத்தபோது, "அப்பொழுது கன்னிகைகளும், வாலிபரும், முதியயோருங்கூட ஆனந்தக் களிப்பாய் மகிழுவார்கள். நான் அவர்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றி அவர்களைத் தேற்றி, அவர்கள் சஞ்சலம் நீங்க அவர்களைச் சந்தோஷப்படுத்துவேன்" (எரேமியா 31:13).

புலம்பல் 5:15ன் பிரகாரம் அவர்கள் சிறைபட்டு போன பிறகு அவர்கள் நடனகளிப்புத் துக்கமாய் மாறிற்று. எரேமியா 31:13ன் படி சிறையிருப்பிலிருந்து அவர்கள் திரும்பவும் கொண்டு வரப்பட்ட பொழுது, அவர்களுடைய நடனக்களிப்பும் திரும்பவும் வந்தது என்று பார்க்கிறோம்.

யோவேல் 1:12 வறட்சியும் சாரமற்ற தன்மையும் தேவனுடைய ஜனங்கள் மேல் வந்த பொழுது, "சந்தோஷம் மனுபுத்திரரை விட்டு ஒழிந்து போயிற்று".

"ஆனந்த களிப்பும், நகைப்பும் சிறையிருப்பிலிருந்து திரும்பும் மக்களுடன் உடன் வந்தது புறஜாதிகளுக்குள் ஒரு சாட்சியாக இருந்தது", "கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார். இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்" (சங் 126:3).

## புதிய ஏற்பாட்டில் நடனமாடுதல்

இன்றைய நாட்களில் திருச்சபையில் நடனமாடுவதைக் குறித்து அதை எதிர்ப்பவர்களால் அது ஒரு பழைய ஏற்பாட்டு நடப்புகள் என்றும், அதனால் அதற்கு புதிய ஏற்பாட்டுத் திருச்சபையில் அதற்கு இடமில்லை என்றும் விவாதிக்கப்படுகிறது. என்னவென்றாலும் புதிய ஏற்பாட்டை வாசிக்கும் பொழுது இதற்கான வார்த்தையும் அங்கு இருக்கிறதென்பது கண்கூடு. இயேசு சொன்னதாவது, "அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டு களிகூருங்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாய் இருக்கும்" (லூக்கா 6:23).

சந்தோஷம் என்பதற்கு புதிய ஏற்பாட்டில் அடிக்கடி காணப்படும் வார்த்தையானது, 'agalliao' என்பதாகும். அதற்கு அர்த்தமாவது, சாதாரண வழக்கில் "ஆனந்தத்தால் குதித்தல்" என்பதாகும். இது ஒரு வகையான ஆழமான உள்ளார்ந்த களிப்பல்ல, அதைவிட சக்திவாய்ந்த உணர்ச்சிபூர்வமான அதீதமான களிப்பை வெளிப்படுத்துவதாய் சாதாரணமான வழக்குப்படி "சந்தோஷமான குதிப்பதை" ஒருவர் செய்யும்படியாக தூண்டப்படுவதாகும். புதிய ஏற்பாட்டு வேதாகமப் பகுதியில் இது காணப்படும் சில இடங்களைக் குறிக்கின்றது.

"அந்த வேளையிலே இயேசு ஆவியிலே களிகூர்ந்து" (agalliao) (லூக்கா 10:21).

அப்பொழுது மரியாள், "என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது" என்று சொன்னாள். (லூக்கா 1:46,47).

பின்பு அந்த சிறைச்சாலைக்காரன், "தன் வீட்டார் அனைவரோடுங்கூட தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி (agalliao) மன மகிழ்ச்சியாய் இருந்தான் (அப் 16:34).

"அவரிடத்தில் விசுவாசம் வைத்து சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய் களிகூர்ந்து" (1பேதுரு 1:3-7).

ஆகவே, புதிய ஏற்பாட்டின் கடைசி பகுதியில் நாம் எதிர்கொண்டு சந்திக்கும் புத்திமதியாவது, "நாம் சந்தோஷப்பட்டு களிகூர்ந்து (agalliao மகிழ்ச்சியால் குதித்து) அவருக்குத் துதி செலுத்தக் கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள்" (வெளி 19:7).

அந்த ஊதாரி மகன் தன்னுடைய தகப்பனாரிடம் திரும்பி வந்த பொழுது கீத வாத்தியத்தையும் நடனக் களிப்பையும் கேட்டான் (லூக்கா 15:25).

தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்ட எல்லாக் காரியங்களும் திரும்ப வந்து நிறைவேறும் பொழுது அங்கே கட்டாயமாக நடனம் இருக்கும். ஏனென்றால் தீர்க்கத்தரிசிகளால் உறுதியாகப் பேசப்பட்ட காரியங்களில் ஒன்றாகும் (எரேமியா 31:13).

## வேதாகமத்துப்படி நடனமாடுதலின் சில சிறப்பியல்புகள்

a. இது ஒரு இயல்பான ஆதிமனிதன் காலத்து நாகரிகமில்லாத பாணியான நடனமாகும் உயர்ந்த கட்டுக் கோப்பின்றி அப்பியாசமும் கூர்மையான வழியும் இல்லாதது. அது குதித்தும், குதித்தெழுந்தும், தாவியோடியும் சுழன்று சுழன்று ஆடுவதும் ஆகும். அது சில சமயங்களில் இசைக் கருவிகளோடு இணைந்தே செயல்படுவதும் உண்டு. (1நாளா 15:29; சங் 149:3).

b. அது ஒரு தனிநபராலோ அல்லது கூட்டமான குழுவினாலோ அப்பியாசிக்கப்படும். தாவீது கர்த்தருக்கு முன்பாக ஆடிப்பாடினான். மிரியாமும், சகல ஸ்திரீகளும் நடனமாடினார்கள்.

c. இது எதிர்பாலின தனிநபர்களோடு நடனமாடுவதல்ல. மிரியாமும் சகல ஸ்திரீகளும் நடனமாடினாார்கள். யாத் 15:21. வாலிபரும், முதியோரும் இணைந்து ஆடினார்கள். (எரேமியா 31:13).

d. அதற்கென்று வயது வரம்பு கிடையாது. வாலிபரும், முதியோரும் சேர்ந்து ஆடினார்கள்.

e. பாட்டும், நடனமும் அடிக்கடி ஒருங்கிணைந்து போகும். "சவுல் கொன்றது ஆயிரம் தாவீது கொன்றது பதினாயிரம் என்று இந்த தாவீதைக் குறித்து அல்லவோ ஆடிப்பாடிச் சொன்னார்கள் என்றான்" (1சாமு 29:5).

f. ஆட ஒரு சரியான காலமுண்டு. "புலம்ப ஒரு காலமுண்டு நடனம் பண்ண ஒரு காலமுண்டு" (பிரசங்கி 3:4).

g. தேவன் நடனமாடுவதைத் திரும்பக் கொண்டுவரப்படும் என்று முன்னுரைத்தார்.
ஆடல் பாடல்கள் செய்கிறவர்களின் களிபுள்ள கூட்டத்தோடே புறப்படுவாய் (எரேமிய 31:4).
அப்பொழுது கன்னிகைகளும், ஆனந்த களிப்பாய் மகிழுவார்கள். (எரேமியா 31:13).

**எச்சரிக்கை!!!**

மாம்ச இச்சையோடு கூடிய நடனம் பின் வாங்கிப் போகுதல், விக்கிரக ஆராதனை, விபச்சாரம், பிரபஞ்சத்து லௌகீகம் அவைகளுடன் இணைந்து பேசப்படுகின்றது. (உ.ம்) யாத் 32:19, பொற்கன்றுக் குட்டியைச் சுற்றி நடனமாடினார்கள்.

சாத்தானானவன் ஒவ்வொன்றிற்கும் மாயையான போலித்தனத்தை வைத்திருப்பான். போலித் தன்மையானது, மெய்யான நிஜத்தையும், அசலின் மெய்மையும் ஆதாரப்படுத்தி, சாத்தான் எதோ ஒன்றை மாயையான போலியாக்குவான் என்பதற்காக நாம் நிஜத்தை அப்பியாசிக்கக்கூடாது என்பதல்ல.

7. **<u>இசைக்கருவிகள்</u>** : வேதாகமத்தில் துதியையும், ஆராதனையையும் சொல்லுவதற்கு சங்கீத வாத்தியங்கள் அடிக்கடி உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இன்றைய நாட்களில் அவைகள் ஆராதனையில் முக்கியமான பங்கை எடுத்துக் கொள்ள முடியும். “எக்காள தொனியோடே அவரைத் துதியுங்கள் வீணையோடும், சுரமண்டலத்ததோடும் அவரைத் துதியுங்கள். தம்புரோடும், நடனத்தோடும் அவரைத் துதியுங்கள். யாழோடும், தீங்குழலோடும் அவரைத் துதியங்கள் ஓசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள். பேரோசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள்” இவ்வாறு துதிக்கும் படியாக நமக்குக் கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது. (சங் 150:3,5).

தங்கள் சங்கீதக் கருவிகளினால் துதியைச் செலுத்தக்கூடிய இசைக்கலைஞர்கள் அவ்வாறு செய்வதில் அவர்கள் சிறந்தவர்களாக மிஞ்சியவர்களாக இருக்க முயற்சிக்க வேண்டும். அவர்கள் திறமையாக வாசிக்க தங்கள் வாத்தியங்களில் தங்களை ஒருமுகப்படுத்தி கொள்ள வேண்டும். இதற்காக சரியாக கூர்மையான படியாக வாசிக்க வேண்டும் என்பது அவசியமல்ல. இது மனித திறமையைக் கொண்டு மனிதத் திறமையால் செலுத்தப்படுவதல்ல. அது ஆவிக்குரிய திறன்பாடாக இயற்கையான தாலந்தைவிட மிஞ்சியதாகும். இதற்கான திறமையாவது, திறமையாக சங்கீதக் கருவியை இசைப்பது மட்டுமல்ல, ஆவியின் மனப்போக்கையும் வியாக்கியானம் செய்வதாகும். இதை “ஆவியினால் இசைப்பது” என்று அழைக்கிறோம்.

a. தாவீது சுரமண்டலத்தில் வாசிப்பதில் கை தேர்ந்தவனாக இருந்தான். சவுலிடமிருந்து அந்த பொல்லாத ஆவியை விரட்டினான். 1சாமு 16:23.

b. இசைக்கலைஞர்கள் ஆவிக்குரிய வரங்கள் கிரியை செய்வதற்கான சூழ்நிலையை உண்டாக்கக் கூடும்.

c. 4000 இசைக்கலைஞர்கள் தங்கள் வாத்தியங்களை இசைத்து சாலோமோனுடைய ஆலயப்பிரதிஷ்டையின் போது வாசித்தார்கள். (1நாளா 23:5). அல்லாமலும், பெருவெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும் ஒரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப் போலிருந்தது. அவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாக புதுப்பாட்டைப் பாடினார்கள். (வெளி 14:2,3).

8. **<u>மௌனம்</u>** : பாட்டு பாடுவதினாலும் இசைக்கருவிகளாலும், நடனமாடுதலினாலும் உண்டாகும் சப்தங்களுக்கு முற்றிலும் வித்தியாசமாக அமைதியாகத் துதியை வெளிப்படுத்துவது ஆகும். “மவுனமாயிருக்க ஒரு காலமுண்டு” (பிரசங்கி 3:7). மவுனமாயிருப்பதைக் குறித்து பயப்படவேண்டாம். சில சமயங்களில் பரிசுத்த ஆவியானவர் கூடிவரும் சபையின் மேல் பரிசுத்தமான அமைதியைக் கொண்டு வருவார். இந்தப்படியான காலங்களில் மவுனமானது, ஆழமானதாகவும் வாக்கு வன்மையுடையதாகவும் ஆகிறது. அந்த மாதிரி சமயங்களில் அடிக்கடி மகத்தான வியப்புணர்வும், பயபக்தியும் உண்டாகும். ஒருவர் எழுந்து நிற்கவோ அல்லது உட்கார்ந்தோ தேவனுக்கு முன்பாக மௌனமாக அமர்ந்திருந்து மனதிற்குள் தியானித்தும் போற்றியும் ஆராதிக்கவும் செய்யலாம். “நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள். (சங் 46:10).

9. **அழுகையோடு** : இந்த அழுகையும் தேவனை துதிப்பதற்கு நியாயமான பிரதியுத்தரமாகும். இது துக்கத்தினாலோ அல்லது மனவேதனையால் உண்டாவதல்ல, நன்றியறிதலும், நன்றி செலுத்துவதால் உண்டாகும். சில சமயங்களில் நாம் தேவனுடைய மகத்துவத்தையும் அவர் நல்லவர் என்பது பற்றியும் நாம் தியானம் செய்யும்பொழுது, அவர் நல்லவர் என்பதற்கு தகுதியான ஒரே பிரதியுத்தரமானது, அதற்காக நன்றியறிதலான கண்ணீரை விடுவதாகும்.

இதை செய்வதற்காகப் பயப்படவேண்டாம். இது பலவீனத்திற்கான அறிகுறி அல்ல. கண்ணீர் துளிகளாக வெளியே வரட்டும். நமது மனுஷீகமான எதிர் கிரியையாவது, கண்ணீர் விடாமல் இருப்பது தான். என்னவென்றாலும் கண்ணீர் விடுவதாவது, சில சமயங்களில் நமது முழு ஆள்தன்மையின் ஆழமான ஏக்கமாக அமைந்து எதுவும் அதை மிஞ்சக்கூடாத அளவில் வெளிப்படுத்திக் காட்டக் கூடும். இது அடிக்கடி ஆழமாதோர் விடுதலையைக் கொண்டு வருகிறது.

ஒருவர் அளவுக்கு மிஞ்சிய அழுகைக்கு இடம் தரக்கூடாது. ஏனென்றால், அது உள்ளான மனுஷனில் ஏதோ தவறு என்பதற்கு கூட அடையாளமாகக் கூடும். மேலும் அந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் உள்ளான மனுஷன் சொஸ்தம் அடைய வேண்டியதாகிறது. நெகேமியா தேவனுடைய வார்த்தையைப் படித்து விளக்கம் சொன்னபொழுது, ஜனங்கள் அதைக் கேட்டபொழுது அழுதார்கள். நெகேமியா அவர்களை ஒரு சிறிது நேரம் அழும்படியாக அனுமதித்தான். ஆனால் பின்னர் அவன் அவர்களுடைய அழுகையைத் தடைசெய்து அவர்களுக்கு அறிவுரை கொடுத்தான். இந்த நாள் உங்களுடைய தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமான நாள். நீங்கள் துக்கப்படவும், அழவும் வேண்டாம். நீங்கள் போய் கொழுமையானதைப் புசித்து, மதுரமானதைக் குடித்து, ஒன்றுமில்லாதவர்களுக்கு பங்குகளை அனுப்புங்கள். கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்றான்" (நெகேமியா 8:10). அதிகமான அழுகை ஒருவரைப் பலவீனப்படுத்தும், ஆனாலும், கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்தே பலத்துக்கு ஊற்றாகும்.

10. <u>நகைப்பு, நகைச்சுவை</u> : ஒருவர் மீது கர்த்தரை நோக்கி சிரிக்க வேணடுமென்ற வாஞ்சை வரும் பொழுது, பரிசுத்தமான சிரிப்பு என்ற ஒன்று இருக்கக் கூடும். யாரோ ஒருவர் கூறிய இது நகைச்சுவையுடைய ஒன்றுக்கு ஏற்படும் பிரதியுத்தரம் அல்ல. இது கர்த்தருக்குள் உச்ச நிலையை அடைந்துள்ள மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் காட்டும் ஒரே வழியானது சிரிப்பின் வழியே மாத்திரம் வெளிப்படுத்த கூடியதாகும்.

இஸ்ரவேல் புத்திரர் தாங்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தபொழுது இந்த அனுபவம் பெற்றார்கள். அப்பொழுது நம்முடைய வாய் நகைப்பினாலும், நம்முடைய நாவு ஆனந்த சத்தத்தினாலும் நிறைந்திருந்தது. (சங் 126:2). இதோ தேவன் உத்தமனை வெறுக்கிறதுமில்லை. பொல்லாதவர்களுக்கு கைகொடுக்கிறதுமில்லை. இனி அவர் உம்முடைய வாயை நகைப்பினாலும், உம்முடைய உதடுகளை கெம்பீரத்தினாலும் நிரப்புவார். (யோபு 8:20,21).

11. <u>அணிவகுத்து முன் செல்லுதல்</u> : தேவன் தம்முடைய ஜனங்களை அடிக்கடி அணிவகுத்து முன்செல்லுமாறு கட்டளையிட்டார். ஒருவேளை நன்கு அறியப்பட்டதான இதற்குரிய சம்பவமாவது, எரிகோவைச் சுற்றி நடந்து வந்ததே. (யோசுவா 6:2-5). இஸ்ரவேலர் தேவன் தங்களுக்குக் கட்டளையிட்ட பிரகாரமாக அணிவகுத்துச் சென்றார்கள். யேகோவா எரிகோவின் மதில்களை கீழே விழுந்து விடும்படியாகச் செய்தார். இன்னுங்கூட அநேக மதிற்சுவர்கள் தேவனுடைய ஜனங்கள் அவருடைய கட்டளையின் படியே அணிவகுத்து வரும்பொழுது கீழே இடிந்து விழுகின்றன. பெருமை, அவநம்பிக்கை ஆவிக்குரிய அடிமைத் தனம் ஆகியவைகளே அந்த சுவர்கள்.

யோசபாத்தும் அவனுடைய சேனைகளும் அணிவகுத்து தேவனுடைய ஆவியின் ஏவுதலின் படியே தேவனுக்கு துதிகளைப் பாடினார்கள். தேவன் அவர்களுடைய சத்துருக்களை அவர்கள் கைகளில் ஒப்புக் கொடுத்து அவர்கள் எண்ணிக்கையில் குறைந்திருந்தபோதுங்கூட அவ்வாறு செய்தார். (2நாளா 20:22). அநேக கூடிவரும் சபைகளும் தேவனுடைய ஆவியின் ஏவுதலின் படியே அணிவகுத்துச் செல்கின்றனர். ஆலயச் சுவர்களை சுற்றி வருவது, இயற்கையான சிந்தனைக்கு நகைப்புக்குரியதாக எரிகோவைச் சுற்றிவந்தது போல தோன்றியிருக்கலாம். ஆனால் அடிக்கடி அதினாலுண்டாகும் விளைவுகள் நாடகம் போன்றதே. அடிமைத் தனம், பெருமை, கசப்பு ஆகிய சுவர்கள் கீழே சாய்ந்து விழுந்து விட்டன. இந்த விதமான அணிவகுப்பு "எரிகோவின் அணிவகுப்பு" என்றழைக்கப்படும். மற்றவர்கள் அதை "மகிமையான அணிவகுப்பு" என்றும் கூறுவார்கள். கிறிஸ்துவின் மணவாட்டியானவள் ஒரு சேனை அணிவகுத்து முன்செல்வதைப் போல காட்சியாக படம் பிடித்து காட்டப்படுகிறாள். (உன் 6:4,10).

12. <u>கர்த்தருக்குள் களிகூருதல்</u> : இது மற்றொரு வழியாக தேவனைத் துதிப்பதாகும். நெகேமியா இராஜாவின் சமூகத்தில் துக்கமுகத்தோடு வந்தபொழுது அந்த இராஜா ஏதோ ஒன்று அசம்பாவிதமாக தவறாக நடந்திருக்கிறது என்பதை அறிந்து கொண்டான். (நெகேமியா 2:1) நெகேமியா சொல்கிறதாவது, "அப்பொழுது இராஜா என்னைப் பார்த்து நீ துக்க முகமாயிருக்கிறதென்ன? உனக்கு வியாதி இல்லையே. இது மனதின் துக்கமே ஒழிய வேறென்றுமில்லை" என்றான்.

அப்பொழுது நெகேமியா மிகவும் பயந்தான். இராஜாவுக்கு முன்னால் துக்கமான முகத்துடன் வருவது அவன் இராஜாவின் சேவையில் சந்தோஷமாக இருக்கவில்லை என்பதைக் காட்டுவதாக இருந்தது. இது ஒரு இராஜாவுக்கு அவமரியாதையாகும். அதை அவன் பொறுத்துக் கொள்ள மாட்டான். அதன் காரணமாகத்தான் நெகேமியா மிகவும் பயந்தான். அவன் வெகுவிரைவாக இதற்கான காரணத்தை அவன் துக்கமுகமாக இருந்ததை விளக்கிக் கூற முற்பட்டான். அது இராஜாவுக்கும் கீழ் பணிபுரிந்த எந்த நிலைமைக்கும் சமபந்தமுடையதல்ல என்று விளக்கினான்.

இராஜாவுக்கு முன்பாக துக்க முகத்தோடும் அதே பாணியில் இருந்தாலும் யாரும் வருவதற்கு தைரியங்கொள்ள மாட்டார்கள். ஆனாலும் அநேகர் கிறிஸ்தவர்கள் இராஜாதி இராஜாவுக்கு முன்பாக துக்கமும் துயரமும் நிறைந்த தன்மையோடு வருகிறார்கள். அவ்வாறு செய்வது தேவனை அவமதிப்பதாகும். நாம் தேவனுடைய ஆளுகையில் நமது ஸ்தானத்தையும், பங்கையும் குறித்து திருப்தி அடையாமல் இருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்டுவதாகும்.

இராஜாவுக்கு முன்பாக சரியான முறையில் வருவது என்றால், களிகூருதலோடு வரவேண்டும். இப்படியாக நாம் அவருக்கு முன்பாக நம்முடைய ஸ்தானத்தில் மகிழ்ச்சியாய் இருப்பதாகவும், (அவருடைய) இராஜாவுடைய ஊழியக்காரராக இருப்பதற்கான கௌரவம் நமக்குத் தரப்பட்டிருக்கிறதால், அதற்காக நன்றிக்கடன் பட்டவர்களாக இருக்கிறோம்! என்பதைக் காட்டிக் கொள்வதுதான். தேவ ஜனங்களுக்கு அடிக்கடி கூறப்படுவதாவது, “உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக களிகூருவீர்களாக” என்பதுவே.

அப்படி காணப்படும் ஓரிடம் உபகமம் 12:11ல் காணப்படுகிறது. உபாகமம் 12:11ல் தேவன் தமது ஜனங்களைச் சந்திப்பதற்காக ஓரிடத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தார். உங்கள் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்து கொள்ளும் ஓரிடம் உண்டாயிருக்ககும். அங்கே நீங்கள் நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் உங்கள் சர்வாங்க தகனங்களையும், உங்கள் பலிகளையும், உங்கள் தசம பாகங்களையும், உங்கள் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், நீங்கள் கர்த்தருக்கு நேர்ந்து கொள்ளும் விசேஷித்த எல்லா பொருத்தனைகளையும் கொண்டு வந்து உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் நீங்களும், உங்கள் வேலைக்காரிகளும், லேவியனும் சந்தோஷப்படுவீகளாக.”

இந்த மாதிரியாக தனது நாமம் விளங்கும் படியாக தெரிந்து கொள்ளும் ஓர் இடத்திற்கு அவரைச் சந்திக்கும்படி வரும்பொழுது நாம் களிகூர்ந்து வர வேண்டும். தாவீது இதைப் புரிந்து கொண்ட பொழுது, “அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசிக்க வேண்டும் என்பதை நன்கு அறிந்திருந்தான்.(சங்.100:4).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பண்டிகைகளை ஆசரித்த பொழுது, அவருக்கு முன்பாக மகிழ்ச்சியோடு ஆசரியுங்கள் என்று அவர்களுக்கு சொல்லப்பட்டது (லேவி.23:40). மகிழ்ச்சியாய் இருப்பதே நன்றி செலுத்துவதற்கும், துதித்தலுக்கும் ஒரு வழியாகும். நாம் ஒருவருக்கு ஒரு வெகுமதியைக் கொடுப்போமானால், அவர்களுடைய மகிழ்ச்சியானது, அவர்களுடைய சந்தோஷத்தையும், பாராட்டுதலையும் காட்டுகிறது.

மேலும் அதோடு கர்த்தருக்கு முன்பாக மகிழ்ச்சியாக இருக்கும் பொழுது அவருக்குள் நமக்கு இருக்கும் அகமகிழ்ச்சியையும், அவரைப் பாராட்டுதலையும் தெரியப்படுத்துகிறோம். அநேக திருச்சபைகளில் பயபக்தி என்பது, பெருமிதமானதும், அமைதியானதும், கலக்கமடையாததும் ஆக இருப்பது மாத்திரமே என்ற கருத்து நாட்டப்பட்டிருப்பது பரிதாபத்துக்குரிய விஷயமாகும். அவர்கள் சந்தோஷத்தையும், களிகூருதலையும் வெளியிடுவது அவமதித்தலுக்கு உச்சகட்டமாகும் என்று உணருவது போலத் தோன்றுகிறது. இதை விட உண்மைக்கு புறம்பானது வேறொனறுமில்லை.

சமுதாயத்தில் கிறிஸ்தவர்களே மகிழ்ச்சியான ஜனங்கள் அவர்களுடைய களிகூர்தல் சகலருக்கும் வெளிப்படையாக இருக்க வேண்டும். திருச்சபையானது அது ஒன்று கூடி வரும்பொழுது அது கொண்டாட்டமாக இருக்க வேண்டும். பிறகு அது அநேகமான மக்களைக் கவர்ந்து இழுத்துக் கொண்டு அது தேவனுடைய உண்மையான தெய்வீகத் தன்மையை மிகவும் விசுவாசத்துடன் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். அதற்கு பதிலாக நவீன காலத்து பல திருச்சபைகள் அவர்களுடைய அன்பற்ற தன்மையாலும், இருண்ட இயல்பினாலும் அடிக்கடி மக்களை துரத்தி விடுகின்றனர். அவைகள் மிகவும் பெருமிதமானதாகவும், பாரமாகவும் இருக்கும். அதன் சூழ்நிலை

இறுக்கமானதாகவும், பாரமாகவும் இருக்கும். மேலும் மக்கள் தங்களை மாய்மாலமாகவும், மதச்சார்புள்ளவர்களாகவும், சுபாவ இயல்பற்றவர்களாகவும் தங்களைக் காட்டிக் கொள்கின்றனர். அப்படி அவர்கள் இருக்கலாகாது. ஆகவே, நாம் கர்த்தருக்கு முன்பாக மகிழ்ச்சியாக இருக்கும் ஆவிக்கே திரும்பவும் போவோமாக.

நமது களிகூருதலை வெளிக்குக் காட்டக் கூடிய பல வழிகள் இருக்கின்னறன. சந்தோஷமான பாட்டுகளைப் பாடுவதும் ஒரு வழியாகும். நமது கைகளை உயர்த்துவதும், கைதட்டுவதும், நடனமாடுவதும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வேறு வழிகள் ஆகும். கர்த்தருக்குள் களிகூருவது, நம்மை தேவனுடைய சந்நிதானத்தில் மேலும் ஓய்வாக இருக்கக் காரணமாகும். அதற்காக நமக்குக் குறைவான ஒழுங்கு முறை சார்ந்ததாகவும் அதிகமான நிஜமானதாகவும் இருப்பது அவசியமாகும். இந்த பிரபஞ்ச உலகமானது, நாம் அதற்கு துக்கத்தை அளிக்காமலே ஏற்கனவே போதுமான சோகம் நிரம்பியதாக இருக்கிறது. ஆகவே, நாம் வெளிச்சம் உண்டாகும்படி பிரகாசம் அடைவோமாக. ஏனென்றால் நாமே உலகத்துக்கு வெளிச்சமாய் இருக்கிறோம்.

புதிய ஏற்பாட்டில் கிரேக்க வார்த்தையான “agalliao” என்பது (முன்பு விவரித்தபடி நடனமாடுதல் என்பதை பார்க்க) களிகூர்ந்து இருக்க என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கு சொல் பிரகாரமாக “சந்தோஷத்தால் குதித்தல்” “அளவுக்கு மீறிய களிகூறுதல்” என்றாகும்.
இங்கே மகிழ்ச்சியின் வெளிப்படுத்துதலானது, சுதந்நதிரமானதும், எவ்வித அடக்கு முறைகள் இன்றியும், இயல்பானதாகவும், தன்னையே வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும். அந்த மகிழ்ச்சியானது, சுதந்திரமுள்ளதாக குழந்தைத்தனமான ஆர்ப்பாட்டத்துடன் நம்மை தாண்டிக் குதித்து பாடி மகிழ்ச்சியடையச் செய்யும்.

## அதிகாரம் ஏழு : ஸ்தோத்திர பலியைக் காணிக்கையாகச் செலுத்துவது

ஆகையால் அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்கு செலுத்தக் கடவோம். (எபி 13:15).

இங்கே தேவனை துதிப்பதற்கும், ஸ்தோத்திர பலியை காணிக்கையாக செலுத்துவதற்கும் இடையே ஒரு குறிப்பிட்ட விசேஷமான வித்தியாசம் இருக்கிறது. ஒரு தேவனுடைய பிள்ளை பிதாவுடன் சரியான உறவுத் தொடர்பில் துதியானது பிரவாகமாகப் பெருகி வரும் வழக்கமான ஏதோ ஒரு காரியமாகும். தேவனைத் துதிப்பதற்கு நமக்கு போதுமானவைகள் இருக்கின்றன. அதற்கென்று நாம் அவரைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் நமது இருதயங்களில் இருந்து இயல்பான துதியின் பிரவாகம் நமது இருதயங்களில் இருந்து பெருகி ஓடவேண்டும். நமது துதி செலுத்துதல் வழக்கமாக நன்றி செலுத்துவதுடன் அவர் நமது ஜீவியத்தில் கொண்டு வந்திருக்கும் நன்மைகளுக்காகவும், ஆசீர்வாதங்களுக்காகவும் நாம் மேலும் தேவனைத் துதித்து ஊழியம் செய்ய வேண்டும்.

இந்த “துதியாகிய பலி” சற்று ஏறக்குறைய வித்தியாசமானது. அது வழக்கமாக சுலபமாகவும், எளிதாகவும் பிரவாகித்து ஓடுவதில்லை. நமக்கு எல்லாக் காரியங்களும் நேர்த்தியாகப் போய் கொண்டிருப்பதால் நாம் செலுத்தும் துதி அல்ல. ஏனென்றால் நாம் சந்தோஷமாகவும், ஆசீர்வதிக்கப்பட்டும் இருக்கிறோம். இந்த துதிகளின் பலியானது நாம் தேவனைத் துதிக்க முடியாமல் போல் இருக்கும் பொழுது நாம் தேவனுக்கு செலுத்தும் பலியாகும்.

ஒவ்வொன்றும் தவறாகப் போவது போல் தோன்றும். உலகம் நம்மை சுற்றி விழுவதுபோல் தோன்றும். இந்த மாதிரியான சூழ்நிலைமைகளில் நாம் விசுவாசத்துடன் தேவனைத் துதிக்கிறோம். நாம் அவருக்குக் கீழ்படிதலுடன் துதி செலுத்துகிறோம். அவர் அவராக இருப்பதற்காக அவரைத் துதிக்கிறோம். குறிப்பாக அவர் நமக்கு செய்தவற்றிற்காக அல்ல. இந்த விதமான துதி சுலபமாக வருவதில்லை. இது ஒரு மலிவான பொருளுமன்று. அது விலையேறப்பெற்றது. ஆனால் அது பிதாவின் இருதயத்திற்கு விசேஷமான மகிழ்ச்சியை கொண்டு வருகிறது. அவரும் அந்த துதியாகிய பலியைப் பெற்றுக் கொள்வதில் பிரியமாக இருக்கிறார்.

1. <u>அது தொடர்ந்து வருவதான துதி</u>
தாவீது இதன் இரகசியத்தைக் கற்றுக் கொண்டான். அவன் சொன்னதாவது, "கர்த்தரை நான் எக்காலத்திலும் துதிப்பேன். அவர் துதி எப்பொழுதும் என் வாயிலிருக்கும்" (சங் 34:1).

இந்த துதியானது, ஒழுங்கான இடைவெளியில் நடப்பதுமல்ல, சரியான வழியில் இருந்து விலகுவதும் ஆகும். அது "நல்ல வெப்ப தட்ப நிலையில்" உண்டாகும் துதி அல்ல. அது மலிவானதல்ல, அதற்காக விலைபெறுவதும் இல்லை. அது உணர்ச்சி பூர்வமான துதியுமல்ல. அது அளவுக்கு மிஞ்சினதாகவோ அல்லது வெறுமையானதுமல்ல. இது ஒரே சீரானது. அது தேவனுக்குத் தொடர்ந்து செலுத்தப்படுவதும் ஆகும். அது நல்ல காலங்களிலும், மோசமான காலங்களிலும், ஒவ்வொன்றும் நேர்த்தியாக இருக்கும் பொழுதும், எதுமே சரியாகப் போய் கொண்டிருந்தது போல தோன்றும் சமயத்திலுங்கூட, "அந்தந்த காலங்களில் கர்த்தர் நமக்கு அருளிச் செய்யும் பொழுதும்" மற்ற காலங்களில் "தேவன் அதை எடுத்துக் கொள்ளும் பொழுதும், கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்" என்று சொல்லும் படியாக இருக்கக் கடவோம். (யோபு 1:21).

குழந்தை மரணமடையும் பொழுதும், அது ஏன் என்று நமக்கு விளங்கிக் கொள்ள முடியாத பொழுதும் அது தேவனைத் துதிப்பதே. வியாதி நம்மைத் தாக்கும் பொழுதும், மருத்துவர்கள் நம்பிக்கை இழந்து கை விட்ட பொழுதும் கர்த்தரைத் துதிப்பதே. உன் வேலையை நீ இழந்து போகும் பொழுதும், நீ பல மைல்களுக்கு அப்பால் எங்கோ இருக்கும் பொழுதும், உன் காரில் ஜாக்கி இல்லாமல் உனது கார் டயர்களில் காற்று இறங்கிப் போன நிலைமையிலும் துதிப்பதே. மேலும் அது வானம் வெண்கலம் போன்று தோன்றும் காலங்களிலும், தேவன் வெகு தொலைவில் மைல்களுக்கு அப்பால் இருப்பது போல் தோன்றும் போதும், உன் ஜெபங்கள் கேட்கப்படாமலும் கொஞ்சங்குறைய பதில் கொடுக்கப்படாமல் இருக்கும் பொழுதும் கர்த்தரைத் துதிப்பதே.

நீ தேவனைத் துதிப்பதற்காக உன்னால் ஒன்றையும் நினைவு படுத்தக் கூடாதிருக்கும் பொழுதும் ஆனால் அவரைத் துதிக்கவும் எப்போதும் போலவே அவரைத் துதிக்கவும் இதுதான் ஸ்தோத்திர பலியாகும்.

உனக்கு ஏதோ ஒரு கஷ்டம் உண்மையாகவே ஏற்படும் பொழுது, அதைச் செய்யும் படியாகத் தேவனுக்கு நீ செலுத்துவதாகும். உன்னுடைய இயல்பான சுபாவ உணர்வுகள் அதற்கு விநோதமாக விவாதம் செய்யும். உன்னுடைய நண்பர்கள் உன்னை ஊக்கம் குறையச் செய்வார்கள். உன் இருதயம் பாரமாக இருக்கும் உன்னுடைய ஒரு துள்ளலும் இருக்காது. நீ எதைப் பெற்றிருக்கிறாய்? எதற்காக நீ தேவனைத் துதிக்க வேண்டும்? என்று பிசாசு சொல்லுவான். மேலும் அவன் சொல்லுகிறதாவது, இந்த மாதிரி சமயத்தில் யாருமே தேவனைத் துதிக்குமாறு எதிர்பார்க்க முடியாது. ஏன்? தேவனுங்கூட உன்னை அதைச் செய்யும் படியாக எதிர்பார்க்க மாட்டடார். இது வெறித் தன்மையுடையதாய் இருக்கும்.

என்னவென்றாலும், உனக்குள் மிகவும் ஆழமாக தேவன் துதிகளுக்குப் பாத்திரர் என்பதை நீ அறிந்திருக்கிறாய். அவர் இன்னும் சிம்மாசனத்திலே வீற்றிருக்கிறார் என்றும் அறிந்திருக்கிறாய். அவர் சர்வ வல்லவர், இந்த அண்ட சராசரத்துக்கும் தேவன், அவர் எந்த முறையிலும் மாறாதவர். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அவருடைய அற்புதமான நாமத்தைத் துதிப்பாயாக.

2. <u>அது கேட்பதற்குத் தெளிவான துதி</u>
இது நமது உதடுகளில் கனியாகும் நமது உதடுகள் வார்த்தைகளை உண்டாகும் அவைகள் நம்முடைய யோசனையான எண்ணங்களை மொழியாக்க உதவுகிறது. ஆகையால் துதிகளின் பலியானது, நாம் சொல்லக்கூடிய ஏதோ ஒன்றாக நாம் சொல்லக்கூடிய தொன்றாகிறது. சாத்தானும் அதைக் கேட்கக்கூடும். நாமுங்கூட நாமே கேட்டுங்கொள்ளலாம். அதிலும் மிகவும் முக்கியமாக தேவனுங்கூட கேட்கக் கூடும்.

இந்தத் துதியின் பலியைத் தான் பவுலும், சீலாவும் அவர்கள் ஆழமான பாதாளச் சிறையில் கட்டப்பட்டிருக்கும் போதுங்கூட நள்ளிரவில் தேவனுக்குச் செலுத்தினார்கள். அவர்கள் இயேசுவைப் பற்றிப் பேசியதற்காக சிறையில் காவலில் போடப்பட்டார்கள். அவர்கள் குற்றவாளிகள் அல்ல. அவர்கள் எந்த விதமான மோசமான குற்றத்தையும் செய்யவில்லை. அவர்கள் தேவனுடைய

இராஜ்ஜியத்தின் நற்செய்தியைப் பரப்பினார்கள். அவர்களுடைய அந்த முயற்சிகளுக்காகக் காவலில் போடப்பட்டார்கள். அவர்கள் பல தழும்புகள் உண்டாகும் படியாக அடிக்கப்பட்டார்கள். அவர்கள் முதுகுகள் திறந்தும், இரத்தம் சிந்தி ஓடியும் இருந்தன. அவர்கள் துன்பத்திலும், வேதனையிலும் இருந்தனர். அவர்களது, காயங்கள் இரணமாக இருந்தது. அவர்களது சரீரத்தில் இருந்த நரம்புகள் அனைத்தும் அலறிக் கொண்டிருந்தன. அவர்களுடைய முதுகில் ஒவ்வொரு அங்குலமும் வேதனையால் நிறைந்திருந்தது. அவர்களுடைய கரங்களும் கால்களும் சுவரோடு சேர்த்து சங்கிலியால் கட்டுண்டு இருந்தது. அவர்கள் எத்தனை எப்படி முயற்சிகள் செய்தாலும் தங்களை சௌகரியமாக ஆக்கிக் கொள்ள அவர்களால் முடியவில்லை.

இப்பொழுது நள்ளிரவு. மனிதனுடைய ஆவியானது, அதன் குறைந்த அடிமட்டத்தில் இருக்கும் காலமிது. அவர்களது ஆவிகளானது சாதாரணமாக மனத்தளர்ச்சியிலும் சோர்வின் ஆழத்திலும் இருக்கும் சமயமாகும். ஒரு கால் அவர்கள் தேவனைத் துதிப்பதற்காக துதிசெலுத்துவதை அந்த நேரத்தை விட எந்த சமயத்திலுமே குறைவென்று நினைத்திருக்க மாட்டார்கள். ஆனால் நள்ளிரவில் தேவனைத் துதித்துப் பாட ஆரம்பித்தார்கள். அவர்கள் தங்கள் வாய்களைத் திறந்து கர்த்தருக்கு துதி செலுத்திப் பாட ஆரம்பித்தார்கள். இது தேவனுடைய இருதயத்தை எவ்வளவு மகிழ்ச்சியாக ஆக்கியிருக்கக் கூடும். இங்கே அவருடைய இரண்டு வேலைக்காரர்கள் வெட்கத்தையும், வேதனையையும், துயரத்தையும் அவருடைய நாமத்திற்காக சகித்துக் கொண்டிருந்தார்கள். சிறையில் வாடி வதங்கி தவித்தனர். ஏனென்றால் தேவன் அவர்களைச் செய்யும் படியாகச் சொன்னதை செய்தார்கள். அவர்கள் அவரை சபிப்பார்களா? அவரை மறுதலிப்பார்களா? மேலும் நம்மை இந்த குழப்பத்திற்குள்ளாக்கிக் கொள்ளும் படியாக நாம் என்ன யோசித்துக் கொண்டிருந்தோம் என்று சொல்லுவார்களா? நாம் தேவனுக்காக அல்லாவிட்டால் இந்த மாதிரியான இன்னலுக்கு ஆளாகி இருக்கமாட்டோம் என்று சொல்லுவார்களா?

இல்லை. ஒரு ஆயிரம் தடவைகளில் இல்லை இல்லை தான். அவர்கள் அவருடைய துதியைப் பாடினார்கள். அதுவும் நள்ளிரவில் இருண்ட இருட்டான நேரத்தில் ஒவ்வொன்றும் இருண்டதாகவும், நம்பிக்கை அற்றதாகவும் தோன்றிய பொழுது, ஆனால் தீடீரென்று சிறையின் சுவர்கள் அசைய தொடங்கின. அந்த சங்கிலிகள் கழன்றன. கர்த்தர் அவர்களுடைய நள்ளிரவு துதி ஆராதனையைக் கேட்டபொழுது என்று நான் எண்ணமிட விரும்புகிறேன். அவர் அவ்வளவு அகம் மலர்ந்து அவர்களுடன் சேர்ந்து அவரும் அல்லேலூயா என்று சத்தமாகத் துதித்து முழங்கினார். எந்தவிதமான நாசகாலம் நேரிட்ட போதும் தேவனை அவர்கள் துதித்தார்கள். அவரும் சத்தமாகத் துதித்தபொழுது சிறைச்சாலையின் சுவர்கள் அதிர்ந்தன. அந்த மனிதர்கள் துதியாகிய பலியைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சந்தர்ப்ப சூழ்நிலையின் உச்சக் கட்டத்திற்கு ஏறிச் சென்று “தேவனுக்கே மகிமை உண்டாவதாக” என்று ஆர்ப்பரித்தார்கள்.

உலகமெங்கிலும் தேவனுடைய பரிசுத்தவான்கள் இந்த விதமான பலிசெலுத்துவதையே செய்து கொண்டிருக்கிறார்கள். சிறையின் பாதாள அறைகளிலிருந்தும் உலகத்தின் பல பாகங்களிலும் தேவனுடைய பரிசுத்தவான்கள் இயேசுவுக்கு சாட்சியாக துதிகளின் பலியாகிய காணிக்கையை தேவனுக்குச் செலுத்திக் கொண்டே இருக்கிறார்கள்.

3. <u>இது இயேசுவின் மூலமாகவே மாத்திரம் செய்ய முடியும்</u>

அவராலே ஆகும். ஆகையால் செலுத்தக் கடவோம். இயேசு மாத்திரமே இந்த வகையான காணிக்கை செலுத்துதலைச் செய்யக்கூடும். இதன் காரணமாகத் தான் கிறிஸ்துவானவர் மிகவும் அதிசயமாக இந்த செயல்பாட்டில் மகிமைப்படுகிறார். அந்த விதமான சூழ்நிலையில் எந்த மனிதனாலுமே துதியையும், நன்றி கூறுதலையும், கர்த்தர் அவனுக்கு உதவிக்கரம் அளித்தாலன்றி ஒருவரும் செலுத்தமுடியாது என்பதை பிதாவானவர் நன்கு அறிந்திருக்கிறார். ஆகையால் தேவன் தமது குமாரனுடைய அற்புதத்தை இந்த பலி செலுத்துவதில் காண்கிறார். அவருடைய குமாரனுடைய கிருபையே இந்த அற்புதத்தை நிகழ்த்தி இருக்கிறது. இந்த மாதிரியான சூழ்நிலைமையில் முன்னால் தேவனை சபித்த மனிதன் ஒருவன் இங்கே இருக்கிறான். ஆனால் இப்பொழுதோ அவனுடைய ஜீவியத்தில் தேவனுடைய கிருபையினால் உண்டான (பெற்ற) ஜெயத்தினால், அவன் தேவனை சரியாக நன்றி கூறியும் துதிக்கவும் செய்கிறான். அவன் சொல்லிக் கொள்கிறதாவது, “இது ஏன் எனக்கு நேரிடுகிறது என்பதை நான் புரிந்து கொள்ளுவதில்லை. ஆனாலும் உம்மையே அதே போலவே நான் துதித்துக் கொண்டிருக்கிறேன்.”

மேலும் "இது ஏன் என் குடும்பத்திற்கும் எனக்கும் நேரிடுகிறது. அதற்கான காரணத்தை உணர்ந்தறிந்து கொள்ளவோ, அந்த நோக்கத்தின் ஆழத்தைக் கண்டு பிடித்துக் கொள்ளவோ என்னால் முடிவதில்லை. ஆனால் உம்மை என்று போலவே துதிக்கிறேன்" என்பார். துதியின் பலி செலுத்தப்படும் ஒவ்வொரு சமயத்திலும் இயேசு கிறிஸ்து மகிமைப்படுத்தப்படுகிறார்.

4. <u>அதாகப்பட்டது அவருடைய நாமத்திற்கு நன்றி செலுத்துவதாகும்</u>
நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிக்கக் கூடிய ஓர் இடத்திற்கு தேவன் நம்மை கொண்டு வரும்படியாக வாஞ்சிக்கிறார். (எபேசியர் 5:20). இது பிதாவாகிய தேவனுக்கு எப்பொழுதும் நன்றி செலுத்துவதற்காக அல்ல என்பதைக் கவனிக்கவும். அது மிகவும் கடினமானதாகும். முதலாவதாக தேவன் தனக்காகவே எல்லாக் காரியங்களிலும் நன்றி செலுத்த வேண்டும் என்று கற்பிக்கிறார். நாம் தேவனுடைய சர்வவல்லமையை உண்மையாகவே விசுவாசிக்கும் பொழுது தான் இவ்வாறு செய்யமுடியும். நாம் மெய்யாகவே (பின்வரும் சத்தியத்தை அறிந்து கொள்ளும் பொழுது தான்) "அன்றியும் அவருடைய தீர்மானத்தின் படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." (ரோமர் 8:28).

## துதியாகிய பலியை எவ்வாறு செலுத்துவது

1. முன்னதாகவே தேவனை "நீ எல்லாக்காலத்திலும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் "துதிக்கப் போவதாக ஏற்கனவே தீர்மானஞ் செய்துக் கொள்".

2. அதை இப்பொழுதே செய்யும் படியாக தொடங்கி விடுவாயாக. தினந்தோறும் நாள் முழுவதுமே தேவனைத் துதிப்பாயாக. உன்னுடைய நாளில் என்ன நேரிடுகிறது என்பது ஒரு பொருட்டல்ல. அதற்குள்ளாக தேவனைத் துதி. அதன் வழியாகவும் தேவனைத் துதிப்பாயாக. தேவனைத் தொடர்ந்து துதிக்கும் நல்ல பழக்கத்தில் உன்னை உட்படுத்திக் கொள்வாயாக.

3. உன்னுடைய வழியில் துன்பங்கள் வந்தாலும், உன்னைக் கஷ்டத்திற்குள் கண்டு பிடித்தாலும் கர்த்தரைத் துதிக்கும் படி உனக்குக் கட்டளை கொடுத்துக் கொள்வாயாக. தாவீது சொன்னதாவது, "ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான். தன் வழியைச் செவ்வைப்படுத்துகிறவனுக்குத் தேவனுடைய இரட்சிப்பை வெளிப்படுத்துவேன்" (சங் 50:23). அந்த கஷ்டமான நிலைமையிலும் தேவனுக்குத் துதி செலுத்தும் படியாக உனக்கே கட்டளையைப் பிறப்பித்துக் கொள். தேவன் உனக்கு விடுதலையை அளிக்கும் ஓர் வழியை உனக்காக ஆயத்தம் செய்வார்.

4. விசுவாசத்தினாலே அதை செய்யும்படியாக ஆரம்பிப்பாயாக. துதியின் வார்த்தைகளைப் பேசு. தேவனுக்கு சப்தமான குரலில் விசுவாசத்தின் நன்றியை செலுத்து. நீ எதற்காக அவரைத் துதிக்கிறாய் என்பதை நீ அறிந்து கொள்ளாதபோதுங்கூட உரத்து நன்றியைச் சொல்வாயாக. உனக்காக விடுதலைக்கானதோர் வழியைக் செய்தால் அவரைத் துதிக்க ஆரம்பி. உன்னால் வழியை இன்றும் கண்டு பிடிக்கமுடியாது. தேவன் எப்படி உன்னை விடுவிப்பாரென்றும் உனக்குத் தெரியாது. ஆனாலும் அவருக்கு அது போலவே என்றும் நன்றிகூறி துதித்துக் கொண்டிருக்கிறாய். நீ ஏற்கனவே ஜெயத்தில் இருக்கிறாய்.

5. ஒரு சமயம் ஆரம்பித்துவிட்டால் தொடர்ந்து அவரைத் துதித்துக் கொண்டிரு. உன்னுடைய துதிகள் உயர, உயர எழும்புவதாக. துதியின் ஆவி உண்மையாகவே உன்னை மேற்கொள்ளட்டும். தேவனுக்கு துதியை முழக்கமிடு. அவரை போற்றி பாடு. அவருக்கு முன்பாக நடனமாடு. அவரை மகிமைப்படுத்து அவருடைய நாமத்தைப் போற்றுவாயாக. அவர் உனக்காக ஒரு இரட்சிப்பின் வழியை உண்டாக்குவார்.

# அதிகாரம் 8: துதியும் ஆராதனையும்

**துதித்தல் என்பது :** நன்மையானதைப் பேசுவது, ஒன்றுக்கு பாராட்டு தெரிவித்து போற்றுவது, வாழ்த்துரை தெரிவித்தல், புகழுவது, பாராட்டு தெரிவிப்பது, கைதட்டி பாராட்டுவது, புகழ்ந்து பேசுவது, உயர்வாகப் புகழ்ந்து பேசுவது.

**ஆராதித்தல் என்பது :** பெருமதிப்புக் கொடுப்பது, பெரு வியப்புக் கொள்ளுதல், தொழுகைக்குரிய பொருளை தலைகுனிந்து வணங்குல், வணக்கம் செலுத்துவது.

ஆராதித்தல் என்பது துதித்தலின் உயர்ந்த வடிவமாகும். நாம் பொதுவாக துதித்தலுடன் ஆரம்பித்து பின்பு ஆராதனைக்குள் கடந்து செல்லுவோம். இந்த ஆங்கில வார்த்தையான worship என்ற வார்த்தையிலிருந்து தோன்றி தகுதியுடைய ஒன்றை மரியாதை செய்ய மேலும் அந்த தகுதிக்கு பொருத்தமான பிரதிகிரியைச் செய்வதற்கு என்று பொருள் தரும்.

ஆராதனை என்பது இருதயத்தின் முதல் மனப்பான்மை ஆகும். அது தன் சிருஷ்டிகருடன் கொண்டுள்ள மனித இருதயத்தின் பெரு மதிப்புள்ள தொழிலாகும். அது தேவனுடைய மகத்துவத்தையும் அவருடைய தகுதியையும் பற்றிய ஆழமான தியானமாகும். அது தேவனுக்கான போற்றத் தக்கத்தை நற்கந்தப் படுத்துவதாகும். அது சர்வவல்லருக்காக காட்டப்படுகிற உள்ளுணர்வின் பயபக்தியும் மரியாதையுமாகும்.

இரண்டாவதாக, அந்த எண்ணங்களும் உணர்ச்சிகளும் பிரவாகமாக பொங்கி ஓடுவது, அவைகள் இயல்பாகவே பிரவாகித்து ஓடுகிறது. அவைகளை குழாய் மூலமாகவோ அல்லது கட்டாயமாகவோ வெளியேற்றப்படுவதில்லை. தாவீதுடைய போலவே "நமது பாத்திரமும் ஆனந்தத்தால் நிரம்பி வழிய வேண்டும்"
மூன்றாவதாக, ஆத்துமாவின் ஆழமான வெளிப்படுத்துதல்களாக பக்தி, பயபக்தி, ஆச்சரியம் போற்றுதலாகியவை பொங்கி ஊற்றப்படுவதாகும்.

## ஆராதனையைப் பற்றிய முதலாவதான வேதாகமத்தின் ஒத்து வாக்கியங்கள்

வேதாகமத்தின் வியாக்கியான குறிக்கோள்களில் ஒன்று "முதன் முதலாகக் குறிப்பிடப்படுதல்" என்பதே. வேதாகமத்தில் எந்த பொருள் தலைப்பாவது, முதல் முதலாகக் குறிப்பிட்டுச் சொல்லப்படுமானால், அது தனது அர்த்த விளக்கத்திற்கும் முக்கியத்துவத்திற்கும் அது வேதாகமத்தில் எங்கெங்கே காணப்பட்டாலும் தெளிவாகச் சுட்டிக் காட்டும். அந்த வார்த்தை அல்லது பொருள் தலைப்பின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள வேதாகமம் எங்கிலும் அதற்கான திறவு கோலாகும்.

இந்த ஆராதனை என்ற வார்த்தை ஆதி 22:5ல் முதன் முதலாகக் குறிப்பிடப்படுகிறது. தன்னோடு வந்த இளம் வயதினரான வாலிபரோடும், ஈசாக்குடனும் மோரியாவுக்கு போகும் பொழுது சொன்னதாவது, "நானும் பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும் போய் தொழுது கொண்டு உங்களிடத்துக்குத் திரும்பி வருவோம்" என்று சொன்னான். இங்கே உபயோகிக்கப்பட்ட வார்த்தையாவது, Shachah என்பது அதன் அர்த்தமாவது, சாஷ்டாங்கமாய் ஒருவருக்கு முன் விழுந்து, குனிந்து பணிந்து கொண்டு, தாழ்மையாக பக்தியுடன் மரியாதையாக வணக்கம் செய்தலாகும்.

**முதன் முதலாகக் குறிப்பிடப்படும் ஆராதனை என்பதன் உள்ளடக்கமான சில பொருள் விளக்கத்தைக் கவனிப்போம் :**

1. தேவன் ஆபிரகாமை போய் தொழுது கொள்ளும் படியாகக் கட்டளையிட்டார். நமது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கேற்ப துதியும், ஆராதனையும் நாம் செய்யவோ, வேண்டாமோ என்று தீர்மானித்து தெரிந்தெடுக்கும் உரிமை அல்ல. அது தேவனுடைய கட்டளையாக வேதாகமம் "கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்" சொல்லும் பொழுது, அது ஒரு யோசனையோ அல்லது வேண்டுகோள் அல்ல. அது ஒரு கட்டளையே; அதற்கு விதி விலக்கு ஒன்றும் செய்யப்படவில்லை. ஒவ்வொரு தேவ பிள்ளைக்கும் தேவனைத் துதித்து ஆராதனை செய்யும் படியாகக் கட்டளை கொடுக்கப்படுகிறது.

2. ஆபிரகாமுடைய பிரதிக் கிரியையாவது, ஒரு கீழ்படிதல் உள்ளதாகும். இந்தக் கீழ்படிதலானது, அவனுக்கு தேவனுடன் கொண்டிருந்த வாக்குத்தத்தமான உறவுத் தொடர்புக்கு இன்றியமையாதது. தேவனும், அவனும் வாக்குத்தத்த உடன்படிக்கை செய்து கொண்டார்கள். அது ஆபிரகாமுடைய பூரணமான கீழ்படிதலையும் முழுவதுமான அர்ப்பணிப்பையும் வேண்டியது. தேவன் தாமே ஆபிரகாமுடைய அர்ப்பணிப்பின் நேர்மையையும், உத்தமத்தையும் சோதனை செய்யப்போவதாக இருந்தார். ஆபிரகாம் மிகவும் விலையேறப் பெற்றதாகக் கருதிய அதே பொருளான, அவனுடைய வாக்குத்தத்தத்தின் மகனாகிய ஈசாக்கை பலியாகச் செலுத்தும் படியாக வேண்டினார்.

3. ஆராதனையின் செயலபாடானது, மிகுந்த விலையேறப் பெற்றதாகும். இந்த ஆராதனையின் செயல்பாடானது, ஆபிரகாமுடைய மிகச் சிறந்ததும், உயர்ந்ததுமான பலியாக விலையாக்கப்பட்டது. “அது மெய்யானதொரு துதியின் பலியாக” இருந்தது. (எபி 13:15). ஆராதனையின் ஒரு ஜீவியமானது நாமாக இருக்கின்ற ஒவ்வொன்றையும் வைத்திருக்கிறதையும் கூட வேண்டுகிறது (ரோமர் 12:1-2). அங்கே தேவனுக்கென்று உண்மையான ஆராதனை செய்பவராக இருக்க வேண்டுமானால், அவ்வாறு செய்ய வேண்டும். தாவீதுங்கூட அவன் பின்வருமாறு சொல்லும் பொழுது அந்த குறிக்கோளைப் புரிந்து கொண்டிருந்தான். “நான் இலவசமாய் பெற்றுக்கொண்டதை தேவனுக்கு செலுத்துவேனோ” என்று கேட்டுக் கொண்டான்.(2சாமு 24:24).

4. ஆராதனை செய்வது விசுவாசத்தின் செயல்பாடாகும். அந்த நாளில் ஆபிரகாம் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும் விசுவாசத்தின் அடிச்சுவடாகும். அவன் மோரியா மலையின் மேல் ஏறிச் சென்றபொழுது, தனக்கு மிகவும் பிரியமான மகனை பலியாகச் செலுத்தும்படி தேவன் கட்டளையிடுகிறார் எப்படியோ அவனும் ஈசாக்கும் இருவருமாக சேர்ந்து திரும்பி வந்து விடுவோம் என்று அறிந்திருந்தான். (ஆதி 22:5).

5. தன்னையே ஒப்படைப்பு செய்வது : ஆபிரகாம் ஈசாக்கை பலியாகச் செலுத்தும்படி தயாராக இருந்த போதிலும் அவன் தன்னுடைய சொந்தத் திட்டங்கள், வாஞ்சைகள், பேராவல்கள், வருங்காலத்தைப் பற்றிய விருப்பங்கள் யாவற்றையுமே செலுத்தும் படியாக இருந்தான். அவனுடைய வருங்காலம் ஆனது, இந்த சிறுவனோடு தவிர்க்க முடியாதபடி முடிச்சு போட்டிருந்தது. இவன் தான் தேவனால் அவனுக்கு (ஆபிரகாமுக்கு) வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரன். அவன் மூலமாகவே உடன்படிக்கையின் பிரகாரமாக எல்லா வாக்குத்தத்தங்களும் நிறைவேற்றப்படும். கீழ்படிதலுடன் அவன் ஒப்படைப்புச் செய்வது, அவன் நிறைவேற்றப்படும் படியாக வாஞ்சித்த வாய்ப்புகள் அனைத்தையும் ஒப்படைப்புச் செய்வதாகும். ஆகவே அவன் தன்னையே சரணாகதியாகும் படியாகச் செய்தான்.

   நமது சுயத்தை முற்றிலுமாக ஒப்படைப்பு செய்தாலன்றி நாம் மெய்யான ஆராதனைக்குள் போக முடியாது. நமது சுயமானது, ஆராதனை செய்யும் வழியில் எப்பொழுதுமே புகுந்து கொள்ளக் கூடும். ஆகவே நாம் சுயத்தை தேவனிடம் ஒப்படைப்புச் செய்ய வேண்டும்.

6. துதி தேவனை மகிமைப்படுத்துகிறது. ஆபிரகாமுடைய விலை உயர்ந்த ஆராதனைச் செயல்பாடானது, தேவனை மகிமைப்படுத்தினது. “ஒரு சாதாரணமான எதிர்கிரியையானது, ஆபிரகாம் தனக்குப் பிரியமான குமாரனையே கீழ்படிதலான விசுவாச ஆராதனையைச் செய்யும்படியாக, பலியாக ஒருவருக்கு செலுத்த விருப்ப சித்தமுள்ளவனாக இருந்தானென்றால் அந்த ஒருவர் எவ்வளவு மகத்துவம் மகிமையுடையவராகவும் இருக்க வேண்டும்”. தேவன் சொல்லுகிறார், “ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்” (சங் 50:23) ஆராதனை செய்யும் ஒவ்வொரு உண்மையான செயல்பாடும் தேவனை மகிமைப்படுத்துகிறது.

7. ஆராதனை செய்கிறவரும் ஆசீர்வதிக்கப்படுகிறார். ஆபிரகாமுடைய ஆராதனை செய்யும் செயல்பாட்டுக்கு தேவனுடைய பிரதியுத்தரமானது, அவருடைய பெரிதான மகிழ்ச்சியையும் ஒவ்வொரு ஆராதனை செய்கிறவரையும் ஆசீர்வதிக்கும் அவருடைய வாஞ்சையையும் சுட்டிக் காட்டுகிறது. “நீ உன் புத்திரன் என்றும், உன் ஏக சுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக் கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால், “நான் உன்னை ஆசீரவதிக்கவே, ஆசீர்வதித்து உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும்

பெருகவே பெருகப் பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்களென்றும், நீ என் சொல்லுக்குக் கீழ்படிந்த படியினால் உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசிர்வதிக்கப்படும் என்றும் என் பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்". (ஆதி 22:16-18).

யோவன் 12:3ல் மரியாளுடைய கதையில் இயேசுவின் பாதங்களை விலையேறப் பெற்ற பரிமள தைலத்தால் அபிஷேகம் செய்தது, அழகியதோர் ஆராதனை செய்யும் முறையாகும். யோவன் நமக்கு சொல்லுகிறார், அதன் பிறகு அவள், "அவருடைய பாதங்களை தன் தலை மயிரினால் துடைத்தாள்" என்கிறார். அவள் தன்னுடைய தலை மயிரில் சுமந்து கொண்டு போயிருக்கும் சுகந்தமான வாசனையைக் கற்பனை செய்து பார். அவள் எங்கே போனாலும் மக்கள் அந்த சுகந்த நறுமணத்தை மக்கள் விழிப்புடன் அறிந்திருப்பார்கள். அப்படியே தான் ஆராதனை செய்பவர்களுடனும், அவர்களுடைய ஜீவியமானது, அவர்கள் எங்கே சென்றாலும் நற்கந்தமான நறுமணத்தை எடுத்துச் செல்கிறார்கள். அது கர்த்தருடைய பிரசன்னமாகிய நற்கந்தமே.

## ஆசரிப்புக் கூடாரத்தில் ஆராதனை காட்சியளித்த பிரகாரமாக

மேலும் வேதாகமத்தின் ஒரு வியாக்கியான கோட்பாடு "அதிகமாகக் குறிப்பிடப்படும் பிரமாணம்" ஆகும். ஒரு குறிப்பிட்ட பொருள் தலைப்புக்குக் கொடுக்கப்படுகிற மொத்தமான உபசாரமும், இடமான பக்கங்களும் அதன் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது என்று இந்த கோட்பாடு கூறுகிறது. ஆசரிப்புக் கூடாரத்தை பற்றி விவரித்துக் கூறுவதற்கு எவ்வளவு இடம் ஒதுக்கப்பட்டதென்பதை நாம் யோசனை செய்யும் பொழுது, வேதாகமம் முழுவதிலுமே 51 அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்பதை அறியும் பொழுது அந்தத் தலைப்பு எவ்வளவு முக்கியமானதென்று நாம் உணருகிறோம். ஆசரிப்புக் கூடாரத்தின் முதன்மையான நோக்கம் தேவனை ஆராதிப்பதாக இருந்தபடியால், தேவன் நமக்கு ஆராதனையின் முக்கியமான தன்மையைப் பற்றியும் அதற்கு அவர் கொடுக்கும் அதீதமான முக்கியத்துவத்தையும் அவர் நமக்குத் தெரிவிக்கிறார் என்பதைப் பார்க்கிறோம்.

ஆசரிப்புக் கூடாரத்தின் முதல் துண்டு பாகமான மரத்தால் செய்த தளவாடங்களைப் பற்றி தேவன் விவரித்துக் கூறுவதாவது, யாத் 25:22 உடன்படிக்கை பெட்டியும் அதன் மேல் வைக்கப்பட்ட கிருபாசனமும் ஆகும். தேவன் சொன்னார், "அங்கே நான் உன்னைச் சந்திப்பேன், கிருபாசனத்தின் மேலிருந்து உன்னோடே சொல்லுவேன்" என்றார். உடன்படிக்கைப் பெட்டி இருக்கும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் அந்த இடத்திலிருந்து தேவன் மனிதனைச் சந்தித்து, அங்கே முகத்துக்கு முகமாக அவனோடே பேசுவார். அதுதான் ஆராதனை செய்யுமிடமாகும்.

இந்த பழைய உடன்படிக்கையின் பொருளாதாரத்தில் அந்த பிரதான ஆசாரியனுக்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ள சலுகையானது வருடத்திற்கு ஒரே ஒருநாள் மட்டுமே. அதாவது, பாவ நிவாரணத்தினத்துக்கு மட்டுமே. அந்த புதிய உடன்படிக்கையின் படி கிறிஸ்துவின் இரத்தத்தினால் தொடர்ந்து உட்பிரவேசிக்கும் சலுகை பெற்றவர்களாகிய நாம் எவ்வளவாக ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

அந்த ஆசரிப்புக் கூடாரத்தில் கிறிஸ்தவர்களாகிய நமக்கு மறைபொருளான அடிப்படையான போதனையாவது, ஆராதனை சம்பந்தப்பட்டதே. தேவன் தமது ஜனங்களை பலத்த வல்லமையான கரத்தினால் எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்தார். (யாத் 32:11) எகிப்திலிருந்து அவர்களுடைய விடுதலையானது முற்றுப் பெற்றபோது அவர் செய்த முதல் செய்கையாவது, ஆசரிப்புக் கூடாரத்தை கட்டுமாறு மோசேக்கு அளித்தத் திட்டமாகும். எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து நாம் விடுதலை பெற்றபொழுது (பாவமும் அடிமைத்தனம்) அவருடைய முதல் மகா வாஞ்சையாவது ஆராதனை செய்யும் ஊழியத்தில் நம்மை அர்ப்பணித்து விடுவதே.

ஆசரிப்புக் கூடாரமானது, ஆராதனை ஒழுங்கு முறையும் முன்னேற்றத்தையும் கற்பிக்கிறது. ஆசரிப்புக் கூடாரத்தின் பிரகாரத்துக்குள் பிரவேசிக்கும் பொழுது முதலாவது, வெண்கலப் பலிபீடமாகும். இங்கே தான் நமது பாவங்களும், அக்கிரமங்களும் நிவிர்த்தி செய்யப்படுகின்றன. நாமும் தேவனுடைய மன்னிப்பையும் பெற்றுக் கொள்கிறோம்.

அதற்கு அடுத்தாற்போல காணப்படுவது, வெண்கலத்தொட்டி. வசனத்தின்படி சுத்திகரிப்பதற்கான தண்ணீரினால் கழுவப்படுவதற்கு, ஆராதனை செய்ய வருகிறவர் இந்த இரண்டு அனுபவங்களையும் கடந்து தான் பரிசுத்த ஸ்தலத்தின் திரையை அணுக முடியும். பரிசுத்த ஸ்தலத்திற்குள்

சமுகத்தப்பங்களை வைக்கும் மேஜையும், ஏழு கிளைகளையுடைய குத்து விளக்கும், தூபங்காட்டும் பொற்பீடமும் இருந்தது. இவை அனைத்தும் ஆராதனையைப் பற்றிய போதனையில் மிகவும் ஆழமான முக்கியத்துவத்தையுடையன.

முடிவாக, அங்கு மகாபரிசுத்த ஸ்தலம் இருந்தது. பரிசுத்தமும், பக்தியும் நிறைந்த அந்த இடத்தில் தான் தேவன் சந்திக்கும் இடமாக இருக்கும். அது உன்னதமானதும், பரிசுத்தமானதுமான துதி ஆராதனை வடிவங்களை குறிப்பிட்டுக் காட்டுகிறது. இதே இடத்திற்குத் தான் பரிசுத்த ஆவியானவர் நம்மைக் கொண்டு வர விரும்புகிறார். அங்கே ஆராதனை செய்கிற திறன் பாடுகளைக் கற்றுக் கொள்வதற்காக ஒரு குறிப்பிட்ட முன்னேற்றம் இருக்கிறது. தேவன் நம்மை அந்த ஆராதனையின் பலவேறுபட்ட மட்டங்களின் வழியாகக் கொண்டு வர விரும்புகிறார். கடைசியாக, பரிசுத்தமான ஆராதனை செய்யும் உச்சமட்டத்து இடம் வரைக்கும் நாம் போகக் கூடிய அந்த அவரோடு இருக்கும் திரைக்குள் மறைக்கப்பட்டுள்ள இடம் வரைக்கும் கொண்டு போகும்படியாக விரும்புகிறார்.

# அதிகாரம்: 9 துதி ஆராதனையில் இசை (அ) சங்கீதம்

தேவனுக்கு ஆராதனை செய்வதில் இசையானது ஒரு முக்கியமான பங்கை வகிக்கிறது. படைப்பின் உதயமான ஆரம்பகால வழிபோக்கில்லான கடந்த காலத்தின் படைப்பின் பிறப்பில் “அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய் பாடி, தேவ புத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்கள்” (யோபு 38:7).

எபிரேய இசையானது, பிரத்தியேகமான சிறந்த போக்கில் வாய்பாட்டாகவே இருந்தது. அவர்களது சரித்திர கால ஆரம்ப நாட்களில் ஒரு சில வாத்தியக் கருவிகளே இருந்தன. மனிதனுடைய குரல் வளமே கிடைக்கப் பெற கூடியதும் பிரபலமான இசைக் கருவியாக இசையை உண்டாக்க உதவியது. இந்த முதன் முதலாகச் சொல்லப்படும் இசையும், பாட்டும் ஆதி 31:27ல் காணக்கிடக்கிறது. மேலும் அது ஆனந்தமான களிகூறுதலோடு இணைந்துள்ளது. பாட்டில் ஆராதனை என்பது முதன் முதலாக யாத் 15:1ல் குறிப்பிடப்படுகிறது. மேசேயும், இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரைக் குறித்துப் பாடினார்கள். வசனம் 2. மிரியாமும், சகல ஸ்திரீகளும் தம்புரோடும், நடனத்தோடும் மோசேயின் பாட்டுக்கு பிரதியுத்தரம் சொன்னார்கள்.

பேயேருவில் கிணறு தோண்டியதை பாட்டுப்பாடிக் கொண்டாடினார்கள். (எண் 21:17,18).

தெபோராளும், பாராக்கும் தாங்கள் பெற்ற வெற்றியைப் பாடலாகப் பாடி கொண்டாடினார்கள். (நியா 5:1-31).

இஸ்ரவேலரின் ஸ்திரீகள் கோலியாத் மீது தாவீது அடைந்த வெற்றியை பாட்டாகப் பாடிக் கொண்டாடினார்கள். (1சாமு 18:6,7).

4000 லேவியர்கள் வாத்தியங்களைக் கொண்டு கர்த்தரைத் துதித்தார்கள் (1நாளா 2:35). சாலொமோன் இஸ்ரவேல் புத்திரர் மேல் இராஜாவாக ஆனபொழுது, “இஸ்ரவேல் புத்திரர் புளிப்பில்லா அப்பப் பண்டிகையை ஏழு நாளளவும் மகா ஆனந்தத்தோடே ஆசரித்தார்கள். லேவியரும், ஆசாரியரும் தினந்தினம் கர்த்தருக்கென்று பேரோசையாய் தொனிக்கும் கீத வாத்தியங்களால் கர்த்தரைத் துதித்துக் கொண்டிருந்தார்கள். (2நாளா 30:21).

“தாவீது லேவியரின் பிரபுக்களை நோக்கி நீங்கள் உங்கள் சகோதரராகிய பாடகரைத் தம்புரு, சுரமண்டலம், கைத்தாளம் முதலிய கீத வாத்தியங்கள் முழங்க தங்கள் சத்தத்தை உயர்த்தி சந்தோஷம் உண்டாகப் பாடும்படி நிறுத்த வேண்டும் என்று சொன்னான்” (1நாளா 15:16).

தேவனை துதித்து ஆராதிப்பதில் சங்கீதமும் பாட்டும் முக்கியமான ஒருங்கிணைக்கும் பகுதிகள் என்பது தெளிவாகிறது. இது வேதாகமம் முழுவதிலுமே ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரைக்கும் படம் பிடித்துக் காட்டப்படுகிறது. இன்றைய நாட்களிலும் அது போலத்தான். இது முக்கியமானதும், மகிமையானதும் நேரடியான வெளிப்படுத்தும் கிரியையாகும்.

## சாத்தானும், சங்கீதமும்

மேலும் சாத்தானுங் கூட தனது நோக்கங்களை செயலூக்கத்துடன் சாதித்துக் கொள்வதற்கு சங்கீதத்தை உபயோகிக்கிறான் என்பதும் உண்மையே. அவனுடைய பாதாள வீழ்ச்சிக்கு முன்னர் லூஸிபர் பிரதானமான சங்கீதக்காரனாக இருந்தான். எசேக்கியேல் 28:13ல் “நீ சிருஷ்டிக்கப்பட்ட நாளில் உன் மேள வாத்தியங்களும் உன் நாகசுரங்களும் உன்னிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது” என்று கூறப்படுகிறது. லூஸிபர் ஒரு இசை வல்லுநன். இந்த வரத்தை தேவனுக்கு மகிமையாக பயன்படுத்துமாறு அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அவன் யேகோவாவுக்கு விரோதமாகக் கலகம் செய்தபொழுது அவன் பரலோகத்திலிருந்து தள்ளப்பட்டான். அவன் அந்த வரத்தை விபசாரம் செய்து அந்த வரத்தை நன்மையான காரியங்களுக்கு பதிலாக தீமையானவைகளுக்காக பயன்படுத்த ஆரம்பித்தான். அதை அவன் இன்றைய நாள்வரைக்கும் செயலூக்கத்துடன் செய்து கொண்டே இருக்கிறான்.

காயீனுடைய சந்ததியார் சங்கீத வாத்தியங்களையும், போராயுதங்களையும் கண்டுபிடித்தார்கள். (ஆதி 4:21,22).

மோசே தேவனை மலையில் சந்தித்ததற்கு பிறகு திரும்பி வந்த பொழுது இஸ்ரவேல் புத்திரர் பின் மாற்றமான விக்கிரக ஆராதனைக்கு திரும்பினார்கள் என்பதைக் கண்டு அறிந்தான். அந்த பொற்கன்றுக் குட்டியைச் சுற்றி நடனமாடிக் கொண்டும், பாடிக் கொண்டும் இருந்தார்கள். அவர்களுடைய சங்கீதத்தின் ஓசையானது, மோசேயின் காதுகளுக்கு குழப்பத்தை உண்டுபண்ணுவதாக இருந்ததால், அதனால், உடனடியான அந்த சங்கீத சப்தத்தின் குறிப்பை அவனால் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

குழப்பம் நிறைந்த சங்கீதமே சாத்தானுடைய தரக்குறியீட்டை உடையது. அவன் ஒரு குழப்பக்காரன். ஆகவே, அவ்வளவுக்கு அதிகமாக நவீன சங்கீதமானது, குழப்பம் நிறைந்துள்ளது. அது மக்களை தொந்தரவு செய்து மூளையைக் குழப்புகிறது.

தெய்வீக சங்கீதத்திற்கு இதற்கு மாறான (பதிப்பு) விளைவு உண்டு. அது குழப்பம் பண்ணுவதை விட அமைதியை உண்டாக்குகிறது. அது நம்மை அகக்கிளர்ச்சி அடையச் செய்யும். ஆனாலும், நம்முடைய உணர்ச்சிகளின் மேல் உள்ள கட்டுப்பாட்டை ஒருபோதும் இழக்கச் செய்வதில்லை. அது நம்மை பலப்படுத்துமேயன்றி, நம் பலத்தை குறைத்துவிடாது.

நேபுகாத்நேச்சார் பாபிலோன் இராஜா பலவிதமான வாத்தியக் கருவிகளை உபயோகித்து தான் உண்டாக்கி நிறுத்திய தங்க விக்கிரகத்தை (ஆராதனை) தொழுகை செய்வதற்காக அதை உற்சாகப்படுத்தவதற்காக பயன்படுத்தினான். (தானியேல் 3:5-7).

ஏரோது மயக்கத்தை உண்டாக்கும் சங்கீதத்திற்கும், சாலோமி என்பவளுடைய நடனத்திற்கும் அடிமைப்பட்டவனாகி யோவான் ஸ்நானகனை கொலை செய்யும்படியாக முட்டாள்தனமாகக் கட்டளை பிறப்பித்தான் (மத் 14:6).

சாத்தானின் உணர்ச்சி தூண்டப்படுகிற சங்கீதம் கடைசியில் அந்த மகா பாபிலோன் நகரம் தள்ளப்பட்டபொழுது, அழிவை உண்டாக்கியிருக்கலாம். அந்த பாபிலோன் நகரத்து சங்கீதத்தின் சப்தமே இனிமேல் எக்காலத்திலுமே கேட்கப்படமாட்டாது.(வெளி.18:22).

## சங்கீதம் தேவனுக்கு ஆராதனை செய்வதை உற்சாகப்படுத்தக் கூடும்

பரிசுத்த ஆவியானவர் சங்கீதத்தை தேவனுடைய மகிமைக்காகவும், மக்களுடைய பக்திவிருத்திக்காகவும் பயன்படுத்தலாம்.

அபிஷேகம் பெற்ற சங்கீதம் சவுலின்மேல் கொண்டிருந்த வல்லமையான நோய் நிவாரண பாதிப்பைக் கவனிக்கவும் (1சாமு 16:23). தாவீது தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவன். அவன் கைதேர்ந்த இசைவல்லுநர்கள், தாலந்துள்ள இராகத்தலைவன், இனிமையாகப் பாடக் கூடியவன். அவன் ஆவியின் அபிஷேகத்தின் கீழ் வாத்திய கருவியை இசைத்து பாடிய பொழுது சவுலிடமிருந்த பொல்லாத ஆவி அவனை விட்டு நீங்கிப் போயிற்று. அவன் புத்துயிர் பெற்றான் அவன் நோயிலிருந்து சொஸ்தமானான்.

ஒரு தேசிய நெருக்கடி ஏற்பட்ட பொழுது யோசப்பாத்துக்கு ஒரு தீர்க்கத்தரிசி தேவை இருந்தது. அவன் எலிசாவை அழைத்தனுப்பினான். அந்த தீர்க்கத்தரிசி ஒரு சங்கீதக்காரனுக்கு அழைப்பு விடுத்தான். "இப்போதும் ஒரு சுரமண்டல வாத்தியக்காரனை என்னிடத்தில் கொண்டு வருங்கள் என்றான். சுரமண்டலக்காரன் வந்து வாசித்தபோது கர்த்தருடைய கரம் அவன் மேல் இறங்கி (எலிசா) அவன் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், ………… என்று சொன்னான். 2இராஜா 3:11,15,16) இந்த சங்கீதமானது நமக்கு தெரிந்த படியாக அந்த தீர்க்கதரிசன வரமானது கிரியை செய்யக் கூடிய சூழ்நிலையையும், மனநிலையையும் உண்டாக்குமாறு உதவியது.

தாவீது இராஜா 4000 சங்கீதக்காரர்களை தங்கள் சுரமண்டலத்தோடு தீர்க்கதரிசனம் சொல்லுமாறு நியமித்தான்.

இஸ்ரவேலர் பாபிலோனிய சிறையிருப்புக்குள் இருந்தபோது மாத்திரமே பாடுவதையும் இசைக்கருவிகளை இசைப்பதையும் நிறுத்திவிட்டார்கள். அவர்களுடைய அபிஷேகம் பெற்ற சங்கீதம் நிறுத்தப்பட்டுவிட்டது. அவர்கள் தங்கள் சுரமண்டலங்களை அலரிச் செடிகளின் மேல் தூக்கி வைத்தார்கள்.

அவர்களை பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துச் சென்று பாழாக்கியவர்கள் அவர்களை அச்சுறுத்தி பாடும்படியாகக் கேட்டுக் கொண்ட பொழுது, "அவர்கள் தாங்கள் கர்த்தரின் பாட்டை அந்நிய தேசத்தில் பாடுவதெப்படி என்று பிரதியுத்தரம் சொன்னார்கள். 70 ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் சொந்த நாட்டிற்கு நகைப்போடும், ஆனந்த சத்தத்தோடும் திரும்பி வந்தார்கள். அவர்களுடைய வாயின் உதடுகளில் துதி இருந்தது. (சங் 126:1,2) திருச்சபையானது, ஆவிக்குரிய சிறையிருப்பில் இருக்கும் பொழுது மாத்திரமே அதனுடைய அபிஷேகம் நிறைந்த சங்கீதம் நின்று போகிறது. அந்த சிறையிருப்பைத் தகர்த்தெறிந்த பிறகு ஜனங்கள் மறுபடியும் சுதந்திரத்திற்குள்ளாக வந்துவிட்ட பிறகு அங்கே சங்கீதம் பாடல்கள், துதிகள், நடனமாடுதல், நகைப்பு ஆகிய அனைத்தும் அந்த திருச்சபைக்குள் திரும்பவும் கொண்டு வரப்படுகிறது.

## புதிய ஏற்பாட்டில் சங்கீதமும் பாட்டும்

1. சீஷர்கள் ஒன்றாகக் கூடிவந்து ஞானப்பாட்டுகளைப் பாடினார்கள். (மத் 26:30; மாற்கு 14:26).
2. பவுலும், சீலாவும் சிறைக்காவலில் தேவனைத் துதித்து பாடினார்கள். (அப் 16:25).
3. அப்போஸ்தலனாகிய பவுல் திருச்சபையை அபிஷேகம் பெற்று பாடல்களைப் பாடுமாறு போதனை தருகிறார்.

**அவர்கள் பாட வேண்டியது :**

a. சங்கீதங்கள் : சங்கீதங்கள் இராகத்தில் அமைக்கப்பட்டவை
b. ஞானப்பாட்டுகள் : தேவனுக்குரிய துதிப்பாடல்கள்
c. ஆவிக்குரிய பாடல்கள் : இயல்பாகவே சரளமாகப் பாடும்படியாக ஆவியானவரால் கொடுக்கப்பட்டவை.

ஆதித்திருச்சபையின் பாடல்கள் கர்த்தரைத் துதிப்பவை. அவைகளின் முக்கியமான முதலாவதான நோக்கமானது, தேவனைத் துதித்து அவரை மகிமைப்படுத்துவதே. அவைகள் அவர்கள் பாதிப்புக்காகவோ அல்லது மகிழச் செய்வதற்காகவோ பாடப்படவில்லை. அவர்கள் பாடினது மனிதனை மையமாகக் கொண்டதல்ல. அவைகள் தேவனை நோக்கியவைகளாக அவரை மகிழச் செய்யவே பாடப்பட்டதாகும்.

இந்த மாதிரியான அபிஷேகம் பெற்று பாடல்களைப் பாடுவதோ, இசைப்பதோ தேவனைத் துதித்து ஆராதனை செய்வதற்காக செய்யப்படுகிறவைகளோ இன்றைய நாட்களில் திருச்சபையில் மிகவும் அரிதாகும். ஆனால் தேவன் இந்த ஊழியத்தை தமது மக்களுக்குத் திரும்பவும் கொண்டு வருகிறார். உங்களது சமுதாயத்தை அபிஷேகம் பெற்ற சங்கீதத்தை தேவனுக்குத் துதியாகப் பாடும் ஊழியத்திற்குள் கொண்டு வருவதற்காக சில யோசனைகள் :

1. ஒவ்வொரு தொழுகை நேரத்தையும், பாட்டுகளினால் துதித்து நன்றி கூறுதலுடன் தொடங்கவும். (சங் 100:4) "அவர் வாசல்களில் துதியோடும் அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து அவரைத் துதித்து அவருடைய நாமத்தை ஸ்தோத்தரியுங்கள்."

2. சரியான பாட்டையோ அல்லது ஞானப்பாட்டையோ தரும்படியாக பரிசுத்த ஆவியானவரிடம் ஜெபத்துடன் கேட்கவும்.. ஒவ்வொரு ஆராதனை நேரத்திற்கும் தேவன், பொருள் ஆய்வுத் தலைப்பையும், செய்தியையும் வைத்திருக்கிறார். அடிக்கடி அந்த தகுதியான பாட்டானது அந்த பொருள் தலைப்புக்குச் சரியான தொனி நயத்தைக் கொடுக்கும்.

3. அதே பாடலைத் திரும்பவும் ஒரு தடவைக்கு மேல் பாடுவதற்காகப் பயப்படவேண்டாம். அந்த பாட்டின் ஒரு பகுதிகூட விசேஷமாக அபிஷேகம் நிறைந்து ஆசீர்வதிக்கப் பட்டிருக்கும்.

4. கர்த்தரை நோக்கிப் பாடும் படியாக மக்களுக்கு புத்திமதி சொல்லவும். ஞானப்பாட்டுகள் அடிக்கடி பாடப்படுகின்றது. ஏனென்றால், அது நமது பாரம்பரியமும், சடங்காச்சாரமும் ஆகும். இதைவிட மிகுந்த தகுதியானதோர் நோக்கமும் இருக்கிறது. அது கர்த்தரை நோக்கிப் பாடுவதாகும். நமது நோக்க மையத்தை பரலோகத்தை நோக்கி பாட்டில் நேராக்கி விடுவதாகும்.

5. துதித்து நன்றி செலுத்தும் பாட்டுகளோடு தொடங்கவும். அந்த பாட்டுகளின் வழியாகவே தங்களை வெளிப்படுத்திக் கொள்ளும் படியாக, அவர்களை மெய்யாகவே அனுமதிக்க வேண்டும். பாட்டுகள் தங்களில் தானே துதிகள் அல்ல. நமது துதிகளை ஏறெடுக்கும் படியாக அவைகள் சாதாரணமான வாகனங்களாகும். உண்மையான துதியைச் சொல்லாமலே அநேக ஞானப்பாட்டுகளும், பாடல்களும் பாடுதல் பெரிதும் கூடுமானதாம்.

6. துதிப்பாடல்கள் மக்களை ஆராதனை செய்வதற்காக உற்சாகப்படுத்தும். நாம் துதியுடன் அடிக்கடி ஆரம்பித்து பிறகு மக்களை துதிகளின் பல வேறுபட்ட மட்டங்கள் முன்னேறச்செய்து முடிவாக ஆராதனைக்குள் போகும்படி நடத்துகிறோம். இது தான் துதித்தலின் உச்சமட்டமாகும்.

7. பாட்டு ஆராதனையை அவசரமாக நடத்திக் கொண்டு போகக்கூடாது. பல போதகர்கள் ஆராதனை வழிப்பாட்டின் இப்பகுதியைப் பூர்வாங்கமானதாகவும், தவிர்க்கமுடியாத பாரம்பரியமான அவசியமாகவும் பார்க்கிறார்கள். பாடல்களைப் பாட, துதிக்க, ஆராதனை செய்ய நேரம் எடுத்துக் கொள்ளவும். நமது சபைகூடி வருதலுக்கு இது முக்கியமான நிகழ்ச்சி முறையாகும்.

8. கூடிவரும் சபை பங்கெடுத்துக் கொள்வதற்காக சந்தர்ப்பத்தை அனுமதிக்கவும். இயல்பான வெளிப்படுத்துதலை உற்சாகப்படுத்துக. ஒருவர் ஜெபத்தில் நடத்தலாம். அது தான் கூட்டத்தின் போக்கின் சிறப்பை நிர்ணயிக்கும். மற்றொருவர் தீர்க்கதரிசனம் சொல்லலாம். பின்வரும் உபதேசங்கள் நிகழ்ச்சி நேரத்தின் மீதியான பகுதிக்கான பொருள் தலைப்பை வழங்குவதாக இருக்கும்.

9. பரிசுத்த ஆவியின் வெளிப்பாடு (1கொரி 12:8-11) விசுவாசிகளின் ஆராதனை வழிபாட்டு நிகழ்ச்சியின் போது எடுத்துக்காட்டப்பட வேண்டும். ஆவியை அவித்துப் போடாதிருங்கள் (1தெச 5:19). இந்த ஆவிக்குரிய மான்யக் கொடைகளாக பங்கெடுத்துக் கொள்வதையும் வெளிக்கு எடுத்துக் காட்டுவதையும் உற்சாகப்படுத்துக. என்ன வென்றாலும், அந்த நியமனமும் அபஷேகமும் தலைவர் தமது ஆவிக்குரிய அதிகாரத்தை அந்த எல்லா ஆராதனை நிகழ்ச்சி நிரல்களிலும் நிலைநாட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

10. எல்லாக் காரியங்களுமே பரஸ்பரமான பயபக்திக்காக செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு ஆவிக்குரிய வெளிப்பாடும் நியாயமானதாகவும் முறையானதாக இருக்கும். ஆனால் செய்யப்படும் ஒவ்வொரு காரியமும், அது செய்ப்படுகிற முறையும் அந்த முழு சபையின் பக்தி விருத்திக்காக இருக்க வேண்டும். (1கொரி 14:26).

11. குழப்பம் உண்டாக்குகிற நன்கொடைகளைத் தவிர்க்கவும். தேவன் தாமே குழப்பங்களுக்குக் காரணர் அல்லர். (1கொரி 14:33) அந்த ஆராதனை நிகழ்ச்சி நிரல் குழப்பத்திற்குள்ளாக செல்லுமானால், அதன் பொறுப்பை எடுத்துக் கொண்டு குழப்பத்திலிருந்து வெளியில் மறுபடியும் நடத்திச் செல்லவும். அவசியமானால், சற்று நிதானித்து என்ன நடக்கிறது என்பதை மக்களுக்கு விளக்கிக் கூறவும். அப்படியே அந்த நிகழ்ச்சியை தெளிவுபடுத்தவும். அந்த மாதிரியான சமயங்களில் அதை உபயோகித்து சரியாக அல்லது தவறாக செய்யும் வழிகளைப் போதிக்கவும்.

12. ஒவ்வொரு காரியமும் கர்த்தருக்காகவும் அவருடைய மகிமைக்காகவும் செய்யப்படட்டும். ஒவ்வொரு சபை கூடிவருதலுக்கும் நோக்கமாவது, தேவனை மகிமைப்படுத்தவும் விசுவாசிகளைப் பக்தியில் கட்டி எழுப்புவதும் நோக்கம் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

13. ஒரு பாட்டுப் புத்தகத்தையாவது, அல்லது தலைக்கு மேல் அமைந்துள்ள ஒலிபெருக்கியை உபயோகித்து மக்களை ஆராதனையில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு உதவவேண்டும். ஒரு குறிப்பிட்ட திருப்பு முனையில் பாட்டு புத்தகத்தை மூடிவிடவோ அல்லது வார்த்தைகளை நிறுத்திக் கொண்டு இருதயத்திலிருந்து மக்களை ஆராதிக்குமாறு செய்வதற்குப் பயப்படவேண்டாம்.

14. வெளிப்படையாக பாட்டை பாடும்படி நடத்துவதற்கான ஆராதனைக்கும், வழக்கமான ஆராதனைக்கும் குறிப்பிட்ட இயந்திரயுக்திகள் இருக்கின்றன. ஆனால் நீங்கள் கவனத்துடன் எச்சரிக்கையாக இயந்திரகதியாகவோ அல்லது ஒழுங்கு முறையைச் சார்ந்ததாகவோ இருப்பதை தவிர்க்க வேண்டும். அங்கே எல்லாவற்றிற்கும் கீழே இருக்கும் விடுதலை இருக்க வேண்டும். வளைந்து கொடுங்கள். நிகழ்ச்சி நிரல் முறையை பின்பற்றுமாறு வற்புறுத்த வேண்டாம். எப்பொழுமே ஆவியின் மெல்லிய குரலுக்கு உணர்வுள்ளவர்களாக, அவரைப் பின்பற்றிச் செல்லுவதற்கு விருப்ப சித்தமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். ஒரு நல்லப்பாட்டை வழிநடத்திச் செல்வதற்கு கைகளை விரித்து அசைப்பதற்கும் அதிகமானதை உள்ளடக்கியதாய் இந்த கையை விரித்து அசைப்பது சரியாக நடத்தப்பட்டாலுங்கூட அதற்கு அதிகமாகவே இருக்கிறது. ஆவியானவருடைய விடுவிப்பும், இயல்பான வெளிப்பாட்டு அசைவாடுதலும் தொழில் நுட்பத்து சரியாக இருக்கிறவை கூட மிகவும் முக்கியமானதாகும்.

15. ஜனங்கள் உம்மைக் குறித்து "மனிதன் அல்ல, இயேசுவே மாத்திரம்" என்று சொல்லும்படியாக மறைந்திருக்க விரும்புங்கள் (மத் 17:8) பல ஆண்டுகளாக நான் போதித்து வழி நடத்தின சபையை நினைவு கூருகிறேன். நான் முதன் முதலாக பிரசங்க பீடத்தில் ஏற அடி எடுத்து வைத்தபோது பிரசங்க பீடத்தில் வெட்டெழுத்துக்களாக எழுதப்பட்ட சில வார்த்தைகளைப் பார்த்தேன். அந்த பிரசங்க பீடத்தின் மீது அடிஎடுத்து வைத்து ஒவ்வொருவரையும் எதிருக்கெதிராக சந்தித்துப் பேசவோ அல்லது ஊழியமோ செய்யுமாறு கூறியது. அந்த வார்த்தைகள் கூறியதாவது, "ஐயா நாங்கள் இயேசுவை பார்க்க விரும்புகிறோம்." (யோவான் 12:21) என்றது. நாம் இதை ஜனங்கள் உம்மைப் பார்க்கவோ அல்லது பேசுவதைக் கேட்கவோ வரவில்லை. அவர்கள் இயேசுவைப் பார்த்துப் போகவோ, அவர் சொல்லுவதைக் கேட்டுப் போகவோ வந்திருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவருடைய உதவியோடு நமது கடமையாவது, அந்தத் திரையை இழுத்துவிட்டு ஒவ்வொரு கண்ணும் கர்த்தரைப் பார்க்கவும், அவருக்கு முன்பாக ஆராதனை செய்யவும் உதவ வேண்டும். இது தான் ஒவ்வொரு கிறிஸ்துவின் ஊழியக்காரனாக ஆராதனை நிகழ்ச்சி நிரலை நடத்திச் செல்பவனுடைய முடிவான நோக்கமாக இருக்க வேண்டும்.

# அதிகாரம் 10. ஒரு ஆராதனை வழிபாட்டை நடத்திக் கொண்டு செல்வது

கூடிவரும் சபையின் ஆராதனை வழிபாடாவது, மிகவும் முக்கியமான கருப்பொருளாக புதிய ஏற்பாட்டு சபையில் இருந்தது. புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கப்பட்ட முக்கியமான அழைப்பாவது, தேவனை ஆராதனை செய்வதாகும்.

ஒரு திருச்சபையின் ஒழுங்கு முறை முன்னுரிமையில் மிகவும் முக்கியமான கடமையாவது,

a. செங்குத்தாக – தேவனை ஆராதிக்கும் படியாக.

b. படுக்கை கோடாக – திருச்சபைக்கு ஊழியம் : பரிசுத்தவான்களை பக்தி விருத்தி செய்ய

உலகத்து ஊழியம் : சுவிஷே பிரபல்யம்.

ஒவ்வொரு திருச்சபையும் தேவனை ஆராதனை செய்யும் சமுதாயமாக இருக்க வேண்டும். கூட்டு ஆராதனை முறை வழிபாட்டை முன்னேற்றுவிப்பதில் ஆராதனை நடத்தும் தலைவரையே அதிகமாகச் சார்ந்தது.

## தலைவருடைய தகுதிகள்

1 **ஆராதனையை நடத்திச் செல்வது ஒரு சமுதாய ஊழியமாகும்.** ஒவ்வொருவருக்கும் இந்த ஊழியம் கிட்டுவதில்லை. ஒரு போதகருக்கு அடிக்கடி இந்த மாதிரியான குறிப்பிட்ட திறமை இருப்பதில்லை. அப்படிப்பட்ட நிலைமை என்றால் போதகர் கூடிவரும் சபையில் இந்த வரத்தை உடைய ஒருவரைக் கண்டுபிடித்து இந்த குறிப்பிட்ட பகுதியை ஆராதனையில் ஆராதனையை நடத்திச் செல்ல விருப்பமுள்ளவராக இருக்க வேண்டும்.

2. **இந்த தலைவர் ஆராதனை செய்பவராக இருத்தல் வேண்டும்.** மற்றவர்களை நடத்திச் செல்லும்படியாக அழைப்பைப் பெற்றவர் அந்த வழி நடத்துதலில் திறமைபெற்றவராகவும், தேவனை ஆராதிப்பதில் நிபுணராகவும் இருக்க வேண்டும். இந்த தலைவர் ஏற்கனவே இதற்கு தேவையானவைகளையும் ஆராதனைக்கான திறமையையும் பெற்றிருக்காவிட்டால், மற்றவர்களை ஆராதனையில் நடத்திச்செல்வது கூடாத காரியமாகும். இந்த நபர் தமது ஆவியில் சுதந்திரமுள்ளவராக சுயாதினமாக தேவனைத் துதித்து ஆராதிப்பவராக தமது தனிப்பட்ட ஜீவியத்தில் இருக்க வேண்டும்.

3. **ஆவிக்குரிய முதிர்ச்சி.** இந்த ஆராதனையை நடத்தும் தலைவர் அனுபவமும் முதிர்ச்சியையும் ஆவிக்குரிய காரியங்களில் பெற்றவராக இருக்க வேண்டும். அவருடைய ஆவிக்குரிய முன்னேற்றமானது, அவர் நடத்திச் செல்லும் சபைக்கு சமமானதாக அல்லது அதைவிட உயர்ந்ததாக இருக்க வேண்டும். இந்த விதமான முதிர்ச்சி தலைவருக்கு நம்பிக்கையைக் கொடுத்து அதன் விளைவாக கூடிவரும் சபையில் ஒரு பாதுகாப்பு உணர்வை உண்டாக்குகிறது. அவர் தம்முடைய சொந்த ஆவியைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதால், அவருடைய தனிப்பட்ட எண்ணங்கள் உணர்வுகள், உணர்ச்சிகள் அந்தக் கூட்டத்தின்போது இடையில் புகுந்து விடக்கூடாது. அவர் ஒரு விசுவாச வீரராக, பரிசுத்த ஆவியால் நடத்தப்படுவதை உள்ளுணர்வாக அறிந்து, ஆனால், அந்த ஆவியானவர் கூட வந்திருக்கும் பரிசுத்தவான்களுக்கு என்ன சொல்லுவார் என்பதைத் தெரிந்து அதை விசுவாசத்துடன் நடைமுறைபடுத்த வேண்டும். விசுவாசிகளை நோக்கப்படுத்தி உற்சாகப்படுத்தக் கூடிய உபதேசிப்பவராக இருக்க வேண்டும்.

4. **ஆவிக்குரிய உணர்வு.** இந்த இலட்சியத் தலைவர் பரிசுத்த ஆவியானவரின் மெல்லிய குரலுக்காக ஒரு உணர்ச்சி பூர்வமான காதுகளை பழக்கி இருக்க வேண்டும். அந்தத் தலைவர் சுறுசுறுப்பாக ஆவியானவர் தாமே கொடுக்கக் கூடிய ஏவுதலுக்குள் இயங்குவாரானால் பரிசுத்த ஆவியானவர் தாமே அந்த ஆராதனைக் கூட்டத்தை நடத்திச் செல்வார். ஆராதனைக் கூட்டங்கள் பரிசுத்த ஆவியானவரால் நடத்திச் செல்லப்பட வேண்டும். என்னவென்றாலும், ஆவியானவர் தாமே மனித வழிகளையும் எப்பொழுதும் உபயோகிப்பார். ஆகவே, அந்தத் தலைவருக்குள் ஓர் ஆழமான ஆவிக்குரிய உள்ளுணர்வு இருக்க வேண்டும். இதுவும் கூடிவரும் சபைக்குங்கூட தெரிவிக்கப்படும். அவர்களும் பரிசுத்த ஆவியானவருடைய ஏவுதல்களை செவி கொடுத்துக் கேட்டுக் கொள்ளும் திறமையுடன், அமைதியாகவும், நம்பிக்கையுடனும் அதற்குள் நுழைந்து இயங்குவார்கள்.

5. **மெய்யான மனத்தாழ்மை.** ஒரு நல்ல தலைவர் எப்பொழுதுமே "கிறிஸ்துவுக்கு பின்னால் ஒளிந்து கொள்ள" விரும்புவார். ஒரு சுயுத்தையுடைய தலைவர் தம்மை எப்பொழுதும் கூட்டத்தில் பெரிதாகக் காட்டிக் கொள்வாரானால், வெகு சீக்கிரமாக ஆவிக்குரிய கூட்டத்தின் சூழ்நிலைமையை நாசமாக்கக் கூடியது, மேற்கூறியதை விட வேறொன்றும் கிடையாது. பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவை மகிமைப்படுத்த விரும்புகிறார். ஆகவே, முழுவதுமாக அவருடைய வெளிப்படுத்துதலை வேறெந்த மனுஷன் மேலும் திருப்புவதற்கு விருப்ப சித்தமுடையவரல்ல. தேவனுடைய பார்வையில் எந்த மாம்சீகமும் மகிமைப்படக் கூடாது. அந்தக் கூடிவரும் சபையின் கவனத்தைத் தன் மீது ஈர்ப்பதை விட, தலைவரானவர் மக்களுடைய கவனத்தை கிறிஸ்து மீதே மையப்படுத்த விரும்ப வேண்டும்.

6. **ஜெபத்துடன் கூடிய ஆயத்தம்.** அந்த ஆராதனைக் கூட்டத்திற்கு முன்னதாக தலைவரானவர் சிறிது நேரத்தை தனிமையாக ஜெபத்தில் கழிக்க வேண்டும். அந்த கூட்டத்தின் பொருள்

தலைப்பானது, இந்த வழமியில் முன்னதாகவே உணர்ந்தறிந்து கொள்ளப்படும். தலைவருடைய ஆவியானது, தேவனுடைய ஆவியில் ஒரே சுருதியில் மீட்டப்பட்டு இந்த வழியில் ஆராதனைக் கூட்டமானது, அந்தத் தொடக்க நேரத்திலே சரியாக தேவனுடைய நோக்கத்திற்குள் போகக் கூடும். ஒரு ஆராதனைக் கூட்டத்திற்கு பூர்வாங்கமான ஏற்பாடுகள் என்று ஏதோன்றும் இருக்கக் கூடாது. அந்த ஆராதனைக் கூட்டம் முழுவதுமே அதன் முதல் நேரத்தில் இருந்து தேவனைத் துதித்து ஆராதிப்பதற்காக ஒப்படைப்புச் செய்யப்படுகிறது. அநேக பிரசங்கிமார்கள் தங்களுடைய பிரசங்கத்திற்கு முன்னதாக உள்ள ஒவ்வொன்றையும் பூர்வாங்கமாகவோ, அவசியமாகவோ அல்லது முக்கியமற்றதாகவோ கருதுகதிறார்கள். இதன் உண்மையாவது, அந்த பிரசங்க செய்திக்கு முன்னாலுள்ளவை வழக்கமாகவே மிகவும் முக்கிமானதாகவுள்ளது. ஏனென்றால், பிரசங்கமானது மக்களுக்காகச் செய்யப்படுகிறது. ஆனால், ஆராதனையோ தேவனுக்கு தாமே செய்யப்படுகிறது!.

7. **ஆராதனை செய்வதற்கு போதுமான நேரத்தை அனுமதிக்கவும்.** அநேக ஆராதனைக் கூட்டங்கள் அவசரம் அவசரமாக செய்யப்படும் போக்கானது கர்த்தருடைய மகத்துவத்தை அவமதிப்பதாகும். நாம் கூட்டு ஆராதனை முறையின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பது அவசியமாகும். மேலும் அதற்கு அதிகமானதும் போதுமானதுமான நேரத்தை கொடுக்க வேண்டும். ஆராதனை நேரத்தை தலைவருடைய பங்கிற்கு அவசியமில்லாத வீண்பேச்சாக வீணடிக்கக்கூடாது. அவருடைய முக்கியமான வேலையாவது கூடிவரும் சபையை பரிசுத்த ஆவியோடு ஓரே ஸ்தாயில் எவ்வளவு சீக்கிரம் கொண்டுவர முடியுமோ அவ்வளவு சீக்கீரமாகவும் இனிமையாகவும் அவர் கொண்டுவர வேண்டும். வீணான பேச்சுகளும், குறிப்புரைகளும் அவருடைய நோக்கத்திலிருந்து திசைதிருப்ப முடியும். மக்கள் தேவனை ஆராதனை செய்வதற்காக வந்திருக்கும் நேரத்திலும் ஆராதனை செய்து போற்றுவதிலும், அவர்கள் தங்களை அவருக்கு துதி செலுத்துவதிலுங்கூட ஈடுப்படுத்திக் கொள்ள விரும்பும் போதும் அவர்களை ஆராதனைக்குள் நடத்திச் செல்லும்படி ஒப்படைப்புச் செய்யப்பட்ட ஒருவரால் அவர்கள் தாமதப்படுவதும் தடைபடுவதும் விசனப்படக் கூடிய காரியமே.

8. **பரிசுத்த ஆவியானவருக்குத் திறந்த மனமுடையவர்களாக இருக்கும் படியாக.** ஒரு ஆராதனைக் கூட்டத்தை நடத்திச் செல்ல உண்மையான விசுவாசம் அவசியமாகிறது. ஏனென்றால் அந்த விதமான ஆராதனை முறையை முன்னதாகவே நிர்ணயிக்கப்படுவதோ, நிகழ்ச்சியாக்கப்படுவதோ கூடாத காரியமாகும். அநேக தலைவர்கள் நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல் தங்களுக்கு அவசியமாக வேண்டும் என்று உணருகிறார்கள். ஒரு நடத்தப்படும் ஆராதனைக் கூட்டத்தில் என்ன திட்டவட்டமாக நேரிடப் போகிறதென்றும் சரியாக எப்பொழுது அது நேரிடும் என்பதை அறிய விரும்புகிறார்கள். ஆவிக்குரிய ஆராதனையானது, இதை விட அதிகமான வளைந்து கொடுக்கும் தன்மையை வேண்டுகிறது.

ஒரு தடவை ஆராதனைக் கூட்டம் ஆரம்பித்துவிட்டால் அமைதியாக ஆவியானவர் நடத்தும் வழிக்கு விழிப்பு உள்ளவர்களாக இருப்பது அவசியம். அவருடைய வழி நடத்துதலை அடிக்கு அடி பின்பற்றி வர தயாராக இரு. அந்த ஆராதனையை எப்பொழுது ஆரம்பிக்க வேண்டும் என்பதற்கு அவர் கட்டளை கொடுப்பார். ஒவ்வொரு ஆராதனையும் ஒன்றுபோல் இருக்கமுடியாது. தேவன் தாமே பலதரப்பட்ட தேவனாக இருக்கிறார். அவர் ஒவ்வொரு தடவையும் ஒரே மாதிரியாக செய்யவேண்டியதில்லை. அவர் ஒவ்வொரு கூட்டத்திற்கென்று விசேஷமாக நோக்கம் வைத்திருக்கிறார்.

அந்தத் தலைவர் அந்த நோக்கம் என்னவென்று உணர்ந்தறிய வேண்டும். அதோடு பெருகி ஓடி, அந்த ஆவியானவர் படிப்படியாக வெளிப்படுத்தும் பொழுது கற்றுணர்ந்து கொள்ள வேண்டும். தேவன் தாமே ஆராதனைக் கூட்டத்தின் ஒழுங்கும் முறையையும் போகும் திக்கையுங்கூட அது நடக்கும் பொழுதே மாற்றவும் முடியும். ஒரு நல்லத்தலைவர் பாடவேண்டியப பாட்டுகளை உணர்வுடன் தெரிந்து கொண்டு எத்தனை முறை அவைகளை பாட வேண்டும் என்றும் எந்த வகையான வற்புறுத்தலோடு என்பதையும் உணர்ந்தறிய வேண்டும்.

சில சமயங்களில் ஆராதனைக் கூட்டம் உற்சாகமாகவும் ஆனந்தகளிப்பு நிறைந்தும் இருக்கும். மற்ற சமயங்களில் ஆவியானவர் அமைதியாக நடத்துவார். மேலும் மௌன நேரத்திலுங்கூட அவைகள் அளவுக்கு மிஞ்சிய ஆழமும் அர்த்தமுள்ளதாகவும் இருக்கும்.

9. **என்னவெல்லாம் நேரிடுகிறது என்பது பற்றி விழிப்பாயிரு** : ஆராதனை செய்யும் தலைவர் ஆராதனையில் மூழ்கியிருந்து கண்களை மூடிக் கொண்டிருப்பததைத் தவிர்க்க வேண்டும் ஆராதனையில் ஈடுபாடு கொண்டிருப்பது ஆச்சரியமாகக் கூடுமானதாக இருக்கக் கூடும். ஆனாலுங்கூட இன்னும் ஜனங்களுக்கு விழிப்புடன் உணர்ச்சி பூர்வமாக இருக்க முடியயும். அந்தத் தலைவர் பரிசுத்த ஆவியானவருக்கு உணர்ச்சி பூர்வமுடையவராகவும், அதே சமயத்தில் ஒரு சாந்தமான ஆனால், குறிப்பிடக்கூடிய தாக்கத்தை ஆராதனை வழிபாட்டில் கிரியை செய்து கொண்டு இருக்க வேண்டும்.

## <u>ஆராதனை நடத்திச் செல்வதற்கு சில எளிய வழிகாட்டு முறைகள்</u>

1. **சரியாக ஜனங்கள் எங்கே இருக்கிறார்களோ அப்பொழுது ஆரம்பிக்கவேண்டும்.** கூடிவரும் சபையினரோடு சரியாக அவர்கள் எங்கிருக்கிறார்களோ அங்கு உடனடியாக அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்களுடன் உம்முடைய தலைமைத்துவத்தை ஸ்தாபித்துக் கொள்ளவும். தேவன் உம்மைத்தான் அந்த ஆராதனையை நடத்திச் செல்வதற்கு முன் குறித்திருக்கிறார் என்பதை அங்கிகரித்துக் கொள்ள உதவிசெய்யும். அவர்கள் உமக்கு ஒத்துழைப்புத் தந்து உம்மைப் பின்பற்றினால், அவர்கள் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நடத்திச் செல்லப்பட்டு ஆராதனையின் மகிமையான அனுபவத்தைப் பெறுவார்கள்.

2. **பாட்டு பாட நடத்துவது ஆராதனை நடத்துவது என்பது அவசியமல்ல.** பல பாட்டைத் தலைவர்கள் ஜனங்களை ஆராதனைக்குள் நடத்தி செல்லும் திறமையுடையவர்களல்ல. எப்படியென்றாலும், ஆராதனை தலைவர் பாட்டு பாடுவதையும் நடத்திச் செல்லக் கூடியவராக பின்னர் மேலும் நடத்திச் சென்று ஆராதனைக்குள்ளாக நடத்த வேண்டும். ஆனாலும் அடிக்கடி ஆராதனை வழிபாடானது, பாட்டு பாடுவதோடு ஆரம்பிக்கலாம். அதற்கு தகுதியான பாடல்கள் தேவனைப் புகழ்ந்து துதிப்பவைகளானதும் அவருடைய உன்னதமான மேன்மை வல்லமை மகத்துவம் ஆகியவற்றைப் புகழ்ந்து போற்றுகிறவைகளைப் பாடலாம். இவைகள் ஜனங்களுடைய சிந்தனைகளை அவர்களை விட்டும், அவர்களுடைய பிரச்சனைகளை விட்டுவிட்டும் கர்த்தரில் பேரில் இருக்கும் படியாக உதவி செய்யும். துதிப்பாடல்களும் நன்றி கூறும் பாடல்களும் அடிக்கடி தகுதிப் பொருத்தமானதாகவும் சரியாகவும் இருக்கும். சமுதாயக் கூட்டமாகப் பாடல்களைப் பாடுவது ஜனங்களை ஒருமைப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு நல்ல வழியாகும். அவர்களுடைய குரல்கள் ஒருமித்து கலந்து கொள்ளும் பொழுது அவர்களுடைய சிந்தனையும், ஆவியும் அது போலவே ஒருமித்து கலந்து கொள்ளும். அந்த ஒருமைப்பாட்டை ஒரு தரம் எய்திவிட்டால் ஜனங்கள் ஆராதனையின் இராஜ்ஜியத்திற்குள் வழிநடத்தப்படுவார்கள். நாம் துதித்தலுடன் ஆரம்பித்து பின்னர் ஆராதனைக்குள் அசைந்து முன்னேற வேண்டும்.

3. **பரிசுத்த ஆவியானவரை வழிகாட்டும்படி அனுமதிக்கவும்.** இது பலவழிகளில் ஏதாவது ஒரு வழியில் வரக்கூடும். பாடப்படும் முதல் பாட்டிலே இது ஊற்றாக வெளியில் தோன்றலாம். இது ஆராதனை வழிபாடு முழுவதற்குமான பொருள் தலைப்பை அமைத்துத் தரலாம். பரிசுத்த ஆவியானவர் அடிக்கடி ஒரு பாட்டிலிருந்து மற்றொன்றுக்கு நடத்திச் செல்வார். அனைத்தையும் ஒரே அல்லது தேவையான பொருட் தலைப்புகளில் கொண்டு செல்லலாம். அங்கு தெய்வீக அருட்கொடை மான்யம் பெற்றவர்கள் இருப்பார்களானால், பரிசுத்த ஆவியானவர் இவைகளை பயன்படுத்தி அந்த ஆராதனை வழிபாடு நடத்தப்படும் போக்கைச் சுட்டிக் காண்பிப்பார். இந்த நடத்தப்படுதலானது, ஒரு தீர்க்கதரிசனத்தில் அல்லது வெளிப்பட்டு மூலமாக தகவல் தொடர்பு படுத்தப்படலாம். சில சமயங்களில் ஆவியானவருடைய சிந்தனையானது, ஆராதனை வழிபாட்டின் மீது அமைதியாகவும், நாடகபாணியில் அல்லாத முறையில் சுமத்தப்படலாம். அதுவும் சபைகூடிவந்த பிறகே, திரும்பிப் பார்க்கும் பொழுது தான் எவ்வளவு அழகாக ஆவியானவர் நடத்தினார் என்றும் எந்த விதமான ஒருமைப்பாடும், இணக்கமும் வழிபாடாகிய வஸ்திரத்தில் நெய்யப்பட்டு இருந்தது என்று ஒருவர் தெளிவாகப் பார்க்கலாம்.

4. **வேண்டாத தலையீடுகளையும் எதிர் நீரோட்டங்களையும் தவிர்த்து விடுக.** இங்கு தான் தலைவருடைய ஆவிக்குரிய முதிர்ச்சி மிகவும் அவசியமாகும். புதிதாக அறிமுகப்படுத்தக்கூடிய அதுவும் பரிசுத்த ஆவியானவரால் செய்யப்படாததோர் புதிய அழுத்தத்தை உணர்ந்து அறியக் கூடியவராக இருக்க வேண்டும். அவர் இந்த மாதிரியான போக்கை கண்டு அறிந்து கொள்ளும் படியாக ஆவியில் விழிப்புள்ளவராக இருக்க வேண்டும். ஒரு கூட்டமானது, பார்வைக்குத் தப்பும் வழியில் நுட்பமாக திசை திருப்பப்படும். ஒருவர் எச்சரிக்கையாகவும், கவனமாகவும் இருக்காவிடில் அவ்வாறு நேரிடக் கூடும். ஒருதடவை ஆவியானவர் போக வேண்டிய வழியையும், திசையையும் காட்டினால் எந்த விதமான தலையீடும் அழுத்தத்தை மாற்றாதப்படிக்கு உணர்ச்சி பூர்வமாக இருக்க வேண்டும். அந்த மாதிரியான தலையீடு தீங்கற்றதாகத் தோன்றலாம். அது சில சமயங்களில் அழகான பல்லவி வடிவத்தில் வேதாகமத்துப்படி பொருளடக்கம் உடையதாக வரலாம், அப்படி வந்து ஆனாலும் மக்களை நடத்திக் கொண்டு போக தேவன் விரும்பும் வழியை முற்றிலுமாக மாற்றலாம். ஆகவே, தலைவர் அன்பாகவும் ஆராதனைக்குரிய இலக்கில் நோக்கி மிகவும் உறுதியாய் இருக்க வேண்டும்.

   அந்தக் கூட்டத்தை திரும்ப சரியான பாதையில் கொண்டு வரக்கூடிய பலவழிகள் அவருக்குக் கூடுமானதாகும். அவர் நேரடியாகவே, இப்பொழுது நண்பர்களே இப்பொழுது ஆவியானவர் சுட்டிக் காட்டி நடத்திச் செல்லும் வழியிலே நாம் போய்கொண்டிருப்போம். நாம் அக்கம் பக்கம் திரும்ப மாட்டோம்" என்று சொல்லலாம் அல்லது அவர் மற்றொரு பல்லவியைத் தொடங்கி அந்த ஆவியின் அசல் தலைப்புப் பொருளைத் திரும்பவும் உட்புகுத்துவதாக இருக்கும். அச்சமயம் அங்கே ஒரு தீர்க்கதரிசன வார்த்தையாக நமது கவனத்தை மறுபடியும் அசல் தலைப்புக்கு கொண்டு வருவதாக இருக்கலாம்.

   இதற்கு தலைவரின் பங்கிற்கு விசுவாசமும் தைரியமான துணிச்சலும் அவசியமாகும். அவர் தமது பகுத்துணர்வையும் சாமர்த்தியத்தையும் பயன்படுத்த வேண்டும். ஆனாலும் அவர் தேவனுடைய நோக்கத்தை அச்சமயத்திற்காக விட்டுக் கொடுக்கக் கூடாது. இதற்கு அதிகமான விவேகமும் கிருபையும் அவசியமாகும். நாம் பரிசுத்த ஆவியானவரை உள்ளடக்கமாக விசுவாசித்தால் அவர் இந்த ஈவுகளை அருளிச் செய்து உதவுவார்.

5. **ஒரு நிலையில் இருந்து மற்றொன்றுக்குப் போவதையும், மாறுதலையும் அறிந்து கொள்க.** பரிசுத்த ஆவியானவர் ஒரு ஆராதனை வழிபாட்டை தாம் விரும்புகிற போக்கில் போகும்படி கட்டளையிடுவார். ஆராதனை வழிபாட்டின் போக்கில் அதன் அழுத்தத்தின் வற்புறுத்துதலில் ஒரு மாறுதல் இருக்கலாம் என்று அடிக்கடி அர்த்தமாகும். உண்மையாகவே, இது பல சமயங்களில் நேரிடலாம். இந்த நிலைமாறும் காலங்கள் மிகவும் முக்கியமானவை. இந்தத் தலைவர் ஆவியானவர் எதைச் செய்ய விரும்புகிறார் என்பதை எதிர்பார்ப்பதில் மக்களை விட சற்று முன்னர் இருக்க வேண்டும். அவர் தெளிவானதும், உறுதியானதுமான தலைமைத்துவத்தை இந்த நிலைக்கு நிலைமாறும் சமயங்களில் கொடுத்து விட வேண்டும். ஏனென்றால் அந்த கூட்டமானது, ஏனோதானோ என்று அலைந்து தொடங்காதபடி பார்க்க வேண்டும். அப்படி தீர்மானம் எடுக்கக்கூடாத நிலைமை உண்டாகும்படி அனுமதித்தால் யாராவது ஒருவருக்கு வழிகாட்டும் கட்டளை கொடுக்கும்படியாக சோதனை ஏற்படலாம். அதனால் ஒரு தவறான குறிப்பு அறிமுகம் செய்யப்படலாம். தலைவருக்கு எப்பொழுதுமே தேவன் அவரை அபிஷேகித்து மக்களை வழிநடத்தும்படியாக நியமித்திருக்கிறார் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். அதனால் அவரே அதை மட்டும் சரியாகச் செய்யும் பொறுப்பானவர். ஒரு பாரமான கரத்தினால் கூட்டத்தை ஆளுகை செய்ய வேண்டாம். மக்கள் மேல் உங்கள் விருப்பச்சித்தத்தை சுமத்தவும் முயற்சிக்கக் கூடாது. உறுதியான ஆனால் சாந்தமான பிடிப்பை ஆராதனையின் போகும் திசை, முன்னேற்றம் ஆகிய இவற்றின் மேல் பிடித்து வைத்துக் கொள்க.

6. **உமது சிந்தனையில் நோக்கத்தை வைத்திருக்கவும்.** சபையின் கூட்டம் கூடி வருதலின் குறிக்கோளையும் நோக்கத்தையும் பார்வையிலிருந்து இழந்துபோய் அகற்றுதல் கூடாது. முதன் முதலாக அது கர்த்தரைத் துதித்து மகிமைப்படுத்துவதாவும், இரண்டாவதாக மக்களை பக்திவிருத்தி செய்து ஆசீர்வதிப்பதாகும். இந்த கூடிவரும் கூட்டத்தை இந்த அடிப்படையான குறிக்கோள்களில் எதிலும் குறைந்த ஒன்றிற்கு தரம் குறைந்து விடாதபடி அனுமதிக்க வேண்டும்.

7. **ஒரு இசையமைப்பாகச் செய்க.** நாம் அடிக்கடி பாடும் நேர்த்தியான பல்லவிகளில் ஒன்று "கர்த்தாவே நம்மை ஒரே இசைத்தொனியாக ஆராதனையின் ஒரே இசைதொனியாகச் செய்வீராக" என்று சொல்லுகிறது. கிரேக்க வார்த்தையான ளுலஅிழநெழ என்பதிலிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் ளுலஅிழலெ "ஒரு மித்து இணங்க" என்று அர்த்தம் தரும். இயேசு சொன்னார், "உங்களில் இருவர் ஒருமித்து இருந்தால்" இதற்கு அவர் ளுலஅிழநெழ என்ற வார்த்தையை அல்லது ஒரே ஒலியின் இசையை உண்டாக்க என்பதை உபயோகித்தார். ஒவ்வொன்றும் ஒருமித்து கூட்டாக கலந்து இருக்க வேண்டும். குரல்கள் அனைத்தும் ஒருமித்து ஒன்றாக வேண்டும். ஆராதனைக் கூடத்தின் பல பகுதிகளுமே ஒருமித்து கலந்து விடவேண்டும். நம்முடைய ஆராதனையின் கூட்டுவழிபாட்டின் மூலமாக தேவன் எய்த விரும்புகிற அடிப்படையான நோக்கங்களில் ஒன்று நம் அனைவரையும் மகிமையான ஒருமைப்பாட்டில் நம்மை கலந்து சேர்த்து விடுவதுதான். அப்படி செய்வதால் நமது ஆள்தன்மையின் மிகவும் ஆழமான மட்டத்தில் அவர் ஒருமைப்பாட்டை அறிமுகப்படுத்தி உற்சாகப்படுத்துகிறார். ஒரு புகழ்பெற்ற விசுவாசி கூறியதாவது, "ஒருமித்து ஜெபிக்கும் குடும்பம் சேர்ந்து ஒருமித்திருக்கிறது" ஆகவே நாமும் கூட ஒரு கூடிவரும் சபையானது, ஒன்றாக சேர்ந்து ஆராதித்தால் அது ஒருமித்தும் சேர்ந்திருக்கும்" என்று சொல்லலாம்.

8. **பங்கெடுத்துக் கொள்ளுவதை உற்சாகப்படுத்தவும்.** இந்நாட்களில் அடிக்கடி கூடிவரும் சபையானது, பங்கெடுத்துக் கொள்ளுகிறவர்களாக இராமல் ஊழியரே அடிக்கடி ஒவ்வொரு காரியத்தையும் செய்வதை பார்க்கிறோம். சபையினர் அதைப் பார்த்துக் கொண்டும், கவனித்துக் கேட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். புதிய ஏற்பாடு ஒவ்வொரு நபரையும் பங்கெடுத்துக் கொள்வதை உற்சாகப்படுத்துகிறது. என்னவென்றாலும் நல்ல திடமான போதனை இந்தத் தலைப்பின் பெயரில் முதலாவதாகக் கொடுக்கப்பட வேண்டும். தேவன் ஆராதிப்பவர்களின் சப்தம் உயர்த்தப்பட்டு ஆராதிப்பதைக் கேட்க விரும்புகிறார் என்பது தேவ ஜனங்களுக்கு போதிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு எப்படி பங்கெடுத்துக் கொள்வது என்பது கற்பிக்கப்பட்ட பின்னர், கற்பிக்கப்பட்ட பிறகு அப்படி செய்வதற்கான சந்தர்ப்பமும் தரப்பட வேண்டும். ஜனங்கள் உள்ளே பிரவேசிக்கும்படி வார்த்தைகளால் அவர்களை உற்சாகப்படுத்தவும். அவர்கள் குரலை துதியில் உயர்த்தும்படி புத்திமதி சொல்லவும். அவர்களது துதியை வெளிப்படுத்திக் காட்ட சந்தர்ப்பங்களை உண்டாக்கவும்.

9. **ஒவ்வொன்றும் நேர்த்தியாகவும், ஒழுங்காகவும் செய்யப்படுவதாக.** அநேக திருச்சபைகளில் இந்த வேதப்பகுதியானது (1கொரி14:14) ஒன்று கூடி வரும் சபையாக பங்கெடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படாததற்கு ஒரு சாக்குபோக்காக உபயோகிக்கப்படுகிறது. அவர்கள் தலைமையையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதலில் மிகுந்த ஆர்வம் கொள்வதால் எதையுமே செய்யப்படும் படியாக அவர்கள் அனுமதிப்பதில்லை. இது தான் வேதாகமத்தில் சொல்லப்படுவதல்ல. தகைமையாகவும் (தகுதியாயவும்) ஒழுங்காகவும் எதுவுமே செய்யப்படக் கூடாது. என்று சொல்லுவதில்லை. அது சொல்லுகிறதாவது, "ஒவ்வொன்றும் செய்யப்பட வேண்டும்" என்பதேயாகும். அங்கே பங்கெடுத்துக் கொள்ளுதல் இருக்கட்டும். அங்கே தீர்க்கதரிசனங்களும் வெளிப்பாடுகளும், சங்கீதங்களும், ஞானப்பாட்டுகளும் ஆவிக்குரிய பாடல்களும் இருக்கட்டும் குழப்பம் ஒன்றும் உண்டாகதப்படிக்கு அவைகள் ஒரு விதமான பாணியில் செய்யப்பட வேண்டும். ஏனென்றால் தேவன் குழப்பத்தை உண்டாக்கும் காரணர் அல்லர்.

10. **சிறப்பாக உயர்ந்திருக்கப்பார்.** நாம் தேவனைத் துதித்து ஆராதிக்கக் கற்றுக் கொள்ளும் பொழுது, நமது இலக்காவது, முடிவாக இந்தக் காரியங்கள் மிகவும் உயர்ந்து சிறந்து விளங்குவதே. இந்த முக்கியமான பகுதிகளில் முன்னேற்றத்தையும் அபிவிருத்தியடைவதே நாம் நோக்கமாக அடைய முயற்சிக்க வேண்டும். அந்த விதமான சிறப்பு மனிதனுடைய சிறப்பாகாது. அது மனுஷீக தாலந்துகளின் அல்லது திறமைகளின் விருத்தியோ அல்ல. சரியான அறிவுத்திறனும் கூர்மையும் உடைய நிபுணர்களின் உத்தியோக நியமனமும் அல்ல. அது ஆவிக்குரிய ஜீவியத்தை ஆழமாக்குவதே. அது ஆவிக்குரிய உணர்வை ஆவிக்குரிய வளர்ச்சி பற்றிய விழிப்புணர்வை, தேவனுடைய ஆவி சொல்லும் மெல்லிசை ஏவுதல்களுக்கு ஆவிக்குரிய பிரதியுத்தரம் சொல்லும் திறமை அனைத்தையும் கூர்மையாக்குவது.

நமது ஆராதனையின் முடிவான குறிக்கோளாவது தேவனை உயர்த்தி உயர்த்தி மகிமைப்படுத்துவதே எவ்வளவுக்கு அதிகமாக செயலூக்கத்துடன் நாம் செய்யக் கூடுமோ அதற்கதிகமாக நமது துதியும் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாகும்.

# அதிகாரம் 11. துதியின் தீர்க்கதரிசன முக்கியத்துவம்

வேதாகமம் முழுவதிலுமே துதியின் முக்கியத்துவம் வற்புறுத்தப்படுகிறது. துதி எப்பொழுதுமே முக்கியமானதாக இருந்திருக்கிறது. என்னவென்றாலும், இந்த யுகத்து கடைசி நாட்களில் துதியும் ஆராதனையுமே முக்கியமானவைகளாக இருக்கிறது. மேலும் அவை தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதில் விசேஷமான பங்கை வகிக்கிறது. இதன் காரணமாகத்தான் தேவன் தமது மக்களிடையே துதியைத் திரும்பவும் கொண்டு வருகிறார். நாமும் வெகுவேகமாக கிறிஸ்துவின் இந்த உலகில் வெளிப்படும் அரசாட்சியை நோக்கி விரைந்து போய் கொண்டிருக்கிறோம். அந்த யுகத்தின் மகாபெரிய குணச்சிறப்புகளாக துதியும், ஆரதனையும் இருக்கும். ஆகவே தேவன் தாமே தமது மக்களை அந்தக் காலத்துக்காக ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார். நாம் ஏற்கனவே அவருடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசித்திருக்கிறோம். மேலும் நமது ஆயத்தத்தின் ஒரு பகுதியாவது, துதியிலும், ஆராதனையிலும் சிறந்து விளங்குவது தான்.

**தேவனுக்கான உன்னதமான துதிகள்** (சங் 149:6)
சங்கீதம் 149ன் முதல் பகுதி கர்த்தரைத் துதிப்பதற்கான, புத்திமதிகளையும், கட்டளைகளையும் நிரம்பப் பெற்றிருக்கிறது. அங்கே பலவிதமான வழிகளில் தேவனைத் துதிப்பதற்காக குறைந்தது பத்து தெளிவான கட்டளைகள் இருக்கின்றன. நாம் அவரை நோக்கி பாடவேண்டும் என்று நமக்குச் சொல்லப்படுகிறது. அவரில் களிகூர வேண்டும். நமது இராஜாவுக்குள்ளாக ஆனந்தமாயிருக்க வேண்டும். அவருக்கு முன்பாக நடனமாட வேண்டும். சங்கீத வாத்தியங்களோடு அவரைத் துதிக்கவும் வேண்டும்.

வசனம் 6ல், அந்த துதியின் உன்னதமான வெளிப்படுத்துதலை அடைகிறோம். அதுவும் மிகவும் உன்னதமான மட்டத்து சுத்தமான துதியாகும். அதை தாவீது “கர்த்தரை உயர்த்தும் துதி” என்று அழைக்கிறான். கடைசி காலத்து தேவனுடைய சேனையின் முடிவான போராயுதமாவது, “அவர்கள் வாயல் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும்” இந்தப் போராயுதங்களால் சத்துருவுக்கு எதிராக வெற்றியான போரை புரிந்தும் முடிவாக ஜெயத்தை தேவனுடைய நாமத்தினால் பெறவும் வேண்டும். தேவன் துதியைப் பற்றி பல காரியங்களை நமக்கு போதிக்கும் படியாக தேடுகிறார். அவர் நம்மை ஒரு சத்தியத்திலிருந்து மற்றொரு சத்தியத்திற்கு முன்னேறும்படி நடத்திச் செல்கிறார். எப்பொழுதும் நமது துதிகளை மேலும் பரிசுத்தமாக்க விரும்புகிறார். கடைசியாக நாமும் கர்த்தரை உயர்த்தும் துதிக்குள் போக முடியும் வரைக்கும் அவ்வாறு செய்கிறார்.

**மேலும் அவர் செய்ய நினைப்பது :**

a. துதியைக் குறித்து நாம் புரிந்து கொள்வதை விசாலமாக்க
b. துதியில் நமது மனப்பான்மைகளை பரிசுத்தப்படுத்த
c. துதியின் வெளிப்படுத்திக் காட்டுதலை திரும்பவும் புதிதாக்க
d. அவருடைய சிம்மாசனத்தை அவைகளின் மேல் ஸ்தாபிக்க. (சங் 22:3).
e. அவைகளின் மூலமாக அவருடைய அதிகாரத்தை வெளிப்படுத்த.

வசனம் 8ல் நாம் கர்த்தரை உயர்த்தும் துதிகளை அப்பியசிக்க ஆரம்பிக்கும் பொழுது, அவர் எதை நிறைவேற்றப் போகிறார் என்று நமக்குச் சொல்கிறார். “அவர்களுடைய இராஜாக்களை சங்கிலிகளாலும், அவர்களுடைய மேன்மக்களை இருப்பு விலங்குகளால் கட்டுவதாகவும் கூறுகிறார். இவைகளனைத்தும் பூமியின் மனித இராஜாக்களும், மேன்மக்களும் அல்ல. அவைகள் புறஜாதிமக்களின் மீது ஆவிக்குரிய ஆட்சியை நடத்தும் துரைத்தனங்களும் அதிகாரங்களுமாம். அவருடைய ஜனங்களின் கர்த்தரை உயர்த்தும் துதிகளுக்கு பிரதியுத்தரமாக தேவன் தாமே இந்த சாத்தானின் துரைத்தனங்களைக் கட்டிப்போட்டு அவர்கள் அடிமைத்தனம் படுத்திய ஜனங்களை

விடுவித்து, அவர்களை இராஜ்ஜியத்தின் நற்செய்தியின் (சுவிசேஷத்தின்) ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளச் செய்வார். இந்த நற்செய்தி ஆசீர்வாதமானது, உலகம் என்றுமே சாட்சியாக சந்தித்திருக்காத மகாபெரிய ஆவிக்குரிய எழுப்புதலுக்கு வழியை ஆயத்தம் பண்ணுவதாகும். இந்த உலகத்தின் மகாபெரிய அஞ்ஞானியான நாடுகள் தேவனுடைய இராஜ்ஜியத்திற்காக திறந்து விடப்படப் போகிறது. யோவேல் தீர்க்கதரிசனமாகப் பார்த்த நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கில் இருக்கும் திரள் திரளான மக்கள் பல நூற்றாண்டுகளாக தாங்கள் கட்டப்பட்டு இருந்த ஆவிக்குரிய அடிமைத் தனத்திலிருந்து விடுதலை பெற்று தேவனுடைய மகிமையான ஆட்சியின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்காக விடுதலை பெறப்போகிறார்கள்.

## சங் 67. சகல ஜாதிகளுக்கும் தேவனுடைய பாதுகாப்புத்தரும் ஆரோக்கியம்

இந்த தீர்க்கதரிசன சங்கீதம் தேவனுடைய இரக்கத்தையும், ஆசீர்வாதத்தையும் சகல ஜாதிகளுக்கும் வெளிப்படும் படியாக ஒரு இறைஞ்சுதலுடன் ஆரம்பிக்கிறது. மேலும் அது தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பார். பூமி தன் பலனைத் தரும் என்றும் பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்கு பயந்திருக்கும் என்ற முன்னறிவிப்போடே முடிகிறது. இந்த பொதுவான ஆசீர்வாதத்தை விடுவிக்கும் திறவு கோலாவது, தேவனுடைய ஜனங்கள் துதிக்கும் துதியாகும் (வசனம் 3,5).

## இந்த துதியின் வளர்ச்சி அடைதலைக் கவனிக்கவும்

1. "தேவனே சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக" இது தேவனுடைய ஜனங்களைக் குறிக்கிறது. அதாவது அவரால் இரட்சிக்கப்பட்ட மக்களைக் குறிக்கும். அவர்கள் தேவனைத் துதித்துக் கொண்டிருக்கும் ஒரு சேனையின் தலைவர்களாக இருக்க வேண்டியவர்கள். இந்த யேகோவாவுடைய மகத்தான ஆசீர்வாதத்தை உலகம் முழுவதற்குமாக துரிதப்படுத்தி பிரித்தெடுத்துக் கொண்டு வருவது அவரால் இரட்சிக்கப்பட்ட சமுதாயத்தின் துதிகளாகும்.

2. "ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக" துதியானது தேவனுடைய இரட்சிக்கப்பட்ட ஜனங்களுக்கு மட்டும் என்று வரையறுக்கப்படாமல், அவர்களுக்கும் அப்பால் பரவிசெல்லும் என்பதைக் அடையாளங்காட்டும் காலமாகும். மேலும் மறுபடியும் ஜெனிப்பிக்கபடாத மக்களுங்கூட யேகோவாவை துதிப்பார்கள். அவர்கள் அவரை கண்டு கொண்டு, அங்கிகரித்து, அந்த ஒரே தேவனாகவும் துதிக்கும், ஆராதனைக்கும், போற்றுதலுக்கும் பாத்திரரான ஒருவராகப் பார்ப்பார்கள்.

3. "ஆதலால் ஜாதிகள் சந்தோஷித்து கெம்பீரத்தோடே மகிழக்கடவர்கள் " இந்த அளவுக்குறிப்பில் சகல ஜனங்களும் யேகோவாவுக்கு பிரியமாகவும் பேசி அவரைத் துதித்தும் பேசுவார்கள். மனுஷரால் தீர்க்க முடியாத குழப்பத்திற்கான ஒரே இரட்சிப்பானது, தேவனுடைய ஆளுகையின் தலையீடு செய்வதற்குள் மட்டுமே இருக்கிறதென்பதை உணர்ந்து கொள்ள ஆரம்பிப்பார்கள்.

   இந்த துதியின் சங்கிலியான எதிர்கிரியை தேவனுடைய ஜனங்களால் துரிதப்படுத்தப்பட்ட பொழுது, அது பூமிக்கு தேவனுடைய ஆளுகையையும் நியாயத்தையும் கொண்டு வரும். (வசனம் 4) இது மாத்திரமே "பூமியில் தேவனுடைய வழியும் எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சண்யமும் விளங்கும்" (வசனம் 1,2).

   இங்கே இரட்சண்யம் (ஆரோக்கியம்) என்னும் வார்த்தைக்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ள கிரேக்க பதம் லுநளாயா என்பது ஆராக்கியம் (இரட்சண்யம்) என்று அர்த்தம் தரும். மேலும் அந்த கிரேக்க வார்த்தைக்கு இரட்சிப்பு, விடுதலை, ஜெயம், செல்வச்செழிப்பு, நல்வாழ்க்கை என்ற அர்த்தங்களும் உண்டு. இந்த சகல ஆசீர்வாதங்களும் ஒரே ஒரு ஆள்தன்மைக்குள் மறைந்து இருக்கின்றன. அவருடைய பெயர் இயேசு என்பதே. உலகத்தின் திரளான குழப்பங்களுக்கு அவரே ஒரே பிரதியுத்தரமாவார். அவரை மாத்.திரமே நாம் நோக்கிப் பார்க்க வேண்டும். நாம் தேவனுடைய உயர்ந்த துதிகளுக்குள் போகும் போது மட்டுமே அவருடைய வருகையானது துரிதப்படுத்தப்படும்.

## சங்கீதம் 72. இராஜ்ஜியத்தின் ஆளுகை

சங்கீதம் 72. மகிமையான, தீர்க்கத்தரிசன மேசியாவின் சங்கீதமாகும்.. நமது மேசியாவான இயேசுவின் வருகிறதான (வரப்போகும்) இராஜ்ஜியத்தின் பல அதிசயமான அம்சங்களை கோடிட்டுச் சொல்கிறது. இந்த சங்கீதம் முழுவதுமே இராஜ்ஜியத்தைக் குறித்த அதிசயமான விஷயங்களால் நிரம்பி இருக்கிறது. எப்படியென்றாலும் அவைகளில் இரண்டைப் பற்றி மட்டும் இங்கே குறிப்பிடுவோம். அவைகள் நம்முடைய தற்சமயம் இருக்கின்றதோடு ஒத்துப் போகிறது.

வசனம் 15 b. அவர் (மேசியா) எந்நாளும் ஸ்தோத்திரிக்கப்படுவார்.

வசனம் 17. "அவருடைய நாமம் என்றென்றைக்கும் இருக்கும் சூரியனுள்ள மட்டும் அவருடைய நாமம் சந்தான பரம்பரையாய் நிலைக்கும். மனுஷர் அவருக்குள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். எல்லா ஜாதிகளும் அவரை பாக்கியமுடையவர் என்று வாழ்த்துவார்கள்".

தேவனுடைய சிம்மாசனம் எருசலேமில் ஸ்தாபிக்கப்படும். கிறிஸ்துவே அதன் மேல் வீற்றிருப்பார். தாவீது இராஜா அவருக்கு இராஜ பிரதிநிதியாக இருப்பார். (எரேமியா 30:9; எசேக்கியேல் 37:24,25).

எல்லா ஜாதிகளும் சேனைகளின் இராஜாவைத் தொழுது கொள்ளும் படிக்கும் கூடாரப் பண்டிகையை ஆசரிக்கும்படிக்கும் வருஷாவருஷம் (எருசலேமுக்கு) வருவார்கள். (சகரியா 14:16).

கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும். எல்லா ஜாதிகளும் தேவனுடைய ஆலயத்துக்குப் போவோம் வாருங்கள் அவர் (கர்த்தர்) தமது வழிகளை நமக்குப் போதிப்பார் (ஏசாயா 2:2,3).

"திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து "நாம் கர்த்தரின் பர்வதத்திற்கும் யாக்கோபின் தேவனுடைய ஆலயத்ததுக்கும் போவோம் வாருங்கள். அவர் தமது வழிகளை நமக்கு போதிப்பார். நாம் அவர் பாதைகளின் நடப்போம்" என்பார்கள் (மீகா 4:2).

எருசலேமுக்கு வராதவர்கள் எவர்களோ, அவர்கள் மேல் மழை வருஷிப்பதில்லை. (சகரியா 14:17). அந்நாளிலே "கர்த்தருக்குப் பரிசுத்தம்" என்றும் விலாசம் எழுதியிருக்கும். (சகரியா 14:20).

"சாஷ்டாங்கம் செய்ய வாரும், சாஷ்டாங்கம் செய்ய வாரும் இயேசுவை" ஆமென்.

# பழைய ஏற்பாட்டு புத்தகங்களின் குறுக்கிய சுருக்கம்

## I. பென்ட்டாடக்கின் ஐந்து புத்தகங்கள்

1. **ஆதியாகமம்** : (படைப்பின்) தோற்றத்தின் புத்தகம் . அண்ட சராசரம், மனித வர்க்கம் - இவற்றின் தோற்றம் (படைப்பு) தெரிந்தெடுக்கப்பட்ட மக்களின் ஆதி வரலாற்றின் பெரிதான வரலாற்று பதிப்புகள்.

2. **யாத்திராகமம்** : அடிமைத்தனம், விடுதலை, கானானுக்குப் போகும் மார்க்கத்தில் இஸ்ரவேலரின் வரலாற்று ஆரம்பம் - மோசேயின் தலைமைத்துவத்தின் கீழ்.

3. **லேவியராகமம்** : சன்மார்க்கத்தைப் பற்றிய பிரமாண புத்தகம், சுத்தம், உணவு ஆகியவை. பலிகளின் மூலமாக தேவனை அடையலாம் என்று போதித்தல்.

4. **எண்ணாகமம்** : இஸ்ரவேலருடைய பிரயாணங்கள் வனாந்தரத்தில் 40 ஆண்டுகள் அலைந்து திரிந்த வரலாறு.

5. **உபாகமம்** : இஸ்ரவேலர் கானானுக்குள் பிரவேசிப்பதற்கு சற்று முன்னதாகத் திரும்பவும் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணம்.

## II. வரலாற்று புத்தகங்கள் - பன்னிரண்டு.

1. **யோசுவா** : யோசுவாவின் தலைமைத்துவத்திற்கு அடியில் கானான் தேசத்தின் மேல் ஜெயம். பன்னிரு கோத்திரங்களுக்கு இடையில் தேசம் பிரித்தளிக்கப்பட்டது.

2. **நியாயாதிபதிகள்** : இஸ்ரவேலரின் ஆறுதரம் முறியடிக்கப்படுதல். அந்நாட்டு பல்வேறு விடுதலைகள் பதினைந்து நியாயாதிபதிகளின் வழியாய் அடைதல்.

3. **ரூத்** : ரூத்தைப் பற்றிய அழகிய கதை. தாவீது இராஜாவுக்கும் இயேசு கிறிஸ்துவுக்கும் முற்பாட்டியான வரலாறு.

(4.5.) 1,2 **சாமுவேல்** : சாமுவேலுடைய வரலாறு. இஸ்ரவேலில் மன்னராட்சி தோற்றமும் சவுல் தாவீது என்பவர்களுடைய ஆரம்ப ஆட்சி ஆண்டுகளும்.

(6.7). 1,2, **இராஜாக்கள்:** இஸ்ரவேல் இராஜ்ஜியத்து ஆரம்ப வரலாறும், பின்னர் நாடு பிரிக்கப் படுதலும், எலியா, எலிசா என்பவர்களுடைய வீரகதாபாத்திர தோற்றமும்.

(8.9). 1,2 **நாளாகமம்** : தாவீது, சாலமோன் என்பவர்களது ஆட்சி கால பெரும்பான்மை சரித்திரமும், சிறைபட்டு போகும் காலம் வரை யூதா இராஜாக்களின் ஆட்சி.

10. **எஸ்றா** : யூதர்கள் சிறையிருப்பில் இருந்து மீண்டும் திரும்பி வந்த வரலாறு. அந்த பரிசுத்தமான கட்டளை பிரமாணங்கள் மறுபடியும் ஸ்தாபிக்கப்படுதலும்.

12. **எஸ்தர்** : இராஜாத்தியாகிய எஸ்தர் ஆமானின் சதித்திட்டத்திலிருந்து யூதரை இரட்சித்துக் காப்பாற்றிய வரலாறு. பூரீம் பண்டிகை நிர்ணயமும் ஸ்தாபனமும்.

## III. செய்யுள் வரி வடிவ புத்தகங்கள் - ஐந்து

1. **யோபு** : நெருக்கத்தின் பிரச்சனை. சாத்தானுடைய கெடுதல் செய்யும் வன்மம்; யோபுடைய பொறுமை, மனுஷீக தத்துவத்தின் மாய்மாலம், தெய்வீக ஞானத்தின் அவசியம். இடுக்கண்பட்டவனுடைய முடிவான விடுதலை.

2. **சங்கீதங்கள்** : 150 ஆவிக்குரிய பாட்டுகள், செய்யுள்கள், ஜெபங்கள் ஆகியவை யூதர்களாலும், திருச்சபையாலும் பல நூற்றாண்டுகளாக ஆராதனை, தியானத்திற்காக பயன்படுத்தப் பட்டவைகளின் ஓர் தொகுப்பு.

3. **நீதிமொழிகள்** : நல்லொழுக்க – மத சம்பந்தமான குறிக்கோள்களும், ஞானம், மதுவிலக்கு நீதி- நியாயம் ஆகியவற்றின் தொகுப்பு.

4. **பிரசங்கி** : ஜீவியத்தின் மாயை பற்றிய பிரதிகிரியையும் நமது கடமைகளும், கடமைப் பொறுப்புகளும் - தேவனுக்கு உரியவைகளானவை.

5. **உன்னதப்பாட்டு** : கிறிஸ்துவுக்கும், திருச்சபைக்கும் இடையே உள்ள பரஸ்பரமான அன்பை அடையாளமாக்கும் சமயார்த்தமான கவிதை.

## IV.தீர்க்கதரிசன புத்தகங்கள் - பதினேழு.

1. **ஏசாயா** : இரட்சிப்பின் மகா தீர்க்கதரிசி மேசியாவைப் பற்றிய நிரம்ப தீர்க்கதரிசனங்கள் அடங்கிய புத்தகம். பாவம் நிறைந்த தேசங்கள் மீது கூறப்பட்ட பாரங்கள் கலந்த புத்தகம்.

2. **எரேமியா** : அழுது கொண்டிருக்கும் தீர்க்கதரிசி யோசியா ராஜாவின் காலமுதல் சிறைபட்டு போகும் காலம் வரைக்கும் வாழ்ந்தவர். முக்கியமான பொருள் தலைப்பு – பின்வாங்கிப் போகும் காலம், அடிமைத்தனம் யூதர்கள் திரும்ப கொண்டு வரப்படுதல்.

3. **புலம்பல்கள்** : இஸ்ரவேலின் இடுக்கண்கள் பற்றிய எரேமியா அழுகையின் புலம்பல்களின் வரிசை.

4. **எசேக்கியேல்** : தேவனுடைய ஜனங்களின் துக்ககரமான நிலைமையையும், அந்த வருங்காலத்து மேன்மையான உயர்வையும், மகிமையையும் சேர்த்து படம் பிடித்துக் காட்டும் குறிப்பான உருவக அணிகள் நிரம்பியதோர் புத்தகம்.

5. **தானியேல்** : சுயசரிதையும், தெய்வீக அருள் வெளிப்பாட்டு தரிசனங்கள் சமயசார்பற்றதும் புனிதமான வரலாற்று சம்பந்தப்பட்டதுமான சம்பவங்கள் அடங்கிய புத்தகம்.

## V. சிறிய தீர்க்கதரிசிகள் பன்னிரண்டு

6. **ஓசியா** : ஏசாயாவின் காலத்து வாழ்ந்த சமகாலத்து தீர்க்கதரிசி. மத்திய கருத்து : இஸ்ரவேலர் வழிதப்பி போகுதல் ஆவிக்குரிய விபசாரம் எனக் கூறப்படுகிறது. ஜனங்களுடைய பாவங்களை விவரிக்கும் வியக்கத்தக்க உருவக அணிகள் நிரம்பப்பெற்றது.

7. **யோவேல்** : யூதாவின் ஓர் தீர்க்கதரிசி. நடைமுறையான தலைப்புப் பொருள். தேசிய மனந்திரும்புதலும் அதன் ஆசீர்வாதங்களும். “கர்த்தரின் நாள்” தெய்வ நியாயத்தீர்ப்பின் ஓர் காலம். ஒரு கால் ஆசீர்வாதகாலமாக மறுரூபமாகலாம்.

8. **ஆமோஸ்** : மேய்ப்பனாகிய தீர்க்கதரிசி. ஒரு தைரியமான சீர்திருத்தக்காரன். சுயநலத்தையும், பாவத்தையும் கண்டித்தார். இப்புத்தகத்தில் ஐந்து தரிசனங்கள் வரிசையாக அடங்கப்பெற்றுள்ளன.

9. **ஒபதியா** : நடைமுறைத் தலைப்பு. ஏதோமின் நியாயத்தீர்ப்பும் இஸ்ரவேலின் முடிவான விடுதலையும்.

10. **யோனா** : “ஆர்வமற்ற தயங்கும் சுவிசேஷ பிரச்சாரகன்” கசப்பான அனுபவங்களால் தாழ்மையின் பாடத்தையும், தெய்வீக இரக்கத்தின் ஆழத்தையும் அறியும்படியாக போதிக்கப்பட்டான்.

11. **மீகா** : இஸ்ரவேல் - யூதாவின் ஒழுக்க நிலைமை குறித்த இருள் நிறைந்த படம் காட்டப்படுகிறது. ஆனாலும் மேசியாவின் இராஜ்ஜியமானது, ஸ்தாபிக்கப்பட்டு அதில் நீதிமான்கள் வாழ்வார்கள் என்பதை முன்னுரைக்கும் தீர்க்கதரிசி.

12. **நாகூம்** : நடைமுறைத் தலைப்பு. நினிவேயின் அழிவு அசீரியரிடமிருந்து யூதாவுக்கு விடுதலை வாக்கு செய்யப்பட்டது.

13. **ஆபகூக்** : பாபிலோனிய அல்லது கல்தேய காலத்து எழுதப்பட்டது. நடப்பு தலைப்பு – தெய்வ அருளின் இரகசியங்கள். நீதியுள்ள ஒரு தேவன் ஒரு பொல்லாத ஜாதியை இஸ்ரவேலை ஒடுக்கும் படியாக எப்படி அனுமதிக்கலாம்?

14. **செப்பனியா** : தொனியில் சோகம் மிகுந்தது, மிரட்டுதல்களால் அடங்கப் பெற்றது. ஆனால் இஸ்ரவேலின் வருங்காலத்து மகிமையின் தரிசனத்தோடு முடிகிறது.

15. **ஆகாய்** : சகரியாவின் சக நண்பன். ஜனங்களை அந்த இரண்டாவது, ஆலயத்தைக் கட்டுவதற்கு சோம்பலாய் இருந்ததைக் கண்டித்தான். ஆனால், அந்த ஆலயம் கட்டித்தீர்ந்த பின்னர் கர்த்தரின் மகிமை திரும்பி வரும் என்று வாக்குறுதி தந்தான்.

16. **சகரியா** : ஆகாய் காலத்து சமகாலத்து தீர்க்கதரிசி. அவன் யூதர்களை அந்த ஆலயத்தைத் திரும்பக் கட்டுமாறு தூண்டி எழுப்பினான். அவனுக்கு வரிசையாக எட்டு தரிசனம் கிடைத்தது. தேவனுடைய இராஜ்ஜியத்தின் முடிவான ஜெயத்தை கண்டறிந்தான்.

17. **மல்கியா** : பழைய ஏற்பாட்டு காலத்து முடிவை எழுத்துருவமான படமாக மேசியாவின் வருகைக்கு முன்னால் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்களைக் காட்டுகிறது.

# புதிய ஏற்பாட்டு புத்தகங்களின் குறுக்கிய சுருக்கம்

## I. வாழ்க்கை வரலாற்று நூல்கள் நான்கு

1. **மத்தேயு** : ஆசிரியர் பன்னிரு சீஷர்களின் ஒருவர். இதன் பேசும் போக்கானது, விசேஷமாக யூதர்களுக்கு ஏற்றதாக ஆக்கப்பட்டு இயேசுவை யூதத் தீர்க்கதரிசனத்து இராஜரீக மேசியாவாகக் காண்பிக்கிறது.

2. **மாற்கு** : எழுதியவர் யோவான். மாற்கு ஒரு சுருக்கமான வருணனை மிகுந்ததானதாக கிறிஸ்துவுக்கு இயற்கை, வியாதி, பிசாசுவின் மேல் உள்ள அமானுஷயமான வல்லமைக்கும் அழுத்தத்தையும் கொடுக்கும். இந்த தெய்வீக வல்லமை அனைத்தும் நீதிமானுக்காக கிரியை செய்யும்.

3. **லூக்கா** : எழுதியவர் “பிரியமான வைத்தியன்” இயேசுவைப் பற்றிய முழுவதும் முற்றுப் பெற்ற இயேசுவின் வாழ்க்கை வரலாறு பற்றியது. இதில் இயேசுவை பாவிகளுக்கும், ஏழைகளுக்கும் இரக்கம் நிறைந்த மனுஷகுமாரனாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

4. **யோவான்** : எழுதியவர் “பிரியமான சீஷன்” இந்த வரலாறு இயேசுவை தேவ குமாரனாக வெளிப்படுத்தி அவரது ஆழமான போதனைகளை அறிக்கை செய்கிறது. இரண்டு பதங்களான விசுவாசம், நித்திய ஜீவன் என்பதை இப்புத்தகம் முழுவதிலுமே அழுத்தம் கொடுத்து வற்புறுத்தப்படுகிறது.

## II. வரலாற்று புத்தகம் ஒன்றே ஒன்று

**அப்போஸ்தலர் நடபடிகள்** : எழுதியவர் லூக்கா. லூக்கா எழுதின சுவிசேஷத்திற்குப் பின் தொடர்ச்சிப் பகுதியாகும். முக்கியபொருள் தலைப்பு : ஆதித் திருச்சபையின் தோற்றமும், வள்ச்சியும், கிறிஸது பரத்துக்கு எழுந்தருளுதலில் இருந்து பவுல் ரோமாபுரியில் காவலில் வைக்கப்படும் வரைக்கும்.

## III. பவுல் எழுதிய நிரூபங்கள் பதிமூன்று

1. **ரோமர்** : ரோமாபுரியில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது. பகுதி ஐ. அதி 1-11 வரை இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றிய அதன் தேவை குறித்தும், இயல்பைக் குறித்தான நிபுணத்துவமான விளக்கவுரையாகும். பகுதி II. அதி 12-16 வரை, ஆவிக்குரிய, சமூக, குடியுரிமை கடமைகள் குறித்தான பெரிதான உபதேசங்கள்.

2. **1கொரிந்தியர்.** கொரிந்து சபைக்கு எழுதப்பட்டது. முக்கியமான நடப்புத்தலைப்பு பொருள். திருச்சபையை அதன் பலதரப்பட்ட தீமைகளிலிருந்து சுத்திகரிக்கப்படுவதும், அத்துடன் சத்தியத்து தத்துவ போதனைகளும்.

3. **2கொரிந்தியர்.** நடப்புத்தலைப்புப் பொருள். அப்போஸ்தல ஊழியத்தின் சிறப்பான பண்பியல்புகளும், பவுலின் அப்போஸ்தல ஊழியத்தைப் பற்றிய மெய்ப்பித்துக் காட்டுதலும்.

4. **கலாத்தியர்** : கலாத்தியாவிலுள்ள சபைக்கு எழுதப்பட்டது. நடப்புப் பொருள் தலைப்பு. பவுலின் அப்போஸ்தலத்துவ பாதுகாப்புப் பற்றிய தன்னிலை வாதம். விசுவாசத்தினால் நீதியாகுதல் என்ற கோட்பாடும் அத்துடன் பொய்யான போதகர்களுக்கு எதிரான எச்சரிக்கையுடன் யூத மதத்திற்கு தலைகீழாக மாறும் நிலைமையைப் பற்றிய எச்சரிப்பும்.

5. **எபேசியர்** : எபேசு பட்டணத்துத் திருச்சபைக்கு எழுதப்பட்டது. மகிமையான இரட்சிப்பின் திட்டத்தைக் குறித்ததோர் விளக்கம். யூதர்களுக்கும் புறஜாதியாருக்குள்ளும் இடையே உள்ள தடைகளை உடைத்தெறியப் பட்டதென்ற விஷயத்தின் மேல் விசேஷமான அழுத்தம் கொடுத்தல்.

6. **பிலிப்பியர்** : பிலிப்பு பட்டணத்துத் திருச்சபைக்கு எழுதப்பட்டதோர் அன்புக் கடிதம் அப்போஸ்தலனுடைய அதீதமான பக்தியை வெளிப்படுத்தகிறது. அவனுடைய சிறையில் சந்தோஷமான அனுபவத்தையும் திருச்சபைக்காக அவன் கொண்டிருந்த ஆழமான கரிசனையும், அந்த திருச்சபை சுத்தமான உபதேசத்தில் நிலை நிற்க வேண்டும் என்பதுவே.

7. **கொலோசேயர்** : கொலோசே பட்டணத்து சபைக்கு எழுதப்பட்டது. நடப்பு தலைப்பு : திருச்சபைக்கு தலையாக கிறிஸ்துவின் மனித எல்லைக்கப்பாற்பட்டு நிற்கும் மகிமையையும், எல்லா உலகப்பிரகாரமான உபதேசத்தையும், பாவத்தையும் விட்டு விலகுமாறு அழைப்புக் கொடுத்து விடுகிறது.

8. **1தெசலோனிக்கேயர்** : தெசலோனிக்கா திருச்சபைக்கு எழுதப்பட்டது. இது அப்போஸ்தல பாராட்டுரைகளும் நினைவுக் கூறுகளும், ஆலோசனைகளும் புத்திமதிகளாலும் நிறைந்தது. வருங்கால வருகையைக் குறித்த ஆறுதலான நம்பிக்கைக்கு கொடுக்கப்படும். விசேஷமான அழுத்தத்திற்காகவும்.

9. **2தெசலோனிக்கேயர்** : முதலாம் நிரூபத்திற்குப் பின் தொடர்ச்சியாகும். கிறிஸ்துவின் இரண்டாம் வருகைப்பற்றிய உபதேசத்தைக் குறித்து திருச்சபை விளங்கிக் கொள்ளவும், விசுவாசிகளை அமைதியின்மை, சமூக ஒழுங்கினங்களை குறித்து எச்சரிக்கவும்.

10. **1தீமோத்தேயு** : இளைஞனான போதகருக்கு அவருடைய நன்னடத்தை பற்றியும் ஊழியத்தையும் குறித்த ஆலோசனைகள்.

11. **2தீமோத்தேயு** : பவுல் மரணமடைவற்கு சற்று முன்னர் எழுதப்பட்டது. “விசுவாசத்தில் உண்மையான குமாரனுக்கு” போதனைகளும், ஆலோசனைகளும் கொடுக்கப்பட்டதாகும்.

12. **தீத்து** : நம்பிக்கையான நண்பரும் கடினமான பங்கில் இருக்கும் போதகருமான நண்பருக்கு ஆலோசனையும், புத்திமதிகளும் கொடுத்து எழுதப்பட்ட நிரூபம். நல்ல கிரியைகளைப் பற்றிய கோட்பாட்டுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது.

13. **பிலோமோன்** : பிலோமோனுக்கு எழுதப்பட்ட தனிப்பட்டதான கடிதம். ஒநேசிமு என்ற ஓடிப்போன அடிமையை மன்னித்து திரும்பச் சேர்த்துக் கொள்ளும் படியாக வேண்டுகோள் விடுத்து எழுதப்படடது.

## IV. பொதுவான நிரூபங்கள் - எட்டு.

1. **எபிரேயர்** : ஆசிரியர் நிச்சயமாகத் தெரியவில்லை. நடப்புத் தலைப்பு : கிறிஸ்துவின் எல்லையற்ற மகிமையும் புதியத் திட்டத்தின் பேரில் பெறும் ஆசீர்வாதங்கள் பழைய ஏற்பாட்டுடையவைகளுடன் ஒப்பிடப்படுகிறது.

2. **யாக்கோபு** : எழுதியவர் ஒருவேளை யாக்கோபாக இருக்கலாம். கர்த்தருடைய சகோதரர் சிதறிப்போன யூத மதம் திரும்பியவர்களுக்கு எழுதப்பட்டது. முக்கிய தலைப்பு : நடைமுறை விசுவாசம் சாதாரண தொழில் முறையில் இருந்து வித்தியாசமானதாக சகல நற்கிரியைகளிலும் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதாகும்.

3. **1பேதுரு** : தைரியத்தைக் கொடுக்கும் உற்சாகமான நிரூபம் அப்போஸ்தலனாகிய பேதுருவால் சின்ன ஆசியா எங்கும் சிதறி இருக்கும் பரிசுத்தவான்களுக்கு எழுதப்பட்டது. நடப்பு தலைப்பு : விசுவாசிகளுக்கான சலுகைகள் கிறிஸ்துவின் முன் மாதிரியைப் பின்பற்றி சோதனைகளுக்கு மத்தியில் ஜெயம் பெற்று பரிசுத்தமில்லாததோர் உலகில் பரிசுத்த ஜீவியம் செய்யுமாறு எழுதப்பட்டது.

4. **2பேதுரு** : பொய்யான போதகர்களையும் புரட்டர்களைக் குறித்தும் அவர்களுக்கு விரோதமான எச்சரிக்கை.

5. **1யோவான் :** ஒரு ஆழமான ஆவிக்குரிய செய்தியானது அப்போஸ்தலனாகிய யோவானால் திருச்சபையிலுள்ள வித்தியாசமான வகையான விசுவாசிகளுக்கு எழுதப்பட்டது. அது விசுவாசிகளுடைய சலுகையான ஆவிக்குரிய மெய்யறிவும் அந்நியோந்நிய ஐக்கியத்தின் கடமைகளையும் சகோதர சிநேகத்ததையும் வற்புறுத்திக் காட்டுகிறது.

6. **2யோவான் :** தெய்வீக சத்தியத்தைக் குறித்தும் உலகத்து தவறுகளைக் குறித்தான யோவானுடைய செய்தியாகும். தெரிந்து கொள்ளப்பட்டவளான அம்மாளுக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும் எழுதப்பட்டது. பொய்யான உபதேசங்களையும், பொய்யான போதகர்களைக் குறித்தும் அவர்களுக்கு எதிராக எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

7. **3 யோவான் :** காயுவுக்கு எழுதப்பட்ட அப்போஸ்தல பாராட்டு கடிதம் திருச்சபையில் உள்ள குறிப்பிட்ட சில நபர்களைக் குறித்தான குணச் சித்திரங்கள் அடங்கியது.

8. **யூதா :** எழுதியது ஒருவேளை யாக்கோபுடைய சகோதரராக இருக்கலாம். நடப்பு தலைப்புகள் கள்ள உபதேசத்தைக் குறித்த வரலாற்றுச் சான்றுகள் தெய்வீக நியாயத்தீர்ப்பு பாவிகளின் மேல் ஒழுக்கக் கேடுள்ள போதகர்களுக்கும் எதிரான எச்சரிக்கை அடங்கப்பெற்றது.

## V. தீர்க்தரிசன புத்தகங்கள் ஒன்று

**வெளிப்படுத்தின விசேஷம் :** எழுதியவர் யோவான் அப்போஸ்தலர் நடப்புத் தலைப்பு – ஒரே வரிசையான தெய்வீக அருள் வெளிப்பாட்டு தரிசனங்கள். இவை மார்க்க வரலாற்று சம்பந்தமான சம்பவங்களைப் பற்றியவை. ஒரு பெரிய ஒழுக்கப் போராட்டமானது, தெய்வீகமானதற்கும் சாத்தானிய வல்லமைகளுக்கும் இடையே நடக்கக் கூடியதை படம் பிடித்துக் காட்டுகிறது. ஆட்டுக்குட்டியானவர் பெறும் வெற்றியோடு முடிகிறது.

# வேதாகமத்து வரலாற்றுக் காலப்பிரிவுகள்

<table>
<tr><th colspan="3">பழைய ஏற்பாட்டு வரலாறு</th><th>மத சார்பற்ற வரலாறு</th></tr>
<tr><td colspan="3">குறிப்பு :- வேதாமத்து சரித்திர கால வரிசையில் பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டம் ஒன்றுங்கிடையாது. இந்த கொடுக்கப்பட்ட தேதிகள் Ussher என்பவரது குறிப்புப் படியானது. இவைகள் வேலை செய்வதற்கானதோர் அடிப்படையாக மாத்திரமே வேலை செய்கிறது. அவைகள் முற்றிலும் சரியானவைகளாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.</td><td></td></tr>
<tr><td>கி.மு.</td><td colspan="2">பொதுவான சம்பவங்கள்<br>கி.மு.</td><td>கீழ்திசை சாம்ராஜ்ஜியங்கள்</td></tr>
<tr><td>4004 - 2234<br>ஆதி தொடக்கத்து ஆரம்பகாலங்கள்</td><td colspan="2">4004 - வீழ்ச்சி<br>2348 - ஜலபிரளயம்<br>2234 - ஜாதிகள் சிதறிப் போகுதல்</td><td>இக்காலத்து அறிக்கைகளும் தேதிகளும் முற்றுப்பொருந்தவை. பெரிதும் நம்பத் தக்கவை அல்ல.</td></tr>
<tr><td>2348 - 1706<br>முற்பிதாக்கள் காலம்</td><td colspan="2">1921 - ஆபிரகாமுக்கு அழைப்பு<br>1760 - யாக்கோபு ஏசாவுக்கு பயந்து ஓடிப்போகுதல்<br>1715 - யோசேப்பு எகிப்துக்கு ஆளுநர் ஆகுதல்<br>1706 - யாக்கோபுடைய குடும்பத்தினர் எகிப்துக்குள் பிரவேசித்தல்</td><td>2200 கி.மு?<br>முதலாம் பிரமீடு கட்டப்படுதல்</td></tr>
<tr><td>1706 – 1451<br>எகிப்துக்குள் மரபுவழி வருகை வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட தேசத்திக்குள் பிரவேசிக்கும் வரை</td><td colspan="2">1635 - யோசப்பின் மரணம்<br>1571 - மோசே ஜனனம்<br>1491 - எகிப்தை விட்டு வெளியேறுதல்<br>1452 - யோசுவா தலைவனாக நியமனம்<br>1451 - யோர்தானை கடத்தல்<br>1451 - 1444 கானான் தேசத்தை ஜெயித்தல்</td><td rowspan="2">பூர்வகாலத்து<br><br>எகிப்திய<br><br>சாம்ராஜ்ஜியம்</td></tr>
<tr><td>1394 – 1095<br>நியாயாதிபதிகள் காலம்</td><td colspan="2">1394 - 1354 ஓத்னியேல்<br>1249 - 1209 கிதியோன்<br>1157 - 1117 ஏலி<br>1117 - 1095 சாமுவேல்<br>நியாயாதிபதிகளின் அட்டவணையைப் பார்க்க வேண்டுமானால் உங்கள் வேதாகமத்துப் பொருள் அட்டவணையைப் பார்க்கவும்</td></tr>
<tr><td>1095 – 975<br>ஐக்கியப் படுத்தப்பட்ட இராஜ்ஜியம்</td><td>1095 - 1055 சவுல்<br>1055 - 1015 தாவீது<br>1015 - 975 சாலோமோன்</td><td>ஆலய பிரதிஷ்டை, 1004</td><td>1100 – 625?<br>அசீரிய சாம்ராஜ்ஜியம்<br>970 - சீரியா ராஜ்ஜிய ஸ்தாபனம்<br>753 - ரோம ராஜ்ய ஸ்தாபனம்<br>740 - பிற்காலத்து அசீரிய சாம்ராஜ்யம்</td></tr>
</table>

| | இஸ்ரவேல் ராஜ்ஜியம் | யூதா ராஜ்ஜியம் | தீர்க்கதரிசிகள் | |
|---|---|---|---|---|
| 957 – 587 பிரிக்கபட்ட ராஜ்ஜயத்தின் காலம் | 975 - யெரோபெயாம் முதல் 730 - யோசியா வரை. 721 - இஸ்ரவேல் சிறைப்பட்டு போகுதல் | 975 - ரெகோபெயாம் 598 - சிதேக்கியா 587 - யூதாவின் சிறையிருப்பு | எலியா, எலிசா, யோனா, ஆமோஸ், மீகா, ஓசியா, யோவேல்,ஏசாயா, நாகூம், ஆபகூக், ஒபதியா,செப்பனியா, எரேமியா, எசேக்கியேல் | 625 – 536 பாபிலோனிய (கல்தேய) சாம்ராஜ்யம் 536 - பாபிலோன் ஸைரஸ் அரசனால் பிடிப்பட்டது. |
| 587 – 400 நாடு கடத்தப் படுதலுக்கு பின்னர் | 535 - செருபாபேலுக்கு கீழ் யூதர் நாடு திரும்புதல் 516 - ஆலயம் பிரதிஷ்டை செய்யப் பட்டது. 458 - எஸ்றா ஒருயூதர் கூட்டத்தை திரும்ப கொண்டு விடுகிறான் 445 - நெகேமியா எருசலேமுக்கு திரும்புகிறான். நகரத்தை மதிற்சுவர்களை திரும்பவும் எடுப்பிக்கிறான். | | சகரியா தானியேல் ஆகாய் மல்கியா | 536 – 330 பாரசீக சாம்ராஜ்ஜியம் |

| பழைய புதிய ஏற்பாடுகளுக்கு இடையே உள்ள இடைப்பட்ட காலம் | | | |
|---|---|---|---|
| 400 – 4 கி.மு | | | |
| பாரசீக கிரேக்க எகிப்திய ஆட்சி காலங்கள் | பாரசீக சாம்ராஜ்ஜியம் 535 - 330 | | குறிப்பு : வேதாகமத்தின் சரித்திரத்தைப் பற்றிய அதிகமான பகுதிகளுக்கு சரியான (காலம்) தேதிகளைப் பற்றிய அதிகமான நிச்சயம் (உறுதி) கிடையாது. ஏறக்குறைய சரியான தேதிகளே கொடுக்கப்பட்டுள்ளன. |
| | 330 மகா அலெக்ஸாண்டரது படையெடுப்பும் வெற்றியும் | | இந்த கிரேக்க படையெடுப்பு வெற்றியானது, பழைய ஏற்பாட்டை கிரேக்க மொழியில் மொழிபெயர்க்க வழியை ஆயத்தம் செய்தது. (செப்துவ ஜின்ட் பதிப்பு) |

| | | | | |
|---|---|---|---|---|
| | 330 – 166<br>அலக்ஸாண்டருக்கு பின்னால் ஆட்சிக்கு வந்தவர்களின் இராஜ்ஜியங்கள் | 320 – யூதா எகிப்து நாட்டுடன் இணைக்கப்பட்டது.<br><br>193 – யூதா சீரியாவுடன் இணைக்கப்பட்டது. | ஏறக்குறைய 250 கி.முவில் செப்த்வஜின்ட் பதிப்பு மொழி பெயர்க்கப்பட்டது.300 – 4 கி.மு.க்கு இடையில் தள்ளுபடி ஆகம புத்தகங்கள் எழுதப்பட்டன. | |
| கி.மு. 166 – முதல் கி.பி வரை மக்கபேயர் ஏரோதியன் காலம் | 166 – 63<br>மக்கப்பேயருக்கு அடியில் இந்த காலத்தின் ஓர் பகுதியில் யூதர்கள் சுதந்திரம் பெற்றார்கள். | 168 – அந்தியோகு ஆலயத்தை தீட்டுப் படுத்தினான்.<br><br>165 – ஆலயம் திரும்பவும் பிரதிஷ்டை செய்யப் பட்டது | 167 – மக்கபேயர் கலகம் செய்ய ஆரம்பித்தனர். | |
| ரோம ஆட்சியர் ஆதிக்கத்து காலம் | **புதிய ஏற்பாட்டு வரலாறு**<br>கி.மு. 63ல் ரோம தளபதி பாம்பே எருசலேமை பிடித்தான். இந்த காலத்தில் இருந்து பாலஸ்தீனத்து மாகாணங்கள் ரோமாபுரிக்கு கப்பங்கட்டும் நாடுகள் ஆயின. ஸ்தல ஆட்சிப் பொறுப்பு காலத்தின் ஒரு பகுதியில் ரோமா புரியில் அரசியல் செல்வாக்கு பெற்றிருந்த இராஜகுல பிரபுக்கள் வசம் கொடுக்கப்பட்டிருந்தது. மற்ற காலங்களில் எஜமானர்களால் நியமிக்கப்பட்ட அரசாங்க அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். | | | |
| ரோம சக்கிரவர்த்திகள் | கீழே கொடுக்கப்பட்டிருக்கும் படத்தில் மாகாணங்கள், ஆட்சியாளர்கள் - ஏறக்குறை அவர்கள் ஆட்சிகாலம் சில முக்கியமான சம்பவங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.<br>கி.மு. 37 – 4 கி.மு வரை மகா ஏரோது யூதாவின் இராஜாவாக இருந்தான். அகஸ்து ராயன் காலத்தில் அவனுடைய ராஜ்ஜியமானது, யோர்தானுக்கு கிழக்கில் உள்ள பெரும் பகுதியும் அதில் அடங்குமாறு விரிவு படுத்தப்பட்டது. இயேசுவின் ஜனன காலத்தில் பாலஸ்தீனம் முழுவதற்கும் அவன் ஆளுகை செய்தான். ஒருவேளை கிறிஸ்து பிறந்த அதே ஆண்டில் அவன் மரணமடைந்திருக்கலாம். அவனுடைய மாநிலமானது, அவனது மக்களுக்கடையில் பிரிக்கப்பட்டது. | | | |
| கி.மு 27 – கி.பி 14 வரை அகஸ்து ராயன் | யூதா மாகாணம்<br>(யூதாவும் சமாரியாவும்)<br>4கி.மு – கி.பி 6 வரை | கலிலேயா பெரியா<br>4கி.மு – 39 கி.பிவரை | ஐந்தாவது மாகாணம்<br>(கலிலேயாவுக்கு கிழக்கில் உள்ள தேசம்)<br>4கி.மு – 33கி.பி வரை | 4 கி.மு கிறிஸ்து ஜனனம்<br>2 கி.மு பவுல் ஜனனம்<br>கி.பி. 25 - 27 |
| | ஆர்க்கிலால் எத்னார்க | ஏரோது அந்திப்பா டெட்ராக் | பிலிப் டெட்ராக் | கிறிஸ்துவின் ஞானஸ்நானம் |

| | | | | |
|---|---|---|---|---|
| கி.பி. 14 – 37<br>டைபீரியஸ்<br>ராயன் | கி.பி. 26 – 36<br>பொந்தியு பிலாத்து<br>காற்பங்கு<br>தேசாதிபதி | | | 29 – 30 ?<br>கிறிஸ்து சிலுவையில் அறையப்படுதல்<br>31 -37 ?<br>பவுல் மனந்திரும்புதல் |

| | | | |
|---|---|---|---|
| 37 – 41<br>காலி கூலா | கி.பி. 39 - 44<br>ஏரோது அகரிப்பா I. தேச முழுவதற்கும் இராஜா | | |
| 41 – 54<br>கிளாடியஸ் | 52 – 58<br>பெலிக்ஸ்<br>தேசாதிபதி | 50 – 53 ஏரோது<br>அகரிப்பா II | 45 48 ? பவுலின் சுவிசேஷ<br>பிரபல்ய பிரயாணங்கள். |
| 54 – 68<br>நீரோ ராயன் | 58 – 61<br>பெஸ்ட்டஸ் | சால்ஸிஸ் மற்றும்<br>சார்பு பகுதிகளுக்கும்<br>இராஜா. | 61 – 68? பவுல் ஒன்று<br>அல்லது இரண்டு முறை<br>காவலில் வைக்கப்படுதல் |
| 68 69<br>சலாபா,<br>ஓரோ,<br>விட்டேலியஸ் | 70 எருசலேம் தீத்து<br>ராயனால் அன்று<br>அழிக்கப் பட்டது. | | 70 யூத மாகாணம்<br>முடிவுறுதல்<br>எருசலேம்<br>அழிக்கப்பட்டது. |
| 67 – 79<br>வெல்பேஷியன் | | | |
| 79 – 81<br>தீத்து<br>81 – 96<br>டொமிஷியன் | | | 90 – 100 கிறிஸ்தவர்கள்<br>சித்ரவதை செய்யப்படுதல்<br>டொமிஷியன்யோவான்<br>மரணம். அப்போஸ்தலர்<br>காலம் முடிவு. |

**பழைய ஏற்பாட்டுக்கும், புதிய ஏற்பாட்டுக்கும் இடையே உள்ள வேற்றுமைகள் :**

| பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு |
|---|---|
| **வாஞ்சை** யோபு 23:3 | **புரிந்து கொள்ளுதல்** யோவான் 1:45 |
| **சிருஷ்டிகர்** ஆதி 1:1 | **இரட்சகர் (மீட்பர்)** கலா 3:13 |
| **கெம்பீரமான தேவன்** யாத் 19:18 | **நமது பிதா** மத் 6:9 |
| **ஆதி சிருஷ்டிகர்** ஆதி 1:1 | **கடைசி கால காரியங்கள்** 2பேதுரு 3:10 |
| **ஆவியில் அந்தகாரம்** சங் 82:5 | **உலகத்திற்கு ஒளி** யோவான் 8:12 |
| **சாத்தானுடைய வெற்றி** ஆதி 3:6 | **சாத்தானுடைய தோல்வி** வெளி 20:10 |
| **பாவத்தின் சாபம்** ஆதி 3:17-19 | **பாவத்திற்கு நிவாரணம்** யோவான் 3:16 |
| **மரணம் ஆளுகிறது** ஆதி 3:19 | **நித்திய ஜீவன்** யோவான் 3:16 |
| **இரத்த பலிகள்** யாத் 12:3-7 | **கிறிஸ்து ஆட்டுக்குட்டி** யோவான் 1:29 |
| **அடிமைத்தனம்** நீதி 5:22 | **சுயாதீனம்** ரோமர் 8:2 |
| **நியாயப்பிரமாணம்** யாத் 20:1-17 | **சுவிசேஷம்** ரோமர் 1:16 |
| **சாயலும், நிழலும்** எபி 8:5 | **ஆஸ்திகள்** எபி 10:34 |
| **வெளிப்புற சடங்காச்சாரங்கள்** எபி 9:10 | **உள்ளான அனுபவங்கள்** லூக்கா 24:32 |
| **எழுதப்பட்ட பிரமாணங்கள்** ரோமர் 7:6 | **ஆவி** கலா 5:5 |
| **தீர்க்கதரிசனம்** ஏசாயா 11:12 | **நிறைவேறுதல்** அப் 3:18,19 |
| **எதிர்பார்க்கும் மேசியா** மல்கியா 3:1 | **நமது இரட்சகர்** லூக்கா 2:11 |
| **இழந்து போன பரதீசு** ஆதி 3:23 | **திரும்பவும் பெற்ற பரதீசு** வெளி 22:14 |

# வேதாகமத்தின் புத்தகங்களை பகுத்து பிரித்து ஆய்வு

பின்வரும் பக்கங்கள் சுருக்கமானது ஆனால், புரிந்து கொள்ளத்தக்கதான பழைய, புதிய ஏற்பாட்டு புத்தகங்களைப் பற்றிய பிரித்து பகுத்தறியும் ஆய்வைத் தருகின்றன.

அந்தப் புத்தகங்களை எழுதியவர், அது எழுதப்பட்ட சரித்தர சம்பவம் முக்கியமான கருத்தாய்வு பொருள் மற்றும் பல ஆர்வத்தை உண்டாக்கும் விசேஷமான குறிப்புகளும் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதன் முக்கிய நோக்கமாவது, எங்கெங்கு வாய்ப்பு உண்டோ இந்த புத்தகத்தின் திறவு கோல் குறிப்புடன் அதன் ஆழமான ஆவிக்குரிய அர்த்தத்தையும் திறந்து காட்ட உதவுகிறது.

---

## ஆதியாகமம் என்னும் புத்தகம்

**ஆசிரியர் :** மோசே என்று பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது.

**(தோற்றங்கள்) படைப்புகளின் ஆரம்ப புத்தகம் :**
நமது அண்ட சராசரம் தோன்றிய வரலாறு, மனிதகுலத் தோற்றம் பாவம், மீட்பு, குடும்ப வாழ்க்கை சமுதாயத்தில் கேடு, ஜாதிகள், பலதரப்பட்ட மொழிகள், எபிரேய குலம் முதலியன பற்றி தோற்ற அறிக்கை.

இந்த புத்தகத்தின் ஆதி ஆரம்ப அதிகாரங்கள் தொடர்ந்து நவீன திறனாய்வு ஆகிய நெருப்புக்கு உள்ளாகிறது. ஆனால், அவைகள் முன் வைக்கும் விஷயங்கள் சரியாக பொருள் ஆய்வு செய்யப்பட்டு விளங்கிக் கொள்ளப்பட்டால், ஒருபோதும் நிரூபணம் ஆகாமல் இருக்கமுடியாது.

ஆதியாகமத்தை எழுதினவருக்கு சிருஷ்டிப்பு பற்றிய விரிவான விவரக் குறிப்புகள் கொடுப்பது நோக்கமல்ல. ஒரே ஒரு அதிகாரம் மாத்திரம் இந்த தலைப்புக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. (சரியான வரியில் தெரியக்கூடிய அடிப்படையான விஷயங்கள் அடங்கிய புறவரிச் சுருக்கம் மட்டுமே ஒரே அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.) மற்ற 38 அதிகாரங்கள் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களின் சரித்திரத்திற்காக கொடுக்கப்பட்டுள்ளது.

**முக்கிய பொருள் தலைப்பு :-** மனிதனுடைய பாவம். அவனுடைய இரட்சிப்புக்காக இங்கே விவரிக்கப்பட்டுள்ள, தெரிந்து கொள்ளப்பட்டுள்ள மக்களின் ஆதிசரித்திரத்திலே அவர்களுடன் செய்து கொண்ட தெய்வீக உடன்படிக்கையின் மூலமாக ஆரம்ப முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**திறவுகோல் வசனம்.** “ஆதியிலே”
**முதலாவதான மேசியாவின் வாக்குதத்தங்கள் :** 3:15.

**சுருக்கம் :**

**I. படைப்பின் வரலாறு**

a. அண்டசராசரம் 1:1-25
b. மனிதனைப் பற்றி 1:26-31; 2:18-24

**II. ஆதிமனிதனுடைய கதை**

a. சோதனையும் வீழ்ச்சியும், சோதனைக்காரனுடைய ஆள்தன்மையும், பண்பியல்புகளும், பாவத்திற்குத் தண்டனை வரப்போகும் இரட்சகரைப் பற்றிய வாக்குறுதி. அதி 3.
b. காயின் ஆபேல் வரலாறு. ஆதி 4.
c. முற்பிதாக்களின் வம்சாவழியும், மரணமும் அதி 5.
d. ஜலப்பிரளயத்தோடு சம்பந்தப்பட்ட சம்பவங்கள். அதி 6-8.

e. வானவில் உடன்படிக்கை நோவாவின் பாவம். அதி 9.
f. நோவாவின் வம்சாவழியினர் அதி 10.
g. பாபேல் என்னுமிடத்தில் மொழி குழப்பம் அதி 11.

**III. தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் வரவாறு.**

1. ஆபிரகாமுடைய வாழ்க்கை.
   a. அவனுக்குக் கொடுத்த தெய்வீக அழைப்பு அதி 12.
   b. ஆபிரகாம் லோத் என்பவர்களின் கதை அதி 13-14.
   c. தெய்வீக வெளிப்பாடுகளும், ஆபிரகாமுக்கு வாக்குறுதியும் குறிப்பாக மகனைப் பற்றிய வாக்கு பரிசுத்த தேசம் உடைமையாகுதலும் அந்த மகா வம்சாவளியான மனித குலமும். அதி 15-17.
   d. சமவெளிப்பட்டணங்களுக்கான மன்றாட்டும் அவற்றின் அழிவும்.
   e. கேராரில் வாழ்க்கையும். ஈசாக்கின் பிறப்பில் குமாரனுக்காகக் கொடுக்கப்பட்ட வாக்கு நிறைவேறுதல் அதி. 20,21.
   f. ஈசாக்கை பலியிடுமாறு பெற்ற தேவகட்டளையால் கீழ்படிதலுக்கு ஓர் சோதனை அதி 22.
   g. மரணம் (அவனுடைய ) 25:8.
2. ஈசாக்குடைய வாழ்க்கை.
   a. அவனுடைய பிறப்பு 21:3.
   b. அவனுடைய திருமணம் அதி 24.
   c. அவனுக்கு மக்கள் பிறத்தல். யாக்கோபும், ஏசாவும் 25:20-26.
   d. அவனுடைய பிற்கால ஆண்டுகள் அதி 26,27.
3. யாக்கோபுடைய வாழ்க்கை .
   a. சேஷ்ட புத்திரபாகத்தை தந்திரமாக அபகரித்தது. 27:1-29
   b. வானத்துக்கும், பூமிக்குமான ஏணி தரிசனம் 28:10-22.
   c. அவனது திருமணம் சம்பந்தப்பட்ட சம்பவங்களும், பதான் ஆராமில் ஜீவியமும். அதி 29-31.
4. ஏசாவின் வாழ்க்கை ஆதியாகமம் அதி 29:31.
5. யோசேப்புடைய வாழ்க்கை யாக்கோபின் பிற்கால ஆண்டுகள் தெரிந்து கொள்ளப்பட்ட குடும்பம் எகிப்தை வந்து சேருதல் அதி 37:50.

## ஒன்றாக சேர்த்து இணைக்கப் பெரும் பிரபலமான பெயர்கள்

1. ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்த மனிதன்
2. நோவா பேழையைக் கட்டினவர்
3. ஆபிரகாம் விசுவாசிகளுக்குத் தகப்பன்
4. யாக்கோபு ஜெபத்தினால் அவனது ஜீவியம் மாறிய மனிதன்
5. யோசேப்பு – யாக்கோபுடைய குமாரர் அடிமைத் தனத்திலிருந்து எகிப்து நாட்டிற்கு ஆளுநராக உயர்த்தப் பட்டான்.

## அந்தக் காலங்களுக்கான பாடங்கள்

வேதாகமம் வீழ்ச்சியினால் அழிந்த மனித குலத்தோடு (வரலாற்றுடன்) அதி.3.
இரட்சிப்பின் திட்டம் தீட்டப்பட்டது. 3:15.
வேதாகமம் இரட்சிப்பின் வாக்குறுதியுடன் பரதீசு மறுபடியும் பெறப்பட்டது என்பதோடு முடிகிறது. வெளி.21:22 பார்க்கவும்.

---

## யாத்திராகமம் என்னும் புத்தகம்

**எழுதினவரும், மத்திய கதாபாத்திரமும்** மோசே என்று பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது.

**முக்கியமான பொருள் தலைப்பு :** இஸ்ரவேலர் வரலாறு யோசேப்புடைய மரணம் முதல் ஆசரிப்புக் கூடாரம் ஸ்தாபனம் வரைக்கும்.

**திறவுகோல் கருத்து :** மீட்பு

**சுருக்கம் :** இஸ்ரவேலர் சரித்திரத்தில் நான்கு காலகட்டங்கள்.

**I. அடிமைத்தன காலம்**

1. எகிப்து தேசத்தில் ஒடுக்கப்படுதல் 17:22.
2. மோசேயுடைய ஆரம்ப ஜீவியத்தின் சம்பவங்கள்.
   a. அவனது பிறப்பும் சுவிகாரமும். 2:1-10.
   b. அவனுடைய சகோதரருக்கு உதவும் படியான அவனுடைய முயற்சி 2:11-4.
   c. மீதியான் தேசத்துக்குத் தப்பி ஓடுதல்
   d. அவனுடைய திருமணம்

**II. மீட்பின் காலம்**

a. எரியும் முட்செடியில் மோசேக்கு அழைப்பு 3:1-10.
b. தெய்வீக திட்டமும் அதிகாரம் கொடுத்தலும் 3:12-22; 4:27-37.
c. அவனுடைய சாக்கு போக்குகள். 3:11; 4:10-13.
d. ஆரோனும், மோசேயுடன் இணைந்து இஸ்ரவேலரை விடுவித்து விடும்படி வேண்டுகோள் விடுத்தான்.
e. அடிமைத்தனம் மென்மேலும் கடினமாக்கப்பட்டது. 5:5-23.
f. மோசேக்கும், ஆரோனுக்கும் தெய்வீக கட்டளைகள் அதி 6,7.
g. பார்வோனுடன் போராட்டமும், பத்து வாதைகளால் வாதித்தலும் அதி 7-11.
h. பஸ்கா பண்டிகை அதி 12.

**III. ஒழுங்கை ஏற்படுத்தும் காலம்**

a. பிரயாணம் 12:31-51.
b. சீனாய் மலை செல்லும் வழியில் நடந்த அனுபவங்கள் அதி 13 - 18, (சாயல் என்ற தலைப்பின் கீழ் உள்ள குறிப்புகளை பார்க்கவும்).

**IV. சட்டம் ஏற்றும் மற்றும் நிறுவனப்படுத்தும் காலம்**

a. சீனாய் மலையில் வந்து சேருதல் 19:1-2.
b. மலையின் மேல் கர்த்தர் தரிசனமாகுதல் அதி 19.
c. பத்து கட்டளைகளைக் கொடுத்தல் அதி 20.
d. மற்ற பிரமாணங்கள் பிரகடனம் அதி 21-24.
e. ஆசரிப்பு கூடாரம் கட்டுவதில் நியமங்கள். அதி 25-27
f. பிரதான ஆசாரியன் நியமனம். அதி 28.
g. பொன் கன்றுக் குட்டியை வழிபாடு செய்தல் அதி 32.
h. ஆசரிப்பு கூடாரம் செய்த ஆயத்தமும் ஸ்தாபனமும் அதி 35-40.

## இஸ்ரவேலருடைய பிரயாணம் கிறிஸ்தவ ஜீவியத்தின் ஓர் சாயல்

(1கொரி 10:1-11 பார்க்க.)

- எகிப்திய அடிமைத்தனம் - ஒரு வகையான பாவத்தின் அடிமைத்தனம். மோசே மீட்பவனாகவும் - கிறிஸ்துவின் ஓர் சாயல் (மோசேக்கும், இயேசுவுக்கும் இடையே சமநிலையைக் கவனிக்கவும்).
- பஸ்கா ஆட்டுக்குட்டி – கிறிஸ்துவின் ஒரு சாயல் தேவ ஆட்டுக்குட்டி.
- பார்வோன் இஸ்ரவேலரை பின் தொடர்தல். 14:8,9 ஒரு சாயலான பொல்லாத ஆவிகள் விசுவாசிகளை பின் தொடர்தல்.
- சிவந்த சமுத்திரம் திறக்கப்படுதல் 14:21. ஒரு சாயலான தடைகள் குறுக்கிடுதல்.
- மேக அக்கினி ஸ்தம்பம். 14:19-20. ஒரு சாயலான தெய்வீக பிரசன்னம் விசுவாசிகளுடன்
- மோசேயின் பாட்டு 15:1-19. ஒரு சாயலான ஆவிக்குரிய ஜெயத்தைக் கொண்டாடும் பாட்டுகள்.
- அந்த கலப்புள்ள திரள் கூட்டம். 12:8. திருச்சபையில் உலகப்பிரகாரமான சாயலான மக்கள்.

- மாராவும், எலீமும் 15:23-27. ஆவிக்குரிய ஜீவியத்தில் ஒரு சாயலான கசப்பும், மதுரமுமான அனுபவங்கள்.
- சாப்பாட்டு பாத்திரங்கள் (பானைகள்) 16:3. பழங்கால ஜீவியத்தின் ஒரு சாயலான மாம்சத்தின் இச்சைகள்.
- மன்னா.16:4. கிறிஸ்துவின் ஒரு சாயல் ஜீவ அப்பம்.
- கன்மலையிலிருந்து ஜலம். 17:6. கிறிஸ்துவின் ஓர் சாயல் ஜீவதண்ணீர் 1கொரி 10:4.
- மோசேயின் கரங்களை தூக்கி நிறுத்தி பிடித்தல் : 17:2. தலைவர்களுக்குள் ஒரு சாயலான கூட்டுறவும், மன்றாட்டின் தேவையும்.
- ஆசரிப்புக் கூடார அமைப்பில் - அதன் மரதளவாடங்கள் பிரமாணங்கள் ஆசாரியர்களுக்கான வஸ்திரங்கள், உடன்படிக்கை பெட்டி முதலியன கிறிஸ்துவிலும், திருச்சபையிலும் அதன் பல சாயல்கள் காணக்கிடக்கின்றன.

---

## லேவியராகமம் என்ற புத்தகம்

**பெயர் :** லேவி கோத்திரத்தின் பெயரில் உண்டான நாமம்.

**எழுதியவர்:** மோசே பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது.

**திறவுகோல் வார்த்தைகள்:** கிட்டி சேருதல் - பரிசுத்தம்.

**பொருள் தலைப்பு:** தெய்வீகப் பிரமாணங்களின் தொகுப்பு.

**மத்திய கதாபாத்திரம்**: பிரதான ஆசாரியன்.

**மததிய சொற்பொருள் கருத்து**: பாவியாகிய மனிதன் எப்படி ஒரு பரிசுத்த தேவனை அணுக முடியும். இந்த “பரிசுத்தம்” என்ற வார்த்தை இப்புத்தகத்தில் 80 தடவைகள் வருகிறது.

**துணை புத்தக நண்பன்** : எபிரெயர்.

### பகுத்து பிரிக்கும் ஆய்வு

**I. தேவனிடம் நெருங்கி சேரும் வழி**

1. பலிகள், காணிக்கையின் மூலமாக.
   a. பாவ நிவிர்த்தியையும், பரிசுத்தத்தையும் அடையாளங்காட்டும் தகனபலிகள். 1:2-9.
   b. தானியமாகிய காணிக்கை – நன்றி செலுத்துவதற்கு அடையாளமாக 2:1,2.
   c. பாவ நிவாரண பலி – ஒப்புரவாகுதலுக்கு அடையாளமாக. அதி 4.
   d. மீறுதலுக்கான பலிகள். குற்றத்திலிருந்து சுத்திகரிக்கப்படுதலுக்கு அடையாளமாக 6:2-7.
   e. அந்நியோந்நிய ஐக்கியத்திற்கான பலிகள் 7:11-15.
2. ஆசாரியனுடைய மத்தியஸ்தத்தினால் :
   மனுஷீக ஆசாரியத்துவம் : அழைப்பு 8:7-13; பாவநிவிர்த்தி 8:14; பாவங்கள் நிறைந்த மாதிரியாக அதி 10.

**II. இஸ்ரவேலரைக் கட்டுப்படுத்திய விசேஷமான பிரமாணங்கள் :**

1. ஆகாரத்தைப் பற்றியது. அதி 4.
2. சுத்தம், சுகாதாரம், பாரம்பரியம், நல்லொழுக்க போதனைகள் முதலியன அனைத்தும் பரிசுத்தமான ஜீவியத்தை வற்புறுத்தியும் தேவதயவைப் பெற்றுக்கொள்ள ஒரு நிபந்தனையுமாக அதி 12-20.
3. ஆசாரியர்களிலும், பலிகளிலும் பரிசுத்தம் அதி 21-22.

**III. ஐந்து வருடாந்தர பண்டிகைகள் :**

1. பஸ்கா பண்டிகை : ஏப்ரல் 14ம் தேதி தொடங்கி அதி 23:5. அவர்களது, பயணத்தை நினைவு கூருதலாக.
2. பெந்தெகொஸ்தே பண்டிகை (வாரங்களாக) ஜூன் 6ம் தேதி நாளில் நியாயப் பிரமாணத்தை அருளிச் செய்ததன் நினைவு கூருதலாக 23:15.

3. எக்காளத்தின் பண்டிகை அக்டோபர் முதலாம் நாள் 23:23-25.
4. பாவ நிவிர்த்தி நாள் : அக்டோபர் 10ம் நாள். பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து, ஜனங்களுடைய பாவங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்தல். அதி 16. உடன் 23:26-32.
5. கூடாரப்பண்டிகை : அக்டோபர் 15ம் நாள் ஆரம்பித்து வனாந்தரத்தில் ஜீவியத்தை நினைவு கூரவும், அறுவடைக்காக நன்றி செலுத்தவும் 23:39-43.

**IV.பொதுவான பிரமாணங்களும், போதனைகளும் :**

1. ஏழு ஓய்வு வருஷங்கள். ஏழாண்டுகளுக்கு ஒரு தடைவை நிலம் உழாமல் தரிசாகப் போடப்படும். 25:2-7.
2. யூபிலி வருஷம் ஐம்பது ஆண்டுகளுக்கு ஒரு தடைவ அடிமைகள் விடுதலை செய்யப்பட்டும், கடன்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டும் பொதுவான திரும்பிப் போகுதல் நடைபெறும் (குடும்பத்துக்கும், காணியாட்சிக்கும் திரும்பிப் போகுதல்) 25:8-16.
3. ஆசீர்வாதங்களுக்கான நிபந்தனைகளும் அடிகளால் தண்டனை விதிப்பது பற்றிய எச்சரிக்கை அதி 26.
4. பொருத்தனைகளைக் குறித்த பிரமாணம் அதி 27.

---

## எண்ணாகமம் என்ற புத்தகம்

இஸ்ரவேலரின் பிரயாண வரலாறு பற்றிய புத்தகம்.

**பெயர் :** இஸ்ரவேலரை கணக்கெடுத்த கணக்கெடுப்பில் இருந்து வந்தது.

**எழுதினவர் :** மோசே பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது.

**மத்திய கருத்தான பாடம் :** அபரிமிதமான ஜீவியத்திற்குள் பிரவேசிப்பதை அவநம்பிக்கை தடைசெய்கிறது. எபி 3:7-19.

### முக்கியமான தலைப்புகளும் - சம்பவங்களும்

1. ஒழுங்கு முறைப்படுத்துதலும் சட்டமியற்றுதலும் அதி 1-9.
2. சீனாய் மலையை விட்டு நீங்குதல் 10:11-12.
3. ஜனங்கள் மன்னாவை அவமதித்தார்கள் 11:4-6.
4. மோசே உற்சாகத்தை இழந்தது. 11:10-15.
5. 70 மூப்பர்கள் நியமனம் 11:16-25.
6. காடைகள் அனுப்பப்பட்டது. 11:30-34.
7. மிரீயாம், ஆரோன் என்பவர்களுடைய பொறாமை அதி 12.

**காதேஸ் என்ற இடத்துத் தோல்வி. வீடு பற்றிய மெய்பொருள் இழப்பு**

8. வேவுகாரரை அனுப்புதலும் அவர்களது அறிக்கையும் அதி 13.
9. ஜனங்கள் செய்த கலகம் அவர்கள் மேல் கூறப்பட்ட சாபம் அந்த சந்ததி முழுவதும் நியாயந்தீர்க்கப்பட்டது வ.29.
10. 40 ஆண்டு வனாந்தரத்தில் அலைந்து திரிந்ததோடு சம்பந்தப்பட்ட சம்பவங்கள் அதி. 15-19.
11. காதேஸிக்கு திரும்பி வருதல். மேசேயின் பாவம் ஆரோனின் மரணம். அதி 20.
12. வெண்கல சர்ப்பம். அதி 21.
13. பிலேயாம் கூலி பொருத்தப்பட்ட தீர்க்கதரிசி. இஸ்ரவேலின் கேடுபாடுகள். அதி 22:25.
14. புதிய சந்ததியைக் கணக்கெடுப்பு: அதி 26.
15. சுதந்திரவீதம், காணிக்கை, பண்டிகைகள், பொருத்தனைகள் பற்றிய பல்வேறு பிரமாணங்கள். அதி 27:30.
16. மீதியானியரின் மீது தீர்ப்பு. அதி 31, யோர்தானுக்குக் கிழக்கில் உள்ள நாட்டை பிரித்து சுதந்தரமாகக் கொடுத்தது. அதி 23.
17. அடைக்கல பட்டணங்கள் அதி 35.

**மேசியாவின் சாயல்கள்**
அடிக்கப்பட்ட கன்மலை. 20:7-11, 1கொரி 10:4ஐப் பார்க்கவும்.
வெண்கல சர்ப்பம் - 21:6-9; யோவான் 3:14ஐப் பார்க்கவும்.
அடைக்கல பட்டணங்கள் : அதி 35, எபி 6:18ஐப் பார்க்கவும்.

**ஏழு முறுமுறுப்புகள்**
1. வழியைப் பற்றி 11:1-3.
2. ஆகாரத்தை குறித்து 11:4-6
3. இராட்சதர்கள் பற்றி 13:33-14:2.
4. தலைவர்களைக் குறித்து 1:63.
5. தெய்வீகத் தீர்ப்பைக் குறித்து 16:41
6. பாலைவனமான வனாந்தரம் பற்றி 20:2-5.
7. மன்னாவைக் குறித்து இரண்டாம் முறையாக 21:5.

---

## உபாகமம் என்ற புத்தகம்

**பெயர் :** கிரேக்க பதமான deutros என்பதிலிருந்து வந்தது. இதன் அர்த்தமாவது, "இரண்டாவது' என்பதும் 'nouns' பிரமாணம்.

**எழுதியவர் :** மோசே பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது.

**சரித்திர சம்பவம் :** இஸ்ரவேலரின் முன்னைய சந்ததியார் வனாந்தரத்தில் மரித்துப் போனார்கள். அதன் அந்த பிரமாணமானது, திரும்பவும் சொல்லப்பட்டு, புதிய வம்சத்தினருக்கு அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்கு முன்னர் விளக்கிக் கூறுவது முக்கியமானதாகும். பொருளடக்கம் : மோசேயினால் கொடுக்கப்பட்ட புத்திமதி உரையாடல்களும், உபதேசங்களும் யோர்தானைக் கடக்கும் முன்னதாக மோவாப் சமவெளியில் வழங்கப்பட்டது.

**முக்கியமான பொருள் தலைப்பு :** சீனாய் மலையில் பிரகடனஞ் சொல்லப்படுதலும், கீழ்படிதலுக்கான ஓர் அழைப்புடன் முன்னாள் சந்ததியாரின் அனுபவங்களை மீள் பார்வை செய்து அதை ஊடே ஊடே கலந்து ஒத்திசை செய்யப்படுவதாகும்.

**திறவு கோல் யோசனை** : கீழ்படிதலுக்கான தெய்வீகத் தேவை.

**சுருக்கம்**
1. கடந்த காலத்தில் தேவன் இஸ்ரவேலருடன் கொண்டிருந்த இடைபாடுகளின் ஒத்திகை. அதி 1-4.
2. இஸ்ரவேலர் பிரித்தெடுக்கப்பட்ட ஜனங்களாக தெய்வீக பிரமாணங்களுக்குக் கீழ்படிந்திருக்கும் தெரிந்து எடுத்துக் கொள்ளப்பட்டதைப் பற்றிய உரையாடல்களையும், ஒத்துவாக்கிய குறிப்புகளையும் திரும்ப அவர்களுக்கு சொல்லவேண்டும்.
3. கானான் நாட்டில் கைக்கொள்ளப்பட்ட வேண்டிய நியமங்களின் ஒரு தொகுப்பு. அதி 12-26.
4. கீழ்படிதலுக்கான ஆசீர்வாதங்களும் கீழ்படியாமைக்கான சாபங்களும் பிரகடனப்படுத்தப்பட்டது. மரணமும் ஜீவனும் மக்களுக்கு முன்பாக வைக்கப்பட்டது. அதி 27:30.
5. மோசேயின் கடைசி வார்த்தைகள் அவனுடைய பாட்டு ஆசீர்வாதங்கள் முதலியன. அதி 31:33.
6. கடைசி தரிசனத்தின் மீதியான துணை விவரக் குறிப்புகளும் மோசேயின் மரணமும் அதி 34.

**திறவுகோல் வார்த்தை :** நினைவுகூருங்கள் இந்த பதமானது, புத்தகம் முழுவதிலும் திரும்பத் திரும்ப சொல்லப்படுகிறது.

**ஞாபகத்தில் வைக்க**
a. பிரமாணம் அருளப்படல் 4:9-10.
b. உடன்படிக்கை 4:23
c. முந்தய அடிமைத்தனம் 5:15
d. மகா பெரிய விடுதலை. 7:18.

e. தெய்வீக நடத்துதலும், நிபந்தனைகளும் 8:2-6
f. கடந்த கால பாவங்கள் 9:7.
g. தெய்வீக நியாயத்தீர்ப்பு 24:9.
h. முந்தின நாட்கள் 32:7.

### முக்கியமான வசன பகுதிகள்

a. மகாபெரிய கட்டளையும், தேவனுடைய வார்த்தையை நினைவுகூருவதின் முக்கியத்துமும் 6:4-12.
b. தெய்வீக நிபந்தனைகளின் ஐசுவரியமும் மற்றும் விக்கிரக ஆராதனை பற்றிய அபாயங்கள் அதி8.
c. கீழ்படிதலின் ஆசீர்வாதமும் பாவத்தின் சாபமும் அதி 28.

---

## **யோசுவா**வின் புத்தகம்

**எழுதியவர்** - நிச்சயமில்லை. ஒருவேளை யோசுவாவாக இருக்கலாம்.

**தலைப்புப் பொருள் :** கானான் தேசத்தை ஜெயித்தலும், நாட்டை பாகப்பிரிவினை செய்தலும்.

**திறவுகோல் யோசனை :** ஜீவியப் போரில் எவ்வாறு வெற்றி பெறுவது 1:8,9.

### வரலாற்று பகுத்துப் பிரித்து ஆய்வு

1. தேசத்தின் மீது படையெடுப்பு அதி 1-5
2. எரிகோவின் வீழ்ச்சி அதி 6
3. ஆயி நாட்டுப்போர் ஈபால் கெரிசீமில் இஸ்ரவேலர் அதி 7-8.
4. தெற்கு நாட்டை ஜெயித்தல் அதி 10
5. வடக்கு நாட்டை ஜெயித்தல். கொல்லப்பட்ட அரசர்களின் பட்டியல் 11-12.
6. நாடு பிரிக்கப்படுதல் அடைக்கல பட்டணங்கள் நியமனம் அதி 13-12.
7. பிரிவு உபசாரமும், விடைபெறும் சொற்பொழிவும், யோசுவாவின் மரணம் 23-24.

**ஆலோசனையாகக் கூறப்படும் பாடம்.** தெய்வீக நோக்கங்கள். நிறைவேற்றப் படுதலின் நிச்சயம்.

### இது பார்த்து அறியப்படுகிறது

1. கானானியரின் மீது வரப்போகும் அவர்களின் பயங்கரமான பாவங்களின் காரணமாக வரும் நியாயத்தீர்ப்பு.
2. ஆபிரகாமின் வம்சாவழியினர் அந்த நாட்டை தேவனுடைய வாக்குத்தத்ததின் படி சொந்தமாகப் பெற்றனர். ஆதி 12:7.

### சாயல்கள்

பொதுவானதோர் கருத்துப்படி யோர்தனை கடத்தல், மரணத்திற்கும், பரலோகத்திற்கும் பிரதிநிதியாக இருக்கிறது.

ஒரு நல்ல ஒப்புமை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- கானான் தேசம் உயர்ந்த கிறிஸ்தவ ஜீவியத்தின் சாயல் ஆவிக்குரிய போரினால் ஜெயித்து பெறவேண்டியது. ரோமர் 7:23.
- கானானியர் ஒரு சாயலான ஆவிக்குரிய நமது சத்துருக்கள் எபேசியர் 6:12
- நாட்டை ஜெயித்த பின்னர் இஸ்ரவேலர் இளைப்பாறினார்கள். யோசுவா 11:23, ஆத்ம இளைப்பாறுதலின் ஒரு சாயல் எபி 4:9.
- கானானியர் பகுதியாக தோற்கடிக்கப்பட்டனர். ஒரு சாயலான பாவங்கள் ஜெயிக்கப்படாதவை எபி 12:1.

### தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகள்

a.யோசுவாவுக்கு தேவன் தந்த தைரியம் 1:1-9.
b.யோசுவாவின் பிரிவுபசாரம் 23:1-16; 1-27.

---

## நியாயாதிபதிகளின் புத்தகம்

**எழுதியவர் :** பெயர் தெரியாது. சாமுவேல் இந்த புத்தகத்தை எழுதியதாக பாரம்பரியம் கூறுகிறது.

**முக்கியமானத் தலைப்புப் பொருள் :** 14 நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேலருடைய சரித்திரம்.

இந்தப் புத்தகம் தேவ ஜனங்கள் திரும்பத் திரும்பவும் விக்கிரக ஆராதனைக்குள் போகிற திரும்புதல்களையும், அதைத் தொடர்ந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு அதன் சத்துருக்களால் நேரிடும் படையெடுப்புகளையும், நெருக்கங்களையும் வரிசையாக படம் பிடித்துக் காட்டுகிறது.

வரலாற்றில் கூறும் இந்த முறையானது, நியாதிபதிகள் என்ற பிரமுகர்களை மையமாக வைத்துச் சுற்றிவந்து அவர்களை இஸ்ரவேலருக்கு இரட்சகர்களாக எழுப்பப்பட்டவர்கள் என்று கூறுகிறது. அந்த படத்தின் இருண்ட பகுதிக்கு விசேஷமான அழுத்தம் தந்து இந்த அறிக்கையில் கூறப்படுகிறது. இந்த சரித்திர காலத்துத் தேதிகளைப் பற்றிய படிப்பு ஆனது, அந்த ஜனங்கள் கர்த்தருக்கென்று வெளியில் பார்க்கும்படியாக அதிகமான நேரங்களில் ஒரு விதமான விசுவாச பக்தியைக் கொண்டிருந்ததாகவும், அந்தப் புத்தகத்தின் ஒரு சாதாரணமான படிப்பினால் சுட்டிக் காட்டப்படுவதை விட அதிகமான நேரத்தை அதற்காக எடுத்துக் கொண்டார்கள்.

**பாடச் சுருக்கம் :** மூன்று கால பகுதிகளாக இந்த புத்தகத்தை பிரிக்கலாம்.

I. யோசுவாவின் மரணத்திற்கு பின் உடன் வந்த காலம் யோசுவா 1:1,2,10.

II. தேவனை விட்டு விலகி மறந்துவிட்ட ஏழுகாலங்களும், ஆறுமுறை அடிமைத் தனமும், உள்நாட்டுப் போரும் அதி 3-16.

முதல் அடிமைத்தனம் மொசப்பொத்தாமியாவுக்கு – நீதிபதி ஒத்னியேல் 3:5-9.

இரண்டாவது, அடிமைத்தனம் - மோவாபியருக்கு நீதிபதிகள் ஏகூத் சம்கார் 3:12-21.

மூன்றாவது, அடிமைத்தனம் - யாபீன் சிசெராவுக்கு, நீதிபதிகள் தெபோராள் பாராக் 4:1-23.

நான்காவது, அடிமைத்தனம் மீதியானியருக்கு – நீதிபதி கிதியோன் அதி 6:7.

உள்நாட்டு போரின் போது, நீதிபதிகள் : அபிமெலேக், தேலா யாவீர். 8:33-10:5.

ஐந்தாவது, அடிமைத்தனம் - பெலிஸ்தருக்கும், அம்மோனியருக்கும் நீதிபதிகள். யெப்தா, இப்சான், ஏலோன், அப்தான் அதி 10-12.

ஆறாவது, அடிமைத்தனம் - பெலிஸ்தியருக்கு நீதிபதி சிம்சோன் அதி 13-16.

III. குழப்பமும் உள்நாட்டு கலகமும் அதி 17-21.

### ஆவிக்குரிய செய்திகள்

1. மனிதனுடைய தோல்வி, தெய்வீக இரக்கம் விடுதலை.
2. அவசர காலங்களில் ஜெபத்தின் வல்லமை – அது தேவனை நோக்கி உண்மையாகக் கதறி அழும்போது இந்தப் புத்தகத்தில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை (தேவனை) நோக்கி முறையிட்டார்கள் என்று அடிக்கடி சொல்லப்படுவதைக் கவனிக்கவும்.

**துணைப்புத்தகங்கள்** : கலாத்தியர் இஸ்ரவேலர் விக்கிரக ஆராதனைக்கு திரும்பிப் போவதை கலாத்தியர் சபை சடங்காசாரத்திற்குள் பின்வாங்கிப் போனதை ஒப்பிடுக.

### குணச்சித்திர படிப்பு

- தெபோரா, தேசபக்தி நிறைந்த ஸ்தீரி
- கிதியோன் பராக்கிரமசாலியான மனிதன்.
- யெப்தா – பலவீனமான பலமும் உள்ள மனிதன்

## **ரூத்தின்** புத்தகம்

ஒரு அழகான கதை இலக்கியத்தில் வைரமாகக் கருதப்படுகிறது.
வேதாகமத்திலுள்ள இரண்டு புத்தகங்களில் ஒன்றாக ஒரு ஸ்தீரியை முக்கியமான கதாபாத்திரமாகப் பெற்றுள்ளது.

- ரூத் மோவிபிய பெண் எபிரேய கணவனை மணந்தான்.
- எஸ்தர் யூதப்பெண் புறஜாதியனாகிய அரசனை மணந்தாள்.

**எழுதியவர்** - பெயர் தெரியாதவர். ஒருவேளை சாமுவேலாக இருக்கலாம்.

**காலம்:** நியாயதிபதிகளின் காலமாக இருக்கலாம்.

**பொருள் தலைப்பு –** ஒரு மோவாபிய ஸ்தீரியின் ஜீவியம் எவ்வாறு வளம் பெற்றது.

1. அழகியதோர் சீரான தன்மையால் ஞானமானதாகத் தெரிந்தெடுத்த படியினால் 1:16.
2. தாழ்மையான சுறுசுறுப்பான உழைப்பு 2:2,3.
3. மூத்த சிநேகிதியிடமிருந்து ஆலோசனையை ஏற்றுக் கொண்டது. 3:1-5.
4. தேவனால் நிர்ணயிக்கப்பட்ட திருமண ஒப்பந்தம் 4:10,11.
5. ஒரு இராஜபரம்பரையால் உயர்வடைந்தது. 4:13-17.

**முக்கியமான நோக்கம் :** எப்படி ஒரு புறஜாதிப்பெண் கிறிஸ்துவுக்கு பூர்வீகமான முற்பாட்டியானார்.

### சரித்திரத்தை பகுத்து பிரித்த ஆய்வு

1. மோவாப் தேசத்தில் சஞ்சரித்தல் 1:1-5.
2. சொந்த தேசத்துக்குத் துக்கத்துடன் திரும்பி வருதல் 1:6-22.
3. போவாசுடைய வயலில் சிந்திய அரிக்கதிர்களைச் சேகரித்தல். அதி 2.
4. போவாசுடன் அவளுடைய திருமணம் 4:13.
5. அவளுக்குப் பிறந்த ஒரு மகன் தாவீதுக்கு முற்பிதாவானான். 4:13-16.
6. தாவீதுடைய வம்சாவழி 4:18-22.

---

## **1சாமுவேலின்** புத்தகம்

**எழுதியவர்** - பெயர் தெரியாது.

**இந்த வரலாறு** மூன்று நபர்களை மையமாகக் கொண்டு சுற்றி வருகிறது.

1. சாமுவேல் - கடைசி நியாயாதிபதி
2. சவுல் - இஸ்ரவேலின் முதல் இராஜா.
3. தாவீது - இஸ்ரவேலின் மாதிரியான இராஜா.

**காலம் :** சரித்திரத்தின் மாறும் காலம் நியாயாதிபதிகளின் காலம் முடிகிறது. இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்டது.

1. சாமுவேலின் ஜனனமும், ஒப்படைப்புச் செய்தலும். அதி 1.
2. நீதிபதியாக ஏலியின் தோல்வியும், பெற்றோராகவும் அவனது தோல்வி 2:12-36.
3. சாமுவேலுடைய அழைப்பும் வியக்கத்தக்க சிறுவனாக அதி 3.
4. தேவனுடைய பெட்டி பிடிப்பட்டதும், உடன்படிக்கைப் பெட்டி திரும்ப வருவதும் அதி 4-6.
5. சாமுவேலுடைய ஜெபத்தால் பெலிஸ்தர் அடைந்த தோல்வி அதி 7.
6. இராஜாவேண்டுமென்று இஸ்ரவேலர் முறுமுறுப்பு அதி 8.
7. சவுல் இராஜாவாகத் தெரிந்தெடுக்கப்பட்டு அபிஷேகம் பெற்றது. அதி 9-10.
8. சவுல் நடத்திய 1ம் போர். அதி 11.

9. சவுல் இராஜ்ஜியத்தைப் பிரகடனம் பண்ணி மக்கள் இராஜா வேண்டுமென்று கேட்ட அவர்களது முன்யோசனையைக் குறித்து எச்சரிக்கை செய்தது. அதி 12.
10. சவுலுடைய சுயசித்தமும் சாமுவேலின் தீர்க்கசரிசனமும். அதி 13.
11. யோனத்தான் இஸ்ரவேலை விடுவித்தது. 14:1-16.
12. பலியைப் பார்க்கிலும் கீழ்படிதலே உத்தமம் 15:1-23.
13. தாவீது இராஜாவாக அபிஷேகம் பெற்றது. அதி 16.
14. தாவீது கோலியாத் என்ற இராட்சதனைக் கொன்றது. அதி17.
15. தாவீது யோனத்தானுடைய சிநேகம். அதி 18.
16. சவுல் தாவீதை துன்புறுத்தியது. 18:9 – 27:4.
17. சவுலுடைய இராஜ்யபாரத்தின் கடைசி நாட்களும் அவன் தற்கொலை செய்ததும். அதி 26:31.

**ஆவிக்குரிய செய்திகள் :** சாமுவேலுடைய ஜீவியத்தில் ஜெபம் பிரதானமாக துணைப்பொருளாய் இருந்தது.

a. ஜெபத்திற்கு பிரதியுத்தரமாகப் பிறந்தவன் 1:10-28.
b. பெயரின் அர்த்தமாவது, "தேவனிடம் கேட்கப்பட்டவன்" 1:20.
c. அவனது ஜெபம் மிஸ்பாவில் விடுதலை கொடுத்தது. 7:2-13.
d. இஸ்ரவேலர் தங்களுக்கு இராஜா வேண்டுமென்று வற்புறுத்திய பொழுது ஏறெடுத்த ஜெபம் 8:21.
e. தன்னுடைய ஜனங்களுக்காக அவன் இடைவிடாது ஏறெடுத்த ஜெபம் 12:23.

### தெய்வீக பிரமாணத்தை விட்டுவிலகிய ஐந்து சம்பவங்களும் அவை கொண்டு வந்த துன்பமும்.

1. பலதார மணம். 1:6.
2. பெற்றோருடைய அபிரிமிதமான தலையீடு. 2:22-25; 8:1-5.
3. பரிசுத்த பிரமாணங்களில் நம்பிக்கை 4:3.
4. பொறுமையின்மை 13:8,9.
5. அறைகுறையான கீழ்படிதல். அதி 15.

---

## 2சாமுவேலின புத்தகம்

**எழுதியவர்** : பெயர் தெரியாது.

**தலைப்புப் பொருள் :** தாவீதுடைய இராஜ்யபாரம்.

**முதல்காலப்பிரிவு :** ஆட்சியின் ஆரம்ப ஆண்டுகள், இந்த காலகட்டத்தில் அக்கால முறைமையின்படி இராணுவப் படையெடுப்புகளில் ஈடுபட்டிருந்தாலும் ஆவிக்குரிய சிந்தனையை வெளிப்படுத்திக் காட்டினான்.

1. பூர்வாங்கமான சம்வங்கள்
   a. சவுல் இராஜாவை கொன்ற அமலேக்கியனை சிரத்சேதம் செய்தது. 1:2-16.
   b. சவுலுக்காகவும், யோனத்தானுக்காகவும் தாவீதின் புலம்பல். 1:17-27.
2. தாவீது யூதாவுக்கு இராஜாவாக அபிஷேகம் பெற்றது. 2:4.
3. தாவீதைப் பின்பற்றிச் சென்றவர்களுக்கும், இஸ்போசேத் வேலைக்காரர்களுக்கும் இடையே நடந்த யுத்தம். 2:8-32.
4. இராஜாவுடைய தெய்வபக்தியைக் காட்டும் விஷயங்கள்.
   a. தெய்வீக வழிநடத்துதலுக்காக வேண்டுதல். 2:1.
   b. அவனுடைய எதிரிகளைக் கொலை செய்ததால் அவனுடைய பிரியத்தை பெறக் காத்திருந்தவர்களை அவன் தண்டித்தது. 4:5-12.
   c. இஸ்ரவேலுக்கு இராஜாவாக அவன் உயர்த்தப்பட்ட பிறகு அந்த உயர்வு தேவனால் வந்தது என்பதை அவன் ஒப்புக் கொண்டதை அவன் உணர்ந்தறிந்தான். 5:1-12.

d. அவனுடைய இராணுவ வெற்றி தெய்வீக வல்லமையால் கிடைத்தது என்ற அவனுடைய தாழ்மை 5:20.
e. எருசலேமுக்கு உடன்படிக்கைப் பெட்டி திரும்பி வந்தபொழுது, அவன் அடைந்த உற்சாகம். 6:1-5.
f. கர்த்தருக்காக ஆலயம் கட்ட வேண்டும் என்ற அவனுடைய வாஞ்சையும், அதைக் கட்டுவதற்காகத் திரண்ட ஐசுவரியத்தை ஒப்படைப்பு செய்தலும் 7:8.
g. யோனத்தானுடைய மகனுக்கு அவன் காட்டிய அன்பு அதி 9.

### மத்திய காலப் பிரிவு

1. இராஜாவுடைய மகத்தான இராணுவ வெற்றிகள் அதி 10.
2. அவனுடைய வீழ்ச்சியும், தண்டனையும்.
   a. சோதிக்கப்பட்டான்.
   b. ஒரு வீட்டைக் கெடுத்து, உரியாவைக் கொலை செய்தது.
   c. தெய்வீக தீர்ப்பு அவனை மேற்கொண்டது.
   - நாத்தான் தீர்க்கதரிசி அவனை மேற்கொண்டது.
   - குழந்தையின் மரணத்தில் 12:15-19.
   - அம்னோன் என்ற மகன் கேடு செய்த பொழுது.
   - அப்சலோம் என்ற மகன் செய்த கலகத்தில்.

**கடைசி காலம்.** தாவீதுடைய கடைசி ஆண்டுகள் அதி 20-24.

### தெரிந்தெடுத்த பகுதிகள்

- தாவீது மேவிபோசேத்துக்கு காட்டிய உதாரத்துவம் . அதி 9.
- நாத்தான் சொன்ன உவமை 12:1-6.
- தாவீதுடைய நன்றி செலுத்தும் சங்கீதம் அதி 22.

---

## 1 இராஜாக்கள் புத்தகம்

**எழுதியவர்** - யாரென்று தெரியாது.

**பொருள் தலைப்பு –** எபிரேய பதிப்பில் I,II இராஜாக்களின் புத்தகங்கள் ஒரே புத்தகமாக இருக்கிறது. இதற்கான பிரிவு கிரேக்க வாசகர்களுக்கு வசதியாக செய்யப்பட்டது.

**சுருக்கம் :** இந்தப் புத்தகம் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

I. சாலொமோன் இராஜாவின் அரசாட்சியின் வரலாறு.

1. ஆரம்ப சம்பவங்கள். தாவீதின் மரணம், மகன் சாலொமோன் சிம்மாசனம் ஏறுதல் அதி 1-2
2. சாலொமோன் ஆட்சியின் ஆரம்ப காலங்கள். இஸ்ரவேலின் பொற்காலம். பின்வருவனவற்றால் புகழ்பெற்றது.
   a. இராஜாவுடைய ஞானமான தெரிந்தெடுத்தல் 3:5-14.
   b. அவனுடைய நியாயத்தீர்ப்பு 3:16-28.
   c. எல்லாவற்றையும் மிஞ்சிய ஞானம். 4:29-34.
   d அவனுடைய நாடுகளின் வளர்ச்சி. 4:21.
   e. அவனுடைய பிரகாரங்களையும், அவனுடைய அரண்மனைகளின் மகிமையையும் 4:22-28; 7:112.
   f. ஆலயம் கட்டி எழுப்பப்பட்டது. அதி 5-6.
   g. மற்ற கட்டிட நிர்மாணங்களும், திரண்ட ஐசுவரியமும் 9:17-23; 10:14-29.
   h. சேபாவின் இராஜஸ்திரீயின் வருகை. 10:1-13.
3. அவனுடைய ஆட்சியின் பின்பகுதி ஆண்டுகள். அவனுடைய ஆட்சி வீழ்ச்சியடைய காரணங்கள்:
   a. டாம்பீகமான ஆடம்பரம் 10:14-29.
   b. அவனுடைய கேடுண்டாக்கும் பாலியல் இச்சை 11:1-3.

   c. தேவனை விட்டு வழிவிலகி அவன் பின்வாங்குதல் 11:4-8.
   d. தேவனால் அவனுக்கு விரோதமாக எழுப்பப்பட்ட சத்துருக்கள் 11:14-40.

II. யூதா இஸ்ரவேல் நாடுகளின் வரலாறு :
சாலொமோனுடைய மரணத்திலிருந்து யூதாவில் யோராம் சம்மாசனம் ஏறுதல். பின்னர் யோராம் ஆட்சிமுதல் இஸ்ரவேலில் அகசியா ஆட்சி வரைக்கும்.

1. இராஜ்ஜியமானது, சாலொமோனுடைய குமாரன் ரெகோபெயாம் உடைய அதிவேகத்தால் சிதறுண்டது. 11:43-12:19.
2. 10 கோத்திரங்கள் கலகம் செய்து, யெரோபெயாமை இஸ்ரவேலின் இராஜாவாக்குதல். 12:20.
3. இந்த இரண்டு இராஜ்ஜியங்கள் ஒரு ஒப்பிடுதல் சரித்திரம் :
   a. யூதாவில் ரெகோபெயாம், அபியா, ஆசா, யோசபாத் இவர்களின் ஆட்சி 12:1-22:50
   b. இஸ்ரவேலில் பொல்லாத ஆட்சி யெரோபெயாம், நாதாப், பாஷா, ஏலா, சிம்ரி, உம்ரி, ஆகாப் அகசியா.12:20-22:53

**வீர கதாபாத்திரம்** - எலியா தீர்க்கதரிசி, தீர்க்கதரிசனங்கள் அவன் செய்த அற்புதங்கள்.

**தெளிவு வசனபகுதி**

- சாலொமோனுடைய விவேகமான தெரிவு 3:5-14.
- சாலொமோனுடைய ஜெபமும், ஆலய பிரதிஷ்டையும் 8:22-53.
- எலியாவின் ஊழியம் அதி 17 -19; 21.
- எலிசாவின் அழைப்பு 19:19-21.

---

## II. இராஜாக்கள் புத்தகம்

I இராஜாக்களின் புத்தகத்திற்கு பின்தொடர்ச்சி

**எழுதியவர்** - பெயர் தெரியாது.

**முக்கியமான தலைப்புப் பொருள்** : இஸ்ரவேல் யூதா தேசத்து வரலாறு. இஸ்ரவேலில் அகசியாவின் ஆட்சியின் பின்பகுதியில் இருந்தும், யூதாவில் யோராம் ஆட்சியில் இருந்தும் இஸ்ரவேலர் சிறைப்பட்டுப் பேகும் காலம் வரைக்கும்.

இஸ்ரவேல் நாட்டு வரலாற்றைப் பொருத்தவரை அது தரம் கெட்ட அரசர்களும், பாவியான மக்களும் நிறைந்து அடிமைத் தனத்தில் முடிவாகும் இருண்டதோர் படத்தைக் காட்டுகிறது.

யூதா இராஜ்ஜியமுங்கூட கீழ்நோக்கிப் போய் கொண்டிருந்தது. ஆனாலும் அந்த நாட்டின் மீது வெகு சீக்கிரமாக ஆக்கினைத் தீர்ப்புச் செய்யப்படவில்லை. ஏனென்றால் இக்காலக்கட்டத்தில் சில நல்ல அரசர்கள் அரசாட்சி செய்த தாக்கத்தினால் அந்த நிலைமை ஏற்பட்டது. 2நாளாகப்புத்தகத்தின் பிரித்து ஆய்வைப் பார்க்கவும்.

இந்த புத்தகத்தில் இரண்டு தீர்க்கதரிசிகளாகிய எலியா எலிசா என்பவர்களை மையமாக வைத்து அவர்களுடைய ஜீவியத்தைச் சுற்றி பேசுகிறது.

**ஆவிக்குரிய செய்தி** : ஒரு தேசத்து ஜனங்கள் மீது வல்லமையான அரசர்களின் செல்வாக்கு.

**பாடச்சுருக்கம்** : இந்த புத்தகத்தை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்.

**I. முக்கியமாக எலியாவின் கடைசி நாட்களின் வரலாறு :**

1. அவன் வானத்திலிருந்து அக்கினியை வரவழைத்து, தன் சத்துருக்களை அழிக்கும்படி செய்தான். 1:9-12.
2. யோர்தான் நதியை இரண்டாகப் பிரியச்செய்தது. 2:8.
3. அவனுடைய மறுரூபம். 2:11.

**II.** **பெரிதும் எலிசாவின் சரித்திரமாக :**

1. அவன் எலியாவின் வரத்தில் இரட்டிப்பான பங்கை வேண்டினான். 2:9.
2. அவன் யோர்தானை இரண்டாகப் பிரியச் செய்தான் 2:14
3. தண்ணீரை சொஸ்தமாக்கினான். 2:19-22.
4. அவனை பரியாசம் பண்ணின சிறுவர்களை சபித்தான். 2:23,24.
5. அவன் ஒரு சேனைக்கு தண்ணீர் கிடைக்கச் செய்தான். 3:15-20.
6. அவன் விதவையின் எண்ணை கீண்ணத்தில் எண்ணெய் பெருகும்படி செய்தான். 4:1-7.
7. மரணமடைந்த குழந்தையை உயிர் பெற்று எழும்பும்படி செய்தான். 4:18-37.
8. சாவு இருந்த ஆகாரத்தை ஆரோக்கியப் படுத்தினான். 4:38-41.
9. திரளான ஜனங்களை போஷித்தான். 4:42-44.
10. குஷ்டரோகியான நாகமானைச் சொஸ்தமாக்கினான். 5:5-15.
11. கேயாசிக்கு குஷ்டரோகம் வரப்பண்ணினான். 5:20-27.
12. கோடாரியின் இரும்பை மிதக்கும்படி செய்தான். 6:1-7.
13. சீரியா இராஜாவின் திட்டங்களை அறிவித்தான் அதி 6.
14. சீரியர்களை பார்க்கக் கூடாதபடி செய்தான். 6:18-20.
15. பஞ்சத்தால் அடிப்பட்ட நகரத்திற்கு அபரிமிதமானதை முன்னுரைத்தான். 7:1-8.
16. சுனேமியாளுக்கு அவளுடைய நிலத்தைத் திரும்பப் பெறும்படியாகச் செய்தான். 8:3-6.
17. ஆசகேல் உயர்த்தப்படுவதைக் குறித்து தீர்க்தரிசனம் உரைத்தான். 8:7-15.
18. யெகூவை இராஜாவாக அபிஷேகம் செய்யும்படி கட்டளையிட்டார். 9:1-6.
19. அவனுடைய மரணப்படுக்கையிலும், தன்னுடைய தீர்க்கதரிசன வல்லமையை தன்னிடம் வைத்திருந்தான் 13:14-19.
20. அவனுடைய கல்லறையில் இறந்த உடல் பரிசோதனைக்கு பின்வருகிற தெய்வீக வல்லமையின் வெளிப்பாடு.

அவனுடைய வல்லமையின் இரகசியமானது, கிருபையின் இரண்டு மடங்கைப் பெற்றுக் கொள்ளும் அவனுடைய வாஞ்சையானது, அவனை ஆவிக்குள்ளாக தொடர்நது ஜெயம்பெற அவனைத் தகுதியாக்கிற்று.

**III.** **யூதா இஸ்ரவேல் நாட்டு சரித்திரத்தில் குறிப்பிடத்தக்க சில சம்பவங்கள் :**

1. யோராம், அகசியா, யேசபேல், ஆகாபுடைய எழுபது குமாரர்கள், பாகாலை வழிபடுகிறவர்கள் மீது யெகூ நிறைவேற்றிய தெய்வீக நியாயத்தீர்ப்பு.
2. யோவகாஸ் உடைய நல்லாட்சி 18-20 அதி.
3. இஸ்ரவேல் அரசர்களின் பொல்லாத ஆட்சியும், அதைத் தொடர்ந்து பத்துக் கோத்திரங்கள் சிறைபட்டு போகுதலும் அதி 13-17.
4. எசேக்கியாவின் நல்லாட்சி. 18-20.
5. மனாசேயின் கொடுங்கோலாட்சி அதி 21.
6. யோசியா நல்லாட்சி செய்த அரசர்களின் கடைசி நாட்கள்.
7. யூதாவின் பொல்லாத ஒரு வரிசை அரசர்கள் மக்கள் சிறைப்பட்டு போவதற்கும் எருசலேம் அழிக்ககப்படுவதற்கும் வழி நடத்தியது. அதி 25.

---

## 1நாளாகமம் புத்தகம் :

**எழுதியவர்** - பெயர் நிச்சயமில்லை. எஸ்றாவால் தொகுக்கப்பட்டது என்று கருதப்படுகிறது. I,II நாளாகமங்கள் எபிரேயத்தில் ஒரே புத்தகமாகக் கருதப்படுகிறது.

**காலம் :** ஒரு வேளை சிறைப்பட்டு போனபோதோ அல்லது சிறைபட்டு போனதற்கு பின்னரோ எழுதப்பட்டிருக்கலாம்.

I,II சாமுவேல் - புத்தகங்களுக்கும், I,II இராஜாக்கள் புத்தகத்திற்கும் **உபபுத்தகங்களாக** எழுத்துக் கொள்ளப்படலாம். வரலாற்று குறிப்புகளில் சில ஏறக்குறைய முந்தின புத்தகங்களோடு ஒன்றுபோல இருக்கிறது.

**வேறுபடுத்தும் அம்சங்கள் :** சாமுவேல் - இராஜாக்கள் ஆகிய புத்தகங்கள் இரண்டு இராஜ்ஜியங்களின் சம்பவங்களையும் குறிப்பிடுகின்றன. ஆனால் வித்தியாசமாக நாளாகமங்கள் யூதாவின் வரலாற்றை தனிமைப்படுத்தி கூறுகின்றன.

**மத்திய கருத்து :** தேவனுடைய சர்வ வல்லமை 4:9-10; 5:20; 11:14; 12:18; 14:2,10,14,15

**மத்திய கதாபாத்திரம்** - தாவீது.

**புத்தகத்தின் பகுத்துப் பிரித்த ஆய்வு.**

**I.** 1. வம்சாவளிகள் அதி 1-9.
2. சவுல் தோற்கடிக்கப்பட்டதும், மரணமும் அதி 10.

**II.** தாவீதுடைய ஆட்சி :

1. அவன் சிம்மாசனம் ஏறுதல், எருசலேம் பிடிக்கப்படுதல், அவனுடைய பராக்கிரமசாலிகளும், இராணுவமும் அதி 11-12.
2. உடன்படிக்கைப் பெட்டியை புதிய வண்டியில் ஏற்றிக்கொண்டு வர அவன் செய்த முயற்சியான தவறு. அதி 13.
3. பெலிஸ்தர்கள் மீது அவனுடைய வெற்றி.
4. உடன்படிக்கைப்பெட்டி எருசலேமுக்குக் கொண்டு வரப்பட்டது. அதி 15.
5. மகா மகிழ்ச்சியான கொண்டாட்டம் அதி 16.
6. கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டும் படியான இராஜாவின் விருப்பம் மறுக்கப்பட்டது. அதி 17.
7. மகா இராணுவ வெற்றிகள் அதி 18-20.
8. பாவம் நிறைந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு. அதி 21.
9. ஆலயத்தைக் கட்டுவதற்காக பொருள்களை ஆயத்தம் செய்தலும், அதன் பொறுப்பை சாலொமோனுக்குக் கொடுத்தலும் அதி 22.
10. மேற்கொண்டு இராஜ்ஜியத்தின் காரிங்களை ஒழுங்கு செய்தல். அதி 23:27.
11. ஜனங்களுக்கு தாவீது கடைசியாகக் கொடுத்த பொறுப்பும், மகனிடம் (சாலொமோனிடம்) கொடுத்த பொறுப்பும், சாலொமோனை அரசனாக்கியதும் அதி 28-29, தாவீதின் மரணம் 29:28.

**தேர்வு செய்யப்பட்ட தெரிவுகள் :**

1. யாக்கோபுடைய ஜெபம். 4:10.
2. தாவீது பெத்லேகேம் கிணற்றிலிருந்து கொண்டு வந்த ஜலத்தை ஊற்றிப்போடுதல். 11:17-19.
3. தாவீதுடைய சங்கீதங்கள் 16:7-16.
4. தாவீதுடைய பாடகர் குழு வர்ணனையும் இசைக்குழுவும். அதி 25.
5. தாவீதுடைய கடைசி ஆசீர்வாதமும், ஜெபமும்.

---

## 2நாளாகமம் புத்தகம்

இந்த புத்தகம் 1நாளாகமத்திற்கு பின்தொடர்ச்சியும் இராஜாக்கள் புத்தகத்திற்கு துணைப்புத்தகமும் ஆகும்.

இங்கே சொல்லப்படுகிறதான யூதாவின் வரலாறு முழுவதுமே முழுவதும் இருண்டதாக, சத்துவமில்லாமையும், தேவனை விட்டு விலகுதலையும் காட்டும் படமாகக் காட்டப்படுகிறது. இதன் இடைக்கிடையே ஆவிக்குரிய விஷய தானமும் பெறப்படுகிறது.

**குறிப்பிடத்தக்க அம்சங்கள்** : இந்த வரலாற்றில் ஆவிக்குரிய துணைப்பொருள் இராஜாக்கள் புத்தகத்தை விட நாளாகமப்புத்தகத்தில் அதிகமாக வற்புறுத்தப்படுகிறது.

2நாளாகமத்தில் மட்டும் காணப்படும் **ஒத்து வாக்கியங்களின் எடுத்துக்காட்டுகள்** :

- அபியாவுடைய சமயபக்தியுடைய சொற்பொழிவு 13:5-12.
- ஆசா தேவனை புறக்கணித்தது. 16:12.
- யோசபாத்துடைய மதியீனமான உடன்பாடுகள் 20:35.

- உசியாவின் குஷ்டரோகத்துக்குக் காரணம். 26:16-21.
- மனாசே சிறை பிடிக்கப்படுதலும், திரும்புதலும் 33:11-13.

### ஐந்து சீர்திருத்த காலங்கள் விவரிக்கப்படுகின்றன

1. ஆசா இராஜாவுக்கு கீழ் அதி 15.
2. யோசபாத் இராஜாவுக்கு கீழே 17:6-10.
3. ஆசாரியனாகிய யோய்தாவுக்கு கீழ் யோவாஸ் அரசனுக்கு கீழும் 23:16-19.
4. எசேக்கியா இராஜாவுக்கு கீழ் அதி 29-31.
5. யோசியா இராஜாவுக்கு கீழ் அதி 34-35.

### சுருக்கம்

I. சாலொமோனுடைய இராஜ்யபாரம்.

1. கிபியோனில் சாலொமோன் பலிகள் செலுத்துதல் அவனுடைய ஞானமான தெரிந்து கொள்ளுதல். அதி. 1.
2. ஆலயம் கட்டி எழுப்பிக்கப்படுதல் அதி 2-4.
3. தேவனுடைய மகிமை வீட்டை நிரப்பியது. அதி 5.
4. ஆலயப் பிரதிஷ்டையின் போது சாலோமோனுடைய ஜெபம் அதி 6.
5. யேகோவா சாலொமோனுக்கு மறுபடியும் தரிசனம். அதி 7.
6. சாலொமோனுடைய ஐசுவரியமும் கீர்த்தியும் அதி 8.
7. சேபாவின் இராஜஸ்திரீ வருகையும், சாலொமோனுடைய மரணமும் அதி 9.

II. ரெகோபெயாமுடைய மதியீனம் இராஜ்ஜியம் பிரிக்கப்படுவதற்கு நடத்தியது. அதி 10.

III. ரெகோபெயாமிலிருந்து சிதேக்கியா வரை ஆண்ட பல்வேறு ஆட்சிகளின் வரலாறு..

அபியா அதி 13; ஆசா அதி 14-16; யோசபாத் அதி 17-20;
யோராம் அதி 21; அகசியா 22:1-9; அத்தாலியா (அரசி) 22:10-23: 15;
யோவாஸ் அதி 24; அமத்சியா அதி 25; உசியா அதி 26;
யோதாம் அதி 27; ஆகாஸ் அதி 28; எசேக்கியா அதி 29-32;
மனாசே அதி 33:1-20; ஆமோன் 33:21-25; யோசியா அதி 34-35;
யோவகாஸ் 36:1-3; யோயாக்கீம் 36:4-8; யோயாக்கீன் 36:9-10;
சிதேக்கியா 36:11-13.

**ஆவிக்குரிய செய்தி** : வெற்றியையும், ஜெயத்தைக் கொடுக்கும் ஜெபத்தின் வல்லமை: 11:16; 13:13-18; 14:11; 15:12; 17:4; 20:3; 26:5; 27:6; 30:18-20; 31:21; 32:20; 34:3.

### ஆவிக்குரிய பாடங்கள் :

1. ஒப்புயர்வற்ற ஞானம் 1:7-12
2. ஆயத்தம் பண்ணப்பட்ட ஆலயத்தை தேவனுடைய மகிமை நிரப்பியது. 5:13-14.
3. துதியின் ஆவி, தேவ ஜனங்களை, யாராலும் ஜெயிக்கப்பட முடியாதவர்களாக்குகிறது.20:20-25.

---

## எஸ்றாவின புத்தகம்

**எழுதியவர்** - பெயர் தெரியாது. இந்தப் புத்தகம் முழுவதையும் எஸ்றா எழுதவில்லை என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் அவனால் எழுதப்படாத சில பகுதிகளை தொகுத்திருக்கலாம். அவன் பாபிலோனுக்கு தேசாந்திரம் அனுப்பப்பட்ட யூதன். அவன் ஆசாரிய வகுப்பைச் சேர்ந்தவன். 7:1-6.

**முக்கியமான தலைப்புகள்** :- பாபிலோனிய சிறையிருப்பில் இருந்து யூதர்கள் திரும்பவும் வருதல் ஆலயம் திரும்பவும் கட்டி எழுப்பிக்கப்பட்டது. மேலும் சமூக மார்க்க சம்பந்தமான சீர்திருத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டது.

**ஆவிக்குரிய செய்தி** : மனித ஜீவியத்தில் தேவனுடைய வார்த்தையின் வல்லமை தேவனுடைய வார்த்தை என்று குறிப்பிடப்படுவது, 1:1; 9:4; பிரமாணம் (மோசேயின்) புத்தகம் 3:2; 6:18; 7:6; கட்டளைகள் 6:14; 10:3; கர்த்தரின் நியமங்கள் 7:10,4.

**விஷய சுருக்கம் :**

I. முதல் குடியிருப்பு யூதர்கள் திரும்ப வருதல் செருபாபேலுடைய தலைமையின் கீழ் அதி 1-6.
  a. சைரஸ் அரசனால் அதிகாரம் பெற்றது. 1:1-4.
  b. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த மீதியானவர்களின் நாமங்கள் : ஆசரியர்கள், லேவியர், சாலோமோனுடைய வேலைக்காரருடைய சந்ததியாரும், அவர்களுடைய உடைமைகளும், வெகுமதிகளும். அதி 2.

II. அவர்களுடைய கட்டடம் கட்டும் முயற்சிகள் :
  a. ஆலய மேடை திரும்பவும் எடுப்பிக்கப்பட்டு ஆராதனை ஸ்தாபிக்கப்பட்டது. 3:1-6.
  b. ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடப்பட்டது. 3:8-13.
  c. தேசத்து ஜனங்கள் அந்த பணியில் தாங்களும் சேர்ந்து கொள்ள விருப்பம் தெரிவித்தல்.
  d. அவர்களுடைய விருப்பம் மறுக்கப்பட்ட பொழுது, அவர்கள் வன்மையான எதிர்ப்பாளர்களாக மாறி வேலையை நிறுத்தும்படியாகச் செய்தார்கள். 4:4-24.
  e. நீண்ட கால தாமதத்திற்குப் பிறகு அந்த வேலை தரியு இராஜாவுடைய கரிசனத்தினால் திரும்பவும் ஆரம்பிக்கப்பட்டது. அதி 5-6.
  f. ஆலயம் கட்டி முடிந்தது. பிரதிஷ்டை செய்யப்பட்டது. பூர்வீகமான சடங்காசாரங்கள் அமல் படுத்தப்பட்டன. 6:15-22.

III. இரண்டாவது, குடியேற்ற மக்கள் எஸ்றாவின் கீழ் ஆகாஸ்வேரு ராஜாவால் அதிகாரம் பெற்று திரும்ப வந்தார்கள்.
  a. சிறையிருப்பில் இருந்து திரும்பி வந்த எஸ்றாவின் கூட்டத்தாரின் அட்டவனையும் அவர்கள் எருசலேமுக்கு வந்து சேருதலும் அதி. 8.
  b. சமூகத் தீங்குகளை எஸ்றா சீர்திருத்தம் செய்தல். அதி 9-10.

**எஸ்றாவின் இலக்கிய சமயசம்பந்தமான பணிகள்** : அவன் புகழ்பெற்ற பல சங்கீதங்களை இயற்றியவன் குறிப்பாக சங்கீதம் 119.

பூர்வீக பாரம்பரியத்துப்படி அவன் I,II நாளாகமப் புத்தகங்கள் எழுதினான். ஆனால் இதை நிரூபிக்கமுடியாது. அவன் நெகேமியாவுடன் இணைந்து வேதாகமப் படிப்பை திரும்பவும் உயிர்ப்பித்து தொடங்கி வைத்தான். நெகேமியா அதி 8. அவன் யூதர்களுடைய ஜெப ஆலயத்தைத் தோற்றுவித்த புகழையுடையவன். மேலும் பழைய ஏற்பாட்டு பல புத்தகங்களையும் ஒன்றாகத் தொகுத்தவன்.

**தெரிவு தேர்வுகள் :**

1. மகத்தான பொக்கிஷங்களை அபாயகரமான இடங்களின் வழியாக எடுத்துச் செல்லும்படியாக அழைக்கப்பட்டபொழுது உன்னதமான தெய்வீக பாதுகாப்பில் நம்பிக்கை கொண்டவன். 8:21-32.
2. எஸ்றாவுடைய ஜெபமும், ஜனங்களுக்காக பாவ அறிக்கையும் 9:5-15.

---

## நெகேமியாவின் புத்தகம்

எபிரெய கையெழுத்துச் சுருள்களில் எஸ்றா- நெகேமியா ஒரே புத்தகமாகக் காணப்படுகிறது.

**எழுதியவரும், தொகுத்தவரும்** -நிச்சயமாகத் தெரியவில்லை. இந்த புத்தகத்தின் பெரும் பகுதி பல அறிஞர்களால் நெகேமியாவின் சுயசரிதையாகக் கருதப்படுகிறது.

**திறவுகோல் வசனம்** : 6:3.

**முக்கியமான தலைப்புகள் :** எருசலேமின் மதிற்சுவர்கள் திரும்பக் கட்டப்பட்டபொழுது, சில தெய்வீக பிரமாணங்களும், பூர்விகமான ஆணைகளும் திரும்பக் கொண்டு வரப்பட்டன.

**சுருக்கம்**

I. சாயல்கள் பற்றியதோர் படிப்பு

1. கருத்தாய்வுக் கொள்கை : எருசலேமின் மதில்கள் திரும்பவும் எடுப்பிக்கப்பட்டது. பரமபரலோக இராஜ்ஜியத்தை பூமியில் திரும்பக் கட்டப்படுவதற்கு சாயலாகக் கருதப்படுகிறது.

a. மதிற்சுவாக்ள் இடிக்கப்பட்டது (1:3) ஒருவேளை தேவனுடைய இராஜ்ஜியத்தின் பாதுகாப்பு பலவீனமடைந்ததற்கு சாயலாகலாம்.

b. உபவாசித்து ஜெபித்தலுக்கு முன்னதாக இருக்கிற காலமானது, (1:4-11) ஒருவேளை எல்லாவிதமான ஆவிக்குரிய முயற்சிகளையும், முன்னதாகப் போய் இருக்க வேண்டிய சிந்தனையின் நிலையின் சாயலாக இருக்கலாம்.

c. நெகேமியாவுடைய ஒரு நல்ல காரியத்திற்காக ஒரு நேர்த்தியான ஸ்தானத்தைத் தியாகம் செய்வது ஒரு பெரிய வேலையை நிறைவேற்றுவதற்கு முன்னதாக அவசியமாக இருக்க வேண்டிய தியாகமான பணியைக் குறிக்கும் சாயலாக இருக்கலாம்.

d. நகரத்தைச் சுற்றி இரவில் ஆய்வு செய்தது (2:15-16) ஒரு நிர்மாண வேலையை ஆரம்பிக்கு முன்னர் சரியான காரியங்களை சந்திக்க வேண்டிய அவசியத்தின் சாயலாக இருக்கலாம்.

e. ஒருமைப்பாட்டை நாடுவது. (2:17-18). வெற்றியான எல்லா கிரியைகளுக்கும் அவசியமான காரணமான துணை ஏதுப்பொருளாக இருக்கலாம் என்பதன் சாயலாக இருக்கலாம்.

f. எல்லா வகுப்பினரையும் பெயர் பதிந்து இருப்பது (அதி3) ஒழுங்குபடுத்தும் வழியினை சாயலாக கொண்டிருக்கலாம்.

2. ஆவிக்குரிய பணிகளில் தடைகளை மேற்கொள்ளுவதற்கு அதே செய்முறைகளையும் பயன்படுத்தலாம்.

a. பரியாசம் 2:19. தேவனுக்குள் நம்பிக்கையால் மேற்கொள்ளலாம்.

b. சினமும் இகழ்ச்சியும் 4:3 ஜெபத்தினாலும், கடினமாக வேலை செய்வதாலும் மேற்கொள்ளலாம்.

c. சதியாலோசனை (4:7,8) விழிப்புணர்வினாலும், ஜெபத்தினாலும் மேற்கொள்ளலாம்.

d. நண்பர்களால் உற்சாகம் இழத்தல் 4:10-12. விடாமுயற்சியான ஊக்கத்தினால் மேற்கொள்ளலாம்.

e. சுயநலமான பேராசை 5:1-5 கடிந்து கொள்ளுதலினாலும், சுயதியாகமான முன்மாதிரியால் மேற்கொள்ளலாம் 5:6-17.

f. பணி முற்று பெற்றால் சத்துருக்கள் விடா பிடியான முயற்சியினால் குழப்பமடைவர்கள். 6:1-5.

II. முடிவான சம்பவங்கள்

a. தெய்வீக பிரமாணம் விளக்கப்படுதலும் ஒத்திகை செய்தலும் அதி 8.

b. ஆசாரியர்களும், லேவியரும் பாவ அறிக்கை செய்தலும், உடன்படிக்கையை கையொப்பமிடுதல் அதி 9-10.

c. எருசலேமில் வாசம் பண்ண ஜனங்களுக்கு அழைப்பு அதி 11.

d. மதிற்சுவர்கள் பிரதிஷ்டை செய்யப்படுதல் அதி 12.

e. சமூக மார்க்க சம்பந்தமான சீர்திருத்தங்கள் அதி 13.

---

## எஸ்தர் - புத்தகம்

**எழுதியவர்** - பெயர் தெரியாது.

**வேதாகமப் புத்தகங்களில் இடம் பெறும் உரிமை** : இந்த புத்தகத்தின் இந்த உரிமை குறித்து பெரிதும் சர்ச்சை செய்யப்படுகிறது. தேவனுடைய நாமம் அதில் எங்கும் காணப்படவில்லை. ஆனால் ஒரு புறஜாதி மன்னன் 150 தடவையாகக் குறிப்பிடபடுகிறான். ஜெபத்திற்கோ, ஆவிக்குரிய ஊழியக் கிரிகைளான எந்த வகையான கிரியைகளுக்கே உபவாசம் என்ற கூடுமான விதிவிலக்கைத் தவிர எந்த விதமான குறிப்பீடும் இல்லை.

**செய்தி:** சந்தேகமின்றி தேவனுடைய வார்த்தையில் ஓர் இடத்தை வகிக்கிறது. ஏனென்றால், அதன் மறைபொருளான போதனையும், தேவ ஜனங்களோடு நிழலாட்டமான தெய்வச் செயலும் மேலும் சத்துருக்களை பழிவாங்குதல் மேற்கொள்ளுவதும் நிச்சயமாகும்.

**நடப்புத் தலைப்பு** : எஸ்தர் இராஜாத்தியால் யூதர்கள் விடுவிக்கப்படுதல்.

**திறவுகோல் வசனம்** : 4:14.

**சுருக்கம்** : இந்த வரலாற்றின் மூன்று முக்கிய சம்பவங்கள் மூன்று விருந்துகளைச் சுற்றி வருகிறது.

I. ஆகாஸ்வேரு கொடுத்த விருந்தும், அது சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளும்.

1. ஏழாம் நாளில் இராஜா திராட்ச ரசத்தால் களித்து இருந்தபொழுது வஸ்தி என்ற இராஜஸ்திரீ கூடியிருந்த இராஜகுலத்து மக்களுக்கு முன்பாக வரும்படியாக இராஜாவிடமிருந்து கட்டளை பெற்றாள். ஆனால் வருவதற்கு மறுத்து விட்டாள். 1:1-12.
2. அந்த கோமடைந்த அரசன் தன்னுடைய விவேகமுள்ள மனிதர்களாகிய பிரதானிகளின் ஆலோசனையை ஏற்றுக் கொள்ளுவதற்கு தீர்மானித்து அவளை இராஜாத்தியாக இராதபடி நீக்கி விட்டான். 1:13-22.
3. இராஜாவின் நாடெங்கும் புதிய ராஜாத்திக்காக தேடின பின்னர் எஸ்தர் என்ற யூதப்பெண் தெரிந்தெடுக்கப்பட்டாள். 2:1-17.

II. எஸ்தர் கொடுத்த விருந்து முன்னோடியான சம்பவங்களும் முடிவான விளைவும் :

1. மொர்தேகாய் என்ற யூதன் இராஜாத்தியின் சிறிய தகப்பன் இராஜாவின் பிராணனைக் காப்பாற்றுகிறான். 2:7 உம். 2:21-23.
2. ஆமானுடைய பதவி உயர்வும், மொர்தேகாய் அவனை கனம் பண்ணத் தவறியதும் ஆமானை மூர்க்க வெறி கொள்ளச் செய்து, அவன் சகல யூதர்களையும் நிர்முலமாக்க தீர்மானிக்கிறான். 3:1-15..
3. ஆமானுடைய சதியாலோசனையைக் கண்டறிந்து யூர்கள் துக்கங் கொண்டாடினார்கள். 4:1-4.
4. இந்த சதியை முறிய அடிக்கும் திட்டத்துடன் எஸ்தர் இராஜாவுக்கு முன்பாக பிரவேசிக்கும் படியாக ஒரு வீரமான தீர்மானம் செய்து கொண்டாள். 4:5-17.
5. இராஜாவால் கிருபை கூர்ந்து வரவேற்புபெற்ற எஸ்தர், இராஜாவையும், ஆமானையும் தான் செய்யும் விருந்துக்கு வருமாறு அழைப்பு விடுத்தாள். 5:1-8.
6. மொர்தேகாயை தூக்கிலிடும் படிக்கு ஆமான் ஒரு தூக்கு மரத்தைச் செய்வித்தான். 5:9-14.
7. தூக்கம் வராத ஒரு இரவில் இராஜா அரண்மனை தாஸ்தாவேஜுகளை பரிசீலனை செய்து, தன் பிராணனைப் பாதுகாத்ததற்காக மொர்தேகாய்க்கு எந்த விதமான வெகுமதியும் கொடுக்கப்படவில்லை என்று கண்டறிந்தான். 6:1-3.
8. ஆமானுடைய தன்னலமான மாய்மாலம் அவன் தானே தாழ்த்தப்படும் விளைவில் அவனைக் கொண்டு வருகிறது. மொர்தேகாய்க்கு மிகுந்த கனம் செய்யப்பட்டது. 6:4-11.
9. எஸ்தருடைய விருந்தும் ஆமானுடைய சதியும் வெளிப்படுத்தப்படுகிறது. மொர்தேகாய்க்காக அவன் கட்டிய தூக்கில் அவனை தூக்கிலிட்டார்கள். அதி 7.

III. பூரிம் என்ற பண்டிகை

1. முன்னோடியான சம்பவங்கள்.
   a. தங்கள் சத்துருக்களுக்கு விரோதமாக அவர்களைப் பழிவாங்கும் குணம் யூதர்களுக்கு இராஜாவால் அதிகாரம் பெற்றது. அதி 8.
   b. பழிவாங்குதல் நிறைவேற்றப்பட்டது. அதி 9.
2. பண்டிகை நியமனம் செய்யப்பட்டது. 9:20-31.
3. மொர்தேகாய் கனம் பெற்றான். அதி 10.

## **யோபுவின்** புத்தகம்

**எழுதியவர்** பெயர் தெரியாது.

**தேதி (காலம்)** அதிகமான விவாதத்திற்குட்பட்டது. பல அறிஞர்களால் வேதாகமத்திலே மிகப் பழமையானதாகக் கருதப்படுகிறது. மற்றவர்கள் சிறைபிடித்து கொண்டு போகப்பட்ட காலத்திற்கு பிந்தியதாக அதை வைத்திருக்கிறார்கள்.

**இடம் :** ஊத்ஸ் தேசம்.

**முக்கியமான தலைப்பு :**

யோபுக்கு வந்த நெருக்கத்தின் பிரச்சனை. இந்த புத்தகம் காவியமாகவும் படம் பிடித்துக் காட்டும் வருணனைகள் அடங்கியது. இதை பன்னிரு காட்சிகளாகப் பிரிக்கலாம்.

காட்சி 1 : யோபும் அவன் குடும்பத்தினரும் அந்த இடுக்கண் அவர்களை மேற்கொள்ளுவதற்கு முன்னர்.

யோபு ஓர் ஞானத்தகப்பனாக செலவச்செழிப்பு பாதிக்கப்படாமல் அந்த பெரிய குடும்பத்திற்கு ஆசாரியனாகவும் ஊழியம் செய்தார் 1:5.

காட்சி 2 :

a. சாத்தான் தேவ சமூகத்திற்கு வந்து தேவன் யோபுவுக்கு விசேஷமான ஆசீர்வாத சலுகைகள் தருவதால், தேவனுக்கு பணி புரிகிறான் என்று மறைமுகமாகச் சொன்னான்.
b. ஐசுவரியத்திலும், பிள்ளைகளிலும் நஷ்டம் உண்டாக்கும்படி சோதிக்க வெண்டுமென்று தேவனிடம் சாத்தான் உத்தரவு பெற்றுக் கொண்டான். 1:12-20.
c. யோபு தன் உத்தமத்தைக் காத்துக் கொண்டான். 1:21-22.

காட்சி 3 :

a. சாத்தான் தேவ சமூகத்திற்கு மறுபடியும் வருகிறான். யோபுடைய சரீரம் தொடப்பட்டால் அவன் தேவனை சபிப்பான் என்று குற்றம் சாட்டுகிறான். 2:1-5.
b. யோபுவை ஒரு பயங்கரமான நோயினால் வாதிக்கப்படும் படியாக சாத்தான் உத்தரவு பெற்றுக் கொண்டான். 2:7,8.
c. தூஷிக்கும் படியாக யோபுவின் மனைவியுடைய ஆலோசனையும், யோபுடைய வெற்றிகரமான சரணா கதியும் யோபு 2:9-10.

காட்சி 4: யோபுவுடைய மூன்று சிநேகிதர்களுடைய வருகையும், அமைதியான இரக்கமுள்ள ஏழு நாட்களும் 2:11-13.

காட்சி 5 : யோபுடைய பொறுமை தீர்ந்து போய்விட்டது. அவன் தன் புகாரை எடுத்துச் சொல்கிறான். அதி 3.

காட்சி 6 : யோபுவுக்கும், அவனுடைய மூன்று சிநேகிதர்களுக்கும் இடையே நடந்த பலன் அற்ற நீண்ட விவாதங்களும், அவனுக்கு நேர்ந்த இடுக்கண் பற்றியவைகளாய் நடந்தது. அவனுடைய நண்பர்கள் இந்த கஷ்டங்கள் அனைத்தும் அவன் செய்த பாவங்களால் உண்டானவை என்றார்கள். யோபு தன்னை பாதுகாத்துக் கொண்டான். அதி 4:31.

காட்சி 7 : எலிகூவும் விவாதத்தில் சேர்ந்து கொண்டான். அதி 32:37.

காட்சி 8 : சுழல் காற்றிலிருந்து தேவன் யோபுவுக்கு பிரதியுத்தரம், ஞானமான வெளிப்பாட்டுடனும் கடிந்து கொள்ளுதலும் அவனுக்குக் கொடுத்தார். அதி 38-39.

காட்சி 9 : யோபுவுடைய பாவ அறிக்கை 40:3-5.

காட்சி 10: கர்த்தர் இரண்டாவது, தடவையாக பேசுகிறார் 40:7 - 41:34.

காட்சி 11:

a. யோபுவுடைய இரண்டாவது பாவ அறிக்கை. 42:1-6.
b. கர்த்தர், எலிப்பாஸ், பில்தாத், சோப்பார் ஆகியவர்களை அவர்களுடைய புத்தியீனமான வார்த்தைகளுக்காக் கண்டிக்கிறார். அவர்களை தமக்கு பலி செலுத்துமாறு அவர்களுக்கு ஒரு கட்டளையையும் கொடுக்கிறார். 42:7-9.

காட்சி 12: யோபு தனது சிநேகிதர்களுக்காக வேண்டிக் கொண்டான். அவனுடைய ஐசுவரியம் திரும்ப வந்தது. அவன் தகுந்த முதிர்வயது வரைக்கும் ஜீவித்திருந்தான். 42:10-17.

### ஆலோசனைக்கான பாடங்கள்

1. சாத்தானுடைய பொல்லாங்கான வல்லமை மனிதனுடைய ஜீவியத்தில்
2. நல்லொழுக்கத்தை பூரணமடையச் செய்வதற்காக துன்பங்களைக் கொடுத்து பயன்படுத்துவது தேவத்திட்டத்தின் வழியாகும்.

**தெரிவு செய்யப்பட்ட தெரிவுகள்**. யோபுவுடைய "ஞானம்" என்பது பற்றிய சொற்பொழிவு. அதி 28.

---

## சங்கீதம் - புத்தகம்.

150 ஆவிக்குரிய பாட்டுகளும், கவிதைகளும் எல்லாக் காலத்திலும் திருச்சபையால் ஆராதனைக்கும், தியான காரியங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டது. இது இரண்டாம் ஆலயத்தின் ஞானப்பாட்டு புத்தகமாக பயன்பட்டு வந்தது.

மிகவும் முக்கியமான பொருள் தலைப்புகள் ஜெபமும், துதியுமாகும். ஆனால் சங்கீதங்கள் மிகப்பெரிய பலவகையான மதசம்பந்தமான அனுபவங்களையே ஒருங்கிணைக்கிறது. அவைகள் புதிய ஏற்பாட்டில் மற்ற எந்தப் புத்தகங்களையும் விட இந்த சங்கீதப் புத்தகமே மேற்கோளாக அடிக்கடி கையாளப்படுகிறது. ஏசாயாவைத் தவிர.

இவைகள் தாவீதின் சங்கீதங்கள் என்று அடிக்கடி சொல்லப்படுகின்றன. ஏனென்றால் அவைகளில் அதிகமான எண்ணிக்கையை ஆக்கியோன் தாவீதுதான்.

**ஆக்கியோன்கள்** : இந்த சங்கீதங்களில் அநேகமானவற்றை எழுதியவர்களைப் பற்றி நிச்சயமில்லை. ஒருவேளை ஒவ்வொரு சங்கீதங்களில் பெயர் இணைக்கப்பட்டவை அதை சேகரித்துத் தொகுத்தவரை மட்டுமே குறிப்பதாக இருக்கும். ஆக்கியோனை குறிப்பிடாது.

பின்வருபவை வேதத்தின் பல பதிப்புகளில் இருந்தும் குறிப்பிடப்படும். ஆக்கியோன்களைப் பற்றிய அட்டவணையாகும்.

தாவீதின் பெயரில் சொல்லப்படும் சங்கீதங்கள் 73, கோரகின் புத்திரர் பெயரில் 11, ஆசாப்புக்கு 12, ஏமானுக்கு 1, ஏத்தானுக்கு 1, சாலொமோனுக்கு 2, மோசேக்கு 1, ஆகாய்க்கு 1, சகரியாவுக்கு 1, எசேக்கியாவுக்கு எண்ணிக்கை சந்தேகத்துக்குரியது, எஸ்றாவுக்கு 1 மற்றவை பெயர் தெரியாதவைகளாகும்.

### மேசியாவின் சங்கீதங்கள்

பின்வருபவை ஒன்று நேரடியான அல்லது சாயலானதாக கிறிஸ்துவைப் பற்றி கூறுகிறதாக கருதப்படும். ஒத்து வாக்கிய பகுதிகள் :

1. கிறிஸ்து இராஜாவாக 2; 45; 72; 110; 132:11.
2. பாடுகள் பற்றி 22; 41; 55:12-14; 69:20-21.
3. உயிர்த்தெழுதல் பற்றி 16.
4. பரமேறுதல் பற்றி 68:18.

## பொருள் தலைப்பு ஒழுங்கு முறை அமைப்பு

ஒவ்வொரு சங்கீதமும் அதில் பிரதானமாக விளங்கும் தலைப்புடன்

**மனிதன் :**

a. உயர்த்தி உயர்த்தி கீழ் தரப்படுகிறது. 8
b. பாவம் நிறைந்ததாக 10; 14; 36; 55; 59. இன்னும் பல.

**பிரபஞ்சமும், கேடுபாடுள்ள :**

a. தெய்வ பக்தியுடையவர்களுடன் வேறுபடுத்தி 1; 4; 5.
b. ஆக்கினை தாமதிப்பது 10.
c. ஐசுவரியம் 37; 73.
d. பிராப்தம் 9; 11.
e. ஐசுவரியத்தில் நம்பிக்கை 49.

**கிறிஸ்தவ அனுபவங்கள் :**

a. மனங்கசந்தல், 25; 38; 51; 130
b. மன்னிப்பு 32.
c. மனமாற்றம் 40
d. ஒப்படைப்பு 116.
e. நம்பிக்கை 3; 16; 20; 23; 27; 31; 34; 32; 62; 91; 121
f. கற்பிக்கக்கூடியது 25
g. மனதின் வாஞ்சை, 42; 63; 143
h. ஜெபம், 55; 70; 77; 85; 86; 142; 143.
i. துதி 96; 98; 100; 103; 107; 136; 145; 148; 149; 150
j. ஆராதனை 43; 84; 100; 122; 132
k. நெருக்கம் 6; 13; 22; 69; 88; 102.
l. முதிர்வயது 71
m. மாயையான ஜீவன் 39; 49; 90.
n. வீடு 127
o. வீட்டைப் பற்றிய துயரம் 137.

**திருச்சபை – சாயலாக**

a. பாதுகாப்பு பற்றி 39; 39; 90
b. மகிமைப்பற்றி 48; 87
c. அன்பு பற்றி 84; 122
d. ஒற்றுமை பற்றி 133.

தேவனுடைய வார்த்தை 19, 119
மிஷனரி 67; 72; 96; 98
ஆளுநர்களின் கடமை 82; 101.

**தெய்வீக பண்புகள் :**

a. ஞானம், கெம்பீரம், வல்லமை 18; 19; 29; 62; 66; 89; 93; 97; 99; 118; 147
b. இரக்கம் 32; 85; 136
c. அனந்த ஞானம் 139
d. படைப்பு வல்லமை 33; 89; 104

**இஸ்ரவேலரது அனுபவங்கள் :**

a. அவநம்பிக்கை 78
b. தனிமையும், துயரமும் 79; 80
c. பின்மாற்றம் 81
d. தெய்வீக செயல் 105; 106; 114

## நீதி மொழிகளின் புத்தகம்

**சன்மார்க்கமானதும், மார்க்க சம்பந்தமான கோட்பாடுகளின் தொகுப்பு** : சரியான (தவறில்லாத) ஜீவியம் சம்பந்தமான போதனைகள் அடங்கியது. மேலும், ஞானம் என்பது பற்றி சுருக்கமான பேச்சுகள், நியாயம், மதுவிலக்கு, சுறுசுறுப்பு, பரிசுத்தம் முதலியன. இந்த ஆற்றல் மிக்க சொற்கூற்றுகளில் ஞானத்துக்கும், மூடத்தன்மைக்கும் நீதிக்கும், பாவத்துக்கும் இடையில் கூர்மையான வேறுபாடு கோடிடப்படுகிறது.

**ஆக்கியோன்** : சாலொமோன் பொதுவாக நீதிமொழிகளில் பெரும்பாலனவற்றை எழுதியதாக மதிப்புக் கொடுக்கப்படுகிறது. அதுவும் அவனிடமிருந்து இவை எல்லாமே அசலாகமாட்டாது. அதி 30, 31. உ.ம் ஆகூர் லேமுவேலின் வார்த்தைகளாகும்.

**முக்கியமான நோக்கம்** : மக்களுக்கு விசேஷமாக இளைஞர்களுக்கு நல்லொழுக்க போதனைகள் கொடுப்பதாகும்.

**திறவுகோல் வசனம்** :1:4.

**திறவுகோல் யோசனை** : கர்த்தருக்குப் பயப்படும் பயம் என்று கொஞ்சம் 14 தடவை கூறப்படுகிறது.

### பாடசுருக்கம்

1. தகப்பனால் கூறப்படும் ஆலோசனைகளும், எச்சரிக்கைகளும் ஞானத்தை அடைக்ய கூடிய புத்திமதிகளும் அதி 1-7.
2. ஞானத்தின் அழைப்பு அதி 8,9.
3. சாலொமோனுடைய நீதிமொழிகள். நன்மைக்கும், தீமைக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள். ஞானத்துக்கும், மதியீனத்துக்கும் இடையே உள்ள வேறுபாடுகள். அதி 10-20.
4. நீதிமொழிகளான குறிக்கோள்களும், ஆலோசனைகளும் அதி 21-24.
5. எசேக்கியாவால் பார்த்து எடுத்து எழுதப்பட்ட சாலொமோனுடைய நீதிமொழிகள். அதி 25-29.
6. ஆகூரின் வார்த்ததைகள் அசரீரி அதி 30.
7. லேமுவேலுக்கடுத்த வார்த்தைகள் தாயின் புத்திமதி. 31:1-9.
8. ஒரு லட்சிய மனைவியை பற்றிய வருணனை. 31:10-31.

## தெரிவு செய்யப்பட்ட தெரிவுகள்

ஞானம் அழைப்பு 1:20-23; அதி 8. ஊற்று 2:6.
விலையேறப்பெற்றவை 3:13-26, முக்கியமான காரியம் 4:5-13.
ஐசுவரியமான பொக்கிஷம் 8:11-36. களிப்பான விருந்து 9:1-6.

### விசேஷமாக விவாதிக்கப்பட்ட தலைப்புகள்

- சினம் : 14:17,29; 15:18; 16:32; 19:11.
- உதாரத்துவம் 3:9-10; 11:24-26; 14:21; 19:17; 22:9.
- பிள்ளைகள் சீர்திருத்தம் : 13:24.
- சோதனைகாரர்கள் : 4:14; 9:13; 16:29
- தேவனுக்குப் பயப்படும் பயம் : 1:7; 3:7; 9:10; 10:27; 14:26-27; 15:16,33; 16:16; 19:23; 23:17; 24:21
- மதிகேடர்கள், புறங்கூறுகிறவர்கள் 10:18, மதியீனத்தால் மாளுகிறவர்கள் 10:21; தீவினை செய்யும் விளையாட்டு 10:21, செம்மையான வழி 12:15; கோபம் வெளிபடுதல் 12:16; பரியாசம் 14:9; புத்தியீனமான பேச்சு 15:2; முட்டாள்தனம் 17:10; அபாயமானது 17:12; தீர்க்தரிசனம் பெறுகிறவன் 17:24; வழக்கு செய்கிறவன் 20:32; அசட்டை பண்ணுதல் 23:9; மூடத்தனம் 27:22; ஞானவான் தன்னம்பிக்கை உள்ளவன் 14:16; 28:26.
- சிநேகிதம், 17:17; 18:24; 19:4; 27:10,17
- தெய்வீக ஞானம் 15:11; 21:2; 24:12.
- சோம்பல் 6:6-11; 10:4-5; 12:27; 13:4; 15-19; 18:9; 19:15,24; 20:4,13; 22:13; 24:30-34; 26:13-16.

- இடுக்கண், 14:31; 22:22; 28:16.
- பெருமை (அகந்தை), 6:17; 11:2; 13:10;15:25; 16:18-19; 18:12; 21:4; 24; 29:23; 30:13.
- விவேகம், 12:23; 13:16; 14:8,15,18; 15:5; 16:21; 18:15; 27:12.
- இகழ்வோர், 3:34; 9:7; 14:6; 19:25; 24:9.
- விரோதங்கள் :3:30; 10:12; 15:18; 16:28; 17:1,14,19; 18:6,19; 20:3; 22:10; 25:8; 30:33.
- தன்னடக்கம், 20:1; 21:17; 23:1-3,20; 23:29-35.
- நாவு, 4:24; 10:11-32; 12:6,18,22; 13:3; 14:3; 15:1-7,23; 16:13,23,27; 17:4; 18:7,21; 19:1; 20:19; 21:23; 26:28; 30:32.
- அநியாய லாபம், 10:2; 13:11; 21:6; 28:8.
- ஐசுவரியம், 10:2,15; 11:4,28; 13:7,11; 15:6; 16:8; 18:11; 19:4; 27:24; 28:6,22.
- ஸ்திரீகள் பொல்லாதவர்கள், 2:16-19; 5:3-14,20,23; 6:24-35; 7:5-27; 9:13-18.
- ஸ்திரீகள் நல்லவர்கள், 5:18-19; 31:10-31.

**ஆவிக்குரிய பாடம்**

சாலொமோன் ஓர் வழிகாட்டும் தூண். அவன் ஒரு உதாரணமல்ல. அவன் ஞானத்துக்கு போகும் வழியைச் சுட்டிக்காட்டினான். ஆனால் அவனுடைய ஜீவியத்தின் பின்பகுதியில் அவன் அந்த வழியில் நடக்கவில்லை. அவனுடைய குமாரன் ரெகோபெயாம் ஆலோசனையை விட அவனது உதாரணத்தைப் பின்பற்றினான். அதனால் விவேகமற்ற பொல்லாத அரசன் ஆனான்.

---

## பிரசங்கியின் புத்தகம்

**பெயர்:** செப்துவஜிண்டில் இருந்து கடனாக வாங்கப்பட்டது. எபிரெய வேதாகமத்தில் அது Koheleth எனப்படுகிறது. இதன் அர்த்தமாவது ஏதோ சர்ச்சைக்குள்ளாகிறது. ஆனால், அது ஆங்கிலத்தின் பதிப்புகளில் பிரசங்கி என்றும், ஒரு கூட்டமான சபையை பார்த்து சொற்பொழிவு செய்கிறவன் என்றும் அர்த்தப்படுத்தப்படுகிறது.

**எழுதினவர்** : பெயர் தெரியாது. ஆனால் பொதுவாக சாலொமோன் எழுதினான் என்று கருதப்படுகிறது. 1:1-2.
வேதாகமத்தில் கண்டுபிடிக்கப்படும் அவனது வாழ்க்கையின் புறவரிச் சுருக்கத்திலிருந்து, இங்கே குறிப்பிடப்படும் பல அனுபவங்கள் அவன் வாழ்க்கையில் அனுபவித்தவைகளுக்கு சரிசமமாக இருப்பவைகள் போல் தோன்றுகிறது.

**திறவுகோல் வசனம்** :12:13.
திறவுகோல் வார்த்தைகள் : மாயை, சூரியனுக்குக் கீழ் இந்த ஒவ்வொரு வார்த்தைகளும் 25 தடவைகளுக்கு மேலாக குறிப்பிடப்படுகின்றன.

**பொருளடக்கம்**

இந்தப் புத்தகத்தில் ஒரு தத்துவ ஞானியின் சிந்தனையானது, அவனுடைய வாழ்க்கை பிரச்சனைகளுக்கு எதிர்மாறாக அவன் கொண்டிருந்த நினைவு பிரதிபலிப்புகளையும், அனுபவங்களையும் பெற்று அடங்கியிருக்கிறது.

அவனுக்கு வந்த மாயையான போலி பிரதிபலிப்புகளைப் பற்றிக் கூறிவிட்டு, சிற்றின்பப்பிரிய சுகவாசியின் கருத்தோற்றங்களான உலக வாழ்க்கையின் சிற்றின்ப இச்சைகளை அனுபவித்து மகிழ்வதே அல்லாமல் சிறந்தது வேறொன்றுமில்லை என்பதை கூறுகிறான்.

இந்த கருத்தோட்டமானது, திரும்பத்திரும்ப இந்தப் புத்தகத்தில் தோன்றுவதால் அதை எழுதியவன் அதோடு போராடிக் கொண்டிருந்தும், அதே சமயத்தில் ஆழமான மெய்யுரைகளை தேவனுக்கு மனிதனுடைய கடமையையும் கடமை பொறுப்பு சம்பந்தமானவற்றைப் பற்றியும், அவன் அந்த மெய்யுரைகளைக் கூறிக் கொண்டிருந்தான் என்பது தெளிவான சான்றாகிறது. கடைசியாக அவனுடைய யூகங்களிலிருந்து, அவன் கிளைத்தெழும்பி ஒரு சந்தேகமான ஐயப்பாட்டுடன் 12:13ல் கூறப்படும் காரியத்தின் கடைத்தொகையான தேவனுக்குப் பயந்து அவர் கற்பனையைக் கைக்கொள். எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே என்ற முடிவுக்கு வருகிறான்.

## பாடச் சுருக்கம்

**அதி 1,2.**

1. முகவுரை ஜீவியத்தின் சலிப்புகளைப் பற்றிய பிரதிபலிப்புகள்.
2. இயற்கையான பண்பாட்டு மனிதன் மனதிருப்திக்காகவும், மகிழ்ச்சிக்காகவும் தேடிக் கொண்டிருக்கும் ஆய்வு.
   a. அது ஞானத்தை சம்பாதிப்பதால் கண்டுபிடிக்க முடியாது. 1:12-18.
   b. அதை உலகப் பிரகாரமான லௌகீக இன்பங்களில் காணமுடியாது. 2:1-3.
   c. அது கலையிலோ, விவசாயத்திலோ கண்டுபிடிக்க முடியாது. 2:4-6.
   d. அது அதிகமான பொருளுடைமைகளைச் சேர்ப்பதாலும் கண்டு பிடிக்கமுடியாது. 2:7-11.
3. முடிவுரைகள் :
   a. ஒரு ஞானவான் மதியீனனை விட உயர்ந்தவன் 2:12.
   b. சிற்றின்பப்பிரியனுக்கு புசித்துக் குடித்து தன் பிரயாசத்தின் பலனை அனுபவிப்பதே யாவற்றையும் விட சிறந்தது. 2:24-26.

**அதிகாரம் 3.**

இயற்கையான பண்பாட்டுடைய மனிதனுடைய சலிப்பான உலக வாழ்க்கையைப் பற்றியதோர் பார்வை :

a.ஒவ்வொன்றிற்கும் ஒரு காலமுண்டு வ.1-8.
b.சிற்றின்பபிரியனுக்கு முடிவுரை. வ.13-22.

**அதிகாரம் 4.**

விசுவாசத்திற்கு அப்பால் சமூகத்தீங்குகளைப் பற்றியதோர் படிப்பு. வச 1-15.
முடிவுரை : "எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது" வ.16.

**அதிகாரம் 5.**

ய. சமயக் கடமைகளுக்கான ஆலோசனை. வ.1-7.
b. செல்வத்தைப் பற்றிய மாயை வ.9-17.
c. புசிப்பதும், குடிப்பதும் பிரயாசத்தின் பலனை அனுபவிப்பதும் முடிவுரை. 18-20.

**அதிகாரம் 6.**

நீண்டகாலம் மனுஷன் ஜீவித்திருப்பதால் லாபம் என்ன?
எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமே. 3-12.

**அதிகாரம் 7.**

a. ஞானமுள்ள வார்த்தைகள் ஒரு அட்டவணை வ.1-24.
b. பொல்லாத ஸ்திரீகளைப் பற்றிய முடிவுரை. வச.25-28.

**அதிகாரம் 8.**

a.பிரஜா கடமைகள் வ. 1-5.
b.நிலையில்லாத ஜீவியம் வ.6-8.
c. தெய்வத்தீர்ப்பின் நிச்சயம். ஜிவியத்தின் அநீதிகள். வ.10-14.
d.சிற்றின்பப் பிரியனின் முடிவுரை. வ.15.
e.தேவனுடைய செயலும், மனிதனுடைய செய்கைகளும் வ.16-17.

**அதிகாரம் 9.**

a.நீதிமானுக்கும், துன்மார்க்கனுக்கும் ஒன்றுபோல் நேரிடுகிறது. மரணமே ஜீவியத்தின் இலக்கு மனிதன் தன்னுடைய சந்தர்ப்பங்களுக்கு ஜெந்துவானான். சிற்றின்ப பிரியனது போன்ற முடிவுரை "புசிப்போம், குடிப்போம், நாளைக்கு சாவோம்" வ.1-9.
b. ஞானமே உத்தமம். அது அசட்டைப்பண்ணப்பட்டாலும். வ.13-18.

**அதிகாரம் :10.**

பலதரப்பட்ட ஞானமுள்ள கூற்றுகள் ஞானத்துக்கும், மதியீனத்திற்கும் உள்ள வித்தியாசம்.

**அதிகாரம் 11.**

a. உதாரத்துவத்தைப் பற்றிய ஆலோசனைகள் வசனம் 1-6.

b. இளைஞர்களுக்கு புத்திமதி வ.9-10.

**அதிகாரம் 12.**

முதிர்வயது பற்றிய காவிய வடிவம். வசனம் 1-7. பிரசங்கியின் முடிவுரைகள். மனிதனுடைய உயர்ந்த கடமையைப் பற்றிய காரியத்தின் கடைத்தொகை வ.8-14.

---

## உன்னதப்பாட்டு

**எழுதியவர்** - பாரம்பரியத்தின்படி சாலொமோன் எழுதியதாகக் கருதப்படுகிறது.
இந்த புத்தகம் மிகவும் கடினமான அதனுடைய பாலியல் மொழிக்காக விமரிசனம் செய்யப்படுகிறது. அதனுடைய வேதாகமத்தில் சரியான இடத்தை பல காலங்களில் பல தேவ மனுஷர்கள் அதன் சார்பாக பாதுகாப்புச் செய்திருக்கிறார்கள். அநேகர் அதை ஆவிக்குரிய உருவகமாகக் கருதியிருக்கிறார்கள். அது பரிசுத்தமான பாசங்கள் தேவனுக்கும், அவருடைய தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களுக்கும் இடையே உள்ளதாக அதாவது கிறிஸ்துவுக்கும், அவரது திருச்சபைக்கும் இடையே பாசத்தின் பிரதிநிதியாக இருப்பதாகக் கருதுகிறார்கள்.

**இது ஒரு கிழக்கத்திய காவியம்**. உத்வேகமானதோர் வெளிப்பாடாக ஒரு முதிர்ச்சி பெற்ற ஆவிக்குரிய சிந்தனையால் மட்டுமே வியாக்கியானம் சரியாகச் செய்யமுடியும்.

**சுருக்கம்** (மணவாளனாக இயேசுவையும், மணமகளாக திருச்சபையையும் குறிப்பதாகும்.)

a. ஆவிக்குரிய ஐக்கியமான உறவு மனையாட்டிக்கும், பரமமணவாளனுக்கும் இடையே உள்ளது. 1:1-2-7.

b. மணவாட்டி தனது தோழனைக் காணாமல் தேடுகிறாள். 2:8 – 3:5.

c. மணவாட்டிக்கும், மணவாளனுக்கும் அவர்களது ஒருவருக்கொருவர் பரஸ்பரமான நேசத்தையும் ஒருவருக்கொருவருக்குள்ள கிருபைகளைப் பற்றிய ஆர்வமான சொற்பொழிவுகளும். 3:6 – 8:14.

**திறவுகோல் எண்ணம் :**
என்நேசர், விசுவாசியால் கிறிஸ்துவுக்கு கொடுக்கப்படும் திருநாமம் 2:16.

**தோழனது வசனப்பகுதி** : 45ம் சங்கீதம்.

### பக்கத்து வெளிச்சங்கள்

**I. பரம மணாளன் :**

1. அவருடைய நேசம் மணவாட்டியின் குறைபாடுகளனைத்தையும் மறைக்கிறது. உன் 4:7.
2. அவளுக்காக அவர் மகிழ்ச்சியடைகிறார். ஏசாயா 62:5.
3. அவளுக்காக தன் ஜீவனை கொடுக்கிறார். எபே 5:25.
4. அவளைத் தனக்குச் சொந்தமாக ஏற்றுக் கொள்ள வருவார். மத் 25:6.

**II. மணவாட்டி :**

1. மணமகளை நேசிக்கிறார். உன் 2:16.
2. தனது தகுதியின்மையை உணருகிறார். உன் 1:5.
3. பரிசுத்தமாக்கப்பட்டு கறைதிரையற்ற ஆடைகளால் அணிவிக்கப்படுகிறார். வெளி 19:8.
4. ஆபரணங்களால் தெய்வீக கிருபையினால் ஆனவைகளால் பூட்டப்படுகிறார். ஏசாயா 61:10.
5. கலியாண விருந்துக்கு அழைப்பு கொடுக்கிறார். வெளி 2:17.

**கலியாண விருந்து :**

1. பிதாவினால் குமாரனுக்காக ஆயத்தம் செய்யப்படுகிறது. மத் 22:2.
2. விலையுயர்ந்த ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. மத் 22:4.
3. மகத்தான கனத்துக்குரிய அழைப்புகள் வெளி 19:9.

4. அழைப்பு அநேகரால் அவமதிக்கப்படுகிறது. மத் 22:5.
5. சகல விதமான மனிதர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படுகிறது. மத் 22:10.
6. கலியாண வஸ்திரம் அணியாமை விருந்துக்கு அனுமதியில்லை. மத் 22:11-13.

---

## ஏசாயாவின் புத்தகம்

**தீர்க்கதரிசி** : ஆமோசின் குமாரன், உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா, இராஜாக்கள் காலத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தான். 1:1.
**அவனுடைய அழைப்பும் அபிஷேகமும்** 6:1-8.
**அவனது குடும்பம்** 7:3; 8:3-4.

**பொதுவாக, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளில் மகா பெயர் பெற்ற தீர்க்கதரிசியாகக்** கருதப்படுகிறான்.

1. ஏனென்றால், பிறரையும் விஞ்சுகிற மீட்பின் தீர்க்கதரிசி.
2. அவனுடைய புத்தகத்தில் உள்ள பல பகுதிகள் இலக்கியப் புகழ் பெற்றவை ஆகும். தற்காலத்து அறிஞர்கள் இந்த காவிய தீர்க்கத்தரிசனங்களை தாவர விஞ்ஞானி ஒரு பூவைப் பற்றிப் படிப்பது போல அதை அக்கு அக்காகப் பிரித்து பகுத்து ஆய்வு செய்துவது போல படிக்கின்றனர். இந்த படிப்பு முறையைப் பயன்படுத்துவதால், இந்த புத்தகத்தின் அழகும், ஒருமைப்பாடும் ஒரு ரோஜா மலரைப் போல அதன் ஆய்வுக்காக அதன் பலபாகங்கள் துண்டுதுண்டாக பிரிக்கப்படுவது போல ஏறக்குறைய மறக்கப்பட்டும் போகிறது.

### சுருக்கம்

**பிரிவு I.**

அதி 1-39. சிறைபட்டு போகும் வரைக்கும் உள்ள சம்பவங்களை முக்கியமாகக் குறிக்கிறது.

a. தெய்வீக நியாயத்தீர்ப்பையும், எச்சரிக்கையையும் குறித்த உபதேசங்களோடு நல்ல காலங்களைப் பற்றியும் மேசியாவைப் பற்றியதான தீர்க்கதரிசனங்களும் கலந்து முன்னுரைக்கப்பட்டவை அதி 1-2.
b. சுற்றியிருக்கும் தேசங்களைக் குறித்தான தீர்க்கதரிசனங்கள் அசீரியா, பாபிலோனியா, மோவாப், எகிப்து, பெலிஸ்தியா, சீரியா, ஏதோம், தீரு முதலியவை அதி 13-23.
c. மக்களுடைய பாவத்தையும் துயரத்தையும் குறித்த எழுத்துக் குறிப்புகள், இரட்சிப்பை பற்றியதோர் வாக்குத்தத்தம், தேவனுக்குள் விசுவாசத்தைக் குறித்தானதோர் பாட்டு, தனது திராட்சத் தோட்டத்துக்காக அவரது கவனமான பாதுகாப்பு. அதி 24-27.
d. எப்ராயீம் மேலும் எருசலேமின் மேலும் பாரங்குறித்து ஐயோ.. அதாவது அந்நிய நாட்டு உடன்படிக்கைகள் பேரில் நம்பிக்கை வைத்ததால், அதி 28-31.
e. நீதியான இராஜா, ஆவி ஊற்றப்படுதல், நீதிமான்கள் உயர்த்தி மேன்மைபடுதல், வனாந்தரம் கர்த்தருடைய தோட்டம் போல மாறுதல் அடையும் வாக்குத்தத்தங்கள் அதி 32-35.
j. எசேக்கியா அசீரியரிடமிருந்து விடுவிக்கப்படுதலும், அவனுக்கு ஆயுசு நாட்கள் நீடிக்கப்படுதல் 36-39.

**பிரிவு II.**

இந்தப் புத்தகத்தின் இரண்டாவது, பகுதிகளில் முன்னுரைத்தல் எச்சரிக்கை வாக்குறுதிகள், ஆகியவை சிறையிருப்புக்கு அப்பாற்பட்ட சம்பவங்களையும், கிறிஸ்தவ மகா அமைப்பின் திட்டத்திற்கும் பல நூற்றாண்டுகளுக்கு அப்பாலும் நேரிடுபவைகளைக் குறித்துப் பேசுவதாகும். இந்த பகுதி தீர்க்கதரிசனங்களின் மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனங்கள். குறிப்பாக நிரம்பப் பெறப்பட்டுள்ளன.

**திறவுகோல் வார்த்தை** : இரட்சிப்பு : ஏசாயா என்ற பெயருக்கு “யேகோவாவின் இரட்சிப்பு” என்ற அர்த்தமாகும்.

**இரட்சிப்பு**

| | |
|---|---|
| a. இரட்சிப்பின் ஊற்றுகள் | 12:3. |
| b. மகிழ்ச்சியான இரட்சிப்பு | 25:9. |
| c. மதிலாகிய இரட்சிப்பு | 26:1 |
| d. இரட்சண்ய நாள் | 49:8 |
| e. இரட்சிப்பின் அனுக்கிரகநாள் | 49:8 |
| f. இரட்சிப்பை பிரசித்தம் பண்ணுகிற கால்கள் | 52:7 |
| g. தேவனுடைய இரட்சிப்பு | 52:10 |
| h. புயமே இரட்சிப்பு | 59:16 |
| i. தலைச் சீராவாகிய இரட்சிப்பு | 59:17 |
| j. வஸ்திரங்கள் இரட்சிப்பின் | 61:10 |
| k. எரிகிற தீவட்டியான இரட்சிப்பு | 62:1 |

### நித்தியமான ஏழு காரியங்கள்

| | |
|---|---|
| 1. பராக்கிரமம் | 33:13 |
| 2. நியாயத்தீர்ப்பு | 33:14 |
| 3. ஆனந்த களிப்பு | 35:10 |
| 4. நித்திய இரட்சிப்பு | 45:17 |
| 5. நித்திய கிருபை | 54:8 |
| 6. நித்திய உடன்படிக்கை | 55:3 |
| 7. நித்திய வெளிச்சம் | 60:19 |

---

## ஏரேமியாவின புத்தகம்

அழுகையின் தீர்க்கதரிசியின் வாழ்க்கை வரலாறும், செய்தியும் இதில் காணக்கிடக்கின்றன.

**காலம்:** யூதா இராஜ்ஜியத்தின் இருண்ட காலம், கடைசி நல்ல ராஜாவாகிய யோசியா ராஜாவின் 13ம் வருடம் முதல் சிறையிருப்புக்கு அப்பாலும் பல ஆண்டுகள் வரை.

**முக்கிய கருத்துகள்:** பின்வாங்கிப்போகுதல், அடிமைத்தனம், யூதர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பி வருதல்.

### ஏரேமியாவின் வாழ்க்கை

- குடும்பம் 1:1
- ஜனனமும் தீர்க்கதரிசியாக தெய்வீகத் தெரிந்து கொள்ளுதலும் 1:5
- இளைஞனாக அழைப்பு. யோசியா இராஜா காலத்தில் 1:2-6
- தெய்வீக அதிகாரம் பெறுதல் 1:9
- தெய்வீகத் திட்டம் 1:10
- தெய்வீக பிரசன்னத்து வாக்குறுதி 1:19
- கடமையின் பாரம் 20:9
- தேவனுடைய வார்த்தையால் பலப்படுத்தப்பட்டு 15:6
- துன்புறுத்தல் - முன்னுரைத்தபடி 1:19
- காவலறையில் வைக்கப்படுதல் 20:2
- ஆழமான சகதி நிறைந்த துரவில் 38:6
- எகிப்துக்கு கொண்டு போகப்படுதல் 43:5-7.

### பாடச் சுருக்கம்

1. தீர்க்கதரிசியாக அழைப்பு அதி.1
2. கண்டனம், எச்சரிக்கை, யூதர்களுக்கான வாக்குத்தத்தம் அதி.2-20.

3. இராஜாக்கள், கள்ள மேய்ப்பர்கள், தீர்க்கதரிசிகள் மேல் கண்டனம் செய்தல் அதி.21-23.
4. தெய்வீகத் தீர்ப்புகள், எருசலேம் முறியடிக்கப் படுதல், 70 வருட சிறையிருப்பு - முன்னுரைக்கப்படுதல் அதி. 25-29.
5. யூதர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்புதல், வாக்குறுதி அதி.30-33.
6. யோயாக்கீம், சிதெக்கியா என்பவர்களால் உண்டான தீர்க்கதரிசனம் அதி.34-39.
7. சிறையிருப்புக்குப் போகாமல் யூதாவில் மீந்திருந்தவர்களின் நிர்பந்தமான நிலைமையும், அவர்களுக்கு உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களும் அதி.40-44.
8. பாரூக்குவுக்கு ஆறுதல் அதி.45.
9. விரோதியான தேசங்களுக்கு எதிரான தீர்க்கதரிசனங்கள் அதி.46-51.

## செய்தி

**1. சில முக்கிய கருத்துகள்**

a. நீரூற்றும், துறவும் 2:13
b. தீர்க்கப்பட முடியாத பாவம் 2:22
c. ஒரு மனிதனை தேடி 5:1
d. பழைய வழிகளே சிறந்தவை 6:16
e. இழக்கப்பட சந்தர்ப்பம் 8:20
f. மனந்திருப்புதலுக்காகக் கண்ணீருடன் அழைப்பு 9:1
g. மனித இருதயத்தின் திருக்கும் கேடும் 17:9
h. களிமண்ணும், குயவனும் 18
i. பொய்யான மேய்ப்பர்கள் 23
j. தேவனை கண்டுபிடிப்பது 29:13
k. புதிய உடன்படிக்கை 31:31-34
l. கர்த்தருடைய வார்த்தையை கத்தியால் அறுத்தல் 36:21-24.

**2. ஒதுக்கி வைக்கப்படுதல் :**

a. அவனுடைய அயலகத்தாரால் 1:19-21
b. அவனுடைய சொந்த குடும்பத்தால் 12:6
c. ஆசரியர்களாலும், தீர்க்கதரிசிகளாலும் 20:1-2
d. அவனுடைய சிநேகிதர்களால் 20:10
e. சகல ஜனங்களாலும் 26:8
f. இராஜாவினால் (அவனுடைய) 36:23

---

# புலம்பலின் புத்தகம்

எரேமியாவின் புத்தகத்து பின் தொடர்ச்சி.

**பொருள் தலைப்பு :** ஒரு செய்யுள் வடிவ புதிர் போட்டியாக வடிவமைப்பான ஒரு வரிசை புலம்பல்கள். ஒரு தேசத்தின் சவ அடக்கத்துக்கான புலம்பலாக எருசலேம் பிடிப்பட்டு அழிக்கப்பட்டதை படம் பிடித்துக் காட்டுவதாகும்.

செப்துவஜின்டில் பின்வரும் வார்த்தைகள் காணப்படுகின்றன. "நேரிட்ட படியே இஸ்ரவேலர் சிறைபிடித்துக் கொண்டு போகப்பட்ட பொழுது, எரேமியா உட்கார்ந்து அழுது புலம்பிக் கொண்டு, இந்த புலம்பல்களை எருசலேமுக்காக புலம்பினான்".

எபிரெய வேத பகுதிகளில் அதிகாரங்கள் 1,2,4 &5ம் ஆகியவைகளில் எபிரெய எழுத்துக்களில் 22 எழுத்துக்கள் வரிசையாக அமைந்திருக்கின்றன.

அதிகாரம் 3ல் முதல் மூன்று வசனங்கள் ''aleph'' என்ற எழுத்தோடு தொடங்குகின்றன. பின்வரும் இரண்டாவதான மூன்று எழுத்துக்களும் ''Beth'' என்ற எழுத்தோடு முழுவதிலும் அதே மாதிரி தொடர்ந்து வருகின்றன.

5வது அதிகாரத்தில் 22வசனங்கள் உள்ளன. ஆனால் எழுத்துப் புதிர் இல்லை.

**சுருக்கம்**

1. எருசலேம் இடிக்கப்பட்டு போனதும், பாவத்தின் காரணமாக சிறையிருப்பு சென்ற மக்களின் துயரமும் அதி 1.
2. கர்த்தர் அவர்களுடைய பூர்விக பாதுகாப்பாளர் அவர்களுடைய பயங்கரமான பிராப்த்ததிற்காக அவரால் கைவிடப்பட்டுப் போனார்கள். அதி.2
3. தன்னுடைய ஜனங்கள் அடையும் நெருக்கங்கள் குறித்து எரேமியா துக்கம் அடைவதும் தேவனிடத்தல் அவனுடைய நம்பிக்கையும், அவன் படும் சொந்த பாடுபடுதலும். அதி3.
4. இரக்கத்திற்கானதோர் மன்றாட்டு. அதி 5.

---

## எசேக்கியாவின் புத்தகம்

**பெயர் :** தேவன் பராக்கிரமம் தருகிறார் என்று அர்த்தமாகும்.

**இந்த புத்தகம்** தானியேலின் புத்தகம் வெளிப்படுத்தின விசேஷம் - போன்ற புத்தகங்களோடு மர்மம் நிறைந்த புத்தகம் என்று சொல்லலாம். அதில் பற்பல கற்பனை காட்சிகள் அடங்கியுள்ளன. அவைகளை சொல் பொருள் விளக்கம் காணுதல் அரிதாகும். என்ன வென்றாலும், போதனைகளில் பெரும்பாலனவை தெளிவானதாகவும், மதிப்பில் உயர்ந்ததாகவும் இருக்கின்றது.

**சுருக்கம்**

**பகுதி I** : தீர்க்கதரிசியின் அழைப்பும், ஆயத்தமும் அதி 1-3.

a. ஆசாரியனுடைய குமாரன் 1:3
b. பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டுபோகப்பட்டவன். 1:1,11, இராஜா 24:11-16
c. தேவனைப் பற்றிய அவனுடைய தரிசனம் அதி 1.
d. அவனுடைய அழைப்புகள் 1:3.
e. அவனது மகாத்திட்டமும், அதிகாரம் பெறுதலும். அதி 2-3.
f. ஆவிக்குரிய போஜனம் 3:1-3, வெளி 10:10ஐ பார்க்கவும்.
g. அவனுடைய கடமை. ஆவிக்குரிய காவல் மனிதனாக இருக்க. 3:4-11; 17-21.
h. எசேக்கியேல் மிக உயர்ந்த அளவான தூண்டி எழுப்பும் வார்த்தைகளுக்கு உரிமை கொண்டாடுகிறான். “கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி” என்ற வார்த்தைகள் புத்தகம் முழுவதிலும் திரும்பத் திரும்பவும் சொல்லப்படுகிறது.

**திறவுகோல் எண்ணம்** : “நான் சர்வவல்லமையுள்ள கர்த்தர்”

**பகுதி II** : சிறைபட்டு போகுதலுக்கு முன்னால் யூதா தேவனை கைவிட்டு விலகி இருந்த நிலைமையைப் படம் பிடிக்கிறது.

a. பெரிதாகத் தரிசனங்கள், எச்சரிக்கைகள், மக்களின் பாவகுற்றங்களைக் குறித்தும் எருசலேமில் வரும் அழிவைப்பற்றிய முன்னுரை வசனங்கள். அதி 4-24.
b. சுற்றியிருக்கும் ஏழு தேசங்களைக் குறித்தத் தெய்வீக நியாயத்தீர்ப்பு அதி 25-32.

**பகுதி III** : முக்கியமான தீர்க்கதரிசனங்களும், வாக்குத்தத்தங்களும் தேசத்தின் பழைய மகிமையானது திரும்பக் கொண்டு வரப்படும் என்பதைக் குறித்தானவைகள். அதி 33:48.

a. ஆவிக்குரிய காவல்காரர்களுடைய எச்சரிப்புக்குச் செவிக்கொடுத்தும் பாவங்களைக் குறித்து மனந்திரும்புல். அதி 33.
b. பொய்யான மேய்ப்பர்களை அவர்களுடைய ஸ்தானத்தில் இருந்து அகற்றிவிட்டு நல்ல மேய்ப்பர் வருகையினால் அவரால் அவருடைய மந்தை போஷிக்கப்படும். அதி 34.
c. தேசத்தில் உண்டாகும் எழுப்புதலினாலும் உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கில் உண்டாகும் ஒரு உயிர்தெழுதலினாலும் அதி 36-37.
d. தேசத்தின் சத்துருக்கள் முறியடிக்கப்படுவதாலும். அதி 38-39.
e. புதிய ஆலயம் கட்டி எழுப்பப்படுவதாலும். அதி 40-42.
f. கர்த்தருடைய மகிமை திரும்ப வருவதாலும். அதி 43:4-5; 44:4.

g. விசுவாசமுள்ள ஆசாரியன் ஊழியம் செய்வதாலும். 44:9-31.
h. ஆலயத்திலிருந்து புரண்டோடும் ஜீவ தண்ணீர்களால். அதி 47. மேலும், வெளி 22:1-2 பார்க்க.

### முக்கியமான சம்பவங்கள்

1. கர்த்தருடைய மகிமை ஆலயத்தை விட்டு நீங்கியது. 10:16-18; 11:23.
2. எருசலேமின் வீழ்ச்சி. 33:21.
3. ஷெக்கினா மகிமை திரும்பி வருவதான தீர்க்கதரிசனம்.

**தெரிந்தெடுத்த பகுதிகள் :**

1. புதிய இருதயம் 11:19; 36:25-28.
2. தனிப்பட்ட பொறுப்பு 18:20-32.
3. சாரமில்லாத சாந்து 13:10-15.
4. உத்தமமான ஒரு மனுஷனைத் தேடினேன். 22:30.
5. உணர்ச்சி வசப்பட்டு செவிகொடுக்கிறவர்களை 33:30-32.
6. ஊழியர்களுக்காக அதிகாரங்கள். 13,33-34.
7. மறுமலர்ச்சி அதி.37.

---

## தானியேலின் புத்தகம்

வெளிப்படுத்தின விசேஷத்திற்கு துணைப்புத்தகம்.

**எழுதியவர்** : தானியேல் எசேக்கியேலைப் போலவே பாபிலோனில் சிறையாகக் கொண்டுபோகப்பட்டவர். நேபுகாத்நேச்சாருக்கு முன்பாகக் கொண்டு வரப்பட்டு பாபிலோனிய பாஷையிலும் விஞ்ஞானத்திலும் பயிற்றுவிக்கப்பட்டவர். 1:17-18.

**வாழ்க்கை** : தேசத்திலே மிகவும் உயர்ந்த உத்தியோக ஸ்தானத்துக்கு உயர்த்தப்பட்ட யோசேப்புடைய வாழ்க்கையைப் போல ஒத்திருந்தது. (2:48) அவன் தன் ஆவிக்குரிய வாழ்க்கையை அஞ்ஞானிகளின் பிரகாரங்களின் மத்தியில் நிலை நாட்டினான். 6:10.

**முக்கியமான பொருள் தலைப்பு** : எல்லாக் காலங்களிலும் மனிதர்களுடைய காரியங்களின் மேல் சர்வல்லமையுள்ள தேவனுடைய வல்லமை. அந்த புறமதஸ்தனான அரசனுடைய இந்தக் காரியத்தைக் குறித்தான பாவ அறிக்கையே இந்த புத்தகத்தின் திறவு கோல் வசனங்களாக அமைகிறது. 2:47; 4:37; 6:26.

**பிரிவு 1** : பெரிதான சுயசரிதையைக் கூறும் வரலாறு. ஸ்தல சரித்திரமும் கலந்தது ஆகும். அந்த சரித்திரம் சிலிர்க்கும் சம்பவங்கள் ஆன அறிக்கைகளையும், தெய்வீகமான குறுக்கீடுகள் பழைய ஏற்பாட்டிலே எதையும் விஞ்சியதானவைகளை உள்ளடக்கமாகக் கொண்டதாகும். இது தானியேலும் அவனது சக நண்பர்களும் சந்தித்தது பங்கெடுத்த ஆறு நல்லொழுக்கமான போராட்டங்களானவைகளைப் பற்றி குறித்துச் சொல்லுகிறது.

# முதல் போராட்டம் : புறமதஸ்தர்களுடைய சுய விருப்பமான ஈடுபாடுகளுக்கும் அவனது மனச்சாட்சிக்கும் புறம்பாக மாம்ச உணவுகளைத் தவிர்த்தும் இவற்றிற்கிடையே தன் ஆரோக்கியத்தை வளர்த்துக்கொண்டான். உணவு தவிர்த்தல், இறுதியில் வெற்றி பெற்றது. 1:8-15.

# இரண்டாவது போராட்டம் : புறமதஸ்தரின் மாந்திரீகத்திற்கும், தெய்வீக ஞானத்துக்கும் இடையே சொப்பன வியாக்கியானத்திற்காக ஏற்பட்ட போராட்டம். தெய்வீக ஞானம் ஜெயித்தது. 2:1-47.

# மூன்றாவது போராட்டம் : புறமதத்து விக்கிரகாராதனை தேவனுக்கு பயபக்தியாய் இருப்பதற்கு எதிரணியாய் நிற்பது, தேவனுக்கு பயப்படும் பக்தி ஜெயிக்கிறது. 3:1-30.

# நான்காவது போராட்டம் : புறமதத்து இராஜாவின் பெருமை தெய்வீக சர்வவல்லமைக்கு எதிரணியில் நிற்பது. தேவன் ஜெயிக்கிறார். இராஜாவானவன் புல்லை மேயும்படியாக துரத்திவிடப்படுகிறான். 4:4-37.

# ஐந்தாவது போராட்டம் : பரிசுத்தமான காரியங்களுக்கு விரோதமாக பரிசுத்த குலைச்சல் செய்து காட்டப்படுகிறது. பயபக்கதியானது, சுவரின் மேல் எழுதிய கையெழுத்தை ஜெயிக்கிறது. பெல்ஷாத்சார் சிம்மாசனத்திலிருந்து இறக்கிவிடப்பட்டான். 5:1-30.

# ஆறாவது போராட்டம் : கபடமான சதியாலோசனைகளும், பரிசுத்தவர்களுக்கு தெய்வச் செயலும். தெய்வச்செயல் ஜெயிக்கிறது. சிங்கத்தின் வாய் கட்டப்பட்டு அடைக்கப்படுகிறது. 6:1-28.

**பிரிவு II** : தரிசனங்களும், தீர்க்கதரிசனங்களும் தேவனுடைய கட்டுப்பாட்டுக்குள் வைக்கும் அடக்கும் கரமானது சரித்திரத்தின் புறக்காட்சிகளில் இயங்கி வருவதைக் குறித்தானதாகும் அதி 7-12.

**சொல்பொருள் விளக்கம்** : தானியேலின் புத்தகம் வெளிப்டுத்தின விசேஷத்திற்கு துணைப்புத்தகமாகும். இவைகள் இரண்டும் மனதில் காட்சி உருவங்களைத் தோற்றுவிக்கும் அமானுஷ்யமானதோர் மாயத்தை கொண்டிருக்கின்றன.

தானியேலின் புத்தகம் வெளிப்படுத்தின விசேஷம் ஆகிய இரண்டிலும் உள்ள விஷயங்களையும், சம்பவங்களையும் பொருத்திகாட்ட எடுக்கும் முயற்சியானது முடிவற்ற முரண்பாடுள்ள அபிப்பிராயங்களை உண்டாக்கி இருக்கின்றது.

ஆனால் தரிசனங்களைப் பற்றிய உண்மையான வியாக்கியானங்கள் எப்பொழுதுமே தெளிவாக இருக்கவில்லை.

அநேகமான அறிஞர்களால் இரண்டு விஷயங்கள் மாத்திரம் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

1. இந்த தீர்க்கதரிசனங்கள் புனிதமான சரித்திரத்திலும், சமயசார்பற்றதுமான வருங்கால சம்பவங்களை ஒரு பகுதியான திரைமறை வெளிப்பாடாகவும், அதன் பிரதி சின்னமாகவும் விளங்குகிறது.
2. இந்த தரிசனங்கள் சகலவிதமான சாத்தானியமும், இந்த பிரபஞ்சத்தினதுமான வல்லமைகளுக்கு மேல் தேவனுடைய இராஜ்ஜியம் பெறும் ஜெயத்தையே குறிப்பிட்டுக் காட்டுகின்றன.

   7ம் அதிகாரத்தில் பல உரை ஆசிரியர்களும் அந்த நாலுமிருகங்கள் நான்கு சாம்ராஜ்ஜியங்களான பாபிலோன் மேதிய-பெர்சிய, கிரேக்க, உரோம (வ.1-7) பிரதிச் சின்னங்களாகவும் மேசியாவின் வருகை பற்றிய தரிசனம் தொடர்ந்து வருவதாகவும் காண்கின்றார்கள்.

   அதிகாரம் 8ல் மற்றொரு மேதிய-பெர்சிய, கிரேக்க சரித்திரத்தின் காலப்பகுதியும், மிருகத்தின் உருவத்தில் வருகிறது.

   அதிகாரம் 9ல் தானியேலுடைய மன்றாட்டும், மேசியாவின் வருகை பற்றிய திரைமறை தீர்க்கதரிசனமும் அடங்கப் பெற்றிருக்கின்றன.

   அதிகாரங்கள் 10 முதல் 12 வரை நீண்டகால நிறைவேறும் தீர்க்க தரிசனங்களும், வெளிப்பாடுகளும் மேலும் கூடுதலாகப் பெற்றிருக்கின்றன.

   இந்த மூன்று அதிகாரங்களும் கோட்பாடு சார்ந்த சர்ச்சைகளுக்கு அத்துடன் அவற்றின் பல வேறுபட்ட வியாக்கியானங்களுக்கும் போர்க்களமாக இருக்கின்றது.

## தெரிவு செய்யப்பட்டவை

1. தானியேலுடைய நோக்கம் 1:8
2. பெயர்க்கப்படாத கல் 2:44-45.
3. மூன்று எபிரெய சிறை அடிமைகளின் பதில் 3:16-18.
4. பெல்ஷாத்சார் அளித்த விருந்து அதி 5.
5. சிங்கத்துகெபியில் தானியேல் அதி 6:1-24.
6. நியாயத்தீர்ப்பின் தரிசனம் 7:9-14.
7. ஆத்ம ஆதாயம் செய்பவர் வாக்குறுதி. 12:3.

## ஓசியாவின புத்தகம்

**எழுதியவர்** - ஓசியா பெயேரியின் குமாரன். 1:1. ஏசாயா மீகா ஆகியவர்களுடன் ஏக காலத்தினன். அவனுடைய செய்தியானது, வடக்கு இராஜ்ஜியத்திற்காகக் கொடுக்கப்பட்டது.

### இந்த பணிக்கான விசேஷித்த தகுதி

1. அவன் வடக்கு நாட்டைச் சேர்ந்தவனாக எண்ணப்பட்டான். இஸ்ரவேலில் நிலவிய பொல்லாத நிலைமைகளை நன்கு அறிந்தவன். இந்த தகுதி அவனுக்கும், அவனுடைய செய்திக்கும் விசேஷமான பாரத்தைக் கொடுக்கிறது.
2. தெரிந்த பிரகாரம் அவன் ஒரு ஸ்திரீயை மணந்தான். அவள் அவனுக்கு விசுவாச பக்தி அற்றவள் ஆனாள். இது பற்றி சில அறிஞர்களால் ஐயம் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், அது உண்மையாக இருக்குமானால், அது இஸ்ரவேலுக்காக தேவனுடைய மனப்பான்மையைத் தெள்ள தெளிவாக படம் பிடித்துக் காட்டுவதாகும். அவனுடைய சோரம் போன மனைவியைப் பற்றி 1:2-3; 2:1-5. ஆனால் இந்தப் புத்தகம் பேசும் பாணியானது, மிகவும் உயர்ந்த உருவகமாகும். சோரம்போன அவனுடைய மனைவியுடன் அவனுடைய அனுபவமானது, உருவக அணியாக ஆனதாகும்.

**ஆவிக்குரிய செய்தி** : தேவனை விட்டு விலகுதல் ஆவிக்குரிய விபசாரம்.

a. தேவன், ஒரு நல்ல புருஷன், 2:20, ஏசாயா 54:5

b. இஸ்ரவேல் கற்பிழந்த மனைவி 2:2.

### பாடச்சுருக்கம்

**பிரிவு I** : இஸ்ரவேல் தேவனை விட்டு விலகிப்போனது தீர்க்கதரிசியினுடைய திருமண அனுபவத்தால் அடையாளமாக்கப்படுகிறது. அதி 1-3.

பிரிவு II : தீர்க்கதரிசன சொற்பொழிவுகள். முக்கியமாக ஜனங்களுடைய பின்வாங்கிப் போகுதலையும், விக்கிரக ஆராதனை பற்றி மிரட்டுதல்களுடனும் உபதேசத்துடனும் கலந்து கொண்டு கூறும் வருணனைகள். அதி 4-13.
மனந்திரும்புதலுக்கும் வருங்கால ஆசீர்வாதங்களுக்கான வாக்குத்தத்தங்களைக் குறித்த ஒழுங்குமுறை சார்ந்த அழைப்பு அதி 14.

**மிகவும் உயர்ந்த உருவகமான மொழியில் அமைந்த எடுத்துக்காட்டுகள்** : இஸ்ரவேலில் இருந்த பொல்லாத நிலைமைகளை எடுத்துக்காட்டுகின்றன

1. ஆகோர் பள்ளத்தாக்கு ஒரு நம்பிக்கையின் வாசல் 2:15, யோசுவா 7:24-26ஐ பார்க்கவும்.
2. விக்கிரகங்களோடு இணைந்து 4:17.
3. அந்நிய ஜனங்களோடு கலந்திருத்தல். (இனி ஒரு காலமும் பிரித்தெடுக்க பரிசுத்த ஜாதியாக இராதபடிக்கு) 7:8.
4. திருப்பிப்போடாத அப்பம் - ஒரு பக்கத்து மாவு என்பது அறைகுறையான மனதை வெளிப்படுத்துகிறது. (7:8).
5. அந்நியர் அவன் பலத்தைத் தின்கிறார்கள். துஷ்ட சிநேகிதத்தால் பலவீனப்படுதல். 17:9.
6. நரைமயிரும் தெரிந்திருக்கிறது. (வயதுக்கு முன் முதிர்வயது, ஒரு மனதுக்கு அறியாத சீர்கேடு அடைதல்) 7:9.
7. இஸ்ரவேலர் விழுங்கப்படுகிறார்கள். (தேவஜனம் என்ற அடையாள இழப்பு) 8:8.
8. விரும்பப்படாத பாத்திரம். (கர்த்தருக்காக அல்லாமல் ஒருமாசுபட்ட பயனில்லாத பாத்திரமாக) 8:8.
9. அநியாயஞ் செய்ய விரும்புதல். (வாணிபத்தில் நேர்மை இன்மை) 12:7.

### தெரிவு செய்யப்பட்டது

பொறுமையும் அதனால் வரும் ஆசீர்வாதங்களும். அதி 14.

---

## யோவேலின் புத்தகம்

**எழுதியவர்** : யோவேல். யூதாவின் ஓர் தீர்க்கதரிசி. அவரைப் பற்றி அதிகம் தெரியாது. 1:1.

**பெயர்** : யேகோவே தேவன் என்று பொருள்படும்.

**காலம்** : தெரியாது நிச்சயமில்லை.

**புத்தகத்தின் பாணி** (போக்கு) உயர்ந்தது. அழுத்தமாகவும், நேர்த்தியாகவும் எழுதப்பட்டது. திறவுகோல் எண்ணம் : தேசமாக மனந்திரும்புதலும், அதன் ஆசீர்வாதங்களும்.

**சம்பவம்** : கொள்ளை நோயான வெட்டுகிளிகள், கொடிய வறட்சி, ஜனங்களுடைய பாவங்களுக்கான தண்டனையாகக் கருதப்படுகிறது. இந்த கொள்ளை நோய் தீர்க்கதரிசனமாகக் கூறப்படும் யூதாவின் சத்துருக்களுடைய சேனையால் ஏற்படும் படையெடுப்பாகும்.

### கர்த்தரின் நாள்

1. ஜனங்கள் மேல் அவர்களுடைய பாவங்களுக்காக வரும் தீர்ப்பின் காலம்.
   a. கொள்ளை நோயான வெட்டுக்கிளிகள். 1:4-9.
   b. கொடிய வறட்சி 1:10-20.
   c. சத்துருக்கள் படையெடுப்பு 2:1-10.
2. மனங்கசந்தலுக்கும், மன்றாட்டுக்கும் அழைப்பு 2:12-17.
3. வருங்கால விடுதலைபற்றி வாக்குதத்தம் 2:18-20.
4. ஆசீர்வாதம் மிகுந்த காலமாக இருக்கும்.
   a. இயற்கையில், அபரிமிதமான மழை வருஷிப்பதால் போதுமானதுக்கு அதிகமான அறுவடை 2:23-24.
   b. பரிசுத்த ஆவி அபரிமிதமாக ஊற்றப்படுதல் மகத்தான எழுப்புதலைக் கொண்டுவரும். 2:28-32; அப் அதி.2.
5. யோசபாத்தின் பள்ளத்தாக்கில் :
   a. புறஜாதி தேசத்தார் நியாயந்தீர்க்கப் படுவார்கள் 3:1-16.
   b. சீயோன் மகிமையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும். 3:17-21.

### தெரிவு செய்யப்பட்டவை

1. முழு இருதயத்தோடும் மனங்கசந்தல் 2:12-17.
2. பிற்பட்ட காலத்தில் ஆவியின் ஊற்றப்படுதலுக்காக வாக்குத்தத்தங்கள். 2:28-32.

---

## ஆமோஸின புத்தகம்

**ஆக்கியோன்** - அவருடைய பெயர் பாரம் அல்லது பாரம் சுமப்பவர்.
யூதாக் கோத்திரத்தில் தெக்கோவா ஊரைச் சேர்ந்த பிரஜை.
ஒரு மேய்ப்பன், அத்திமரத்து கிளை நறுக்கி திருத்தம் செய்பவன். 7:14.
அவனது அழைப்பு : 7:15.
அவனை மௌனமாக்க முயற்சி : 7:10-13.

**காலம்** : இஸ்ரவேலில் யெரோபெயாம் II ஆட்சிக் காலத்திலும் உசியா, யூதாவில் ஆட்சி செய்த காலத்திலும் தீர்க்கதரிசனம் சொன்னவன்.

**பேசும் பாணி** : எளிமையானது. ஆனால் , அழகு வாய்ந்தது. இந்த புத்தகத்தில் அடையாளங் காட்டும் உருவக அணிகள் நிரம்ப இருக்கின்றன.

### எடுத்துக்காட்டுகள்

a. தேவனுடைய இரக்கங்கள் பாவிகளால் வடிந்து போகுதல் என்பது கோதுமைக் கட்டுகள் நிறைபாரமாக ஏற்றப்பட்ட வண்டியில் இருத்தப்படுகிறதற்கு ஒப்பிடப்படுகிறது. 2:13.

b. அந்த தீர்க்கதரிசியின் மேல் விழுந்த கடமையின் பாரஅழுத்தம் சிங்கம் கெர்ச்சிப்பதற்கு ஒப்பிடப்படுகிறது. 3:8.
c. இஸ்ரவேலில் மீதியானவர்கள் தப்பிக்கும் குறுகிய வழியானது, ஒரு மேய்ப்பன் இரண்டு கால் எலும்புகளையாவது ஒரு காதின் துண்டையாவது சிங்கத்தின் வாயிலிருந்து பிடுங்கி தப்புவிப்பதற்கு ஒப்பிடப்படுகிறது. 3:12.
d. கர்த்தருடைய வசனம் கேட்க கிடைக்கப்பெறாதது இயற்கையான உலகத்தில் ஏற்படும் பஞ்சத்திற்கு ஒப்பிடப்படுகிறது. 8:11-12.

ஆமோஸ் ஓர் தீர்க்கதரிசியாக அநேகக் காரியங்களில் கிறிஸ்துவைப் போல் இருந்தான்.
1. அவனுடைய தொழிலில் வேலை செய்யும் மனிதனாக 7:14.
2. அவனுடைய தாழ்மையில் அவனது தாழ்ந்த ஆரம்பத்தை ஒப்புக் கொண்டான். 7:15.
3. அவன் போதனையின் முறையில் எடுத்துக் காட்டுகளை பயன்படுத்தினான்.
4. தெய்வீக அகத்தூண்டுதலுக்கு அவன் உரிமையாக, “கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் காண்பித்ததாவது” என்று கூறுவது, அவனுடைய தீர்க்கதரிசனத்தில் நாற்பது தடவைகள் காணப்படுகிறது.
5. தேசத் துரோகத்தால் குற்றம் சாட்டப்படுகிறான். 7:10. யோவான் 19:12.
6. அவன் மேல் இருந்த கடமையின் அழுத்தமான பாரம் 3:8; யோவான் 9:4.
7. ஐசுவரியவான்களின் சுயநலத்தை இடித்துத் தாக்கிய பொழுது 6:4-6; லூக்கா 12:15-21.

**பாடச்சுருக்கம்** :
1. சுற்றியிருக்கும் ஜாதிகள் மேல் வரப்போகும் நியாயத்தீர்ப்பு 1:3-15; 2:1-3.
2. மிரட்டுதலான பேச்சுகள்.
1. யூதாவுக்கு விரோதமாக 2:4-5.
2. இஸ்ரவேலுக்கு விரோதமாக 2:6-16.
3. தேவனை உண்மையாகத் தேடுமாறு இஸ்ரவேலுக்கு அழைப்பு அதி 5.
4. ஆடம்பரமான ஜீவியம் கண்டனம் செய்யப்பட்டது. 6:4-14.
5. வரிசையான ஐந்து தரிசனங்கள் :
   a. வெட்டுகிளி பற்றிய தரிசனம் 7:1-3.
   b. அக்கினி பற்றிய தரிசனம் 7:4-5.
   c. துக்கு நூல் தரிசனம் 7:7-9.
   d. கனிந்த பழங்கள் நிரம்பிய கூடை 8:12-3.
   e. விழுந்து போன ஆலயம் 9:1-10.
6. தரிசனம் தடைசெய்யப்பட்டது. தீர்க்கதரிசியை பயமுறுத்த ஒரு முயற்சி 7:10-13.
7. சிதறிப்போவது பற்றியும், இஸ்ரவேல் திரும்பக் கொண்டு வரப்படுவது பற்றியும் முன்னுரை 9:9-15.

---

## ஒபதியாவின் புத்தகம்

**எழுதியவர்** : அவரைப் பற்றி ஒன்றுந் தெரியாது.

**தீர்க்கதரிசனம்** : ஏதோமுக்கும், இஸ்ரவேலுக்கும் இடையே நடந்த புராதன காலத்து குடும்பச் சச்சரவு பற்றியது.
ஏதோமியர் ஏசாவின் பின் சந்ததியார். அவர்களுக்கு இஸ்ரவேலுக்கு விரோதமாக மனத்தாங்கல் இருந்து வந்தது. ஏனென்றால், யாக்கோபு அவர்களுடைய முன்னோரை ஏமாற்றி அவனுடைய பிறப்புரிமையை எடுத்துக் கொண்டான். ஆதி.25:21-34.

**திறவுகோல் எண்ணம்** : வசனம் 10. ஏதோமியர் இஸ்ரவேலருக்கு தங்கள் தேசத்தின் வழியாக போக அனுமதி மறுத்தார்கள். எண் 20:14-21. அவர் எருசலேம் பிடிபட்டு போனதைக் குறித்து மகிழ்ச்சி அடைந்தார்கள். சங் 137:7.

### பாடச்சுருக்கம்

ஏதோமியர் யாக்கோபுக்கு விரோதமாகக் காண்பித்த பெருமையையும் செய்த தவறுக்காகவும் அவர்களுக்கு வந்த தீர்ப்பு வசனம் 1-16.

தெரிந்தெடுக்கப்பட்ட ஜனங்களின் விடுதலையும் அவர்களுடைய வருங்கால இராஜ்ஜியத்தில் ஏதோமியர் உள்ளே சேர்க்கப்படுதலும் வசனம் 17-21; எண் 24:18.

### ஆவிக்குரிய பாடம்

தேவனுடைய விசேஷமான யூதர்கள் மேல் உள்ள தெய்வீகப் பாதுகாப்பும் அவர்களை பாடுபடுத்த துன்புறுத்துவோர் மேல் வரும் ஆக்கினையின் நிச்சயமும்.

---

## யோனாவின் புத்தகம்

**யோனா** கலிலேயா தேசத்தான். முன்நாட்களின் தீர்க்ககரிசிகளில் ஒருவன்.

நினிவே நகரத்துக்கு சுவிசேஷகனாகப் போகும்படியாகவும் மேலும் அந்த ஜனங்களை எச்சரிக்கை செய்யும் படியும் அழைக்கப்பட்டான். ஆனால் அவன் மிகுந்த விருப்பம் இல்லாதவனாக போகப்புறப்பட்டான்.

இந்த கதைசொல்லுரையானது, ஒரு புராணக் கதையாக அவிசுவாசிகளால் பரிகசிக்கப்படுகிறது. சில அறிஞர்கள் அதைக் கட்டுகதையாகவோ அல்லது உவமையாகவோ கருதுகிறார்கள். ஆனால், இயேசுகிறிஸ்து அதன் மெய்ம்மையை உறுதிப்படுத்தினார். மத் 12:39-41; லூக்கா 11:9-30.

### யோனாவின் நடத்தை

1. ஒரு பகுதியாக பரிசுத்தம் பெற்றது பராக்கிரமத்துக்கும், பலவீனத்துக்குமான ஒரு வினோதமான கலவையாகும்.
2. சுயசித்தமுள்ளவன். 1:1-3.
3. தேவனுக்கு பயந்தவன். 1:9.
4. ஊக்கமான தைரியமுள்ளவனாக 1:12.
5. ஜெபம் நிறைந்தவனாக 2:1-9.
6. சிட்சை பெற்ற பிறகு கீழ்படிந்தவனாக 3:3-4.
7. வெறியனாக சுயநலவாதியாக, நினிவே மக்கள் மனந்திரும்பிய பொழுது ஏமாற்றப்பட்டவனாக. 3:4-10; 4:1.
8. தன் சொந்த புகழ்ச்சிக்காக மிகுந்த கரிசனையுள்ளவனாக 4:2-3.

### பாடச்சுருக்கம்

அதிகாரம் :1. தெய்வீக கட்டளையிலிருந்து தப்பிச் செல்லும்படியாக ஓட்டம் எடுத்தான். தீர்க்கதரிசியின் மேல் தண்டனை.

அதிகாரம் :2. மன்றாட்டும் விடுதலையும்.

அதிகாரம் :3. இரண்டாவது, ஆணை கீழ்படியப்பட்டது.

அதிகாரம் :4. குழந்தைத்தனமான தீர்க்கதரிசியின் புகார், தெய்வீக இரக்கத்தின் காட்சி தீர்க்கதரிசியைக் கண்டனம் செய்தலோடு.

### ஆவிக்குரிய பாடங்கள்

1. கடமையை விட்டு விலகி ஓடும் அபாயம்.
2. சுயநலமான தேசபக்தியும், மத சார்பான வைராக்கியமும்.
3. குறைபாடுள்ள மனிதனை சத்தியத்தின் வாய்க்காலாக பணி அனுமதிக்கும் தெய்வீகத்து தொழில் ஏற்பாடு.

---

## **மீகாவின்** புத்தகம்

**எழுத்தாளர்: மீகா** மொரேசா என்ற யூதாவில் உள்ள ஊரைச் சேர்ந்தவன். யோதாம், ஆகாஸ், எசேக்கியா ஆகிய இராஜாக்கள் காலத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தான். ஏசாயா தீர்க்கதரிசியன் சமகாலத்தைச் சேர்ந்தவன். ஏசாயா 1:1.
**அவனுடைய** பெயருக்கு அர்த்தமாவது, யேகோவாவைப் போன்றவன் என்பதுவாகும்.
**அவன்** யூதாவைச் சேர்ந்தவன். ஆனாலும், அவன் யூதா, இஸ்ரவேல் இரண்டிற்கும் தீர்க்கதரிசனம் உரைத்தான். அவனுடைய அபிஷேகம் 3:8.

### பாடசுருக்கம்

**I. பொதுவான பிரிவுகள் :**

a. அதி 1-3. முக்கியமாக வரப்போகும் நியாயத்தீர்ப்பின் பயமுறுத்துதல்.
b. அதி. 4-5. விடுதலைக்கான தீர்க்கதரிசனமான வாக்குதத்தங்கள்.
c. அதி 6-7. முக்கியமாக உபதேசங்களும், ஜனத்தின் பாவ அறிக்கைகளும். அத்துடன் திரும்பக் கொண்டு வரப்படுதலைப் பற்றிய வாக்குத்தத்தம்.

**II. குறிப்பிட்ட பாவம் கண்டனம் செய்யப்படுகிறது**

a. விக்ரக ஆராதனை 1:7; 5:13.
b. தீமையான திட்டங்களும், யூக சாதனங்களும் 2:1.
c. ஆவல் மிகுந்த பேராசை 2:2.
d. அரசகுல குமாரர்கள், தீர்க்கதரிசிகள் ஆசாரியர்கள் முதலியவர்களின் பேராசை. 3:2-11.
e. பில்லி சூனியம் 5:12.
f. நேர்மையின்மை 6:10-12.
g. பொதுவாய் நிலவும் இலஞ்ச ஊழல் 7:2-4.
h. துரோகச் செயல் 7:5-6.

### வருங்கால நம்பிக்கைகள்

1. நீதியான இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படுதல் 4:1-8.
2. மேசியாவின் இராஜாவின் வருகை 5:2.
3. ஜாதிகளின் சீர்திருத்தமும், திரும்பக் கொண்டுவந்து சேர்க்கப்படுதலும் 7:7-17.
4. தெய்வீக கிருபையின் முற்றிலுமாக வெற்றி 7:18-20.

### மேற்கோள்கள்

a. மூத்தோர்களால், எரேமியாவின் ஜீவன் பாதுகாக்கப்படுதல். எரேமியா.26:16-19; மீகா3:12.
b. சனகெரீப் சங்கத்திலிருந்து மகாஏரோது வரைக்கும் கிறிஸ்துவின் ஜனன காலம் வரைக்கும். மத்.2:5-6; மீகா 5:2.
c. கிறிஸ்துவினால் அவருடைய சீஷர்களை வெளியில் அனுப்பியபோது. மத்10:35-36; மீகா 7:6.

### குறிப்பிடக்கூடிய பகுதிகள்

- உண்மையான மார்க்கத்து சொல்பொருள் விளக்கம் 6:8.
- கிறிஸ்துவின் ஜனன பூமி அறிவிக்கப்பட்டது. 5:2.
- விசுவாசிகளுடைய பாவத்தை தேவன் நிவாரணம் செய்தல் 7:18-19.

---

## **நாகூமின்** புத்தகம்

**எழுதியவர்** : அவரைப் பற்றி சிறிதேனும் அறியப்படவில்லை. அவருடைய பெயருக்கு "இரக்கமுள்ளவர்" அல்லது "ஆறுதல் நிறைந்தவர்" என்று அர்த்தமாகும்.

**காலம்:** நினிவேயின் வீழ்ச்சிக்கு முன்பாக.

**முக்கியமான பொருள் தலைப்பு** : நினிவேயின் அழிவு.

**வரலாற்றில் அமைந்த இருப்பிடம்** : சில (நிபுணர்) அறிஞர்களால் இந்தப் புத்தகம் யோனாவின் புத்தகத்துக்கு தொடர்ச்சி என்று கருதுகிறார்கள். அசீரியர்கள் யோனாவின் பிரசங்கத்துக்குப் பின்னர் அவர்கள் மனந்திரும்புதலில் இருந்து முற்றிலுமான ஒழுக்கங்கெட்ட விக்ரக ஆராதனைக்கு திரும்பிப் போய் விட்டார்கள். மற்ற ஜாதியார்களை கொள்ளை அடித்தனர். அவர்களது தலைநகரம் வேட்டையாடப்பட்டும், பிராணிகள் நிறைந்த சிங்கம் வசிக்கும் கெபி (குகை) யாகிற்று. 2:11-12. இந்தப் புத்தகத்தின் நோக்கமாவது இரத்த களரியான நகரத்தின் மீது தெய்வீகப் பழிவாங்குதலைப் பிரகடனப்படுத்தவும், மேலும் யூதாவை வருங்கால விடுதலைக்கான வாக்குத் தத்தங்களைக் கொடுத்து ஆறுதல்படுத்துவதற்கும். 3:1; 1:13-15.

**பாடச்சுருக்கம்**

அதி 1. யேகோவாவின் கம்பீரமான வெல்லுதலுக்கரிய வல்லமை அது அசீரியாவின் நுகத்தை முறித்து யூதாவை விடுவிக்கும் என்ற தரிசனம்.

அதி 2. நினிவே நகரத்து முற்றுகை பற்றியதோர் நாடகபாணியான வருணணை.

அதி 3. இரத்தகளரியான நகரத்துக்கு ஐயோ என்று பிரகடனம் செய்யப்பட்டது. அதன் முற்றிலுமான அழிவு முன்னுரைத்தல்.

**குறிப்பு** : சில விளக்கவுரையாளர்கள் அதி 2: வசனம் 4ல் நவீன காலத்து மோட்டார் வாகனத்துக்கான குறிப்பீடு (சங்கேதக் குறிப்பு) இருப்பதாகக் காண்கிறார்கள். ஆனால் இது அளவுக்கு மீறின வியாக்கியானமாகும்.

---

## ஆபகூக்கின் புத்தகம்

**எழுதினவர்** : ஆபகூக்குடைய ஜெபமான சங்கீதத்தில் (அதி 3) இருந்தும், இசைக்குழுவின் தலைவனுக்குக் பிறப்பித்த (கொடுத்த) ஆணையில் இருந்தும், அவன் ஆலயத்தில் பாடகனாக இருந்தான் என்று யூகிக்கிறார்கள். ஆனால் இது சுத்தமாக உத்தேசத்துக் (யூகத்துக்கு)குரியதாகும்.

**காலம்** : நிச்சயமில்லை. இந்த தீர்க்கதரிசி பாபிலோனிய காலத்தில் வாழ்ந்தான் என்று சான்றாகிறது. அநேக அறிஞர்கள் இந்த தீர்க்கதரிசன காலத்தை யோயாக்கீன் என்பவனுடைய அரசாட்சி காலத்தில் குறித்து நாட்டி வைக்கிறார்கள்.

**முக்கியமான தலைப்பு** : தெய்வச் செயலின் மர்மங்கள்.

**திறவுகோல் வசனம்** 1:3.

**பாடச்சுருக்கம்** :

இந்த புத்தகம் தீர்க்கதரிசியை இந்த உலகத்தின் தண்டிக்கப்படாத தீங்கின் மர்மத்தைப் பற்றிய குழப்பத்தில் இருக்கும் நிலமையோடு ஆரம்பிக்கிறது.

இந்த முதல் இரண்டு அதிகாரங்களும், ஆபகூக்கிற்கும், யேகோவாவிற்கும் நடந்த உரையாடல்கள் முக்கியமாக அடங்கப் பெற்றுள்ளது.

1. இந்த தீர்க்கதரிசி ஒவ்வொரு கரத்திலும் பாரம் நிறைந்த வன்முறையைக் காண்பதாகவும், ஆனாலும் அந்தத் தீங்கு இழைப்பவர்கள் மீது எவ்விதமான தண்டனையும் விதிக்கப்படுவதில்லை என்று தேவனிடம் புகார் செய்கிறான். 1:1-4.
2. அவன் தேவனிடமிருந்து பிரதியுத்திரமாக பாபிலோனியரை வேகமாகவும், பயங்கரமான நியாயத்தீர்ப்பின் ஆயுதமாக கேடுபாடுள்ள ஜனங்கள் மேல் உபயோகிக்கப்படபோகும் ஒரு தெய்வீகத் திட்டத்தைப் பதிலாகப் பெற்றுக் கொள்கிறேன். 1:5-11.
3. இன்னும் இந்த ஒழுக்கப் பிரச்சனையானது, தீர்க்கதரிசியின் சிந்தனையில் பதிலைப் பெறாமலே இருக்கிறது. ஒரு பரிசுத்த தேவன் எப்படி பொல்லாத புற மதஸ்தரைக் கொண்டு அவர்களைவிட நீதியான மக்களை அழிக்க முடியும்? ஆகவே தவறும், வன்முறையும் என்றென்றைக்கும் தொடர்ந்து கொண்டிருக்க வேண்டுமா 1:12-17.

4. இந்த தீர்க்கதரிசி உலகத்தை நோக்கிப் பார்க்கக் கோட்டை அரண்மீது ஏறிப்பார்க்கிறான். அங்கு அவனுக்கு கர்த்தருடைய பதிலைப் பெற்றுக் கொள்கிறான். தேவனுடைய திட்டமானது, வெகுசீக்கிரமாக நிறைவேற்றப்படும் நோக்கத்ததையுடையதென்று அவனுக்குச் சொல்லப்படுகிறது. அவன் அதற்காகக் காத்திருக்கும்படியாக ஊக்குவிக்கப்படுகிறான். அதற்குப் பிறகு கிறிஸ்தவ திருச்சபைகளுக்கு விழிப்பான அடையாள வார்த்தையான வாக்கியம் பின்தொடர்நது வருகிறது.
5. புதிய ஒளியைப் பெற்றத் திருப்தியுடன் அந்த தீர்க்கதரிசி ஒரு வரிசையான பாரமான வார்த்தையான ஐந்து “ஐயோ” என்ற வார்த்தைகளை நேர்மையின்மை (2:6) பேராசை (2:9) இரத்தத்தின் மேல் (இரத்தப்பழியின் மேல்) கட்டடம் கட்டும் பட்டணம் (2:12), விபசாரம் (2:15). விக்கிரக ஆராதனையாகிய உலக பராக்கிரமத்தின் மீது சொல்லுகிறான்.
6. கடைசியில் ஓர் உன்னதமான மன்றாட்டை துதியான சங்கீதத்தை யேகோவாவின் மாட்சிமை, மகிமை இவைகளைப் போற்றி அவர்மேல் அவருடைய திட்டத்திற்கான அவனுடைய அசைக்க முடியாத நம்பிக்கையை பிரபலப்படுத்துகிறான்.

**குறிப்புள்ள பகுதிகள் :**

- 2:4 சீர்திருத்தத்தின் விடிவெள்ளி ரோமர் 1:17; எபி 10:38.
- 2:14 சுவிசேஷ பிரபல்ய குழுக்களின் வெற்றி.
- 2:15 குடிகாரனாக ஆக்குபவனுக்கு ‘ஐயோ’
- 3:17 உலகத்தை ஜெயிக்கும் விசுவாசம்.

---

## செப்பனியாவின் புத்தகம்

**எழுதியவர்** - எசேக்கியா இராஜாவின் நேரடியான சந்ததியாரில் ஒருவனாக இருக்கலாம் என்பது ஐயமற தெளிவாகும். 1:1

அவன் யூதாவின் இராஜாவாகிய யோசியாவின் ஆட்சி காலத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தான். 1:1. யோசியா இராஜாவின் இராஜ்யபாரத் தொடக்கத்தில் அந்த காலத்தில் தேசம் முழுவதும் எழுப்புதல் பரவி தேசத்தையே புரட்டிக் கொண்டிருந்த சமயம் தீர்க்கதரிசனம் சொன்னான் என்று நம்பப்படுகிறது. (2இராஜா 22:23 அதி. பார்க்கவும்).

பாரம்பரியம் சொல்லுகிறதாவது, செப்பனியா உல்தாள் என்ற தீர்க்கதரிசினியோடு இணைந்து இருந்ததாகவும், இராஜ்ஜியத்தில் சீர்திருத்தம் ஆரம்பிக்கப்படுகையில் எரேமியாவுடன் செயல்பட்டான் என்றும் கூறுகிறது.

**முக்கியமான பொருள் தலைப்பு ஆராய்ந்தறிதல்** : தேவனுடைய நியாயத்தீர்ப்புகள்.

**திறவுகோல் வசனம்** 1:12.

**பொருளடக்கம்** : இந்தப் புத்தகம் அதனுடைய தொனியில் அளவுக்கு மிஞ்சிய துயரம் நிறைந்ததாக உள்ளது. மேலும் அது மிரட்டுதல்களாலும், கண்டனங்களாலும் நிறைந்திருக்கிறது. கடைசி அதிகாரத்தில் சூரியன் மேகங்களுக்கு ஊடே உடைத்துக் கொண்டு வருகிறது. அந்தத் தீர்க்கதரிசி வரப்போகும் மகிழ்ச்சிகரமான நாளைக் குறித்து முன்னுரைக்கிறார். அப்பொழுது பூமியின் ஜனங்களுக்கு மத்தியில் யூதர்கள் துதியாகவும் இருப்பார்கள் என்கிறார்.

**பாடச் சுருக்கம்**

1. யூதாவின் மேல் வரப்போகும் நியாயத் தீர்ப்பைப் பற்றி அறிவிக்கப்படும் அதி. 1.
2. மனந்திரும்பும் படியாக அழைப்பு 2:1-3.
3. சுற்றியுள்ள ஜனங்களை மிரட்டுதல் செய்யும் நியாயத்தீர்ப்புகள் 2:4-15.
4. எருசலேம் நகரத்துப் பாவிகளுக்கு ‘ஐயோ’ என்று சொல்லப்படுகிறது. ஏனென்றால் அவர்களது சீர்கேடும், ஆவிக்குரிய குருட்டாட்டமும் அவர்களது பொல்லாப்பில் தொடர்ந்து நீடிப்பதாலும் புறமதஸ்தரான ஜனங்கள் மேல் தீர்ப்புச் செய்த போதிலும் அவர்களுடைய இருக்கும் நிலைமைக்கு ஐயோ என்று சொல்லப்படுகிறது. 3:1-8.

5. ஒரு பொதுவான நியாயத்தீர்ப்பு முன்னுரைக்கப்படுகிறது. அதிலிருந்து தேவனுடைய மீதியாக மீந்து இருப்பவர்களே தப்புவிக்கப்படுவார்கள். 3:8-13.
6. இஸ்ரவேலருடைய வருங்காலத்து மகிமையானது, யேகோவா தமது ஜனங்களை விடுதலை செய்துவிடும்பொழுது, உலகம் முழுவதிலும் அவர்களை பிரசித்தி பெறச் செய்யும். 3:14-20.

---

## ஆகாயின் புத்தகம்

**எழுதியவர்** : ஆலயத்தின் தீர்க்கதரிசி பாபிலோனிய எழுபது ஆண்டு சிறையிருப்பின் போது பிறந்தவர் என்ற புகழை உடையவர் செருபாபேலுடன் எருசலேமுக்குத் திரும்பி வந்தார். சகரியாவுக்கு சக தீர்க்கதரிசியாவார். எஸ்றா. 5:1; 6:14.

**முக்கியமான பொருள் தலைப்பு** : ஆலயத்தைத் திரும்ப எடுப்பித்துக் கட்டப்படாததால் புறக்கணித்ததற்காகக் கூர்மையான கண்டனம் செய்யப்பட்டது. அத்துடன் அந்த ஆலயத்திருப்பணியைத் தொடர்ந்து செய்வதால் அதற்கு வாக்குத்தத்தங்களும், உற்சாகப்படுத்தும் புத்திமதிகளும் கொடுக்கப்படுகின்றன.

**திறவுகோல் வசனம்** : 2:4.

**சரித்திர சம்பவம்** : சிறையிருப்பில் இருந்து திரும்பி வந்த மீதியான மீந்தவர்கள் தன்னலமிக்கவர்களாக அவர்களுடைய சொந்தமான காரியங்களில் ஈடுபட்டிருந்ததால் அவர்கள் தங்கள் வாசஸ்தலங்களையே அழகுபடுத்துவதில் கரிசனையாக இருந்து தேவனுடைய வீட்டை திரும்பக் கட்டுவதை விட முன்னதை செய்து கொண்டிருந்தார்கள். அந்த வேலையான திருப்பணியானது, பல ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 1:4.

### அதன் செய்தி

1. தேவனுடைய ஆலயம் அழிந்து போய் இருக்கும் பொழுது தேவன் அதன் காரணமாக இயலபான ஆசீர்வாங்களை நிறுத்தி வைத்திருக்கிறார் என்பதைக் காட்டுவதற்காக வெட்டித்துண்டிக்கும் கண்டனம் சொல்லப்படுகிறது.
2. ஆலயம் கட்டி எழுப்பப்படுவது திரும்பவும் ஆரம்பித்தபொழுது உற்சாகமும் தைரியமும் கொடுக்கும் வார்த்தைகள் கொடுக்கப்படுகின்றன. 1:12-15.
3. சாலெமோனுடைய ஆலயத்தைப் பார்த்திருந்த முதியோர்களுக்கு உற்சாகமூட்டும் ஆறுதலான வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்படுகிறது. ஏனென்றால், அவர் கட்டக் கூடியதான ஆலயத்தின் தரங்குறைந்த கட்டுமானத்தைக் குறித்து தைரியத்தை இழந்து போய் இருந்தார்கள்.2:3. வரப்போகும் தெய்வீக வல்லமையின் வெளிப்பாட்டைப் பற்றியும் மேசியா வரப்போவது பற்றியும் அப்பொழுது கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்பும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டிருந்தது. 2:7-9.
4. சேனைகளின் கர்த்தருக்கு வீட்டைக் கட்டுவதற்கான அவர்களுடைய அபாத்திரத் தன்மையைக் குறித்து ஒரு நினைவூட்டுதல் தரப்படுகிறது. 2:1-14.
5. புறமதத்து தேசத்தினருக்கு வரும் அழிவைப் பற்றிய முன்னுதைத்தலும் தேவனுடைய தெரிந்து கொள்ளப்பட்ட கருவியாக செருபாபேலுக்கு பாராட்டி வார்த்தைகள் சொல்லப்பட்டன. 2:20-23.

**தெரிவு பகுதிகள் : 2:4-9.**
- தெய்வீக பிரசன்னம் பலப்படுத்துகிறது. வசனம். 4.
- தெய்வீக வல்லமை கிரியை செய்கிறது. வசனம் 6.
- தெய்வீக மகிமை நிரப்புகிறது. வசனம் 7.
- தெய்வீக சாமாதானம் வரப்போகிறது. வசனம் 9.

---

## சகரியாவின புத்தகம்

**ஆக்கியோன்** : பெரகியாவின் குமாரன் 1:1.

இந்தத் தீர்க்கதரிசியைப் பற்றி கொஞ்சங்கூட திட்டவட்டமாகத் தெரியாது. அவன் ஆகாய் தீர்க்கதரிசிக்கு சமகாலத்தவனாக எருசலேமில் ஆலயத்தைத் திரும்ப எடுப்பித்துக் கட்டும்படிக்கு யூதர்களை தூண்டி எழுப்புவதில் ஆகாயுடன் இணைந்து கொண்டான். 6:14.

ஐயமற அவன் தீர்க்கதரிசனம் சொன்னகாலத்தில் அவன் ஒரு வாலிபனாக இருந்திருக்கிறான்.2:4 செப்துவஜின்ட் பதிப்பில் பல சங்கீதங்கள் பாடப்பட்டதாக சகரியாவுக்கும், ஆகாய்க்கும் தகுதி கொடுக்கப்பட்டிருக்கின்றது.

**காலம்** : ஆகாய் தீர்க்கதரிசனம் சொல்லி இரண்டு மாதங்களுக்குப் பின்னர் (ஆகாய் 1:1; சகரியா 1:1 ஐயும் ஒப்பிடுக).

**நடைமுறை பாணி** மிகவும் உயர்ந்த மறைபொருள் கூறி உணர்த்துதல் உடையது.

## நீண்டதோர் தரிசனத்தின் தீர்க்கதரிசி

ஆகாயைப் போலவே இவனும் தன்னுடைய ஜனங்களின் பாவம் நிறைந்த நிலையையும், வழிபாட்டைப் பற்றி நிர்விசாரமாயும் இருப்பதைக் கண்டான். அதனால் தூண்டி எழுப்பும் அகக்கிளர்ச்சியான உபதேசங்களைக் கூறி ஆலயத்தை திரும்பவும் எடுப்பிக்க உதவி செய்தான். ஆனாலும் அவனுடைய தீர்க்கதரிசனம் விரிந்ததோர் அகப்பார்வையுடையதாகி காலாகாலங்களைத் திரும்பிப் பார்த்து இராஜாவாகிய மேசியா வரப்போவதையும் சீயோன் நகரத்திற்கு ஒரு பிரகாசமான நாள் அருனோதயமாவதையும் பார்த்தறிந்தான்.

**திறவுகோல் வசனங்கள்** : 1:3; 4:6.

**வருங்கால நம்பிக்கை** : சாயங்காலத்திலே வெளிச்சமுண்டாகும். சகரியா 14:7.

**பாடச்சுருக்கம்**

ஆரம்ப உபதேசங்கள் 1:1-6.

**பிரிவு :I ஒரே வரிசையான எட்டு தரிசனங்கள் :**

1. மிருதுச் செடிகளுக்குள்ளே நின்ற மனிதன் நகரும் குதிரைகளும் 1:7-17.
2. நான்கு கொம்புகளும், நாலு தொழிலாளிகளும் 1:18-21.
3. அளவு நூல் பிடித்திருந்த புருஷன். அதி 2.
4. பிரதான ஆசாரியனை சுத்திகரித்தல். அதி 3.
5. பொன்னினால் செய்யப்பட்ட குத்துவிளக்கும், இரண்டு ஒலிவ மரங்களும் அதி 4.
6. பறக்கிற புத்தச் சுருள் 5:1-4.
7. மரக்காலான கூடையில் இருந்த ஸ்திரீ 5:5-11.
8. நாலு ரதங்கள். 6:1-8. பிரதான ஆசாரியனுக்குக் கிரீடம் சூட்டுதல். 6:10-15.

**பிரிவு : II** உபவாசத்தைக் குறித்து பெத்தேலில் இருந்து அனுப்பப்பட்ட தூதுக்குழுவுக்குப் பிரதியுத்தரம் முடிவில் இந்த உபவாசங்கள் பண்டிகைகளாக அனுசரிக்கப்படும். அதி 7-8.

**பிரிவு III.** யூதர்களின் ஒரு கால கட்ட வரலாற்றைப் பற்றிய தீர்க்கதரிசனமும் தேவனுடைய இராஜ்ஜியத்தின் முடிவான ஜெயத்தைக் குறித்த தீர்க்கதரிசனமும் அதி.9-14.

## மேசியாவின் குறிப்புரைகள்

**இராஜரீகமான மேசியா :**

a. தாழ்மையில் முதல் வருகை. 9:9
b. சமாதான பிரபு. 9-10.
c. குருசில் அறையப்பட்டவர். 12:10.
d. தன்னுடைய மந்தையால் மறக்கப்பட்ட மேய்ப்பர். 13:7.

## தெரிவு செய்யப்பட்டவை

1. ஆவிக்குரிய இடற்பட்ட முயற்சிகளின் வெற்றியின் இரகசியம் 8:9-10.
2. சமாதானப் பிரபுவின் வருகை. 9:9-10.
3. சுத்திகரிக்கும் ஊற்று. 13:1.

## **மல்கியாவின்** புத்தகம்

**ஆக்கியோன்** : இந்தப் புத்தகத்தில் கண்டு கொள்ளப்படுகிறவைகளைத் தவிர தீர்க்கதரிசியின் ஜீவியத்தைப் பற்றி வேறொன்றும் அறியப்படவில்லை. ஒருவேளை நெகேமியாவுக்கு சககாலத்தைவனாக இருக்கலாம். இந்த தீர்க்கதரிசனத்தில் விவரிக்கப்படும். நிலைமை அந்தக் காலத்திற்கு ஒத்ததாக சமமாகக் காணப்படுகிறது.

**நடையின் போக்கு** : அழுத்தமானதாகவும், வழக்கத்திற்கு மாறானதும் கர்த்தர் தமது ஜனங்களோடு உரையாடுவதாகக் காட்டப்படுகிறார். "ஆனாலும் நீங்கள் கேளுங்கள்" என்பது "சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்" என்பதுடன் வித்தியாசப்படுத்தப்படுகிறது.

### பொருள் தலைப்பு

பழைய ஏற்பாட்டு வரலாற்று முடியுங்காலத்தைப் பற்றிய படம் காட்டும் வருணனையாக படம் பிடித்து மேசியா வருகைக்கு வழியை ஆயத்தம் பண்ணும்படியாக அவசியமான அந்த மகா சீர்திருத்தங்களைக் காட்டுகிறது.

**திறவு கோல் வசனம்** :3-8.

**பாடச்சுருக்கம்**

I. **அந்த ஓவியத்தின் இருண்ட பகுதி**. நேர்மையற்றதான பாவங்கள். நன்றிகெட்ட ஜனங்கள், அவிசுவாசமான ஆசாரியத்துவம்.

1. **தேவனிடமிருந்து திருட்டு** :
   a. தெய்வீக அன்புக்கு பிரதியுத்தரம் கொடுக்கத்தவறியது. 1:2.
   b. தேவனுடைய நாமத்தைக் கனவீனப்படுத்துவதால் 1:6
   c. தகாத பலிகளைச் செலுத்துவதால், 1:7; 13-14.
   d. ஆசாரியர்கள், தங்களுடைய பொல்லாத முன்மாதிரிகளால் தடைகளாகி ஆவிக்குரிய தலைவர்களாக இராமல் அவ்வாறு ஆகிறார்கள். 2:1-8.
   e. பாவிகளைக் கனப்படுத்துவதால் 2:17; 3:15.
   f. சுயநலமாக தசமபாகங்களை நிறுத்தி வைத்துக் கொள்வது 3:8
   g. அவபக்தியை நியாயப்படுத்துவதால் 3:14.

2. **சமூகப்பாவங்கள்** :
   a. துரோகமான செயல்பாடுகள். 2:10
   b. அவிசுவாசிகளோடு கலப்புத் திருமணம் 2:11.
   c. மனைவிகளை தள்ளிவிடுதல். 2:14-16.
   d. பில்லிசூனியம், பரிசுத்தமின்மை, ஒடுக்குதல் 3:15.

**II. ஓவியத்தின் பிரகாசமான பகுதி :**
**மகிமையான வாக்குத்தத்தங்கள் :**
   a. உடன்படிக்கையின் படி தூதுவரின் வருகை 3:1-4.
   b. உன்னதமான ஆசீர்வாதம் அபரிமிதமாக ஊற்றப்படுதல் 3:10-12.
   c. பரிசுத்தவான்கள் யேகோவாவுடைய விசேஷமான பொக்கிஷங்களாக 3:16-18.
   d. நீதி வெற்றிபெரும் ஒரு புதிய நாள் உதயமாகுதல். 4:2-3.
   e. கர்த்தரின் நாள் வருவதற்கு முன் ஆவிக்குரிய சீர்திருத்தக்காரனின் வருகை 4:5-6

**தெரிவு செய்யப்பட்டவை**

- அதி. 3. உடன்படிக்கையின் சுத்திகரிக்கும் தூதுவர் வ. 1-4.
- அதி 3. ஆசீர்வாதத்தின் வெள்ளம் வ. 10
- அதி 3. தேவனுடைய ஆபரணங்கள். வ. 10-17.

# புதிய ஏற்பாட்டு புத்தகங்கள்

## மத்தேயு எழுதிய சுவிசேஷம்

**ஆக்கியோன்** : லேவி எனப்பட்ட மத்தேயு. பன்னிரு சீஷர்களில் ஒருவர். அப்போஸ்தலர்களில் ஒருவர் மாற்கு 2:14. துர்அதிர்ஷ்டவசமாக ரோம ஆயக்காரனாக இருந்த யூதன். மத் 10:3. இயேசுவால் அழைக்கப்பட்ட பொழுது, எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவருக்குப்பின் சென்றவன். லூக்கா 5:27-28. அவன் கிறிஸ்துவுக்கு பெரிய விருந்து பண்ணினான். ஆயக்காரர்கள் இகழப்பட்டவர்கள் என்று தெரிந்திருந்த போதிலும் அந்த விருந்தில் அவர் கலந்து கொண்டார். (லூக்கா 5:29)

**யாருக்காக எழுதப்பட்டது** : முக்கியமாக யூதர்களுக்காக. இந்த அபிப்பிராயமானது, ஏறக்குறைய அறுபது ஒத்து வாக்கியங்கள் யூதர்களைப் பற்றிய தீர்க்கதரிசனங்களும், பழைய ஏற்பாட்டில் இருந்து ஏறக்குறைய நாற்பது மேற்கோள்களும் எடுத்துக் கையாளப்பட்டுள்ளது என்ற விஷயத்தால் உறுதிப்படுத்தப்படுகிறது. கிறிஸ்துவின் யூதருக்கான சுவிசேஷ விஜயமானது, குறிப்பாக வற்புறுத்தப்படுகிறது. மத் 10:5-6; 15-24.

**திறவுகோல் வார்த்தைகள்** : “நிறைவேறியது” இது பலதடவைகளாக திரும்பத் திரும்பப் பயன்படுத்தப்பட்டு பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் கிறிஸ்துவுக்குள் நிறைவேற்றப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. “இராஜ்ஜியம்” என்பது 50 தடவைகளாகவும் “பரலோக ராஜ்ஜியம்” என்பது முப்பது தடவைகளாகவும் காணக்கிடக்கிறது. இராஜாவாக இயேசு 2:2; 21:5; 22:11; 25:34; 27:11,37,42ல் காணப்படுகிறது.

**கண்கூடான நோக்கம்** : நசரேயனாகிய இயேசு யூதருடைய தீர்க்கத்தரிசனத்தின் இராஜரீகமான மேசியா எனப்படுவார் என்பதைக் காண்பிப்பதற்காக.

### விசேஷமான தெளிவான அம்சங்கள்

1. கிறிஸ்து பற்றிய முற்றுப்பெற்ற வம்சாவளி அட்டவணை 1:1-17.
2. இந்த சுவிசேஷத்தில் மாத்திரம் காணப்படும் சம்பவங்களும் நீண்ட உரையாடல்களும்
   - a. அதி 2. மூன்று சாஸ்திரிகள் வருகை. வ.1
     எகிப்துக்கு ஓடிபோனது. 5. 13-14.
     ஆண்குழந்தைகள் படுகொலை. வ.16.
   - b. அதி. 3. யோவான்ஸ்நானகனிடம் பரிசேயர்களும், சதுசேயர்களும் வருகைதருதல். வ.7.
   - c. அதி. 5-7. மலைப் பிரசங்கம் (முழுவதும்).
   - d. அதி. 11:28. வருத்தப்பட்டு பாரம்சுமக்கிறவர்களே நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்
   - e. 14:28-31 பேதுரு ஜலத்தின் மேல் நடந்தது.
   - f. அதி 23. தொடர்ந்த பிரசங்கமாக பரிசேயரைக் கண்டனம் செய்தல்.
   - g. அதி. 26:15 யூதாஸால் பெற்றுக் கொள்ளப்பட்ட முப்பது வெள்ளிக்காசுகள்.
   - h. அதி 27. 30 வெள்ளிக்காசுகள் திரும்பக் கொடுக்கப்படுதல். வ.3-10.
     பிலாத்துவின் மனைவியுடைய கனவு. வ.19.
     உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் நகரத்தில் காணப்படுதல். வ.52.
     கல்லறைக்குக் காவல். வ.64-66.
   - i. அதி 28. போர்வீரர்களுக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டது. வ.12-13.
     பூமி அதிர்ச்சி வ.2.
     அந்த மகாத்திட்டம். வ.19-20.
3. மத்தேயுவில் மாத்திரம் காணப்படும் அற்புதங்கள் :
   - a. பார்வை அடைந்த இரண்டு கண் தெரியாதோர். 9:28-30.
   - b. வரிப்பணம். 17:24-27.
4. மத்தேயுவில் மாத்திரம் காணப்படும் உவமைகள்.
   - a. அதி 13. களைகள், மறைந்திருக்கும் பொக்கிஷம். வ.44. நேர்த்தியான முத்து. வ.45, வலை. வ.47.

b. அதி 18. இரக்கமற்ற ஊழியக்காரன். வ.23.
c. அதி 20 திராட்சத்தோட்டத்தில் வேலையாட்கள். வ.1-16.
d. அதி.21 இரண்டு குமாரர்கள். வ.28-32.
e. அதி22. இராஜாவின் குமாரனுக்கு கலியாணம். வ.1-14.
f. அதி 25. பத்துக்கன்னிகைகள். வ.1-15, தாலந்துகள். வ.14-30, செம்மறியாடுகளும், வெள்ளாடுகளும். வ. 31-46.

**பகுத்து ஆய்வு** : கிறிஸ்துவுடைய இராஜரீகத்தின் பார்வையில் இருந்து.
இராஜாவாக : இராஜரீகமான மேசியாவின் கதை.
வம்சாவளியும், ஜனனமும் - அதி1. தேடிவந்து 2:2; சாஷ்டாங்கமான வழிபாடு 2:11; பிரகடனம் செய்பவராக 3:1-12; ஆவிக்குரிய வெற்றி 4:1-11; மகாப்பிரகடனம் 4:17; பின்பற்றி வருகிறவர்களுக்கு அழைப்பு 4:18-22; கட்டளைகளும், பிரமாணங்களும் அதி 5-7; வார்த்தைகளும், கிரியைகளும் அதி 8-12; உவமைகள் அதி13; அவருக்கு முன்னோடியின் படுகொலை 14:1-12; அவருடைய வல்லமைகளும், இயற்கை சக்திகளும், பிணிகளும் 14:14-36; 15:32-39; மனிதர்களுடைய நிர்விசாரத்தைப் பற்றிய வெளிப்பாடு. அவருக்கு வரப்போகும் பாடுகளும், மகிமையும் அதி 16-17; அவருடைய இராஜ்ஜியத்தின் கோட்பாடுகளைப் பற்றிய போதனை அதி 18-20; தலைநகரத்திற்குள் அவருடைய வெற்றி விஜயம், அவர் புறக்கணிக்கப்படுதலும், உவமைகளும், தீர்க்கதரிசனங்களும் 21:1 - 22:14; பரிசேயருடைய சதுசேயர் சதியை அவமாக்குதல் 22:15-46; தலைவர்களைக் கண்டனம் செய்தல் அதி 23; வருங்காலத்தைப் பற்றிய தீர்க்கதரிசனங்களும் உவமைகளும் அதி 24-25; அவரைக் காட்டிக் கொடுக்கப்படும் வரைக்குமுள்ள சம்பவங்கள் 26:1-46; அவர் நியாயம் விசாரிக்கப்படுதல் 26:57-75; 27:1-31; சிலுவையில் அறையப்படுதல் 27:31-50; மரணத்துக்குப்பின் சம்பவங்கள் 27:51-56; பூமியில் அவர் திரும்பக் காணப்படுதலும், அவருடைய பின்பற்றும் சீஷர்களுக்கான மகா செயல்பாட்டு ஆணை அதி 28.

---

## மாற்கு எழுதிய சுவிசேஷம்

**ஆக்கியோன் :** எருசலேம் மரியாளுடைய குமாரன். அப் 12:12.
யோவான், மாற்கு என்றும் குறிப்பிடப்பட்டான் அப். 12:25.
பர்னபாவிற்கு உறவினன் கொலோ. 4:10.
பவுல் - பர்னபாவுடன் அவர்களுடைய முதல் சுவிசேஷப் பிரயாணத்தில் இணைத்துள்ளவன். அப்.12:25; 13:5.
பவுலை விட்டு சிறிது காலமே பிரிந்து போனவன் அப் 13:13; 15:37-39.
பின்னர் அவனுடைய தோழமைக்குத் திரும்பக் கொண்டு வரப்பட்டவன். 2தீமோத் 4:11.
புராதன பாரம்பரியம் மாற்குவை பேதுருவின் சகநண்பனாக சான்றளிக்கிறது. பழங்காலத்து ஆசிரியர்கள் சிலரால் பேதுருவின் சுவிசேஷம் என்றழைக்கப்படுகிறது.
இந்த புத்தகத்தில் காணப்படும் அநேகமான விஷயங்களை பேதுரு கொடுத்திருக்கலாம் அல்லது தெரிவித்திருக்கலாம் என்று பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகிறது.

**யாருக்காக எழுதப்பட்டது?** : இந்த புத்தகத்தை தயாரிக்கும் பொழுது இதனை ஆக்கியோன் புறஜாதிக் கிறிஸ்தவர்களை மனதில் நினைத்திருக்கலாம் என்று எண்ணப்படுகிறது. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் சிலவற்றை மட்டும் பெற்றிருப்பதால், இது யூதமதத்தைச் சேர்ந்த வாசிப்பவர்களுக்கு விசேஷமாக ஏற்றதாக ஆக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. மேலும் அதிகமாக யூதவார்த்தைகளுக்கும், பாரம்பரியத்துக்கும் கொடுக்கப்படும் விளக்கமானது, அதனை எழுதினவர் இதை எழுதியபோது புறஜாதியினரையே மனதில் வைத்திருந்தார் என்பது கூட்டிக் காட்டப்படுவதாகும். பார்க்க : 3:17; 5:1; 7:1-4,11,34.

**முக்கியமான தலைப்புப் பொருள் :** கிறிஸ்து தேவனுக்கும் இயேசுவின் ஜீவியம் முழுவதுமே நற்செய்கைகள் நிறைந்ததாகப் படம் பிடித்துக் காட்டப்படுகிறது.

அவருடைய ஜெபநேரம் குறுக்கீடு செய்யப்பட்டது. 1:35-37. சில சமயங்களில் அவருக்கும் போஜனம் செய்ய நேரம் இருக்காது. 3:20. ஏனென்றால், அவர் என்றென்றும் உள்ள ஊழிய அழைப்புக்கு இடம் கொடுத்தார் அவருடைய நண்பர்கள் அவரை சமநிலையில்லாதவர் என்று கூறினார்கள் 3:21. அவர் இளைப்பாறும்படி வகை தேடியபொழுது அவர்பின் தொடர்ந்து வரப்பட்டார். 6:31-34.

**திறவுகோல் வார்த்தை :** "உடனடியான" "உடனே" என்பது புத்தகம் முழுவதிலும் திரும்பத் திரும்ப வருகிறது.

**குறிப்பிடப்படக்கூடிய அம்சங்கள்** : இது நான்கு சுவிசேஷங்களிலும் மிகவும் குறைந்த நீளமானது.

நடையின் போக்கு விஸ்தாரமாகவும், கண்ணுக்கு இனிமையும் ஆனது. இந்தப் புத்தகத்தில் காணப்படும் விஷயங்கள் மத்தேயு, லூக்கா புத்தகங்களிலுங் கூட காணப்படுகிறது. ஆனால் அவை சாதாரணமாக திரும்பத் திரும்பக் கூறுவதல்ல. ஏனென்றால் இந்த இரண்டு புத்தகங்களிலும் இல்லாத அநேக விவரங்கள் இதில் அடங்கியுள்ளது.

இந்த மாற்கு எழுதிய சுவிசேஷம் யோவான் எழுதியதைப் போலவே இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தைப் பற்றி பிரகடனத்துடன் ஆரம்பிக்கப்படுகிறது. ஆனால் யோவானைப் போல அல்லது இது அந்த கோட்பாட்டைக் குறித்து விரிவாகப் பேசுவதில்லை. இந்த புத்தகத்தைப் பற்றிய கவனமான படிப்பானது, என்னவென்றாலும், ஆக்கியோனுடைய நோக்கம் என்ற விஷயமானது இயேசுவுடைய ஆச்சரியமான கிரியைகளைவிட அவருடைய தெய்வீகத்தைச் சாட்சியாக அனுமதிக்க வேண்டும் என்றாகும்.

இந்த சுவிசேஷத்தில் எழுத்தாளனுடைய சொந்தமான தொடர்புகள் இதில் காணப்படுகின்றன. "காட்டு மிருகங்களின் நடுவிலே" 1:13; இடிமுழக்க மக்கள் என்று அர்த்தங்கொள்ளும் பொவர்னகேஸ் என்று பெயரிட்டார்" "இயேசு கோபம் அடைந்தார்" சீஷர்கள் ஆச்சரியப்பட்டார்கள் 6:51 ஜனங்கள் அவருடைய உபதேசத்தை விருப்பத்தோடே கேட்டார்கள். 12:37 என்று குறிப்பிடக் கூடியவை காணப்படுகிறது.

கிறிஸ்துவுடைய தெய்வீக வல்லமைக்கு அழுத்தம் கொடுத்து சொன்னாலும், எழுதியவர் அடிக்கடி அவருடைய மனுஷீக உணர்வுகளைக் குறிப்பிடுகிறார். "அவர் விசனப்பட்டு" 3:5. "அவர் நித்திரையாயிருந்தார்" 4:38. 'ஆச்சரியப்பட்டு' 6:6. 'பெருமூச்சுவிட்டு' 7:34; 8:12; 'அன்புகூர்ந்து' 10:21.

மத்தேயு பின் நோக்கித் திரும்பிப் பார்த்து படிக்கும் யூதர்களுக்காக அந்த தீர்க்கதரிசனங்களை பெரிதும் பயன்படுத்தி அதிலும் கர்த்தருடைய உபதேசங்களுக்காக அதிக இடமாகப் பக்கங்களை அதற்கென்று ஒதுக்கியுள்ளார். மாற்கு அதை மிகச்சுருக்கமானதாக்கி அந்தத் தீர்க்கதரிசனங்களைப் பற்றி ஒன்றும் கூறுவதற்கில்லாமல், அந்த உபதேசங்களை சுருக்கமான அறிக்கைகளாக அழுத்தத்தைக் கொடுக்கிறார்.

இந்த குறுகிய புத்தகத்தில் அறிக்கையாக பதிவு செய்யப்பட்டள்ள பத்தொன்பது அற்புதங்களும், கர்த்தருடைய அமானுஷ்யமான வல்லமையை எடுத்துக் காட்டுகிறதது.

எட்டு அற்புதங்கள் அவருக்கு நோயின் மேல் இருந்த வல்லமைய நிரூபிக்கிறது. 1:31,41; 2:3-12; 3:1-5; 5:25; 7:32; 8:23; 10:46.

ஐந்து அற்புதங்கள் அவருக்கு இயற்கையின் மேல் இருந்த வல்லமையைக் காட்டுகிறது. 4:39; 6:41,49; 8:8-9: 11:13-14.

நான்கு அற்புதங்கள் பிசாசுகளின் மேல் அவருக்கிருந்த அதிகாரத்தைக் காட்டுகிறது. 1:25; 5:1-13; 7:25-30; 9:26.

இரண்டு அற்புதங்கள் மரணத்தின் மேல் அவருக்கிருந்த வெற்றியைக் காட்டுகிறது. 5:42; 16:9.

**பாடச்சுருக்கம் :** இந்த புத்தகத்தை 6 பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

பகுதி **I** :

இங்கு அறிமுகமாகும் ஆரம்பத்திலுள்ள சம்பவங்கள் கிறிஸ்துவின் பொது ஊழியம் வரை நடத்துகிறது. 1:1-19.

இந்த முதல் அதிகாரத்தில் மாற்கு முன் ஏற்பாடின்றி தலைப்பு பொருளடக்கத்திற்குள் மூழ்கி விடுகிறார்.

மேலும் அவர் இயேசுவே தேவனுடைய குமாரன் என்ற பிரகடனத்துடன் திறக்கிறார். வசனம். 1. பின்னர் அவர் அவருடைய வேலைக்கு ஐந்து ஆயத்தமாக்குகிற படிகளோடு அதிகமாக வாசம் செய்கிறார்.

1. அவரது முன்னோடியின் வருகை. வ.2-8.
2. ஜலத்தினால் அவருடைய ஞானஸ்நானம். வ.9.
3. பரிசுத்த ஆவியானவரால் அதிகாரம் பெறுதல். வ. 10.
4. அவருடைய குமாரத்துவத்திற்கான தெய்வீக சான்று வ.11.
5. அவருடைய பிரதான சத்துருவுடன் அவருடைய போர். வ. 12-13.

பகுதி **II** : ஆதி ஆரம்ப கால கலிலேயா ஊழியம். 1:14 – 7:21.
மாற்கு ஆதி ஆரம்ப யூதேயாவின் ஊழியத்தை முற்றிலுமாக நீக்கிவிடுகிறார். யோவான். 2:13 - 4:2 ஐப் பார்க்கவும்.

பகுதி **III** : தீரு சீதோன் பகுதிகளில் சுற்றிப்பிரயாணம் 7:24-30.

பகுதி **IV** : கிறிஸ்துவுடைய போதனையும், ஊழியமும், வடக்கு கலிலேயாவில் 7:31 – 9:50.

பகுதி **V** : பெரியாவில் கடைசி ஊழியமும், எருசலேம் நோக்கி பிரயாணமும் 10:1-52.

பகுதி **VI** : பாடுபட்ட வாரத்தின் சம்பவங்கள் 11:1 - 16:8.

---

## லூக்கா எழுதின சுவிசேஷம்

**ஆக்கியோன்** : பிரியமான வைத்தியனாகிய லூக்கா.

கொலோ 4:14ஐ பார்க்க. மேலும் அப்போஸ்தலர் நடபடிக்கை புத்தகத்தின் ஆக்கியோனும் இவரே. இந்த இரண்டு புத்தகங்களும் ஒரே நபருக்கு எழுதப்பட்டவை.

லூக்கா பவுலுக்கு நெருங்கிய நண்பனும் பிரயாணத்தில் சகதோழனுமாய் இருந்தான். அவனுடைய தனிப்பட்ட குறியீடுகளில் அப்போஸ்தலனுடைய பிரயாணங்களாகப் பதிவு செய்யப்பட்டவை. இந்த நடபடிகள் புத்தகத்தில் அதன் ஆக்கியோன் பெயர் சொற்களை நாம், நமக்கு என்று மாற்றிக் கொண்டு தானும் கூட தானாகவே அங்கே அந்தக் காலங்களில் இருந்தார் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். அப் 16:10; 20:6; 27:1; 28:16.

அநேக அறிஞர்கள் லூக்காவின் சுவிசேஷத்தில் பவுலுடைய தத்துவ கோட்பாடுகளில் கொஞ்சமானவைகளைக் காண்கிறார்கள். இந்த சுவிசேஷம் எழுதப்பட்ட சரியான காலம் அறியப்படவில்லை. ஆனால் அது லூக்கா பவுலின் செல்வாக்கிற்கு கீழ் வந்த பிறகு எழுதப்பட்டிருந்தால், அந்த சொல்லப்படுகிற சம்பவத்திற்கு சிறிது நிறம் கொடுத்து பின்னவர் எழுதியிருப்பார் என்பது சாதாரணமான இயல்பான காரியமாகும்.

**யாருக்காக எழுதப்பட்டது** என்று தியோபிலுவுக்கு இவரைப்பற்றி விவர அடையாளம் தெரியவில்லை. இதைப் பற்றிய உட்பக்க சான்றானது, இந்தப் புத்தகம் விசேஷமாய் புற ஜாதியாருக்காக எழுதப்பட்டதென்று குறிப்பிடுகிறது. இந்த செய்தியானது, இதை எழுதியவர் யூதபாரம்பரியங்களை அதிக முயற்சியுடன் விளக்கம் செய்தார் என்றும் சில சமயங்களில் எபிரேயப் பெயர்களுக்குப் பதிலாக கிரேக்க பெயர்களைப் புகுத்தினார் என்பதிலிருந்து யூகித்துக் கொள்ளப்படுகிறது.

**நோக்கம்** : கண்கண்டவர்களின் சாட்சியின் பிரகாரம் கிறிஸ்துவுடைய ஜீவியத்திற்கு ஒழுங்கானதும், கோர்வையானதுமான சொல்கோர்வையைக் கொடுப்பதாற்காக. 1:1-4.

**திறவுகோல் வசனம்** :1:4.

### விசேஷமான குறிப்பிடக்கூய அம்சங்கள்

1. அது தேவனுடைய பொதுவான கிருபை பற்றிய சுவிசேஷம் ஆகும். 2:32; 3:6; 24:47.
2. இது மனுஷ குமாரனைப் பற்றிய சுவிசேஷம் ஆகும். ஏழைகளுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு, புறக்கணித்து தள்ளப்பட்டவர்களுக்காக இயேசுவி-ன் இரக்கமுள்ள மனப்பான்மையை வலியுறுத்துகிறது. அந்த ஏழையாக சீஷர்கள் 6:20; பாவியாகிய ஸ்திரீ 7:37; மகதலேனா

மரியாள் 8:2; சமாரியர்கள் 10:33; ஆயக்காரரும் பாவிகளும் 15:1; அந்த கைவிடப்பட்ட பிச்சைக்காரன் 16:20-21; குஷ்டரோகிகள் 17:12; மரித்துக் கொண்டிருக்கும் திருடன் 23:43 முதலியவர்கள்.

3. இது ஒரு தியானத்துக்குரிய சுவிசேஷம். அது குறிப்பாக ஜெபத்தை வலியுறுத்துகிறது.
   a. மற்ற சுவிசேஷங்களில் காணப்படாத ஜெபத்தைப் பற்றிய மூன்று உவமைகள். இதில் அடங்கியுள்ளன. நள்ளிரவில் சந்தித்த நண்பன் 11:5-8; அநீதியுள்ள நியாயாதிபதி 18:1-8; பரிசேயரும் ஆயக்காரனும் 18:9-14.
   b. இதில் இயேசுகிறிஸ்துவின் ஜெபம் அடங்கியுள்ளது. அவருடைய ஞானஸ்நானத்தின் போது 3:21; வனாந்திரத்தில் 5:16; அவருடைய சீஷரைத் தெரிந்தெடுக்கும் முன்னர் 6:12; மறுரூபமாகும்பொழுது 9:29; கர்த்தருடைய ஜெபத்தைக் கொடுப்பதற்கு முன்னர் 11:1; பேதுருவுக்காக 22:32; கெத்சமனே தோட்டத்தில் 22:44; சிலுவைமரத்தின் மேல் 23:46 முதலியன.
4. அதன் ஆரம்ப அதிகாரங்களில் மகிழ்ச்சியும், துதியும் குறிப்பாகக் காணப்படுகின்றன.
   மிகச் சிறந்த கிறிஸ்தவ ஞானப்பட்டுகள் இந்த சுவிசேஷத்தில் இருந்தே எடுக்கப்பட்டுள்ளன. “ஆவே மரியா” மரியாளுக்கு தேவதூதனுடைய வார்த்தைகள் 1:28-33; மரியாளின் பாட்டு 1:46-55; “சகரியாவின் ஆசீர்வாதம்” 1:68-79; “இராக்காலம் பெத்லகேம் மேய்ப்பர்கள்” 2:13-14. சிமியோனின் பாட்டு 2:29-32.
5. இது பெண்மையை உயர்வாகப் போற்றுகிறது. லூக்காவின் கதையுரைத்தலில் பெண்கள் மிகவும் முக்கியமாகக் காட்சி அளிக்கிறார்கள். அதிகாரம் ஒன்று மரியாள் எலிசபெத்; மரியாளும் அவளுடைய சகோதிரியான மார்த்தாளும் 10ம் அதிகாரத்தில்; எருசலேமின் குமாரத்திகள் 23:27; மேலும் பல விதவைகளும் குறிப்பிடப்படுகிறார்கள். 2:37; 4:26; 7:12; 18:3; 21:2.
6. கிறிஸ்துவின் வரலாறு பற்றிய சரிதை அதிகமாக முடிவுற்றதாக மற்றெல்லா விசேஷங்களைவிட மற்ற இரண்டையும் காட்டிலும் லூக்காவில் சரியாகக் காணப்படுகிறது. இந்த புத்தகத்தில் உள்ள ஒரு பாதியான விஷயங்கள் மற்றவைகளில் காணக்கிடைக்கவில்லை. நமது கர்த்தருடைய மிகவும் முக்கியமான வாய்வழி மெய்யுரைகளும் குறிப்பிடக் கூடிய அவருடைய வாழ்க்கைச் சம்பவங்களும் இதில் எழுதி பதிவு செய்யப்பட்டுள்ளன.
   உதாரணம் : அற்புதமாக மீன்கள் பிடிக்கப்பட்டது 5:6; விதவையின் மகனை உயிரோடு எழுப்பியது 7:11-15; பத்து குஷ்டரோகிகள் 17:12; மல்குஸ் சொஸ்தப்படுத்தப்பட்டது 22:51.
   மற்ற சம்பவங்களும், மெய்யுரைகளும் லூக்காவால் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளன. கிறிஸ்து எருசலேமுக்காக அழுதது 19:41; மறுரூப மலையில் மோசே எலியாவுடன் உரையாடல் 9:30-31; இரத்த வேர்வைத்துளிகள் 22:44; ஏரோதுவுக்கு முன் இயேசு 23:28; மனந்திரும்பிய திருடன் 23:40 எம்மாவுக்கு நடந்து போகுதல் 24:13-31.

### பாடச் சுருக்கம்

1. முகவுரை 1:1-4. இயேசுவின் ஜனனமும் அவரது ஞானஸ்நானம் பெறுதல், சோதிக்கப்படுதல் ஆகிய அவருடைய ஆரம்ப ஜீவிய காலத்து சம்பவங்கள் வரைக்கும் 1:5 – 4:13.
2. கலிலேயாவில் விசேஷமான அவரது பொது ஊழியம் ஆரம்பமாகுதல் 4:4 – 9:50.
3. எருசலேம் நோக்கி பிரயாணம் சமாரியா, பெரியா மார்க்கமாக, முக்கியமாக பெரியாவில் ஊழியம். 9:51 – 19:28.
4. அவரது இறுதி நாட்கள் பாடுபடும் வாரம் உள்ளடக்கமாக சம்பவங்களும் சிலுவையில் அறையப்படுதலும். 19:29 – 23:55.
5. உயிர்தெழுதல் சம்பந்தப்பட்ட சம்பவங்களும் பரமேறுதலும் 24:1-51.

---

## யோவான் எழுதிய சுவிசேஷம்

**ஆக்கியோன்** : அப்போஸ்தலனாகிய யோவான்.

**காலம்** : நிச்சயமில்லை. ஒருகால் முதலாம் நூற்றாண்டின் பிந்திய காலம்.

**முக்கியமான நோக்கம்** : கிறிஸ்து இயேசுவுக்குள் தேவகுமாரனாக விசுவாசம் தூண்ட எழுப்பப்படவும்.

**திறவுகோல் வசனம்** :20:31.

## குறிப்பிடக்கூடிய அம்சங்கள்

1. வேதாகமத்திலே மிகவும் ஆழமானதும், அதிகமாக ஆவிக்குரிய புத்தகமாக அநேகரால் பாரட்டப்படுகிறது.
2. இதற்குள் கிறிஸ்து அவரைப் பற்றிய முற்றிலும் அதிகமான வெளிப்பாட்டை தம்மைப் பற்றியும், தேவனைப் பற்றியும் எந்த விதமான சுருக்கமான சுவிசேஷத்தையும் விட அதிகமாக வெளிப்பாட்டைக் கொடுக்கிறது.
   a. அவருடைய ஆள்தன்மை பற்றியும் பண்பியல்புகளும் “நான் கிறிஸ்துவாய் இருக்கிறேன்” என்பதைப் பார்க்கவும்.
   b. அவரது தெய்வீகம் பற்றி 1:1; 10:30-38; 12:45; 14:7-9; 16:15.
   c. பரிசுத்த ஆவியானவரது கிரியை பற்றி
   d. அவருடைய தெய்வீகத்திட்ட ஆணைப்பற்றி – உதாரணமாக 5ம் அதிகாரத்தில் “நான் தேவனால் அனுப்பப்பட்டேன்” என்று பிரகடனம் செய்கிறார். தொடர்ந்து ஆறு தடவையாக அவ்வாறு கூறுகிறார். 23,24,30,36,37,38 வசனங்களில்.
   e. தேவனாகிய பிதாவைப்பற்றி – கிறிஸ்து தேவனை பிதா என்று நூறுக்கு மேலாக பலதடவை கூறுகிறார். தேவன் ஆவிக்குரிய பிதா ஆவார். 4:23; அவர்தான் ஜீவனை அளிக்கும் பிதா 5:21; செய்தியானது பிதாவுடையது 7:16; பிதா எல்லாவற்றிற்கும் மேலானவர் 10:29; அனைத்தும் பிதாவின் கிரியைகள் 14:10; நமக்குள் வசிக்கும் பிதா நல்லவர் 14:23; அவர் நித்திய பிதா 17:5; அவர் பரிசுத்த பிதா 17:11; நீதியின் பிதா 17:23 முதலியன.
3. ஒருவேளை மிகவும் குறிப்பிடத்தக்க இந்த சுவிசேஷத்தைப் பற்றிய விஷயம் என்னவென்றால், இந்த புத்தகத்தில் பாதிக்கு அதிகமான பக்கங்கள் (அதாவது அந்த புத்தகத்தின் மொத்த இடத்திலே) கிறிஸ்துவின் ஜீவயத்திலே அவருடைய கடைசி நாட்களில் நடந்த சம்பவங்களும், அவருடைய போதனைகளுக்குமே கொடுக்கப்பட்டிருக்கிறது.
4. யோவான் எழுதிய புத்தகத்திலே காணக்கூடிய உபதேச சொற்பொழிவுகளும் உரையாடல்களிலும் உள்ளவை : நிக்கொதேமு உடன் சம்பாஷனை 3:1-21; சமாரிய ஸ்திரீயுடன் 4:1-26; கூடார பண்டிகையின் போது யூதர்களுக்கு உபதேசம் 7:14-39; 8:3-58; நல்ல மேய்ப்பன் உவமை அதி 10; சீஷர்களுக்குக் கொடுக்கப்பட்ட வரிசையான தனிப்பட்ட போதனைகள். அவருடைய ஆறுதலான வார்த்தைகளும் மன்றாட்டு ஜெபமும் அதி 14:17; கலிலேயா கடல் கரையில் சீஷர்களுடன் சந்திப்பு அதி 21 முதலியன.
5. யோவான் கிறிஸ்துவின் எட்டு அற்புதங்களை எழுதியிருக்கிறார். (அவரது சொந்த உயிர்த்தெழுதலையும் சேர்த்து) அவருடைய தெய்வீகத்தை மெய்ப்பிக்கிறது. இவற்றில் ஆறு அற்புதங்கள் மட்டுமே இந்த சுவிசேஷத்தில் மாத்திரமே குறிக்கப்பட்டுள்ளன. தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றியது 2:1-11; அதிகாரியின் மகளை சொஸ்தமாக்கியது 4:46-54; குளத்தண்டை இருந்த மனிதனைக் குணப்படுத்தியது. 5:1-9; பிறவியில் கண்தெரியாதவன் 9:1-7; லாசருவை உயிரோடு எழுப்பியது அதி 11; இரண்டாவது தடவையாக மீன் பிடித்தது. 21:1-6.
6. இந்தப் புத்தகம் முழுவதிலுமே இரண்டு மிகப் பெரிய எண்ணமான நீரோட்டங்கள் பிரவாகித்து ஓடுகிறது. அவை பின்பற்றுவதற்கு பயன்படக்கூடியவை.
   a. விசுவாசம் 3:16-18; 5:24; 6:29,40; 7:38; 8:24; 10:37-38; 11:25-27; 12:46; 14:12.
   b. நித்திய ஜீவன் 3:15,16,36; 4:14; 5:24; 6:27,51; 11:26; 12:50; 17:3; 20:31.

**பாடச்சுருக்கம்** : இந்தப் புத்தகத்தை 5 பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. முன்னுரை : ஆதித் திருவார்த்தை மனித அவதாரம் எடுத்தது 1:1-18.
2. இந்த உலகத்திற்குக் கிறிஸ்துவின் தெய்வீக வெளிப்பாடு ஆறு வித சாட்சியால் உடன் வந்தது. அதாவது யோவான் ஸ்நானகனுடையது பரிசுத்த ஆவியானவரால் சாட்சி, அவரது சீஷர்கள் சாட்சி, அவரது வல்லமையான கிரியைகளின் சாட்சி, பிதாவினுடைய சாட்சி வேதத்தினால் கொடுக்கப்படும் சாட்சி 1:19 – 12:50.
3. சீஷர்களுக்கென்று தனிப்பட்ட வெளிப்பாடும் போதனையும். அதி 13-17.
4. தாழ்த்தப்படுதலும் மரணத்தின் மேல் ஜெயமும் 13-17.
5. பின்னுரை 21:1-23.

## அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகம்

**எழுதியவர்** : பிரியமான வைத்தியனாகிய லூக்கா. இந்தப் புத்தகம் ஒரு கருத்தின் போக்கில் லூக்கா சுவிசேஷத்திற்கு பின்தொடர்ச்சியாக அதே நபரான தேயோப்பிலுக்கு எழுதப்பட்டது.

**முக்கியமான பொருள் தலைப்பு** : ஆதித்திருச்சபையின் வளர்ச்சியின் வரலாறு கிறிஸ்து பரத்துக்கேறியதிலிருந்து பவுல் ரோமாபுரியில் காவலில் வைக்கப்பட்டு அங்கு ஊழியம் தொடங்கப்பட்ட காலம் வரைக்கும் அநேக வேதாகமத்தை படிக்கும் மாணவர்கள் இந்த புத்தகத்தை பரிசுத்த ஆவியானவருடைய சாதாரணமான ஆரம்ப காலமாகவே பார்க்கிறார்கள். பரத்துக்கு ஏறி பிரிந்து சென்ற கிறிஸ்து அகில உலக சுவிசேஷ பிரச்சாரத்துக்கான திட்டத்தை பரிசுத்த ஆவியின் வல்லமையின் கீழ் மனிதனுடைய வழியாக நிறைவேற்றுவதற்காக அதை பிரகடனமாக அறிவிப்பு செய்தார். 1:8.

**இந்த புத்தகம் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம்**. உள்நாட்டு பிரபல்ய குழுக்கள் வெளிநாட்டு பிரபல்ய குழுக்கள் ஆகும்.

**I. உள்நாட்டு பிரச்சாரக்குழுக்கள் எருசலேமை மையமாகக் கொண்டது.**

**1. ஆயத்தப்படுத்தும் சம்பவங்கள்**

a. தெய்வீகத் திட்டத்து ஆணை. 1:4-8.
b. பரமேறும் கர்த்தர். 1:10-11.
c. கீழே இறங்கிவரும் (பரிசுத்த) ஆவி 2:1-4.
d. ஊழியர்கள் ஆயுதங்கள். 2:4; 4:31.

**2. ஊழியங்கள்**

a. பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவுடையது. 2:14-40, பேதுருவின் இரண்டாவது பிரசங்கம். 3:12-26.
b. ஸ்தேவானுடையது. 7:1-60.
c. பிலிப்பும், பேதுருவும் 8:5-25.
d. பிலிப்பு உடையது. 8:26-40.

3. **திருச்சபை சம்பந்தப்பட்ட விஷயங்கள்**

a. அதன் வளர்ச்சி பற்றி.
b. பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல். 4:31.
c. ஒற்றுமையும், உதாரத்துவமும் 4:32-37.
d. ஆவியின் வல்லமையினால் 5:12-16.
e. கண்காணிகளை நியமித்தல். 6:1-6.

4. **திருச்சபையைத் துன்பப்படுத்துதல்** 4:1-3, 17-22; 5:17-18,40; 6:8-15; தர்சு பட்டணத்து சவுலின் கீழ் துன்பப்படுத்துதல்.

**II. வெளிநாட்டு பிரச்சார குழுக்கள் ஆணை :**

இந்த நடவடிக்கைகளுக்கு எருசலேமை மத்தியஸ்தலமாகக் கொண்டு ஆரம்பம், பின்னர் சீரியாவிலுள்ள அந்தியோகியாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

**1. அகில உலக பிரச்சார குழு ஆணைக்கு நடத்திச் சென்ற ஆரம்ப சம்பவங்கள்.**

a. சமாரியாவில் பிலிப்புவின் ஊழியம் பேதுரு யோவானோடு இணைந்து. 8:5-25.
b. பவுலுடைய மனமாற்றம் அவன் பின்னர் மகாபெரிய சுவிசேஷ பிரச்சாரகாரனாகவும், அக்காலத்து திருச்சபையில் தலைமையானவனாகவும் விளங்கியவன். 9:1-30.
c. பேதுருவுக்கு அவனுக்கு யோப்பா பட்டணத்தில் கிடைத்த தரிசனத்தால் அவனது பார்வையின் போக்கு விரிவடைந்து அதன் பயனாக அவனுடைய ஊழியம் செசரியாவில் உள்ள புறஜாதியார் மத்தியில் உண்டாக்கப்பட்டது. 10:1-43.
d. பரிசுத்த ஆவி செசரியாவில் உள்ள புறஜாதியார் மத்தியில் வருஷித்து ஊற்றப்பட்டது. அங்கே பேதுருவின் ஊழியம் செய்வது விளக்கம் பெற்றது. 10:44 – 11:18.

e. அந்தியோகியாவில் ஊழியம் பர்னபாவால் அனுமதி பெற்றது. எருசலேம் திருச்சபையில் பிரதிநிதியாக 11:22-24.

f. பவுலை தர்சு பட்டணத்திலிருந்து அந்தியோகியாவுக்கு பர்னபாவினால் கொண்டுவரப்பட்டது. இந்த இரு மனிதர்களில் கூட்டுறவினால் அந்த இடத்தில் திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டு அந்த இடத்து சீஷர்கள் முதன் முதலாகக் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். 11:25-26.

g. கருத்து பிறழா சொற்றொடர் வாக்கியம். ஏரோதுவால் எருசலேமிலுள்ள சபை துன்புறுத்தப்பட்டது. யாக்கோபு உடைய மரணமும் சிறைபடுதலும், விடுதலையும் பேதுருவின் 12:1-9.

2. **அயல்நாட்டு பிரச்சாரக்குழு** ஆணையின் வரலாற்றில் சகாப்தத்து சம்பங்கள் பரிசுத்த ஆவியின் நடத்துதலால் பவுலும், பர்னபாவும் சுவிசேஷ பிரச்சாரகர்களாக அந்தியோகியாவில் உள்ள சபையால் அனுப்பப்படுதல். யோவான் மாற்கு அவர்களுடன் சென்றான். 13:1-5.

3. **பவுலுடைய முதலாவது சுவிசேஷ பிரச்சார பயணம்**

சுவிசேஷ பிரச்சாரகாரர்களாக பவுல், பர்னபா, யோவான் மாற்கு என்பவரும் 13:4-14:26. அவர்கள் போய் பார்த்த இடங்களும் முக்கியமான சம்பவங்களும்,

- சீப்புரு தீவில் அதிபதி மனமாற்றம் அடைந்து, சவுலுடைய பெயர் பவுல் என்று பதிவு தாஸ்தாவேஜுகளில் மாற்றப்பட்டது. 13:4-12.
- பம்பிலியாவில் உள்ள பெர்கமு என்ற இடத்தில் யோவான், மாற்கு அவர்களை விட்டு பிரிந்து சென்றான். 13:13.
- பிஸிதியாவிலுள்ள அந்தியோகியா ஜெப ஆலயத்தில் பவுலுடைய மகத்தான பிரசங்கம் 13:14-41.
- யூதர்களால் எதிர்ப்பும் புறஜாதியார் மத்தியில் ஊழியமும் 13:44-49.
- யூதர்களால் நகரத்திலிருந்து தூரத்தப்பட்டார்கள் சுவிசேஷ பிரச்சாரகர்கள் கோனியம் என்ற இடத்திற்கும் போனார்கள். அங்கே சிலகாலம் தங்கி ஊழியம் செய்தனர். துன்புறுத்துதல் தொடங்கியதும் லிஸ்தீராவுக்கும் தெர்பைக்கும் தப்பி ஓடினார்கள். 14:6.
- லிஸ்தீராவில் கால் முடமான மனிதனை குணமாக்கியதன் விளைவாக ஜனங்கள் பவுலையும் பர்னபாவையும் வணங்க முயற்சி செய்தார்கள். ஆனால் யூதர்கள் எதிர்ப்புத் தெரிவித்து கிளர்ச்சி செய்தார்கள். பவுல் மீது கல்லெறியப்பட்டது.
- எதிர்ப்புக்கு பயப்படாமல் இந்த இரண்டு வீரகதா பாத்திரங்களும் தெர்பைக்குத் தப்பி ஓடினார்கள். அங்கே அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து பலருக்குப் போதனை செய்தார்கள். 14:8-20.
- இந்த குறிப்பிட்ட மையத்தில் இருந்து சுவிசேஷப் பிரச்சாரகர்கள் தாங்கள் வந்த வழியிலே திரும்பி வந்து இடங்களைத் திரும்பப் போய் சந்தித்து சபைகளை ஒழுங்குபடுத்தி சீரியாவில் உள்ள அந்தியோகியாவுக்குத் திரும்பி வந்தார்கள். தங்களது, பிரயாணத்தைப் பற்றி அறிக்கையும் செய்தார்கள். 14:21-28.

4. **எருசலேமிலுள்ள ஆலோசனை சங்கம்**

a. அந்த விவாதம் 15:5-6.

b. கிறிஸ்தவ சுதந்திரத்துக்கு ஆதாரமாக பேதுருவின் தர்க்க வாதம் 15:7-11.

c. பவுலும், பர்னபாவும் தங்கள் அனுபவங்களை எடுத்துக் கூறினார்கள். 5:12.

d. யாக்கோபுடைய சொற்பொழிவும், ஆலோசனை சங்கமும் புறஜாதியாருக்குச் சாதகமாக அவர்களுக்கு சடங்காரசாரமான பிரமாணங்களிலிருந்து விதிவிலக்கு அளிக்கும்படிக்கு தீர்மானித்தது. 15:13-29. யூதாவும், சீலாவும் அந்தியோகியாவுக்கு அனுப்பி அவர்கள் மூலமாக அங்குள்ள சபைக்கு ஆலோசனை சங்கத்தின் நிரூபத்தை அவர்களுக்கு அனுப்பினார்கள். 15:27-30.

5. **பவுலுடைய இரண்டாவது சுவிசேஷ பிரச்சார பயணம்.** 15:26 – 18:22.

a. முன்னோடியான சம்பவங்கள் :

யோவான் மாற்குவைக் குறித்து பவுலுக்கும் பர்னபாவுக்கும் இடையே கடுங்கோபம் மூண்டபடியால் சீலாவை பவுல் தெரிந்து கொண்டு பிரயாணத்தில் கூட்டிக் கொண்டு போனான். 15:36-40.

b. போய் பார்த்த இடங்களும் குறிப்பிடத்தக்க சம்பவங்களும் :

- சீரியா, சிலிஸியா சபைகளைச் சந்தித்தல் 15:41 லிஸ்திராவில் தீமோத்தேயு சுவிசேஷ பிரசாரகர்களோடு சேர்ந்து கொண்டான். சின்ன ஆசியாவிலுள்ள பல பட்டணங்களுக்கும் போய் சந்தித்து அங்குள்ள சபைகளை பலப்படுத்தினார்கள். 15:41 – 16:5.
- ஆவியானவரால் துரோவாவுக்கு வழி நடத்தப்பட்டு அங்கு ஒரு தரிசனத்தால் ஐரோப்பாவுக்கு வருமாறு மக்கதோனியா தரிசனத்தால் அழைக்கப்பட்டார்கள். 16:7-10.
- பிலிப்பி பட்டணத்தில் பவுலும், சீலாவும் காவலில் வைக்கப்பட்டார்கள். சிறைச்சலைக்காரன் இரட்சிக்கப்பட்டான். 16:12-34 அங்கே திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டது.
- அடுத்த முக்கியமான சம்பவம் தெசலோனிக்காவில் திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டது. அங்கே துன்பப்படுத்துதல் ஆரம்பித்ததால் பெரோயாவுக்கு போகப் புறப்பட்டார்கள். 17:1-10; இங்கே அந்த சுவிசேஷக பிரச்சாரகர்கள் தேவவார்த்தைக்கான விசுவாசமுள்ள மாணவர்களைக் கண்டு பிடித்தார்கள். அவர்கள் ஆயத்தமிக்க விசுவாசிகள் ஆனார்கள். 17:11-12.
- மறுபடியும் துன்பப்படுத்தும் புயல் ஆரம்பமானது. பவுல் அங்கிருந்து அத்தேனே பட்டணத்திற்கு சீலாவையும், தீமோத்தேயுவையும் அதே இடத்தில் விட்டுவிட்டுப்போனான். அங்கு சபையை ஸ்தாபிக்கும் படியாக. 17:13-15.

அத்தேனே பட்டணத்தில் அந்த நகரம் விக்கிரங்களால் நிரம்பியிருப்பதைக் கண்டான். மார்ஸ் மேடையின் மேல் நின்று பிரசங்கம் செய்தான். ஆனால் அங்கு ஒரு சிலரையே விசுவாசத்திற்குள் மனம்மாறி வரச்செய்தான். 17:15-34.

- கொரிந்து பட்டணத்தில் பவுல் வெகு சீக்கிரமாக சீலாவாலும் தீமோத்தேயுவாலும் சேர்த்துக் கொள்ளப்பட்டான். திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டது. அங்கே ஊழியமானது, பதினெட்டு மாதங்கள் தொடர்ந்து செய்யப்பட்டது. அங்கே துன்புறுத்தல் மத்தியிலும் ஊழியம் தொடர்ந்தது. 18:1-17.
- சிறிது காலம் கழித்து பவுல் சகோதரர்களிடம் பிரிவுபசார விடை பெற்றுக் கொண்டு சீரியாவுக்கு கப்பல் ஏறினான். இடையில் எபேசுவில் சிறிது தங்கிவிட்டு அந்தியோகியாவில் தன் பிரயாணத்தை முடித்துக் கொண்டான். 18:18-22.

6. **பவுலுடைய மூன்றாவது சுவிசேஷ பிரச்சார பயணம்** 18:23-21:15. சென்று பார்த்த இடங்களும் முக்கியமான சம்பவங்களும்.
   - கலாத்தியா பிரிஜியாவிலுள்ள சபைகளைச் சந்தித்தல் 18:23 கருத்துப் பிறழா சொற்றொடர் வாக்கியம் எபேசுவில் அப்பொல்லோ 18:24-28.
   - பவுல் எபேசுவுக்குத் திரும்பி வந்து நன்கு முற்றிலும் பூரணமாக போதனை பெறாத சீஷர் கூட்டத்தைக் கண்டுபிடித்து அவர்களை பெரிதான ஆவிக்குள்ளான ஜீவியத்திற்குள் நடத்தினான். 19:1-7.
   - எபேசுவில் மேலும் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து ஊழியத்தை நடத்தினான். 19:8-10. கர்த்தர் பவுலின் மேல் சொஸ்தமாக்கும் வரத்தை அருளிச் செய்து அந்த ஊழியத்தின் ஒப்புக் கொள்ளுதலை அவ்வாறு காண்பித்தார். 19:11-12. பாவிகள் மனதிலே குத்துண்டவர்களாய் தங்களுடைய தீங்குள்ள புத்தகங்களை எரித்தார்கள்.
   - அங்கு சிற்பாசாரிகளுக்குள் கலகம் உண்டாயிற்று பவுலுடைய போதனையால் தங்களுடைய விக்கிரகம் செய்யும் தொழில் அழிந்து விடுமோ என்று பயப்பட்டார்கள். 19:23-41.
   - பவுல் எபேசுவை விட்டு புறப்பட்டு பின்பு மக்கதோனியாவில் உள்ள சபைகளை சந்தித்துவிட்டு கிரேக்க நாட்டுக்குத் திரும்பி வந்தான். 20:1-2. கிரேக்க நாட்டில் மூன்று மாதங்கள் தங்கிவிட்டு திரும்பவும் மக்கதோனியாவுக்கு திரும்பி வந்து பிறகு துரோவாவுக்கு வந்து பிரசங்கித்தான். 20:3-12.
   - பின்பு துரோவாவிலிருந்து மெலித்தாவுக்கு வந்து எபேசுவிலுள்ள மூப்பர்களை அழைத்தனுப்பினான்.
   - மெலித்தாவில் மூப்பர்களுக்கு பிரியாவிடை உபசாரம் பெற்றுக் கொண்டான். 20:17-38.
   - மெலித்தாவிலிருந்து பவுல் எருசலேமுக்குப் போகப்புறப்பட்டான். ஆனால் ஆவியானவரால் அவனுக்கு வரவிருக்கும் பாடுகளைக் குறித்து எச்சரிக்கப்பட்டான். 21:1-17.

7. **எருசலேமிலும் செசரியாவிலும் பவுல்**
   a. புறஜாதிகளுக்குள்ளே அவன் செய்த ஊழியத்தைப் பற்றிய அனுபவங்களை சபைக்கு விவரித்துச் சொன்னான். 21:18-20.
   b. சந்தேகத்தை அமைதிபடுத்த பவுல் ஒரு யூத பிரதிக்கினையை எடுத்துக் கொள்ளுமாறு அவசரப்படுத்தப்பட்டான். பவுல் அதையும் நிறைவேற்றினான். 21:20-26.
   c. ஆலயத்தில் யூத பகைவர்களால் முற்றுகையிடப்பட்டு பின் ரோம போர் வீரர்களால் விடுவிக்கப்பட்டான். 21:27-40.
   d. அந்த கூட்டத்திற்கு முன்பாக தன்னைப் பாதுகாத்துக் கொண்டது. 22:1-21.
   e. சவுக்கால் அடிக்கப்படுவதிலிருந்து தப்பித்துக் கொள்ள பவுல் தன்னுடைய ரோமப் பிரஜா உரிமையைக் கொண்டாடுகிறான். 22:25-30.
   f. சனகெரீப் சங்கத்துக்கு முன் அவன் ஆஜராகுதல் 23:1-10.
   g. கர்த்தர் அவனுக்கு தரிசனத்திலே தோன்றி தைரியம் கொடுக்கும் செய்தியைத் தருகிறார். 23:11.
   h. அவனைக் கொலை செய்யும் படியான யூதருடைய சதியாலோசனை அவனை செசரியாவுக்கு போகும்படியாக நடத்துகிறது. 23:12-33.
   i. அவனுக்கு விரோதமாக யூதரால் கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டும் தேசாதிபதி பெலிக்ஸ்க்கு முன்பாகத் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதும். 24:1-21.
   j. பெலிக்ஸுக்கு முன்பாக கிறிஸ்துவுக்குள் அவனுக்கிருக்கும் விசுவாசத்தைப் பற்றியதோர் சொற்பொழிவு 24:24-26.
   k. பெஸ்துவுக்கு முன் தன்னைக் காத்துக் கொள்ளுதலும் இராயனுக்கு அபயமிடுதலும் 25:1-12.
   l. அகரிப்பாவுக்கு முன்னர் அவனுடைய பேச்சு 26:1-29.

8. **சிறைக்காவல் கைதியாக ரோமாபுரிக்கு பவுலின் பிரயாணம்**. 27:1-28:16.
   a. கடற்பிரயாணத்தில் முதல் கட்டம் 27:2-13.
   b. புயலும், பவுலுடைய ஆவிக்குரிய பலமும். 27:38-44.
   c. கப்பல் சேதமும் தரைக்குத் தப்புதலும். 27:38-44.
   d. மெலித்தா தீவில் அவனுடைய அனுபவங்கள் 28:1-10.
   e. பவுல் ரோமபுரிக்கு வந்து சேர்வதும் அங்கு அவனுடைய ஊழியமும். 28:16-31.

---

## ரோமருக்கு எழுதிய நிருபம்

**ஆக்கியோன்** - அப்போஸ்தலனாகிய பவுல்.

**யாருக்கு எழுதப்பட்டது. –** ரோமாபுரி கிறிஸ்தவர்களுக்கு 1:7.

**திறவுகோல் வசனம்** : 1:16; 5:1.
இந்த நிரூபம் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம்.
பகுதி. 1. தத்துவ போதனைகள் அதி 1-11.
பகுதி 2. நடைமுறைக்குரியது. அதி 12-16

**பொருள் தலைப்பு** :
பகுதி 1. இரட்சிப்பின் திட்டம். விசுவாசத்தினால் நீதியாகுதல் பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாகுதல்.
பகுதி 2. முக்கியமாக கிறிஸ்தவக் கடமைகளைக் குறித்த உபதேசங்கள்.

**ஒரு நிபுணத்துவமான விவாதம்** : பகுதி 1 ல் அப்போஸ்தலன் மனித சமுதாயம் முழுவதுமே ஏறித்தாண்ட முடியாத மூன்று சுவர்களால் சூழப்பட்டிருப்பதாக மேற்கொண்டு நிரூபிக்க முயலுகிறான்.
1. பொதுவான குற்றவுணர்வான சுவர். 1-3.
2. பாவமான போக்குகளாலும் மாம்சீக இச்சைகளால் ஆன சுவர். 7:15-24.
3. தேவனுடைய சர்வவல்லமையான தேர்தலாகிய சுவர். 9:7-18.

இயற்கையான மனிதனுடைய பயங்கரமான நிலைமையைக் காட்டுகிற விவாதத்தின் மத்தியில் அவன் குறிப்பிட்டுக் காட்டுகிறதாவது, தெய்வீக இரக்கத்தின் கதவுகள் இரட்சண்ய திட்டத்தல் வழிவகை செய்யப்பட்டு இருப்பதால் அதன்படி சகல மனிதரும் வரப்போகும் தேவனுடைய நியாயத்தீர்ப்பை அவர்களுக்கு விருப்பமானால் அந்த வழியாகத் தப்பித்துக் கொள்ளக் கூடும் என்று சொல்லுகிறான். தெய்வீக இரக்கத்தின் வாசற்கதவுகள் மனித குலத்திற்காக பிரிக்கும் சுவர்களின் வழியாகக் காணக்கூடியதாகவும். 1. பொதுவான சந்தர்ப்பங்கள் ரோமர் 10:13; 2. வார்த்தையும் ஆவியும் திரும்பவும் ஜெநிப்பிக்கப்படுதல் ரோமர் 8:1-4; 3. விசுவாசத்தினால் நீதியாகுதல் ரோமர் 5:1.

**திறவுகோல் சங்கிலி** : எண்ண நீரோட்டத்தைக் காட்டுவதாக 1:16; 3:22-23,28; 4:3; 5:1,18; 9:31-32; 10:3-4,6-9.

**பாடச்சுருக்கம்**

**பிரிவு 1. இரட்சண்யத்தின் திட்டம்**

1. இதன் தேவை : மனிதகுலம் பொதுவான குற்றவுணர்வால் தரையில் ஊன்றி நிற்பதால்.
   a. புறஜாதியான உலகத்திற்கு 1:18-2:7.
   b. அதுபோலவே யூதர்களும், நியாயப்பிரமாணத்தின் கண்டனத்திற்குக் கீழே 2:8 – 3:20.
   c. சகல பாவிகளும் 3:23.
2. நீதியாகுதலின் ஒழுங்குமுறை அல்லது விசுவாசத்தால் நீதியாகுதல் 3:21-28.
   ய. பொதுவான 3:29-30.
   டி. பிரமாணத்தைக் கனப்படுத்த 3:31.
3. ஆபிரகாம் வாழ்க்கையில் எடுத்துக்காட்டியபடி அதி 4.
   ய. கிரியைகளுக்கு அப்பால் 1-6.
   டி. கற்பனைகளுக்கு அப்பால் 9:12.
   உ. நியாயப்பிரமாணத்திற்கும் அப்பால் 13:25.
4. ஆசீர்வாதங்கள் கிருபாதார பலியான கிறிஸ்துவின் மரணத்தினால் வெளிப்படுத்தப்பட்ட படியே தேவனுடைய அன்பின் மூலமாக செயலூக்கமாக ஆக்கப்பட்டது. 5:1-11.
5. இலவசமான இரட்சிப்பாகிய ஈவின் விஸ்தாரம் விளக்கம் செய்யப்படுகிறது. 5:12-21.
6. இந்த பாவத்தில் நிலைத்து நீடிப்பதை உற்சாகப்படுத்தாது. மனிதனுடைய கேடுபாடுள்ள நிலைமையை சிலுவையில் அறையப்படும்படி வேண்டுகோள் விடுத்து தேவனுக்கு பரிசுத்தமான ஊழியம் செய்யும் ஜீவியம் செய்யும் படியாக. 6:1-23.
7. ஏழாம் அதிகாரத்தில் பவுல் வெளிப்படையாகவே பாவமான போக்குகளுக்கும் மாம்சீகமான இச்சைகளுக்கும் இடையே நடக்கும் போராட்டத்தைப்பற்றி பேசுகிறான். அவன் தன்னுடைய மனமாற்றத்திற்கு முன்னரோ அல்லது பின்னரோவுள்ள அவனுடைய அனுபவங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறானோ என்பது பற்றிய வினாவுக்கு வேதாகமத்து மாணவர்கள் விடைகூறுவதில் வித்தியாசப்படுகிறார்கள். ஆனால் அனைவரும் அவன் மனித இருதயத்தில் நடந்து கொண்டிருக்கும் போராட்டத்தை மிகத்தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறான் என்பதை ஒருமித்து ஆமோதிக்கிறார்கள். 7:7-24.
8. தெய்வீக இரட்சண்யத்தின் திட்டத்தைக் குறித்த உச்சநிலையானது அதிகாரம் ஏட்டில் ஓவியமாக சித்தரிக்கப்படுகிறது. அது ஒரு புதிய ஆவிக்குரிய ஜீவியத்தின் சுதந்திரமாகும். கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தினால் நீதியாகுதலுமாகும்.
   இது வேதாகமத்திலுள்ள மிகவும் மகத்தான அதிகாரங்களில் ஒன்றாகும். இதில் பரிசுத்த ஆவியைக் குறித்து பத்தொன்பது தரம் குறித்துச் சொல்லப்படுகிறது.
9. இரண்டு குறியீடுகளுக்கிடையில் உள்ள சொற்றொடர் தன்னுடைய ஜனங்களுக்காக பவுலுடைய ஆழமான கரிசனை 9:1-5.
10. தெய்வீக தேர்தலுக்கும் இஸ்ரவேலுடன் தேவன் இடைபடுவதற்குமான மர்மமாவது,
   a. இஸ்ரவேலருக்காக விசேஷமான உரிமையான சலுகைகள் 9:4-5. மேலும் 3:1-2ஐ பார்க்கவும்.
   b. ஆபிரகாமுடைய இயல்பான மற்றும் ஆவிக்குரிய பின்சந்ததியாருக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் 9:6-13.
   c. தெய்வீக சர்வவல்லமை பற்றிய இரகசியம் 9:14-24.

d. அந்த தீர்க்கதரிசி யூதர்கள் தங்களுடைய உரிமையான சலுகைக்குத் தகுந்தவாறு வாழத் தவறி விட்டார்கள் என்று முன்னுரைத்தான். மேலும் புறஜாதிகளுக்கான அழைப்பும் அவர்களுடைய தெய்வீக திட்டமான விசுவாசத்தினால் நீதியாகுதலை ஓப்புக் கொண்டதையும் கூறுகிறான். 9:25-33.

11. அந்த தெய்வீக திட்டத்தைப் பற்றிய யூதர்களுடைய தவறான கருத்தாவது, அவர்களுடைய சுய நீதியாகுதலை விளைவாக்குகிறது. 10:1-3.
12. விசுவாசத்தினால் உண்டாகும் இரட்சண்யத்தின் திட்டம் விளக்கம் செய்யப்பட்டும் அதன் பொதுவான பொறுத்தமாகுதல் ஏற்படுத்தப்படுகிறது. 10:4-18.
13. தேவன் இஸ்ரவேலரோடு இடைபடுதல் 10:19-11:12.
14. புறஜாதியார் தாங்கள் பெற்ற சலுகைகளைக் குறித்து பெருமை பாராட்டலாகாது என்று எச்சரிக்கப்படுகிறார்கள். அவர்கள் கண்டனத்துக்குள் விழுந்து விடாதபடி ஜாக்கிரதையாக இருக்கும்படி எச்சரிக்கப்படுகிறார்கள். 11:13-22.
15. இஸ்ரவேலர் திரும்பவும் கொண்டுவரப்படுவது முன்னுரைக்கப்படுகிறது. தேவனுடைய வழிகளின் இரகசியங்கள் சேரமுடியாது என்று பிரகடனமாகிறது. 11:23-26.

**பிரிவு 2: நடைமுறை முக்கியமாக உபதேசங்களும், போதனைகளும் கிறிஸ்தவ கடமைகளைக் குறித்தானவை** அதி 12-16.

அதிகாரம் 12: வேதாகமத்தில் காணப்படும் கிறிஸ்தவக் கடமைகளைக் குறித்தான நேர்த்தியான பாடச்சுருக்கமாக முன்வைக்கப்படுகிறது.

அதிகாரம் :13. 1. குடிஜன மற்றும் சமூகக் கடமைகள் 1-10.
2. ஒளியில் வாழவேண்டிய கடமை 11-14.

அதிகாரம் 14: 1ல் இருந்து 15:7 வரை பலவீனருக்கான கடமை.
1. நியாயந்தீர்ப்பதில் கருணை காட்டுவது. 14:1-13.
2. அவர்களை புண்படுத்தாதபடிக்கு ஜாக்கிரதை 14:15-23
3. அவர்களுக்கு உதவி செய்வதற்குப் பிரியப்படுத்துவதற்கல்ல. 15:7.

**முடிவான கருத்தெண்ணங்கள்** : முக்கியமாக சொந்த அனுபவங்களும் வாழ்த்துக்களும். அதி 15 தொடர்ச்சி :

1. புற ஜாதியார் தங்கள் சார்பில் நன்றி செலுத்துவதற்கான காரணங்களும் (அப்போஸ்தலனுடைய ) அவர்கள் மத்தியில் விஸ்தாரமான ஊழியமும் வசனம். 28-21.
2. பவுல் உரேமபுரியைப் போய் பார்க்கவேண்டுமென்ற வாஞ்சையும் அவன் பலதரப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு நண்பர்களுக்கு வாழ்த்து சொல்லுவதும் 15:12-16:16.
3. இறுதி வார்த்தைகளும், ஆசீர்வாதமும் வசனம். 17-27.

---

## கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிரூபம்

**ஆக்கியோன்** அப்போஸ்தலனாகிய பவுல்

**வரலற்று நிகழ்ச்சி** : கொரிந்து பட்டணத்துத் திருச்சபையானது, ஒரு லௌகீகமான பாலியல் நகரத்தைச் சூழ்ந்துள்ள கேடுபாடுகளால் தொற்றிக் கொள்ளப்படக் கூடியதாய் இருந்தது. கிரேக்கர்கள் தங்கள் தத்துவ ஞானத்தையும், படிப்பையும் குறித்து பெருமை பாராட்டினார்கள். ஆனால் அதே சமயத்தில் மிகவும் ஒழுக்கக் கேடுவுடையவராய் இருந்தார்கள். அவர்கள் குறிப்பாக சொல்வன்மை குறித்து பிரியமாய் இருந்தார்கள். அதனால் அப்பொல்லோ என்ற சொல்வன்மை மிகுந்த கிறிஸ்தவன் கொரிந்து பட்டணத்துக்கு வந்து கிரேக்க கிறிஸ்தவர்களின் கற்பனைகளைக் கைப்பற்றியிருந்தான். அப் 18:24-28.

இந்த விஷயமானது, வெள்ளி நாக்கோடு கூடிய அவனையும், மற்ற மதத்துத் தலைவர்களை பற்றிய ஒப்பிடுதலும் பவுலைக் குறைவாக விசேஷமாக மதிக்கச் செய்தது. ஏனென்றால் பவுலுடைய உடல் தோற்றமானது, பார்வைக்கு கவர்ச்சியானதாக இருக்கவில்லை. (2:கொரி 10:10 ஐபார்க்க).

ஒருவேளை இதுதான் திருச்சபையில் பிளவு உண்டாக்கும் உட்பகைக்கான துப்பாகவும் இருக்கலாம். 1கொரி 1:11-13. ஆகவே திருச்சபையை கட்சி பற்றுகளிலிருந்தும் ஒழுக்கச் சீர்கேட்டிலிருந்தும் சுத்திகரிக்கும் வாஞ்சை இருந்தது. இதுவே இந்த நிரூபத்தைப் பவுல் எழுதுவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

## இந்த நிரூபத்தை இரு பாகமாகப் பிரிக்கலாம்.

**பகுதி : 1. முக்கியமான பொருள் தலைப்பு** : திருச்சபையை ஊழியத்தைப் பற்றிய பொய்யான கருத்துக் கேடுபாடுகள் கல்விஞானம் பற்றிய பெருமை, சமூகத்தீங்குகள், மற்றும் ஒழுங்கீனங்களில் இருந்தும் சுத்திகரிக்கப்படுதல் ஆகும். அதி 1-11.

**திறவுகோல் சங்கிலி** : ஊழியத்தைப் பற்றிய பொய்யான கோட்பாடுகளை எடுத்துக் காட்டுவது : 1:12-17; 3:4-7,21-22; 4:6-7.

### பாடச்சுருக்கம்

1. வாழ்த்துதல்கள் : 1:1-9.
2. கட்சி பாகுபாடுகள், மனித (வீரர்) வணக்கம், உலக ஞானத்தில் மகிமைப்படுதல் ஆகியவற்றிலிருந்து திருச்சபை சுத்திகரிக்கப்பட வேண்டிய அவசியம். 1:10-31.
3. பவுலுடைய குற்றமற்ற மேன்மையான ஊழியம் : அவனுடைய பங்கிற்கு உலக ஞானத்தை வெளிக்குக் காட்ட ஒரு முயற்சியும் அவன் எடுத்துக் கொள்ளவில்லை. அவனுக்கு பரிசுத்த ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்ட ஒரு செய்தியைக் கொண்டு தெய்வீக ஞானத்தை சாதாரணமாக பிரசித்தப்படுத்தினான். 2:1-16.
4. தலைவர்களின் மேல் உள்ள போராட்டம் அவர்களுடைய முதிர்ச்சிக் குறைவுக்கும் பாலியல் இச்சைக்கும் ஒரு குறியாகும். 3:1-8.
5. ஊழியத்தைப் பற்றியதோர் நோக்கப்பார்வை ஊழியர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள்.
   a. சத்தியத்தை அறிவிப்பாளர்களாக. 3:1-2
   b. தோட்டக்காரர்களாக 3:6-8.
   c. தேவனுடன் சக தொழிலாளர்களாக. 3:9.
   d. ஒழுக்கத்தைக் கட்டுபவர்களாக. 3:10.
   e. நம்பத்தகுந்த வேலைக்காரர்களாக 4:1-2.
   f. கிறிஸ்துவின் நாமத்திற்காக பாடுபடுகிறவர்களாக. 4:9-13.
   g. முன்மாதிரியானவர்களாக 4:16-17.
   h. ஒழுங்கின் நிர்வாகஸ்தர்களாக 4:18-21.
6. திருச்சபையைச் சுத்திகரிக்க வேண்டிய கடமை
   a. ஒழுக்கக் கேட்டிலிருந்து.
   b. நீதிமன்ற விசாரணைகளில் இருந்து.
   c. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கத்தினர்களாகவும், பரிசுத்த ஆவியின் ஆலயங்களாகவும் தங்களைத் தாங்களே உலக பாலியல் இச்சைகளில் இருந்து சுத்திகரித்துக் கொள்ள வேண்டும். 6:9-20.
7. திருமணமானது, சகலவித பாலியல் உறவுத் தொடர்புகள் ஆவிக்குரிய ஜீவியத்தின் உயர்ந்த உரிமை கோரிக்கைகள் ஆகியவற்றிலிருந்து பரிசுத்தமாகுதல் 7:1-40.
8. கிறிஸ்தவ லட்சியங்கள் சில உரிமைகளையும் சலுகைகளையும் அறியாமையில் உள்ளவர்களுக்காகவும் பலவீனர்களுக்காகவும் தியாகம் செய்யுமாறு வேண்டுகிறது. உதாரணமாக விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட மாமிசத்தை உண்ணாதிருக்க. 8:1-13.
9. கிறிஸ்துவுக்காக மனிதர்களை ஆதாயப்படுத்திக் கொள்வதற்காக பவுலின் முன்மாதிரியாக சில உரிமைகளையும், சுதந்திரங்களையும் தியாகம் செய்தல். 9:1-27.
10. இஸ்ரவேலருடைய உதாரணமாக கணவன்-மனைவி நம்பிக்கைத் துரோகம் திருச்சபைக்கு ஓர் எச்சரிக்கை 10:1-15.
11. கர்த்தருடைய இராப்போஜனத்தின் ஐக்கியமாகிய சாக்கிரமந்து தீமையான இணைபாடுகளில் இருந்து தனிமையாக பிரிந்து இருப்பதையே வேண்டுகிறது. 10:16-21.
12. கிறிஸ்தவ (செல்வாக்கு) தாக்கமானது, உணவு உண்ணுதல், பானம் பண்ணுதல் ஆகிய காரியங்களில் இருந்து பாதுகாக்கப்படவேண்டும். 10:23-33.

13. சமூக பாரம்பரியங்கள் ஆடைகள் அணியும் காரியங்களில் கைக் கொள்ளப்படவேண்டும். 11:1-6.
14. கர்த்தருடைய இராப்போஜனம் சம்பந்தப்பட்ட ஒழுங்கீனங்களில் இருந்து திருச்சபை சுத்திகரிக்கப்பட வேண்டும். அதை சரியான முறையாக அனுசரித்து கைக்கொள்ள வேண்டும். 11:17-34.

**பிரிவு : 2. தத்துவ போதனையும், ஆலோசனையான புத்திமதியும் :**

1. ஆவிக்குரிய வரங்களின் பலதரப்பட்ட தன்மைகளின் குறித்தான 12:1-31.
2. அன்பின் பிரதானம் 13:1-13.
3. பாஷைபேசும் வரத்தைப்பற்றி தீர்க்கதரிசன மேன்மையும், பொதுவான கூடிவரும் சபைகள் கூடிவரும்பொழுது சரியான ஒழுங்கு முறையைக் கடைபிடித்தலும் 14:1-40.
4. உயிர்தெழுதல் பற்றிய கோட்பாடு 15:1-58.
5. கடைசியாக போதனைக் குறிப்புகளும் வாழ்த்துக்களும் 16:1-24.

---

## கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் நிரூபம்

**ஆக்கியோன்** : பவுல் அப்போஸ்தலன்.

**முக்கியமான தலைப்புப் பொருள்** : இது ஏதோ ஒரு வகையில் மறைபொருளாய் இருக்கிறது. ஆனால் பவுல் அப்போஸ்தலன் இதை எழுதும் பொழுது தனது அப்போஸ்தலத்துவத்தை மெய்ப்பித்து காட்டுவதையே தன்னுடைய சிந்தனையில் பிரதானமாகக் கொண்டிருந்தது போல் தோன்றுகிறது. இந்த இரண்டு கொரிந்தியருக்கு எழுதிய நிரூபங்களிலும் இருந்து சுட்டிக் காட்டப்படுவது என்னவென்றால், இந்தத் திருச்சபையில் ஏதோ ஒரு காரணம் இருந்து கொண்டு அது பவுலுடைய ஊழியத்திற்கும், அதிகாரத்துவத்திற்கும் அவப்பெயர் உண்டாக்குவதான போக்கு இருக்கிறது என்பதுவே இந்தவிதமான போக்கு திறவுகோல் சங்கிலி பகுதிகளில் கீழே சுட்டிக் காட்டப்படுகிறது.

**பொருளடக்கம்** : இந்த நிரூபம் பவுலுடைய எல்லா நிரூபங்களிலும் தனிப்பட்ட சொந்த நிரூபமாகும். அவன் தன்னுடைய ஊழியத்தைப் பற்றியே அதிகமாகப் பேசுகிறான் அவன் தன் இருதயத்தைத் திறந்து தனது மனப்பான்மைகளை , ஆவிக்குரிய வைராக்கியங்களை திருச்சபைக்கான இளகிய அன்பை வெளிப்படுத்துகிறான்.

**திறவுகோல் சங்கிலி** :3:1; 5:12; 7:2; 11:5-6; 12:11; 13:3.

**பாடச்சுருக்கம்** : இந்த நிரூபத்தில் எந்தவிதமான குறிப்பிடக்கூடிய எண்ணப்பிரிவு யாதொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அந்த தலைப்பு பொருளடக்கம் மூன்று தலைப்பின் கீழ் பாகுபடுத்தப்படும்.

**I. அப்போஸ்தலர் ஊழியத்தின் பண்பியல்புகள் :**

1. ஆறுதல் அளிப்பது. 1:4-7; 7:7,13.
2. பாடுபடுதல் 1:5-9; 4:8-12; 5:4; 6:4-10; 7:5; 11:24-28; 12:7-10.
3. நேர்மையான 1:12; 2:17; 4:2; 7:2.
4. உறுதியாக நிலைத்து நிற்றல் 1:17-19; 4:1,16.
5. கரிசனையாக 2:3-4; 7:7-8; 11:2-3; 12:20-21.
6. ஜெயமாக 2:14; 4:8-9; 12:10.
7. தன்னையே தியாகபலியாக 4:5,11,15; 5:13; 17:7-9.
8. கிறிஸ்துவின் மேல் அன்பு கட்டுப்படுத்தும் உள்நோக்கமாக 4:11; 5:14.
9. ஆவிக்குரியதான 4:18; 5:16; 10:4.
10. தூண்டி இயக்கக்கூடிய 5:11,20; 6:1; 10:1-2
11. சீர்பொருந்த 5:19-21.
12. மிகுந்த பொறுமையிலும் உபத்திரவங்களிலும் நற்கிரியைகளிலும் விளங்கப்பண்ணும்படி 5:13; 6:4-10; 12:12.
13. அதிகாரமுள்ளவர்களாக 10:1-11.
14. எங்களை நாங்களே கவனித்துக் கொள்கிறவர்களாக. 11:9.

**II. தாராள குணத்தைக் குறித்த புத்திமதியும் போதனைகளும் அதி 8-9.**
**III. பவுலுடைய அப்போஸ்தலத்துவம்**
1. திருச்சபையில் ஏதோ ஒரு காரணத்தால் அவனுடைய ஊழியத்திற்கு அவப்பெயர் உண்டாக்க. 10:7-10; 12:11; 13:3.
2. அந்தக் காரணத்துக்காக எதற்கும் மிஞ்சிய பாடுகளை அனுபவித்தவர்களாக 6:4-10; 11:23-27.
3. பெற்றுக் கொண்ட அந்த அற்புதமான வெளிப்பாடுகளாலும் 12:1-5.
4. நடப்பிக்கப்பட்ட மகத்தான கிரியைகளாலும் 12:12.

### தெரிவு செய்யப்பட்ட பகுதிகள்
1. இலட்சியமான ஊழியம் 4:1-18.
2. மரணத்தின் மேல் ஜெயம் 5:1-9.
3. உலகத்தை விட்டு பிரியுமாறு அழைப்பு 6:14-18.
4. பவுல் சகித்துக்கொண்ட பாடுகளின் அட்டவணை 11:24-33.

---

## கலாத்தியருக்கு எழுதின நிருபம்

**ஆக்கியோன்** - அப்போஸ்தலனாகிய பவுல்

**காலம்** : ஒருவேளை கி.பி. 55-60 ஆக இருக்கலாம்.

**யாருக்கு எழுதப்பட்டது**. கலாத்தியாவிலுள்ள திருச்சபைகளுக்கு. கலாத்தியா சின்ன ஆசியாவின் ஒரு பகுதி. அதன் சரியான எல்லைகள் பற்றி நிச்சயமாக தெரியாது.

**முக்கியமான பொருள் தலைப்பு** : விசுவாசத்தால் நீதியாகுதல் என்ற கோட்பாடு பற்றி தன்னிலை வாதம் யூதமார்க்கத்துக்கு பின்வாங்கி போகுதல் என்பது பற்றிய எச்சரிக்கை. பவுலுடைய அப்போஸ்தலத்துவத்தை பற்றி தன்னிலை விளக்கம்.

திருச்சபையின் மகா சாசனம். இவ்வாறு பல ஆசிரியர்களால் இந்த நிருபம் அழைக்கப்படுகிறது. இதனுடைய பிரதானமான வாதமாவது, கிறிஸ்தவ சுயாதீனம் என்று யூதமத போதனையாளர்களுக்கு எதிர்ப்பு. இந்த பொய்யான போதகர்கள் சடங்காச்சாரமான பிரமாணத்தை அனுசரித்தலானது, இரட்சண்யத்தின் திட்டத்திற்கு இன்றியமையாதது என்று வற்புறுத்தினார்கள்.

**திறவுகோல் பகுதி** : 5:1.

**திறவுகோல் சங்கிலி** : எண்ணத்தின் ஓட்டத்தைக் காட்டுவதாக 1:6; 2:11-16; 3:1-11; 4::9-11; 5:1-7; 6:15.

**அழுத்தம் கொடுக்கப்பட்ட சொற்கள்** : விசுவாசம், கிருபை, சுதந்திரம் சிலுவை என்பன.
பகுதி **I**. வாழ்த்துக்களும் முகவுரையும் 1:1-9.
பகுதி **II**. பவுல் தன்னுடைய மெய்யான அப்போஸ்தலத்துவத்துக்கு கொண்டாடும் உரிமைக்கு ஆதரவாக அவனுடைய அனுபவங்களைச் சொல்லிக்கொள்ளும் கதை.
1. அவன் பிரசங்கித்ததான சுவிசேஷம் கிறிஸ்துவிடம் இருந்து வந்த நேரடியான வெளிப்படுத்துதலால் பெறப்பெற்றதாகும். ஏனென்றால் அவன் வைராக்கியம் மிகுந்த யூதனாக திருச்சபையைத் துன்பப்படுத்திக் கொண்டிருந்தான். 1:10-16.
2. பல ஆண்டுகளாக எருசலேம் சபையில் இருந்து தூரத்தில் இருந்து கொண்டு மற்ற அப்போஸ்தலர்களிடமிருந்து தனியாகவும் உழைத்துக் கொண்டிருந்தான். 1:17-23.
3. அவன் தெய்வீக நடத்துதலுக்குக் கீழாக இருந்து புறஜாதியாருக்கு மத்தியில் தன் ஊழியத்தில் தரித்திருந்தான். மேலும் கிரேக்கனாகிய தீமோத்தேயுவின் விஷயத்தில் அந்த கிரேக்கன் சடங்காச்சாரமான பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதில் அவன் சுதந்திரமாக இருக்கவேண்டும் என்று வற்புறத்தினான். 2:1-5.

4. எருசலேம் திருச்சபை அவனுடைய அப்போஸ்தல ஊழியத்தையும், புறஜாதியார் மத்தியில் செய்யும் வேலையையும் சம்மதம் தெரிவித்து ஒப்புதல் அளித்தார்கள். 2:7-10.
5. பேதுரு பர்னபா மற்றும் கிறிஸ்தவ யூதர்கள் சடங்காசாரமான போக்குகளுக்கு இடம் கொடுக்கிறார்கள் என்பதை அவன் கண்டபொழுது, அவர்களைக் கடிந்து கொள்ளத் தவறவில்லை. 2:11-14.

**பகுதி III**. நியாயப்பிரமாணத்துக் கிரியைகளுக்கும் அப்பாலும் விசுவாசத்தினால் நீதியாகுதல் என்ற கோட்பாட்டை பவுல் அதனை பாதுகாப்புக் கொடுத்து அதன் சார்பாக பேசினான்.

1. கிறிஸ்தவ யூதர்கள் தங்களுடைய புதிய விசுவாசத்தையும் ஒளியையும் கைவிட்டுவிட்டு தங்களுடைய பழைய நியாயப் பிரமாணத்துக்கு திரும்பியதை அவர்களுடைய மதியீனம் என்று எடுத்துக் காட்டிக் கூறினான். 2:15-21.
2. கலாத்தியருடைய முன்னாள் ஆவிக்குரிய அனுபவத்தைக் குறித்து வேண்டுகோள் விடுத்தான். 3:1-5.
3. ஆபிரகாம் விசுவாசத்தால் நீதிமானாக்கப்பட்டான் என்பதை எடுத்துக் காட்டினான். 3:6-9.
4. பிரமாணத்துக்கு இரட்சிக்கும் வல்லமை கிடையாது என்றும், ஆனால் கீழ்படியாதவர்கள் மேல் அது சாபத்தைக் கொண்டு வந்தது என்றும் அந்த சாபத்திலிருந்து கிறிஸ்து விசுவாசிகளை இரட்சித்திருக்கிறார் என்பதையும் எடுத்துக்காட்டி விளக்கினான். 3:10-4.
5. பிரமாணமானது, விசுவாசத்தினால் உண்டாகும் இரட்சிப்பின் உடன்படிக்கையை நீக்கிப்போடவில்லை என்பதை நிரூபித்தான். 315-18.
6. பிரமாணத்தின் நோக்கமே கிறிஸ்துவுக்கு வழிகாட்டியாக அவருக்கு வழியை அயத்தம் பண்ணுவது தான் என்பதை சுட்டிக் காட்டினான் 3:19-25.
7. கிறிஸ்துவுக்குள் தங்கள் விசுவாசத்தை ஒப்படைப்புச் செய்பவர்களுக்கு ஏற்படும் நஷ்டங்களும் அதனால் அவர்கள் பிரமாணங்களுக்குள் திரும்பிப் போய்விடுகிறார்கள் என்பதையும் எடுத்துக் காட்டுவதால்.
   a. தேவனுடைய பிள்ளைகளாக அவர்கள் தங்களுடைய சுதந்தரத்து வீத ஆசீர்வாதத்தை இழந்து போகுகிறார்கள். திரும்பவும் சடங்காச்சாரமான அடிமைத் தனத்துக்குள்ளாகி விடுகிறார்கள். 3:26-4:11.
   b. அவர்கள் சார்பில் செய்யப்பட்ட உழைப்பை பாராட்டிப் போற்றும் உணர்வை இழந்தவர்களாக ஆகிவிடுகிறார்கள். 4:11-16.
   c. அவர்கள் வாக்குத்தத்தின் பிள்ளைகளாக ஆகாமல், அதற்கு பதிலாக மாம்சீகத்தில் ஆபிரகாமின் பிள்ளைகளாக ஆகும் அபாயத்துக்குள்ளாகி விடுகிறார்கள். 4:19-31.
   d. அவர்கள் ஆவிக்குரிய சுயாதீனத்தை இழந்து விடுவதும் அல்லாமல் கிறிஸ்துவின் தியாக பலியை அவர்களுக்கு பிரயோஜனமற்றதாக ஆக்கிக் கொள்கிறார்கள். 5:1-6.

**பாகம் IV.** எச்சரிக்கை, போதனைகள், உபதேசங்கள்.

1. பொய்யான போதகர்கள் பற்றியும் தங்கள் சுயாதீனம் துர்பிரயோகம் செய்யப்படுவதைக் குறித்தும் எச்சரிக்கைகள். 5:7-13.
2. ஆவிக்குரிய ஜீவியத்தைப் பற்றிய உபதேசங்கள்.
   a. ஆவிக்கும் மாம்சத்துக்கும் இடையே உள்ள போராட்டம். 5:17-18.
   b. மாம்சத்தின் கிரியைகள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் இருந்து தனியாக விட்டுவிடுகிறது. 5:19-21.
   c. ஆவியின் கனியானது, கிறிஸ்தவ ஜீவியத்தில் வெளியே எடுத்துக் காட்டப்பட வேண்டும். 5:22-26.
3. ஆவிக்குரிய ஜீவியத்தின் பண்பியல்புகள் :
   a. உதவியால் நிரம்பி இருத்தலும் பாரசுமையை உடன் தாங்குதலும் 6:1-2.
   b. தாழ்மை சுயஆய்வு, சுயசார்பு, தயாள குணம் 6:3-6.
   c. விதைத்தல் அறுத்தல் என்ற பிரமாணம் நல்லொழுக்க ஆளுகைக்கும் பொருந்தும் 6:7-9.
4. பொய்யான போதகர்களின் தத்துவ கோட்பாட்டுக்கும், பவுலினுடையதற்கும் உள்ள வித்தியாசம் முன்னானது சடங்காச்சார கிரியைகளில் மகிமைப்படுகிறது. அது மாம்சீகத்தில் குறியிடுகிறது. பிந்தியது சிலுவையில் மகிமைப்படுகிறது. கர்த்தராகிய இயேசுவைக் குறியீடாக்குகிறது. 6:12-17.

# எபேசியருக்கு எழுதிய நிருபம்

**எழுதியவர்** : அப்போஸ்தலனாகிய பவுல்.

**காலம்** : ஒருவேளை ரோமாபுரியில் எழுதப்பட்டிருக்கலாம்.

## எபேசுவில் பவுலின் ஊழியம்

அவன் முதல் முதலாக போய் பார்த்தல், அப் 18:18-21. அவன் இரண்டாவது தடவையாகப்போய் பார்த்தல் - பரிசுத்தஆவி விசுவாசிகளுக்கு வழங்கப்படுதல். அப் 19:2-7; அவன் தொடர்ந்து வியக்கத்தக்க வகையில் வெற்றியுடன் ஊழியம் செய்தல். அப். 19:9-20. சிற்ப வேலைக்காரருடன் அவனது சச்சரவு : அப் 19:23-41; எபேசுவின் மூப்பர்களுக்கு அவனது சொற்பொழிவு அப். 20:17-35.

## இந்த நிரூபத்தை எழுதியதில் சரித்திரச் சம்பவம்

யூதமார்க்கத்திலிருந்து மனம் திரும்பிய யூதர் ஆதித்திருச்சபையில், சபையில் விலகியிருந்தும் தங்களை புறஜாதியான சகோதரர்களிடமிருந்து தங்களைப் பிரித்து தனியாகவும் இருக்கும் போக்குள்ளவர்களாக இருந்தார்கள். எபேசுத் திருச்சபையில் நிலவியிருந்த இந்த நிலைமையானது, இந்த நிரூபத்தை எழுதும்படியாக நடத்தியிருக்கலாம். இதன் திறவுகோல் குறிப்பாவது கிறிஸ்தவ ஐக்கியம்.

**திறவுகோல் பகுதி** 4:13.

**திறவுகோல் சங்கிலி** எண்ண ஓட்டத்தைக் காட்டுவதற்காக 1:10; 2:6,14-22; 4:3-16.

**முக்கியமான தலைப்புப் பொருள்** : திருச்சபையில் ஒற்றுமை விசேஷமாக யூதர்களுக்கும் புறஜாதி விசுவாசிகளுக்கும் இடையில் ஒற்றுமை.

சில வார்த்தைகளும் சொற்றொடர்களும் திரும்பத்திரும்ப வருவதால் எடுத்துக் காட்டப்படுகிறது. பின்வருவது போன்ற

1. ஞானத்தோடும், புத்தியோடும். 1:8; 2:6; 2:22.
2. வார்த்தை ஒரே புதிய மனுஷனாக 2:14-15, ஒரே சரீரமாக 2:16; ஒரே ஆவியினாலே 2:18. ஒரே நம்பிக்கை 4:14; ஒரே கர்த்தரும் ஒரே விசுவாசமும் ஒரே ஞானஸ்நானமும் ஒரே தேவனும் பிதாவும் 4:5-6.

## மேலும் மற்ற திரும்ப வருகிற வார்த்தைகளும் சொற்றொடர்களும்

1. கிறிஸ்துவுக்குள் 1:1,3,6,12,15,20; 2:10,13; 3:11; 4:21.
2. உன்னதங்களிலே 1:3,20; 2:6; 3:10.
3. கிருபையின் ஐசுவரியங்களின் படியே 1:7; 2:7; மகிமையின் ஐசுவரியம் 1:18; 3:16; கிறிஸ்துவுடைய அளவற்ற ஐசுவரியம் 3:8.

### பாடச்சுருக்கம்

**பகுதி I.** திருச்சபையும், இரட்சண்யத்திட்டமும் குறிப்பு. இந்த இரட்சண்யத்தின் திட்டத்தைப் பற்றி பேசுகையில் பலவேறு நிரூபங்களிலும் பவுல் அதன்மேல் கொடுக்கும் அழுத்தத்தை வித்தியாசப்படுத்துகிறார். ரோமர் நிரூபத்தில் அவர் விசுவாசத்தைப் பற்றி கிரியைகளிலிருந்து அப்பாற்படுத்தி பேசுகையில் குறிப்பிடுகிறார். கலாத்தியரில் விசுவாசத்தைக் குறித்து சடங்காச்சார அனுசாரங்களிலிருந்து அப்பாற்படுத்தி பேசுகிறார். மேலும் எபேசியரில் விசுவாசிகளுக்குள்ளே ஒற்றுமையைப் பற்றி பேசுகிறார்.

**அதிகாரம்** 1. 1. வாழ்த்துக்கள் வசனம் 1-2.
2. உலகத்தோற்றத்துக்கு முன்னே 3-6.
3. இரட்சண்யத்தின் திட்டம்.

a. அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு வ.7,8.
b. சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கட்டப்பட வேண்டுமென்று. 9-10.

c. ஆவியானவர் நமது சுதந்தரத்தின் அச்சாரம். வ.11-14.
d. ஜெபங்களில் விசுவாசிகள் மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று அறியும்படிக்கு பிரகாசமான மனக்கண்களைத் தரும்படியாக வ.15-23.

**அதிகாரம் 2.**

e. இந்த திட்டம் பாவத்திலிருந்து ஆவிக்குரிய உயிர்த்தெழுதலுக்கு வசதிசெய்து அந்த விசுவாசியை மகிமையிலே உன்னதங்களில் உட்காரும்படி செய்தார். வசனம். 1-6.
f. கிருபையினாலே விசுவாசத்தைக் கொணடு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல. (கிரியைகளினால்) இது தேவனுடைய ஈவு வசனம். 7-10.
g. முன்னே தூரமாயிருந்த நீங்கள் (புறுஜாதியார்) இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். வசனம். 11-13.
h. யூதர்களுக்கும், புறஜாதியாருக்கும் இடையே இருந்த பகையான பிரிவினை நடுச்சுவரைத் தகர்த்து இருதிறத்தாரையும் ஒப்புரவாக்கி ஒரே சரீரமாக ஆக்கப்பட்டு பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணும் ஸ்தலமாக ஆகிறார்கள். வசனம். 14-22.

**அதிகாரம் 3.**

i. தெய்வீகத் திட்டத்தின் இரகசியங்கள் பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் புறஜாதியாருக்கு அப்போஸ்தலனாக நியமிக்கப்பட்டான். வசனம். 1-12.
j. திருச்சபையில் ஆவியின் நிறைவுக்காகப் பவுல் ஏறெடுத்த இரண்டாவது மன்றாட்டான ஜெபம் ஒப்பிடக்கூடாத, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ளும் அறிவினால் நிறையப்பட வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். வசனம் 14-21.

**பகுதி II.** நடைமுறை பொருத்தம் : திருச்சபையின் பங்கிற்கு அந்த தெய்வீகத் திட்டம் எதை வேண்டுகிறது?

**அதிகாரம் 4**

1. விசுவாசிகளுக்குள் ஒற்றுமை :
   a. ஆவியின் ஒருமையில் 1-3.
   b. ஏழுவிதமான ஒருமைப்பாடுகள் குறிப்பிடப்படுகின்றன. வசனம். 4-6.
   c. வரங்கள் பலதரப்பட்டாலும் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒருமைப்பட்டவர்களாக. வசனம். 7:16.
2. ஒரே சீரான கிறிஸ்தவ ஜீவியமும் விசுவாசியின் நடையும்.
   a. மற்ற பாவிகளான மக்களை போல் அல்லாமல் வசனம் 17-21.
   b. புதிய ஜீவியமாக பழைய பாவங்களை அகற்றி விட்டு வசனம். 22-32.

**அதிகாரம் 5.**

   c. அன்பிலும் பரிசுத்தத்திலும் நடந்து கொள்ளும் படியாக. வ. 1-7.
   d. வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளும் படியாக. வ.8-14.
   e. எச்சரிக்கையாய் நடத்தும் ஆவியினால் நிறைந்தும் வ. 15-21.
3. இல்லற வாழ்க்கை :
   a. கணவன் மனைவிக்குள்ள கடமைகள் வ.22-23.

**அதிகாரம் 6.**

   b. பிள்ளைகள், தகப்பன், வேலைக்காரர், எஜமானர்கள் ஆகியவர்களின் கடமைகள் வ.1-9.
4. ஆவிக்குரிய போராட்டம் :
   a. அவருடைய சத்துவத்தின் வல்லமை வ. 10.
   b. சர்வாயுத வர்க்கமும் சத்துருக்களும். வ. 11-18.
5. முடிவான வார்த்தைகளும் ஆசீர்வாதமும் வ. 19-24.

## தெரிவு பகுதிகள்

- திருச்சபைக்காக பவுலின் வேண்டுதல்கள் 1:16-23; 3:14-21.
- கிறிஸ்தவ ஒருமைப்பாடு 4:3-16.
- ஆவிக்குரிய போராயுதங்கள் 6:10-17.

## பிலிப்பியருக்கு எழுதிய நிருபம்

**ஆக்கியோன்** - பவுல் அப்போஸ்தலன்.

**காலம்** - நிச்சயமில்லை. ஒருவேளை ரேமாபுரியில் இருந்து கி.பி.60-64ல் எழுதியிருக்கலாம்.

**திருச்சபை** : இந்த பிலிப்பியர் திருச்சபையானது பலவகைகளிலும் இலட்சியமுள்ளதாக இருந்தது. அது பாராட்டுதலையும் ,உதாரத்துவத்தையும் உடையதாய் இருந்தது. பார்க்க 4:15-16; 2கொரி 8:2

இந்த சபையானது பவுலுடைய இரண்டாவது சுவிசேஷப் பிரயாணத்தின் போது ஸ்தாபிக்கப்பட்டது. அது துன்பப்படுத்துதல் என்ற புயலின் மத்தியில் நிறுவப்பட்டது. ஆரம்ப (வேலையானது) ஊழியம் சிறிதாயும், நதிக்கரையில் சந்தித்துக் கொண்ட ஒரு சில ஸ்திரீகளின் மத்தியில் தோன்றியது. இராத்தாம்பரம் விற்கும் லீதியாள் முதலாவது மனம்மாற்றம் ஆனவர். வெகுவிரைவில் பிலிப்பிய சிறைச்சாலை அதிகாரியும் அவன் குடும்பத்தினரும் வந்து சேர்ந்து கொண்டனர். இவர்களும் இத்தோடு வேறுசிலரும் சேர்ந்து இந்த சபையின் கருவானவர்கள். அப். 16:12-40 பார்க்க.

### இந்த நிரூபத்தின் பண்பியல்புகள்

இது திருச்சபைக்கு எழுதப்பட்ட ஆவிக்குரிய அன்புக் கடிதம். அது மிகவும் பாசமும் நன்றியுணர்வும் நிரம்பப் பெற்றது. கடினமான சூழ்நிலைமையில் எழுதப்பட்டதாகும். அப்பொழுது பவுல் சிறைக்கைதியாக இருந்தார். அது ஜெயத்தையும், மகிழ்ச்சியையும் அழுத்தம் கொடுக்கிறது. சந்தோஷத்தோடே விண்ணப்பம் பண்ணி 1:4; சுவிசேஷத்திற்காக 1:18; கிறிஸ்தவ ஐக்கியம் 2:1-2; ஊழியத்தினிமித்தம் விசுவாசமாகிய பலியின் மேல் 2:17-18; கர்த்தருக்குள் 3:1; திருச்சபையின் மேலுள்ள அன்பின் கவனிப்பிற்காக 4:10

**மத்திய செய்தி** : இயேசு கிறிஸ்து.

அதி. 1. (1). நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாக வ.10

(2). கிறிஸ்து அறிவிக்க (பிரசங்கிக்கப்) படுகிறார். வ.18.

(3). கிறிஸ்து எனக்கு ஜீவன். வ. 20-21.

அதி. 2. (4). கிறிஸ்து இயேசுவிலிருந்து சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது. வ.5-11.

அதி. 3. (5). கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டம் என்று எண்ணிக்கொண்டு இருக்கிறேன். வ.7-14.

(6). தம்முடைய மகிமையான சரிரத்திற்கு ஒப்பாக விசுவாசிகளுடைய சரீரத்தை மறுரூபப்படுத்துவார். வ.20-21.

அதி. 4. (7). பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய கிறிஸ்தவ ஜீவியத்தில் அளவற்ற பலம் உண்டு. வ. 13.

(8). ஒவ்வொரு அவசியத்திற்கும் தம்முடைய தெய்வீக நிறைவான ஐசுவரியத்தின்படியே வாய்க்காலாக நிறைவாக்குவார். வ. 19.

### பாடச்சுருக்கம்

**அதி 1.**

1. வாழ்த்துக்கள் வ. 1-7.
2. அவனுடைய உள்ளான ஜீவியத்தைப் பற்றியும் திருச்சபையின் மேல் அவனுடைய மனப்பான்மையையும் அப்போஸ்தலனால் தானாக திறந்து கூறும் செயல்.
   a. திருச்சபையின் ஆவிக்குரிய முன்னேற்றத்தைக் குறித்ததான அவனுடைய ஆழ்ந்த கரிசனை வ. 8-11.
   b. அவனுடைய சங்கிலிகளான கட்டுகள் அநேகருக்கு ஆசீர்வாதமாக இருந்ததை உறுதிப்படுத்துதல். வ.12-19.

c. அவன் காவலில் இருப்பதால் என்னவிதமான விளைவாக இருந்தாலும், அவனுடைய எதிர்பார்ப்பும், வாஞ்சையும் அவனுடைய ஜீவனோ, மரணமோ எதுவாயிருந்தாலும் கிறிஸ்து மகிமைப்படுவார். வ.20.
d. விசுவாசியின் மரணம் அவனுக்கு ஆசீர்வாதம் என்ற உணர்வின் உறுதி ஆசீர்வாதமானாலும் ஆனால் அவனுடைய பணி முற்றுப்பெறவில்லை என்ற உணர்வினாலும் அவன் பிலிப்பியர் திருச்சபையைத் திரும்ப சந்திக்கலாம் என்று நம்புகிறான். வ.21-25.
e. துன்புறுத்தப்படுதலின் மத்தியிலும் திருச்சபை விசுவாசத்தில் நிலைத்திருப்பது அவனுடைய முக்கியமான கரிசனையாக இருந்தது. வ.27-30.

**அதி. 2.**

3. கிறிஸ்தவ ஜீவியத்தையும், நடத்தையையும் பற்றிய உபதேசங்கள்.
   a. ஐக்கியமும், தாழ்மையும், ஏகசிந்தையும் வ.1-4.
   b. கிறிஸ்துவிலுள்ள சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. வ. 5-13.
   c. தனிப்பட்ட இரட்சிப்புக்காக தேவனுடன் ஒத்துழைக்கவும் (இந்த பொல்லாத உலகத்தில்) கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாயிருக்கும் படிக்கு வ.12-16.
4. தன்னுடைய (தூதுவர்களான) செய்தியாளர்களான தீமோத்தேயு, எப்பாப்பிரோதீத்து இவர்களைப் பற்றிய அப்போஸ்தலனுடைய புகழுரைகள்.

**அதி. 3.**

5. யூத கொள்கையாளர்களுக்கு எச்சரிக்கை. 1-3.
6. அப்போஸ்தலனுடைய அனுபவங்களுக்கு குறித்த வரலாற்றுரை.
   a. உரிமையுடைய வைராக்கியமுள்ள யூதனாக தனக்கு இலாபமாக நியாயப்பரமாணத்தின் படி நீதியாக இருந்தவைகளை கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை அறியும் அறிவின் படி எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணினான். வ.4-9.
   b. அவனுடைய பிரதானமான ஆசையாவது, கிறிஸ்துவை அறிந்து கொள்வதும் அவரது உயிர்தெழுதலில் பங்கெடுத்துக் கொள்வதும் இறுதியாக கிறிஸ்துவை போன்ற நடத்தையான இலக்கை அடையவும் வ.10-14.
7. மேலும் திருச்சபைக்கான உபதேசங்கள் :
   a. அப்போஸ்தலருடைய முன்மாதிரியைப் பின்பற்ற. வ.15-17.
   b. சிலுவை குறித்த பகைவர்கள் குறித்த எச்சரிக்கை வ. 18-19
   c. பரலோகத்தின் பிரஜைகளாக கர்த்தர் வரும் பொழுது பெரிய மாறுதலை எதிர்நோக்குகிறவர்களாக. வ.20-14.

**அதி. 4.**

d. உறுதியாக நிலைத்திருத்தல், ஒற்றுமை, உதவிக்கரம் கொடுத்தல், சாந்தம், வருநிலை குறித்த அச்சத்திலிருந்து விடுதலை, ஜெபத்தில் நிறைந்திருத்தல், உயர்வானவைகளைச் சிந்தித்தல் ஆகியவை. வ.1-8.

8. முடிவாகக் கூறும் பாராட்டு வார்த்தைகள் தெய்வீக ஐசுவரியத்தினாலே எல்லா குறைவும் நிறைவாக்கும் வாக்குத்தத்தம் வாழ்த்துக்களும் ஆசீர்வாதமும். வ.10-23.

---

## கொலோசேயருக்கு எழுதிய நிரூபம்

**ஆக்கியோன் :** பவுல் அப்போஸ்தலன்.

**காலம் :** ஒருகால் ரோமாபுரியிலிருந்து கி.பி.60-64க்குள் எழுதப்பட்டது.

**யாருக்கு எழுதப்பட்டது** : சின்ன ஆசியாவிலுள்ள கொலேசே பட்டணத்து சபைக்கு.

**நோக்கம் :**

1. பொதுவான நல்லெண்ணத்தைப் பற்றிய செய்தி கூறவும் விசுவாசிகளுக்கு உபதேசித்து போதிக்கவும்.
2. விசேஷமாக யூதமத போதனையும், கீழ்திசை தத்துவ யூகங்களும் கலந்து ஒன்று சேர்ந்து விடுவதால் உண்டாகும் உபதேச தவறுகளுக்கு எதிர்த்து செயல்படவும் இந்த அஞ்ஞானக் கொள்கைகள் கிறிஸ்துவின் தெய்வீக மகிமையை மறந்து போகச் செய்யும் போக்குடையதாகும்.

**குணச்சிறப்பியல்புகள்** : இந்த நிரூபம் எபேசியருக்கு எழுதப்பட்ட நிரூபத்தைப் போலவே யோசனையில் மொழிநடைபாணியிலும் ஏறக்குறைய போதுமான ஒற்றுமையையுடையதாகும்.
ஆனாலும். அதற்கென்று தனிப்பட்டதோர் செய்தியுமுண்டு எபேசியரில் பவுல் திருச்பையை கிறிஸ்துவின் சரீரமாகப் பேசுகிறார். ஆனால் கொலோசேயரில் அவர் கிறிஸ்துவை திருச்சபையின் தலைவராக வலியுறுத்திப் பேசுகிறார்.
1கொரிந்தியரில் காணப்படும் உலக ஞானத்தை நம்புவதற்கு எதிராகக் கொடுக்கப்படும் எச்சரிக்கை கொலோசேயரிலும் காணப்படுகிறது.

**பாடச்சுருக்கம்** : இந்த நிரூபம் 6 பகுதிகளாகப் பிரிக்கப்படலாம்.

**I. வாழ்த்துதல்**

அதிகாரம் :1

1. அப்போஸ்தல வாழ்த்துக்களும் பாராட்டுகளும் வ.1-8.
2. திருச்சபைக்காக விண்ணப்பம்.
   a. அது ஞானத்தால் நிரப்பப்பட்டு நற்கிரியைகளில் கனி கொடுத்து தெய்வீக வல்லமையால் பலப்படுத்தப்படவும் வேண்டும். வ.9-11.
   b. ஆவிக்குரிய சுவிகாரத்திற்காகவும், மகத்தான விடுதலைக்காகவும், பாவங்களிலிருந்து இரட்சிப்புக்காகவும் நன்றி செலுத்தவும். வ.12-14.

**II. தத்துவ பிரிவு** : முக்கியமான பொருட்தலைப்பு கிறிஸ்துவின் ஆள்தன்மை வார்த்தை பற்றிய மகிமை.

அதிகாரம் :1

1. அவருடைய மகிமையான ஒப்புயர்வற்ற தன்மை
   a. தேவனுடைய சாயலாக வ.15.
   b. சகலத்தையும் படைத்தவராக சர்வ சிருஷ்டிகராக. வ. 16.
   c. எல்லாவற்றிற்கும் முந்தினவராக வ.17.
   d. சகல பரிபூரணமும் அவருக்குள் வாசமாயிருக்க வ.19.
   f. பூலோகம், பரலோகம்- உள்ளவைகளைத் தமக்கு ஒப்புரவாக்கிக் கொண்டார். வ. 20-23.
   g. விசுவாசிகளுக்குள் கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாய் இருப்பதுதான் அந்த ரகசியம். இது பவுலின் ஊழியத்தில் பிரபலப்படுத்தப்பட்டது. வ.24-29.

அதிகாரம் : 2

2. திருச்சபையின் நிலைகுறித்த வருக்காலத்தைப் பற்றிய பவுலின் அச்சம்.
   a. அதனால் அங்கத்தினர்கள் அன்பிலே இணைக்கப்பட்டவர்களாய் பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை பூர்ண நிச்சயமான உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும். வ.1-3.
   b. பொய்யான தத்துவ உபதேசத்தால் இழுப்புண்டு போகாமல் கிறிஸ்துவில் விசுவாசத்தில் உறுதிப்பட்டவர்களாய் இருக்கவேண்டும் என்று எச்சரிக்கிறார். வ.4-7.

**III. பாரம்பரியமும், உலக வழிபாடும் :**

அதிகாரம் :2

1. லௌகீக ஞானமும் மாயமான தந்திரமும் வ.8.
2. மனுஷர்களின் பாரம்பரிய நியாயமும், உலக வழிபாடுகளும் கிறிஸ்துவின் தேவத்துவத்தின் பரிபூரணத்திற்கும் அவருடைய ஆவிக்குரிய கட்டளைகளுக்கும் முரண்பட்டவைகளாய் உள்ளன. வ.4-13.

3. கிறிஸ்துவின் சிலுவையின் உண்டாகும் விடுதலை கொடுக்கும் வல்லமையால் பாரம்பரியங்கள் அழிக்கப்பட்டு விடுகின்றன. வ.14-17.
4. தூதர்களுக்கு செய்யும் ஆராதனை, மாயமான, தாழ்மை ஆகியவை திருச்சபையின் தலைவரான கிறிஸ்துவை கனவீனப்படுத்துகின்றன. வ.18-19.
5. பாரம்பரிய வழிபாடும், துறவறமும் மாம்சீகமானது என்று எச்சரிக்கை செய்யப்படுகிறது. வ.20-23.

**IV.உபதேச பிரிவு**

அதிகாரம் :3

1. மேலானவைகளை பரலோக சிந்தனையும் வாஞ்சையும். வ.1-4.
2. மாம்சீகமான பாலியல் இச்சைகளை அழித்துப் போட்டு விடவேண்டும். வ.5-7.
3. பொல்லாத இச்சைகளையும், கேடுகளையும் களைந்து போட்டுவிட்டு கிறிஸ்துவின் கிருபையான நற்பண்புகளையும் தரித்து கொள்ள வேண்டும். வ.8-14.
4. தேவ சமாதானம் ஒற்றுமை, நன்றியுணர்வு இவைகளால் ஆளுகை செய்யப்படுங்கள். வ.15.
5. சத்தியத்தை தேடவும், போதனையும், எச்சரிப்பிலும் பரஸ்பரமான அன்புடன் கிறிஸ்துவின் நாமத்தினாலே செய்ய வேண்டும். 16-17.

V. குடும்பப்பகுதி

கிறிஸ்தவ குடும்பத்தில் மனைவி, கணவன், பிள்ளைகள், தகப்பன், அடிமைகள், எஜமானருக்கான பலதரப்பட்ட கடமைகள். 3:18-14.

**VI.அந்நியோந்நிய ஐக்கியத்தின் பகுதி**

அதிகாரம் :4.

1. சமூக நடத்தைப்பற்றி பவுல் ஜெபம் புத்தமதி அவைகளை கைக்கொள்ளும்படி வேண்டுகோள். வ.3-6.
2. முடிவான வாழ்த்துக்களும், ஊழியர்களுக்கான பாராட்டுகளும். வ.7-18.

---

## தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதலாம் நிருபம்

**ஆக்கியோன்** : அப்போஸ்தலனாகிய பவுல்

**காலம்** : நேரமும் இடமும் நிச்சயமில்லை. இது பவுலுடைய நிருபங்கள் எல்லாவற்றிற்கும் முந்தியது என்று பொதுவாகக் கருதப்படுகிறது. ஒருகால் கொரிந்து பட்டணத்திலிருந்து கி.பி.49 முதல் 54க்குள் எழுதப்பட்டிருக்கலாம்.

**திருச்சபை** : பவுலுடைய இரண்டாவது சுவிசேஷ பிரபல்யப் பிரயாணத்தின்போது அவரால் ஸ்தாபிக்கப்பட்டது. தனது ஊழியத்தில் வன்மையான எதிர்ப்பை சந்தித்தார். ஆனால் அவர் சில யூதர்களையும் எண்ணிக்கையற்ற கிரேக்கர்களையும் தம்பக்கமாக ஆதாயப்படுத்திக் கொண்டார். இது அவருக்கு ஒரு விசுவாசமான திருச்சபையை ஸ்தாபனம் செய்ய வாய்ப்பு அளித்தது. அப் 7:1-10 ஐப் பார்க்கவும்.

**வரலாற்று சந்தர்ப்பம்** : பவுல் தீமோத்தேயுவை அனுப்பி அந்த சபையை உற்சாகப்படுத்தவும், பலப்படுத்தவும் செய்தார். தீமோத்தேயு திரும்ப வந்த பொழுது அவன் கொடுத்த அறிக்கை அந்த அப்போஸ்தலரை எவ்வித தடையுமின்றி இந்த நிருபத்தை எழுதும்படியாகத் தூண்டியது.

**முக்கியமான பொருட்தலைப்பு** : இது பவுலுடைய அதிகமான நிருபங்களில் எல்லாம் அவருக்குத் தனிப்பட்டதாகும். இது மற்றவைகளில் சிலவற்றைப் போல தத்துவ கோட்பாடுகளோ, இறைமை சார்ந்த தர்க்கவாதமுடையதாகவோ அல்ல.
இந்த நிருபத்தின் மத்தி (உடல்) பகுதியில் முக்கியமாக பாராட்டுரைகளும், தனிப்பட்ட நினைவு நிழல்களும் ஆலோசனையும், உபதேசங்களுமே காணப்படுகின்றன.
இதன் மத்திய (கருத்து) சத்தியம் பலமானதாக உறுதிப்படுத்தப்பட்டு கிறிஸ்துவின் வருகையை வற்புறுத்துகிறது.

**பாடச்சுருக்கம்** : இந்த நிருபத்தை 5 பகுதிகளாகப் பிரிக்கலாம்.

**I. பாராட்டுதற்குரிய பகுதி**

அதிகாரம் :1

1. வாழ்த்துக்கள் வ. 1.
2. திருச்சபை பற்றிய பாராட்டுரை, அதனுள் இருக்கும் விசுவாசத்ததையும்,அன்பின் ஊழியத்தையும் குறித்ததானதாக (வ.2-4) ஆவிக்குரிய வரவேற்கும் பண்பையும் (வ.5-6) அதன் இணையற்ற

   செல்வாக்கு குறித்தும் (வ.7-8) விக்கிரகாராதனையை விட்டொழித்து ஆவிக்குரிய நம்பிக்கைக்காகவும். (வ.9-10).

**II. கடந்த காலத்தை நினைவுக்கு கொண்டு வரும் பிரிவு**

பவுல் அவர்களுக்குத் தன் ஊழியத்தின் நல்லொழுக்க பண்பியல்புகளை ஞாபகப்படுத்துகிறார்.

அதிகாரம் :2.

1. துணிச்சல், நேர்மை, தேவனுக்குப் பயப்படுதல், உண்மையாக இருத்தல் முதலியவற்றுடன் சுயநலமில்லாதவர்களாகவும். வ.2-5.
2. தாழ்மையாகவும், சாந்தம், வாஞ்சை, கடினஉழைப்பு பிழையின்மையுமாய் நடத்தல் பெற்றோர் பாசம். வ.6-12.
3. இங்கே அவர் திருச்சபையின் போதிக்கப்படக் கூடிய தன்மையையும், பாடுகளையும் குறிப்பிடுகிறார்.
4. அப்போஸ்தலனுடைய வாஞ்சையான திருச்சபையைச் சந்திக்க வருவதற்கு ஒத்துவாக்கிய குறிப்புகள் கொடுக்கப்படுகின்றன. மேலும் அவன் அவர்களை மகிழ்ச்சியின் கிரீடம் என்று தனக்கு மகிமையும், சதோஷமாயும் இருக்கிறார்கள் என்று பாராட்டுகிறான். வ.17-20.

**III. தூதுவர்களின் பிரிவு.**

அதிகாரம் :3.

1. திருச்சபையைப் பலப்படுத்துமாறு தீமோத்தேயு அனுப்பப்படுகிறான். வ.1-5.
2. அந்த செய்தியாளனுடைய நற்செய்தி அறிக்கையினாலே அதன் ஆறுதலான மகிழ்ச்சியான பலாபலன் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தும்படி செய்கிறது. வ.6-9.
3. பவுலுடைய மிகுந்த ஆவலுடைய ஜெபமானதுதான் அந்தத் திருச்சபையை வந்து பார்க்க வேண்டும் என்றும், அவர்களுடைய ஆவிக்குரிய முன்னேற்றத்துக்காக ஆசீர்வதிக்கச் செய்தார். வ.10-13.

**IV.உபதேசப் பிரிவு**

அதிகாரம் 4.

1. தனிப்பட்டதும் சமூகம் சார்ந்ததுமான பரிசுத்தம். வ.1-8. (உபதேசம்).
2. சகோதர சிநேகமும், யோக்கியமாக கைகளினாலே வேலை செய்து உழைக்கவும் (உபதேசம்) வ.9-12.

**V. வருங்காலத்தைப் பற்றிய நம்பிக்கை பிரிவு :**

அதிகாரம் 4. கர்த்தருடைய வருகை :

1. நித்திரையடைந்தவர்கள் நிமித்தம் ஆறுதலான நம்பிக்கை. வ.13-14.
2. உயிர்த்தெழுதலின் ஒழுங்குமுறை. வ.15.
3. கிறிஸ்துவின் வருகையோடு தோன்றும் விதமும், அதனுடன் வரும் சம்பவங்களும். வ.16-18.

   அதிகாரம் : 5.

4. அவருடைய வருகையை யாரும் அறிய முடியாது. வ.1-2.
5. அவிசுவாசிகளால் எதிர்பார்க்கப்படாதது. வ.3.
6. ஒளியின் பிள்ளைகள் அதற்கு ஆயத்தமாக வ.4-8.
7. விசுவாசிகளுக்குப் பாதுகாப்பு வ.9-11.

**VI.கடமைப்பிரிவு :**

1. கிறிஸ்தவ ஜீவியத்திற்கான நடைமுறை உடமைகள் பற்றிய உபதேசம் 5:12-22.
2. முடிவான பொறுப்பும், ஆசீர்வாதமும். 5:23-28.

### தெரிவு பகுதிகள்

- கிறிஸ்துவின் இரண்டாவது வருகை 4:13-5; 11.
- நடைமுறை கடமைகள். 5:12-22. இது ரோமர் 12ம் அதிகாரத்துக்கு துணை நண்பனான பகுதி.

---

## தெசலோனிக்கேயருக்கு எழுதிய இரண்டாம் நிருபம்

1தெசலோனிக்கேயருக்கும் பின்வரும் தொடர்ச்சி.

**ஆக்கியோன் :** பவுல் அப்போஸ்தலன்.

**காலம் :** ஒருவேளை கொரிந்து பட்டணத்திலிருந்து முதலாம் நிருபம் எழுதப்பட்ட காலத்திற்கு சற்று தாழ்த்தி எழுதப்பட்டதாகும்.

**வரலாற்று சம்பவம் :** பவுலின் முதலாம் நிருபத்தில் எழுதப்பட்ட சில வெளிச்சொற்கள் இந்த திருச்சபைக்கு எழுதப்பட்டதில் தவறாக வியாக்கியானம் செய்யப்பட்டது. கிறிஸ்துவுடைய வருகையின் காலம் பற்றி நிச்சயமில்லை என்று பவுல் குறிப்பாகக் கூறியதாவது, அவனுடைய சொற்கள் கர்த்தருடைய நாள் வெகு சீக்கிரம் இருக்கிறது போல புரிந்து கொள்ளப்பட்டது. இது தேவையற்ற உள்ளக் கிளர்ச்சிக்கு விளைவாயிற்று. விசுவாசிகள் நிலையற்றவர்களாக திகில் அடைந்தனர். 2:2. அவர்கள் கர்த்தருடைய வருகை சமீபமாய் இருக்கிறதென்பதை பற்றி தவறான எண்ணங்களைக் கொண்டிருந்தனர். இதனால் அவர்களுடைய ஜீவியம் அமைதியை இழந்தது.
அதிகாரம் 2, 3ல் அமைந்திருக்கும் வார்த்தைகளில் இருந்து சிலர் கண்டு கொள்ள விரும்பியதாவது, அந்த திருச்சபை பொய் கையெழுத்திடப்பட்ட நிருபத்தை பெற்றுக் கொண்டுள்ளது என்ற தவறான கருத்தானது பிரச்சனையை அதிகமாக்கியது. ஆனால் இது முழுவதும் உத்தேசமானதுதான். பவுலுடைய நிருபம் இந்த குழப்பமும் வருங்கால எதிர்பார்ப்பும் உடைய திருச்சபையை அமைதிபடுத்தச் செய்வதற்காக எழுதப்பட்டது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

**மத்திய பொருள் தலைப்பு** : கிறிஸ்துவின் இரண்டாம் வருகை.

**திறவுகோல் வசனம்** :3:5.

**பாடச்சுருக்கம்** : இந்த நிருபம் மூன்று பகுதிகளாக பிரிக்கப்படலாம்.

**I. அதிகாரம் 1.**

1. வாழ்துக்களும், நன்றி செலுத்துதலும். வ.1-3.
2. a. துன்பப்படுத்தப்படும் திருச்சபைக்கான ஆறுதலான வார்த்தைகள் வ. 4-6.
   b. கிறிஸ்து வருகையின் போது விசுவாசிகள் பெறப்போகும் மகிமையான வருகங்காலத்தையும் மனந்திரும்பாத பொல்லாதவர்களுக்கு வரும் முடிவையும் இந்த இரண்டிற்கும் இடையே உள்ள கூர்மையான வேறுபாடு பற்றியது. வ.7-12.

**II. அதிகாரம் 2.**

1. கர்த்தருடைய வருகை பற்றிய தவறான கருத்துக்களால் ஏற்படும் அமைதிக் குறைவைப் பற்றிய எச்சரிக்கை. வ.1-2.
2. அவரது வருகைக்கு முன்னர் ஏற்படும் சம்பவங்கள் பற்றிய அறிவிப்புரைகள்.
   a. வருங்கால கள்ள உபதேசம் வ.3.
   b. பாவ மனிதன் தன்னைப் பற்றி தற்புகழ்ச்சியான உயர்த்துதல் வ.3-4.
   c. வரும் சரியான காலத்தில் தடை செய்கிறவன் வெளிப்படுவான். கூடவே அவனுடைய அடையாளங்களும், பொய்யான அற்புதங்களும் வெளிப்படும். வ.5-9.
   d. இந்த சாத்தானிய நபர் கிறிஸ்து வரும்பொழுது அழிக்கப்படுவான். வ.8.
   e. இந்த பொல்லாதவர்களை கொடிய வஞ்சகமானது வஞ்சித்து விடும். வ.10-12.

3. உபதேசத்தில் நிலை நிற்குமாறு சுவிசேஷத்தைப் பற்றி அனுகூலங்களை அனுபவித்து மகிழ்ந்த விசுவாசிகளுக்கு ஓர் அன்பான வேண்டுகோள். வ.13-15.
4. ஆறுதலான ஆசீர்வாதங்கள் வ.16-17.

**III. அதிகாரம் :3.**

1. திருச்சபையில் அப்போஸ்தலருடைய நம்பிக்கைகுரிய தன்மையும்,
   a. அவர்களுடைய ஜெபங்களுக்காக வேண்டுகோள். வ.1-2.
   b. அவர்கள் பொல்லாப்பிலிருந்து விலகி கட்டளைகளுக்கு கீழ்படிந்திருப்பார்கள் என்று நம்புகிறான். வ.3-4.
   c. கிறிஸ்துவுடைய வருகைக்காக அவர்களைப் பொறுமையுடன் காத்திருக்கவும், ஒழுங்கீனமான சகோதரர்களிடமிருந்து அவர்கள் விலகியிருக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறான். வ.5-6.
2. அப்போஸ்தல உதாரணம் :
   a. ஒழுங்கு முறையான ஜீவியமாக. வ.7.
   b. தங்களுடைய சொந்த தயாரான ஆதரவை நற்பெயருக்காக வழங்குமாறு வ.8-9.
   c. விசுவாசிகள் தாங்கள் உழைத்துச் சாப்பிடவேண்டும் என்று வற்புறுத்துதல். வ.10.
3. முடிவான கடிந்து கொள்ளுதல் :
   a. சோம்பலானவர்களையும் தங்களுக்கு அடாத காரியங்களில் தலையிடுகிறவர்களுக்கும். வ.11-12.
   b. விடாமுயற்சியுடன் உழைத்தலும், பிடிவாதமாகக் கீழ்படியாமையும். வ.13-14.
4. ஆசீர்வாதமும், வாழ்த்துக்களும்.

---

## தீமோத்தேயுவுக்கு எழுதிய முதலாம் நிரூபம்

**ஆக்கியோன்** : அப்போஸ்தலனாகிய பவுல்.

**காலம்** : நிச்சயமில்லை.

**முக்கியமான பொருள் தலைப்பு** : ஆலோசனையும், உபதேசமும் ஒரு வாலிபனான போதகருக்கு அவனுடைய சொந்த நடத்தையையும், ஊழியத்தையும் குறித்து.

**திறவுகோல் வசனம்** : 3:15.

**பாடச்சுருக்கம்**

**I. முக்கியமான தத்துவ ஆலோசனைகளும் சொந்தமான அனுபவங்களும்.**
அதிகாரம் :1.

1. வாழ்த்துக்கள். வ.1-2.
2. நியாயப்பிரமாணப் போதகர்களை எவ்வாறு நடந்து கொள்வதென்பதற்கு
   a. உண்மையான தேவபக்தியை விட அவசியமற்றவைகளை வற்புறுத்துகிறவர்களையும், மேலும் நல்லொழுக்கத்தை கட்டி எழுப்புவதைவிட குழப்பத்தை உண்டுபண்ணுகிறவர்களையும். வ.3-6.
   b. நியாயப்பிரமாணத்தின் குறிப்பிடத்தக்க காரியங்களை அறிந்து கொள்ளாமல் பிரமாணத்தின் போதகர்களாக இருக்க விரும்புகிறவர்களுக்கு. வ.7-11.
3. பவுலுடைய அனுபவம் :
   a. சுவிசேஷத்திற்கு சுறுசுறுப்பான எதிர்ப்புக்குள்ளும் ஊழியத்திற்கான பவுலின் அழைப்பு. வ.12-13.
   b. தெய்வீகக் கிருபையை பவுல் ஒப்புக்கொண்டும் அவனுடைய அபாத்திரத் தன்மையை பற்றிய அறிக்கையும். வ.14-15.
   c. கிறிஸ்துவின் பொறுமையை அனுபவிக்கிறவனாய் வ.16.
4. தீமோத்தேயுவுக்கு கொடுத்த முறை சார்ந்த முதல் பொறுப்பு. வ.18-20.

**II.** **ஜெபமும், மனிதர்கள் ஸ்திரீகளுக்கான ஜெபமும் ஆலோசனையும்.**
அதிகாரம் : 2.
1. எல்லாமனிதர்களுக்காகவும் ஏறெடுக்கப்படும் மன்றாட்டு ஜெபம். வ.1-4.
2. கிறிஸ்துவே மத்தியஸ்தராக வ.5-6.
3. புறஜாதிகளின் அப்போஸ்தலனாக பவுல். வ.7.
4. மனுஷர் ஸ்திரீகளுக்கான கடமைகள். வ.8-15.

**III. ஆவிக்குரிய மேற்பார்வை கண்காணிகளுக்கும் உதவிக்காரருக்கும்.**
அதிகாரம் :3.
1. ஒரு கண்காணியானவனுக்கு இருக்க வேண்டிய யோக்கியாதம்சங்கள்.
   a. தன்னுடைய சொந்த நல்லொழுக்கமும், பழக்கவழக்கங்களும் வ.2-3.
   b. தன்னுடைய குடும்பத்தைப் பற்றிய மனப்பான்மை. வ.4-5.
   c. அனுபவமும், நற்பெயர் பெற்ற காட்சியும். வ.6-7.
2. உதவிக்காரருக்கான தகுதிகள் :
   a. நன்னடத்தை, பழக்கவழக்கம், கிறிஸ்தவ அனுபவங்கள். வ.8-9.
   b. கொஞ்சகாலம் சோதிக்கப்பட்டும். வ.10.
   c. விசுவாசமுள்ள மனைவியையுடையவர் மேலும் குடும்பத்தின் மேல் முறையான அதிகாரத்தையும் உடையவராய் இருக்கவேண்டும். வ.11-12.
   d. உதவிக்காரனாக இருப்பதற்குள்ள ஆசீர்வாதங்கள். வ.13.
3. இந்த நிருபத்ததை எழுதிய நோக்கம் வ.15.
4. இயேசுவின் திருஅவதாரத்தைக் குறித்தான இரகசியம். வ.16.

**IV.தீர்க்கதரிசனமும் ஆலோசனைகளும்.**
அதிகாரம் :4.
1. வருங்கால அவபக்தி குறித்தான தீர்க்கதரிசனம் மேலும் சாத்தானிய கோட்பாடுகளை குடும்பத்தையும் தேவனற்ற துறவறத்தில் முடிகிறதான கோட்பாடுகளைப் பற்றியதும். வ.1-4.
2. போதனை, ஊழியர்களின் நடத்தை முன்மாதிரி பற்றிய ஆலோசனைகள் முதலியன.
   a. கிறிஸ்துவினுடைய நல்ல ஊழியர் என்பதற்கான அடையாளக் குறிப்பு வ.6.
   b. தேவபக்தி பற்றி உயர்ந்த மேன்மை. வ.7-8.
   c. தேவ பக்தியான முன்மாதிரி. வ.12.
   d. வேதவாசிப்பிலும், போதனையிலும் தளரா உழைப்பும், ஆவியின் வரங்களைப் பயன்படுத்திக் கொள்வதும். வ.13-14.
   e. தியானம் செய்வதன் முக்கியத்துவமும் முற்றிலுமான பரிசுத்தமாகுதலும் விழிப்புணர்வு, தன் நன்நடத்தை ஆகியவைகளுடன் தாக்கத்தைக் காப்பாற்றிக் கொள்ள. வ.15-16.

**V. ஊழிய நிர்வாகமும், அது பற்றிய ஆலோசனைகளும்**
அதிகாரம் : **5**
1. முதியோர்களுக்கும், இளைஞர்களுக்கும் மரியாதை செய்தல் வ.1-2.
2. விதவைகளுக்கான திருச்சபையின் மனப்பான்மை. வ.3-16.
   குறிப்பு :- இந்த பகுதியானது, அக்காலத்தைப் பற்றிய அறிவும், சமூக நிலைகளைக் குறித்த ஞானத்தைக் கொண்டு படித்தறிய வேண்டும்.
3. திருச்சபை மூப்பர்களுக்கு தரவேண்டிய கடமை. வ.17-20.
4. பராபட்சமற்றதும் வேண்டுமென்று செய்யப்படுகிற நடவடிக்கையும். 21-22.
5. வாக்கிய இடை குறியீடு – தன் சுயநிலைமைக்கான ஆலோசனை. வ.23-25.

அதிகாரம் : **6**

6. வேலைக்காரருடைய கடமைகள். வ.1-2.
7. முரண்பாடுள்ள போதகர்களை விட்டு பிரிந்திருக்கும் கடமை. வ.3-5.
8. மனதிருப்தியின் ஆசீர்வாதங்கள். வ.6-8.
9. ஐசுவரியத்தின் அபாயமும், பேராசையை விட்டு விலகி கிறிஸ்தவ பண்பாடுகளைத் தேடி “விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராட வேண்டும்” வ.9-12.

10. ஒரு வாலிபப்போதகருக்கான பெருமிதமான பொறுப்பு. தன்னுடைய தத்துவ கோட்பாடுகளை பரிசுத்தமானதாக இராஜாதி ராஜா வரும் வரைக்கும் பாதுகாத்துக் கொள்ளும் படியாக. வ.13-16.
11. ஐசுவரியவான்கள் இறுமாப்பும் சுய நம்பிக்கையும் கொள்ளாமல் அவர்களை நன்மை செய்யவும் நற்கிரியை செய்கிவர்களாக இருக்க எச்சரிக்கவும். வ.17-19.
12. உனக்கு ஒப்புவிக்கப்பட்டதை நீ விசுவாசமாய் காத்துக் கொண்டு பொய்யான உபதேசங்களுக்கு விலகி இருப்பாயாக. வ.20-21.

---

## தீமோத்தேயுக்கு எழுதிய இரண்டாம் நிருபம்

**ஆக்கியோன்** : பவுல் அப்போஸ்தலன்.

**இடமும், காலமும்** : ஒருகால் ரோமாபுரியில் இருந்து கி.பி. 65-67ல் எழுதப்பட்டிருக்கலாம். இதில் அப்போஸ்தலனுடைய கடைசியான வார்த்தைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை இதில் அடங்கியுள்ளன.

### நோக்கம்

1. பொதுவானது. ஒரு இளமையான போதகரை அவருடைய ஊழியப் பணியில் உற்சாகப்படுத்தவும் போதிக்கப்படவும்.
2. விசேஷமாக. சுவிசேஷத்தில் மகனாகிய தீமோத்தேயுவை ரோமாபுரிக்கு விரைந்து போகும் படிக்கும், அதனால் அவனுடைய தோழமையான துணையானது, அப்போஸ்தலனுக்கு ஆறுதலாக இருக்கவும். 1:4; 4:9,21.

**வரலாற்று சந்தர்ப்பம் :** பவுல் ரோமாபுரியில் இரண்டு தடவைகளாக காவலில் வைக்கப்பட்டிருந்ததாகப் பொதுவாக நம்பப்படுகிறது. மேலும் அந்த இரண்டாவது காவலில் வைக்கப்பட்டிருந்த சமயத்தில் தான் இந்த நிருபம் எழுதப்பட்டது. இதற்கு முன்நாட்களில் அவனுக்கு ஓரளவு சுதந்திரம் அளிக்கப்பட்டிருந்தது. அவன் தனக்கு சொந்தமான வாடகை வீட்டில் வாசம் பண்ணினான். அப் 28:30.
அந்த சமயத்தில் அவன் தன்னுடைய சிநேகிதர்கள் அவனை நெருங்கிவரக் கூடியவனாக இருந்தான். ஆனால் இப்பொழுதோ அவன் அடைக்கப்பட்டு சிறையில் இருக்கிறான். ஒநேசிப்போரு கூட அவனைக் கண்டுபிடிப்பதை கடினமாக உணர்ந்தான். 1:17. அவனுடைய முன்னாள் சிநேகிதர்களால் கைவிடப்பட்டு விட்டான். 1:15. வெகுவிரைவில் சிரச்சேதம் செய்யப்படப் போவதாக எதிர்பார்த்திருந்தான். 4:6. இந்த நிருபத்தின் ஊடே ஒரு பரிதாபகரமான தனிமையின் இழையோடிக் கொண்டு தீமோத்தேயுவைப் பார்க்க ஆசையோடிருந்தான்.

### இந்நிருபத்தில் உள்ள விநோதங்கள்

தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட இந்த இரண்டு நிருபங்களிலும் அவசரமான உபதேசங்கள் அடங்கியுள்ளன. ஒருவேளை அவன் பயந்தவனாக இருந்திருக்கலாம். 2தீமோ.1:6-7. “நான் வெட்கப்படுவதில்லை” என்ற வார்த்தை இந்த நிருபத்தில் பகீரங்கமாக் காணப்படுகிறது. தன்னுடைய சாட்சியைப் பற்றி வெட்கப்படக் கூடாது என்றும், தன்னுடைய சிறைச்சாலை நண்பனை, 1:8; அவனுடைய ஊழியப்பணியை 2:15; வெட்கப்படுவதில்லை என்று கூறினான். தன்னை கடினமான போராட்டத்தின் மத்தியில் போர்வீரனாகக் கருதும்படி உபதேசித்தான். 2:3-4.

**இந்த நிருபத்தை நான்கு பகுதிகளாக பிரிக்கலாம்**. அதன் அதிகாரங்களே இயல்பான பிரிவுகளாக அமைகின்றன.

### தலைப்புச் சுருக்கம்

**I. தனிப்பட்ட வாழ்த்துக்கள், உபதேசங்கள், அனுபவங்கள்.**
அதிகாரம் :1
1. அன்பின் வாழ்த்துதல் வ.1-4.

2. தீமோத்தேயுவுக்கு அவனுடைய தேவபக்தியுள்ள முன்னோரைப் பற்றி நினைவூட்டியும் அவனுடைய ஆவல் மிகுந்த பற்றுக்கும், தைரியத்துக்கும் ஆன உபதேசம் வ.5-8.
3. கிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றி ஒரு முன்னுரை ஒத்துவாக்கியம். வ.9-10.
4. இந்த நிருபத்தை எழுதினவருடைய சொந்தமான ஊழியத்திற்கான அழைப்பும், அவருடைய கர்த்தருக்குள் அயராத நம்பிக்கையும் பற்றிய ஒப்புமையான குறியீடுகள். வ.11-12.
5. இரண்டாவதான உபதேசம். வ.13-14.
6. ஆசியாவிலுள்ள சபைகளின் விசுவாச பக்தியின்மை பற்றி ஒரு குறிப்பும், ஒநேசிப்போருவை நம்பத்தகுந்தவனாக பாராட்டுரையும். வ.15-18.

**II. முக்கியமாக கர்த்தருக்குள் இளமையான ஊழியக்காரனுக்கான ஆலோசனை.**
அதிகாரம் **2.**

1. ஆவிக்குரிய போர்வீரனாக, விளையாட்டு வீரனாக, பயிரிடும் விவசாயியாக.
   a. தெய்வீகக் கிருபையில் பலப்படவும், விசுவாசமான உதவிக்காரர்களைத் தெரிந்தெடுக்கவும். வ.1-2.
   b. போர்வீரனுக்குரிய பண்புகளாக சகிப்புத் தன்மையும், உலக சிக்கல்களிலிருந்து விலகியிருப்பதை வெளிப்படுத்தவும். வ.3-4.
   c. ஆவிக்குரிய மல்யுத்த வீரனாக விளையாட்டு விதிகளைக் கடைபிடிக்கும் படியாக. வ.5.
   d. அறுவடையை எதிர்பார்த்து பயிரிடுகிறவனாக. வ.6.
2. சிந்தனையில் வைக்க வேண்டிய சத்தியங்கள் :
   a. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அதைப்பற்றிப் பிரசங்கித்த காரணமானது பவுல் காவலில் வைக்கப்படுவதற்கு நேராய் வழி நடத்தியது. வ.7-9.
   b. திருச்சபைக்காக பாடுபடுவதும் கிறிஸ்துவுடன் மரிப்பதும், நித்தியஜீவனுக்கும் ஆவிக்குரிய கனத்திற்கும் நேராய் நடத்துகிறது. வ.9-12.
3. மார்க்கத்து முரண்பாடுகளையும், மார்க்க பேதங்களையும் சந்திப்பதற்கான ஆலோசனை.
   a. கவிழ்த்துப் போடுகிறவர்களுக்கு கர்த்தருக்கு முன்பாக எச்சரித்து புத்திசொல்லு. வ.14.
   b. சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதிக்கிறவனாக வ.15.
   c. வீண்பேச்சுகளுக்கு விலகி அரிபிளவை போல படரும் அவபக்தியுள்ளவர்களின் வார்த்தை ஆவிக்குரிய ஜீவியத்தை தின்று விசுவாசத்தை அழித்துப்போடும். வ.16-18.
   d. தேவனுடைய அஸ்திபாரம் உறுதியானது என்று நினைவு கூர்ந்து கிறிஸ்தவர்கள் அநியாயத்தை விட்டு விலகி இருக்க வேண்டும். வ.19.
   e. சபையானது பெரிய ஒரு வீட்டைப் போலவே கனத்துக்கென்று சில பாத்திரங்களையும், கனவீனத்துக்கென்று சில பாத்திரங்களையும் உடையது என்று நினைவு கூர்ந்து, ஒவ்வொரு விசுவாசியின் நோக்கமும் "எஜமானருக்குப் பிரயோஜனம் உள்ளவர்களாக" இருக்க வேண்டும். வ.20-21.
4. சுயமான தனிப்பட்ட இச்சைகளையும், போராட்டத்தையும் எப்படி சந்திப்பது.
   a. தனிப்பட்ட பரிசுத்தமும் ஆவிக்குரியவைகளை கைக்கொள்ளுதலின் முக்கியத்துவமும். வ.22.
   b. புத்தியீனமும், அயுக்தமுமான தர்க்கங்களை விட்டு விலகியிருப்பதன் அவசியத்தையும் அதனால் உண்டாகும் சண்டைகளை விட்டு விலகியிருந்தும், எதிராளிகளை அவர்கள் பின்னர் மனந்திரும்புவார்கள் என்ற நம்பிக்கையில் அவர்களுடன் பொறுமையுடன் நடந்து கொள்ள வேண்டும். வ. 23-26.

**III. முதன் முதலாக அவபக்தி, சமூக சீர்கேடு பற்றி முன்னுரைத்தலுடன் இவைகளுடன் விடாமுயற்சியாக நிலைநிற்பதற்கான உபதேசங்கள்.**
அதிகாரம் :3.

1. கடைசி காலங்களில் மனிதர்களுடைய பலவிதமான சீர்கேடு மார்க்கம் என்னும் வேஷத்தில் பாலியல் இச்சைகளைக் கைக்கொள்ளுகின்றனர். வ.1-6. அவர்களுடைய மூடத்தனமும், புத்தியீனமும் ஒருநாள் ஒவ்வொருவருக்கும் பிரத்தியட்சமாக்கப்படும். வ.7-9.
2. இரண்டு வாக்கியக் குறியீடு. துன்பப்படுத்தப்படுதலை பற்றிய குறிப்புரைகள். வ.11-12.
3. பாவத்தின் பொங்கி எழும்பும் அலை என்ற முன்னுரை. வ.13.

4. தீமோத்தேயுவை அவனுக்குள்ள ஆவிக்குரிய சந்தர்ப்பங்களுக்காகவும், சத்திய வேதத்தில் பெற்ற ஆரம்ப கால பயிற்சியையும் குறித்து உறுதியாக நிலைத்து நிற்குமாறு வேண்டுகோள் . வ.14-15.
5. தூண்டி எழுப்பும் தேவனுடைய வார்த்தையின் வல்லமை கிறிஸ்த ஊழியரை தமது ஊழியத்திற்காக தகுதிப்படுத்தும் பூரணாராக்கும்படி. வ.16-17.

**IV. உருக்கமான பொறுப்பு : வெற்றியான முடிவு, வருத்தமான கைவிடப்படுதல், பரிதாபமான வேண்டுகோள் பூரணமானதோர் நம்பிக்கை.**

அதிகாரம் :4

1. உருக்கமான பொறுப்பு :
   a. செய்தியை (சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதைக் குறித்ததான் விசுவாசம் நிறைந்திருத்தல் வ.1-2).
   b. மனிதர்கள் சத்தியத்தை இகழுவதும், அவர்களுடைய சொந்தமான லௌகீகமான இச்சைகளைப் போதிக்கும் போதகர்களைத் தேடும் காலம் வரும் என்ற முன்னறிவிப்பு வ.3-4.
   c. ஒரு நேர்மையான விசுவாசமுள்ள ஊழியம் செய்யும்படி உபதேசம். வ.5.
   d. தீமோத்தேயுவை சீக்கிரம் வரும்படியாக வேண்டிக் கொள்வது. வ.9,21.
   e. முடிவான வாழ்த்துக்களும் ஆசீர்வாதங்களும். வ.19-22.

---

## தீத்துவுக்கு எழுதிய நிருபம்

**ஆக்கியோன்** : அப்போஸ்தலனாகிய பவுல்.

**தீத்துவைக் குறித்தான விஷயங்கள்**. அவன் புறஜாதியான கலா 2:3. பவுலுக்கு பிரியமான சிநேகிதனும், உதவிக்காரனும் (2கொரி 2:13; 7:6,13; 8:23) கொரிந்துவிலுள்ள திருச்சபைக்கு ஒரு தூதுவன் 2கொரி 8:16-18. அவன் முழுவதுமாக நம்பத்தக்கவனும் தன்னலமற்றவனாய் இருந்தான். 2கொரி 12:18. எருசலேமுக்கு சென்ற பிரயாணத்தில் பவுலுக்கும், பர்னபாவுக்கும் ஒரு துணை நண்பனாக இருந்தான். கலா 2:1. அவன் கிரேத்தா தீவில் சபைகளை மேற்பார்த்துக் கொள்ளும்படி பவுல் விட்டுவிட்டு வந்தவன். தீத்து 1:5 பவுல் சிறைக்காவலில் இருந்தபொழுது பவுலுடன் ரோமாபுரியில் இருந்தவன். 2தீமேத்தேயு 4:10. அவன் தீமோத்தேயுவை விட ஆரோக்கியமுள்ளவனாகவும், ஒருவேளை அதிகமாக முதிர்ச்சி பெற்றவனாக இருந்தான்.

**முக்கிய தலைப்பு பொருள்** : ஊழியத்தின் கடமைகள், தத்துவ கோட்பாடுகள் குறித்தான ஆலோசனைகளும் உபதேசங்களும் நல்ல கிரியைகளை நிலைநிறுத்துமாறு விசேஷமான வற்புறுத்துதலுடன்.

**திறவுகோல் பகுதி** : 1:5; 3:8.

**முக்கியமான கருத்தெண்ணம்** : நற்கிரியைகளைக் குறித்தான வற்புறுத்துதல் பின்வரும் வசனங்களில் காணக்கிடக்கின்றன. 1:16; 2:7,14; 3:1,8,14. பவுலுடைய நிருபங்களுக்கும், யாக்கோபுடைய நிருபத்துக்கும் இடையே தத்துவ கோட்பாடுகளைப் பற்றிய போராட்டம் இருக்கிறது என்று உரிம கோருபவர்களுக்கு இந்த வசனப்பகுதிகள் பதிலாக கொடுப்பதற்குப் போதுமானதாகும்.

கிரேத்தா தீவாருடைய நன்னடத்தையானது, எப்படியோ என்ற எண்ணத்தில் அவர்களுடைய ஊழியரை அவர்கள் ஒரே சீரான கிறிஸ்தவ ஜீவியம் செய்யுமாறு சொல்லும்படியாக அந்த ஊழியருக்கு ஆலோசனை சொல்வது அவசியம் என்று பவுல் நினைத்தார். எப்படியென்றாலும் இந்த நிருபம் கிரியைகளினால் இரட்சிப்பு உண்டாகிறது என்று போதிப்பதில்லை. 3:5.

**பாடச்சுருக்கம்**

**I. முதலாவதாக திருச்சபை ஒழுங்கு முறையும், ஒழுங்கு பற்றியும் கற்பித்தல்.**
அதிகாரம் :1

1. வாழ்த்துக்களும், சுவிசேஷத்தின் மகிமையான நம்பிக்கைப் பற்றிய குறிப்பு வசனங்கள் வ.1-4.
2. கிரேத்தா தீவுக்கு பணிசெய்வதற்காக தீத்துவை பவுல் அனுப்பியதன் நோக்கம் வ.5.
3. திருச்சபை ஒழுங்குமுறையும் ஒழுங்கும்.
   a. மூப்பர்களுக்கும், கண்காணிகளுக்கும் இருக்க வேண்டிய ஒழுக்கமும் தகுதிகளும். 2:6-9.
   b. கூலி பொருத்திக்கொண்ட வாடகை போதகர்கள் பேராசையுள்ள மனப்பான்மை உள்ளவர்கள் ஆதலால், அவர்கள் அடக்கி வைக்கப்படவேண்டும். வ.10-11.
   c. கிரேத்தா தீவாருடைய கேடுபாடுள்ள நடத்தையானது, கண்டிப்பான நடவடிக்கை பெற்றுக் கொண்டு சத்தியத்திற்கு விடாமுயற்சியுடன் நிலை நிற்கும்படி ஆவண செய்யப்பட வேண்டும். வ.12-14
   d. உள்ளான களங்கமடைதலும் மாய்மாலமும் கண்டிக்கப்படவேண்டும். வ.15-16.

**II. ஆரோக்கியமான உபதேசமும், நற்கிரியைகளும்**
அதிகாரம் :2

1. பலதரப்பட்ட வகுபார்களுக்காக ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய அப்போஸ்தல போதனைகள் :
   a. முதிர் வயதுள்ள ஆண்களும், பெண்களும் பற்றிய அவர்களது ஆவியும் பழக்கவழக்கமும். வ.2-3.
   b. இளைஞர்களான மனிதர்களுக்கும், பெண்களுக்கும் ஏற்றப்படி போதிக்ககூடியவை. வ.4-6.
   c. தீத்துவுக்கு அவனுடைய தனிப்பட்ட முன்மாதிரியைக் குறித்த உபதேசம். வ.7-8.
   d. அடிமைகளுடைய கடமைகள். வ.9-10.
2. இரட்சிப்பின் பொதுவான சந்தர்ப்பத்து வேண்டுகோள்.
   a. இந்த உலகத்தில் சுய வெறுப்பும், தேவ பக்தியும். வ.11-12.
   b. கிறிஸ்து வருகிறார் என்ற ஆசீர்வாதமான நம்பிக்கை நிறைவேறும்படி எதிர்பார்ப்பது வ.13.
   c. பரிசுத்தமான ஜீவியம் செய்தல். வ.14.

**III. முதலாவதாக கூடுதலான போதனைகள் நல்ல கிரியைகளைக் கைக்கொள்ளும் கோட்பாடும் தெய்வீக முறையான இரட்சிப்பையும் பற்றியது.**
அதிகாரம் :3.

1. சமூக கட்டுப்பாடுகளும், கடமைகளும். வ.1-2.
2. கிருபை என்ற முறையால் பெரும் இரட்சிப்பு.
   ய. பாவத்தின் பொதுவான தன்மை. வ.3.
   டி. நீதியின் நற்கிரியைகளினிமித்தம் நாம் அடிப்படையாகக் கொண்டு இரட்சிக்கப்படாமல் தமது இரக்கத்தின் படி நம்மை இரட்சித்தார். வ.4-7.
3. நற்கிரியைகளைச் செய்யும்படி எப்பொழுதும் போதிக்க வேண்டுமென்பது முக்கியமானதாகும். வ.8.
4. புத்தியீனமான தர்க்கங்களும், வேதப்புரட்டும் கண்டித்தும் புத்திசொல்லி பின் விலகவேண்டும். வ.9-11.
5. முடிவான வார்த்தைகளும், ஆசீர்வாதமும். வ.12-15.

## தெரிவு பகுதிகள்

ஆசீர்வாத நம்பிக்கை 2:11-14.
கிருபையினாலே இரட்சிப்பு 3:4-7.

---

## பிலேமோனுக்கு எழுதிய செய்தி கடிதம்

ஒரு பிரத்தியேகமான மன்றாட்டுக் கடிதம் பவுலால் ரோமபுரியிலிருந்து எழுதப்பட்டு கொலோசெ பட்டணத்து பிலோமோனுக்கு அனுப்பப்பட்டது. கொலோ.4:7-9.

**பிலேமோனைக் குறித்ததான விஷயங்கள்** : அவன் கொலோசெ பட்டணத்துத் திருச்சபையில் மிகத்தெளிவாக ஒரு நபராக இருந்தான். அந்த சபை அவனுடைய வீட்டில் கூடி வந்த சபையாகும். வ.2. அவனுடைய தாராளமான குணம் (வ.5-7). பவுல் பிலேமோனை தனக்கு தங்க ஓர் இடம் ஆயத்தம் செய்யும்படி வேண்டிக் கொண்டான். (வ.22). இது அவனை ஒரு வசதி படைத்த மனிதனாகச் சுட்டிக் காட்டுகிறது. பவுல் கொலோசெ பட்டணத்துக்கு முன்னர் போயிருக்கவில்லை. (கொலோ 2:1) ஆகவே பிலேமோன் பவுலை வேறெங்காவது சந்தித்திருக்கலாம். ஒருவேளை எபேசுவில் ஆக இருக்கலாம். ஏனென்றால் எபேசு அங்கிருந்து அதிகத் தூரத்தில் இருக்கவில்லை. ஒருவேளை பிலேமோனுடைய மனந்திரும்புதலுக்கு பவுல் காரணமாயிருக்கலாம். (வ.19).

**ஒநேசிமு பற்றிய கதை** : ஒநேசிமு பிலேமோனை விட்டு ஓடிப்போனதோர் அடிமை. அவன் தன் எஜமானிடம் திருடிவிட்டு ரோமாபுரிக்கு ஓடிப்போனான் என்று மறைமுகமாகக் கூறப்படுகிறது. அங்கு அவன் பவுலுடைய தாக்கமான செயல்வாக்கிற்குள் வந்தான். அதனால் மனந்திரும்பினான். (வ.10).
அவன் கிறிஸ்துவுக்கு மிகவும் பக்தியுள்ள சீஷனாக ஆனான். கொலோ 4:9. பவுல் அவனைத் தனக்கு ஒரு உதவியாளனாக ரோமாபுரியில் வைத்துக் கொள்ள விரும்பினான். ஆனால் பிலேமோனுடைய சம்மதமில்லாமல் அல்ல. (வ.14). ஆகவே பவுல் அந்த அடிமையானவனை அவனுடைய எஜமானனிடம் திரும்பவும் அனுப்பிவிடுவது தன் கடமை என்று உணர்ந்தான்.
ஆகையால் அந்த அப்போஸ்தலர் இந்த அழகிய மன்றாட்டு கடிதத்தை எழுதுகிறார். அதில் ஒநேசிமுவை மன்னித்து தன் பிரியத்துக்குள் திரும்பவும் எடுத்துக் கொள்ளுமாறு வேண்டுகிறார்.

**பாடச்சுருக்கம்**

1. அன்புள்ள கருத்துரையான வாழ்த்துக்கள். வ.1-7.
2. ஒநேசிமுவுடைய மாறிய நடத்தையைக் குறித்த நற்சான்று. வ.10-11.
3. அந்த திரும்பிவரும் அடிமையை மன்னித்து விடும்படியாக உருக்கமானதோர் வேண்டுகோள். வ.12-19.
4. பிரிவுபசார வாழ்த்துக்களும், ஆசீர்வாதமும். வ.20-25.

### ஆவிக்குரிய பாடங்கள் பவுலின் உதாரணத்தில் இருந்து

1. துர்அதிர்ஷ்டமானவர்களுக்கு காட்டும் கரிசனையின் முக்கியத்துவம்.
2. விசுவாசிகள் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்படியும் கடமைப்பட்டவர்கள். ஆகவே ஒநேசிமுவும் தன் எஜமானனிடம் திரும்பிப் போக வேண்டும்.
3. கிறிஸ்தவ சகோதரத்துவம் சகல சமூக, வகுப்புவாத வேறுபாடுகளை தடயமின்றி நீக்கி விடுவிறது.

---

## எபிரெயருக்கு எழுதிய நிருபம்

**ஆக்கியோன்** : **காலம்** - நிச்சயமில்லை.
பெயரிடப்படாத இக்கடிதம் பவுல், பர்னபா, லூக்கா, அப்பொல்லோ மற்றும் சிலரும் எழுதியதாகக் கூறப்படுகிறது.

**நோக்கம்** : இந்த நிரூபம் மிகத் தெளிவாக எபிரெயக் கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டது. இந்த விசுவாசிகள் யூதமதத்திற்குள் பின் வாங்கிப் போகக்கூடிய அபாயத்தில் எப்பொழுதும் இருந்தார்கள் அல்லது கொஞ்சங்குறைய சடாங்காச்சாரங்களைக் கைக்கொள்ளுவதற்கு அதிகமான முக்கியத்துவத்தைக் கொடுத்தார்கள். இதை எழுதியவருடைய தத்துவக்கோட்பாட்டு நோக்கமாவது, பழைய ஏற்பாட்டோடு ஒப்பிடும் பொழுது இந்த கிறிஸ்த சகாப்தத்தின் மனிதத் திறன்- அறிவுக்கு அப்பாற்பட்ட மகிமை இன்னதென்று காட்டுவதாகும்.

**திறவுகோல் வார்த்தை** : நல்லது அல்லது உயர்ந்தது. இந்த வார்த்தைகளைத் தொடர்நது புரிந்து கொள்ளும்பொழுது வாசிப்பவர் இதன் எண்ண ஓட்டத்தை கண்டுபிடித்துக் கொள்ளலாம்.

மற்றும் திரும்பத்திரும்ப வரும் வார்த்தைகளும் சொற்றொடர்களும் கீழே உட்கார்ந்து இங்கே கிறிஸ்துவினால் முடிவுறப்பெற்ற கிரியைகள் குறிப்பிடப்படுகிறது. 1:3; 10:12; 12:2; பரம அழைப்பு 3:1; ஆசாரியர் 4:14; வரம் 6:4. பொருளுடைமைகள் 10:4; தேசம் 11:16; நகரம் 12:22.

## நாம் செய்வோம் என்ற வரிசையில் 11 புத்திமதிகள்

1. பயந்திருக்கக் கடவோம் (எச்சரிக்கையாயிரு) - 4:1.
2. உழைப்பு (கிரியைகள் முடித்து ஓய்ந்து) - 4:11.
3. தைரியமாகக் (நம்பிக்கையோடு) கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம் - 4:16.
4. கடந்து போவோமாக - 6:2.
5. சேரக்கடவோம் - 10:22.
6. அசைவில்லாமல் உறுதி - 10:23.
7. ஒருவரையொருவர் கவனித்து - 10:24.
8. பாரமான யாவற்றையும் தள்ளிவிட்டு பொறுமையோடே ஓடக்கடவோம் - 12:1
9. தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி - 12:28.
10. புறப்பட்டு போகக்கடவோம் - 13:13.
11. துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலி - 13:15.

இந்த நிரூபம் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம்.

**பகுதி I. முக்கியமாக தத்துவ கோட்பாடு.**

**பகுதி II. முக்கியமாக நடைமுறைக்கானது.**

## பாடச்சுருக்கம்

**I. பிரிவு I. கிறிஸ்துவின் ஒப்புயர்வற்ற தன்மை**

**அதிகாரம் :1.**

1. தீர்க்கதரிசிகளுக்கு மேலாக அவருடைய தெய்வீக மகிமையின் காரணமாக. வ.1-3.
2. தூதர்களுக்கு மேலாக.
   a. எல்லா நாமத்திற்கும் மேலானதோர் நாமம். வ.4.
   b. பிதாவின் ஒரே ஏக சுதனாக யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட படியே வ.5.
   c. தேவ தூதர்கள் யாவரும் அவரைத் தொழுதுக் கொள்ளக் கடவர்கள் என்று கட்டளையிட்டார். வ.6.
   d. தூதர்களுக்கு மேலாக உயர்த்தி தேவனுடைய வலது பாரிசத்தில் நித்தியமான சிம்மாசனத்தில் அமருமாறு செய்தார். வ.8-14.

**அதிகாரம் :2.**

   e. அவருடைய செய்தியானது, முடிவானதில் முக்கியமாகவும் கவலையற்று இருப்போமானால் தண்டனைக்கு ஏதுவானது. வ.1-4.
   f. இயேசுவை தேவ தூதரிலும் சற்று சிறியவராக ஆக்கினார். மனித சமுதாயத்திற்காக அநேக மக்களைத் தமது பிதாவின் மகிமையோடு கொண்டு வருவதற்காக மரித்து மரணத்திற்கு அதிகாரியான பிசாசானவனை தமது மரணத்தினாலே அழித்தார். வ.9-14.

**பிரிவு II: கிறிஸ்துவின் ஒப்புயர்வற்ற ஆசாரியத்துவம். அதி 2 தொடர்ச்சி.**

1. அவர் மனித அவதாரம் எடுத்தார்.
   a. தம்முடைய ஒப்புரவாகுதல் ஆன ஊழியத்திற்கு முன் ஆயத்தமாக வ.16-17.
   b. அவர் சோதிக்கப்பட்டதாலே சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய. வ.18.

**அதிகாரம் :3.**

2. கிறிஸ்துவின் ஆசாரியத்தை ஒப்புக் கொள்ள ஓர் வேண்டுகோள்.
3. ஊழியக்காரனாகிய மோசேயை விட ஒப்புயர்வற்றவராக கிறிஸ்து குமாரனானார். வ.2-6.
4. வாக்கிய குறியீடு. இஸ்ரவேலரின் தோல்வி..
   a. கானானின் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க. வ.7-11.
   b. அவநம்பிக்கையினால் விலக்கப்பட்டார்கள். வ.12-19.

**அதிகாரம் :4.**

c. அவநம்பிக்கையுள்ள இஸ்ரவேலரது உதாரணத்தைப் பின்பற்றக்கூடாது என்று திருச்சபைக்கு ஒரு எச்சரிக்கை கொடுக்கப்படுகிறது. ஆனால் விசுவாசமான இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க வேண்டும். வ.1-18.

d. விசுவாசி தன் இரட்சிப்பின் கிரியைக்குள் இளைப்பாறுகிறான். தன்னுடைய சொந்தக் கிரியைகளை நம்புவதிலிருந்து விலகுகிறான். வ.9-11.

e. தேவனுடைய வார்த்தையின் வல்லமை. வ.12-13.

கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் என்ற தலைப்புத் திரும்பவும் ஆரம்பிக்கப்படுகிறது.

நமக்காகப் பரிதபிக்கும் பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து அசையாது நிலைநிற்பதற்கும், ஜெபத்துக்கும் உற்சாகம் தருகிறார். வ.14-16.

**அதிகாரம் :5.**

2. பிரதான ஆசாரியன் அவனுடைய உத்தியோகமும் ஊழியமும்.
   a. மனிதரிடமிருந்து பிரித்தெடுக்கப்படுகிறான். வ.1.
   b. தன் சொந்த பலவீனங்களால் பரிதபிக்கக் கூடியவன். வ.2.
   c. தனக்காக ஒருபலியும், மக்களுக்காக பலியும் செலுத்துகிறான். வ.3.
   d. தெய்வீகமாகத் தெரிந்தெடுக்கப்பட்டவன். வ.4.
3. கிறிஸ்துவுடைய ஆசாரியத்துவத்தின் குணநலன்கள் :
   a. புதிய ஒழுங்குமுறையில் தெய்வீகமாக தெரிந்தெடுக்கப்பட்டவர்.
   b. இரட்சிப்புக்காக ஊக்கமான வேண்டுதல்களை பணிந்து கீழ்படிதலுள்ள ஆவியிலே ஏறெடுத்தார். வ.7-8.
   c. நித்திய இரட்சிப்புக்கு ஊற்றானார். வ.9-10.
4. குறியீடான கண்டனம் வேண்டுகோள், எச்சரிக்கை, பாராட்டுரை.
   d. சோம்பலுக்காகவும், முதிர்ச்சியின்மைக்காகவும் கண்டனம்.

**அதிகாரம் :6.**

e. சத்தியத்து கோட்பாடுகளில் முன்னேற்றத்துக்காக ஒரு வேண்டுகோள். வ.1-3.

j. புதிய உடன்படிக்கையின் படி உயர்வான அனுகூலங்களை அனுபவித்தவர்கள் கிறிஸ்துவை விட்டு விலகித் திரும்புவதற்குக் கண்டனம். வ.4-8.

g. விசுவாசிகள் தொடர்ந்து விசுவாசமுள்ளவர்களாக நிலைத்திருந்து வாக்குத்தத்தங்களைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்பதால் திருச்சபைக்கு ஒரு பாராட்டுரை. வ.9-12.

கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் என்ற தலைப்பு திரும்பவும் தொடர்கிறது.

5. தெய்வீக வாக்குறுதிகள் நிறைவேறும் என்பதன் நிச்சயம்.
   a. ஆபிரகாமுடைய ஜீவியத்தினால் விளக்கப்பட்டது. வ.13-15.
   b. ஒரு சூளுரையால் உறுதிசெய்யப்பட்டது. வ.16-17.
   c. ஆத்துமாவுக்கு ஒரு நங்கூரம் போன்றது. வ.18-19.
   d. நமது பிரதான ஆசாரியரால் நிச்சயிக்கப்பட்டது. வ.20.

**அதிகாரம் :7.**

6. மெல்கிசதேக்கின் முறைமையின்படி அதைப்போன்ற கிறிஸ்துவின் ஆசாரியத்துவம்.
   a. மகத்தான நாமத்தை உடையவனாய் நித்தியமான ஒழுங்கு முறைக்கு சொந்தமானான். வ.1-3.
   b. ஆபிரகாம் என்பவனால் தசமபாகம் கொடுத்து கனப்படுத்தப்பட்டான். ஆரோனுடைய ஆசாரியத்துவத்திற்கும் அதைவிட உயர்ந்தவனானான். வ.4-10.
7. கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தின் ஒப்புயர்வற்ற பண்புகளால் ஆகப்பெற்ற சாராம்சம்.
   a. மெல்கிசதேக்கைப் போல ஒரு நித்தியமான ஒழுங்கு முறையைச் சேர்ந்தவனாய் இருந்தான். தெய்வீக சூளுரையால் உறுதி செய்யப்பட்டது. வ.11-22.
   b. அது மாற்றப்படக் கூடாததும் முற்று முடிய இரட்சிக்கும் வல்லமையானது. வ.23-25.
   c. குற்றமற்றவரும், பூரணருமாய் ஒரு முற்றிலுமான ஒரே பலியாக செலுத்தினார். வ.26-28.

**அதிகாரம் :8.**

d. பரலோகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட கூடாரத்தில் ஆசாரிய ஊழியம் செய்கிறார். வ.1-5.
e. ஒரு சிறந்த உடன்படிக்கையின் படி அதன் வழியே மத்தியஸ்தம் செய்கிறார். வ.6-11.

**அதிகாரம் :9.**

f. பூர்வீகமான சடங்காசாரங்களும், சமய சடங்குகளும் பலிகளும் ஆசாரியர்களால் செய்யப்பட்டவை சாயலாக மாத்திரமே உள்ளது. வ.1-10.
g. கிறிஸ்துவின் இரட்சிப்பின் ஊழியமும், அவருடைய இரத்தம் பாவமற சுத்தகரிப்பதும் உன்னதமான மெய்மைகளாகும். வ.11-15.
h. பழைய உடன்படிக்கையில் கிறிஸ்துவின் பூரணமான தியாகபலியான கிரியையாவது முன்குறித்ததாகிறது. வ.16-28.

**அதிகாரம் :10**

தொடர்ச்சியாகத் திரும்பத்திரும்ப செலுத்தப்படும் யூத முறைமையின் பலிகள் பாவத்தை நீக்கிப்போக்குவதில் பயனற்றவைகளாயின. ஆனால் எப்பொழுது கிறிஸ்து தன்னுடைய ஒரே மகத்தான பலியால் மனிதகுலத்துக்காக இரட்சிப்பின் கிரியையை பூரணமாக்கினார். அவ்வாறு செய்துவிட்டு தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். அவ்வாறு செய்து அந்தத் தெய்வீகத் திட்டம் பூரணமாவதற்குக் காத்திருந்தார். வ.1-18.

## II. முதன் முதலாக நடைமுறை போதித்தலும் உபதேசமும்

1. கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தினாலும், பலியினாலும் அதன் வழியாக தெய்வீக பிரசன்னத்திற்குள் பிரவேசிக்கும் கிருபை பெற்றறோரும். வ.19-21.
2. புத்திமதிகள் :
   a. ஆராதனை செய்வதற்கு கிட்டிச் சேர முழு நிச்சயத்தோடும், துர்மனச்சாட்சி நீங்க தெளிக்கப்பட்ட ஆயத்தமான இருதயத்தோடே சேரக்கடவோம். வ.22.
   b. அசைவில்லாத உறுதி பரஸ்பர உற்சாகப்படுத்துதல் நம்பகத்தன்மை ஆகியவற்றோடு. வ.23-25.
3. பின்வாங்கிபிபோகும் அபாயம் பற்றிய எச்சரிக்கை.
   a. மோசேயினுடைய பிரமாணத்தைத் நிந்தித்து தள்ளுகிறவன் சாவுக்கு பாத்திரமானவன். வ.28.
   b. கிறிஸ்துவின் தியாக பலியையும் கிருபையின் ஆவியை நிந்திக்கிறவனுக்கு கொடிதான ஆக்கினைக்கு பாத்திரனாயிருப்பான். வ.29-31.
4. எபிரெய விசுவாசிகளுக்கு ஓர் நினைப்பூட்டுதல் : உபத்திரவங்களை சகித்துக் கொள்வதில் அவர்களுடைய தைரியம் நினைவுபடுத்தப்படுகிறது. பொறுமையைக் கைக்கொள்ளுவதற்கும் விடாமுயற்சியோடு இருப்பதற்கும் புத்திமதி வ.32-39.

**அதிகாரம் :11**

5. விசுவாச வீரர்கள் வீராங்கனைகள் ஆஜர்பட்டியல்
   a. விசுவாசத்தின் விஸ்தாரம். வ.1-3.
   b. விசுவாசத்தைப் பற்றிய குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டுகள்.
   ஆபேல் வ.4; ஏனோக்கு வ.7; நோவா வ.7; ஆபிரகாம், சாராள் வ.8-19; ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு வ.20-22; மோசேயும் அவனுடைய பெற்றோரும் வ.23-29; யோசுவாவும் இஸ்ரவேலும் வ.30; ராகாப். வ.31; மற்றும் குறிப்பிடத்தக்க விசுவாசிகளும் வ.32-40.

**அதிகாரம் :12**

ஆவிக்குரிய விளையாட்டுகள், கிறிஸ்தவ ஓட்டம் :

a. பார்வையாளர்கள், ஆயத்தம் எப்படி ஓடுவது. வ.1
b. எஜமானன் மீது கண் நோக்கி இலக்கைக் குறி வைத்து அவருடைய ஜெயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு வ.2.
c. சோர்ந்து போகும் பொழுது அவரைப் பற்றய அகத்தூண்டுதலால். வ.3-4.
d. கடினமான செயலாற்றலும், பயிற்சியில் ஒழுங்கும் அதன் மதிப்பீடும். வ.5-10.

e. கடின உழைப்பும் ஒழுங்கும் அதன் நல்ல பலன்களும். வ.11.
f. திடகார்த்ததிற்கும், நேர்மைக்கும் ஆன உபதேசங்கள். வ.12-13.

7. புத்திமதி சமாதானத்துடன் இருக்க, பரிசுத்தமாயிருக்க, கெட்ட தாக்கங்களில் அதற்கு எதிராக விழிப்புணர்வுடன் இருக்க. வ.14-15.
8. ஜீவியத்தின் சுதந்திர விகித ஆசீர்வாதங்களை விற்றுபோடாதபடிக்கு எச்சரிக்கை. வ.16-17.
9. பழைய உடன்படிக்கையின் சீனாய் மலை, புதிய உடன்படிக்கையின் சீயோன் மலை. ஒரு ஒற்றுமை வேற்றுமை –
   a. சீனாய் மலை. அதன் பயங்கரமான தெய்வீக வல்லமையின் வெளிப்பாடு. வ.18-21.
   b. சீயோன்மலை. அதனுடைய மகிமையான கூட்டத்தினரோடு புதிய பரம எருசலேமுக்குள்ளாக. வ.23-24.
10. இந்த பிரபஞ்சத்து பொருள்களைக் குறித்த நிரந்தரமற்ற தன்மையையும், தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்த நிரந்தத்தையும் பற்றிய பரலோகத்து செய்தியைக் கவனித்துக் கேட்பதில் வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். வ.25-28.

**அதிகாரம் :13**

1. கிறிஸ்த கடமைகளைக் குறித்த முடிவான புத்திமதிகள் :
   a. சமூகக் கடமைகள். வ.1-6.
   b. மதபோதகர்களுக்கான கடமைகள். வ.7.
   c. கிறிஸ்தவ தத்துவ கோட்பாடுகளுக்குள் நிலை நிற்பதை என்றும் மாறாத கிறிஸ்து ஊக்கப்படுத்த வேண்டும். வ.8-9.
   d. கிறிஸ்தவர்கள் பிரிக்கப்பட்டு இருப்பதன் கடமை வ.10-14.
   e. நன்றி செலுத்துவதில் கடமை, நன்மை செய்வதில் கடமை, ஆளுகை செய்யும் அதிகாரிகளுக்கு கீழ்படிந்திருக்கும் கடமை. வ.15-17.
2. முடிக்கும் வார்த்தைகள்.
   a. ஜெபத்திற்காக வேண்டுகோள் ஆசீர்வாதம் கூறுதல்.
   b. முடிவான வாழ்த்துக்களும், ஆசீர்வாதமும்.

## தெரிவு செய்யப்பட்ட பகுதிகள்

- பாடுபடுதல் - ஆசாரியத்துவத்திற்கு ஆயத்தம். 2:9-18.
- விசுவாசத்தில் இளைப்பாறுதல். 4-1-11.
- ஆவியில் முதிர்ச்சி. 5:12 – 6:2.
- புதிய உடன்படிக்கை 8:8-13.
- விசுவாசம் - அதிகாரம். வீரர்வீராங்கனைகள் ஆஜர் பதிவு. அதி.11.
- ஆவிக்குரிய விளையாட்டு பற்றிய அதிகாரம் கிறிஸ்தவ ஓட்டம் கடின உழைப்பு, பிழைத்திருத்தம், ஜெயத்திற்கு ஒழுங்கு என்ற ஆயத்தம். 12:1-3.

---

## யாக்கோபுக்கு எழுதின நிருபம்

**ஆக்கியோன்** : நிச்சயமில்லை. புதிய ஏற்பாட்டில் யாக்கோபு என்ற பெயருடையவர்கள் மூன்று முக்கியமான நபர்கள் இருந்தார்கள். பொதுவாக 'கர்த்தருடைய சகோதரன்' என்று பவுலால் அழைக்கப்பட்ட யாக்கோபு தான் இந்த நிருபத்தை எழுதியதாக ஆமோதிக்கப்படுகிறது. (கலா.1-19).

**யாருக்கு எழுதப்பட்டது** : மிகத்தெளிவாக யூதரான விசுவாசிகளுக்கு அதாவது, பரிசுத்த பூமிக்கு வெளியே வாழ்ந்தவர்களுக்கும் ஒருகால் சிதறிப்போயிருந்த பக்தியுள்ள யூதர்களுக்கும் எழுதப்பட்டது. 1:1.

**முக்கியமான பொருள் தலைப்பு** : நடைமுறை மார்க்கம் தன்னை நற்கிரியைகளால் வெளிப்படுத்திக் கொள்வது என்பதை மேலும் புதிய விசுவாசத்தைக் கைக்கொள்ளுதல் என்பதற்கும் வித்தியாசமாகக் காட்டப்படுதல்.

**திறவுகோல் பகுதிகள்** : 1:27; 2:26.

பவுலுக்கும், யாக்கோபுக்கும் இடையே கற்பனைக் காட்சிகளான தத்துவகோட்பாடுகள் பற்றிய போராட்டம் தத்துவ கோட்பாடுகளுக்காக இந்த நிருபத்துக்கும் ரோமர் நிருபத்துக்கும் இடையே உள்ள உத்தேசமான போராட்டம் முழுவதும் கற்பனையாகும். பவுல் திருச்சபையில் இருந்து யூதேயாவின் போதகர்களால் இடுக்கண்ணுக்குள்ளாகி அவர்களால் இயல்பாக விசுவாசத்தால் நீதியாகுதலை விட அதற்கும் அப்பால் சடங்காசாரங்களைக் கடைபிடிப்பதில் நம்பிக்கை வைப்பதில் அதிகமாக வற்புறுத்திக் கூறினார்கள். எப்படியென்றாலும், தீத்துவுக்கு எழுதும்பொழுது நற்கிரியைகளைச் செய்வது என்பதை தன்னுடைய நிருபத்தின் பாடப்பொருளாக முக்கியத்துவம் கொடுத்தான். அதன் மூலமாக யாக்கோபுடைய போதனைகளோடு ஒருமித்த ஒருமைப்பாடு உண்டென்பதைக் காட்டினான். மேலும் அந்த பின்னவரால் விசுவாசத்தை மதிப்புக் குறைத்து பேசுவதுபோல் தோன்றுகிற தென்றாலும், அவர் சத்தியத்திற்கு அறிவு சார்ந்த ஒப்புதலைக் குறிப்பிடுகிறார் என்றும் பவுலால் பேசப்படுகிற இரட்சிக்கும் விசுவாசத்தைக் குறிப்பிடவில்லை என்பதும் தெளிவாகிறது.

**பாடச்சுருக்கம்**

இந்த நிருபம் பகுத்து பாகுபாடு செய்வதற்கு அது சுலபமாக இடங்கொடுப்பதில்லை. ஆனால் முக்கியமான விஷயங்கள் இரண்டு தலைப்புகளின் கீழ் ஒழுங்குபடுத்தப்படலாம். அது உண்மையான, பொய்யான மார்க்கங்கள் என்பது ஆகும்.

**I. உண்மையான மார்க்கத்தின் குறிப்படையாளங்கள் :**

**அதிகாரம் :1**

1. பலவிதமான சோதனைகளின் மத்தியில் சந்தோஷமும், பொறுமையும் உண்டாகிறது. வ.2-4.
2. அசைக்கப்பட முடியாத விசுவாசமும் ஒருமனமும், வ.5-8.
3. ஜீவியத்திற்கான தெய்வீக நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளுதல். வ.9-11.
4. சோதனையை சகிக்கிறவன் பாக்கியவான். வ.12.
5. சோதனைக்கான மூலகாரணத்தை கண்டறிந்து கொள்ளுதலும், அதற்கு இடங்கொடுப்பதால் வரக்கூடிய பலாபலன்களும்.. வ.13-15.
6. நன்மையான எந்த ஈவும் (ஆசீர்வாதங்களும்) தெய்வீக ரிஷீமூலத்தில் இருந்து) பரத்திலிருந்து உண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. வ.16-18.
7. ஆவிக்குரியதைக் கேட்கிறதற்கு தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தமாதமாயும் இருக்கவும். வ.19-20.
8. எல்லாவிதமான தீங்கையும் ஒழித்துவிட்டு வசனத்தை சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுங்கள். வ.21.
9. சத்தியத்தைத் தேடிப்பெற்றுக் கொண்டு அதற்கேற்ற கிரியையும் செய்ய வேண்டும். வ.25.
10. நடைமுறை தாராளமான உதாரத்துவமும், மாசில்லாத சுத்தமான பக்தியுடையதாய் இருத்தல். வ.27.

**அதிகாரம் :2.**

11. நற்கிரியைகள்.
    a. விசுவாசத்தின் ஓர் வெளியின் எடுத்துக்காட்டாக. வ.18.
    b. ஒத்துழைப்போடு விசுவாசத்தை பூரணப்படுத்துதல். வ.21-25.

**அதிகாரம் :3.**

12. பரத்திலிருந்து வருகிற ஞானம். வ.17-18.

**II. பொய்யான கிரியைகளைப் பற்றி அச்சடையாளங்கள்.**

**அதிகாரம் :1.**

1. கவலையீனமும் மறந்து போகக்கூடிய வழியில் வசனத்திற்கு செவி கொடுத்தல் வ.22-24.
2. அடக்கப்படமுடியாத நாவோடு கூடிய வீணான தேவபக்தியும். வ.26.

**அதிகாரம் :2.**

3. முகதாட்சண்யம் பண்ணுதல் ஐசுவரியவான்களை கனப்படுத்துதல், இகழுதல் வ.1-9.
4. நியாயப்பிரமாணத்திற்கு அறைகுறையாகக் கீழ்படிதல் வ.10-12.
5. இரக்கமற்ற குணம். வ.13.

6. விசுவாசத்தை மட்டும் கைக்கொண்டு இரக்கமும், உதவும் கிரியைகளும் உடன் வராவிட்டால் வ.14-16.
7. கிரியைகளில்லாத விசுவாசம். வ.17-18.
8. சத்தியத்திற்கு அறிவு சார்ந்த ஒப்புதலும் நல்லொழுக்கத்தில் எவ்வித மாறுதலும் இல்லாமல். வ.19-20.

**அதிகாரம் :3**

9. அடக்கப்படாத நாவு அழிவைக் கொண்டு வரக்கூடியது. வ.1-8.
10. துதித்தலும், சாபமும் ஒரே நாவிலிருந்து உண்டாகிறது. வ.9-12.
11. கசப்பான விரோதம் சுயநலமான பேராசை, சாத்தானிய ஞானம். வ.14-16.

**அதிகாரம் :4**

12. அமைதியின்மையும், பரிசுத்தமில்லாத இச்சைகளும். வ.1-2.
13. பிரதியுத்தரம் பெறாத ஜெபங்களும், உலகப்பிரகாரமான லௌகீகமும். வ.3-4
14. பெருமை, பிடிவாதம், பரிசுத்தமில்லாமை, இருமனம், குற்றத்தை உணராத கடினகுணம். வ.5-9.
15. அவதூறும் அநியாயமான தீர்ப்பும். வ.11-12.
16. வருங்கால வாணிபத்ததைத் திட்டமிடுவதில் ஆராயப்படாத உத்தேசம். வ.13-16.
17. தெரிந்த கடமையை தட்டிக்கழித்தல். வ.17.

**III. எச்சரிக்கைகள், உபதேசம், போதனைகள்.**

**அதிகாரம் :5.**

1. ஐசுவரியவான்களுக்கு எச்சரிக்கை :
   a. வருங்கால நிர்ப்பந்தங்கள் பற்றி. வ.1-2.
   b. ஏழைகளின் சம்பளத்தை மோசப்படுத்தி சேர்க்கப்பட்ட ஐசுவரியம். வ.3-4.
   c. உலக இன்பங்களை நாடி நீதிமான்களைத் துன்புறுத்தினீர்கள். வ.5-6.
2. கர்த்தருடைய வருகையைப் பற்றிய வெளிச்சத்தின் உபதேசங்கள் :
   a. பொறுமையோடிருந்து இருதயங்களை ஸ்திரப்படுத்தி ஒருவருக்கொருவர் முறுமுறுக்காமல் இருங்கள். வ.7-10.
   b. தீர்க்கதரிசிகளுடைய முன்மாதிரியைப் பின்பற்றி யோபுடைய பொறுமையைக் கடைபிடியுங்கள். வ.10-11.
   c. ஆணையிடுவதிலிருந்து முற்றிலும் விட்டு விடுங்கள். வ.12.
3. ஜெபம், பாவஅறிக்கை, ஆத்துமா ஆதாயம் :
   a. துன்பப்படுங்காலத்திலும், வியாதியாய் இருக்கும் பொழுதும் ஜெபம் பண்ணுங்கள். வ.13-15.
   b. பாவங்களை அறிக்கை செய்தலும், மன்றாட்டு ஜெபமும். வ.16.
   c. எலியாவின் செயலூக்கமான ஜெபம் எடுத்துக்காட்டப்பட்ட படியாக. வ.16-18.
   d. ஆத்துமா, ஆதாயம் செய்யவேண்டிய கடமை. வ.19-20.

---

## பேதுரு எழுதிய முதலாம் நிருபம்

**எழுதியவர்** : அப்போஸ்தலனாகிய பேதுரு.

இது முந்திய நாட்களின் சீமோன் பேதுரு அல்ல, துடுதுடுப்பும் பலவீனங்களால் நிறைந்தவனாய் கிறிஸ்துவால் சீமோன் என்று அழைக்கப்பட்டவனல்ல. மாற்கு 14:37; லூக்கா 22:31; யோவான் 21:15-17; அவன்தான் இயேசு கிறிஸ்துவால் முன்னுரைக்கப்பட்டு பாறையாக இருப்பான் என்று தான் இயேசு கிறிஸ்துவால் தீர்க்கதரிசனமாக முன்னுரைக்கப்படடவன். யோவான். 1:42. பல ஆண்டுகளின் பாடுகளாலும், சோதனைகளாலும் ஒழுங்குக்குள்ளாக்கப்பட்டு, பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்ற அதே மனிதன் தான். இந்த நிருபம் அவருடைய ஜீவியத்தின் பிற்பகுதியை சேர்ந்தது என்பதில் சந்தேகமில்லை.

**காலமும் எழுதப்பட்ட இடமும்** : நிச்சயமில்லை.
அதி. 5:13ல் குறித்துச் சொல்லப்படும் பாபிலோன் என்ற நகரம் ஐபிராத்து நதிக்கரையில் அமைந்த நகரமாக இருக்கலாம் அல்லது அல்லாமலும் இருக்கலாம். அநேகர் அதை ஒப்புவமையாகக் கூறப்படும் பாபிலோன் என்ற ரோமபுரியாக இருக்கலாம் என்று நினைக்கிறார்கள்.

**யாருக்கு எழுதப்பட்டது** : சின்ன ஆசியா முழுவதிலும் சிதறியிருக்கும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு ஒருவேளை அந்த பகுதியிலுள்ள கிறிஸ்தவர்களான முழுசபையான சரீரமாயிருக்கலாம். யூதர்களும் புறஜாதியாருமாக இருவருமே சேர்ந்ததாகும். பவுல் அப்போஸ்தலனால் பெரிதும் ஸ்தாபிக்கப்பட்ட சபைகளுக்கு பேதுரு இந்த ஆவிக்குரிய செய்தியான தைரியப்படுத்துதல், போதனை, கண்டிப்பு ஆகியவைகளைச் சொல்லுகிறான்.

**நோக்கம்** : இந்த நிரூபத்தை எழுதுவதில் இயேசுவால் அவனுக்கு கொடுக்கப்பட்டதான இரண்டு குறிப்பிட்ட கட்டளைகளுக்குக் கீழ்படிகிறான்.
1. சகோதரர்களை தைரிப்படுத்தியும் பலப்படுத்தவும். லூக்கா. 22:32.
2. தேவனுடைய மந்தையை போஷிக்கவும். யோவான். 21:15-17.

**திறவுகோல் வசனம்** : 4:1.

**மத்திய பொருள் தலைப்பு** : கிறிஸ்துவின் ஜீவியத்தின் மூலமாக பிரத்தியட்சமாக்கப்பட்ட பாடுகளுக்கு மேலாக ஜெயம் என்பது.

**பாடச்சுருக்கம்**

**I. மகிமையான இரட்சிப்பு**

**அதிகாரம் :1**
1. கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே அதை மையமாகக் கொண்ட ஜீவனுள்ள நம்பிக்கை .வ.4.
2. அழியாததும், மாசற்றதும், விடாத்ததுமான சுதந்திரம். வ.4.
3. அந்த தேவனுடைய பலத்தினாலே விசுவாசிகள் பாடுகளின் மத்தியிலும் ஜெயம் பெற்றவர்களாக இருக்கிறார்கள்.
   a. விசுவாசத்தைக் கொண்டு. வசனம். 5.
   b. சோதனைகளின் களிகூறுகிறவர்களாக. வ.6.
   c. கிறிஸ்து வெளிப்படும்பொழுது அக்கினியிலே சோதிக்கப்பட்ட பொன் விளங்குவது போல. வ.7.
   d. சொல்லி முடியாததுமான அன்பினாலும், சந்தோஷத்திலும். வ.8.
4. இரகசியமான திட்டம்.
   a. இதைக்குறித்து தீர்க்தரிசிகள் கருத்தாய் ஆராய்ந்து கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும் அவைகளுக்கு பின்வரும் மகிமைகளையும், முன்னறிவித்த பொழுது தேவ தூதர்களுக்கும் இது ஆச்சரியமாக இருந்தது.
   b. அதற்காக தன்னடக்கம் கீழ்படிதல், உலக ஆடம்பரமின்மை, பரிசுத்தம் தெய்வபயபக்தி ஆகியவை விசுவாசிகளுக்கும் இருக்க வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது. வ.13-17.
   c. கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற வ.18-19.
   d. உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவர் வ.20-21.

**II. விசுவாசிகளின் ஜீவியத்தில் மகத்தான இரட்சிப்பின் ஒளியில் :**

**அதிகாரம் :1 தொடர்ச்சி**
1. நித்தியமான சத்தியத்தினாலே நீங்கள் சுத்திகரிக்கப்பட்டும் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டும் சகோதர அன்பை வெளிப்படுத்துங்கள். வ.22-25.

**அதிகாரம் :2**
2. சகலவிதமான துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு வளரும்படியாக திருவசனமாகிய ஞானப்பாலின் மேல் வாஞ்சையாய் இருங்கள். வ.1-3.

3. ஆவிக்குரிய ஆலயத்தில் ஜீவனுள்ள கற்களைப்போல ஆகி அந்த ஆலயத்திலே கிறிஸ்துவும் மூலைக்கல்லாக இருக்கிறார். வ.5-6.
4. கிறிஸ்துவை பொறுத்தமட்டில் விசுவாசிகளுக்கும் அவர் விலையேறப்பெற்ற கல்லாகவும், விசுவாசியாதவர்களுக்கு இடறுதலுக்கேதுவான கல்லும் ஆயிற்று. வ.7-8.

## III. விசுவாசிகளின் ஸ்தானமும் கடமைகளும்

**அதிகாரம் :2 தொடர்ச்சி**

1. தேவனுடைய ஜனங்களாக கனம் பெற்றவர்களாக பரிசுத்த ஜாதியாக அந்த தெய்வீகமான இரட்சகருக்கு துதியைச் செலுத்தக் கடவோம். வ.9-10
2. அந்நியர்களும், பரதேசிகளுமாய் மாம்சஇச்சைகளை விட்டு விலக வேண்டும். வ.11.
3. பிரஜா உரிமையும் சமூகக்கடமைகளும், உலகத்திற்கு முன்பாக நல்நடக்கையுள்ளவர்களாய் இருந்தும் அரசியல் அதிகாரங்களுக்குக் கீழ்படிந்தும் அப்படி செய்வதால், விரோதமான விமரிசனங்கள் மௌனமாக்கப்படும். வ.12-15.
4. நல்ல பிரஜா உரிமை வ.16-17.
5. விசுவாச வீடுகளில் கடமைகள் :
   a. வேலைக்காரர்கள் கீழ்படிந்தும் பொறுமையுடனும் இருந்து தவறுதலாகத் துன்பப்படும் பொழுது சகித்தும் தேவனைப் பிரியப்படுத்த வேண்டும். வ.18-20.
   b. கிறிஸ்துவை பாடுபடுகிறவராகவும், பாவத்தை சுமக்கிறவராகவும் எடுத்துக்காட்டாக கருத்தில் கொள்ளவேண்டும்.

**அதிகாரம் :3**

   c. மனைவிகள், கற்புள்ளவர்களாகவும், ஆவிக்குரிய கிருபையாகிய அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்ட வேண்டும்.
   d. புருஷர்கள் மனைவிகளிடத்தில் கரிசனையாய் நடந்து கொள்ள வேண்டும். வ.7.
   e. எல்லாரும் சகோதர சிநேகமுள்ளவர்களுமாய் மனஉருக்கத்தோடும், இணக்கமுள்ளவர்களாய் மன்னிக்கும் பண்பும் உள்ளவர்களாய் இருங்கள்.
   f. நீண்ட ஆயுசும், ஜெபத்துக்கு பதிலும், தங்கள் நாவை அடக்குகிறவர்களுக்கு வாக்கு பண்ணப்பட்டிருப்பதால், தீமையை விட்டு விலகி நன்மை செய்து சமாதானத்துடன் வாழக்கற்றுக் கொள்ளவேண்டும். வ.10-13.

## IV.போதனையும், பாடுஅனுபவித்தலைக் குறித்து தைரியப்படுத்தலும்

**அதிகாரம் :3தொடர்ச்சி.**

1. நீதியினிமித்தம் பாடுபட்டால் அது களிகூர்வதற்குக் காரணமாகவும், பயப்படுவதற்கல்ல, அதுவும் கிறிஸ்தவ அனுபவத்தைப் பற்றி சாட்சி கூறத்தயாராக இருக்கவும், மேலும் நல்ல ஜீவியமும் ஜீவிக்க வேண்டும். வ.14-17.
2. கிறிஸ்துவுடைய பிறருக்காகப் பாடுபடுதல் ஆவிக்குரிய கிரியைகள், மகிமைப்படுத்தப்படுதல் ஆகிய உதாரணமாக.
3. தியாக பலியாக கிறிஸ்து பாடுகளைப்பட்டது சுயவெறுப்பு தேவனுக்காகத் தன்னைத் தத்தம் செயதல், மனுஷருடைய இச்சைகளை விட்டு ஓய்ந்திருத்தல் ஆகியவைகளை வேண்டுகிறது. வ.1-3.
4. குறியீட்டு சொற்றொடர் : தேவனை மகிமைப்படுத்தும் கிறிஸ்தவ நடைமுறையான கடமைகளைப் பற்றிய போதனைகள். வ.7-11.
5. வேதனை தரும் சோதனைகளை அந்நியமாகக் கருதாமல் சந்தோஷத்துடன் சகித்துக் கொள்ள வேண்டும். வ.12.
6. கிறிஸ்துவுக்காகவும் அவருடன் அனுபவிக்கும் பாடுகளை சந்தோஷத்துடன் சகித்து ஆவிக்குரிய மகிமைக்கு வழிநடத்துகிறதென்று களிகூருங்கள். வ.13-14.
7. தீங்கு செய்கிறவர்களாக பாடனுபவிக்காமல் கிறிஸ்தவனாக பாடுபட அழைக்கப்பட்டால் தேவனை மகிமைப்படுத்தி நம்முடைய ஆத்துமாக்களை அவருடைய பாதுகாப்புக்கு ஒப்படைப்புச் செய்யுங்கள். வ.15-19.

**V.** முடிவான உபதேசங்களும் எச்சரிக்கைகளும்
**அதிகாரம் :5.**

1. திருச்சபை மூப்பர்களுக்கு எந்த ஆவியோடு மந்தையானது மேய்த்துப் போஷிக்கப்பட வேண்டுமென்று வ.1-4.
2. இளைஞர்களுக்கும், முதியோருக்கும் மனத்தாழ்மையையும் நம்பகத் தன்மையையும் அணிந்து கொள்ள வேண்டுமென்று. வ.5.-7.
3. பிசாசானவனைக் குறித்த எச்சரிக்கை. வ.8-9.
4. ஆசீவாதமும், வாழ்த்துக்களும். வ.10-14.

## பேதுருவின் கிறிஸ்து

- நம்பிக்கையின் ஊற்றாக - 1:3
- பஸ்கா ஆட்டுக்குட்டியாக - 1:19
- முக்கியமான மூலைக்கல்லாக - 2:6
- பூரணரான முன்மாதிரியாக - 2:21
- இலட்சியமான பாடனுபவிப்பவராக - 2:23
- பாவங்களை சுமந்து தீர்ப்பவராக - 2:24
- ஆத்துமா மேய்ப்பராக - 2:25
- மகிமைப்படுத்தப்பட்ட கர்த்தராக - 3:22

## பேதுருவுடைய நிருபங்களில் காணப்படும் ஏழுவிலையேறப் பெற்றவை

- வேதனை தரும் பாடுகள் - 1:7
- கிறிஸ்துவின் இரத்தம் - 1:19
- ஜீவனுள்ள கல் - 2:4
- கிறிஸ்து தாமே - 2:6.
- சாந்தமும் அமைதியுமான ஆவி - 3:4
- விசுவாசிகளின் நம்பிக்கை - 2பேதுரு 1:1
- தெய்வீகமான வாக்குத்தத்தம் - 2பேதுரு 1:4

---

# பேதுரு எழுதிய இரண்டாம் நிருபம்

**ஆக்கியோன்** : அப்போஸ்தலனாகிய பேதுரு 1:1

**காலம்** : ஒருகால் கி.பி. 60-70 இடையில் எழுதப்பட்டது.

**மத்திய பொருள் தலைப்பு** : கள்ள போதகர்கள் குறித்தும் பரியாசக்காரர்கள் குறித்தும் விரோதமாக ஒரு எச்சரிக்கை. பொய்யான தத்துவ கோட்பாடுகளின் தாக்கத்தை எதிர்த்து கிரியை செய்வதற்காக கர்த்தருடைய வார்த்தையின் மீது மிகுந்த அதீதமான அழுத்தம் கொடுக்கப்படுகிறது. மேலும் தெய்வீக வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றப்படுவதும் நிச்சயம் என்று சொல்லப்படுகிறது.

**திறவுகோல் வசனம்** : 3:1

**ஒரு சமமான ஒப்பிடுதல்** 2தீமோத்தேயுவுக்கும், 2பேதுருவுக்கும் இடையே ஒப்பிடுதல் பெறுகிறது. இந்தக்கடிதங்களாகிய நிருபங்களின் எழுதியவர் ஒவ்வொருவரும் மரணம் சமீபமாயிருக்கிறது என்ற விஷயத்தையே குறிப்பிடுகின்றனர். 2தீமோத்தேயு 4:6; 2பேதுரு 1:14
இந்த இரண்டு நிருபங்களை எழுதியவர்களுமே திருச்சபைக்கு அபாயகரமான காலங்கள் நேரிடவிருக்கின்றது என்பதை முன்னுரைக்கின்றன.

a. கள்ளப்போதனைகள் அபரிமிதமாக பரம்பிகிடக்கின்றது. 2தீமோத்தேயு 3:13; 4:3; 2பேதுரு 2:1
b. சமூகத்தின் பொதுவான கேடுபாடான நிலைமை. 2தீமோத் 3:17; 2பேதுரு 2:10-22
c. வரப்போகிற வேதப்புரட்டுகள் 2தீமோத் 4:3-4; 2பேதுரு 2:2, 20-22.

**பாடச்சுருக்கம்**

வாழ்த்துக்கள் : 1:1-2

**I. ஆவிக்குரிய ஜீவியம் :**

**அதிகாரம் :1**

1. அழைக்கப்பட்ட அழைப்பு வ.3.
2. விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் மூலமாக கைவரப்பெற்றவை. வ.4.
3. அதனுடைய முன்னேற்றத்திற்கும், கனி கொடுப்பதற்கும் இன்றியமையாதனவாகிய ஏழுபடிகள். வ.5-8.
4. முடிவான பிராப்தம் வ.10-11.
5. பிரிவுபசார ஞாபகமூட்டுதல் வ.12-15.
6. ஒரு மகிமையான அனுபவம் வ.16-18.
7. வேதக்கோட்பாடுகள் தெய்வீகத்தோற்றம் உடையனவாக (உள்ளங்களை) பிரகாசிக்கச் செய்கிற வல்லமை உடையவை வ.19-21.

**II. கள்ளப்போதகர்கள். வேதபுரட்டுகள் கோட்பாடுகள்.**

**அதிகாரம் :2**

1. அவர்களுடைய வேதபுரட்டுகளும், கிறிஸ்துவை மறுதலித்தலும். வ.1
2. அவர்களுடைய பெயர் பிரதாபங்கள், பொல்லாத தாக்கங்கள் பொருளாசைகளும் மாய்மாலமும். வ.2-3.
3. கீழே தள்ளப்பட்ட விழுந்துபோன தூதர்கள் மேல் வரவிருக்கும் தப்பவிடாத நியாயத்தீர்ப்பும், பிரளயகாலத்திற்கு முற்பட்டவர்களுக்கும் சோதோம் கொமோரா வாசிகளுக்கும் கொடுக்கப்பட்ட ஆக்கினையான தீர்ப்பு தேவபக்தி அற்ற வார்த்தைகளுக்கும் எச்சரிக்கையாகும். வ.4-6.
4. தேவ பக்தியுள்ள நீதிமான்களுக்காக தெய்வீக இரட்சிப்பும், அக்கிரமக்காரர்களை நியாயத்தீர்ப்பு நாளுக்கு என்றும் வைத்திருக்கிறார். வ.7-9.
5. இந்த வேதப்புரட்டர்களான கள்ளப் போதகர்களும் அவர்களை பற்றிய வருணனையும், குணாதிசயங்களும், கிரியைகளும் அவர்களுக்கு வரும் அநீதத்தின் பலனான ஆக்கினைத் தீர்ப்பு.
   a. அவர்களுடைய அசுத்தஇச்சைகள், துணிகரம், அகங்காரம் மட்டுக்கு மீறிப்போகுதல் வ.10-13.
   b. தீங்குவிளைவிக்கும் அவர்களது செல்வாக்கும், பொருளாசைக் காரணமான வேதப்புரட்டும். வ.14-16.
   c. அவர்களுடைய வெறுமையான சூன்யம், ஸ்திரமின்மை என்றென்றைக்கும் உள்ள இருளான வருங்காலம். வ.17.
   d. அகந்தையான வீண்வார்த்தைகள் அதனுடன் மாம்ச இச்சையான ஜீவியம் செய்து மனிதர்களுக்கு சுயாதீனத்தை வாக்குத்தத்தம் செய்தும் அடிமைத்தனத்தையே பலாபலனாக அடைகிறார்கள். வ.18-19.
   e. அவர்களுடைய வேதபுரட்டு முற்றிலுமான ஒழுக்கக்கேடாகும். வ.20-22.

**III. பரியாசக்காரர், கர்த்தரின் திரும்ப வரும் நாள், அசையாது நிலை நிற்றலுக்கான தீர்க்கதரிசனங்கள்.**

**அதிகாரம் :3.**

1. இந்த நிரூபத்தை எழுதினதின் நோக்கம். வ.1-2.
2. பரியாசகாரருடைய சவால் வ.3-4.
3. சவால் விடுப்பவர்களின் அறியாமை
   a. பழைய ஏற்பாட்டு வேதாகமப்பகுதிகள் குறித்து. வ.5-6.
   b. இன்றைய உலகம் அக்கினிக்கு இரையாக்கும் தீர்ப்புக்காக வைக்கப்பட்டிருக்கிறது. வ.7.
4. தெய்வீக தாமதம் பற்றிய விளக்கம் :
   a. கர்த்தரின் நாள் ஆயிரம் வருஷம். வ.8.
   b. தெய்வீக இரக்கமானது, நீடிய பொறுமையுடன் இந்த தண்டனைகளை தாமதப்படுத்தி வைத்திருக்கிறது. வ.9.
5. கர்த்தரின் நாள் வந்தே தீரும் என்ற நிச்சயம். வ.10.

6. விசுவாசியின் மனப்பான்மையும் நம்பிக்கையும் வ.11-14.
7. பவுலுடைய நிருபங்களைப் பற்றியதோர் பாராட்டுரை, வேதத்தைத் திரித்து புரட்டுகிறவர்களுக்கு எச்சரிக்கை. வ.15,16.
8. அசையாது நிலை நிற்பதற்கும், ஆவிக்குரிய வளர்ச்சிக்குமான உபதேசங்கள். வ.17-18.

---

## யோவான் எழுதிய முதலாம் நிருபம்

**எழுதியவர் : அப்போஸ்தலனாகிய யோவான்.**

**இடமும் காலமும்** : நிச்சயமில்லை. முதலாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் எபேசு பட்டணத்திலிருந்து எழுதப்பட்டிருக்கலாம்.

**யாருக்காக எழுதப்பட்டது** : வெளிப்படையாக பொதுவான பெரிய வாழ்த்துக்களோ, பிரியாவிடையோ அல்லது மற்றும் தனிப்பட்ட ஒப்புமைகளோ இல்லை. ஆகவே, இது பொதுவான நிருபங்கள் என்ற பிரிவில் அடங்கும்.
அது விசுவாசிகளை 'என்பிள்ளைகள்' என் பிரியமான பிள்ளைகளே என்ற தலைப்புகளால் விளக்குகிறார். 2:1, 18, 28; 3:7, 21; 4:1,7,11ல் மேலும் 'பிரியமானவர்களே' என்று 3:2, 21; 4:1,7,11ல் அழைக்கிறார்.

**நோக்கம்** : இதை எழுதியவர் இந்த நிருபத்தை எழுதியதற்கு அதாவது, விசுவாசிகளுக்கு எழுதியதற்காக நான்கு காரணங்களைச் சொல்லுகிறார். a. அவர்களுடைய சந்தோஷம் (அதிகப்படவும்) நிறைவாயிருக்கவும் 1:4து; b.பாவங்செய்யாதபடிக்கு 2:1; c. வஞ்சிக்கும் கள்ளப்போதகர்களைக் குறித்து எச்சரிக்கவும். 2:26; மேலும் d. கிறிஸ்துவுக்குள் அவர்களுடைய விசுவாசத்தைப் பலபடுத்தவும் நித்திய ஜீவனை உறுதிப்படுத்தவும் 5:13.

**திறவுகோல் வார்த்தைகள் : 'ஐக்கியம்' 'அறிவிக்கிற' 'அன்பு'**

**மத்தியபொருள் தலைப்பு** : தேவன் ஜீவனாயும், ஒளியாயும் நீதியாயும் அன்பும் உள்ளவராக இருக்கிறார். அவருடைய ஒழுக்கமானது (நம்மை) விசுவாசிகளை பரிசுத்த ஜீவியம் செய்யவும் சகோதர அன்பிலே வாழவும் வேண்டுகிறது.

**குறிப்பிடக்கூடிய குணநலன்கள்** இதற்கு நிச்சயங்களின் நிருபம் என்ற உபதலைப்பைக் கொடுக்கலாம்.. இந்த நிருபம் கிறிஸ்துவைப் பற்றி நேருக்கு நேர் அறிந்து தனிப்பட்ட பொது அறிவை வெளிப்படுத்தும் சொல்லான நேர்கூற்றுடன் ஆரம்பமாகிறது. 1:1-3.
இது விசுவாசிகள் கிடைக்கப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஆவிக்குரிய அறிவை பலமாக வற்புறுத்துகிறது. இந்த வார்த்தை'அறிய' அல்லது அதற்குச் சமமான வார்த்தை முப்பதுக்கு அதிகமான இடங்களில் காணப்படுகிறது.

**ஏழு முக்கியமான** சமயங்களில் இந்த வார்த்தைகளான நாங்கள் (நீங்கள்) அறிந்து என்பது காணப்படுகிறது.. விசுவாசிகள் அறிகிறது போல,
1. நீதியாகுதலான ஜீவியமானது, மறுபடி ஜெநிப்பிக்கப்படுகிறது என்பதைக் காட்டுகிறது. 2:29; 5:18.
2. கிறிஸ்து வரும்பொழுது அவருக்கு ஒப்பாயிருப்போம் 3:2.
3. அவர் நமது பாவத்தை சுமந்து தீர்க்கவே வெளிப்பட்டார். 3:5.
4. நாம் சகோதரரிடத்தில் அன்பு கூறுவதால் மரணத்தை விட்டு ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம். 3:24.
5. அவர் நம்மில் வாசம் பண்ணுகிறார் என்பதை அவர் தந்தருளிய ஆவியின் சாட்சியால் அறிகிறோம். 3:24.
6. நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். 5:13.
7. நாம் ஜெபத்தினால் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோம் என்றும் அறிந்திருக்கிறோம். 5:15

**பாடச்சுருக்கம்**

**I. (ஜீவனும், ஒளியும்) ஜீவனும் நலலது. ஒளியும் நல்லது.**

**அதிகாரம் :1**

1. கிறிஸ்துவுக்குள் வெளிப்பட்டது. வ.1-2.
2. இந்த நிரூபத்தின் நோக்கம். வ.3-4.
3. தெய்வீக ஐக்கியத்தின் நிபந்தனைகள்.
   a. ஒளியிலே நடக்க வேண்டும். வ.5-7.
   b. பாவங்களை அறிக்கையிட்டு. வ.8-10.

**அதிகாரம் :2**

   c. கிறிஸ்துவை பாதுகாப்பவராகவும், பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாக ஒப்புக்கொள்ள வேண்டும். வ.1-2.

4. கீழ்படிதலே ஐக்கியத்திற்கு பரீட்சையாகும்.
   a. கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்ற. வ.3-6.
   b. அன்பின் புதிய கற்பனைக்கு கீழ்படிவது ஒளியில் தரித்திருப்பது தான். வ.7-11
5. பலவகுப்புகளான பிரிவினரான விசுவாசிகளுக்கு கொடுக்கும் செய்தியாவது, ஆவிக்குரிய அறிவு பற்றியதும் பொல்லாங்கன் மேல் ஜெயம் கொள்ளுவதும். வ.12-14
6. உலகத்தின் மேல் அன்புகூருவது பற்றியதோர் எச்சரிக்கை. வ.15-17.
7. அந்திக்கிறிஸ்து எழும்புதல் வேதப்புரட்டுகளோடும், கிறிஸ்துவை மறுதலித்தலோடும் வருவது கடைசி காலத்தை சுட்டிக்காட்டும் அடையாளமாகும். வ.18-23.
8. சத்தியத்தில் நிலைத்திருத்தல் தேவ ஆவியினால் பெறும் அபிஷேகத்தைப் பற்றிய நிச்சயத்தோடு நமக்கு சகல தேவையானவைகளையும் போதிப்பார். வ.24-27.
9. அவரில் தரித்திருத்தல் நம்பிக்கையைக் கொடுக்கிறது. நீதியாகுதல் புதிதாகப் பிறப்பதற்கு அடையாளமாகும்.. வ.28-29.

**II. தேவன் நீதியாகுதலான அன்பாய் இருக்கிறார்**

**அதிகாரம் :3**

1. விசுவாசிகளை பிள்ளைகள் என்று அழைத்து உயர்த்தினதினாலே அவருடைய அன்பு வெளிப்பட்டது. வ.1-2.
2. பரீட்டையானது, நீதியாகுதலான ஜீவியமே. வ.3-10.
3. சகோதரரிடத்தில் அன்பு கூறுவது ஆவிக்குரிய ஜீவியத்தை வேறுபடுத்திக் காட்டும் அடையாளமாகும். வ.11-15.
4. அன்பு ஜீவனைக் கொடுப்பதலில் வெளிப்படுகிறது. வீண்வார்த்தைகளினால் அல்ல. வ.16-18.
5. அன்பு கூர்வதன் விளைவாவது, உறுதியான நிச்சயமும் பிரதியுத்தரம் பெற்ற ஜெபமுமாகும். வ.19-22.
6. விசுவாசமும் சகோதரரிடத்தில் அன்பு கூருவதும் தேவனுடன் ஐக்கியப்படுவதற்கு அவசியமானவைகள். வ.22-24.

**அதிகாரம் :4**

**இருவாக்கியங்களுக்கிடையே சொற்றொடர்**

7. சத்தியத்தின் ஆவியும், உலகத்தின் தவறுகளின் ஆவியும் உள்ளன. அவற்றை சோத்தறியும் வழியும் உண்டு.
   a. கிறிஸ்துவின் மனிதவதாரத்தைப் பற்றிய அவர்களது மனப்பான்மையே அவர்களைப் பற்றிய உண்மையான தன்மையையும் ஒழுக்கத்தையும் தீர்மானிக்கிறது. வ.1-3.
   b. அந்திக்கிறிஸ்துக்களைக் குறிதத உலகவியல் அடையாளங்கள். வ.4-6.
8. தெய்விகமான அன்பு :
   a. மனிதனுடைய இருதயத்தில் அது மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுதலைச் சுட்டிக் காட்டுகிறது. வ.7.
   b. அந்த அன்பு கிறிஸ்துவுடைய மனுஷ அவதாரத்திலும் பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாக அனுப்பினதினாலே அந்த அன்பு வெளிப்பட்டது. வ.8-10.

c. விசுவாசிகளுக்குள்ளே வாசம் பண்ணுதல் சகோதரரிடம் அன்பு கூருவதை உண்டாக்குகிறது. மேலும் கிறிஸ்துவை மனிதகுலத்து இரட்சகராக சாட்சி கூறத்தூண்டி உற்சாகப்படுத்துகிறது. வ.11-16
d. அன்பானது, பூரணப்படுத்தப்பட்டபொழுது அது நிச்சயமானதைக் கொடுத்து பயத்தை புறம்பே தள்ளுகிறது. வ.17-18.
e. தேவனிடம் அன்பு கூருவதையும், சகோதரனிடத்தில் அன்பு கூறுவதையும் தூண்டிவிட்டு எரியச்செய்கிறது. வ.19-21.

III. விசுவாசமும் அன்பும் இந்த உலகத்தோடும் அதன் பொல்லாத ஆவிகளோடும் நடத்தும் போராட்டத்தில் அதன் மேலே ஜெயங்கொள்ளும் கோட்பாடுகளாகும். (அஸ்திபாரங்களாகும்).

**அதிகாரம் :5**

1. அன்புடன் கீழ்படிந்திருக்கும் ஜீவியம். வ.1-3.
2. விசுவாசத்தின் ஜெயம். வ.4-5.
3. பரலோகத்திலும், பூலோகத்திலும் சாட்சியிடும் தெய்வீகமான சாட்சிகள். வ.6-9.
4. பரிசுத்த ஆவியானவருடைய சாட்சி வ.10.
5. தேவனுடைய குமாரன் மூலமாக நாம் பெறும் ஈவான நித்திய ஜீவன். வ.11-13.
6. ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறார் என்ற நிச்சயம். வ.14-15.
7. பாவஞ்செய்த சகோதரனுக்காக செய்ய வேண்டியது. வ.16.
8. விசுவாசிகளுடைய நான்கு வகையான அறிவு. வ.18-20.

---

## யோவான் எழுதிய இரண்டாம் நிருபம்

**எழுதியவர்** : அப்போஸ்தலனாகிய யோவான்.

**யாருக்கு எழுதப்பட்டது** : தெரிந்து கொள்ளப்பட்டவளான அம்மாளுக்கும் அவள் பிள்ளைகளுக்கும் எபேசு பட்டணத்தில் வாழ்ந்த கிறிஸ்தவளான ஸ்திரீயையும் அவளுடைய குடும்பத்தையும் குறிக்கிறதென்று சிலர் கருதுகிறார்கள். மற்றவர்கள் இது ஒரு திருச்சபையையும் அதன் சபையினரையும் உருவகப்படுத்தியிருக்கிறது என்று நினைக்கிறார்கள்.
இந்த முதலாவதான யூகம் சரியாக இருக்குமானால், புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு புத்தகம் மாத்திரமே ஒரு ஸ்திரீக்கு விலாசமிடப்பட்டுள்ளது.

**அழுத்தமான வார்த்தைகள்** : 'அன்பு' இந்த வார்த்தை நான்கு தரமும், சத்தியம் என்பது ஐந்து தரமும் காணப்படுகின்றன.

**நோக்கம் :** இந்த நிருபம் வெளிப்படையாக சிநேகிதர்களை அவபக்திக்கு விரோதமாக எச்சரிக்கவும், பொய்யான கள்ளப்போதகர்களுடன் இணைந்து இருக்கலாகாது என்பதை எச்சரிக்கவும். வ.7-11.

**பாடச்சுருக்கம்**

**முக்கியமான பொருள் தலைப்பு** : சத்தியத்தையும் பொய்யான போதனைகளைக் குறித்த நீண்டதோர் உபதேசம்.

1. தெய்வீக சத்தியமும் விசுவாசிகளுடன் அதற்குள்ள உறவும்.
   a. அவர்களை ஐக்கியத்தில் ஒற்றுமை படுத்துகிறது. வ.1.
   b. அவர்களுக்குள் நித்திய காலமாக வாசம் பண்ணுகிறது. வ.2.
   c. அன்புடன் கூட இருந்து, அவர்களுடைய வாழ்த்துக்களின் ஆவியை குணச்சித்தரமாக்குகிறது.
   d. அவர்கள் நடக்கும் வழிகளிலெல்லாம் அன்புடன் கீழ்படிதலை வெளிப்படுத்த வ.4-6.

2. உலகப்பிரகாரமான தவறுகள்
   a. வஞ்சிக்கும் கள்ளப் போதகர்கள் உலகத்தில் இருக்கிறார்கள். வ.7.
   b. கிறிஸ்துவுடைய மனிதவதாரத்தை மறுதலிக்கிறார்கள்.
   c. இதைக்குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

d. கிறிஸ்துவின் போதனையை விட்டு விலகிப்போகிறார்கள். வ.9.
e. அந்த கள்ளப்போதகர்களுடன் ஐக்கியமாய் இருப்பதன் அபாயங்கள். வ.10-11.

3. முடிக்கும் வார்த்தைகள். வ.12-13.

---

## யோவான் எழுதிய மூன்றாம் நிரூபம்.

**எழுதியவர்** : அப்போஸ்தலனாகிய யோவான்.

**யாருக்கு எழுதப்பட்டது** : காயுவுக்கு 2:1

**திறவுகோல் எண்ணம்** : கிறிஸ்தவர் விருந்தினரை உபசரித்தல்.

**பாடச்சுருக்கம்** : இதன் தலைப்புப் பொருள் மூன்று கதாபாத்திரங்களைச் சுற்றி வருகிறது. காயு. தீயோத்திரேப்பு, தெமேத்திரியு என்பவர்கள். மேலும் சில பிரயாணத்தரகர்களைச் சுற்றியும் அமைந்தது.

**I. காயு இவருக்குத்தான் இந்தக் கடிதம் எழுதப்பட்டது.**

1. அடையாளங்காணுதல் : இதைச் சரியாகத் தீர்மானஞ் செய்யமுடியாது. இதே பெயருள்ள பலர் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படுகிறார்கள். ரோமர் 16:23ல் பவுலால் சொல்லப்படுகிறவர்தான் யோவான் எழுதுகிற அதே மனிதராகவும் இருக்க வேண்டும். ஆனாலும் அது நிச்சயமாகத் தெரியவில்லை.
2. குணாதிசயங்களாவன :
   a. சத்தியத்தின் படி நேசிக்கிற பிரியமான காயுவுக்கு வ.1-2.
   b. சத்தியத்தில் ஒரே சீராக நடக்கிற கிறிஸ்தவன். வ.3-4.
   c. விருந்தினரை உபசரிப்பதில் சிறந்தவன். வ.5-6.

**II. தியோத்திரேப்பு : ஒருவேளை சபையில் உள்ள ஒரு தலைவனாக**

a. சுயநலமுள்ளவனும், வெறிபிடித்தவனும். வ.9.
b. திராட்சத்ததோட்டத்துக்கு எஜமானனாக தன்னை கற்பனை செய்து உத்தேசிப்பவன். அப்போஸ்தலன் வரும்பொழுது சரியான கண்டனத்துக்கு உரியவன். வ.10.

**III.தெமெத்திரியு முற்றிலும் தியோத்திரேபுக்கு வித்தியாசமாக முன்மாதிரியான கிறிஸ்தவனாகவும் கனம் பெற்று புகழ் வாய்ந்தவனாகவும் இருந்தான்.**

**IV.கிறிஸ்தவ சுவிசேஷகர்கள் :**

a. பயணம் செய்து சுவிசேஷ ஊழியம் செய்து வருகிறவர்கள் கைம்மாறு கருதாமல் கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்து வருகிறார்கள். வ.7.
b. அவர்கள் உளமார்ந்த வரவேற்புக்கும் விருந்தோம்பலான உபசரிப்புக்கும் பாத்திரமானவர்கள். அப்படிப்பட்டவர்களை அகந்தையுடைய தியோத்திரேபு கடினமான கசப்புடன் எதிர்த்து வந்தான். வ.8-11.

**V. முடிவான வாழ்த்துக்கள் : வ.13-14.**

---

## யூதா எழுதிய நிருபம்

**எழுதியவர்** : ஒரு கால் யாக்கோபுக்கு சகோதரனாகிய யூதாவாக இருக்கலாம். இது உண்மையாக இருக்குமானால் அவர் நமது கர்த்தருக்குச் சகோதரராக இருக்கலாம். மாற்கு 6:3; கலா 1:19. கர்த்தருடைய சகோதரர் முதன் முதலாக அவரை நம்பவில்லை. யோவான் 7:5. ஆனால் உயிர்த்தெழுதலுக்கு பிறகு அவருக்கு பின்பற்றுகிறவர்களானார்கள். அப். 1:14. அவருடைய ஆரம்ப கால அவநம்பிக்கையின் காரணமாக யூதா தன்னை கர்த்தருடைய சகோதரனாகக் காட்டிக்

கொள்ளத் தகுதியற்றவன் என்று யோசித்திருக்கலாம். ஆகவே இந்த சிறிய நிருபத்தில் தன்னை சாதாரணமான ஊழியக்காரன் என்று சொல்லிக்கொள்கிறார். வ.1.

**முக்கியமான நோக்கம்** : இந்த நிருபம் எழுதப்பட்ட நோக்கமாவது, திருச்சபையை ஒழுக்கங்கெட்ட போதகர்களைப் பற்றி எச்சரிக்கவும், விசுவாசிகளின் விசுவாசத்தை அவமாக்கிப் போடும் பயங்கரமான அவபக்தியிலிருந்து எச்சரித்து பாதுகாக்கப்படவும்.

**திறவுகோல் வசனம்** : வ.3-4.

**பாடச்சுருக்கம்**

1. வாழ்த்துக்கள். வ.1-2
2. இந்த நிருபத்தை எழுதிய சமயமாவதும் அதனுடன் கொடுக்கப்பட்ட உபதேசமும் விசுவாசத்தைக் காத்துக் கொள்ளும் படியான புத்திமதியும், ஒழுக்கக்கேடுள்ள போதகர்கள் அவபக்தியான போதனைகளான படையெடுப்புகளில் இருந்தும் திருச்சபையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தரப்படுகிறது. வ.3-4.
3. கடந்த காலத்தில் தேவன் பாவஞ்செய்தவர்களுக்கு கொடுத்த ஆக்கினை பற்றிய எச்சரிக்கைகளைக் கொண்டு.
   a. இஸ்ரவேலர் கொண்டிருந்த அவநம்பிக்கைக்காக அவர்கள் பெற்ற தண்டனை வ.5.
   b. கீழே தள்ளப்பட்டு விழுந்து போன தூதர்களையும் கேடுகெட்ட சோதோமியருக்கும் கிடைத்த ஆக்கினை. வ.6-7.
4. தேவனற்ற போதகர்களைப் பற்றிய குணச்சித்திர வர்ணனையும் அவர்கள் மேல் கூறப்பட்ட ஐயோ என்ற சாபமும். வ.8-13.
5. தீர்க்க தரிசனங்களைக் குறித்த ஒத்து வசனப்பகுதிகள்.
   a. தேவ பக்தியற்றவர்களைக் குறித்து முன்னறிவித்த ஏனோக்கு. வ.14-16.
   b. அப்போஸ்தலர்களுக்குக் கடைசி காலத்தில் வருகிறவர்களான பரியாசக்காரர்களைக் குறித்து. வ.17-19.
6. கிறிஸ்தவ கடமைகள் குறித்த சுருக்கம் :
   a. ஆவிக்குரிய வளர்ச்சியும், ஜெபத்தின் நிறைவும். வ.20.
   b. நித்தியமான இரட்சிப்புக்காக தேவனிடத்தில் அன்பும் கிறிஸ்துவுக்குள் நம்பிக்கையும். வ.21.
7. ஆசிர்வாதங்கள். வ.24-25.

---

## வெளிப்படுத்தின விசேஷம் என்ற புத்தகம்

**எழுதியவர்** : அப்போஸ்தலனாகிய யோவான்.

**இடம்** : ஒருவேளை பத்முத்தீவாக இருக்கலாம்.
சின்ன ஆசியாவின் மேற்குக் கடற்கரையில் யோவான் நாடு கடத்தப்பட்டு காவலில் வைக்கப்பட்ட இடம் இதுவாகும். "தேவ வசனத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியைக்" குறித்தும் நாடுகடத்தப்பட்டவன் இருந்த இடம் இதுவே.

**காலம்** : நிச்சயமில்லை. பாரம்பரிமான அபிப்பிராயத்தின் படி கி.பி. 96ல் எழுதப்பட்டிருக்கலாம்.

**அதிகாரத்துவம்** : அது இயேசு கிறிஸ்துவால் வெளிப்படுத்தப்பட்டது என்று பிரகடனம் செய்யப்பட்டது. அதை வியாக்கியானம் செய்யும் முறைகள். இவைகள் அளவிற்கு மிஞ்சி வித்தியாசமானது. மேலும் கற்பனையால் ஆனது. நூற்றுக்கணக்கான பதிப்புகள் இந்தப் புத்தகத்தைக் குறித்து வெளிவந்துள்ளன.

**வியாக்கியானம் செய்யும் முறை:** இந்த பொருள் தலைப்பு பற்றி கருத்துத் தெரிவிக்கும் நான்கு முக்கியமான யோசனை கூறும் கொள்கை வகையாளர்கள் உண்டு.

1. இறந்த காலத்தை நம்புவர் : இந்த வெளிப்படுத்தலில் உள்ள தீர்க்கதரிசனங்கள் ஏற்கனவே நிறைவேறிவிட்டன என்று சொல்லுகிறவர்கள்.
2. வருங்காலத்தை நம்புவோர் - இந்த புத்தகத்தில் பொதுவான வரலாற்று முன்னுரைகள் அடங்கப் பெற்றுள்ளன என்று கூறுகிறவர்கள்.
3. வரலாற்று நம்புகிறவர்கள் : இந்த புத்தகத்தில் காணப்படும் சம்பவங்கள் சரித்திர காலத்தை புதிய ஏற்பாட்டுக் காலம் முதல் கடைசி காலம் வரைக்கும் அடையாளமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது என்று நம்புகிறவர்கள்.
4. இலட்சியவாதிகள் : இப்புத்தகத்தின் ஆவிக்குரிய குறிக்கோள்களை வற்புறுத்திக் கூறி வருவதல்லாமல் அதிகமான மறைபொருள் தரிசனங்களைப் தற்பாரியப் படுத்திக் கூறுவதற்கு முயற்சிப்பதில்லை.

   இந்தக் கொள்கையாளர்கள். இந்த கடவுள் அருள் வெளிப்பாட்டில் மூன்று வகையான வசனப்பகுதிகள் இருக்கின்றன என்று நம்புகிறது. ஒன்று தங்களுடைய ஆவிக்குரிய போதனையில் தெளிவாக இருப்பவர்கள் அடுத்து மிகவும் மறைபொருள் நம்புகிறவர்கள் ஆனாலும் அந்த மறைபொருள்கள் ஒரு அணுவளவு உண்மை இருக்கிறதென்றும் அது கற்பிக்கப்பட கூடியதென்றும் நம்புகிறது. அடுத்தது. அவைகள் திரைக்குள் மறைக்கப்பட்டிருப்பதால் அதைக்குறித்து நம்முடைய தற்கால அறிவைக் கொண்டு வியாக்கியானம் செய்வது பயனற்றது என்று நம்புகிறவர்கள்.

   ஒருகால் இங்கு சில தீர்க்கதரிசனங்கள் இரண்டு வகை அணுக்கள் அதாவது அருகில் இருப்பதும் தொலைவில் இருப்பதும் ஆகியவைகளாகும். இதில் முன்னவைகள் விசேஷமாக யோவானுடைய காலத்தையோ அல்லது அதற்கு பிற்பட்ட காலத்தையோ குறிப்பதாகவும், பின்னர் வருவது வருங்கால சம்பவங்களைக் குறிப்பவையாகும்.

## விநோதமான அம்சங்கள்

1. தெய்வீக அருள் வெளிப்பாடு என்பது வேதத்தில் கீழ்படிந்துள்ள படிப்பவர்களுக்கு விசேஷமான வாக்குத்தத்தத்தைக் கொண்டிருக்கும் ஒரே புத்தகமாகும். 1:3. அதே சமயத்தில் அந்த வேதபுத்தகத்தை கூட்டவோ ஏதாவது மாற்றம் செய்தால் அவர்கள் மீது சாபம் கூறப்படுகிறது. (22:18-19).
2. ஏழு என்பது இந்த புத்தகத்தில் கம்பீரமான எண்ணாகும். ஏழு குத்து விளக்குகள், சபைகள், முத்திரைகள், தூதர்கள், எக்காளங்கள், பாத்திரங்கள், ஆவிகள், நட்சத்திரங்கள் மேலும் ஏழு இனிமேலும் என்ற வார்த்தையும் அடங்கும்.
3. வெளிப்படுத்தின விசேஷத்தில் கடைசியான அதிகாரங்கள் ஆதியாகமத்தின் ஆரம்பமான அதிகாரங்களுக்கு மிகவும் துல்லியமான வேறுபாட்டை உடையதாய் இருக்கிறது.

   ஆதியாகமம் சூரியன் படைக்கப்பட்டதைப் பற்றி பேசுகிறது. பூமியில் பாவம் பிரவேசித்ததையும், சாபம் போடப்பட்டதையும், சாத்தானுடைய ஜெயத்தையும், ஜீவ விருட்சத்திலிருந்து விலக்கப்பட்டதையும் கூட மேலும் கூறுகிறது. வெளிப்படுத்தின விசேஷத்தில் ஒரு இடத்தைப் பற்றி பிரஸ்தாபிக்கிறது. அங்கு பாவமானது விலக்கப்பட்டதால் அங்கு சூரியனுக்குத் தேவை இல்லை என்றும், அங்கு பாவம் விலக்கப்பட்டதாலும் சாப விமோசனம் பெற்றதாலும் சாத்தான் மேற்கொள்ளப்பட்டு ஜெயிக்கப்பட்டதாலும் அங்கு ஜீவ விருட்சமானது நாட்டப்பட்டிருப்பதாலும் அங்க சூரியன் பிரகாசிப்பதற்கு அவசியமில்லை என்று சொல்லப்படுகிறது.

## படிப்புக்கான திட்டம்

இந்த புத்தகமானது, அடிக்கடி அதனுடைய இரகசியமான இயல்புக்காகப் புறக்கணிக்கப்பட்டாலும் அதைப் படிப்பதற்கான பார்வை கணிப்புகள் அதைப் பயன்படுத்திப் படிக்கவும், அதைப் பற்றிய எந்த விதமான தார்ப்பரிய அல்லது மனப்போக்கான வியாக்கியானங்கள் செய்ய முயற்சி இன்றியும் படிக்கவும் ஏதுவாகும். இந்த புததகம் சங்கேதக் குறிகளோடு எழுதப்பட்டிருந்தாலும் நாம் அதன் அந்தரங்கமான இரசியங்களை திறந்து காட்டுவதற்கான ஒரு திறவுகோலைக் கண்டு பிடித்திருக்கிறோம் என்ற உரிமையைக் கொண்டாட முடியாது.

நாம் இப்பொழுது பினவரும் தலைப்பு பொருளை பயனுள்ளதாக தொடர்ந்து படிக்குமாறு யோசனை கூறுவாம்.

**யோசனையாகக் கூறப்படும் தலைப்பு** : காலா காலங்களில் தோன்றும் நல்லொழுக்கத்துக்கும் ஆவிக்குரியதுமான போராட்டம்.

**மத்திய நபர்** : ஆட்டுக்குட்டியானவர், எல்லாவிதமான பொல்லாத வல்லமைகளுக்குமேல் இறுதியாக ஜெயம் பெறுகிறவர். ஆட்டுக் குட்டியானவர் என்ற சொல் ஏறக்குறைய முப்பது தடவைகளாகக் குறிப்பிட்டுச் சொல்லப்படுகிறது.

**சகாப்தத்தின் சம்பவங்கள்** : இப்படிப்பட்ட பல சம்பவங்கள் இந்த புத்தகத்தில் உள்ளன. நாம் இப்பொழுது இந்த தரிசனங்களைப் பற்றிப் படிக்கும் பொழுது மனதில் வைக்கக்கூடிய இரண்டு விஷயங்களை ஆலோசனையாகக் கூறுவோம்.

1. மனுஷகுமாரனாகியவரது பிறப்பு : அது இயேசு கிறிஸ்துவின் மனிதவதாரம் எனக் கருதப்படுகிறது. அதி. 12.
2. இந்த 7ம் எக்காளம் ஊதப்பட்டது. (11:15) இது அவருடைய அகில உலக விஸ்தாரமான வெற்றியை பிரஸ்தாபிக்கிறது.

## பாடச்சுருக்கம்

இந்தப் புத்தகம் தரிசனங்களின் வரிசையில் பிரிக்கப்படலாம். அவைகள் பகுதியாக அல்லது முழுவதுமாக மறைபொருளாய் இருக்கிறது. மற்றவைகள் அவற்றின் போதனையில் ஒப்பிடக்கூடியதாய் தெளிவாக இருக்கின்றன. இதில் எப்பொழுமே ஒரு தரிசனம் எங்கு முடிகிறது அடுத்த தரிசனம் எங்கு ஆரம்பிக்கிறதென்று சொல்லதற்கு முடிவதில்லை. ஆனால் அவைகள் வசதிக்காக பல எண் வரிசைகளில் படிக்கக் கூடும் என்பது ஒருவருடைய கண்ணோட்டமாகும்.

**அதிகாரம் :1**

1. அறிமுகம் கீழ்படிதலுள்ள படிக்கின்றவர்களுக்கு வாக்குத்தத்தம். வ.1-3.
2. யோவானுடைய வாழ்த்துக்களும் மகிமைப்படுத்தப்படுகிற கிறிஸ்துவும் வ.4-8.

## தரிசனம் :1

1. மகிமைப்படுத்தப்பட்ட கிறிஸ்து. வ.9-16.
2. ஏழுசபைகளுக்கு எழுதும் படியாக அவரது கட்டளை. வ.19.
3. அந்த திருச்சபைகளுக்கான செய்தி அதி 2-3.

**அதிகாரம் :2**

a. எபேசுவுக்கு : பின்வாங்கிப்போகும் சபை, ஊழியத்தில் தடைகளைப் பொருட்படுத்தாது தொடர்ந்து செயல்படுவதும், ஒழுங்கில் பலமாகவும், ஆனால் அன்பில் அனல் குறைந்தும் காணப்படுகிறது. வ.1-3.

b. சிமிர்னாவுக்கு : வறுமையானது. ஆனால் மெய்யாகவே ஐசுவரியமுள்ள சபை துன்பப்படுத்தப்படும் ஒரு கால கட்டத்தை சந்திக்கிறது. வ.8-11.

c. பெர்கமு : ஒரு கேடுபாடுள்ள சூழ்நிலைமையில் உள்ள சபை, திடமான உறுதியாயும் ஆனால் அவபக்கதியாய் பீடிக்கப்பட்டுமுள்ளது. வ.12-17.

d. தியத்திராவுக்கு : நற்கிரியைகள் நிறைந்த சபை. ஆனால் கள்ளத் தீர்க்தரிசயை சகித்துக் கொண்டனர். வ.18-29.

**அதிகாரம் :3**

e. சர்தை : மடிந்து கொண்டிருக்கிற சபை. வ.1-6

f. பிலதெல்பியா : பலவீனமானது. ஆனால் விசுவாசமுள்ளது. வ.7-13.

g. லவதேக்கியா : அனலுமின்றி குளிருமின்றி தன்னில் திருப்தியுடைய சபை. ஆனால் இழிவானதும், தரித்திரமும், குருடானதுமானதாய் இருந்தது. வ.14-22.

திரும்பத்திரும்ப வரும் எண்ணம். ஜெயிப்பவர்களுக்கான வாக்குத்தத்தங்கள்.

## தரிசனம் :II. பகுதி மறை பொருளானது.

**அதிகாரம் :4**

1. பலலோகத்தில் தமது பரம சிம்மாசனத்தில் தேவன் வீற்றிருப்பதாகத் தரிசனம். அண்டசராசத்ததையும் படைத்த சிருஷ்டிகர் சகல ஜீவபிராணிகளுடையதும் இருபத்து நான்கு மூப்பர்களுடையதுமான ஆராதனையைப் பெற்றுக் கொண்டிருக்கிறார். வ.1-11.

**அதிகாரம் :5**

2. ஆட்டுக்குடிடடியானவர் ஏழு முத்திரையிடப்பட்ட சுருளை திறக்கிறார். புதுப்பாட்டு பாடப்படுகிறது. ஆட்டுக்குடிட்டியானவருக்கு பொதுவான ஆராதனை.

**அதிகாரம் :6**

3. ஆறுமுத்திரைகள் உடைக்கப்பட்டன. (மறைபொருள்) வ.1-17. இதற்கு பலவிஸ்தாரமான வேறுபட்ட வியாக்கியானங்கள் இருக்கின்றன. இதற்குமேல் மற்றொன்றைக் கூட்டுவதென்றால் அதனால் பயனில்லை. ஒரு தெளிவான பாடம் வ.9-11. தெய்வீகத் தாமதத்தால் விசுவாசிகள் சோதிக்கப்படுகிறார்கள்.

## தரிசனம் :III. பகுதி மறைபொருளாகும்.

**அதிகாரம் :7**

வ.1-8. ஆலோசனைக்கான யோசனை. தேவன் தாம் தெரிந்து கொண்டவர்களுக்கு அவருடைய பாதுகாப்பு உண்டு.

## தரிசனம் : IV.

**அதிகாரம் :7** ஆறுதலான உறுதிவாக்குகள்.

a. இரட்சிக்கப்பட்ட எண்ணிமுடியாத திரளான கூட்டத்தார். வ. 9-10.
b. தேவனுடைய சந்நிதானத்தில் அவர்கள் காணப்படும்வழி. வ.13-15.
c. அவர்களுடைய செயல்பாடுகளும், நித்திய மகிழ்ச்சியும். வ.15-17.

## தரிசனம் :V பகுதி மறைபொருளானது.

**அதிகாரம் :8.** தீடீரென நேரிடும் சம்பவம். 7ம் முத்திரை உடைக்கப்படுகிறது. பரலோகத்தில் மிகுந்த அமைதி உண்டாயிற்று. (கூடுமான விளக்கம். சொல்லக்கூடிய விளக்கம்) எல்லா இசைக்கருவிகளும் தூதர்களுடைய ஆரவரமும் அமைதியாக்கப்பட்டது என்ன விஷயத்திற்கென்றால் அந்த 7ம் முத்திரையில் காலப்பிரிவில் கிறஸ்து தமது திட்டத்தை நிறைவேற்ற பூமிக்குப் போக வேண்டியதாய் இருந்தது.

இது முழுவதும் சுத்தக்கற்பனையல்ல. காலங்கள் நிறைவேறுவது வெளிப்படையாக வந்து கொண்டிருந்தது. 10:6. இந்த பொருள் விளக்கம் சரியானதென்றால் 8:1ல் நாம் தெய்வீக இரட்சிப்பின் திட்டத்தின் ஆரம்பமான மூலகாரணியிலே இருக்கின்றோம். நாம் 12ம் அதிகாரத்தில் கூறப்படும் மனுஷகுமாரனது, பிறப்பின் மையமாகக் கொண்ட சம்பவங்களைப் பார்க்கக் கூடியவர்களாய் இருப்போம்.

8:3-4 வசனங்களில் பொதிந்துள்ள கருத்தெண்ணமாவது, பரிசுத்தவான்களின் ஜெபங்களெல்லாம் மேசியாவின் இராஜ்ஜியம் வருவதற்காக தேவனிடத்தில் உயர எழும்பிச் செல்வது போலத் தோன்றுகிறது.

**அதிகாரம் :9.** இதன் பிறகு மறைபொருளான தரிசனத்தின் பகுதி வருகிறது. அந்த ஆறு எக்காளங்கள் ஊதப்படுகிறதாவது. அதிகாரம் 8-9ல் வரப்போகும் நியாயத் தீர்ப்புகளை பிரகடனஞ்செய்வது கண்கூடு.

## தரிசனம் VI : பகுதி மறைபொருளாகும்.

**அதிகாரம் 10-11.**

இந்த சம்பவங்கள் மகத்தான பூரணமாகுதலை நோக்கி முன்னாக போய்கொண்டிருப்பதைப் போல தோன்றுகின்றன என்பதை விட சற்றுக் கொஞ்சமே அதிகமாகச் சொல்லக்கூடும். இது அந்த வல்லமையுள்ள தூதனுடைய அறிவிப்பினால் சுட்டிக்காட்டப்படுகிறது. (10:5-7) ஏனென்றால் இனியும் தாமதம் ஏற்படாது. ஏனென்றால் தீர்க்கதரிசிகளால் அறிவிக்கப்பட்ட நற்செய்திகள் நிறைவேற்றப்படப் போகின்றன என்று கூறியது. இப்படி பலதரப்பட்ட அபிப்பிராயங்களுக்கு இடையில் அந்த 10ம் அதிகாரத்து சிறிய புத்தகச்சுருள் பற்றியும் 11ம் அதிகாரத்து இரண்டு சாட்சிகள் பற்றியும் எந்த விதமான வியாக்கியானம் தருவது அபாயகரமானதாகும். இவை இரண்டும் அதிகாரம் 12ல் வரும் மனுஷகுமாரனது பிறப்பு என்ற தரிசனத்துக்கு முன்னோடியாக வருவதால் அவை கிறிஸ்து வருவதற்கு முன்னுள்ள தீர்க்கதரிசன காலத்தைக் குறிப்பதாக இருக்கலாம்.

ஒருவேளை அதிகாரம் 12முதல் 20 வரையிலானவை அறைகுறை மறைபொருள் தரிசனங்கள் மேசியாவின் போராட்டத்தோடு சம்பந்தப்பட்டவைகளை அடங்கப்பெற்றுள்ளன.

**தரிசனம் VII.**

**அதிகாரம் 12ம் 13ம் அந்த மகத்தான சகாப்தத்தின் சம்பவம் :**
மனுஷகுமாரனது பிறப்பு அதாவது கிறிஸ்துவினுடையது அதோடு அதே காலத்து சாத்தானிய சக்திகள் அவரை அழிக்குமாறு வரிசையாக நிறுத்தப்பட்டிருப்பதைக் காட்டும் வெளிப்பாடுகளும் உள்ளன. இதை நியாயப்படுத்தும் பார்வை நோக்காவது, கிறிஸ்துவின் பூலோக ஜீவிய நாட்களில் அந்தகாரத்து லோகாதிபதியான வல்லமைகள் சீற்றம் நிறைந்த செயல்பாட்டில் ஈடுபட்டிருந்தன. இங்கே ஏரோது குழந்தை பாலகன் இயேசுவை அழிக்க முயற்சி செய்ததைக் கவனிக்கவும், மேலும் எண்ணிக்கை அற்ற பிசாசுபிடித்த நிகழ்ச்சிகளையும் கிறிஸ்து சிலுவையில் அறையப்படுதலை விளைவாகக் கொண்டு வந்த கேடுபாடான எதிர்ப்பையும் கவனிக்கவும்.
இங்கே எந்த விதமான விவரமுள்ள வியாக்கியானங்களும் இந்த இரகசியங்களுக்கு இங்கே கொடுக்கப்படவில்லை. ஆனால் ஆவிக்குரிய சர்வாயுதங்களைக் கொண்டு ஜெயிக்கப்போகும் ஜெயத்தை கொடுக்கும் போராயுதங்களைக் கவனம் ஈர்க்கப்படுகிறது. வ.12:11.

**தரிசனம் VIII.** பகுதி மறைபொருளானது.

**அதிகாரம்** :14 வ.1-13. வலுக்கட்டாயமாக சொல்லப்படுகிற வியாக்கியானம் இல்லாமலே ஆட்டுக்குட்டியானவருக்கும் அவருடைய சத்துருக்களுக்கும் இடையே வரப்போகும் போராட்டத்தைப் பற்றிய தீர்க்தரிசன சாராம்ச சுருக்கமாக இந்த அதிகாரத்தை கருதமுடியும்.
இந்த பார்வை நோக்கை ஒப்புக் கொண்டால் இதன் முதல் ஐந்து வசனங்களில் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் நபர்கள் அந்த பழைய மகாதிட்டத்தின் புகழ்பெற்ற விசுவாசிகளாக இருப்பார்கள். வசனம். 6-7. அகில உலக அகண்ட சுவிசேஷ இயக்கம் ஆரம்பமாவதைக் குறிப்பதாக இருக்கும். வசனம் 8:11 ஆகியவை முடிவான ஜெயத்தை பிரகடனஞ் செய்வதாக இருக்கும். மேலும் வசனம் 12-13. நம்பிக்கையுள்ளவர்களாக மரித்தவர்கள் பாக்கியவான்கள் என்று குறிப்பிடப்படுவார்கள்.

**தரிசனம் IX பகுதி மறைபொருள் ஆகும்.**

**அதிகாரம்** :14 அறுவடையும், திராட்ச பழங்களும் வ.16-20

**தரிசனம் :X**

**அதிகாரம்** :15 பகுதி மறைபொருள் ஆகும்.

1. ஆரம்பகால ஜெயவீரர்களும், அவர்களுடைய பாட்டும். வ.1-4
2. ஏழு தூதர்களும் தங்க கலசங்களும். வ.5-8

   அதிகாரம் :16. அந்த ஏழு கலசங்களில் இருந்து ஊற்றப்படும் கோபாக்கினை. வ.1-21.

**தரிசனம் :XI மறைபொருளானது**

**அதிகாரம்** 17 – 18. பாபிலோனின் பாரம் மகாவேசியின் நகரம். ஆட்டுக்குட்டியானவரும் அவரால் ஜெயிக்கப்படப்போகும் சத்துருக்களும்.

**தரிசனம் XII**

**அதிகாரம் 19**

1. பரலோகத்தில் அல்லேலூயா துதி. ஆவிக்குரிய ஜெயம். ஓர் கொண்டாட்டம். வ.1-16.
2. ஆட்டுக்குட்டியானவருடைய திருக்கலியாணம். வ.7-9

**தரிசனம் XIII.**

1. கிறிஸ்து ஆவிக்குரிய ஜெயவீரர், வெள்ளைக் குதிரையின் மேல் இவர்களது ஆவிக்குரிய பட்டயத்தால் ஜாதிகளை நொறுக்குவார். 19:11-16.
2. பகுதி மறைபொருளானது, மிருகமும், கள்ளத் தீர்க்தரிசியும் அவர்களுடைய நேசக்கட்சியினரும் கிறிஸ்துவால் முறியடிக்கப்படுவார்கள்.

**தரிசனம் XIV.** பகுதி மறைபொருளானது.

**அதிகாரம் 20**

1. சாத்தான் கட்டுண்டான். வ.1-3
2. முதலாம் உயிர்த்தெழுதல் வ.4-6.

3. சாத்தான் விடுதலையானான். அவனுடைய தீய நடவடிக்கைகளும். வ.7-9.
4. நியாயத்தீர்ப்பு – சாத்தான், மிருகம், கள்ளத்தீர்க்கதரிசி ஆனவர்களுக்கு வ.10
5. கடைசியான நியாயத்தீர்ப்பு வ.11-15.

## தரிசனம் :XV

**அதிகாரம் 21-22.** புதியவானமும், புதிய பூமியும் பரிசுத்த நகரம், திருச்சபையின் ஒரு சாயல், ஆட்டுக்குட்டியானவருடைய மணவாட்டி

**அதிகாரம் :21**

குணச்சித்ர இயல்புகள் பரலேகத்தின் தோற்றம். 21:2; பிரகாசமானது. வ.11; தனியாகப் பிரித்துப் பாதுகாக்கப்படுகிறது வ.12; சேரக்கூடியது வ.13; நிச்சயமான அஸ்திபாரங்கள். வ.14; அசைக்க முடியாதது வ.16; அழகாக அலங்கரிக்கப்பட்டது வ.18-21; ஆவிக்குரிய ஆலயத்தைப் பெற்றது வ.22; தெய்வீகமாக ஒளி வீசப்பெற்றது வ.23-25; மகிமைப்படுத்தப்பட்டது 5.26; கறைபடாதது வ.27; **அதிகாரம் 22:** பரதீசு மீட்கப்பட்டது. ஜீவ நதியின் வேறுபடுத்தும் அடையாளங்கள் வ.1; ஜீவ விருட்சம் வ.2; சாபம் நீக்கப்பட்டது (விமோசனம்) வ.3; அழகிய தரிசனமும் பரிசுத்தவான்களின் தெய்வீக அடையாளங்களும். வ.4; நித்தியமான நாள், பரிசுத்தவான்களின் ஆட்சி வ.5;
இறுதியான போதனைகள், நம்பத்தகுந்ததும் மெய்யானதும் வ.6; கர்த்தருடைய நிச்சயமான வருகையை வற்புறுத்துதல் வ.7; தேவன் தாமே வணக்கத்துக்கு உரியவர் வ.11; இறுதியான வாக்குத்தத்தம் வ.14; இறுதியான அழைப்பு 5.17; கடைசி எச்சரிக்கை வ.18-19;
ஆசீர்வாதமும் ஜெபமும் வ.21;.